கலைமகள்
தீபாவளி மலர் OCT.'56
ரூ. 2/-

இந்தியாவின் முன்னேற்றத்திற்காக தன் பங்கையும் செலுத்திவரும் 'பிலிப்ஸ்' ஸ்தாபனத்தார் குதூகல தீபாவளிக்காக உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.
PHILIPS
பிலிப்ஸ் எலக்ட்ரிகல் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
35/4, மவுண்ட் ரோடு, சென்னை - 2
PH-1-SA

தீபாவளி வாழ்த்துக்கள்

டாடா ஸ்டீல் நாட்டின் பணிக்கே

TN 1052

STANDARD TRIUMPH
தீபாவளி
உல்லாசமாயும் குதூகலமாயும் இருப்
பதற்கென்றே ஏற்பட்ட பண்டிகை.
புதிய
ஸ்டாண்டர்ட்
வான்கார்ட் III
எப்பொழுதும் உல்லாச சவாரிக்கென்றே
நிர்மாணிக்கப்பட்ட நவநாகரீக கார். அழகும்,
பலமும், எல்லாவித சௌகர்யங்களும்
ஒருங்கே அமையப்பெற்றது
உங்கள் தீபாவளி மங்களமாகுக.
தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிட்.
மதராஸ் பெங்களூர் உதகமண்டலம்

நிக்கோ கேபிள்களைக் கொண்டு

வேலை செய்ய அவன் பெருமைப்படுகிறான்.

அவன் வெறும் வயர்மன்தான். ஆனால் *நிக்கோ* பொருள்களையே அவன் தரமாக மதிக்கிறான்; ஏனென்றால் *நிக்கோ* இந்தியாவுக்கே சொந்தமானது; மின்சார வயரிங் செய்வதில் நுணுக்கமான முன்னேற்ற முடையது. இந்தியாவில் மின்சாரம் உண்டுபண்ணும், செலுத்தும் அல்லது விநியோகிக்கும் இடங்களிலெல்லாம், *நிக்கோ* வயர்களும் கேபிள்களுமே இன்று விரிவாகப் பயன்படுகின்றன.



NICCO
WIRES & CABLES

INDIA'S OWN

INDIA'S BEST

தி நேஷனல் இன்சுலேடட் கேபிள்
கம்பெனி ஆப் இந்தியா லிட்.

ஸ்டீபன் ஹவுஸ், டல்ஹௌஸி ஸ்குயர், கல்கத்தா-1.

கலைமகள் தீபாவளி

தொகுதி ௫௰ : : பகுதி ௨௬௮

துன்முகி ௵ ஐப்பசி ௴ அக்டோபர் 1956

		பக்கம்
தீபாவளி வாழ்த்து	..	361
ஓவிய விளக்கம்	..	365
கருணைக் கடல் - 'ஜோதி'	..	369
திட்டமும் மக்களும் - சி. சுப்பிரமணியம்	..	370
செல்வம் சேர்க்கும் சிறு கைத்தொழில்கள் - எம். பக்தவத்ஸலம்	..	373
தங்கப் பேனாவும் வைர மோதிரமும் - 'தேவன்'	..	379
மழையே, சொல்! - வி. துரைசாமி	..	386
கனவும் கற்பனையும் - க. சந்தானம்	..	387
ஜடையில்லை - கி. வா. ஜகந்நாதன்	..	391
யார் கெட்டிக்காரர்? - தி. சு. அவிநாசிலிங்கம்	..	399
உயர்வும் தாழ்வும் - மு. வரதராசன்	..	401
தாட்சாயணி - லா. ச. ராமாமிருதம்	..	407
மலைநாட்டில் தமிழர் - அ. ச. ஞானசம்பந்தன்	..	417
தகப்பன் சுவாமி - க. பஞ்சாபகேசன்	..	421
திரிபுராந்தகர் - தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்	..	429
டெலிபோன் மணி - பெ. தூரன்	..	433
பட்டினப்பாலைப் பரிசில் மண்டபம்-மு. இராகவையங்கார்	..	438
நினைவுச் சுழல் - கி. சந்திரசேகரன்	..	443
எப்படி மனம் துணிந்ததோ! - 'கொனஷ்டை'	..	449
அல்லி - ராஜம் கிருஷ்ணன்	..	456
மின்மினி - பி. வி. ஆர்.	..	465
புரட்சிப் பாடல் - இரண்டாட்டம் - தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்	..	475
நம்பிக்கை - ந. சிதம்பரசுப்ரமண்யன்	..	481
"விபத்தை வாழ்த்துகிறேன்" - 'மாயாவி'	..	487
பந்தம் - கி. சரஸ்வதி அம்மாள்	..	499
பண்பும் பகையும் - 'உமாசந்திரன்'	..	507
பட்சி சாஸ்திரக் கிளி - தி. ஜானகிராமன்	..	513
ஜானகி - தி. ஜ. ர.	..	521
இரு ஜாதி - த. நா. குமாரஸ்வாமி	..	529
நஜ்மா நாடிய பாதை - 'ஜமீலா'	..	537

கலைமகளில் வெளியாகும் கதைகளிலுள்ள

மலர்.1956

பொருளடக்கம்

		பக்கம்
சிறுவர் பகுதி	..	553
திருடனும் எம். எல். ஏயும் - 'துமிலன்'	..	562
'காளை புகுதக் கணக் கண்டேன்' - கி. ரா.	..	569
சேமித்த நிதி எங்கே? - பி. ஸ்ரீ.	..	577
கள்ளப் படகு - 'ஆர்வி'	..	583

மூவர்ணப் படங்கள்

அடடைப் படம் - ஆர். நடராஜன்
ஸ்ரீராம பட்டாபிஷேகம் - எஸ். ராஜம்
அழகெலாம் ஒருங்கே கண்டால் - ரவிவர்மா - (உபயம்: என். கோவிந்தராஜையங்கார்)
பண்டரிபுரத் திருவிழாவில் சந்தையும் சந்தியும் - ஜி. என். ஜாதவ்
மான்விழியாள் - ஸி. ராமஸ்வாமி
மலைநாட்டுக் கழிக்கரையில் - கே. ஸி. எஸ். பணிக்கர்
அணி கலைக்கும் நேரிழையாள் - கே. மாதவன்

இருவர்ணப் படங்கள்

இசைக் கருவிகள்

நிழற் படங்கள்

பழம் பெரு நகர்கள் - என். ராமகிருஷ்ணா
திட்டமும் மக்களும் - இந்தியச் செய்தி இலாகா; சென்னைச் சர்க்கார்ச் செய்தி இலாகா
செல்வம் சேர்க்கும் சிறு கைத்தொழில்கள் - சென்னைச் சர்க்கார்ச் செய்தி இலாகா
உறக்கம்: கடலில் - கரையில்
தவம் - உருவமும் உண்மையும்
செயற்கையும் இயற்கையும்
மென்மையும் வன்மையும்
பிளந்த வாய்
உள்ளே - வெளியே —ஸ்ரீதர்
மலைநாட்டில் தமிழர் - அ. ச. ஞானசம்பந்தன்
திரிபுராந்தகர் - ஸரோஜினி

மற்றப் படங்கள்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு, எஸ். ராஜம், ஆர். நடராஜன், ஸாகர், நாராயணன், ரெஸாக், கலா.

பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

பண்டிகை நாட்களிலும்

மற்றும் எல்லா நாட்களிலும்

துஷார்

வனஸ்பதி

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
கர்னூல், தென் இந்தியா



சுந்தரம்

ரீட்ரெட்களை

உபயோகியுங்கள்

1. 12 வருஷமாகத் தயாரிப்பு அநுபவம்,
2. எல்லா வகையான சுமைகளிலும் சாலைகளிலும் 16 மிலியன் மைல்கள் (ஆண்டுதோறும்) கடுமையான சோதனை,
3. டி. வி. எஸ். வண்டிகளுக்குப் போட்டு உறுதியாக நிரூபணமானவை.

ஆகையால் செம்மையான ரீட்ரெட் இது.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.,

டி. வி. எஸ்.ஸின் யூனிட்

முழு வட்ட மவுல்டுகளுடன் டயர் ரீட்ரெட் போடுகிறவர்

தலைமை ஆபீஸ்:
புதுக்கோட்டை
தந்தி: "MOTOR" *போன்: 33*

சென்னைத் தொழிற்சாலை:
37, மவுண்ட் ரோடு, மதராஸ்-6
தந்தி: "SUNRETREAD" *போன்: 86985*

இந்த இலவச புத்தகத்திற்கு இப்பொழுதே எழுதுங்கள் :
'சிறந்த ஸைக்கிளை எப்படித் தேர்ந்தெடுப்பது' என்ற எமது புத்தகத்தை இலவசமாகப் பெற உங்கள் முழு விலாசத்தை எழுதக் கோருகிறோம்

*10 ஸைக்கிள் வியாபாரிகளில் 8 பேர்கள்

ஹெர்குலிஸ்

தான் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானம் அளிக்கிறது என்கிறார்கள்

நீங்கள் குறைந்த விலைக்கோ அல்லது அதிக விலைக்கோ ஸைக்கிளை வாங்கலாம். ஆனால் ஹெர்குலிஸ்ஸைக் காட்டிலும், கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானமுடைய வேறு ஒரு ஸைக்கிள் பெறமுடியாது. இந்த உண்மையை அறிந்து தான் பத்து ஸைக்கிள் வியாபாரிகளில் எட்டுபேர்கள் 'நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு ஹெர்குலிஸ் தகுந்த பெறுமானம் அளிக்கிறது' என்கிறார்கள். அவர்களுடைய புத்திசாலித்தனமான ஆலோசனையைப் பின்பற்றி ஸைக்கிள் வாங்கும் பொழுது ஒரு ஹெர்குலிஸ் ஸைக்கிளையே வாங்குங்கள்.

ஸைக்கிள் வாங்குவது ஒரு முதலீடு செய்வது போலாகும் ! **ஹெர்குலிஸ்**

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுந்த பெறுமானம் அளிக்கிறது

* ஒரு தனிப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

தயாரிப்பவர்கள் : டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்

TIC. 3720

தீபாவளி வாழ்த்து

ஆண்டுக்கு ஒரு நாள் தீபாவளித் திருநாள். அப்படியே ஆண்டுக்கு ஒரு மலர் கலைமகள் - தீபாவளி மலர். இந்தத் தீபாவளிக்கு ஒரு புதிய சிறப்பு இருக்கிறது. இந்தத் திருநாளில் தமிழ் நாடு தனியாக விளங்கும் பேறு கிடைத்திருக்கிறது. கன்யாகுமரி மாவட்டத்தில் உள்ள நம் சகோதரர்கள் தமிழுக்கும் தமக்கும் உள்ள உறவை நிலை நாட்டிக்கொண்டுவிட்டார்கள். இந்த மங்கலத் திருநாளில் அவர்களுக்கு வரவேற்புக் கூறுகிறோம். இன்னும் சில தமிழர்கள் தமிழ் நாட்டோடு சேரும் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். அவர்களுடைய அவாவும் நிறைவேற வேண்டும் என்று இந்த நாளில் இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

எண்ணெய் நீராடி, புத்தாடை புனைந்து, இனிய உணவை அருந்தி, வெடியும் மத்தாப்பும் சுட்டு இன்புறும் இந்தத் திருநாளில் பல ஆண்டுகளாக இலக்கிய விருந்தை நுகரும் வழக்கமும் தமிழர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. தம்முடைய செலவுத் திட்டத்தில் தீபாவளி மலரையும் சேர்த்துக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள். ஆர்வத்தோடு இந்த இலக்கிய மலரை வரவேற்றுப் படித்து இன்புறுகிறார்கள்.

இந்த ஆர்வத்தால் வளர்ந்துவரும் கலைமகள் தீபாவளி மலர் இவ்வாண்டும் கண்ணும் கருத்தும் மகிழ மலர்ந்து மணக்கிறது. அழகி ஒருத்திக்கு அவள் தோழி விசிறி வீசி உபசாரம் செய்யும் கோலத்தைக் காட்டும் அட்டைப் படத்தைக் கண்களிக்கக் கண்டு உள்ளே புகுந்தால், ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தைத் தரிசித்துக்கொள்ளலாம். ஸ்ரீ ரவிவர்மா எழுதிய அருமையான அழகியின் லாவண்யத்திலே சொக்கிப் போனாலும் போகலாம். பண்டரிபுரத்து உத்ஸவத்திலே கலந்துகொண்டு மானுக்குப் புல்லூட்டும் மங்கையின் அன்பைக் கண்டு வியந்து மேலைக் கடற்கரைக் கழியில் உள்ள காட்சியிலே ஈடுபட்டுத் தீபாவளி நீராட அணிகளைக் கழற்றும் காரிகையைப் பார்த்துவிட்டு அவற்றை வரைந்த ஓவியர்களை வாழ்த்தலாம்.

சோழ நாட்டில் பல நகரங்கள் அரசிருக்கை நகரங்களாக விளங்கின. அன்று அவை இருந்த நிலை வேறு; இன்று அவை இருக்கும் நிலை வேறு. இதை எண்ணிப் பார்க்கும் வகையில் அன்றைக் காட்சிகளைக் கீற்றோவியத்திலும் இன்றைக் காட்சிகளை நிழற் படத்திலும் அமைத்துக் காட்டும் சித்திரப் பகுதி ஒன்று இருக்கிறது. நம்முடைய இசைக் கருவிகளில்தான் எத்தனை வகை! தோல் கருவி, துளைக் கருவி, நரப்புக் கருவி, கஞ்சக் கருவி என்ற நான்கு வகையான வாத்தியங்களை ஒரு சேரக் கண்டிருக்கிறீர்களா? இம் மலரில் ஓரிடத்தில் அவற்றைக் காணலாம்.

கட்டுரை, கவிதை, கதை என்று விரியும் இலக்கியப் படைப்புக்களை உங்கள் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய பலர் படைத்துத் தந்திருக்கிறார்கள். பாரத அரசாங்கத்தார் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து வருகிறார்கள். இந்தத் திட்டங்களால் வரும் நன்மைகளைத் தமிழ் நாட்டு நிதி மந்திரி ஒரு கட்டுரையில் விளக்குகிறார். சிறு கைத்தொழில்களால் செல்வம் சேரும் என்பதை விவசாய மந்திரி எழுதியிருக்கிறார். நிதிக் கமிஷன் தலைவர் ஸ்ரீ க. சந்தானம் அவர்கள் கனவுக்கும் கற்பனைக்கும் உள்ள வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் ஆராய்ந்து சொல்கிறார். ஸ்ரீ தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் திருவாசகத்தில் ஒரு மணியைச் சாணை பிடித்துக் காட்டுகிறார். பேராசிரியர் ஸ்ரீ வரதராசனார் மக்களை உயர்த்தும் வகையில் கலையும் இலக்கியமும் அமைய வேண்டுமென்று வற்புறுத்துகிறார். அண்மையில் மலேயா சென்று வந்த ஸ்ரீ அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் அந் நாட்டில் உள்ள தமிழர்களைப் பற்றிய கட்டுரை ஒன்றை உதவியிருக்கிறார். ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் கல்விலும் செம்பிலும் தோற்றமளிக்கும் திரிபுராந்தகரைக் காட்டுகிறார். முதுபெரும்புலவராகிய ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் இலக்கியத்திலும் சாசனத்திலும் கண்ட ஒரு பழைய செய்தியை ஆராய்கிறார். பேராசிரியர் ஸ்ரீ தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மேல்நாட்டில் கவிதையைப்பற்றி முளைத்திருக்கும் புதிய கருத்தைப்பற்றிக் கூறி அதில் உள்ள இரண்டாட்டத்தைத் தெளிய வைக்கிறார்.

பல பல சுவையுடைய கதைகள் இருபத்தொன்றைத் தமிழ் நாட்டுச் சிறுகதை வானில் சுடர்விடும் எழுத்தாளர்கள் வழங்கியிருக்கிறார்கள். பலவகையான ஆரம்பமும் முடிவும் உள்ள சிறு கதைகளை இதில் படித்து இன்புறலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை.

குழந்தைகள் ஆசையுடன் படிக்கவும் பார்க்கவும் சிந்திககவும சில பக்கங்கள் இருக்கின்றன.

மொத்தத்தில் - ஆம், கையினால் உணரும் மொத்தத்தில்கூடத்தான் - இந்த மலர் பல நாள் பல மாதம் நினைப்பதற்கும் மகிழ்வதற்கும் உரிய எழுத்துக்களைப் பெற்றிருக்கிறது. இதை உங்களுக்குத் தீபாவளிக் காணிக்கையாகச் சமர்ப்பித்துப் புதிய தமிழ் நாட்டில் நீங்களும் உங்களைச் சார்ந்தோரும், தமிழ் மொழியும் தமிழ்க் கலைகளும், பண்பும் நண்பும் நன்கு வளர்ந்து வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர்.

SISTAS AML-20-2APR.

டினேபால் வெண்மை என்றால்

வெண்மையிலும் வெண்மை என்று அர்த்தம்



சாதாரண சோப்பினுல் சுத்தம் செய்த பின் உங்களுடைய வெண்மையான ஆடைகளுக்கு டினேபால் உபயோகிப்பதால், நீங்கள் எவ்வித தோற்றமளிக்கின்றீர்கள் எனப் பாருங்கள், வெண்மையான ஆடைகளைப் பிரகாசமாகவும். பளபளப்பான வெண்மையுடனும் வைக்கச் செய்யும் பிரத்தியேகமான தொருகுணம் டினேபாலிலடங்கியுள்ளது.

டினேபால்

'டினேபால்'' என்பது ஜே. ஆர். கெய்கி. எஸ். ஏ. பாஸ்ல, ஸ்விட்ஸர்லாந்த். அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட்மார்க்.

அமால்கமேடட் கெமிக்கல்ஸ் அண்ட் டைஸ்டப்ஸ கோ, பிரைவேட் லிட்.,
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்.

1956 PLYMOUTH

with Aerodynamic styling

The 1956 Plymouth has the advanced FORWARD LOOK. It's a better-looking car with many new performance features.

Here are its most important features:

- ★ New 12-volt electrical system gives quicker, easier starting, longer spark plug life, plenty of current
- ★ Independent hand brake provides real emergency brake function
- ★ Maximum vision with new horizon windshield wrapped around top and bottom
- ★ Safety-rim wheels, tubeless tyres and many other features
- ★ New safety door latch for passenger protection
- ★ Redesigned sealed beam headlights extend zone of lighting on left side by 80 feet

More Economical Performance *The 6-cylinder engine is dependable and economical. You will like its new pep with increased horsepower.*

New High-Sweep rear fenders contribute to impression of motion and speed

Progressively Manufactured by:

THE PREMIER AUTOMOBILES LTD

KURLA, BOMBAY

SISTA'S PAL-225-R

மெஸர்ஸ் சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.
மெஸர்ஸ் T. V. சுந்தரம் ஐயங்கார் & ஸன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
மேல வெளி வீதி, மதுரை.

உங்கள் எழில் மேம்படக்
காண்பீர்கள்

கட்டாவ்

வாயில்களில்

எந்த நேரத்திலும்
எந்த இடத்திலும்
எந்த சந்தர்ப்பத்திலும்



கட்டாவ் மக்கன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கம்பெனி லிமிடெட்

ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங்ஸ, பலார்ட் எஸ்டேட், பம்பாய்
உள்ளூர் சில்லரை கடைகள்: 216, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை.

ஓவிய விளக்கம்

கார் ரன்ன கூந்தலும் முல்லையனைய பல்லுமுடைய பேரழகி அவள். அவள் அழகுக்கு அழகு செய்கின்றன அவள் அணிந்துள்ள சேலையும், விண்மீனனைய தோடும். மனத்துக்குகந்த காதலனைச் சந்தித்து இன்புறப்போகும் இந்த மடமங்கையின் உள்ளச் சிங்காதனத்தில் அவன் வீற்றிருக்கிறான். இந்த அழகு ராணியும் சிங்காதனத்தில் வீற்றிருப்பதுபோலத்தான் ஒய்யாரமாகத் தன் வலத்தாளை இடத்துடையின்மேல் வைத்து அமர்ந்திருக்கிறாள். அந்த அழகிலே கண்ணைப் பறி கொடுத்த தோழி மெல்ல விசிறியினால் தென்றலைத் தவழவிடுகிறாள். இந்த அட்டை ஓவியத்தை எழுதி யுதவியவர் ஸ்ரீ ஆர். நடராஜன்.

இராமாயண கதா காலக்ஷேபம் பல இடங்களில் நடைபெறுகின்றன. ஆறு நாளில் சொல்வதுண்டு: ஒன்பது நாள் சொல்வதுண்டு. ஒரு மாதத்தில் சொல்லி முடிப்பார்கள்; ஒரு வருஷம் நடைபெறுவதும் உண்டு. கடைசி நாளில் நிச்சயம் பட்டாபிஷேகம் உண்டு. ஸ்ரீராம பட்டாபிஷேகம் இன்ப ஆக்கத்துக்கும் அறம் வென்றதற்கும் அடையாளம். அந்தத் திருக்காட்சி போற்றி வணங்குவதற்குரியது. அன்பர் ஸ்ரீ ராஜம் புதியதாக எழுதிய இந்த முடிசூட்டு விழா ஓவியம் இம்மலரின் முகப்புப் படமாக ஒளிர்கிறது.

கம்பன் இராமாயணத்தில் சீதையைப்பற்றி ஓரிடத்தில் ''அழகெலாம் ஒருங்கே கண்டால் ஆர்அதை ஆற்றவல்லார்?'' என்று பாடுகிறான். ஓவியத்தில் பார்த்தாலே உள்ளம் சொக்கும்படியாக இருக்கும் கட்டழகியை **ஓவியர்மணி ரவிவர்மா** தீட்டியிருக்கிறார். மலைநாட்டு மங்கையின் பேரழகை அவர் எப்படித்தான் எழுதினாரோ! இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். இந்தப் படத்தை உதவிய **ஸ்ரீ என். கோவிந்தராஜையங்காரவர்களுக்கு** எங்கள் நன்றி உரியது.

''உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்ப தோரார்'' என்று கம்பன் பாடுகிறான். இந்த நங்கையும் அணிகலன் தன் அழகை மறைக்குமென்று அவற்றை அணியவில்லை. ஆயினும் பார்க்கலாம் என்று சுட்டியை அணிகிறாள். அவள் மனம் மேவவில்லை. அவள் உள்ளத்தில் உள்ள அதிருப்தி அவள் கண்ணில் கொப்புளிக்கவில்லையா? அவள் காதலனும் இதைப் பார்க்கிறான். இந்தக் காட்சியை **ஸ்ரீ மாதவன்** ஓவியமாக்கித் தந்திருக்கிறார்.

காளிதாசன் காவியத்தில் காட்டிய சகுந்தலையைப் பலபல கோலங்களிலே வைத்துத் தீட்டியும் இன்னும் ஓவியர்களுக்குக் கை ஓயவில்லை. தன் அன்புத் தோழி கொண்டு வந்த புல்லைத் தன் மலர்க்கரத்தால் மான்குட்டிக்கு ஊட்டுகிறாள் சகுந்தலை. அச்சமும் ஏக்கமும் கொண்ட அதன் தாய், மறைவிலிருந்து பார்த்துக்கொண்டு நிற்கிறது. அதற்குப் புல்லைக் காட்டத் தெரியும்; சகுந்தலையைப் போல ஊட்டத் தெரியுமா? **ஸ்ரீ ஸி. ராமஸ்வாமி** வடித்த ஓவியத்தில் இதைக் காணலாம்.

''விட்டல் விட்டல்! ஜே ஜே விட்டல்!'' என்று பஜனை செய்வதைக் கேட்டு உணர்ந்தவர்கள் பாண்டுரங்க விட்டல் எழுந்தருளியிருக்கும் பண்டரிபுரத்தைப்பற்றிக் கேட்டிருப்பார்கள். சந்திரபாகா நதிக்கரையில் அமைந்திருக்கும் ஆலயத்தில் பக்தர்களின் மனத்தை வலைபோட்டுப் பிடிக்கும் பாண்டுரங்கன் எழுந்தருளியிருக்கிறான். மக்கள் திரள் திரளாகச் சென்று ஆற்றில் நீராடி ஆலயத்தை வழிபடுவார்கள். ஓவியத்தில் இந்தக் காட்சியை **ஸ்ரீ ஜாதவ்** காட்டியிருக்கிறார்.

மலையாளத்தில் நீண்ட சாலைகளைப் போலக் கழிகள் பரந்து கிடக்கின்றன. வாணிகமும் போக்குவரத்தும் நிகழ அவை பயன்படுகின்றன. ஆனை குதிரைகளைப் போலப் பெரிய படகுகளும் ஓடங்களும் அந்த நீர்ச்சாலையில் செல்கின்றன. மக்கள் கூட்டங் கூட்டமாக அவற்றிலேறிச் சென்று வியாபாரம் செய்கின்றனர். விழாக் கண்டு களிக்கின்றனர். இந்தக் கழிக்கரைக் காட்சியை **ஸ்ரீ கே. ஸி. எஸ். பணிக்கர்** தமது வண்ண ஓவியத்தில் காட்டுகிறார்.

JOHANNISBERG: (West German)

LETTERPRESS CYLINDER PRINTING MACHINES

* These machines are the results of experience and technical knowledges of 100 years and thus represent the top quality product.
* There are many automatic printing machines but JOHANNISBERG are the only Printing Automaton for pretentious printers.
* Higher Printing capacity, steamlined feeding apparatus, central lubrication of the printing unit and many other technical advantages never before known in printing industry.
* Available in D/Crown — D/Demy— Quad/Crown.

R. HOE & CRABTREE LTD.

LONDON.

"CRABTREE" WORLD RENOWNED NEWS ROTARY, OFFSET AND METAL DECORATING MACHINES

* More than 300 Offset machines installed throughout India and 25 Offset machines are installed in the Government Security Press, Nasik, besides other leading Printing establishments and Governments throughout the country.
* We are also dealing in: Cutting Machines, Binding Machines, Process Cameras and other allied materials required for Printing trade.

Please contact at once:

INDO-SWISS TRADING CO., (Private) LTD.,
259, Angappa Naick Street, Madras 1.
Telephone: 55706

H.O.P. 33 MISSION ROW EXTN. CALCUTTA-13

Other offices:

DELHI, BOMBAY, COLOMBO AND PAKISTAN.



ஸர்க்கிள் விற்பனை ஆபீஸ் - 120, ஆர்மீனியன் வீதி, சென்னை - 1.
(தென் சென்னை, திருவாங்கூர் - கொச்சி ராஜ்யத்துக்கு.)
சென்னை நகரம், ஆந்திரா, மைசூர் ராஜ்யத்துக்கு ஏஜெண்டுகள்:—
மெஸர்ஸ் பி. எல். மல்ஹோத்ரா, 1, மாலனி ரோட், சென்னை-17.

ஸ்தாபிதம் 1890

★

ஸலன், ஆப்டோன்

கலர் பிளாக்குகள்

தயாரிப்பதில் சிறந்த முறையும்
நிறைந்த அனுபவமும் எமக்கு
உண்டு என்பதைப் பக்கத்தில்
உள்ள படங்களைப் பார்த்தே
தெரிந்துகொள்ளலாம்.

★

☎ 3202

ஆப்டோன்-ஸலன்-கலர் பிளாக்குகள்

தயாரிப்பாளர்கள்.

M. C. அப்பாசாமிசெட்டி & கம்பெனி

நெ. 14, ஜோன்ஸ் தெரு,

மண்ணடி — சென்னை-1.



ஓவியர்: எஸ். ராஜம் ஸ்ரீராம பட்டாபிஷேகம் கலைமகள் தீபாவளி மலர், 1956.



கருணைக் கடல்

'ஜோதி'

ஆதியில் அயோத்திநகர்த் தசர தன்சேயாய்
    அறம்வளர மறம்அழிய வந்து தோன்றினன்;
பாதமல ரால்அகலி கல்உரு மாறிப்
    பத்தினியா வாழ்ந்திருக்க உருவம் அளித்தான்;
சீதையெனும் பண்புருவங் கொள்அ ழகியைச்
    சிலைஒடித்துத் திருமணத்தில் செங்கை பற்றினன்.
நீதிஉரு வாம்பரதன் அவனியை ஆள
    நீள்வனத்தி லேபுகுந்து தவத்தைப் புரந்தான். 1.

ஆறுகடந் தேமலையும் காடும் கடந்தே
    ஆழிகடந் தேபலரை அன்பில் தழுவி
மாறுதவிர் சோதரராக் கொண்டு மகிழ்ந்தான்;
    மாதவரும் உம்பர்களும் இன்னல் ஒழிய
வீறும்அரக் கர்குலத்தை வேர றுத்தனன்;
    மேதினியில் நல்லறத்தை நட்டு வளர்த்தான்;
நாறுமலர் மாலை அணிந் தம்பொன் முடியை
    நானிலம் புகழஅன்று சூடினன் எவன்? 2.

ஒருமனைவி ஒருமொழியே ஒற்றைப் பாணமே
    உத்தமன்இவ் விராகவனுக் கென்று புகழப்
பெருமைதரு பண்புவளர் ஆல யம்அவன்.
    பேச்சிறந்த ஞானியர்க்குத் தேசி கன்அவன்.
அருள்நயந்த கம்பனுக்குள் நின்று கவிதை
    ஆற்றுவெள்ள மாகவரக் காப்பி யஞ்சொன்னன்.
கருணைஎல்லை யின்றிநிறை மாக டலவன்
    கற்பனைக்கும் எட்டரிய சோதி அவனே! 3.



திட்டம் இது திட்டம்
திரு வளர்க்கும் திட்டம்

★

இன்றைக்கு நாட்டில் எந்தக் கிராமத்துக்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள். படிப்பு என்ன என்பதையே அறியாத குடியானவனைக் கண்டு பேசுங்கள். அவனும் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விசாரிப்பான். நம் நாட்டின் திட்டம் என்ன, தன்னுடைய ஊரின் திட்டம் என்ன என்பதை எல்லாம் குடியானவன் ஓரளவு தெரிந்து பேசுவதைப் பார்த்து வியப்படைவோம். நாடு முழுவதிலும் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிய உணர்ச்சி பரவி யிருக்கிறது. இதையே நாம் ஒரு பெரிய சாதனை என்று கருதலாம்.

1. நிலம் திருத்தி....
2. சிராகப் பயிரிடத்
3. திட்டங்கள்



திட்டமும் மக்களும்

சி. சுப்பிரமணியம்

சில ஆண்டுகளுக்கு முன் திட்டத்தைப்பற்றி நினைத்தவர்கள் சிலரே. அதைப் பற்றிப் பேசியவர்கள் அவர்களிலும் சிலர். இன்னும் சிலர், ''பெரிய திட்டம் போடுகிறார்கள்'' என்று ஏளனமாகப் பேசவும் பேசினார்கள். அந்தப் பழைய நிலை இன்று முற்றும் மாறிவிட்டது. ஆனாலும் திட்டத்தின் முழுத் தத்துவத்தையும் மக்கள் அறிந்திருப்பதாகச் சொல்ல முடியாது. ஐந்து வருஷத்தில் செய்யக்கூடிய வேலைகளைத் தொகுத்து ஒரு பட்டியலாகக் கொடுப்பதுதான் திட்டம் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் திட்டம் என்பதில், இந்த வேலைப் பட்டியலுக்குமேல் வேறு பல அம்சங்களும் அடங்கியிருக்கின்றன. திட்டத்தின் அடிப்படை, நாம் அடைய விரும்பும் ஒரு லட்சியம். அதை அடைவதற்கான வழியை அமைப்பதே திட்டம். ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்தையும் இந்த லட்சியப் பாதையில் ஒவ்வொரு படி என்றே கருதலாம்.

நம் நாட்டில் இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. சமுதாய, அரசியல், பொருளாதார நியாயம் எல்லாருக்கும் கிடைக்கும்படி செய்வதே நம் அரசியல் அமைப்பின் அடிப்படை. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கான சௌகரியங்களைப் பெறும்படி செய்வது அரசாங்கத்தின் நோக்கமும் கடமையுமாக

இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சமுதாய லட்சியத்துக்குத்தான் காங்கிரஸ் மகா சபை, சோஷலிசச் சமுதாயம் என்னும் பெயரைக் கொடுத்திருக்கிறது. நம் திட்டங்களும் இந்த லட்சியங்களை அடையவே வகுக்கப்பெற்றிருக்கின்றன. இந்த நோக்கம் நிறைவேறப் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் தேவை.

மனிதனுடைய வாழ்க்கைக்கு இன்றியமையாதது உணவு. அந்த உணவு எல்லா மக்களுக்கும் போதிய அளவில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் முதற் கடமை. ஆகவே, திட்டத்தில் இதற்கு முக்கிய இடம் அளித்திருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, மக்களின் தேவை உடையும் இருப்பிடமுமாகும். அவற்றோடு எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்து தர வேண்டும். யார் யாருக்கு எந்த அளவுக்குப் படிக்கக்கூடிய அவாவும் ஆற்றலும் இருக்கின்றனவோ அவர்களுக்கெல்லாம் அந்த அளவு வரையில் உயர் தரப் படிப்புப் படிப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். வைத்திய வசதி எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

இவ்வாறு மக்களின் வசதிகளுக்காகத் திட்டம் வகுக்க நினைக்கும்பொழுது இவை மக்களுக்கு எந்த அளவில் அமைய வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். 30 கோடி மக்களுக்கா, 35 கோடி மக்களுக்கா, 45 கோடி மக்களுக்கா இந்த வசதிகள் என ஆராய்ந்து நிர்ணயிக்கும் போது திட்டத்தின் அளவு அதற்கேற்றபடி மாறுகிறது. ஆகவே, திட்டம் வகுக்கிறவர்கள், ஜனத் தொகை வருஷத்துக்கு வருஷம் எந்த அளவில் மாறுகிறது என்பதைக் கணக்கிட்டால் தான் திட்டத்தை வெற்றிகரமாக உருவாக்க முடியும். உணவு உற்பத்திக்காகத் திட்டமிடும் போது, 1951-இல் என்ன ஜனத் தொகை இருந்தது, 1961-இல் எந்த ரீதியில் ஜனத் தொகைக் கணக்கு மாறியிருக்கும், அல்லது 1971-இல் ஜனத் தொகை எந்த அளவில் இருக்கும் என்னும் புள்ளி விவரங்கள் தெரிந்தால்தான் அதற்கு ஏற்ற வகையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி காணமுடியும். இந்தியாவின் ஜனத் தொகை 1901-ஆம் வருஷத்தில் 23 கோடி. 1921-இல் 24 கோடி 81 லட்சம். 1931-இல் 27 கோடி 55 லட்சம். 1951-இல் 35 கோடி 69 லட்சம். 1931-இலிருந்து 1951-ஆம் ஆண்டு வரையில் உள்ள இருபது வருஷங்களில் எட்டுக் கோடிக்குமேல் ஜனத் தொகை அதிகரித்திருக்கிறது. இதே அளவில் ஜனத் தொகை பெருகிக்கொண்டே போகுமானால் 1971-இல் இந்தியாவின் ஜனத் தொகை 45 கோடிக்குமேல் இருக்கும்.

ஆகவே, திட்ட அடிப்படையில் இப்போது இருக்கும் மக்களுக்குப் போதிய அளவும், அதற்குமேல் 9 கோடி மக்களுக்குப் போதிய அளவும் உணவுப் பொருள்கள் 1971-ஆவது வருஷத்தில் உற்பத்தியாக வேண்டும். இது முடியக்கூடிய காரியமா என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. இதே மாதிரியே உடை, கல்வி, வைத்திய வசதிப் பிரச்னைகளும் முடிவாக வேண்டும்.

மக்கள் எண்ணிக்கையில் எவ்வளவு இருக்கிறார்கள் என்பதைத் தவிர எந்த எந்த வயசில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதுவும் மிகவும் முக்கியம். இந்தியாவில் ஒரு வயசுக் குழந்தையிலிருந்து பதினாலு வயசு வரையில் உள்ளவர்கள், நூற்றுக்கு முப்பத்தெட்டுப் பேருக்கு மேல் இருக்கிறார்கள். இங்கிலாந்து போன்ற தேசங்களில் இந்த வயசுக்குள் இருப்பவர்கள் நூற்றுக்கு இருபத்திரண்டு பேர்கள்தாம். ஆகையினால் வேலை செய்ய முடியாமல், வயசு வந்தவர்களால் காப்பாற்றப் பெற வேண்டியவர்கள் இங்கிலாந்து போன்ற நாடுகளைவிட நம் நாட்டில் மிக அதிகம். இங்கிலாந்தில் வயசு வந்து சம்பாதிக்கக் கூடியவர்கள் நூற்றுக்கு எழுபத்தெட்டுப் பேர்கள், 22 சதவீதம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது; நம் நாட்டிலோ 62 சதவீதம் வயசு வந்தவர்கள் 38 சதவீதம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. பொருளாதாரத் துறையில் பிற்போக்காக இருக்கிற காரணத்தால் நம் நாட்டில் ஒவ்வொருவரும் சம்பாதிக்கும் தொகை குறைவு. இந்தக் காரணத்தால்தான் நம் நாட்டுப் பிரச்னைகள் கடினமாகவும் சிக்கலாகவும் இருக்கின்றன.

உணவு உற்பத்திக்கு, தரிசாக நிலங்கள் இருந்தால் அவற்றைப் பண்படுத்திப் புதிதாக விவசாயத்துக்குக் கொண்டுவரலாம்; அல்லது நிலத்தையே அபிவிருத்தி செய்து உற்பத்தியை அதிகப்படுத்தலாம். ஆனால் இந்த உற்பத்திக்கு மேலே சொன்ன இரு வகையிலும் வரம்புகள் இருக்கின்றன. எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஓர் அளவுக்கு மேல் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது என்பது இயலாத காரியம். இது இன்றைக்கு விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிற உண்மையுங்கூட.

தொழில் அபிவிருத்தி மூலம் உணவுப் பிரச்னையைத் தீர்ப்பது என்பதும் சரியான கருத்து அல்ல. வெளி நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு உணவு இறக்குமதி செய்து நிலைமையைச் சமாளிக்க முடியுமா? அதுவும் இயலாது. ஏனெனில் அமெரிக்காவில்தான் உணவுப் பொருள் உபரியாக இருக்கிறது. இந்த உணவுப் பொருள்களுக்கு ஈடாக, அவர்களுக்கு நாம் கொடுக்கக் கூடியவை எவையும் நம்மிடத்தில் அதிகமாக இல்லை.

ஆகவே, நம் நாட்டின் உணவு உற்பத்தி அளவுக்கு மேல் மக்கள் தொகை அதிகமாகிவிடுமேயாகில் உணவுப் பற்றாக்குறை நம்மிடையே என்றும் இருந்துதான் தீரும். அதுவும் மழைமாரி நன்றாகப் பெய்யாத வருஷங்களில் உணவு நெருக்கடி சமாளிக்க முடியாமல் போய் விடும். இதைத் தவிர்க்க, மக்கள் எண்ணிக்கைக்குப் போதிய அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அல்லது உற்பத்தி அளவுக்கு ஏற்ப மக்கள் தொகையைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்; இதுதான் நம் நாட்டை எதிர் நோக்கியுள்ள சிக்கலான பெரிய பிரச்னை. இதற்கு என்ன வழி காணப் போகிறோம்?

மக்களிடையே ஏற்பட்டிருந்த பீடைகளை நீக்கி அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான வழியை வகுத்ததைக் குறிக்கத்தான் தீபாவளி அன்று நரகாசுரனைக் கொன்றார் என்கிறோம். பஞ்சம், பட்டினி, பிணிகளைப் போன்ற கொடிய அரக்கர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. அந்த அரக்கர்களை நம் நாட்டிலிருந்து ஓட்ட முயற்சி எடுத்துக் கொள்வதே இன்றைய தீபாவளியின் தத்துவம். ★

செல்வம் சேர்க்கும் சிறு கைத்தொழில்கள்

எம். பக்தவத்ஸலம்

நாடு வளம்பெற எல்லாவிதமான தொழில்களும் பெருக வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் செல்வம் சேர வேண்டுமானால் சிறு தொழில்கள் பல்க வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு, ஸ்வீடன் என்னும் தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. 'நவீன சாதனங்களைக் கொண்டு விவசாயப் பண்ணைகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன?' என்பதை ஆராய்ந்து அறிய, கிராமப் பிரதேசங்களுக்குச் சென்று பார்த்தேன். அங்கே, நான் கண்ட காட்சிகள் என்னை வியப்புக் கடலில் ஆழ்த்தின. ஏனெனில், 'பெரிய பெரிய நகரங்களுக்கே உரியவை' என்று நாம் கருதும் எல்லா வசதிகளையும் அங்கே காண முடிந்தது. அது மட்டும் அல்ல; விவசாயப் பண்ணையுடன், தொழிற்சாலைகள் பல, கிராமாந்தரப் பிரதேசங்களில் நடைபெறுகின்றன. சுகாதார வசதிகள், மின்சாரம், நல்ல ரஸ்தாக்கள், கல்வி நிலையங்கள், கலை அரங்கங்கள் முதலியன அங்கே ரமணீயமாய் அமைந்துள்ளன.

வியக்கத் தக்க மாறுதல்

அந்த நாடு மிகவும் சிறியது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரையில், நம் நாட்டைப் போல, விவசாய நாடாகவே இருந்தது. கைத்தொழில் வளர்ச்சி அதிகம் இல்லாதிருந்தது. அங்கே இருந்த கைத்தொழிற்சாலைகள் பெரும்பாலும் நகரங்களை ஒட்டியே அமைந்திருந்தன. சில வருஷங்களுக்கு முன்பு, கிராமங்களிலே தொழில்வளத்தைப் பெருக்க வேண்டும் என்ற புதிய கொள்கையை அந்த நாட்டு மக்களும் அரசாங்கத்தாரும் மேற்கொண்டனர். 'கிராமவாசிகள் விவசாயத்தையே நம்பி வாழாமல், கைத்தொழில் அபிவிருத்தியிலும் நாட்டம் செலுத்த வேண்டும்' என்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் விளைவாக, அந்தத் தேசத்தில் உள்ள கிராமாந்தரப் பிரதேசங்கள், இன்று செல்வப் பொலிவுடன் விளங்குவதோடு, கிராமவாசிகள் அங்கே சகல வசதிகளையும் பெற்று வாழ முடிகிறது.

நம் நாட்டின் கிராமங்களின் நிலை என்ன? சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, சென்ற நாலாண்டுகளாக, கிராமவாசிகளுக்குச் சில வசதிகள் ஏற்பட்டு வருவதை யாரும் மறுக்க முடியாது. உலகத் தொடர்பே இல்லாமல் தனித்து நிற்கும் நிலையில் உள்ள எத்தனையோ குக்கிராமங்களுக்கு, ரஸ்தா வசதி உண்டாகியிருக்கிறது. மைல் கணக்காக நடந்து சென்று குடிதண்ணீர் கொண்டு வரும் நிலையை மாற்ற, ஆங்காங்கே பல கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடக் கட்டிடங்கள், சமுதாய மன்றங்கள், சிறுவர் பூங்கா, வாசகசாலைகள், நூல் நிலையங்கள் முதலியவற்றை, கிராமவாசிகள் உருவாக்கி வருகின்றனர். இவையெல்லாம் கிராம மக்களின் பொது நல ஆர்வத்தின் விளைவாகத் தோன்றிய நற்பலன்களாகும்.

சமுதாய

இலாகாவினர் இவற்றுக்குத் தூண்டுகோலாக இருந்து, தக்க அறிவுரையும், ஓரளவு நிதியுதவியும் செய்துள்ளனர் என்பதை எல்லோரும் அறிவார்கள்.

ஐந்தாண்டுத் திட்டம் கூறும் செய்தி

ஆனால், கிராமவாசிகள் வாழ்வு பூரணமாக முன்னேறுவது, இத்தகைய பொது நல வேலைகளால் மட்டும் முடியாது. கிராம மக்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க வேண்டும். சோம்பேறிகளாய் வீண்காலம் கழிக்காமல், கிராம ஜனங்களின் சக்திக்கும் தகுதிக்கும் ஏற்ற, பல புதிய கைத்தொழில்களை நிறுவி, அவர்களுக்குத் தக்க வேலை கொடுக்க வேண்டும். அதற்கான திட்டங்கள் பலவற்றை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, சென்னை அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அரசியல் ஞானியாகிய திருவள்ளுவர், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் குறித்து, அழகுபடக் கூறியுள்ளார்.

''வாரி பெருக்கி, வளம்படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை''

என்ற குறளில், மக்கள் நலனுக்கு அடிப்படையான செல்வ வளத்திற்கான வழியும், அரசியலாரின் பொறுப்பும் கூறப்பட்டுள்ளன. அதாவது, 'மக்களின் பொருள் வருவாய்க்குரிய வழிவகைகளை விரிவடையச் செய்ய வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் செல்வத்தின் வாயிலாக மக்கள் வாழ்வை வளம்படுத்தும் வசதிகளைச் செய்து தர வேண்டும். இந்த முன்னேற்ற வேலைகளுக்கு அவ்வப்போது ஏற்படக்கூடிய தடைகளையும் மந்த நிலைமையையும் நீக்குவதில் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும்.' இந்த மூன்று முக்கியப் பொறுப்புகளையும் வகிக்க வேண்டியது, அரசியலாரின் கடமை என்பது வள்ளுவரின் ஆணை.

மூவகைத் தொழில்கள்

கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு, அதிக மூலதனச் செலவில்லாமல், நவீன சாதனங்கள் சிலவற்றின் துணையால் செய்யக்கூடிய வேலைகளுக்கு, ''கிராமக் கைத்தொழில்கள்'' (Village Industries) என்று பெயர். இவை தவிர, விஞ்ஞானக் கருவிகளின் உதவியைக் கொண்டும், தக்க பயிற்சி பெற்ற நிபுணர்களின் உதவி மூலமாகவும் மேற்கொள்ளப்படும் வேலைகள், ''சிறு கைத்தொழில்கள்'' (Small Scale Industries) எனப்படுகின்றன. இவற்றிற்கு ஓரளவு அதிக மூலதனமும், தொழில் நிபுணர்களின் உதவியும் வேண்டும். இவை தவிர, கை நுட்பத் தொழில்களின் (Handicrafts) வளர்ச்சியும் கவனிக்கப்பட வேண்டும். இந்த மூன்று வகையான தொழில்களும் கிராமப் பிரதேசங்களில் அபிவிருத்தி அடைவது அவசியம்.

சிறு கைத்தொழில்களின் அபிவிருத்திக்கான நிலையங்கள், நம் நாட்டின் பல்வேறிடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. தொழில் இலாகா டைரக்டரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் இந்த ஸ்தாபனங்கள், பயிற்சி நிலையங்களாகவும், உற்பத்திச்சாலைகளாகவும் பணியாற்றுகின்றன. சென்னை நகரில் (கீழ்ப்பாக்கத்தில்), கண்ணாடி உற்பத்திசாலை ஒன்று தொடங்கப் பட்டுள்ளது. இங்கே கவர்ச்சியான கண்ணாடிப் பொருள்கள் பல, குறைந்த விலையில் உற்பத்தியாகின்றன. ஜப்பானுக்குச் சென்று இந்தத் தொழிலைக் கற்றுத் தேர்ந்த ஒரு நிபுணர் இங்கே வேலை பார்க்கிறார். இங்கே நடைபெறும் ஆராய்ச்சியின் மூலம், விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களுக்குவேண்டும் கண்ணாடிச் சாதனங்கள், 'தெர்மாஸ் ப்ளாஸ்கு' உபகரணங்கள் முதலியன நம் ராஜ்யத்திலேயே உற்பத்தி செ'்து கொள்ள முடியும்.

இதேபோல, திண்டுக்கல்லில் பூட்டு உற்பத்தி சாலையும், ஆம்பூரில் தோல் பதனிடும் பயிற்சி நிலையமும், பழனியில் 'லாந்தர்' என்னும் கைவிளக்கு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையும், கும்பகோணத்தில் பித்தளைப் பாத்திரத் தொழிற்சாலை ஒன்றும், மதுரை ஜில்லாவில் ஜவுளி மில்லுக்குத் தேவையான உபகருவிகள் உற்பத்திசாலை ஒன்றும் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. பாதரட்சை செய்யும் நிலையங்கள், பாலக்காடு

இல்லத்துக்கு வேண்டிய பாத்திரங்கள்



கண் கவரும் ஜமக்காளம்

திருவல்லிக்கேணி, பெரம்பூர், பல்லாவரம், மதுரை, சேலம் முதலிய இடங்களில் நடைபெறுகின்றன. தீக்குச்சி உற்பத்திசாலை ஒன்று ('சுடர்' என்ற பெயர் கொண்ட தீப்பெட்டி உற்பத்திச்சாலை), பெரம்பூரில் தொடங்கப்பட்டுள்ளது. மண்பாண்டத் தொழிற்சாலை, விளையாட்டுக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை, விவசாயக் கருவிகளைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை முதலியன பல்வேறு ஜில்லாக்களில் ஆரம்பமாகும். நவீன சாதனங்களோடு அமைந்த தச்சுப் பட்டறை, கொல்லப் பட்டறை ஆகியவை, சேரன்மாதேவி, கிருஷ்ணகிரி, கோழிக்கோடு, திருநெல்வேலி . (பேட்டை) முதலிய இடங்களில் நிறுவப்படும்.

தொழில் நிலைய அரங்கங்கள்

இவை தவிர, சில முக்கிய இடங்களில், தொழில் நிலைய அரங்கங்கள் (Industrial Estates) நிர்மாணிக்க ஏற்பாடாகிவருகிறது. அதாவது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல புதிய தொழிற்சாலைகள் அனைத்தும் ஆரம்பிக்க வசதி செய்யப்படும். இதன் மூலம் தொழிற்சாலைகளுக்குத் தனித்தனியே இடவசதி தேடும் கஷ்டம் குறைவதோடு, சுகாதார வசதிகளோடு, திட்டமிட்ட வகையில் பல்வேறு தொழில் நிலையங்களையும் ஒரே இடத்தில் உண்டாக்க முடியும். சென்னை நகரை அடுத்த கிண்டியிலும், விருதுநகர், பாலக்காடு, ஈரோடு முதலிய இடங்களிலும், மற்றும் சில முக்கிய ஜில்லாத் தலைநகரங்களை அடுத்தும், இத்தகைய தொழில் நிலைய அரங்கங்களை நிறுவ, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ரண சிகிச்சைக்கான உபகரணங்களைப் பழுதுபார்க்கும் நிலையம், மின்சாரக் கருவிகள் உற்பத்திசாலை முதலியன அங்கே நிறுவப்படும். ராஜபாளையம், வேலூர் முதலிய இடங்களில், பொது எஞ்சினீயரிங் தொழிற்சாலை தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமக் கைத்தொழில் திட்டங்கள்

பொதுவான இத்தகைய வளர்ச்சித் திட்

பணம் தரும் பிரம்புத் தொழில்

டங்களோடு, சமுதாய அபிவிருத்திப் பிரதேசங்களில் சிறப்பான முறையில், கிராமக் கைத்தொழில் திட்டங்கள் பல நிறைவேறி வருகின்றன. கீழ்ப்பவானி சமுதாய நலத் திட்டப் பிரதேசத்தில், பரீட்சார்த்தமாக, கைத்தொழில் வளர்ச்சித் திட்டமொன்று, விசேஷ அதிகாரி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது. இதன்மூலம், 2,000 பேருக்கு மேற்பட்ட கிராமவாசிகளுக்கு வேலை கிடைத்துள்ளது. பாதரட்சைத் தயாரிப்பு, பனைவெல்லம் தயாரித்தல், கயிறு உற்பத்தி, கதர் அபிவிருத்தி முதலிய தொழில்கள் வளர்ந்து பெருகுகின்றன.

தேன்கூடுகள் விநியோகம் மூலம், கிராமவாசிகளுக்கு உபவருமானம் கிடைக்கும். உசிலம்பட்டி, தலைச்சேரி முதலிய இடங்களில் இதற்கான விசேஷத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கோடைக்கானல் பிரதேசத்தில் இந்தத் தொழில் நன்கு நடைபெறுகிறது. 'வார்தா'ச் செக்கு நிலையங்கள், பெரும்பாலும் எல்லாச் சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் நற்பலன்களைக் கிராமவாசிகள் நன்கு உணர்ந்து வருகின்றனர்.

கைக்குத்தல் அரிசியைப் பலரும் உபயோகிக்க உறுதி கொண்டால், எண்ணற்ற பேருக்கு வேலை கிடைப்பது நிச்சயம். கிராமப் பிரதேசங்களில் பெண்கள் பலர் இந்தத் தொழில் மூலம் ஓரளவு ஊதியம் பெற முடிகிறது. அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் போர்டு, இந்தத் துறையில் விசேஷ சிரத்தை கொண்டுள்ளது. நம்முடைய கிராமவாசிகளும் நகரவாசிகளும் சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டுமானால், கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க முன்வர வேண்டும். நெல்லிலுள்ள உணவுச் சத்து நஷ்டமாகாமல், உமியை மட்டும் நீக்கும் 'சக்கிகள்' பல ரகங்களில் இப்போது கிடைக்கின்றன. கல்லுப்பட்டியில் அதற்கென விசேஷப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கதர் அபிவிருத்தியில் சென்னைக்கு முதலிடம்

கதர் உற்பத்தியில் இந்தியாவிலேயே நம் ராஜ்யந்தான் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. அரசாங்க நேரடி நிர்வாகத்தின்கீழ்க் கதர் அபிவிருத்தி நடைபெறுவது, நம் சென்னை ராஜ்யத்தில்தான். அரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இந்தத் திட்டத்தின்படி உபவருமானம் பெற்று வருகின்றனர். சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகிய கிராமத் திருப்பணிகள் நடைபெறும் பிரதேசங்களில், கதர் அபிவிருத்திக்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிதாக வந்துள்ள அம்பர் சர்க்காவை, கிராமங்களிலே பரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கை நுட்பத் தொழில்கள்

கிராமக் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றோடு, கைநுட்பத் தொழில்களை (Handicrafts) வளர்க்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. சேலம் ஜில்லாவில் கண்ணாடி வளையல்கள் உற்பத்தி செய்யவும், தென் ஆர்க்காடு ஜில்லாவில் பளபளப்பான மண்பாண்டப் பொருள்கள் செய்யவும் ஏற்பாடாகியுள்ளது. பனை ஓலையிலிருந்து கவர்ச்சியான சாமான்களைச் செய்துகொள்ளும் தொழிலுக்கான பயிற்சி நிலையம் ஆரம்பிக்கவும், கண்ணைக் கவரும் தோல் சாமான்கள் பலவற்றைச் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சரிகை வேலை, துணிகளுக்குப் பூவேலை செய்தல், கம்பளி தயாரித்தல், வெண்கலச் சாமான்கள் செய்தல், பிரம்புச் சாமான்கள் செய்தல் முதலிய கைநுட்ப வேலைகளையெல்லாம், பல்வேறு இடங்களில் வளர்ப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கிராமக் கைத்தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களை சரியான முறையில் விற்பனை செய்வது அவசியம். இதற்காக, ராஜ்யத்தில் பல்வேறு இடங்களில் 'கண்காட்சி விற்பனை நிலையங்களை'த் (Emporium) திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் பல்வேறு பாகங்களில் உற்பத்தியாகும் சிறந்த பொருள்களெல்லாம், ஓரிடத்தில் சேகரித்து வைக்கப்படும். இதன் மூலம் விற்பனை அதிகமாவதோடு, கிராமத் தொழில் வளர்ச்சியைப் பற்றி, எல்லோரும் எளிதில் அறியும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

அரசாங்கத்தின் விசேஷ சிரத்தை

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், சிறு கைத்தொழில் வளர்ச்சித்துறையில் திட்டமிட்டு அரசாங்க இலாகாக்கள் செய்ய வேண்டிய பொறுப்புக்களை அவ்வப்போது ஊன்றிக் கவனித்தும் வருகின்றது. நமது ராஜ்யத்தில் அமைச்சர்கள் அனைவரையும் அங்கத்தினராகக் கொண்ட அபிவிருத்திக் கமிட்டி, (State Development Committee) இத் திட்டங்களின் நடைமுறையை, அவ்வப்போது பரிசீலனை செய்து வருகிறது. அடிக்கடி தோன்றும் நிர்வாகச் சிக்கல்களைத் தீர்க்க, உடனடியான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆனால், பொது மக்கள் இத்துறையில் மேலும் அக்கறையோடு பாடுபட்டாலன்றி, பரிபூரண பலன் ஏற்படாது. ஒவ்வொருவரும், தம் தம் பிரதேசங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள கிராமக் கைத்தொழில் வளர்ச்சித் திட்டங்களை நன்கு உணர்ந்து, அவற்றைக் காலதாமதமின்றி நடத்தி வைத்து, நன்மை பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம். வளர்ச்சி அடையக்கூடிய தொழில்கள் எவையேனும் இருந்தால், அவை பற்றிய தகவல்களை, தொழில் இலாகா டைரெக்டருக்குத் தெரிவிப்பது நலம்.

மக்கள் வாழ்வு தழைக்க

ஸ்வீடன் போன்ற சிறிய நாடுகள் தொழில் துறையில் மிகக் குறுகிய காலத்தில் வளர்ந்திருக்கும்போது, நாம் ஏன் முன்னேற முடியாது? நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்க, எல்லோரும் முன்வந்து, கிராமப் பிரதேசங்களில் பலபல கைத்தொழில்களைப் பெருக்கினால், மக்கள் வாழ்வில் செல்வம் தழைத்துச் சுபிட்சம் தாண்டவமாடுவது நிச்சயம்.

''நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு''

என்று வள்ளுவர் கண்ட லட்சிய நாட்டை உருவாக்க, எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போமாக! ★



இரு மடங்கு உற்பத்தி

விவசாயம், கைத்தொழில், வாணிபம், சுகாதாரம், கல்வி முதலிய துறைகள் ஒவ்வொன்றிலும் முன்னேற்றமே, நம் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களின் லக்ஷ்யம். இத்திட்டங்களின் கீழ் முன்னேற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஆதாரபான ரஸ்தாக்கள், தொழிற்சாலைகள், கலாசாலைகள், வைத்தியசாலைகள், மின்சார உற்பத்தி திட்டங்கள் ஒவ்வொன்றிலும் உபயோகப் படுத்தப்படுவது ஸிமெண்ட்.

ஸிமெண்ட் உற்பத்தியில் 10 ஆண்டுகளுக்கு முன் ஈடுபட்டு, தமிழ் நாட்டில் சங்கர் நகரில் ஸ்தாபிக்கப்பட்ட எங்கள் தொழிற்சாலையிலிருந்து **சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் ஸிமெண்ட்** ஆண்டு தோறும் லக்ஷம் டன்களுக்குமேல், உற்பத்தி செய்து, நாட்டிற்கு அளித்து வந்ததை, மேலும் வருஷத்திற்கு இரண்டு லக்ஷம் டன்களாகப் பெருக்கத் திட்டமிட்டு, ஆலை நிருமிப்பு வேலைகள் நடந்து வருகின்றன. அதன் பயனாக இம்மாதத்திலிருந்து அதிக உற்பத்தி திட்டம் அமுலுக்கு வருகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

SANKAR IC BRAND

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

தொழிற்சாலை: சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா • *ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்*: 11/12. ஸெகண்ட்லைன் பீச், மதராஸ்-1

50—48

Divali Greetings
பண்டிகை நாளே பரிசு நாள்!
பரிசு அளிக்கச் சந்தர்ப்பம் வரும்போது, வெஸ்ட் எண்ட் கடிகாரத்தைவிடச் சிறந்தது எதுவும் இல்லை! ஒவ்வொரு மாடலும் எடுப்பான தோற்றமும் பூரண நம்பகமும் வாய்ந்தது. வெஸ்ட் எண்ட் கடிகாரங்கள், இந்தியச் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய வகையில் இணையற்ற வலுவோடு அமைந்தவை. உங்களுக்குக் கட்டாயம் திருப்தியைக் கொடுக்கின்ற, நம்பகமான, அழகான பொருத்தமான பரிசு இதோ இருக்கிறது.
WEST END WATCH CO.
BOMBAY
CALCUTTA
The SOWAR PRIMA
7¾" Size
Everbright Steel ... Rs. 190

தங்கப் பேனாவும் வைர மோதிரமும்

எப்படியோ சந்திப்பு ஏற்பட்டது. அதன் நினைவுக்கு அடையாளமும் கிடைத்தது.

என்னுடைய முதல் அநுபவம் அது. எப்படி ஆரம்பித்து எப்படி வளர்ந்தது என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. இரவு பன்னிரண்டு மணிக்கு அந்த வயிற்று வலி ஆரம்பித்தது; இரண்டரை மணிக்குள் நான் துவண்டு போய், கிழித்த நாராகக் கிடந்தேன். ராஜம் உண்மையில் பயந்துபோனாள். இரவு வேளையில் டாக்டரைக் கூப்பிட்டுத் தொந்தரவு கொடுக்கலாமா? கூப்பிடாமல் இருந்து, பொழுது விடியுமுன் என் நிலை வைத்தியத்துக்குக் கட்டுப்படாமல் போய்விட்டால் என்ன செய்வது? - இப்படி இரண்டு பிரச்னைகள். கடைசியில் டாக்டரை அழைத்துவிட்டாள்.

டாக்டர் பத்மநாபன் என் வயிற்றை அமுக்கிக்கொண்டே, ''எங்கே வலி?..இங்கேயா?.. எனக்கு டெலிபோன் செய்ததே நல்லது. வயிற்று வலி என்றால் மாத்திரம் எந்த நேரமும் கூப்பிடலாம்; உடனே கவனிக்க வேண்டிய விஷயம்..'' என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

''வெகு நேரமாக வலி அடங்கிவிடும் என்று பார்த்தேன். நிற்காமல் போகவேதான் 'போன்' செய்தேன்..இவர் ஒன்றும் சாப்பிடவில்லை; இதற்கு முந்தி இப்படி வந்தது இல்லை'' என்றாள் ராஜம்.

அவர்கள் பேச்சு என் காதில் அரையும் குறையுமாகத்தான் விழுந்துகொண்டிருந்தது. ''தீபாவளி வந்துவிட்டுப் போனாலே ரொம்பப் பேருக்கு வயிற்றுக் கோளாறு..ஏன், போன வருஷம் எனக்கே..''

''டாக்டர், நான் தீபாவளி பட்சணத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை!'' என்று உரக்கக் கத்த வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அலை மாதிரி மறுபடி ஒரு வலி கிளம்பி என் நெஞ்சில் மோதி, குரலை எழும்பாமல் மூழ்கடித்தது.

''இவர் முன்னடி தூங்கட்டும்..அதற்கு ஓர் 'இஞ்செக்ஷன்' செய்துவிட்டுப் போகிறேன்..''

டாக்டர் தோல் பையைத் திறந்தார். கண்ணாடி 'ஸிரிஞ்சை'யும், ஊசியையும் பொருத்தினார். எனக்கு நினைவு போவதும் வருவதுமாக இருந்தது. 'மிக மிக அவசியமானால் ஒழிய இந்த டாக்டர் இஞ்செக்ஷன் ஊசியை எடுக்க மாட்டாரே!' என்று எண்ணினேன்.

மறுபடி நான் கண்ணை விழித்தேன். டாக்டரைக் காணவில்லை. அவர் இருந்த இடத்தில் சர்மா உட்கார்ந்து, என்னைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். யார் இந்தச் சர்மா? அடிக்கடி பார்த்த முகம்; பேசிப் பழகின ஆசாமி. நெஞ்சில் இருக்கிறது, வாயில் வர மறுக்கிறது. பிரியமாகப் பேசுகிறார்; என் விஷயம் முழுவதும் தெரிந்தவராகவும் காண்கிறது. என் மனத்தில் ஓடுவதையெல்லாம் கண்டுவிட்டவராகப் படுகிறது. அப்படி இருந்தும், இவர் யார் என்று சொல்லத் தெரியவில்லை.

சர்மா பேசும்போது என்னால் பேச முடியவில்லை. ஏதோ பழைய துக்கம் நெஞ்சில் புரள்வதுபோல் ஓர் உணர்ச்சி; அதை விவரிக்க முடியவில்லை.

சர்மா சொன்னார்: ''அகஸ்மாத்தாக இந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தேன். உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நுழைந்தேன். நீங்களானால் இப்படிப் படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.''

''தீபாவளிக்கு முதல் நாள் இன்று. எனக்குங்கூட இந்தத் தினம் என்றால் பழைய ஞாபகம் ஒன்று வருவது உண்டு. உங்களுக்கு வயிற்று வலி; எனக்கு அதை நினைத்தால் இருதயம் வலிக்கும். சொல்லட்டுமா? கேட்கிறீர்களா?''

நான் அவருக்குப் பதில் சொல்லவில்லை; அவரும் அதை எதிர்பார்க்காமல் பேசினார். அது பேச்சாக எனக்குப் படவே இல்லை; என் பழைய ஞாபகமாகவே தோன்றியது. சர்மா சொன்ன கதை இதுதான்:

* * *

இதேபோல் ஒரு தினம். இன்றைக்கு இருபத்துமூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. அன்றைக்கும் நான் எழுத்தாளன்தான்; இன்றைக்கும் எழுத்தாளன்தான். அது ஆரம்ப காலம்; எல்லாரும் உற்சாகப்படுத்தினார்கள். இன்று முற்றிவிட்ட காலம், எடை போட்டுப் பார்க்கிறார்கள். வித்தியாசம் அவ்வளவே.

நான் சென்னைப் பட்டணத்துக்குப் புதிது. லிங்கி செட்டித் தெருவில் 258-ஆம் நெம்பர் மாடியில் ஒரு விசாலமான அறை என் ஜாகை; தம்பு செட்டித் தெரு 'லக்ஷ்மி விலா'ஸில் சாப்

பாடு. பிரம்மசாரி. ஆபீஸை விட்டால் சினிமா, டிராமா, கடற்கரை எங்கேனும் ஓரிடத்தில் என்னைக் காணலாம். இரவு பன்னிரண்டு மணிக்குமேல் அறைக்குத் திரும்புவேன்; பகல் எட்டு மணி வரையில் நான் தூங்குவேன். என்னைக் கேட்பார் இல்லை. அப்படி ஒரு சுதந்தரமாக வாழ்ந்தேன்.

அன்று நான் சினிமாவுக்குக் கடைசிக் காட்சி பார்க்கப் போயிருந்தேன். சுவாரசியமான படம். வெளியே வந்தபோதுதான் மழையும் மின்னலுமாக இருந்ததைக் கவனித்தேன். சள சளவென்று ஜலத்தில் கார்களும் டாக்ஸிகளும் புறப்பட்டன. கூட்டமெல்லாம் கலையுமட்டும் நான் காத்திருந்தேன். கடைசி டாக்ஸியில் ஏறி, சங்கடமில்லாமல் ஜாகையை அடைய வேண்டும்; படுக்கையில் போய் விழ வேண்டும்.

''ஸார்!..டாக்ஸி!..'' என்று அழைத்தான் ஒரு டிரைவர். எனக்காகக் கதவையும் திறந்து விட்டான். அதிகம் மழையில் நனைந்துவிடாமல் இருக்க நான் அதை நோக்கி ஓடினேன். அப்போதுதான் நான் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

அதே டாக்ஸியை நோக்கி மற்ருேர் உருவமும் ஓடி வந்தது. சுமார் இருபது வயசுள்ள மங்கை அவள். நாங்கள் இருவரும் திறந்த கதவண்டை சந்தித்தோம்.

''முடியாது, அம்மணி, ஐயாதான் முதலில் கூப்பிட்டார். வேறு வண்டி பார்த்துக்கொள்ளுங்கள்!'' என்ருன் டிரைவர்.

''வேறு எதுவும் காணவில்லையே! ?தவிர, எனக்கு வீட்டுக்குச் சீக்கிரம் போக வேண்டியிருக்கிறது. அம்மா கோபிப்பாள் அங்கே'' என்று அவள் பணிவுடன் சொன்னுள். அவளுடைய குரல் இனிமை மட்டும் என்னை அதிசயிக்கச் செய்யவில்லை; எங்கோ எப்போதோ ஒரு காலத்தில் கேட்டுப் பழகிய குரலாகப் பட்டது. அவள் முகத்தை உற்றுக் கவனித்தேன். பார்த்துப் பரிசயமான முகந்தான். ஆனுல், **யார்** என்று

கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது.

டாக்ஸி டிரைவர் கண்டிப்பான ஆள். ''அதெல்லாம் நமக்குத் தெரியாது. ஐயா சம்மதப்பட்டால் எனக்கு ஆட்சேபம் இல்லை'' என்ருன்.

''ஏன், உங்களுக்கு எங்கே போக வேண்டும்? நான் டவுன் பக்கம் போகிறவன்'' என்றேன் நான்.

''நானும் அங்கேதான் வருகிறேன். உங்கள் வீட்டருகில் என்னை இறக்கி விட்டுவிட்டால் போதும்'' என்ருள்.

''வண்டியில் உட்கார்ந்துகொள்ளுங்கள்'' என்றேன். குழந்தை மாதிரி வெகுளியாகப் பேசினுள். அவள் உடுத்திருந்த பட்டுப் புடைவையும், கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியும், கரங்களில் குலுங்கிய ஐந்து ஜோடி வளைகளும் என் முதல் பார்வைக்குத் தப்பவில்லை. காதுகளில் ஜ்வலித்த கமலத் தோடுகள் இருளிலும் 'இருக்கிருேம், இருக்கிருேம்' என்று ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தன.

டிரைவரிடம், ''முதலில் லிங்கி செட்டித் தெருவுக்கு விடு. அப்புறம் இந்த அம்மாளை வீட்டில் கொண்டுவிட்டு நீ போகலாம்'' என்று நான் சொன்னேன்.

''என்னுல் உங்களுக்குச் சிரமம்'' என்ருள் மங்கை.

''நன்ருயிருக்கிறது! ஒரு மனிதருக்கு இந்த அற்ப உதவிகூடச் செய்யக் கூடாதா? அதுவும் என்ன மழை பெய்திருக்கிறது! என்ன இருட்டு!'' என்றேன்.

''இவர் முன்னுடி தூங்கட்டும்'' என்ருர் டாக்டர்.

''அண்ணா கார் எடுத்துக்கொண்டு கட்டாயமாக வருகிறேன் என்று சொல்லியிருந்தான். என்ன அசௌகரியமோ, வரக் காணவில்லை. தியேட்டர் வாசலில் ஜனங்கள் எல்லாரும் போனபிறகு நான் மட்டும் காத்திருப்பது நன்றாக இராதாகையால், உங்கள் வண்டியில் ஏறிக்கொண்டேன்.''

''ஓஹோ!'' என்றேன். முன்பின் தெரியாத என்னிடம் மட்டும் எப்படி நம்பிக்கை வைத்தாள் என்று நான் கேட்க விரும்பினேன்; ஆனால் மௌனமாகவே இருந்துவிட்டேன்.

டாக்ஸி லிங்கி செட்டித் தெருவுக்கு வந்துவிட்டது; என் ஜாகை வாசலிலும் நின்றது.

டிரைவரிடம் ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். ''முழுச் சார்ஜும் இதனுள் அடக்கம். அம்மாவிடம் வேறு வாங்கி விடாதே!'' என்றேன் அவனிடம்.

''இதெல்லாம் எதற்கு?'' என்றாள் அவள்.

''நீங்கள் ஒரு நிமிஷம் என் அறைக்கு வந்து நின்றுவிட்டுப் போகலாமா? காச்மீரத்திலிருந்து குங்குமப் பூ ஷர்பத் வந்திருக்கிறது. குளிர் மழைக் காலங்களுக்கு மிகவும் நல்லது. அதில் கொஞ்சம் அருந்தலாமே!'' என்று

அழைத்தேன்.

''இல்லை..வேண்டாம்..நேரமாகிறது; நான் போய் விடுகிறேன். உங்கள் அன்புக்கு மிகவும் வந்தனம்.''

அவளை நான் அதிகம் கட்டாயப்படுத்தவில்லை. ''உங்கள் இஷ்டம். நாளை தீபாவளி. என் குடும்பத்துடன் இருப்பேன் வழக்கமாக. இந்த வருஷம் நான் தனியன். உங்கள் காலடி படட்டுமே என்றுதான் அழைத்தேன்.''

''அப்படியானால் கட்டாயம் வருகிறேன். ஒரு நிமிஷத்துக்குமேல் நிற்க அவகாசம் இல்லை.''

''உங்கள் இஷ்டம். தீபாவளி பட்சணங்கள் ஐந்தாறு பெட்டிகள் வந்திருக்கின்றன. டிரைவர், ஒரே நிமிஷம்; கொஞ்சம் பட்சணம் சாப்பிடுகிறாயா?''

''என்னையா கேட்கிறீங்க, எஜமான்? கொடுங்க.''

''ஒரே நிமிஷம் நில்!'' என்று நான் இறங்கினேன். என் பின்னே அந்த மங்கையும் இறங்கினாள். நான் மாடியில் அறை வைத்துக்கொண்டிருந்தேனா? வாசலிலேயே மாடிப் படி. இரண்டாம் பேர் அறியாமல் மேலே போகலாம்.

விளக்கைப் போட்டேன். என் சொந்த அறையாகையால் என் இஷ்டப்படி துணிமணிகளை வாரி இறைத்திருந்தேன். மேஜைமீது புத்தகங்கள் தூவிக் கிடந்தன. சிறிது வெட்கத்துடன் ஒரு நாற்காலியை அவசரமாக ஒழுங்கு செய்து அவளை உட்காரச் சொன்னேன்.

''மன்னிக்க வேண்டும். உங்களை வரவேற்க இந்த இடம் ஒழுங்காக இல்லை'' என்றேன்.

அவள் புன்முறுவல் பூத்தாள். ''என் அறையும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்கும்'' என்றாள்.

விளக்கு வெளிச்சத்தில் அவளை நன்றாகப் பார்த்தேன். அவளுடைய அழகு என் தலையைச் சுழலச் செய்தது. பிரமனே, இந்தப் பெண்களிடம் அழகையெல்லாம் கொண்டு சேமித்து வைத்து, ஆண்கள் நெஞ்சையும் ஏன் பஞ்சையாகப் படைத்துவிட்டாய்?

''நீங்கள் எழுத்தாளர் அல்லவா?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம், என் கதைகள் பல பத்திரிகைகளில் வந்திருக்கின்றன.''

''ஓ! நான் இனிமேல் தவறாமல் படிப்பேன்!'' என்று உறுதி கூறினாள், இதுவரை அலட்சியமாக இருந்துவிட்டதற்கு மன்னிப்புக் கோரும் பாவனையில். ''நான் வந்து நேரமாகவில்லையா?'' என்பதுபோல் அவள் கண்கள் கெஞ்சின.

அதை நான் புரிந்துகொண்டு, ஒரு தம்ளரில் காச்மீர் ஷர்பத்தைக் கொட்டி, தேவையான அளவு தண்ணீர் கலந்து கொடுத்தேன். ''இதைச் சாப்பிடுங்கள். அதற்குள் ஒரே நொடியில் டிரைவரிடம் ஒரு பட்சணப் பெட்டியைக் கொடுத்துவிட்டு ஓடி வருகிறேன்'' என்று கீழே சென்றேன். என் எதிரில் சாப்பிடச் சங்கோசப்படுவாள் என்ற நினைப்பு எனக்கு.

டாக்ஸி டிரைவருக்கு வெகு சந்தோஷம். அவன் வீட்டில் நாலு வயசில் ஒரு சின்னப் பிள்ளை இருக்கிறானாம்; இதேபோல் வேண்டும் என்று காலையிலும் மாலையிலும் கேட்கிறானாம். ''இதெல்லாம் வாங்கித் தர நமக்குச் சக்தி ஏதுங்க? ஐயா மாதிரி யாரேனும் அன்பாகக் கொடுத்தால்தான் உண்டு'' என்றான் நன்றிப் பெருக்குடன்.

எனக்கும் சந்தோஷம். ஒரு நல்ல காரியம் செய்துவிட்டால், இந்த மனம் எப்படிப் பூரிக்கிறது? துள்ளிக்கொண்டு மாடிக்குத் திரும்பினேன்.

இதற்குள் அங்கே அவள் ஷர்பத்தை அருந்தி, தம்ளரை மேஜையின்மேல் வைத்

திருந்தாள். புறப்படுவதற்குச் சித்தமாக எழுந்து நின்றாள்.

"நீங்கள் இந்த ஏழையின் அறைக்கு விஜயம் செய்ததில் நான் பெருமை கொள்கிறேன்!" என்றேன்.

"மேடைப் பிரசங்கி மாதிரி பேசுகிறீர்களே! நான் அல்லவா உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்?....வருகிறேன்....உங்கள் காச்மீர் ஷர்பத்தை நான் மறக்கவே மாட்டேன். அத்தனை இனிப்பு!" என்றாள் புன்னகையுடன்.

இருவரும் கீழே இறங்கினோம். இதற்குள் மழை நன்றாக விட்டுவிட்டது. வண்டிக்குள் அவள் ஏறி அமர்ந்துகொண்டாள். கதவை நான் சாத்தினேன்.

"உங்களுக்கு எங்கே போக வேண்டும் என்று சொல்லவில்லையே!" என்று கேட்டேன்.

"அதை நான் டிரைவரிடம் சொல்லி, ஜாக்கிரதையாகப் போய்ச் சேருகிறேன். உங்கள் அன்பை ஒருநாளும் மறக்க மாட்டேன்."

கையைக் கூப்பிக் காட்டினாள். "புர்ர்.." என்று டாக்ஸி புறப்பட்டுச் சென்றது. ஐம்பது கஜம் அது செல்லும் வரையில் மழை ஜலத்தில் ஓடும் சளசளப்புச் சப்தம் என் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது.

சிவப்பு விளக்குகளும் மறைந்துவிட்டன. அப்புறந்தான் என் மூளை வேலை செய்தது.

'என் எதிரில் ஏன் அவள் தன் விலாசத்தைச் சொல்லவில்லை? பார்வைக்கு நல்ல அந்தஸ்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்கிறாள்; பெரிய மனிதர் ஒருவருடைய மகள் என்பதிலும் சந்தேகம் இல்லை. "அண்ணன் கார் கொண்டு வருவதாகச் சொன்னான். என்ன அசௌகரியமோ, வரவில்லை" என்று வேறு சொன்னாள். அப்படி இருக்க, ஏன் தன் விலாசத்தை மறைக்க வேண்டும்? ஒருகால் நான் வெளியே வம்பளப்பேன் என்ற காரணமாக இருக்குமோ? . அப்படி நான் வாயரட்டையாகவும் அவளிடம் நடந்து கொள்ளவில்லையே!' - இப்படியெல்லாம் என் எண்ணங்கள் ஓடின. மெல்ல மாடிப் படி ஏறினேன். அறையை அடைந்தேன். அவள் மேஜை மீது வைத்துவிட்டுச் சென்ற கண்ணாடித் தம்ளரை ஷெல்பில் வைக்கும்போது ஒரு கண்ணோட்டம் விட்டேன். 'பக்' என்றது எனக்கு.

அங்கே வரிசையாக மூன்று பேனாக்கள் நான் வைத்திருப்பது வழக்கம். ஒரு பேனாவினால் கணக்கு வழக்குகள் எழுதுவேன்; ஒரு பேனாவினால் கதை கட்டுரைகள் எழுதுவேன்; மூன்றாவது தங்கப் பேனாவினால் என் நெஞ்சில் ஊறும் ஆசை ஊற்றுகளை, கனவுகளை, கற்பனைகளைச் சுவையுடன் எழுதுவேன். முதல் இரண்டு பேனாக்களும் இருந்தன; மூன்றாவது - தங்கப் பேனாவை அங்கே காணவில்லை. நான் கீழே இறங்கி யிருந்த சமயம் அதை அவள்தான் கொண்டுபோய்விட்டாள்!

முதலில் எனக்கு ஆத்திரந்தான் வந்தது. சீ! என்ன உலகம் இது? சிறிதும் நன்றி கெட்ட உலகம்! நான் மழைக்காக டாக்ஸியில் அழைத்து வந்து, என் அறையில் உபசாரம் செய்து, உயர்ந்த ஷர்பத்தையும் கொடுத்தால், இதுவா அதற்குப் பிரதி உபகாரம்? நான் சற்று அஜாக்கிரதையாக இருந்ததற்காக மோசடி செய்வதா? என் சுபாவம், அந்த அந்தப் பேனாவினால் எழுதினால்தான் அந்த அந்த எழுத்து வரும். அப்படி ஒரு பழக்கம் செய்துகொண்டு விட்டேன் நான். என் தங்கப் பேனாவை இழந்து நான் இனி என்ன செய்வேன்!

அவள் பெயரும் தெரியாது; விலாசமும் தெரியாது. டாக்ஸி நம்பரையாவது பார்த்திருந்தேனா? அதுவும் இல்லை. நாளைக்கு நான் இதை வெளியில் சொன்னால், ஜனங்கள் விபரீதமாக அர்த்தம் கொள்வார்கள். ஒரு பெண்ணை இரவு ஒரு மணிக்கு ஒரு தனிக் 'கட்டை' தன் அறையில் வைத்து உபசாரம் செய்தான் என்றால் ஆயிரம் கதைகள் கட்டுவார்கள். "எத்தனை நாளைய சிநேகிதம்? இதற்குமுன் அடிக்கடி வருவது உண்டா? முன்பின் அறியாத ஒரு மங்கையை டாக்ஸி வைத்து அனுப்பினீர் என்றால் அப்போது உம்முடைய எண்ணம் என்ன? அப்படி ஒரு பேனா இருந்தது உண்மையா? எங்கே, என்ன விலைக்கு வாங்கினீர்? சாட்சி உண்டா? அதனால் எழுதின விஷயங்களை நாங்கள் பார்க்கலாமா?" இப்படி யெல்லாம் போலீஸில் கேள்வி கேட்டு, நானே கயவன், பொய்யன் என்று நிரூபணம் செய்துவிடுவார்கள். பத்திரிகையில் பெயர் இப்படிப் பிரபலமாவதுதான் மிஞ்சும்.

அங்கும் இங்குமாக, கால் வலிக்கும் வரையில் உலாவினேன். மனம் ஒரு நிலையில் இல்லை. பேனாவைவிட மிகப் பெரியதொரு பொருளைப் பறி கொடுத்தவன்போல் என் நெஞ்சு நிலையின்றித் தவித்தது. பேனாப் போனால் போகிறது, அவளைக் கண்டால் போதும் என்று இப்போது ஆசைப்படத் தொடங்கினேன்.

கடைசியில் நாற்காலியில் உட்கார்ந்தேன். சற்று முன் அவள் உட்கார்ந்திருந்த நாற்காலி தான். 'வெடுக்'கென்று துடையில் ஒரு பண்டம் தைத்தது. எழுந்து அது என்னவென்று எடுத்து விளக்கொளியில் பிடித்தேன். ஒரு மோதிரம்; வைர மோதிரம்! அவளுடைய வைர மோதிரம்! டாக்ஸியின் அரை வெளிச்சத்தில் அவள் இரண்டு முறை தலையைக் கோதி விட்டுக்கொண்ட போது 'டால்' அடித்தது நன்றாக நினைவு இருந்தது. இப்போது மின்சார வெளிச்சத்தில் வர்ண ஜாலங்களை வாரிக் கொட்டியது.

அதில் இருந்த பெரிய வைரக் கல் தாராளமாக ஒரு 'காரட்' இருக்கும். 'ப்ளூ ஜாகர்!' குறைந்த பட்சம் ஆயிரத்தைந்நூறு தாளும்.

அந்த மோதிரம் எனக்குத் தேவையில்லை. அவளிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதுதான். ஒருகால் அவளே வரலாம். அல்லது, பேனாவைக் கொண்டு போய் விட்ட காரணத்தாலோ, வேறு எங்கே விழுந்ததோ என்ற சந்தேகத்தாலோ வராமலேகூட இருந்துவிடலாம். நானாகத்தான் கொடுக்க வேண்டும்; கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

"வைர மோதிரம் அகப்பட்டது" என்று விளம்பரம் செய்தால், இரண்டாயிரம் பேர் "என் மோதிரம்" என்று வந்துவிடுவார்கள். அதனால் பயன் இல்லை. வேறு விதமாக விளம்பரம் செய்யவேண்டும். எழுத்தாளன் அல்லவா நான்? யோசனை செய்து ஒரு விளம்பரம் எழுதினேன்.

"நேற்று இரவு கைப்பிசகாக என் தங்கப் பவுண்டன் பேனாவை எடுத்துச் சென்ற நபர் அதைத் திரும்பக் கொண்டுவந்து கொடுத்தால் அவர் விட்டுச் சென்ற பொருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இதன்மூலம் அறியவும்" என்று எழுதினேன். நான்கு பிரபல



நானும் அவளும் காரின் அருகே வந்து நின்றோம்.

பத்திரிகைகளில் இந்த விளம்பரம் மூன்று முறை வந்தது.

தங்கப் பேனா போனது போனதுதான்; வைர மோதிரம் இன்னமும் என்னிடந்தான் இருக்கிறது. இன்றுவரை அவளோ, அவள் அண்ணனோ, வேறு யாருமோ என்னிடம் வர வில்லை.

* * *

இவ்வளவையும் சொன்னதும் சர்மாவை நான் பார்த்தேன். ஒரு சோகப் புன்னகை செய்துகொண்டே இருந்தவர், என் கண்முன் மெள்ள மெள்ள மறையத் தொடங்கினார். மங்கி மங்கி மறைந்தே விட்டார். திடுக்கிட்டு ஒரு குலுக்கலுடன் கண்விழித்து அவர் கரத்தைப் பற்றச் சென்றேன். பற்றியும் விட்டேன். ஆனால், அவர் எப்படியோ என்னுள் புகுந்துகொண்டார். இப்போது அருகில் உட்கார்ந்திருந்த டாக்டரின் கையைத் தான் பிடித்துக்கொண் டிருந்தேன்! பளீர் என்று வெயில் அடிக்க, பொழுது விடிந் திருந்தது.

''எப்படி இருக்கிறது உடம்பு? நன்றாகத் தூங்கினீர்களா?'' என்று அவர் கணீர் என்று கேட்டார். இப்போது அவர் கையில் 'இன்ஜெக்ஷன்' குழாய், ஊசி எதுவும் இல்லை.

''தூக்கமா? யார் தூங்கினார்கள்? நான் சர்மாவுடன் அல்லவா பேசிக்கொண் டிருந் தேன்?'' என்றேன்.

''சர்மாவா? அவர் யார், சர்மா?...இங்கே யாரேனும் வந்தார்களா?'' என்று ராஜத்தின் பக்கம் திரும்பினார் டாக்டர்.

எனக்கு இப்போது திடீர் என்று ஒரு கலக்கம் வந்துவிட்டது. 'சர்மா என்னுடன் பேசினாரா, சர்மாவுடன் நான் பேசினேனா?' என்பது ஒரு பெரிய சந்தேகமாக உருவெடுத் தது.

''ராஜம், தங்கப் பேனா போனது போனது தானே?'' என்று கேட்டேன்.

''ஏது தங்கப் பேனா?'' என்று அவள் கேட்டாள்.

''உனக்குத் தெரியாது..போகட்டும்.... வைர மோதிரமாவது பத்திரமாக இருக் கிறதா?'' என்று கேட்டேன்.

''தூக்கம் கலைகிற சமயம்; இப்படித்தான் இருக்கும் கொஞ்ச நேரம். இதற்குத்தான் நான் கூடியவரை தூக்கத்துக்கு 'இன்செக்ஷன்' செய்வதில்லை'' என்றார் டாக்டர்.

''இல்லை, டாக்டர்! உண்மையில் என் பேனாவை அவள் கொண்டுபோய்விட்டாள்!' என்றேன்.

''ஓஹோ? அவள் எவள்?''

''வைர மோதிரத்தை மட்டும் வைத்து விட்டுப் போனவள்.''

''கொஞ்ச நாளைக்கு நீர் பேனாவைப்பற்றிக் கவலைப்படக் கூடாது; இரண்டு வாரமாவது கதை எழுதவும் கூடாது. அப்புறம் எல்லாம் சரியாகிவிடும். (என் மனைவியைப் பார்த்து)

ஒன்றும் பயம் இல்லை; அரை மணியில் சரியாகிவிடும் இவருக்கு. நான் வரட்டுமா? அந்த மிக்ஸ்சரையும் மாத்திரையையும் மட்டும் கொடுங்கள். இரண்டு நாளைக்கு வெறும் பால், கஞ்சிதான் ஆகாரம். வயிற்றில் ரணம் ஆறுகிற வரை புளி, மிளகு, மிளகாய பேசக்கூடாது'' என்று அவர் எழுந்து போய் விட்டார்.

''ராஜம்!'' என்று அழைத்தேன்.

அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள் அவள். ஐயோ, பாவம்! எனக்காகக் கவலைப் பட்டு வாடிவிட்டாள்.

''வைர மோதிரம் ஜாக்கிரதையாக இருக்கிறதா? தங்கப் பேனு போய்விட்டதற்கு அடையாளம் அது ஒன்றுதானே இருக்கிறது?'' என்றேன். ஏனோ எனக்கு அழுகை வந்தது.

ராஜத்தின் கண்களிலும் நீர் சுரந்தது. ''டாக்டர் என்ன சொல்லிவிட்டுப் போனுர், தெரியுமா?'' என்று கேட்டாள்.

''டாக்டருக்கு எப்படித் தெரியும்?'' என்று நான் சுருக்கமாகப் பதில் சொன்னேன்.

அன்புக்கிசைந்த ஒருவர் இருதய குகையிலே சிறிது காலம் வாசம் செய்து, இல்வாழ்க்கையின் இனிமையையும் ரசித்துப் பாராட்டிவிட்டு, போகுமிடத்தைக் கூருமல் உள்ளத்தின் ஒரு மூலையைத் தன்னுடன் விண்டு எடுத்துக் கொண்டு போய்விடும்போது, இருதயத்தை வைரமாக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழிதான் என்ன? அந்த நிலையில், பெருந் துக்கங்களுக்கு ஆளாகி அநுபவித்தவர்கள், மகத்தான ஒன்றை இழந்து அற்பமான ஒன்றை ஞாபகார்த்தமாகப் பற்றிக்கொண்டு கதையாகச் சொல்லியும் கனவுகளாகக் கண்டும் ஆறுதல் பெற முயலுவது சகஜந் தானே?

என்னிடம் காணுமல் போன தங்கப் பேனுவும் நான் கண்டெடுத்த வைர மோதிரமுமே அதற்கு அத்தாட்சிகள்! ★

மழையே, சொல்!

வி. துரைசாமி

1

விண்ணகப் பெண்ணின் தீரா
வேதனை மூச்சில் கோடிக்
கண்களாம் மீன்கள் சிந்தும்
நித்திலக் கண்ணீர் தானே?
மண்ணிலே குறிஞ்சி, முல்லை
மங்கையர் மணத்தை வாழ்த்த
விண்மகள் சுழற்றும் விந்தை
ஆலத்திச் சிதறலோ நீ?

2

குழையாத பூமி யாள்நின்
வரவினுல் குழைந்து நாணத்
தழுவினுய். கோடி கோடித்
தருக்களாம் தனயன் மாரும்,
விழைதரு கொடிகள் என்னும்
மகளிரும் உதித்தார், வேண்டி
அழையாத விருந்தாய் வந்தும்
அனைத்துயிர்க் கமிழ்த மானுய்.

3

வீறிடும் இடியின் னல்நின்
வெற்றியைக் குறிக்க ஓர்கால்
சீறியும் சினங்கொள் கின்ருய்.
செம்மலே! காதல் வாழ்வில்
மாறிடும் அன்பும் உண்டோ?
மழையே! நின் மாண்பை முற்றும்
கூறிட வல்லார் உண்டோ?
கூறுதி கொற்ற வேந்தே!

டி.வி.எஸ்
ஸ்தாபனம்

தீபாவளி
மங்கள வாழ்த்துக்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதருஸ்-6

மதருஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிமிடெட்,
மதருஸ் - பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்,
மதுரை

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்,
புதுக்கோட்டை - மதருஸ்

சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதருஸ்-2

சுந்தரம் பைனன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதுரை

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,
மதருஸ்-2

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
லிமிடெட்,
மதருஸ்-2

TVSZ-99A

எங்கள்
ஆதரவாளர்களுக்கும்
வியாபாரிகளுக்கும்
தீபாவளி
வாழ்த்துக்கள்
கருணு ஸாகு கம்பெனி, பிரைவேட், லிட்.,
143, மஹாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1.
CSC-59.6

கனவும் கற்பனையும்

இரவிலே கனவும் பகலிலே கற்பனையும் எழுகின்றன. இரவும் பகலும் மாறுவைவை. கனவும் கற்பனையும் அத்தகையன அல்ல.

க. சந்தானம்

நாம் ஒவ்வொருவரும் அடிக்கடி கனவு காண்கிறோம். அவற்றில் பெரும் பான்மையையும் விழிப்பதற்கு முன் மறந்துவிடுகிறோம். மீதியில் பல கனவுகள் விழித்த பின் சிறிது காலம் நமது ஞாபகத்தில் இருந்த போதிலும் ஒன்றிரண்டு தினங்களில் மறைந்து போகின்றன. ஆனால் சில கனவுகள் வெகு நாள் வரையில் நமது ஞாபகத்தில் இருப்பது மன்றி, நமது வாழ்க்கையில்கூடப் பலன் தருபவையாக இருக்கின்றன. தென் இந்தியாவில் பக்தர்களின் கனவுகள் மூலமே பெரிய கோயில்கள் கட்டுவது ஆரம்பமாயிற்று என்று தல புராணங்களில் படிக்கிறோம்.

கனவு காணும்பொழுது அதில் உள்ள சம்பவங்கள் விழித்திருக்கும் பொழுது நம் புலன்களுக்குத் தோன்றும் சம்பவங்களைப் போலவே காணப் படுகின்றன. அச்சமயம் எவ்விதம் நாம் கண் இல்லாமல் காண்கிறோம், காது இல்லாமல் கேட்கிறோம், வாயில்லாமல் பேசுகிறோம், மனம் இல்லாமல் சிந்திக்கிறோம் என்பது ஆச்சரியமே!

நமது உடலுக்கும் கனவுகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. கூரை வழியாக மழைத் தண்ணீர் ஒழுகி உடல் மீது விழும்பொழுது, சமுத்

திரத்தில் நீந்துவது போலவும், ஒரு கால் படுக்கையிலிருந்து கீழே தொங்கினால் பாதாளத்தில் வீழ்வது போலவும் கனவு காண்பது வழக்கம் என்று அறிஞர் கூறுகின்றனர். ஆனால் எல்லாக் கனவுகளுக்கும் இபபடி ஏதாவது சம்பந்தம் ஏற்படுத்த முடியாது. பல கனவுகளில் நமக்கு முன் பின் தெரியாத ஆண்களும் பெண்களும் பிராணிகளும் பிரதேசங்களும் காணப்படுகின்றன. நமது சிசுப் பருவத்திலிருந்து ஏற்பட்ட அநுபவங்கள், கேட்ட படித்த கதைகளின் சம்பவங்கள், சொந்தக் கற்பனைகள் எல்லாம் நமது மூளையில் பேசும் படங்கள் போல் பதிவாகி, நல்ல தூக்கமின்றி நமது மூளை கலங்கி யிருக்கும் பொழுது காட்சி அளிக்கின்றன என்று கூறலாம். ஆனால் என்றைக்கு எவ்விதக் கனவு ஒரு மனிதன் காண்பான் என்பதை நிர்ணயிப்பது அசாத்தியம் என்றே நினைக்கிறேன்.

நம் புலன்களும் மனமும் தம் சூட்சும அவஸ்தையில் கனவு காணும்பொழுது வேலை செய்கின்றன என்று நம் பழம் நூல்கள் போதிக்கின்றன. மூளையில் உள்ள உயிரணுக்களின் கட்டுப்பாடற்ற குழப்பம் என்று இக்காலத்திய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உண்மை எதுவாக இருப்பினும், நமது சைதன்யம் தனது உடலின் சாதாரண உதவியின்றி விழிப்புக் காலத்திய சம்பவங்களை அநுபவிக்க முடியும் என்பதைக் கனவுகள் உறுதிப்படுத்துகின்றன. கனவில் காணப்படும் சம்பவங்கள் விழிப்புத் தசையில் அஸ்திவாரம் இல்லாத தோற்றங்களாகத் தோன்றினாலும், அவற்றின் சுகதுக்க உணர்ச்சிகளும், நன்மை தீமை எண்ணங்களும் விழித்த பிறகும் நம்முடன் இருந்து, சில வேலைகளில் நமது வாழ்க்கையையே மாற்றி விடுகின்றன. ஆதலால் கனவுகளைப் பிரயோசனம் அற்ற மாயை என்று தள்ளிவிட முடியாது.

கனவில் பல நடிகர்களும் நடிகைகளும் தோன்றினாலும் அதில் ஒரு பாத்திரம் 'நான்' என்ற உணர்ச்சியுள்ளதாக இருக்கிறது. ஓர் ஆண் தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொள்வதுண்டா, அல்லது பெண் தன்னைப் புருஷனாகப் பாவித்துக் கொள்வதுண்டா என்பது எனக்குத் தெரியாது. என் கனவுகளிலெல்லாம் நான் ஆணாகவே இருந்திருக்கிறேன்.

கடவுளை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் பாவித்துப் பாடி யிருக்கும் ஆழ்வார்களும் அடியார்களும் மாறாகப் பாவித்துக் கனவு கண்டிருந்தால் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

கற்பனையைப் பகற் கனவு எனறு கூறலாம். கற்பனைக்கும் விழிப்புத் தசையில் நாம் அறியும் உலகுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. ஆனால் நம் அநுபவங்களிலிருந்தும் மற்றவர்களின் அநுபவங்களிலிருந்தும் ஒவ்வோர் அம்சத்தை எடுத்து ஓர் புதிய கதையாகவோ காப்பியமாகவோ நாடகமாகவோ ஓவியமாகவோ சிற்பமாகவோ செய்யும் சக்தியை நன்கு ஆராயப் புகுவோமானால், இதுவே மனிதனின் முக்கிய சக்தி என்று முடிவு செய்வோம். மற்றப் பிராணிகள் கனவு காணலாம். காண்கின்றன என்பதற்கு அடையாளங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளுக்குக் கற்பனைச் சக்தி இல்லை. மனிதனின் பகுத்தறிவு, பேசும் திறமை, ஆராயும் ஆற்றல், வாத வல்லமை எல்லாம் கூடியே கற்பனா சக்தி ஆகின்றன.]

விஞ்ஞானத்திற்கும் கற்பனைக்கும் சம்பந்தம் இல்லை என்று நினைப்பது தவறு. நம் கண்களுக்குச் சூரியனும் நட்சத்திரங்களும் பூமியை வலம் வருவதாகத் தோன்றினாலும் பூமிதான் சூரியனை வலம் செய்கின்றது. சூரியனைச் சேர்ந்த நட்சத்திர மண்டலம் பூமியைப் பொறுத்த வரையில் அசையாமல் இருக்கிறதென்று முதல் முதலில் ஊகித்த விஞ்ஞானியின் கற்பனா சக்தி அளவற்றதாக இருக்க வேண்டும். அவ்விதமே நியூடன், ஈன்ஸ்டீன் முதலியோரின் பெருமை அவர்களின் கணிதத் திறமையன்று; கற்பனைத் திறனே.

கற்பனை மனித சைதன்யத்தின் சிருஷ்டி சக்தி. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் கற்களை மனிதன் சிருஷ்டிக்க முடியாது. ஆனால் மனிதக் கற்பனை யின்றி இயற்கைச் சக்திகள் பல் கோடி வருஷங்களில்கூட அந்தக் கோயிலை நிர்மாணம் செய்திருக்க மாட்டா. கல்லைச் சிருஷ்டி செய்வதை விட அவ்விதக் கோயிலை அமைப்பது குறைந்த சக்தி என்று சொல்ல முடியாது. வேறு விதமான சக்தி என்றுதான் கூறலாம்.

கனவின் தன்மையையும், கற்பனையின் பிரபாவத்தையும் ஆழ்ந்து சிந்தித்த நம் ஞானிகள், சைதன்யத்திற்குத்தான் சிருஷ்டி செய்யும் சக்தி உண்டென்றும், நாம் வசிக்கும் விசித்திர உலகும் ஓர் சைதன்யத்தின் சிருஷ்டியாக இருக்க வேண்டுமென்றும் முடிவு கட்டினர். இதைத் தர்க்கத்தாலோ, வேறு வழியாலோ தீர்

மானம் செய்ய முடியாது. ஆனுல் சேதனம், அசேதனம் இரண்டும் சிருஷ்டி செய்ய முடியும். அசேதனம் கல்லைச் சிருஷ்டி செய்கிறது; சேதனம் அதைக் கொண்டு கோயிலை நிர்மாணிக்கிறது என்று கூறுவது தர்க்கத்துக்கு ஏற்றதாக இருப்பினும், நமது அந்தரங்க உணர்ச்சிக்கு முற்றும் மாறுபட்டதாகவே இருக்கும்.

இயற்கையில் இரண்டு விதமான சிருஷ்டி சக்திகள் இருக்க முடியாது. ஒன்று, சேதனம் அசேதனத்திலிருந்து எப்படியோ தோன்ற வேண்டும்; அல்லது, அசேதனம் சேதனத்திலிருந்து தோன்ற வேண்டும். இவ்விரண்டும் தனித் தனியான பரம்பொருளாக இருந்தால், இவ்விரண்டிற்கும் சம்பந்தத்தை ஏற்படுத்த மூன்ருவது பொருளையோ சக்தியையோ கற்பிக்கவேண்டி வரும். இது முடிவில்லாத வீண் வாதமாகும்.

சேதனமே எல்லாச் சிருஷ்டிகளுக்கும் மூலப் பொருளாக இருந்தால், இவ்வுலகம் அந்தப் பொருளின் கனவா, கற்பனையா என்ற கேள்வி எழும்புகின்றது. இதை நிர்ணயம் செய்வது நமது அறிவால் முடியாது என்று எல்லா வேதாந்திகளும் ஏகோபித்துக் கூறியிருக்கின்றனர். ஆயினும் தமது சம்பிரதாயத்தை ஸ்தாபிப்பதற்காக, உலகம் பிரம்மத்தின் மாயை என்றும், அதன் உடல் என்றும், அதன் சிருஷ்டி என்றும் பலர் பல விதமாகப் பிரசாரம் செய்திருக்கின்றனர்.

இவ்வுலகம் பிரம்மத்தின் கனவு என்பது சங்கராசாரியரின் அத்துவைதம் என்று கூறலாம். அது நாராயணனின் கற்பனை என்பது ராமாநுஜரின் சித்தாந்தம் என்று சொல்லலாம். ஆனுல் கனவு கலையும் வரையில் அதில் தோன்றும் உலகம் உண்மையேயாகும்; நாடகம் நடக்கும் பொழுது நடிகர்கள் அதற்குரிய பாத்திரர்களே ஆவர். ஆதலால் நம் ஆசாரியர்களின் உபதேசங்களைப் பற்றித் தர்க்கம் செய்வதில் பிரயோசனம் இல்லை.

இந்தச் சகம் அனைத்தும் ஓர் சேதனப் பரம் பொருளின் மாயை அல்லது லீலை அல்லது கற்பனைக் காட்சி என்று அவர்கள் அனைவரும் உபதேசித்த மூலக் கொள்கையை மட்டும் ஏற்றுக்கொண்டு, சிற்சில வேளைகளில் நம் ஆசைகளையும் கவலைகளையும் விடுத்து அந்தப் பரம் பொருளைப் பற்றித் தியானம் செய்தால் வாழ்க்கைப் பயனை அடைவோம். 'இந்த ஆத்மா தர்க்கத்தால் அடையத் தக்கதன்று; நமது புத்தியால் பெறத் தக்கதன்று; பல நூல்களைப் படித்தும் கிட்டாது. மனம் முற்றும் சாந்தி பெற்ருல் அது தானே தன் சொரூபத்தைக் காட்டும்' என்ற உபநிஷத் வாக்கியமே வேதாந்தத்தை உபதேசித்த ரிஷிகளின் அந்திம உபதேசம். ★

மேல்: கற்பனைத் திறன்படைத்த விஞ்ஞானி
நடு: 'உலகம் பிரம்மத்தின் கனவு......'
கீழ்: 'உலகம் நாராயணனின் கற்பனை...'

புத்தம்புதியது போன்ற தோற்றம்!

டாடாவின் 501 ஸ்பெஷல்

சோப்பினால் சுத்தம் செய்யப்பட்டது

சின்னஞ் சிறிய கவர்ச்சிகரமான கவுன்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். டாடாவின் 501 ஸ்பெஷல் சோப்பைக்கொண்டு அவைகளை சுத்தம் செய்தால், அவைகள் புத்தம் புதிய தோற்றத்துடன் நீடித்த காலம் உழைக்கும். மிருதுவானதும், சுத்தமானதுமான இந்த சோப் உங்கள் துணிக்கு மிகுந்த பாதுகாப்பு அளிக்கிறது.

நூற்றுக்கு நூறு இந்திய • மூலதனம் • நிர்வாகம் • உழைப்பு

ஜடை பில்லை

கி. வா. ஜகந்நாதன்

மனிதனுடைய சரித்திரத்தைப்போல அவன் ஆளும் பண்டங்களுக்கும் சரித்திரம் இருக்கிறது; தாழ்வு, உயர்வு என்று மாறி வரும் சரித்திரம் இருக்கத்தான் இருக்கிறது.

பொழுது போகவில்லை யென்று என் பெட்டியை ஒழித்துக்கொண்டிருந்தேன். அந்தப் பெட்டியில் ஒடிந்த நகைகளும் தாயித்துகளும் தங்கக் காசுகளும் கிடந்தன. அப்போதுதான் அந்த ஜடைபில்லையைக் கண்டேன். அதை எங்கே வைத்தேனோ என்று யோசித்துக்கொண்டிருந்தாலும், இந்தப் பெட்டியை மேலே இருந்து இறக்கிப் பார்க்கச் சோம்பல் இடம் கொடுக்கவில்லை. இப்போதுதான் ஒழிந்தது.

அவன் - பிள்ளையாண்டான் - காலேஜுக்குப் போயிருந்தான். அவர் எங்கேயோ வியாபார விஷயமாக வெளியூர் போயிருந்தார். இந்த நேரத்தில் வழக்கமாக வந்து பேசிக்கொண்டிருக்கும் சொக்கநாயகி இன்று என்னவோ வரவில்லை. அவரவர்களுக்கும் வேலை இல்லையா?

அவருடைய கடையில், நாகரிகமாகச் சொன்னால் கம்பெனியில், முக்கியமான வேலைக்காரர் நாகநாத ஆசாரியார். சாதிப் பட்டத்தை விட்டுவிட்டு நாகநாதன் என்று கூப்பிட அவர் விரும்புவதில்லை. ''எங்கள் தொழிற் சிறப்பைக் காட்டும் பட்டம் அது'' என்று பெருமையோடு சொல்லிக் கொள்வார். ஆனால் அவர் என்னவோ குலத் தொழிலை விட்டு விட்டுக் கம்பெனி குமாஸ்தாவாகத்தான் இருக்கிறார். அவருடைய மனைவி சொக்கநாயகி. அவளுக்கு இந்தக் காலத்து நாகரிகம் அவ்வளவாகத் தெரியாது. சாது; உபகாரி.

பக்கத்துத் தெருவில் குடியிருந்தபடியால் அடிக்கடி வந்து கவனித்துக் கொள்வாள். எங்கள் வீட்டு வேலைக்காரி மகா ராங்கிக்காரி. எதிலும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டுதான். பற்றுப் பாத்திரம் தேய்க்கிறது, வீடு பெருக்குகிறது, மெழுகுகிறது இவற்றைத் திட்டமாகச் செய்வாள். அதற்கு மேல் எது செய்யச் சொன்னாலும் காசைக் கீழே வை என்பாள். விறகுக் கடையிலிருந்து விறகு கொண்டு வர வேணுமா, தனியே இரண்டணாக் கொடுக்க வேணும்; கோதுமை அரைத்து வர வேணுமா, அரையணாவாவது கொடுக்க வேணும்; ஏதாவது அரைக்கச் சொன்னால் தனிக் கூலி. கடைகண்ணிக்குப் போய் வா என்று சொல்லிவிட்டால் போதும், அவள் முணுமுணுப்பைச் சொல்லி முடியாது.

கம்பெனியில் வேலை செய்யும் வேலைக்காரர்களிடம் நான் ஒரு வேலை சொல்லக் கூடாது. அப்படி அவர் திட்டம் பண்ணியிருந்தார். இப்படியானால் வேலை எப்படி நடக்கும்? இந்த நிலையில் எனக்குச் சமய சஞ்சீவியாகச் சொக்கநாயகி வந்து சேர்ந்தாள். கலகலவென்று பேசுவாள். அவளுக்கு ஒளிவு மறைவு என்பதே இல்லை.

ஒரு நாள், ''உன் புருஷர் ஏன் பொன் வெள்ளி வேலையை விட்டுவிட்டார்?'' என்று கேட்டேன்.

''விடுகிறதாவது அம்மா? அவர் அதைத் தொடவே இல்லையே! அவர் தகப்பனார் அவரைப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்தார். அப்போதிலிருந்தே அவருக்குத் தொழில் என்றால் வெறுப்பாம். ஆனால் இப்போதெல்லாம் அப்படி இல்லை. தொழிலுக்குக் கௌரவம் உண்டு என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறார். நான்கூடத் தொழில் பழகியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றுகூடச் சில சமயங்களில் வேதனைப் பட்டுக் கொள்வார்'' என்றாள் அவள்.

அந்தச் சொக்கநாயகி இன்று வரவில்லை. ஏதோ நினைத்துக் கொண்டேன். மேலே இருந்த பெட்டியைக் கீழே கூடத்துக்குக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு திறந்து பார்த்தேன். எங்கே வைத்துவிட்டேனோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த ஜடைபில்லையைக் கண்டேன்.

அதைக் கண்டவுடனே அம்மா ஞாபகந்தான் வந்தது. எத்தனை அன்பாக அதை எனக்குக் கொடுத்தாள்! ''சுந்தரி, இந்த ஜடைபில்லை ஆகி வந்தது. இதை ஜாக்கிரதையாக வைத்துக் கொள். இந்தச் சிவப்புக் கல் எங்கும் கிடைக்காது. இதை நான் தலையில் வைத்துக் கொண்டு நவராத்திரி ஜோத்திரைக்குப் போனேன். அப்போது உங்கள் அப்பா என்னைக் கண்டார். அப்புறம் கல்யாணம் ஆயிற்று. இதைப் பிரித்துவிடாதே. கல் நன்றாக இருக்கிறதென்று பிரித்து மோதிரம், கடுக்கன் என்று செய்யத் தோன்றும். இதைப் பிரிக்காமலே வைத்திரு. உன் மூத்த பெண்ணுக்கு இதைச் சூட்டி அழகு பார். அவளுக்கே பிற்காலத்தில் கொடுத்துவிடு..'' அவள் என்ன என்னவோ சொன்னாள். வரும் காலத்தை ஒவ்வொருவரும் தம் கையில் வைத்துக்கொள்ளத்தான் ஆசைப்படுகிறார்கள். திட்டம் போடுகிறார்கள். ஆனால் அது நம்மிடம் அகப்படுவதில்லையே!

என்னுடைய மூத்த பெண்ணுக்குக் கொடு என்று அம்மா உபதேசம் செய்தாள். மூத்த பெண்ணு? எனக்கு ஒரே ஒரு பெண்தான் பிறந்தாள். அம்மாவுக்கு அது தெரியும். ஆனால் அந்தக் கடன்காரி பன்னிரண்டு வருஷம் வளர்ந்து தன் கடனை வாங்கிக்கொண்டு போய்விட்டாள். அப்புறந்தான் எத்தனையோ தவம் பண்ணிச் சிவகுமாரன் பிறந்தான்.

என்னவோ சொல்ல வந்தேன்; மனசு எப்படி எப்படியோ தாவுகிறது. அம்மாவுக்கு ஜோசியம் தெரிந்திருந்தால் அப்படி எல்லாம் சொல்லியிருக்க மாட்டாளோ என்னவோ! இந்த ஜடைபில்லையைப் பற்றிச் சொல்லும்போது அவள் எவ்வளவு மகிழ்ந்து போனாள்! சேந்தமங்கலத்தில் இதைச் செய்த ஆசாரி வரப்பிரசாதியாம். தெய்வங்களுக்குத் திருவாபரணம் செய்வதில் மிகவும் கெட்டிக்காரனும். அவனிடம் மனுஷர்களுக்கு நகை செய்து தரும்படி கேட்கவே பயப்படுவார்களாம். யாருடைய இஷ்டத்துக்கும் வசப்பட மாட்டானும். தானே மனசு இசைந்து யாருக்காவது ஏதாவது செய்து கொடுத்தால் அவர்கள் அமோகமாக வாழ்வார்களாம்.

அம்மா வக்கணையாகத்தான் சொன்னாள். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. அம்மாவுக்கு முன்னாலே அப்பா போய்விட்டார். ஜடைபில்லை அவளுக்கு நீண்ட மாங்கலிய பலத்தைத் தரவில்லையே! அது கிடக்கட்டும். நான் வாங்கிக் கொண்டேனே! எனக்கு ஒரு பெண் பிறந்தாளே, அவள் இருந்தாளா?

இந்த எண்ணங்களையெல்லாம் அந்தக் காலத்தில் நான் எண்ணவில்லை. அம்மா தந்ததை ஆசையோடுதான் வாங்கி அணிந்துகொண்டேன். ஜடைபில்லை என்னவோ அழகான வேலைப்பாடு உள்ளதுதான். அன்னம் தன் மூக்கில் ஒரு கொடியைப் பிடித்துக்கொண்டிருக்கிறது போல உள்ளே ஒரு சிற்பம். அந்தக் காலத்தில் பழைய சிவப்புக்கு மோஜு அதிகம். எந்த வீட்டுக்குப் போனாலும் அந்த வீட்டு அம்மாள் என்னை நிறுத்தி என் தலையைக் குனியச் செய்து அதைப் பார்ப்பாள். அப்போதெல்லாம் எனக்குப் பெருமை தாங்காது.

ஹூம்! அதெல்லாம் பழைய கதை. நான் புக்ககத்துக்கு வந்த பிறகும் இதை அணிந்து கொண்டேன். நாளடைவில் சிவப்புக்கு மதிப்புக் குறைந்தது. வைரம் எங்கும் டாலடிக்க ஆரம்பித்துவிட்டது. போலி வைரங்களும் வந்துவிட்டன. விலையிலே எவ்வளவு உயர்ந்ததானாலும் பழைய சிவப்பைத் தீண்டுவார் இல்லை; மட்டமான ரங்கூன் வைரத்துக்கு முன்புகூட அதற்குச் செலாவணி இல்லாமற் போயிற்று. நான் எப்போதாவது இதைத் தலையில் வைத்துக் கொள்வேன். பெண் பிறந்த பிறகு அவளுக்கு வைத்தேன். "என்ன அம்மா இது, கர்நாடகம்!" என்று அவள் சொல்வாள். ஆனாலும் எனக்காக வைத்துக் கொள்வாள். ஆமாம், நான் சொன்னால் அது அவளுக்கு வேதம். எதற்கெடுத்தாலும், அம்மா அதைச் செய்யட்டுமா, அம்மா அதை வாங்கட்டுமா, அம்மா எனக்கு அது வாங்கித் தா - இப்படியே ஒரு நாளைக்கு நூறு தரம் அம்மாவைக் கூப்பிட்டு விடுவாள். அவள் அழகும் சூட்டிகையும் அறிவும் என்னிடம் உள்ள அன்பும் - எதைக் கண்டாலும் ஆசை! எதற்காகத்தான் அப்படி ஆசைப்பட்டாளோ!

ஹூம்! மறுபடியும் எங்கேயோ போய்விட்டேனே! இந்தப் பாழும் மனசு எத்தனை நாளானாலும் மறக்காது போலிருக்கிறது.

அன்றைக்கு அவளைக் கட்டையிலே வைத்துவிட்டு இதைப் பெட்டியிலே போட்டதுதான். சரியாகப் பதினெட்டு வருஷங்கள் ஓடிவிட்டன. இதைப் பார்த்தால் அம்மா ஞாபகம் வருகிறது. அதோடு அவள் நினைவும் வருகிறது.

சிந்தனையிலே என்னை மறந்து பெட்டியைத் திறந்து வைத்தபடியே உட்கார்ந்து கொண்டிருந்தேன். "அம்மா!" என்று கூப்பிட்டபடியே சொக்கநாயகி வந்தாள். "ஏண்டி இன்றைக்கு இவ்வளவு நேரம்?" என்று கேட்டேன்.

"அவர் சாப்பிட்டுவிட்டு உடனே போகிறவர், கொஞ்ச நாழிகை தங்கிப் பேசிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்துக்கு முன்தான் கடைக்குப் போகிறார்" என்றாள்.

எத்தனை தரம் நான் கம்பெனி என்று சொல்லித் தந்தாலும் அவள் கடை என்றுதான் சொல்கிறாள். அது புத்தகக் கடைதானே?

"இருந்திருந்து இந்த வயசில் என்ன அப்படி இங்கிதமான பேச்சு?" என்று புன்னகை பூத்தபடியே கேட்டேன்.

"போங்கள் அம்மா! என் மகள் மீனாட்சியின் கல்யாணத்தைப் பற்றிப் பேசினார். யாரோ தூரத்து உறவில் சேலம் ஜில்லாவில் சேந்தமங்கலம் என்ற ஊரில் ஒரு பையன் இருக்கிறானும். அவன் தொழிலில் கெட்டிக்காரனும். இப்போதுதான் இவருக்குத் தொழிலில் மதிப்பு வந்திருக்கிறதே. அவன் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவனும். அவனுக்கே மீனாட்சியைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிடலாம் என்று சொன்னார்."

"ஓஹோ! கல்யாணம் கூடுகிறது. நல்லது. சுவாமி நல்லபடியாகக் கல்யாணத்தை நடத்த வேண்டும்" என்றேன் நான்.

"இதென்ன, பெட்டியைத் திறந்து போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்று சொக்கநாயகி கேட்டாள்.

"நீ வரவில்லை. இதில் எதையோ தேடுவதற்காக எடுத்து வைத்துக் கொண்டேன். என்ன என்னவோ ஞாபகம்."

"எதைத் தேடினீர்கள்?"

பழைய கதையை அவளுக்குச் சொல்ல நாக்கு எழுந்தது. ஆனால் அடக்கிக் கொண்டேன். அவள் கல்யாணச் செய்தியைச் சுபமாக வந்து சொல்கிறாள். இந்தச் சமயத்தில் நாம் நம் அழுகையைச் சொல்வதாவது!

ஆனாலும் அந்த ஜடைபில்லையை எடுத்து அவளுக்குக் காட்டினேன். அதை அவள் கையில் வாங்கிப் பார்த்தாள். நான் பெட்டியை மூடி உள்ளே வைத்துவிட்டு வந்தேன்.

"ரொம்ப ரொம்ப நன்றாக இருக்கிறதே!" என்றாள் அவள்.

"எங்கள் அம்மா கொடுத்தது. ஒன்றரைப் பவுன் தங்கம் போட்டுச் செய்ததாம். இதை அழிக்கக் கூடாதென்று வைத்திருக்கிறேன்.. வந்து.. அந்தப் பிள்ளையாண்டான் எந்த ஊர்க்காரன் என்று சொன்னாய்?"

"சேந்தமங்கலமாம்."

நான் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தேன். "சேந்தமங்கலந்தானே? இந்த ஜடைபில்லை

யைக்கூட அந்தச் சேந்தமங்கலத்தில்தான் யாரோ பண்ணினார்களாம்'' என்றேன்.

''அப்படியா, ஆச்சரியமாக இருக்கிறதே அம்மா! இது நல்ல சகுனமாகக்கூடத் தெரிகிறது. நான் சேந்தமங்கலத்துப் பிள்ளையைப் பற்றிச் சொல்ல வந்தேன். நீங்கள் சேந்தமங்கலத்து ஜடைபில்லையைக் காட்டுகிறீர்கள்!'' அவள் காணாததைக் கண்டது போல ஆச்சரியத்தில் மூழ்கிப் போனாள்.

ஐயோ பாவம்! இதன் பூர்வ கதையை அவள் அறிந்தால்! அவளுக்கு எதற்கு அது தெரிய வேணும்? அவள் அடைகிற சந்தோஷத்தை நாம் அதிகமாக்க முடியாவிட்டாலும் அதைக் கெடுப்பானேன்?

2

ஒரு வாரம் கழிந்தது. சொக்கநாயகி வந்தாள். ''ஏதாவது வேலை இருந்தால் சொல்லுங்கள்; சீக்கிரம் செய்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டும்'' என்றாள். என்னிடம் உள்ள அன்பினால் எனக்கு உதவி செய்வது அவள் இயல்பு. கடைக்குப் போய் ஏதாவது வாங்கி வருவாள். சாமான்களை ஒழுங்கு பண்ணி வைப்பாள்.

''ஏன் இந்த அவசரம்?'' என்று கேட்டேன்.

''நாளைக்கு அந்தப் பிள்ளை வருகிறார். பெண்ணைப் பார்க்க வேண்டுமாம். மீனாட்சியைப் பார்த்துவிட்டு, வேண்டாமென்று சொல்ல ஆள் இருக்கிறானா? வருகிறவர்களுக்கு உபசாரம் செய்ய வேண்டும். அது சம்பந்தமான வேலை இருக்கிறது. அதோடு..'' என்று அவள் இழுத்தாள்.

''என்ன தயங்குகிறாய்; சொல்'' என்றேன்.

''அவர்கள் வரும்போது இவளுக்கு அலங்காரம் பண்ணிக் காட்ட வேண்டாமா? அதற்கு ஏதாவது நகை இருந்தால் கொடுங்கள். பிறகு திருப்பித் தந்து விடுகிறேன். முக்கியமாக அந்த ஜடைபில்லையைத் தாருங்கள்'' என்றாள்.

''அது எதற்கடி பைத்தியம்? கர்நாடக நகை அல்லவா அது?'' என்றேன். அதன் கதை தெரிந்தால் அவள் கேட்பாளா?

''இல்லை அம்மா, அது ரொம்ப அழகாக இருக்கிறதம்மா. இவளுக்குப் புதுச் சிவப்பில் அப்படி ஒன்று பண்ணிப் போட வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. எங்கள் சாதியில் ஜடைபில்லை யென்றால் மதிப்பம்மா'' என்று கெஞ்சினாள்.

அவள் எனக்குச் செய்துவரும் உபகாரத்துக்கு இது எம்மாத்திரம்! ஆனால் நான் செய்வது உபகாரமாக இல்லாமல்—கடவுளே, முருகா! நீதான் காப்பாற்ற வேண்டும். இந்த ஜடைபில்லையினால் ஒன்றும் நேராமல் நீ துணையிருக்க வேண்டும்.

அந்த ஜடைபில்லையை எடுத்துக் காட்டினேன்.

மனசு தர்ம சங்கடத்தில் மாட்டிக்கொண்டு தவித்தாலும், அவ்வளவு ஆசையாகக் கேட்கும் போது மறுக்க முடியவில்லை. முருகனை நினைத்துக்கொண்டு கொடுக்கத் துணிந்துவிட்டேன்.

"உனக்கு இல்லாமல் எதற்கு வைத்திருக்கிறேன்? ஏதோ இருக்கிற நகைகளைக் கொடுக்கிறேன். ஆண்டவன் அருளால் மீனாட்சிக்கு நல்ல இடம் கிடைத்துச் சௌக்கியமாக வாழட்டும்."

"நல்லதம்மா; நாளைக்குக் காலையில் வந்து வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்லி அவள் போய்விட்டாள்.

மறுநாள் ஓர் ஒற்றைவடம் சங்கிலி, ஒரு ஜோடி வளை, அந்த ஜடைபில்லை, ஒரு மோதிரம் எல்லாம் வாங்கிக்கொண்டு போனாள். அதற்கு மறுநாளே பத்திரமாக எல்லாவற்றையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டாள்.

"என்னடி சமாசாரம்? மாப்பிள்ளை எப்படி இருக்கிறான்? அவனுக்குப் பெண் பிடித்திருக்கிறதா? கல்யாணம் எப்போது எங்கே நடக்கிறது?" என்று கேட்டேன்.

"பிள்ளை தங்கமானவர். என்ன அமரிக்கையாகப் பேசுகிறார்! நிறம் கொஞ்சம் மாநிறந்தான். ஆனால் மூக்கும் முழியுமாக இருக்கிறார். அநேகமாகக் கல்யாணம் தீர்மானம் ஆனபடிதான். அதைப் பற்றி இனிமேல்தான் இவர் எழுதித் தெரிந்துகொள்ளவேணும். வந்தவர்கள் நேற்றே ஊருக்குப் போய்விட்டார்கள்."

"மீனாட்சிக்கு அவனைப் பிடித்திருக்கிறதா?"

"அதெல்லாம் எங்களுக்குத் தேவை இல்லை. அவளுக்கு என்று தனியே ஒன்று உண்டா அம்மா? எங்களுக்குத் தெரியாததை அவள் என்ன காணப் போகிறாள்? நாங்கள் நல்லதைத்தானே செய்வோம்?"

"என்னடி சொக்கு, பத்தாம் பசலிப் பேச்சைப் பேசுகிறாய்? இந்தக் காலத்தில் பெண்ணும் பிள்ளையும் ஒருவரோடு ஒருவர் பேசித் தெரிந்துகொண்டு கல்யாணம் செய்வதல்லவா நாகரிகம்?"

"அதெல்லாம் எங்களுக்கு வேண்டாம், அம்மா. அந்த நாகரிகம் இல்லாமல் நாங்கள் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீங்கள் உங்கள் வீட்டு ஐயாவோடு முன்னாலே பேசித்தான் கல்யாணம் பண்ணிக்கொண்டீர்களோ?" துப்பாக்கியை என் பக்கமே திருப்பிவிட்டாள்.

"அது பழைய காலம்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

"அது போதும்" என்று அவள் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

"என்ன, விஷயத்தைச் சொல்லாமல் போகிறாயே! கல்யாணம் எப்போது வைத்திருக்கிறீர்கள்?"

"அதெல்லாம் இனிமேல்தான் தெரிய வேண்டும். உங்களுக்குத் தெரியாமல் நடந்துவிடுமா அம்மா?"

அவள் போய்விட்டாள். ஜடைபில்லை அணிந்த நேரம் தீய நிமித்தமின்றிக் கல்யாணம் சுபமாக முடிய வேண்டுமே என்று நான் ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொண்டேன்.

3

கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. இந்தத் தையிலேயே நடத்திவிடுவதாகத் தீர்மானம் செய்தார்கள். எங்கள் எசமானர் நாகநாத ஆசாரியாருக்கு, சொக்கநாயகியின் கணவர் தாம், வேண்டிய உதவி செய்வதாக ஒப்புக்கொண்டார். கல்யாணத்தைப் பெண் வீட்டிலே செய்வதாக ஏற்பாடு. ஆகையால் நாகநாதருக்குப் பொறுப்பு அதிகமாயிற்று. சொக்கநாயகி விழுந்து விழுந்து வேலை செய்தாள். அடிக்கு ஒரு தரம், "நீங்கள் நகை கொடுத்த நேரம் இந்தக் கல்யாணம் நடக்கிறது!" என்று சொன்னாள் அவள். "கல்யாணம் நிறைவேறட்டும்" என்று நான் சொன்னேன்.

கல்யாணத்துக்கும் நான் நகை இரவல் தந்தேன். அவர்களும் புதிய நகைகளைச் செய்திருந்தார்கள். முக்கியமாகப் புதிய சிவப்பில் ஒரு ஜடைபில்லை செய்து போட்டிருந்தார்கள். ஆகையால் இந்த ஜடைபில்லையைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. 'நல்ல வேளை!' என்று நான் ஆறுதல் பெருமூச்சு விட்டேன். குறிப்பிட்ட சுப முகூர்த்தத்தில் மீனாட்சிக்கும் சேந்தமங்கலம் வரதப்பனுக்கும் கல்யாணம் நடைபெற்றது. கல்யாணத்தின்போது நானும் இவரும் சிவகுமாரனும் நாகநாத ஆசாரியார் வீட்டிலேயே இருந்தோம்.

முகூர்த்தம் முடிந்தவுடன் நான் தாம்பூலம் வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். "ஏதாவது வேணுமானால் சொல்லியனுப்பு" என்று சொக்கநாயகியிடம் சொல்லி வந்தேன்.

சாயங்காலம் ஆறு மணி இருக்கும். சுவாமிக்கு முன் விளக்கேற்றி வைத்து நமஸ்காரம் செய்தேன். சொக்கநாயகி வெகு வேகமாக வந்தாள். படபடப்புடன் வந்து கையைப் பிசைந்துகொண்டே, "அம்மா, அம்மா, நீங்கள்தாம் காப்பாற்ற வேண்டும்" என்று கவலைக் குறியோடு சொன்னாள்.

"என்னடி வந்துவிட்டது?" என்று கேட்டேன்.

"அம்மா, நான் எதைச் சொல்லட்டும்? நீங்கள் முன்பு கொடுத்தீர்களே, அந்த ஜடைபில்லை வேண்டும். எங்களுக்கே வேண்டும். அதன் விலை என்ன ஆனாலும் தந்துவிடுகிறேன்."

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, அந்த ஜடைபில்லை காரணமாக ஏதோ குழப்பம் நேர்ந்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டேன். என் வயிறு பகீரென்றது.

"என்னடி சொல்கிறாய்? நிதானமாகச் சொல்லேன்" என்றேன். அவள் சொன்னாள்.

கல்யாணம் எல்லாம் ஆனபிறகு மாப்பிள்ளை வரதப்பன் மீனாட்சியைத் தனியே அழைத்தானாம், ஏதோ பேச வேண்டுமென்று. அவள் வெட்கப்பட்டாளாம். "உன் அம்மாவையும் அழைத்துக்கொண்டு வா" என்றானாம். அம்மாவுக்கும் வெட்கம். கடைசியில் நாகநாத ஆசாரியாரும் மீனாட்சியும் போனார்கள். "அந்த ஜடைபில்லை எங்கே?" என்று கேட்டான். நாகநாதருக்கு ஒன்றும் விளங்கவில்லை. மறைவில் இருந்தபடியே கவனித்த சொக்கநாயகி அங்கிருந்தபடியே



மறைவில் இருந்தபடியே சொக்கநாயகி பதில் சொன்னாள்.

பதில் சொன்னாளாம். ''அது ஐயா வீட்டது'' என்றாளாம். மாப்பிள்ளை எப்படியாவது அது வேண்டும் என்றானாம். ''அது கிடைக்கும் என்றுதான் உங்கள் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஒப்புக்கொண்டேன்'' என்றானாம். இப்படியும் உண்டோ?

இதை அவள் சொல்லி அழாக் குறையாகக் கெஞ்சினாள். ''என்ன விலையானாலும் கொடுத்துவிடச் சொல்கிறேன்'' என்று சொல்லும்போது அழுகையே வந்துவிட்டது.

''என்ன இது? அசடே! அழாதே. இது என்ன பிரமாதம்? இல்லாததைக் கேட்காமல் இருக்கிறதைக் கேட்டானே, அதற்குச் சந்தோஷப் படு. அதைப் போய் எதற்காக அவ்வளவு ஆசையாகக் கேட்கிறான்?''

''அவர் கல் வேலையில் கெட்டிக்காரராம். அது நன்றாக இருக்கிறதாம்....'' அவளால் பேச முடியவில்லை.

நான் சிறிது யோசித்தேன். ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். விறுவிறுவென்று உள்ளே போனேன். அந்த ஜடைபில்லையைக் கொண்டு வந்து முருகன் சந்நிதானத்தில் வைத்து நமஸ்காரம் செய்தேன். ''இந்தா, சொக்கு, நீயும் நமஸ்காரம் செய்து இதை எடுத்துக் கொள்'' என்றேன்.

அவள் நமஸ்காரம் செய்துவிட்டு, ''நீங்களே உங்கள் கையால் தாருங்கள்'' என்றாள்.

நான் முருகனைத் தியானித்துக்கொண்டே அதை எடுத்தேன். ''சொக்கு, ஆண்டவன் தான் இப்படி ஒரு திருவிளையாடலைச் செய்திருக்கிறான். இந்த ஜடைபில்லையை மீனாட்சிக்குக் கல்யாணச் சீதனமாக நான் கொடுக்கிறேன். அவள் என் பெண். என்னுடைய அம்மா தந்தது இது. அவள் பேரும் மீனாட்சி. தன் பேரையுடைய பேத்திக்கு இது உரிமையாவதில் அவள் ஆத்மா சாந்தியடையும். எடுத்துப் போய் மீனாட்சிக்குக் கொடு. அவள் மகாராஜியாய் வாழட்டும்.'' நான் ஆவேசம் வந்தவளைப் போலப் பேசினேன்.

''என்ன அம்மா இது? விலையை வாங்கிக் கொள்ளத்தான்......''

''அதைப்பற்றிப் பேசாதே. போய் முதலில் காரியத்தைக் கவனி.''

4

மீனாட்சி கருவுற்றிருந்தாள். அவளை வரதப்பன் அழைத்துக்கொண்டு வந்திருந்தான். ''அம்மா, உங்கள் பெண் நாளைக்கு உங்கள் மருமகப் பிள்ளையோடு வரப் போகிறாள்'' என்று முதல் நாளே சொக்கநாயகி சொன்னாள். ஆம், என் நிபந்தனைகளை அவள் ஒப்புக்கொண்டுவிட்டாள்.

'என் பெண்' மீனாட்சி வந்தாள். மாப்பிள்ளை வரதப்பனுடன் பேசிப் பழகினேன். நல்ல பிள்ளை; சாமர்த்தியசாலி.

ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தான். பேசிக் கொண்டிருந்தேன். ''ஏன் அப்பா, அந்த ஜடைபில்லையை ஜாக்கிரதையாக வைத்திருக்கிறாயா?'' என்றேன்.

''ஜாக்கிரதையான இடத்தில் இருக்கிறது'' என்றான்.

''ஆமாம். அதைக் கொண்டு வந்து கொடுத்தால்தான் மறுகாரியம் என்று அன்று தடபுடல் பண்ணிவிட்டாயாமே! அப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டேன்.

''செய்யக் கூடாதுதான். ஆனால் நான் அதற்கு ஆசைப்பட்டதற்குக் காரணம் உண்டு. அது ஒரு கதை.''

''சொல்லேன் அதை.''

சேந்தமங்கலம் வரதப்ப ஆசாரியார் பொற்கொல்லர்களில் சிறந்தவர். சாஸ்திரம் தெரிந்தவர். ஆலயங்களுக்கு வேண்டிய நகைகளைச் செய்கிறவர். அவருடைய பேரன் தான் இந்த வரதப்பன். வரதப்ப ஆசாரியார் ஒரு சமயம் அந்த ஊர் வரதராஜசுவாமி கோயில் தாயாருக்கு ஒரு ஜடைபில்லை செய்தார். ஒரு ஜமீன்தாருடைய பிரார்த்தனை அது. அவர் நல்ல சிவப்புக்கல்லாக வாங்கிக் கொடுத்தார். உறுதியான கட்டடமாக இருக்க வேண்டுமென்று சொன்னார். ஒன்றரைப் பவுனுக்கு மேலே தங்கம் போட்டு மிகவும் நன்றாக அன்னமும் கொடியுமாகச் சிற்பம் அமைத்துச் செய்தார். மிகவும் அழகாக இருந்தது நகை. அதைக் காணும்போது அவருக்கே அதில் ஆசை விழுந்தது. அப்போது அவர் புதிதாகக் கல்யாணம் செய்து கொண்டிருந்தார். தம் மனைவிக்கும் அப்படி அதே அச்சில் ஒன்று செய்து அணிய வேண்டும் என்று ஆசைப்பட்டார். கோயிலுக்கு நகையைச் செய்து கொடுத்துவிட்டார். சில வருஷங்களாகக் கல் சேர்த்துத் தம் மனைவிக்கும் அதே அச்சில் ஒன்று செய்து அணிந்தார். ஆனால் அதை அணிந்த மறுவருஷம் அவர் மனைவி காலமாகிவிட்டாள். 'தாயாருக்குச் செய்த நகையில் ஆசை வைத்ததற்குத் தண்டனை' என்று எண்ணி அவர் வருந்தினார். இரண்டு குழந்தைகள் இருந்தமையாலும் வயசு நாற்பத்தைந்து ஆகிவிட்டபடியாலும் அவர் வேறு கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அது முதல் ஒரு விரதம் எடுத்துக்கொண்டார். 'இனிமேல் நகை செய்வதானால் ஆலயங்களுக்குத்தான் செய்வது' என்று தீர்மானித்தார். அவரிடம் கோயிலுக்குப் பின் கோயிலாக வேலை வந்து கொண்டே இருந்தது.

தம் மனைவி அணிந்திருந்த ஜடைபில்லையை அவர் யாருக்கோ விற்றுவிட்டார். அதைக் கண்டாலே அவருக்குப் பிடிக்கவில்லை.

''இந்தக் கதையை என்னுடைய தகப்பனார் எனக்குச் சொன்னார். 'நான் அம்மா அணிந்திருந்த ஜடைபில்லையைப் பார்த்திருக்கிறேன். கோயிலில் தாயாருடைய ஜடைபில்லை எப்படியோ அப்படியே இருக்கும். என்ன அழகான கல்! என்ன அற்புதமான வேலைப்பாடு!' என்று அப்பா அடிக்கடி சொல்வார். நான் கோயிலில் பெருமாளையும் தாயாரையும் தரிசிக்கும்போது என் கண் அந்த ஜடைபில்லையைத் தேடும். உற்சவகாலங்களில்தான் அலங்காரம் பண்ணுவார்கள். அப்போதெல்லாம் நான் தாயாருக்குப் பின்னாலே போய் ஜடைபில்லையைப் பார்ப்பேன். 'எங்கள் தாத்தா பண்ணின இரண்டு ஜடைபில்லைகளில் ஒன்று மனிதரை அடைந்தது. மற்றொன்று தெய்வத்தை அடைந்தது. தெய்வத்தை அடைந்த இது நித்திய அழகோடு எவ்வளவு சிறப்பாக இருக்கிறது! மற்றொன்று யார் தலையில் ஏறியதோ? எப்படி இருக்கிறதோ? இப்போது அதை யார் அணியப் போகிறார்கள்? பிரித்துக் குலைத்திருப்பார்கள்' என்று எண்ணமிடுவேன்.

''அன்று தை வெள்ளிக்கிழமை. பாவி நான் கண் போட்டதனாலோ என்னவோ, தாயார் கோயிலுக்குள் எழுந்தருளியபோது விக்கிரகம் கீழே விழுந்துவிட்டது. மல்லாக்க விழுந்தமையால் விக்கிரகம் சேதமில்லாமல் பிழைத்தது. ஆனால் ஒரு கல்லின் மேல் தாக்கியமையால் ஜடைபில்லை சிதறிப் போயிற்று. நானே அதைக் குலைத்தது போன்ற அங்கலாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. அந்த ஜடைபில்லையின் முழு உருவம் அப்படியே என் அகக் கண்ணில் நின்றது.

''இந்த வேதனையைப் போக்கியது உங்கள் ஜடைபில்லை. அதே அச்சு. நிச்சயம் இது பழைய ஜடைபில்லைதான் என்று தெரிந்து கொண்டேன். எனக்குக் கல் நோட்டம் தெரியும் அல்லவா?''

''இது உன் தாத்தா செய்ததுதான் என்று எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன்.

''தொழிலாளிக்கு அடையாளம் நன்றாகத் தெரியும், அம்மா. இதைக் கண்டவுடன் மீனாட்சியைக் கட்டிக் கொள்வதென்று தீர்மானம் செய்துவிட்டேன்.''

''அப்படியானால், மீனாட்சியை நீ பார்த்துப் பிரியப்படவில்லை, இந்த ஜடைபில்லைக்காகத்தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாய் என்று சொல்.''

''அப்படி இல்லையம்மா. இவள்தான் என்னை முதலில் கவர்ந்தாள். பிறகு குலம், கோத்திரம், சீர், செனத்தி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் ஜடைபில்லை செய்துவிட்டது.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? கல்யாணத்தன்று பார்த்தால் இவள் தலையில் காகிதப்பூ மாதிரி புதுக் கல் பில்லை ஒன்று உட்கார்ந்திருந்தது. எனக்குப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. எப்படியாவது அதை அடைய வேண்டுமென்ற ஆத்திரத்தில் தடபுடல் படுத்திவிட்டேன். நீங்கள் மனசு வைத்தீர்கள்.''

''அந்த ஜடைபில்லை எங்கே?''

''அதைத்தான் சொல்ல வருகிறேன் அம்மா. கல்யாணம் ஆனவுடன் நேரே வரதராஜப் பெருமாள் கோயிலுக்குப் போனேன். நகையை அழுக்கெடுத்துச் சுத்தம் பண்ணி மெருகேற்றியிருந்தேன். தாயார் இழந்த ஜடைபில்லை மறுபடியும் கிடைத்துவிட்டதுபோல யாவரும் மகிழ்ந்தார்கள். நான் தாயாருக்கே அதைச் சமர்ப்பித்துவிட்டேன். அது இனித் தெய்விக நகை ஆகிவிட்டது, அம்மா. புண்ணியமெல்லாம் உங்களைச் சேர்ந்தது.''

அவன் இதைச் சொல்லிவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான். அதன் எதிரொலிபோல என்னிடமும் நீண்ட பெருமூச்சு எழுந்தது. ★

கண்ணன் குழலோசையில்
மயங்கினார்கள் கோகுலவாசிகள்.
டி.எஸ்.ஆர் தயாரிப்புகள்
எல்லோரையும் மகிழ்விக்கின்றன.
டி.எஸ்.ஆர்
★ அரைக்கீரை விதை தைலம்
★ சந்தனாதி தைலம்
★ கோகுல் ஹேர் ஆயில்
★ ஊறுகாய் தினுசுகள்
★ அரகஜா
★ ஊதுவத்தி ரகங்கள்
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்


பாலுணேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்,
போன்: 85834
தந்தி: 'EVERMANS'
3. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ... மதராஸ் - 5
டெல்லி கிளை ஆபீஸ் விலாசம்
B. 6, பிளாக் III
டெல்லி-ஆஜ்மீரி கேட் ஸ்கீம், புது டெல்லி-1
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
எங்கள் சிட் பண்டு அநேக ஆண்டுகளாகப் பொது மக்களின் ஆதரவுடன் நன்கு நடத்தப்படுகிறது. யாவரும் சுலபமாகச் சேமித்துப் பயனடைய வசதியளித்து வருகிறது.
நேயர்களின் சௌகரியத்திற்காகப் புது டில்லியிலும் எங்கள் கிளை ஆபீஸ் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது.
ரூ. 250/- முதல் ரூ. 5000/- வரை சேமிக்கச் சீட்டு வகைகள் உள்ளன. உங்களுக்குச் சௌகரியமானதைத் தேர்ந்தெடுத்துப் பயனடையுங்கள்.
(போர்டார் உத்தரவுப்படி)
எம். வி. சுப்ரமண்யம்
(மானேஜிங் டைரக்டர்)
எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



யார் கெட்டிக்காரர்?

தி. சு. அவிநாசிலிங்கம்

இறைவன் கருணை செய்கிறான். அதனால் யாருக்கு லாபம்? பெறுகிறவர்கள் யாரோ அவர்களே கெட்டிக்காரர்கள் அல்லவா?

உக்கிராணம் நிறையத் தானியம் இருக்கிறது. எலி தானியத்தை நாடி வருகிறது. வழியில் கொஞ்சம் உணவு வைத்துப் பொறி வைக்கப்பட்டிருக்கிறது. உள்ளே இருப்பது மலையத்தனை தானியம். எனினும் அப்பொறியைத் தாண்டி எலி செல்லுவதில்லை. வெளியிலிருக்கும் உணவின் கவர்ச்சிக்கு உட்பட்டு, அதற்கு ஆசைப்பட்டு, அதைத் தின்ன முயற்சி செய்வதனால், அப்பொறியில் சிக்கிக் கொள்கிறது. அந்த எலி புத்திசாலித்தனமாக நடந்ததாகச் சொல்ல முடியுமா?

சில பெரிய கோயில்களிலும் உற்சவ காலங்களில் வரும் பதினாயிரக்கணக்கான பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்குவதற்காகப் பூந்தி செய்து மலையாகக் குவித்து வைத்திருப்பார்கள். நான்கு ஐந்து தினங்களாக இராப்பகலாகச் செய்வதுண்டு. அதில் எறும்பு புகுந்துகொண்டால் என்ன செய்கிறது? அதற்காக ஒரு மூட்டை சர்க்கரை கொண்டு வருகிறார்கள். அந்தப் பூந்திக் குவியலைச் சுற்றிலும் கொஞ்சம் இடம் விட்டுச் சர்க்கரையால் ஒரு கரை போடுகிறார்கள். லட்சக்கணக்கான எறும்புகள் வருகின்றன. ஆனால் அவை அந்தச் சர்க்கரைக் கரையைக் கடந்து செல்லுவதில்லை. அதைத் தாண்டினால் மலையத்தனை பூந்தி இருப்பதை அவை உணருவதில்லை. ஒவ்வொன்றும் ஓர் அணு அளவு சர்க்கரையை வாயில் கவ்வித் திரும்பிவருகிறது.

அத்வைத ஆசிரமத்தார் பிரசுரம் செய்திருக்கும் விவேகானந்த சுவாமிகள் சரித்திரத்தில் சாதுக்கள் வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதுக்கள் பிச்சை எடுத்து வாழ்பவர்கள்; சிறிய ஆசையை விட்டு, அவற்றிற்குப் பதிலாக உயர்ந்த லட்சியங்களை நாடி, அவைகளை அடைந்தவர்கள். அவர்களிடம் சொத்துக்கள் இல்லை; அவைகளால் வரும் துன்பங்களும் அவர்களுக்கு இல்லை. அவர்களிடம் பொருள் இல்லை; அவை போய்விடும் என்ற

''தியாகிகளே, நீங்கள் சொல்லுங்கள்'' என்கிறார்கள் சாதுக்கள்.

பயமும் அவர்களுக்கு இல்லை. பூமியே படுக்கையாக, வானமே கூரையாக, அனைவரும் உறவினராக, ஆண்டவன் பாதுகாப்பில், அவன் சக்தியைப் பெற்று ஆனந்தமாக வாழ்கிறவர்கள் அவர்கள். அவர்கள் வெளியே பிச்சைக்குச் செல்லும்போது, அவர்களுடைய சிறந்த தூய வாழ்க்கையைப் பார்த்துப் பலர், 'நீங்கள் மகத்தான தியாகிகள்' என்று போற்றுகிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் மறுமொழி வியக்கத்தக்கதாக இருக்கிறது. "நாங்கள் அல்ல தியாகிகள்; நீங்கள்தாம் பெருந்தியாகிகள்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது எங்ஙனம் என்று கேட்டதற்கு, அவர்கள் திருப்பிக் கேட்கிறார்கள்: "ஒரு ரூபாயை விட்டுப் பத்து ரூபாயை நாடுகிறவர்களை நீங்கள் தியாகிகள் என்று நினைப்பீர்களா?"

"இல்லை."

"பத்து ரூபாயை விட்டு நூறு அல்லது ஆயிர ரூபாய்க்காக முயற்சி செய்கிறவர்களை நீங்கள் தியாகிகள் என்று கொள்ளுவீர்களா?"

"நினைக்க மாட்டோம்"

"ஆயிர ரூபாயை விட்டு லட்சம் அல்லது பத்து லட்ச ரூபாய் பெறுமான சொத்தை நாடிப் பெறுகிறவர்களை நீங்கள் தியாகிகள் என்று கருதுவீர்களா?" என்று மீண்டும் அவர்கள் கேட்கிறார்கள்.

"அவர்கள்தாம் ரொம்பக் கெட்டிக்காரர்களாயிற்றே, தங்கள் காரியத்தைச் செய்து கொள்வதில்! அவர்கள் எப்படித் தியாகிகள் ஆவார்கள்?" என்ற மறுமொழி வருகிறது.

"அப்படியானால் இவ்வுலகத்துச் சிறு ஆசைகளையும், அவைகளால் வரும் இன்பங்களையும் விட்டு, ஆண்டவனுடைய அருளை நாடி, அதனால் வரக்கூடிய மகத்தான பேரின்பத்தை நாடி அதில் திளைத்திருப்பவர்கள் தியாகிகளா அல்லது அந்த மகத்தான செல்வத்தை விட்டுக் கொடுப்பவர்கள் தியாகிகளா? நீங்களே சொல்லுங்கள்" என்கிறார்கள் அந்தச் சாதுக்கள்.

இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் வெகு அழகாக உரைத்திருக்கிறார். இறைவனை நோக்கி அவர் சொல்லுகிறார்: "உன்னை எனக்கு அளித்தாய். உன்னை அளிப்பதன் மூலம் உன் மகத்தான சக்தியையும் தூய்மையையும் அவற்றின் மூலம் வரும் மகத்தான இன்பத்தையும் எனக்கு அளித்திருக்கிறாய். இதற்குப் பதில் நான் என்ன கொடுத்தேன்? எல்லாப் பல வினைகளுக்கும் இருப்பிடமான என்னைத்தான் உன்னிடம் கொடுத்தேன். நம் இருவரில் யார் கெட்டிக்காரர்? சொல் பார்க்கலாம்?" என்று கேட்கிறார். மீண்டும் சொல்லுகிறார்: "உன்னைப் பெற்று நான் எல்லை இல்லாத இன்பம் பெற்றேன். என்னைப் பெற்று நீ அடைந்ததுதான் என்னே?"

தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை;
சங்கரா! யார் கொலோ சதுரர்?

அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்? ★

உறக்கம்:

கடலில் கரையில்

போட்டோ: ஸ்ரீதர்

அழகெலாம் ஒருங்கே கண்டால்
ஆர்அதை ஆற்ற வல்லார்?

ஓவியர்மணி
ரவிவர்மா

கலைமகள்
1956

உயர்வும் தாழ்வும்

மு.வரதராசன்.

பிறரைப் பற்றிய செய்திகளை அறிவதில் மனிதனுக்குத் தீராத வேட்கை இருக்கிறது. இந்த வேட்கை இயல்பாகவே மனிதனுக்கு அமைந்திருக்கிறது. மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன சொல்கிறார்கள், எப்படிப் பழகுகிறார்கள், எப்படித் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பவற்றை அறிய வேண்டும் என்ற ஆசை எல்லா மனிதரிடத்திலும் இருக்கக் காண்கிறோம். இந்த ஆசையைப் பொறுத்தவரையில் சாதி மத நிற நாடு வேறுபாடுகள் ஒன்றும் காணோம். மனிதர் எல்லோரைப் பற்றியும் அறிய வேண்டும் என்ற ஆசை, எல்லா நாட்டு மனிதர்க்கும் இருக்கிறது. வெளி நாடுகளுக்கும் வெளியூர்களுக்கும் போய்ச் சுற்றி வருகிறவர்கள் வேறு சில பயன்களைக் கருதிப் போய்வரலாம்; ஆயினும் அவர்கள் அவற்றோடு இந்த ஒரு பயனையும் பெற்று மகிழ்கிறார்கள்: அதாவது, மற்ற ஊர்களிலும் மற்ற நாடுகளிலும் உள்ள மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றி அறிய விரும்பும் வேட்கையைத் தணித்துக் கொள்கிறார்கள்.

பொதுவாக மற்றவர்களைப் பற்றி அறிய விரும்பும் இந்த வேட்கையிலும், சில சிறப்பு வகைகள் உண்டு. முன் பழகியறியாத மனிதர்களைப் பற்றி அறிய விரும்பும் வேட்கையைவிட, பழகியறிந்த மனிதர்களின் சில செயல்களையும் சொற்களையும் அறிவதில் உள்ள வேட்கை மிகுதியாகும். அயலூராரின் செய்திகளை அறிவதைவிட, உள்ளூரார் சிலரின் செய்திகளை அறிவதில் வேட்கை மிகுதியாக இருப்பதற்கும் பக்கத்துத் தெருவினரைப் பற்றிய செய்திகளைவிடப் பக்கத்து வீட்டாரைப் பற்றிய செய்திகளை அறிவதில் ஆர்வம் மிகுதியாக இருப்பதற்கும் காரணம் அதுவே ஆகும். எல்லோரும் அறிய வெளியான செய்திகளைவிட, யாரும் அறியாமல் வெளிப்படாமல் கிடக்கும் (இரகசியமான) செய்திகளை அறிவதில் மனிதரின் மனம் மிக்க விருப்பம் கொள்வதும் காணலாம். உண்பது உறங்குவது முதலான வாழ்க்கையின் பகுதிகளைவிட, வாழ்க்கையைப் பெரிதும் மாற்ற வல்ல காதல் கொள்ளை கொலை முதலிய பகுதிகளை அறிவதில் உள்ள வேட்கை மிகுதியாக இருப்பதும் காணலாம்.

ஆகவே, பொதுவாகப் பிறரைப் பற்றி அறிய விரும்பும் வேட்கை, பழகி அறிந்தவரைப் பற்றியே மேலும் அறிய விரும்பும் வேட்கை, அவர்கள் தமக்குள் மறைத்திருக்கும் செய்திகளைப் பற்றி அறிய விரும்பும் வேட்கை, வாழ்க்கையைப் பெரிதும் மாற்றவல்ல காதல் முதலிய செய்திகளை அறிய விரும்பும் வேட்கை என்று படிப்படியாக வேட்கையின் அளவு மிகுந்து செல்வதைக் காணலாம்.

இவ்வாறு பிறர் செய்தி அறிவதில் உள்ள வேட்கை மனிதனுக்கு இயல்பாக அமைந்திருப்பதால், அவன் பெற்ற நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. பிற நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து தானும் அவ்வாறே வாழ்தல், அதனால் நாகரிகத்தில் உயர்

கலையிலும் கதையிலும் பத்திரிகையிலும் பேச்சிலும் மாந்தருக்கு ஏன் ஆவல் எழுகிறது? அந்த ஆவலைப் பயன்படுத்துவோரின் கடமை என்ன?

பரஞ்சோதி

ஒளிகளுக்கெல்லாம் ஒளியாகத் துலங்குகிறான் இறைவன். வானத்தில் ஒரே பொழுதில் ஆயிரமாயிரம் கதிரவர்கள் தோன்றினால் அந்தப் பேரொளியை ஒருவாறு இறைவனுடைய ஒளிக்கு உவமையாகக் கூறலாம். உலகிருளை நீக்கும் கதிரவனும் மதியவனும் தாரகைகளும் அந்தப் பரஞ்சோதியின் முன்பு மங்குகின்றன. மின்னொளியும் அக்கினியும் அங்கே சுடர் வீசுவதில்லை. ஏனெனில், அந்தப் பரஞ்சோதியின் ஒளியே இவற்றுக்கெல்லாம் ஒளி தருகிறது. ''தீயொளி பரப்பும் இறைவனே, மாந்தருக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக நீ வானத்தில் கதிரவனையும் எண்ணற்ற தாரகைகளையும் தோற்றுவித்தாய். நீயே மக்களின் ஒளி. எங்களருகில் இருந்து நீ எமக்கு நன்மையும் அன்பும் தருகின்றாய்'' என்று பாடுகிறது பழமையான ரிக்வேதம்.

தல், பிறர் கையாளும கருவிகளைப் பார்த்து, அவைகளைத் தானும் படைத்துக்கொண்டு தொழில் பெருக்கிப் பயன் அடைதல், பிற நாட்டு அரசியலைப் பார்த்துத் தானும் அரசியலில் புது வழிகளை அமைத்து முன்னேறுதல், பிற நாட்டு வழிபாட்டு முறைகளைக் கண்டு ஒப்பிட்டுத் தான் சீர்திருந்துதல், பிறருடைய கலைகளைக் கண்டு தானும் அவற்றைப் படைத்து மகிழ்தல் முதலிய பல நன்மைகளை அவன் பெற்றது உண்டு. அவ்வாறே பிறருடைய போர்க்கருவிகள், தந்திரம், வஞ்சம், ஏமாற்றும் திறன் முதலியவைகளைப் பார்த்துக் கற்றுத் தீமைகளைப் பெருக்கியதும் உண்டு.

மனிதன் பெற்றுள்ள ஆற்றல் ஒவ்வொன்றையும் இவ்வாறே நன்மைக்கும் பயன்படுத்தலாம்; தீமைக்கும் பயன்படுத்தலாம். எழுதக் கற்றுக்கொண்டவன், அந்த எழுத்துக் கல்வியைப் பொய்க் கையெழுத்துக்கும் பயன்படுத்தலாம்; நல்ல செய்திகளை எழுதி அறிவிப்பதற்கும் பயன்படுத்தலாம். வலுப் பெற்ற கைகால்களைக் கொண்டு, பிறரை அடித்தும் உதைத்தும் துன்புறுத்தலாம்; பிறருக்காக உழைத்துத் தொண்டும் புரியலாம். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வோர் ஆற்றலையும் மனிதன் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று ஆராய வேண்டுமே அல்லாமல், அந்த ஆற்றலைப் பழித்து வெறுக்கக் கூடாது.

எல்லோரும் இன்புற்றிருகக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் உள்ள வாழ்க்கையில் ஒவ்வோர் ஆற்றலும் நன்மைக்கே பயன்படுகிறது. பிறரை அழித்தாவது தான் வாழ வேண்டும் என்ற தன்னலம் தலையெடுக்கும்போது, எந்த நல்ல ஆற்றலும் தீமைக்கே பயன்படுகிறது. ஆகவே, பிறரும் வாழ, தானும் வாழ வேண்டும் என்ற சிறந்த நோக்கம் ஒவ்வொருவருக்கும் அமைந்துவிட்டால், பிறவியில் அமைந்த ஆற்றல் எல்லாம் அரும் பயன் உடையனவாக விளங்கும்.

இன்று செய்தித் தாள்கள் நாள்தோறும பல்லாயிரக் கணக்காக ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மொழியிலும் வெளிவருகின்றன. இது நாகரிக வளர்ச்சியில் ஒரு படியாக உள்ளது. பிறரைப் பற்றி அறிய வேண்டும் என்ற வேட்கை மனிதருக்கு இல்லை என்றால், இந்தச் செய்தித் தாள்களை வாங்கிப் படிப்பவரே இல்லாத நிலைமை ஏற்படும். பிறர் செய்தி அறிய வேண்டும் என்ற வேட்கை இருப்பதால்தான், ஒவ்வொருவரும் காலையிலும் மாலையிலும் உலகச் செய்திகளையும் வெளியூர்ச் செய்திகளையும் வெளியிடும் செய்தித் தாள்கள் நூறாயிரக் கணக்காகச் செலவாகின்றன. ஆனால் மக்களுக்கு உள்ள இந்த இயல்பான வேட்கையைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு, சிலர் வேண்டாத செய்திகளுக்குக் கவர்ச்சி தந்து, விலையாதலைப் பலமடங்கு பெருக்கி நிறையச் செல்வம் சேர்ப்பதும் உண்டு. அது தவறு. தன்னலத்தைச் சுருக்கிப் பொது நலத்தைப் பெருக்கித் தொண்டு செய்வதே நல்ல செய்தித் தாள்களின் கடமையாகும். மேடைப் பேச்சும் அப்படி அமையத் தக்கதே ஆகும்.

செய்தித் தாள்கள் செய்யும் தொண்டைவிட ஒரு வகையில் வேறுபட்டது, நாடகங்களும் சினிமாப்படங்களும் செய்யும் தொண்டு. செய்தித் தாள்கள் காலத்திற்கும் இடத்திற்கும் கட்டுப்பட்ட குறிப்பிட்ட செய்திகளை வெளியிடுவன. நாடகமும் சினிமாவும் கலைத் துறையைச் சார்ந்தவை. ஆகவே, காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படாமல் பொதுவாக உள்ள மனித இயல்புகளை எடுத்துக் காட்டும் கடமை வாய்ந்தவை. ஆனாலும் இவைகளும் மனிதர் வாழ்வைப் பற்றியவைகளே; ஆதலால் பிறர் செய்தி அறிவிப்பவைகளே. செய்தித் தாள்களின் செய்தி அந்த அந்தக் காலமும் சூழலும் மாறின் பயன்படாமல் போவன. நாடகமும் சினிமாவும் பொதுவாக நெடுங்காலம் பயன்படுவன. இவற்றைக் காண்பதற்காகக் காசு கொடுத்துத் திரளான மக்கள் சேர்வதற்குக் காரணம், முன்சொன்ன வேட்கையே; பிறர் வாழ்வை அறிய வேண்டும் என்ற இயல்பான வேட்கையே. இந்த வேட்கையைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு, வேண்டாத காட்சிகளுக்கு அளவு மீறிய கவர்ச்சியூட்டிப் பெரும்பணம் சேர்க்க முயலும் முயற்சியும் உண்டு. அது தவறு. அவ்வாறு ஏற்படும் தன்னலத்தைச் சுருக்கிப் பொது நலத்தைப் பெருக்குதலே நாடகமும் சினிமாவும் நடத்துவோரின் கடமையாகும்.

நூல் வடிவில் எழுதப்படும் நெடுங்கதைகளும் சிறுகதைகளும் அப்படிப்பட்டவைகளே. அவைகளும் பிறர் வாழ்வை அறியும் வேட்கை இயல்பாக இருத்தலையே புலப்படுத்துகின்றன. அவற்றிலும் வேண்டாத பகுதிகளும் தகாத கவர்ச்சியும் இல்லாமல், நல்ல



மன்றத்திலும் இதே பேச்சாகிவிட்டது.

நோக்கத்தோடு எழுதும் மனப்பான்மை வேண்டும். அதுவே எழுத்தைத் தொண்டு என்று போற்றுவோரின் கடமை ஆகும். இதை மறந்து தன்னலத்தைப் பெருக்க முற்பட்டால், தீய செய்தித் தாள் போலவும், தீய நாடகம் சினிமாக்களைப் போலவும், தீமையே பெருக்குவதாக முடியும்.

பிறர் வாழ்வை அறிய விரும்பும் இயல்பான வேட்கைக்கு அடிப்படை என்ன என்று ஆராய்ந்து உணர்ந்தால், இந்தத் தீய போக்கில் செல்ல எவருக்கும் மனம் வராது. பிறரைப் பற்றி அறிந்து அவருடைய வாழ்க்கையின் நன்மை தீமைகளை உணர்ந்து நாம் திருந்தி வாழ வேண்டும் என்ற முன்னேற்ற ஆசை ஒரு காரணமாக உள்ளது. மற்றொரு காரணம் சமயத்தின் அடிப்படையில் உள்ளது; அதாவது: பிறர் வேறு, நாம் வேறு என்று மேற்போக்காகத் தோன்றினும், அனைவரும் ஒரே குடும்பத்தினரே; இன்னும் ஆராய்ந்தால், அனைவரும் ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடு விட்டுப் பல்கியவர்களே; ஆகையால் பிறரிடமிருந்து நாம் பிரிந்து இருக்க முடியாது; உணரவும் முடியாது; பிறரோடு இயைந்து உணர்தலே வாழ்க்கை நெறியாகும். இவ்வாறு பிறரோடு பிணைபட்டு நிற்கும் உண்மையை உணர்ந்தால், பிறருக்குத் தீமை செய்து தான் மட்டும் வளர விரும்பும் தன்னலப் போக்கிற்கே இடம் இல்லை. ஆகவே, செய்தித் துறையிலும் கலைத் துறையிலும் காணப்படும் தீமைக்குக் காரணம், அறியாமை தவிர வேறென்ன கூற முடியும்?

செய்தித் தாளைவிட நிலையான வாழ்வு பெறுவதோடு, உயர்வும் சுவையும் பெறுமாறு முன்னோர் நாடகங்களையும் காவியங்களையும் அமைத்துள்ளனர். அந்த இருவகைக் கலைகளின் இடத்தைப் பெற்று இக்காலத்தில் வளர்ந்து வருவன சினிமாக்களும் கதைகளும் ஆகும். இவற்றில் சுவை மிகுந்திருக்குமாறு, என்றும் புதியனவாய்த் தோன்றுமாறு, வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளைப் புலப்படுத்த வேண்டும். இந்தத் தன்மைதான் என்றும் மாறாப் புதுமைக் கவர்ச்சியைத் தர வல்லதாகும். இதை மறந்துவிட்டு வேறு தகாத கவர்ச்சிகளை ஊட்டுவதில் பயன் இல்லை.

காதல் துறை பற்றிப் பாடும் பாட்டிலும் நம் முன்னோர்கள் இந்தக் கடமையை மறவாமல், எவ்வளவோ நல்ல கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு பாடியுள்ளனர். அகப்பொருளிலக்கணம் இதற்கென்றே அமைந்ததாகும். பழைய அகப் பொருட் பாட்டுக்கள் இந்த நூற்றாண்டிலும் வியந்து போற்றிக் கற்கத் தக்கனவாக உள்ளன; நெறிபிறழாத இலக்கியத் தொண்டுக்கு எடுத்துக் காட்டாகவும் உள்ளன.

ஒன்று காண்போம்:

இளமையும் அழகும் நிறைந்த ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டனர்; பெற்றோரும் மற்றோரும் அறியாமல் பழகினர்; இப்படி வாழும் வாழ்க்கை இடையூறானது என்று காதலன் உணர்ந்தான். திருமணத்திற்கு உரிய முயற்சியை மேற்கொள்ளப் போவதாகச் சொல்லிவிட்டுப் பிரிந்தான். பிரிந்தவன் சில நாள் வராமல் நின்றுவிட்டான். ஆனால் இந்தக் காதல் செய்தியோ எப்படியோ ஊரில் சிலருக்குத் தெரிந்துவிட்டது. இரண்டொரு நாள் பார்த்தவர்கள் மெல்ல இதைப் பற்றிப் பேசினார்கள்; பேச்சு மெல்ல மெல்லப் பரவிப் பலருக்கு எட்டிவிட்டது. ஊரின் பொது இடமாகிய மன்றத்திலும் இதே பேச்சாகிவிட்டது. இந்த நிலையில் காதலன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்த காதலி வாடி வருந்தினாள்; அழகெல்லாம் இழந்து மெலிந்தாள். வீட்டின் ஒரு மூலையில் கிடந்து கலங்கினாள்; முதல் முதலில் தான் காதலனைக் கண்டு பழகிய கடற்கரைச் சோலையை நினைந்தாள்; தன் அழகு படிப் படியாக நீங்கியதையும் நினைந்து, ஊரார் தூற்றும் அலரையும் நினைந்து வருந்தினாள். ''யான் இங்கே கிடக்கிறேன்! என் அழகு, தீராத் துன்பத்திற்கு இரையாகி அந்தக் கடற்கரைச் சோலையோடு போய்விட்டது! அதற்குக் காரணமான காதலரோ, அவருடைய ஊரில் இருக்கிறார்! அவருடைய காதல் பழக்கமோ, பழிச் சொல்லாய் வளர்ந்து ஊர்ப் பொதுவிடத்திற்கு எட்டி விட்டது!'' என்றாள்.

யானே ஈண்டை யேனே; என்நலனே
ஆனா நோயொடு கான லஃதே;
துறைவன் தம்மூ ரானே;
மறைஅல ராகி மன்றத் தஃதே.

(குறுந்தொகை-97)

இங்கு ஒரு பெண்ணின் வாழ்வைப் பற்றி அந்த ஊரார் பேசும் ஊர்வம்பும் காண்கிறோம்; அவளுடைய வாழ்வைப் பற்றியே வெண்பூதியார் என்ற புலவர் கூறுவதும் காண்கிறோம். ஊரார் பேசிக்கொள்வது அலர் - பழிச் சொல் - என்று இழித்துக் கூறப்படுகிறது. புலவர் பாடுவது உயர்ந்த கலை ஆகிறது. இரண்டும் ஒரு வகையில் ஊர் வம்பே; இரண்டும் பிறர் வாழ்வைப் பற்றிய பேச்சே. ஆனால் ஊராரின் பழிச் சொல் அந்தப் பெண்ணின் அழகைக் குலைக்கிறது; புலவரின் பாட்டோ அவளுடைய அழகையும் பண்பையும் விளக்குகிறது. காரணம் என்ன? ஊரார் வெறுஞ்சுவை கருதி அவளுடைய காதலைப் பற்றிப் பேசுவதில் இன்பம் காண்கின்றனர். புலவரோ, மக்களின் வாழ்வை உயர்த்தும் கலை நோக்கம் கொண்டு காதலைப் பாடுகிறார். ஊராரின் தன்னலம், அந்தப் பெண்ணின் வாழ்வுக்குத் தீமை செய்கிறது. புலவரின் உயர்ந்த நோக்கு, அவளிடம் நம் உள்ளம் இரக்கம் கொள்ளுமாறு செய்கிறது. இரண்டும், பிறர் வாழ்வை அறியும் வேட்கையையும் அறிவிக்கும் வேட்கையையும் அடிப்படையாகக் கொண்டவையே. ஆனால் ஒன்றில் குறுகிய தன்னல நோக்கம் ஊறு விளைக்க, மற்றொன்றில் பரந்த கலை நோக்கம் உயர்வு விளைக்கின்றது. இயல்பான ஒருவகை வேட்கை நோக்கத்திற்கு ஏற்பத் தாழ்ந்தும் உயர்ந்தும் பயன்படுதலைக் காணலாம். செய்தித் தாள், மேடைப் பேச்சு, நாடகம், சினிமா, கதை முதலியன தாழ்தலும் உயர்தலும் இப்படியே ஆகும். ★



மென்மையும் [போட்டோ: ஸ்ரீதர்] வன்மையும்

நிமிர்ந்த முதுகும் வலுவான அவயவங்களும் பெற

உங்கள் குழந்தைக்கு இந்த பரிசுத்தமான பால் உணவை அளியுங்கள்

ஆஸ்டர் மில்க், தாய்ப்பால் சரிவர போதாத பொழுது குழந்தைகளுக்குத் அவசியமான பரிசுத்தமான புஷ்டியூட்டும் பால் உணவு. உங்கள் குழந்தையின் குறையாத திடவளர்ச்சிக்கு இதுவே சிறந்தது. இதனுல்தான் புத்திசாலியான தாய்மார்கள் ஆஸ்டர் மில்க்கையே வற்புறுத்துகிருர்கள்.

தாய்மார்களுக்கு
ஒரு உபயோகமான குறிப்பு

குழந்தைக்குப் பொடுகு இருந்தால் சிறந்த வாதாங்கொட்டை எண்ணெயை பிரதி இரவும் உச்சந்தலையில் தடவவும். மறுநாள் காலை பொடுகுகளை மெதுவாக அகற்றி, சோப்பும் வெந்நீரும் கொண்டு தலையை சுத்தம் செய்யவும்.

OSTERMILK

ஆஸ்டர்மில்க் தாய்ப்பாலுக்கு சமமானது

பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புதுடில்லி

உங்களுக்குத் தேவை

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

நெருப்பு: கப்பல்: விபத்து

ஆஸ்திகள் ரூ. 1 கோடிக்கு மேல்

★

தலைமைக் காரியாலயம்:

பாண்டியன் பில்டிங், மதுரை.

★

கிளைகள்:

பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர் & கொச்சி.

தாக்ஷாயணி

லா. ச. ராமாமிருதம்

மூங்கில் பாலத்தின்மேல் மூவரின் கனம் அழுத்தியதும் பாலம் க்ரீச் க்ரீச்சென்று தொட்டிலாடிற்று. பாலம் ஆடவும் பையனுக்கு ஒரே குஷி. அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு தொப்புத் தொப்பெனக் குதித்தான். பாலம் ஐயோ ஐயோவெனச் செல்லமாய் ஓலமிட்டது.

''வா, வா போகலாம்.''

''இரு அம்மா செத்தே'' என்று வர மறுத்துத் தும்பை இழுக்கும் கன்றுக்குட்டி போல் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

''நேரமாயிடுத்தே; அப்பா முன்னுலே போருரே—''

''அதெல்லாம் முடியாது. வரமுடியாது, போ'' என்று பையன் தலையை ஆட்டி முரண்டி, இன்னொரு முறை குதித்தான். அவனுக்கு ஏமாற்றம் நேராதபடி பாலமும் கத்திற்று.

''இதோ பாருங்களேன், உங்கள் பிள்ளை படுத்தற பாட்டை!''

நாலடி முன்னுல் போய்க்கொண்டிருந்த அவள் கணவன் நின்று திரும்பி நோக்கினுன். மாலையின் மஞ்சள் வெயிலில் பையன் பாலசூரியனுய்த் தகதகத்தான். அவன் தலைமயிர் கூட ஒரு தினுசான செம்பட்டையினுல், ஹோமகுண்டத்தின் நெருப்புப் போல் திகுதிகுவென எரிந்தது. பசுபதியின் கண்கள், கூசினுற் போல் லேசாய் மங்கின. யோசனையான புன்னகையுடன் திரும்பி வந்தான். மூவரும் பாலத்தின் நடுவே நின்றதும் பாலம் உடலை முறித்துக்கொண்டு முனகிற்று.

கண்ணுக்கு எட்டியவரை வயற் பரப்புகள் பூமியைக் கட்டானிட்டு அறுத்தன. மைல்தூரத்தில் ரெயில்வே ஸ்டேஷனின் செங்கல் கட்டடம் பளிச்சென்றது. தந்திக் கம்பங்களின் உச்சியில் காற்று ஊடுருவுகையில் தந்திகள் சுருதி மீட்டின. மூலைக்கு மூலை, கண்ணுக்கு எட்டிய வரையும் அதற்கும் அப்பாலும் தண்டவாளம் சீறிக்கொண்டு ஓடிற்று. நகைப் பெட்டியைத் திறந்ததும் மூடியின் உள்மெத்தை போல் வானீல் நீலம் பிதுங்கி நின்றது.

''அப்பா அப்பா! தோ பார்! அதோ, அதோ!'' பையன் கையைக் கொட்டிக்கொண்டு குதித்தான்.

சவுக்குத் தோப்பின் உச்சியில் வானத்தை அசுத்தமாய்க் கிறுக்கிக்கொண்டு ஒரு கறுப்புத் திட்டுக் கிளம்பிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் புகைப் படலம் அகன்று விரிந்தது. பாறையாய்க் கபம் கட்டிப் போன தொண்டையில் ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு கத்தல் நீளமாய்க் கிளம்பிற்று.

சவுக்குத் தோப்பின் மறைவிலிருந்து ரெயில் வெளிப்பட்டதுதான் தாமதம், பையன் வெறி பிடித்தவனுகிவிட்டான். அவன் தாய் அவனை அமுக்கிப் பிடித்துக்கொண்டாள். திமிறும் திமிறலில் எங்கே பாலத்திலிருந்து விழுந்துவிடுவானே என்று பயம். ஆனுல் அவள் நாட்டம் கவலையோடு அவள் கணவன் மேல்தான் பாய்ந்தது. பசுபதி மௌனமாய் வண்டித் தொடரைக் கவனித்துக்கொண்டிருந்தான். வழியெல்லாம் தண்டவாளத்தை விழுங்கி உமிழ்ந்து ஸ்டேஷனுள் விரைந்து நுழைந்து நின்று அடங்கிப் பெருமூச்சு விட்டது.

இந்த ஸ்டேஷனில் ஏறுவாரும் இல்லை, இறங்குவாரும் இல்லை. ஆனுல் கிலுப்தமாய் வண்டி பிரதிதினமும் இங்கு இரண்டு நிமிஷம் இளைப்பாறிவிட்டுத்தான் சென்றது. இதோ மூச்சைப் பிடித்துக்கொண்டு கிளம்பிவிட்டது.

வண்டி வளைவில் திரும்பி மரங்களின்பின் மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்துவிட்டுப் பசுபதி திரும்பினுன். அவன் முகம் கறுத்திருந்தது. நல்ல நிறமாக இருப்பவர்களுக்கு எப்பொழுதும் ஓர் அசௌகரியம். நெஞ்சில் இருப்பதை முகத்தின் நிறம் காட்டிக்கொடுத்து விடும். பசுபதி பாபுவை விட நிறம்.

"நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்!"—
பேச்சு முழுவதும் இதையே நினைப்பூட்டுகின்றன.

"என்ன, போவோமா?"

"டே பாபூ, ஓடுடா; உன்னை நான் பின்னால் வந்து பிடிக்கப் போறேன்."

பையன் கொக்கரித்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்தான்.

அவன் செவி தூரம் தாண்டியதும் தாட்சாயணி, "உங்களுக்கு இன்று மனம் சரியில்லையல்லவா?" என்றாள்.

அவன் முகம் லேசான பச்சையாய் மாறிற்று. "உனக்கு அப்படி ஏன் தோணணும்?"

"எனக்குத் தோணவில்லை. தெரியும். இன்று தபால்காரன் வந்து போனதிலிருந்து நீங்கள் சரியாயில்லை. என்னை என்ன என்றுகூடக் கேட்கவில்லை. என்னோடு அப்புறம் சரியாய்ப் பேசக்கூட இல்லை."

"பிறருக்கு வரும் கடிதத்தைப் பிரிப்பதோ கேட்டு வாங்கிப் படிப்பதோ எனக்குப் பழக்கம் இல்லை."

"அப்போது நான் பிறத்தியாரா?"

அவன் பேசவில்லை.

"அப்போது உங்களுக்குக் கடிதம் வந்தாலும் நான் என்ன என்று தெரிந்துகொள்ளக் கூடாதல்லவா?"

"எனக்குக் கடிதம் போட யார் இருக்கிறார்கள்? இனி எனக்கு வர வேண்டிய ஓலை ஒன்றுதான் பாக்கி. அது வந்ததும் அதற்குப் பதில் போட முடியாது. நானே கிளம்பியாக வேண்டும்."

"சரி சரி, உங்களோடு பேசினால், மூச்சு விடாமல் இப்படித்தான் தர்க்கம் பண்ணுவீர்கள்." அவள் குரல் கடுகடுத்தது. "வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் நாக்கில் நரம்பில்லாமல் வெடுக்கென அச்சானியமாய் ஏதாவது சொல்வீர்கள். உங்கள் உடம்பு இருக்கும் நிலைக்கு எனக்குத்தான் தாங்காது. அதனால் நானே தணிந்து போகிறேன்."

"நான் கிருதார்த்தனானேன். என் அகமுடையாள் எனக்குத் தணிந்து போகிறாள். என் ஜன்மம் சாபல்யம் அடைந்தது."

"எனக்கு வந்தது இதுதான்; இந்தாருங்கள்!" கடிதத்தை மடியிலிருந்து எடுத்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பிரித்தான். கண்கள் வரிகள்மேல் ஓடின.

அது அச்சடித்த திருமண அழைப்பு.

அதைக் கையில் பிடித்துக் கொண்டே திரும்பி, பாலத்தின் கட்டிடத்தின்மேல் சாய்ந்தான். இருவரும் மௌனமாய்க் கீழே ஓடும் ஜலஜரிகையைப் பார்த்துச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது வெயில். மழை வரட்டும்; கரை அடங்காது.

"ஊம், பத்மாவுக்குக் கல்யாணமாக்கும்!"

"பத்திரிகை உங்கள் கையில்தான் இருக்கிறது."

"ஹூம், உன் தங்கை அழகி அல்லவா?" அவன் இன்னும் ஜலத்தையேதான் பார்த்துக்கொண்டிருந்தான்.

"அதைப்பற்றிச் சந்தேகம் வேறேயா? இப்போது பட்டுவை நான் பார்த்து எட்டு வருஷங்களாச்சு. உற்ற வயசு. இன்னும் நன்றாய்த்தான் இருப்பாள்."

"பட்டுவா?"

"அதுதான், பத்மாதான். நான் அவளைப் பட்டு, பட்டம்மா என்று தோன்றினாற் போல் அழைப்பேன். எங்களிடையில் சண்டை வந்தால் 'பத்து மொத்து' என்பேன். பத்து என்னவோ மொத்துதான். கதைப் புத்தகம் படிப்பதில்கூட அவளுக்கு ஆசை கிடையாது. அம்மா 'பத்மா' என்பாள். அப்பாதான் வாய் நிறையப் 'பத்மாவதி!' என்று கூப்பிடுவார்."

"ஆஹா, உன் அப்பாவை எனக்குத் தெரியுமே, எவ்வளவு வாயும் மனசும் நிறைந்த மனுஷர் என்று!"

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டாள். "ஆனால் அப்பாவுக்கு என்னவோ என்மேல் தான் இஷ்டம்."

"நீ தாட்சாயணி அல்லவா?" தோற்ற சீட்டைத் தூக்கி எறிவது போல் பத்திரிகையை அலட்சியமாய் வீசினான். அது பறந்து சென்று ஜலத்தில் கிடந்த ஒரு பாறாங்கல் மேல் வீழ்ந்தது.

"ஏன் அதை எறிந்தீர்கள்?" மூண்டெழும் கோபத்தில் அவளுக்குக் கன்னங்கள் குறுகுறுத்தன.

"ஏன்? இதை வைத்துக் கொண்டு கலியாணத்திற்கு நாம் போகப் போகிறோமா?"

"போகாவிட்டால் எறிய வேணுமோ?" கோபக் கண்ணீர் கண்களை உறுத்தியது.

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முகம் சுண்டிப் போயிருந்தது. இருவரும் வெகு நேரம் வாளாயிருந்தனர்.

"தாட்சாயணீ!"

அவன் மெதுவாகக் கூப்பிட்டது அவளுக்குக் காது கேட்கவில்லை. கிட்ட நெருங்கி முகத்தெதிரில் விரலைச் சுண்டினான்.

"—ம்ம்ம்?" திடுக்கென விழித்துக்கொண்டாள்.

"என்ன தபஸில் இறங்கிவிட்டாய்?"

"நான் தாட்சாயணி அல்லவா? நீங்கள் பசுபதி."

அவள் அப்படிச் சொன்னதுமே அவன் முகத்தில் குபுக்கெனக் குங்குமம் குழம்பிற்று. உடல் கிடுகிடென ஆடிற்று. கீழே விழாதபடி அவள் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். அவள் அவனை அப்படியே அணைத்துக்கொண்டாள். அந்த வேகத்தில் பாலம் ஊஞ்சலாடிற்று. அவளுள் கிளர்ந்த தாய்மை தாங்க முடியாமல் வாய் குழறிற்று. புடைவைத் தலைப்பால் நெற்றியை ஒற்றினாள். அப்பா! எவ்வளவு பலவீனமாய்ப் போய்விட்டார்! ஒன்றுமே தாங்க முடிவதில்லை. அவள் விழிகள் நிறைந்து கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

"ஏன் அழுகிறாய்?"

அவனைக் கட்டிக்கொண்டு தேம்பினாள்.

"தாட்சாயணி, ஏன் அழுகிறாய்?"

"ஒரு நாள் இது மாதிரி சமயத்தில் உங்களை நான் இழந்து விடுவேனோ?"

"நம் பையன் இருக்கிறான்—"

"இருந்தால் என்ன? உங்களுக்குப் பின்தான் அவன், எல்லாமுமே! நமக்குப் பின்தான் அவன் வந்தான். ஆமாம், எல்லாமே உங்களுக்கு அப்புறந்தான். இது விஷயத்தில் அன்று எப்படியோ அப்படித்தான் எனக்கு இன்றும். நான் இருக்கும் வரை அப்படித்தான்."

அவள் ஆவேசத்தைக் கண்டு அதிசயித்து நின்றான். மாலை இரவுள் கடக்கும் நேரத்தில், கோயில் மணியோசை காற்றில் மிதந்து வந்து கலக்கையில் அவள் வெறி பிடித்தாற் போல் பேசுவதைக் காணச் சற்று அச்சமாய்க்கூட இருந்தது.

முதுகைத்தான் கண்டேன்.

பழுக்கக் காய்ந்த வெல்லப்பாகை யாரோ வாயில் ஊற்றினாற்போல் கனவு கண்டு திடுக்கென விழித்துக்கொண்டாள். அறைக்கு வெளியே நிலவு பட்டை வீசிற்று. அவள் கணவன் படுக்கை விரித்தபடி கிடந்தது. நினைவைச் சரி கூட்டிக்கொள்ளுமுன் உருகோசை புரண்டு வந்து மேலே மோதிற்று. அவளுக்குத் திக்கென்றது. பரபரவென எழுந்து வெளியே வந்தாள்.

பூந்தொட்டிகள் சூழ்ந்த கல்மேடை மேல் அவன் உட்கார்ந்திருந்தான். மடியில் பாபு தலை வைத்துக் கவர்ச்சியான அலங்கோலத்தில் தூங்கிக்கொண்டிருந்தான். பசுபதி ஒரு கையால் தம்பூரை இறுகத் தழுவிக்கொண்டிருந்தான்.

அவள் அவனிடமிருந்து தம்பூரைப் பிடுங்கிக்கொள்ள முயன்றாள். ''வேண்டாம்—''

''இல்லை, நான் பாடவில்லை. வெறுமெனச் சுருதி மாத்திரம் மீட்டிக்கொண்டிருக்கிறேன்.''

''அதற்கும் நேரமாகவில்லையா?''

அவன் வெறுமெனச் 'சூள்' கொட்டினான். அவள் எதிரே அமர்ந்தாள். காற்று, சில்லென வெட்டிற்று. உடம்பைச் சிலிர்த்து ஒடுக்கிக்கொண்டாள்.

''இது உங்களுக்கு உடம்புக்காகுமா?'' அவள் சொன்னது செவியில் ஏறியதோ இல்லையோ? தம்புராக் கட்டை மேல் முகத்தைப் பதித்து ஓசையை மூர்க்கமாய் உறிஞ்சிக் குடித்துக்கொண்டிருந்தான்.

எல்லா அரவங்களும் அடங்கிய அவ்வேளையில் தம்பூரிலிருந்து பொழியும் அவ்வோசை பாம்பு போல் அவள்மேல் வழிந்து கவ்விற்று. அது தன்னை விழுங்குவதை உணர்ந்தாள். நாத வெள்ளம் கிறுகிறுவென மூக்கு விளிம்பு வரை ஏறிற்று. மூச்சுத் திணறிற்று. இனி ஒன்றும் பண்ணுவதற்கில்லை எனத் தெளிந்ததும் திடீரென மட்டற்ற மகிழ்ச்சி அவளுள் பொங்கிற்று. அதில் தன்னை இழந்து மகிழ்ச்சியுடன் சமர்ப்பித்துக்கொண்டு, மழை நாளில் குழந்தைகள் விடும் காகிதக் கப்பல் போல், தான் சுழலில் அடித்துக்கொண்டு போவதை உணர்ந்தாள். அந்த மூலமூர்க்க ஆனந்தத்தில், மூழ்கித் திணறும் மூச்சு நுனியில் கடைந்து எழுந்து எண்ணங்கள் உருவாகையில், அவை தண்ணீருள் பேசிய பேச்சுப் போல் சப்தம் இழந்து வார்த்தைகள் இழந்து வேகத்தில் வரம்புகளும் இழந்து வெற்றாய் நின்று பம்பரமாய் ஆடும் ஒன்றிலிருந்து வெறும் நீயும் நானுமாய்ப் பிரிந்து அவைகளின் ஜீவனாய் மாத்திரம், சுருதியோசை வெள்ளத்தில் நீந்துகையில், உடல் தாங்க முடியாது மூர்ச்சையில் மூழ்கிப் போனாள்.

* * *

''**எ**ன்ன இது! ஏன் இப்படி இருக்கிறது?''

''எப்படி இருக்கிறது?''

''நெஞ்சில் சந்தோஷம் பொங்குகிறது. ஆனால் தொண்டையைத் துக்கம் அடைக்கிறது. கடகடவெனச் சிரிக்க வாய் திறக்கிறது. ஆனால் அழுகை பீரிட்டுக்கொண்டு வருகிறது. இது

என்ன? பயமாயும் இருக்கிறது; சந்தோஷமாயும் இருக்கிறது. நாமே இருக்கிறோமா இல்லையா என்று சந்தேகங்கூடத் தோன்றுகிறது. நாம் இப்பொழுது இல்லையென்றால் வேறு எப்படி இருக்கிறோம்? இருக்கிறோம் என்றால் இல்லாமலும் இருக்கிறோமே? புரியவில்லை. ஆனால் புரியவும் புரிகிறது. என்ன இது?''

''நீயும் நானும் எங்கோ ஓர் எல்லைக் கோட்டில் இருக்கிறோம். நாம் இப்பொழுது குழந்தைகளாகிவிட்டோம். குழந்தை தூக்கத்தில் சிரிக்கிறது. உடனே விக்கி விக்கி அழுகிறது. இது என்ன?''

''சுவாமி தூக்கத்தில் குழந்தைக்குத் தாமரைப் பூவைக் காட்டுவாராமே! அதைப் பார்த்ததும் அது சிரிக்குமாம். அவர் பூவை மறைத்ததும் அழுமாம்.''

''நாமும் தாமரைப் பூவைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இல்லை, பூவினுள்ளேயே நீயும் நானும் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். குவிந்த இதழ்கள் ஒவ்வொன்றாய்ப் பிரிந்துகொண்டிருக்கின்றன. அல்லது கவிந்துகொண்டிருக்கின்றன. புதுப் பிறப்புள் புகுந்து புறப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நினைவுகள் அழகிய இதழ்கள்.''

அவள் மேடையினின்று இழிந்து அவன் கால்களை மார்புடன் அணைத்துக்கொண்டாள். சுருதியோசை அவர்களைச் சூழ்ந்து கோட்டை கட்டிக்கொண்டது.

* * *

''நீங்கள் என் வாழ்க்கையில் வந்து முளைத்ததை நினைக்கட்டுமா? எனக்கு ஒரே சமயத்தில் நம் வாழ்க்கையில் ஏதேதோ நினைவு வருகிறது.''

''நீ எது நினைத்தாலும் உன் இஷ்டமே என் இஷ்டம்.''

''ஒவ்வொரு நாளும் எத்தனையோ முறை எத்தனையோ விதங்களில் என் வாழ்க்கையில் உங்கள் பிரவேசத்தைப்பற்றி நினைத்துக்கொள்கிறேன். ஆனால் எனக்கு அலுப்பு ஏற்படவில்லை.''

''உனக்கும் எனக்குமிடையில் இந் நிலையில் அலுப்பு என்பது இல்லை.''

''அது மாத்திரம் அல்ல. நினைத்ததையே நினைத்துக்கொள்வதில், நினைத்ததைச் சொல்வதில், சொன்னதையே சொல்வதில் இன்பமாக இருக்கிறது. ஒரொரு சமயமும் ஒரொரு புது அர்த்தம் தோன்றுகிறது. நிஜம்மா இதைப் பத்தி உங்களிடம் சொல்றப்போ எனக்கு நாக்கு தொண்டைவரை தித்திக்கிறது.''

''உன் சொல் ருசியில் என் நாக்கிலும் எச்சில் ஊறுகிறது.''

''நான் காலேஜிலிருந்து திரும்பி வந்து அப்பொழுதுதான் வீட்டுள் நுழைந்தேன். ஆபீஸ் ரூமிலிருந்து அப்பா கூப்பிட்டார். நான் உள்ளே வந்தேன். வந்ததும் உங்கள் முகத்தைக் காணவில்லை. முதுகைத்தான் கண்டேன். சுவரில் மாட்டியிருந்த படத்தில் சிந்தையை ஒட்டிக்கொண்டிருந்தீர்கள். முதுகின் பின்னால் கோத்த உங்கள் கைகளைக் கண்டேன். உங்கள் கையைக் கொடுங்களேன்!'' பற்றி இழுத்து இரு கைகளிலும் பொத்திக்கொண்டாள்.

''கையைப்பற்றிப் பேசும்போது, கையைத் தொடவேணும்போல் ஏக்கமே ஏற்படுகிறது.''

'தாட்சாயணீ, இவர்தான் உன் பாட்டு வாத்தியார். இவரிடம் உன்னைப்பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறேன்.'

''நான் கை கூப்பினேன். நீங்கள் நின்ற நிலை மாறவில்லை. ஆனால் மெதுவாய் முகம் மாத்திரம் என் பக்கம் திரும்பிற்று. இறைஞ்சலில் ஏந்திய என் கைகள் இறங்க மறந்தன.''

''என் முகத்தில் அப்பொழுது நீ என்ன கண்டாய்? தயவு செய்து சொல்லேன்.''

''உங்கள் கேள்வி பெரிய கேள்வி. என்னென்று பதில் சொல்வேன்! அந்த நிமிஷத்தைத்தான் இப்பவும் நினைத்துக்கொள்கிறேன். நினைக்க நினைக்க விவரங்கள் பிரளயமாய்ப் பெருகுகின்றன. எத்தையென்று எடுத்துச் சொல்வேன்!''

''இல்லை, பார்வையின் அந்த க்ஷணப் பதிவில் என்னில் என்ன கண்டாய்? சொல்லேன்!''

''கல் விக்கிரகம் முகம் திரும்பினாற் போல் 'திக்'கென்றது. அதற்கு மேல் என்னைக் கேட்காதேயுங்கள். எனக்குச் சொல்லத் தெரியவில்லை.''

''இல்லை, சொல்; சொல்! உன்னைக் கெஞ்சுகிறேன், சொல்லேன்; நீ சொல்லச் சொல்ல எனக்குப் பலம் ஊறுகிறது.''

''ஒரு தினுசாய் அடிவயிற்றைத் துண்டம் போட்டது, பழுதை யென்று நினைத்துப் பாம்பைத் தூக்கி விட்டாற் போல். 'பக்'கென்று சில்லிட்டுக்கொண்டு ஓர் அதிர்ச்சி. முதலில் 'பக்'; அப்புறந்தான், திகில், குழறல், கூக்குரல் எல்லாம்.''

''உன் பாஷைக்கு நான் தலை வணங்குகிறேன்.''

''என் நெஞ்சில் உடனே பதிந்தவை யாவை? உங்கள் நெற்றிமேட்டில் கட்டைவிரல் நகத்தளவில் வளைவாய் ஒரு வடு இருக்கிறதே அது!''

அவன் அதைத் தொட்டுக்கொண்டான். ''சின்ன வயசில் திண்ணைக்குத் திண்ணை தாவிக் கீழே விழுந்துவிட்டேன்.''

''உங்கள் மூகத்தில் கடுகடுப்பு இல்லாவிட்டாலும் அதில் கடினம் இருந்தது. உங்கள் கண்களில் கனிவு ஏன் இல்லை? இப்படிக் கண்டது என் கண்களின் குற்றமோ?''

''என் கண் லேசாய்ப் பூனைக் கண். அதனாலேயே என் பார்வையில் அதற்கு இல்லாத உக்கிரம் இருக்கலாம்.''

''இல்லை, நாம் இப்பொழுது கண்ணால் கண்டது மாத்திரம் பேசவில்லை. கண் கண்டதால் நெஞ்சு கண்டது கண்டுகொண்டிருக்கிறோம். ஆகையால் உங்களிடம் நான் கண்டது உங்கள் கண்களின் உக்கிரம் அல்ல. உங்கள் உள்தன்மையின் உக்கிரமேதான். அதை நீங்கள் உடனே நிரூபித்து விட்டீர்கள்.''

''உன் தகப்பனாருக்கு உன்மேல் இருக்கும் பாசத்தில் அவர் உன் சங்கீதத்தைப் பற்றிச் சொன்னதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டேனே தவிர ஏற்றுக்கொள்ளவில்லை. இது நாமே நேருக்கு நேர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் அல்லவா?''

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் சொன்னது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு எடுத்தவுடன் நீங்கள் என்னை 'நீ' என்றதும் அவருக்குப் பிடிக்கவில்லை. 'எனக்கும் சங்கீதத்தைப்பற்றித் தெரியும்' என்றார்.

''நீங்கள் புன்னகை புரிந்தீர்கள். 'ஐந்து வயசில் நான் கோலியாடினபோது என் தகப்ப

ஞர் என்னைக் கன்னத்தில் அறைந்து இழுத்து வந்து சுவரோடு ஒட்டி வைத்துச் சொல்லிக் கொடுத்த நாளிலிருந்து சாதகம் பண்ணி வரு கிறேன். எங்கள் குடும்பம் நினைவு தெரிந்த மூனு தலைமுறையாகச் சங்கீத பரம்பரை. அப் படி இருந்தும் சங்கீதத்தைப் பற்றித் தெரியும் என்று சொல்லிக்கொள்ளத் தைரியம் வர வில்லையே!'

''அப்பாவுக்கு இன்னும் ரோசம் வந்துவிட் டது. 'நான் சங்கீத சபைப் பிரஸிடெண்டு என்று தெரியுமோன்னோ?'

'ஓஹோ! அதனால்? திறப்பு விழாவில் கட்ட டத்தின் கதவை, கரகோஷங்களிடையே வெள்ளிச் சாவி போட்டுத் திறந்தவர் கட்டிடத் தைக் கல்மேல் கல் வைத்துக் கட்டினவர் ஆய் விடுவாரா? அல்லது உங்கள் தர்க்கப் பிரகாரம் ஆகிவிட வேணுமா?'

''அப்பாவுக்கு முகத்தில் ரத்தம் தெறித்தது. சடேரென்று நாற்காலியைப் பின்னுக்குத் தள் ளிக்கொண்டு எழுந்தார்.

'என்ன, என் வீட்டிலேயே என்னை அவ மானப்படுத்த உம்மை இங்கு அழைத்து வர வில்லை!'

''நீங்களும் விடவில்லை. 'உங்களுக்குப் பிடித்தமானதைப் பேசவும் நான் இங்கு வரவில்லை. நானாகவும் வரவில்லை. உங்கள் பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லித் தர வேண் டும் என்று நீங்களாக என்னைத் தேடிக் கேட்டு அழைத்து வந்தீர்கள் என்பதை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.'

'ஆமாம், சபா காரியதரிசி உங்களைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தார். நீங்கள் ரொம்பவும் நாளடைவில் பிரபலமாகப் போகும் பெரிய புள்ளி என்று இன்னும் ஏதேதோ சொன் ஞர். எனக்கும் என் பெண் எதிலும் சிறந்த தையே அடைய வேண்டும் என்னும் அவா உண்டு. அப்படி நான் ஒரு சபதமே பண்ணிக் கொண் டிருக்கிறேன். படிப்போ பாட்டோ எதுவுமே, ஆமாம்—'

'நானும் அதையேதான் சொல்கிறேன். உங்கள் பெண்மேல் இருக்கும் பாசம் உங்கள் கண்ணை மறைக்க முடியும்.'

''அப்பா அடுத்தாற்போல் பதிலுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார். அது தான் சமயமென நான் இடைமறித்தேன். 'ஆமாம், இவரை எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க அழைத்து வந்தீர்களா? அல்லது சௌகரியமாய்ச் சண்டை போடக் கூட்டி வந் தீர்களா?'

''அப்பொழுது நீங்கள் என் பக்கம் திரும்பித் தலை வணங்கினீர்கள். மறுபடியும் நான் சிலை அசையக் கண்டேன். எனக்கு நெஞ்சு பரபரத் தது. எப்படியும் நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்!''

''தாட்சாயணி, நாம் இப்பொழுது நிமிஷத் தின் சிமிழிலிருந்து மையை எடுத்து இட்டுக் கொண்டு வருஷங்களைப் பார்த்துக்கொண் டிருக் கிறோம்.''

அவன் அப்படிச் சொன்னதும் அவளுக்கு மயிர்க்கூச்செறிந்தது. நெஞ்சை அடைத்தது. அவன் கன்னத்தை விரல் நுனிகளால் தொட் டாள். வார்த்தைகள் மூச்சோடு சேர்ந்து வந்தன. ''எப்படி உங்களால் இப்படிப் பேச முடிகிறது?''

அவன் பெருமூச்செறிந்தான். இருவரும் மௌனமாயினர்.

ஆகாயத்தில் பட்சி ஒன்று ஒற்றையாய்ப் பறந்து சென்றது, திசை தப்பிய எண்ணம் போல். நிலவு வெளிச்சத்தில் இரவைத்தான் பகலென்று நினைத்துக் கொண்டதோ? மாலை யில் நேரத்தில் கூட்டிலடைய மறந்து இப் பொழுது இரவில் திசை தப்பி அலைகிறதோ? சுருதியிலிருந்து இழைகள் பிரிந்து அவர்களைச் சுற்றி யும் மேலும் மேன்மேலும் கூடு பின்னின.

''ரிமா மமா மமாமாமா—''

அவன் குரல் தம்பூரின் ஓசையோடு ரகசிய மாய்க் கலந்து சன்னமாய்ப் பிரிந்து மெதுவாய் விங்கிக்கொண்டே எழுந்தது.

அவள் கண்கள் கரையுடைந்து பெருகின. அவன் பாதங்களை இரு கைகளாலும் வருடி னாள். தொண்டை கேவிற்று.

''நான் இப்போது எது நினைத்தேனோ அதற்கு அடியெடுத்துக் கொடுக்கிறீர்கள்!''

அவன் கண்கள் புன்னகை புரிந்தன. குரல் இசையோடு தழுதழுத்தது.

''ஸ..ரி..ரி..ம..மாம..மா..மா..மா.''

தடவிக் கொடுத்தாற் போல் அட்சரங்கள் ஒன்றோடு ஒன்று குழைந்தன. சுருதியில் ஒளிந்து விளையாடின.

''ஸரி மாம மா மமா மக ரி ரீ..''

அவள் கைகள் கூப்பிக் கோத்துக் குவிந்து அந்தரப்பட்சி போல் தவித்தன. கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடியபடி இருந்தது. அவள் அவஸ்தையைக் கண்டு அவன் பாடுவதை நிறுத் தினான்.

''தாட்சாயணி, ஏன் அழுகிறாய்?''

''நான் அழவில்லை. என் நெஞ்சை மீட்டு கிறீர்கள். என் நெஞ்சில் எவ்வளவு ஆழம் என்னையும் அறியாமல் பதிந்தீர்கள் என்று அன்றுவரை நான் அறியேன். நான் வளர்ந்த சூழ்நிலையில், எவ்வளவோ புருஷர்களோடு பேசிச் சிரித்துக் கொட்டமடித்திருக்கிறேன். அதற்கு என் வீட்டிலும் தடங்கல் இல்லை. காலேஜில் எத்தனை மாணவர்கள், வகுப்புக்கு எத்தனை வாத்தியார்கள்!—''

''அதே மாதிரி பாட்டுக்கும் ஒரு வாத்தி யார்.''

''அப்படித்தான் அப்பா நினைத்தார். நானும் அப்படித்தான் நினைத்துக்கொண் டிருந் தேன். ஆனால் நீங்கள் அப்படி அல்ல.''

''ஏன், எப்படி இருந்தேன்? உன்னிடம் தப்பாக நடந்துகொண்டேனா?''

''இல்லை இல்லை, ஒருகாலும் இல்லை. சத்தியமாக, இல்லை.'' ஆவேசத்துடன் அவன் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டாள். ''என் முகத்தைக்கூட நீங்கள் சரி யாய்ப் பார்த்தீர்களோ, எனக்கு இன்னும் சந் தேகம். பாட நேரம்வரை கல்லால் அடித்தாற் போல் உட்கார்ந்திருந்து, வேலையானதும் சொல்லிக்கொள்ளாமல்கூடப் போய்விடுவீர் களே! நீங்கள் என்னோடு எங்கே சரியாய்ப் பேசினீர்கள்? நான் ஒருத்தருக்கும் பயப்பட்ட தில்லை. ஆனால் உங்களிடத்தில் எனக்கு ஒரு பீதி கண்டது. அது இன்னமுந்தான் இருக் கிறது. உங்களிடம் ஒரு பிரசன்னம் இருக் கிறது.''

''நான் உன் அடிமை.''

''நான்தான் முதலில் உங்களுக்கு அடிமை யானேன். அன்று உங்கள் பாட்டிற்கு அடிமை

யாகி அதனால் உங்களுக்கு அடிமையாகிவிட்டேன். அன்று நீங்கள் சாமா ராகம் பாடுகையில் கற்பனை ஸ்வரத்தில் 'மாமாமாமாமா' என்று ஒரே அட்சரத்தை ஐந்து தடவை அடுக்கினீர்களே, அதில் ஏதோ ஒரு தருணத்தில், ஒரு 'மா'வில் உங்களுக்கு என்னை இழந்தேன். அன்று நீங்கள் 'மா . . மா . .' என்று எனக்கு என்ன செய்துவிட்டீர்கள், சொல்லுங்களேன்!''

''நான் என்ன செய்தேன்? உன் தகப்பனார் கேட்ட மாதிரி கேட்கிறாயே!''

''இல்லை. 'மாமாமாமாமா' என்று நீங்கள் உருக்கமாய் இழைக்கையில் திடீரென என் நெஞ்சுள் ஒரு கன்று 'அம்மா' என்று கதறிற்று. அவ்வளவுதான்; உடனே எனக்கு என்னைச் சுற்றி 'அம்மா! அம்மா!' என்று ஒரேயடியாய் வெள்ளி மணிகளின் அலறல் தான் கேட்டது. நானே என் வசத்தில் இல்லை. என்னைச் சுற்றி ஒரே நீலமாகிவிட்டது. நீங்கள் நம்பினால் நம்புங்கள்: நம்பாவிட்டால் போங்கள். கண்ணை விழித்துக்கொண்டுதான் இருக்கிறேன். சொப்பனம் மாதிரி இருக்கிறது. ஆனால் நீங்கள் என் எதிரில் இல்லை. என் மடியில் குழந்தையாய்க் கிடந்தீர்கள். வெட்கம் விட்டுச் சொல்கிறேன்.''

''உனக்கும் எனக்குமிடையில் வெட்கம் என்பது கிடையாது.''

''நான் மடியில் இருந்த குழந்தைக்குப் பாலூட்டிக்கொண்டிருந்தேன். எனக்குப் பால் பீரிட்டுக்கொண்டு வந்தது. ஆனால் அந்தத் தோற்றம், தோன்றின சுருக்கத்தில் மறைந்துவிட்டது. கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்க்கையில், நீங்கள் கண்ணை மூடி உங்கள் பாட்டில் உங்களை இழந்திருந்தீர்கள். உங்கள் முகத்தில் ஒரு தினுசான களை போட்டிருந்தது. உங்கள் நெற்றியில் வேர்வை பொட்டுப் பொட்டாய் நின்றது. 'உங்களை நான் தொட மாட்டேனா? என் முன்றானையால் அந்த வேர்வையை ஒற்றி எடுக்க மாட்டேனா?' என்னில் மூண்டு விட்ட தாய்மை தவித்தது. அந்தத் தருணத்தில் என்னை உங்களுக்கு இழந்தேன். கானம் கலைந்து நீங்கள் திடுக்கென விழித்துக் கொண்டீர்கள். எதிரில் என்னைப் பார்த்ததும் உங்கள் முகம் கடுகடுத்தது, ஏதோ நீங்கள் ஏமாந்த சமயம் எனக்குத் தெரிந்துவிட்டது போல். தம்பூரைக் கீழே இறக்கிவிட்டுக் குடிக்க ஜலம் கேட்டீர்கள். கொண்டு வந்த தீர்த்தத்தை இரண்டு முழுங்கு சீப்பிக் குடித்துவிட்டு, தம்ளரைப் படக்கெனக் கீழே வைத்துவிட்டுச் சரேலென்று எழுந்து போய் விட்டீர்கள்.''

''ஹோட்டலிலேயே சாப்பிட்டு எனக்குச் சீப்பிக் குடிக்கும் வழக்கம் விடவில்லை. என்னை மன்னித்துவிடு.''

''மன்னிப்பா?'' அவள் ஒரு விதமான ஆத்திரத்துடன் சிரித்தாள். ''நான் தம்ளரை இரண்டு கைகளிலும் எடுத்து ஆத்திரத்துடன் நீங்கள் விட்டுப்போன மிச்சத்தை உறிஞ்சிக் குடித்தேன். ஏன் அப்படிச் செய்தேன்? நானே அப்பொழுது அறியேன். உங்கள் மிச்சத்தை உண்டால் என் தாபம் தணியும் என்றா?

'என்னடீ தாட்சாயணீ?'

''திரும்பிப் பார்த்தபோதுதான் அம்மா என் பின்னாலேயே நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.''

''எனக்கு ரொம்ப அசதியாயிருக்கே. .''

தம்பூரை அவசரமாய்க் கீழே இறக்கிவிட்டுப் பரிவுடன் அவள் தலையை மடியில் எடுத்துக் கொண்டான்.

''வெகுநேரம் பேசிவிட்டாய். தூங்கு.''

''இல்லை, எனக்குத் தூக்கம் வரவில்லை. வராது. நீங்கள் தொடர்ந்து சொல்லுங்களேன்.''

''என்னது?''

''நம் கதையை. உங்கள் வாய்மூலமும் நான் கேட்க இன்று எனக்கு ஆசையாக இருக்கிறது; இரண்டு குழந்தைகள் ஒன்றுக்கு ஒன்று கதை சொல்லி ஒன்றை ஒன்று தூங்கப் பண்ணிக் கொள்வதுபோல்.''

அவன் லேசாய்ச் சிரித்தான்.

அவள் குழந்தை மாதிரி அவனைத் தொந்தரவு பண்ணினாள். ''சொல்லுங்கோன்னா.''

அவன் மனம் இல்லாமல் இணங்குவது போல் பெருமூச்செறிந்தான்; பேசலானான்.

''அடுத்த நாள் மாலை நான் உங்கள் வீட்டுள் நுழைகையிலேயே, ஆபீஸ் அறையிலிருந்து உன் தகப்பனார் கூப்பிட்டார்.

'மிஸ்டர் பசுபதி, நான் திடீரென முடிவு பண்ணிவிட்டேன். என் பெண்ணிற்கு 'டியூஷன்' நிறுத்திவிடப் போகிறேன். இதோ உங்கள் சம்பளம். மன்னிக்க வேண்டும். சரி, போய் வருகிறீர்களா? எனக்கு வேலை இருக்கிறது.'

''அவர் நடத்தை வெடுக்கென்று இருந்தது. ஆனால் நான் ஏன் என்று கேட்டுக்கொள்ளவில்லை. ஏன் எதற்கு என்றெல்லாம் கேட்டுப் பேச்சை வளர்த்த எனக்கு எப்போதுமே பிடிப்பதில்லை. அத்தோடு பாட்டு வாத்தியார் பிழைப்பே இப்படித்தான். நான் பேசாமலே அப்படியே போய்விட்டேன். எனக்கு இதெல்லாம் கேட்டுத் தெரிந்து என்ன ஆகவேணும்?

''இதெல்லாம் பற்றி நான் சிந்தனைகூடச் செய்யவில்லை. ஆனால் மூன்று நாட்கள் கழித்து, மாலை நான் வெளிக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருக்கையில் அறைக் கதவை டக்டக்கென்று நாசுக்காய் நகத்தால் தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். உன் தகப்பனார் நின்றுகொண்டிருந்தார்.

'உள்ளே வரலாமா, மிஸ்டர் பசுபதி?'

''நான் வழி விட்டேன். 'ஹூம்!' சுற்றுமுற்றும் பார்த்தார். நாற்காலி தேடினாரோ என்னவோ? உடையின் வண்ணான் மடிப்புக் கலையாதபடி உடம்பை ஜாக்கிரதையாய் இறக்கிக்கொண்டு பாய்மேல் உட்கார்ந்தார். எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன்.

'உங்கள் நேரத்தை வீணாக்குகிறேனோ?'

'அப்படி ஒன்றும் இல்லை. என் காரியம் எனக்குக் காத்துக் கிடக்கும்.'

''சடக்கென நிமிர்ந்து பார்த்தார். 'மிஸ்டர் பசுபதி, இப்பொழுது உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?'

'இதென்ன கேள்வி?'

'பிறகு சொல்கிறேன். நீங்கள் முதலில் சொல்லுங்கள். ஆயிரம் - ஏன், ஆயிரத்தை நூறாகத்தான் இருக்கட்டுமே - ஒரு மட்டாய்க் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?'

'என்ன செய்ய முடியாது? என்ன வேணுமானாலும் செய்யலாம். குதிரைப் பந்தயத்தில் ஒரு மட்டாய்த் தோற்கலாம். கெலித்தால் பதினைந்தாயிரமாய்ப் பண்ணலாம்.'

''அவர் முகம் சட்டென மாறிற்று. அப்புறந்தான் தெரிந்தது, அவருக்கு 'ரேஸ்' பைத்தியம் உண்டு என்று.

'உங்களைப் பொறுத்தவரையில் சொல்லுங்களேன்.'

''எனக்கு யோசனை சுவாரசியமாய்த் தானுகவே ஓடத் தலைப்பட்டது. 'பார்க்கலாம், இப்பொழுது நான் வைத்துக்கொண்டிருக்கும் 'டியூஷன்'களுக்கு அக்கடா என்று ஒரு வருஷத்துக்காவது முழுக்குப் போட்டுவிடலாம். சௌகரியமாய் இஷ்டப்பட்டபடி சாதகம் செய்யலாம். நல்ல குருவை அடுத்துப் பாடம் கேட்கலாம். மதுரைக்குப் போய் ஓலைச் சுவடிகளைப் புரட்டி ஒரு வருஷமாவது ஆராய்ச்சி செய்ய வேண்டுமென வெகுநாளாய் ஓர் அவா உண்டு.''

'பேஷ், பேஷ்!' என்று பையிலிருந்து செக் புத்தகத்தை எடுத்துத் துடையில் வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார். 'உங்கள் முதல் எழுத்து என்ன?'

'ஏது, என் விஷயத்தில் அவ்வளவு அக்கறை திடீரென்று?'

'உம்மிடத்தில் அக்கறை இல்லை. எனக்கு என் பெண்மேல் இருக்கும் அக்கறைதான்.'

'இதென்ன குரு தக்ஷிணையா?'

நீங்கள் விட்டுப்போன
மிச்சத்தை......

'அப்படித்தான் வைத்துக் கொள்ளுமே.'

'இதென்ன, இந்த மூன்று நாளில் தாட்சாயணி சங்கீதத்தில் மேதையாகிவிட்டாளா என்ன?'

'மிஸ்டர் பசுபதி, என் பெண்ணுக்குச் சங்கீதம் வேண்டாம். என் பெண் எனக்கு மிஞ்சினுல் போதும். மிஸ்டர் பசுபதி, நான் ஏமாந்து போனேன். என் பெண் உம்மிடத்தில் மனத்தைப் பறி கொடுத்துவிட்டாள்.'

''கோணி ஊசியால் ஓங்கிக் குத்தினுற்போல் என் மண்டையில் வலி பளீரெனப் பாய்ந்து மின்னிற்று. ஓசைகள் அனைத்தும், அவைகளின் கதியே, அப்படியே தடுக்கி நின்றன. கூரையிலிருந்து ஒரு பல்லி தொப்பென்று மூலையில் சார்த்திய தம்பூரின் மேல் விழுந்தது. 'ரொய்ஞ்ஞ்' என்று தந்திகளின் சப்தந்தான் அந்த நிமிஷத்தை விடுதலை செய்தது.

'என்ன சொல்கிறீர்கள்?' அவர் அப்படிக் கேட்கையில் அவரைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது.

'என் பெண்ணை நான் காப்பாற்ற வேண்டும். ஒரேயடியாய்ப் புத்தி கலங்கியிருக்கிருள். ஏதோ பிதற்றிக் கொண்டேயிருக்கிருள். ஆகாரமே உள் செல்லவில்லை. அவளை நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள்?'

எனக்குச் சுருக்கென்றது.

'மிஸ்டர் பசுபதி, உங்களுக்கு என் பெண்ணைக் கொடுப்பேன் என்று நினைக்கிறீர்களோ?'

'நான் நினைப்பேன் என்று நீங்கள் நினைக்கிறது இருக்கட்டும். நீங்கள் கொடுத்தாலும் நான் பண்ணிக்கொள்ள வேண்டாமா? என் சம்மதம் என்று ஒன்று இதில் உண்டே!'

''அவருக்கு மூக்குத் துடித்தது. 'அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேச வேண்டாம். நீங்கள் ஆரம்பத்திலிருந்தே மீறித்தான் போய்க் கொண்டிருக்கிறீர்கள். நான் வார்த்தை பொறுக்க மாட்டேன்.'

'வாஸ்தவம். நான் யார்? கேவலம் பாட்டு வாத்தியார். நீங்கள் பெரிய உத்தியோகஸ்தர். உம்மைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் உமக்கு ஆமாம் சாமி போட்டுப் போட்டுப் பிறர் அபிப்பிராயம் என்று ஒன்று உண்டு என்பதையே மறந்துவிட்டீர்கள். உம்மிடத்தில் பணம் ஏராளமாய் இருக்கிறது.'

''என் கையில் அவர் செக்கைத் திணித்தார். 'நீங்கள் என் பெண்ணுக்கு இழைத்திருக்கும் தீங்கிற்கு உம்மைச் சும்மாவே விடுகிறேன் என்று வைத்துக்கொள்ளும்.'

'கொஞ்சம் மூச்சு விடுங்கள். உங்கள் பெண்ணிற்கு நான் என்ன தீங்கு இழைத்துவிட்டேன்?'

'இன்னும் என்ன வேண்டும்? ஜவ்வாதுப் பொட்டும் கஸ்தூரி வாசனையும் இட்டுக் கொண்டு அவள் மனத்தை மயக்கியிருக்கிறீர்.'

''செக்கை நாலு சுக்கல்களாய்க் கிழித்து அவர் ஜேபியில் செருகினேன். 'தயவு செய்து போகிறீர்களா?'

'மிஸ்டர் பசுபதி.'

'உடனே போய்விடுங்கள். தயவு செய்து உடனே.'

''அவர் போன பிறகு வெகு நேரம் நான் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையவில்லை. உன்னைப்பற்றி நான் அதுவரை நினைத்ததில்லை. நான் ஒரு நாளும் அதுவரை வாசனைகள் உபயோகித்ததும் இல்லை. எங்கோ கடிகாரத்தில் மணி ஒன்பது அடித்தது. கஸ்தூரி ஜவ்வாது, கஸ்தூரி ஜவ்வாது என்று இரண்டு வார்த்தைகள், தொண்டையில் நார் சுற்றிக்கொண்டிருந்தன. இரண்டு கட்டிடம் தாண்டினுல் சந்தனக் கடை. சரக்கென்று எழுந்து சென்றேன். ஜவ்வாதும் கஸ்தூரியும் வாங்கிக் கொண்டு வந்தேன். கண்ணுடி பார்த்துச் செவ்வையாக இட்டுக்கொண்டேன். தம்பூரை மீட்டிக்கொண்டு பாட ஆரம்பித்தேன்.

''நானே என் வசத்தில் இல்லை. அந்தச் சமயம் எனக்கு உடல்கூட இல்லை. குரலாய் மாறிப் போயிருந்தேன். எத்தனை நேரம் பாடினேனே?

''மாடிப்படியில் திடுதிடுவென யாரோ ஏறி வரும் சப்தம் கேட்டது. கதவு படீரெனத் திறந்தது. வாசற்படியில் ஒரு கணம் நீ நின்ருய். நீ அலங்கோலமாக இருந்தது தெரிந்தது. உன் கண்களில் ஜுரம் அடித்துக்கொண்டிருந்தது. ஓடிவந்து அப்படியே என்மேல் விழுந்ததும், சாட்டை மாதிரி உன் பின்னல், பாம்புபோல் என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது.''

அவன் உடல் கிடுகிடென ஆடிற்று. அவள் எழுந்து அவன் தோள்களைப் பற்றிக்கொண்டாள்.''

''சில விஷயங்கள் சில சமயம் நேர்ந்துவிடுகின்றன. அவை நேரும் முறையிலேயே அவைகளுக்கு முன்னும் பின்னும் இல்லை. அவை நேர்ந்ததுதான் உண்டு. அவை நேர்ந்த விதமல்லால் வேறு எவ்விதமாயும் அவை நேரவும் முடியாது. நேர்வது அல்லாமலும் முடியாது. நேர்ந்த சமயத்தில் நேர்ந்தபடி அவை நேர்வது அல்லாது முடியாது. நேர்ந்தமையால், அதனுலே நேர வேண்டியவை யாவும் ஆகிவிடுகின்றன. அப்படி நேர வேண்டியவையாய் ஆனதால் அவை நேர்ந்ததால் அவைகளில் ஒரு நேர்மையும் உண்டு. அந்த நேர்மை தவிர அவை நேர்ந்ததற்கு வேறு ஆதாரம் இல்லை. வேண்டவும் வேண்டாம். அவைகளின் ஸ்வரங்களே அவ்வளவுதான்.''

''நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்.''

* * *

இருவரும் வெகு நேரம் அவரவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். தம்பூரின்மேல் பதிந்த அவன் நாட்டம் மாறவில்லை.

''சரி, நேரமாகிவிட்டது, எழுந்திருங்கள்.''

''ஆகட்டும்.''

''இப்போதே மணி என்னவோ? கண்ணை ஒரு முறை கொட்டியாவது திறக்க வேண்டாமா?''

''கண்ணை மூடினுல் மாத்திரம் நேரமாக வில்லையா? விழித்துக்கொண்டிருந்தாலும் நேரந்தான். தூங்கினுலும் நேரந்தான். ஆகிற நேரம் ஆகிக்கொண்டுதான் இருக்கிறது.''

''நிமிஷத்தில் வருஷங்கள். வருஷத்தில் நிமிஷங்கள். காலகதியின் உண்மையான தன்மையில் நிமிஷத்துக்கும் வருஷத்துக்கும் வித்தியாசம் இல்லை.''

''நீ படித்திருப்பதால் நீ சொல்வதையெல்லாம் நிரூபிக்க முடியும். எனக்குத் தெரிந்தது கூட்டில் அடைபட்டாற்போல் இங்கு இருக்கிறேனே, இந்த எட்டு வருஷங்கள்தாம். எட்டு வருஷங்கள். ஒன்ரு இரண்டா....?''

அவள் தலை குனிந்தாள். அவன் புறங்கையில் இரண்டு நெருப்புச் சொட்டுக்கள் விழுந்

தன. அவன் மனம் பஸ்மம் போல் திடீரெனப் பிசுபிசுத்தது.

''தாட்சாயணி, ஏன் அழுகிறாய்?''

அவள் முகம் பயத்தில் மாறுவது நிலவில் கூடத் தெரிந்தது. மூக்கை உறிஞ்சிக்கொண்டாள்.

''நீங்கள் எதை நினைக்க வேண்டாம் என்று கவலைப்படுகிறேனோ, அதைப்பற்றித்தான் இப்போது இருவரும் நினைத்துக்கொண்டிருக்கிறோம்.''

''மனம் என்பது எப்பொழுதும் ஒரு நிலையில் இருப்பதில்லை. அது எண்ணுவதையெல்லாம் எண்ணியே தீரும்.''

அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டாள்.

''என்னால் உங்களுக்கு ஒரு சுகம் கிடையாது. நான் படி மிதித்ததிலிருந்து உங்களுக்குக் கஷ்டத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.''

''என் வியாதிக்கும் நீ படி மிதித்ததற்கும் சம்பந்தம் இல்லை. இது குடும்பத்தில் இரண்டு வழியிலும் இருக்கிறது. என் தாய் இறந்தது காச நோயால்தான். என் தாயைப் பெற்ற பாட்டனார் இறந்ததும் அதே வியாதியால் தான். என் தகப்பனாரோ தம் அத்தை மகளையே பண்ணிக்கொண்டார். ஆகையால் நான் எனக்கு வந்ததைத் தப்ப முடியாது. இருந்தாலும் மனம் என்பது எப்போதும் ஒரு நிலையில் இருப்பதில்லை. அது எண்ணுவதை எண்ணியே தீரும். எண்ணங்களை அறவே ஒழிக்க முடியாது. முடிந்தவரையில் அடக்க முடிந்தால் அதுவே ஒசத்தி.''

''நானுந்தான் நினைத்துக்கொள்கிறேன்: ஓரொரு சமயம், நீங்கள் எப்படி வீணாய்ப் போய்விட்டீர்கள் என்று. என்னவோ ஆரம்பத்தில் ஜலதோஷ ஜுரம் என்று நினைத்தோம்.''

''டாக்டர்தாம் என்னை வைத்துக்கொண்டு உன்னிடத்தில்தானே சொன்னார்? ஆத்திரத்துடன் கேலி பண்ணினார். 'அம்மா! உங்களுக்கு உங்கள் புருஷன் மிஞ்ச வேணுமானால் பட்டணத்தை விட்டு எங்கேயாவது கிராமத்துக்கு ஓடிப் போய்விடுங்கள். இந்த இடத்து மூச்சை இன்னும் ஒரு நிமிஷம் சுவாசிக்கக்கூட இவர் லாயக்கில்லை. சுவாசப்பையில் ஓட்டை விழ எப்போதடா என்று காத்துக்கொண்டிருக்கிறது!'

''இன்று பாலத்தில் நாம் நின்றபோது ரெயில் வந்ததே, அப்போது இதைத்தான் நினைத்துக்கொண்டேன். எட்டு வருஷங்களுக்கு முன்னால் இதே வண்டிதானே இந்த ஊரில் நம் இருவரையும் கக்கிவிட்டுச் சென்றது? நான்தான் முதலில் இறங்கினேன், தம்பூரைத் தோளில் வைத்துக்கொண்டு. பின்னால் நீங்கள் இறங்கினீர்கள். உங்களுக்குக் கைகொடுத்து இறக்க வேண்டியிருந்தது. அவ்வளவு பலவீனமாய்ப் போயிருந்தீர்கள், அந்த மூன்று மாதங்களுக்குள்.''

''இப்போதுந்தான் எதற்கு உபயோகம்? உனக்குக் குழந்தையாகவே நானும் ஆகிவிட்டேன். பெண்களுக்குள் ஒரு வசனம் உண்டு: பெற்றது வயிற்றுப் பிள்ளை; கொண்டது கயிற்றுப் பிள்ளை. எப்படி இருந்தால் என்ன? இருவர் மூவரானோம்.'' அது நிமிஷத்தில் சேர்ந்ததா, வருஷத்தில் சேர்ந்ததா? அவன் முகத்திலிருந்து பத்து வருஷங்கள் சட்டென உதிர்ந்தன. பாபுவின் முதுகைத் தடவினான்.

''நானும் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நிமிஷத்தில் எதையுமே மனத்தில் ஒளித்து வைக்க முடியவில்லை. இந்த எட்டு வருஷங்களுக்குள் ஒரு தடவை, எப்போது என்று சொல்ல மாட்டேன், நானும் உங்களை விட்டுப் பிரிந்து போய்விட வேண்டும் என்று நினைத்ததுண்டு.''

''ஏன்?'' அவளைச் சுவாரசியத்தோடு கவனித்தான்.

''ஏன் என்றால் என்னத்தைச் சொல்வது? நீங்கள்தான் சொன்னீர்களே, அது மாதிரி ஒரு நிமிஷபுத்திதான். இப்படித் தோசியாய்ப் போய்விட்டேனே என்ற மனக் கசப்பு. பிறந்த வீட்டுச் சபலமும் இருக்கலாம். ஒரே எண்ணம் மனசை முற்றுகையிட்டுவிட்டால் தான் முன்புத்தி பின்புத்தியில்லாமல் அடித்துவிடுமே! என்னவோ நினைத்துக்கொண்டேன்; அவ்வளவுதான். நீங்கள் அசதியாய் உறங்கிக்கொண்டிருந்தீர்கள். பையன் விளையாடப் போயிருந்தான். கடிகாரத்தைப் பார்த்தேன். வண்டி வருவதற்கு நாலு நிமிஷங்களே இருந்தன. ஈரக் கையை மடியில் துடைத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன்.''

அவள் அவனைப் பார்க்கவில்லை. நெற்றியில் அரும்பிய வேர்வையைத் துடைத்துக்கொண்டாள்.

''நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன். இந்த நிமிஷம் என்னால் எதையுமே ஒளிக்க முடியவில்லை. நம்மிடையில் இது ஒன்றுதான் இருவருக்கும் தெரியாதது. அதையும் இல்லையென்று பண்ணிவிடுகிறேன். வயல் வரப்புகளின்மேல் தட்டுத் தடுமாறிக் குறுக்கு வழியில் விழுந்தடித்துக்கொண்டு வருகிறேன். சவுக்குத் தோப்பின் உச்சியில் புகைப்படலம் தெரிந்துவிட்டது. மூங்கில் பாலத்தின்மேல் காலை வைத்தேன். வண்டி ஸ்டேஷனை விட்டுக் கிளம்பிக்கொண்டிருந்தது 'ஊ—ஊ—' என்று நீளமாய் ஒரு முறை ஊதிற்று. இன்னொரு முறை ஊதிற்று. 'ஏ அசடே, வழிதப்பிப் போகாதே. இந்தத் தடவை உன்னைக் காப்பாற்றிவிட்டேன். இங்கேயே விழுந்து கிட' என்று கடிவதுபோல இருந்தது.''

அவளுக்கு மூச்சு இரைத்தது.

அவன் அவள் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டான். அவள் கையை விடுவித்துக்கொண்டாள். ''உஷ்! குழந்தை முழித்துக்கொள்கிறான்!'' என்றாள்.

பாபு உடம்பை முறுக்கிக்கொண்டு கண்ணைத் திறந்து, இருந்த இடம் புரியாமல் ஒரு தரம் மிரள விழித்தான். அவன் மேல் கவிந்த முகங்களை அடையாளம் கண்டுகொண்டதும் அவன் முகத்தில் வெளிச்சம் உண்டாயிற்று. காலை நீட்டி அவள் மடியில் சொகுசாய்ப் போட்டுக்கொண்டான்.

''அப்பா! அம்மாக்கும் உனக்கும் நடுவில் நான் பாலம்'' என்றான். ★

இனாம்
இதோ–
மீண்டும் "ஓ. கே." வனஸ்பதி தயாரிப்பாளர்களே, முதன் முதலாக, ஒரு புதிய, உபயோகமுள்ள பரிசுத் திட்டத்தை, வாங்குபவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
MADE FROM VEGETABLE OILS ONLY
OK
VANASPATI
PRODUCE OF INDIA
THE EAST ASIATIC CO. (INDIA) LTD., MADRAS
வனஸ்பதி கெடாமல், எப்பொழுதும் புதுமையாகவும், சுகாதாரமாகவும் இருக்க முதலில் லீவர்லிட் டின்களை ஏற்படுத்தியது "ஓ. கே." வனஸ்பதி தான்.
"ஓ. கே." 1, 2, 5, 10 பவுண்டு வனஸ்பதி டின்களிலுள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்கு மாற்றாக, உங்களுக்கு அருகிலுள்ள "ஓ. கே." வியாபாரியிடமிருந்து, உங்களுக்குப் பிடித்தமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பரிசாகப் பெறுங்கள்.
OK
ஓ.கே
வனஸ்பதி
ஒவ்வொரு அவுன்ஸிலும் 700 I. U. வைட்டமின் 'A' அடங்கியது.
இந்த "விசேஷ வெகுமதி" பற்றி மேலும் விவரங்கள் அறிய, உங்கள் "ஓ. கே." வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கி பாருங்கள். "ஓ. கே." வனஸ்பதி வாங்குங்கள். 'இனாம்' பரிசையும் பெறுங்கள்.
EP.
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட், மதராஸ் -1.

மலை நாட்டில் தமிழர்

அ. ச. ஞானசம்பந்தம்

சமீபத்தில் மலேயாவுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றி வந்தவர் அந்நாட்டுத் தமிழர்களைப் பற்றிச் சொல்கிறார்.

மலேயா என வழங்கப்பெறும் மலை நாட்டில் தமிழர் பலர் வாழ்ந்து வருகின்றனர். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முது மொழியை வாழ்வில் உயர்ந்த குறிக்கோளாகக் கொண்ட நம் தமிழ் நாட்டார் மிகப் பழங்காலந் தொட்டே வேற்று நாடுகளில் சென்று வாணிகஞ் செய்தும் குடி ஏறியும் வாழ்ந்து வரலாயினர். கிழக்கே சீனம் வரையிலும் மேற்கே ஐரோப்பாவின் கீழ்ப் பகுதி வரையிலும் இவர்கள் தங்கி வாழ்ந்த அடையாளங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

இப்பழைய வரலாறு ஒரு புறம் இருக்க, இன்றும் தமிழர் பெரிய அளவில் தங்கி வாழ்ந்துவரும் இடம் மலை நாடாகும். மலாய், சீனம் ஆகிய மொழிகளுடன் தமிழும் சமமான இடம் பெற்று இருக்கும் அளவிற்கு இவர்கள் தொகை மிகுதியாக அந் நாட்டில் இருக்கிறது.

மலாய் நாட்டின் இயற்கை வளம் வியப்பை அளிக்கக் கூடியது. அந் நாட்டைச் சுற்றிப் பார்த்த நம் நாட்டுப் பெரியார் ஒருவர் அதன் இயற்கை வளத்தைப் புகழும் முறையில், "கைத் தடியை நட்டுவைத்தால்கூட மறு நாள் முளைத்துவிடும் போல் இருக்கிறதே" என்று கூறினாராம். ஏராளமான மழைவளமும் அதற்கு ஏற்ற மண் வளமும் பெற்றுத் திகழ்தலின் பொன் கொழிக்கும் நாடாக விளங்குகிறது அந் நாடு. இத்தகைய வளம், வெகு நன்மை புரிந்ததுடன் ஓரளவு தீமையும் புரிந்துள்ளது. மலாய்க்காரர்கள் உழைப்பு என்பதையே அறியாமல் வாழ்ந்து பழகிவிட்டனர். அதன் பயனாக இன்று அந்நாட்டில் பெருஞ்செல்வர், பெரிய வாணிகர், பெரிய உழைப்பாளர் என்று எடுத்துக்கொண்டால் ஒரு மலாய்க்காரரைக்கூடக் காண முடியாது.

எவ்வித உழைப்பையும் மேற்கொள்ளாமல் இன்பமாக வாழ்ந்து பழகிவிட்டவர்கள் அந் நாட்டின் பழங் குடிகள். இத்தகைய நாட்டில் தமிழன் என்று தொடர்பு கொண்டான் என்று கூற முடியவில்லை. அப் பழைய நாளில் வாணிகத்தின் பொருட்டுச் சென்ற தமிழ்க்



செந்தூல் முருகன்

பத்து மலைக் குகை

குடிகளில் பல குடும்பத்தினர் அங்கேயே தங்கி விட்டனர். நாளடைவில் இவர்கள் தாய்நாட்டுடன் தொடர்பு அற்றுப் போயினர். இன்று இவர்கட்கு மலாய் மொழி தவிர வேறு எந்த மொழியும் பேச வராது. மலாய் நாட்டுடன் இவ்வளவு ஆழ்ந்து போயினும் இவர்கள் தமிழ்ப் பண்பாட்டை ஓரளவு வைத்துக் கொண்டுள்ளனர்.

மலாக்காச் செட்டிமார் என்று அழைக்கப் பெறும் இவர்கள் தமிழ் அறியாதவர்கள். ஆனால் இவர்கள் பெயர்கள் மட்டும் தமிழ் நாட்டில் வழங்கும் சிவ சம்பந்தமான பெயர்களேயாகும். சுப்பிரமணியன், முருகன், சிவநேசன் என்பன போன்ற ஆண்பாற் பெயர்களையும், உமா, பார்வதி போன்ற பெண்பாற் பெயர்களையுமே வைத்துக்கொள்கின்றனர். இப் பெயர்களை எல்லாம் மலாய் மொழியில்தான் எழுதி வழங்குவர்.

இற்றை நாளில் மலாக்காவில் உள்ள சிவ பெருமான் ஆலயத்தில் இவர்கள் பெரும் பங்கு கொண்டு தேவாரம் திருவாசகம் முதலியன பயின்று வருகின்றனர். அதிலும் ஒரு சிறப்பு என்னவெனில் அனைவரும் தேவார திருவாசகங்களை மலாய் மொழி எழுத்துக்களில் எழுதிப் பாடி வருகின்றனர். திருப்பதியில் பிரபந்தங்களைத் தெலுங்கு எழுத்துக்களில் எழுதிப் பாடுவதை நினைவூட்டுவதாய் இருந்தது அவர்கள் எழுதிப் பாடும் முறை.

இவ்வோர் இனத்தாரைத் தவிர ஏனைய தமிழர்கள் பழைய நாளில் அந் நாட்டிலேயே நிலைத்து வாழ விரும்பவில்லை போலும்! அன்றியும் நிலைத்து வாழ்ந்த இம்மலாக்காச் செட்டிமார்களையும் தம்மவராகக் கருதவில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. இன்றேல் தமிழ்ச் சமுதாயத்தோடு இவர்கள் முற்றும் தொடர்பற்றுப் போகக் காரணம் இல்லை.

இவர்களை அடுத்து மலாய்த் தமிழர்கள் என்பவர்கள் பிற் காலத்தில் அந் நாட்டில் குடியேறி அங்கேயே குடும்பத்துடன் வாழ்ந்துவிட்டவர்கள். இவர்களில் பெரும்பாலார் இந்தத் தலைமுறைக்கு முந்திய தலைமுறையில் அந் நாட்டில் சென்றவர்களாகவே உள்ளனர். எனினும் அந்நாட்டில் சொத்து முதலிய பெற்றிருத்தலினாலும், பெரும்பான்மையானவர் தமிழ் நாட்டையோ இந்தியாவையோ பாராதவராதலாலும் இவர்களை அந்நாட்டில் வேர் கொண்டு வாழ்பவர் என்றே கூறலாம்.

மூன்றுவதாக உள்ள கூட்டத்தார் யாழ்ப்பாணத்திலிருந்து தொழில்நிமித்தம் அந் நாட்டில் குடியேறியவர். அநேகமாக இவ்வாறு சென்ற யாழ்ப்பாணத்தார் அனைவருமே தம் குடும்பத்துடன் அந்நாட்டில் சென்று வாழ்பவர்களே. என்றாலும் பதவியிலிருந்து ஓய்வு பெறும்பொழுது பெரும்பாலானவர் மீட்டும் யாழ்ப்பாணம் சென்றுவிடுவர். நிலையான சொத்து ஒன்றையும் அந்நாட்டில் பெரும்பாலான யாழ்ப்பாணத்தார் வாங்குவதில்லை. வாங்கினாலும் ஊர் மீளும்பொழுது அனைத்தையும் விற்றுவிட்டு மீண்டு விடுவர். அந்நாட்டையே வாழும் நாடாகக் கருதி வாழ்பவர் மிக மிகச் சிறிய எண்ணிக்கை உள்ள யாழ்ப்பாணத்தாரே யாவர்.

நான்காவதாக உள்ளவர்கள் தமிழ் நாட்டிலிருந்து தொழில்நிமித்தம் மலாய் நாடு சென்ற நடுத்தர வகுப்பினராவர். நாட்டுக் கோட்டைச் செட்டிமார், தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஆகியவர்களே இக் கூட்டத்தவரில் மிகுதியானவர். இவர்களில் முற்பகுதியார் லேவாதேவியும், பிற்பகுதியார் கடை முதலியவையும் கொண்டு வாழ்பவர். செட்டி நாட்டார்கள் ஓரளவு நிலம், தோட்டம் முதலியன பெற்றிருப்பினும் அங்கு நிலைத்து வாழ விரும்பாதவரே யாவர். இவ்விரு கூட்டத்தாரும் குடும்பத்துடன் சென்றுகூட அந்நாட்டில் தங்குவதில்லை.

ஐந்தாவதாக உள்ளவர் தொகைதான் மிகுதியானது. ரப்பர்த் தோட்டங்களிலும் தென்னந் தோப்புகளிலும் சாலை அமைக்கும் துறைகளிலும் தொழிற்படுவோர் அனைவரும் தமிழர்களே. நகர சுத்தியாளரும் தமிழரே.

இவ்வைந்து இனத்தாரும் தமிழரே எனினும் இவருள் அதிக ஒற்றுமை இருப்பதாகக் கருத இடம் இல்லை. இவர்களுள் ஒற்றுமையாகக் காணப்படும் தன்மைகள் சிலவும் உண்டு. எல்லாக் கூட்டத்தாரும் சிறந்த தமிழ்ப் பற்றுக் கொண்டவர்கள். அனைவரும் தமிழ் நாட்டிற்கு மீண்டுவிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். நிறைந்த கடவுட் பக்தி கொண்டவர்கள். இவர் பண்புகளில் எல்லாம் தலை தூக்கி நிற்பது இவர்களுடைய பக்தி தான். தாய்நாட்டிலிருந்து ஆயிரம் மைலுக்கு அப்பால் இருப்பினும் திருக்கோயில்கள் அமைப்பதிலும் விழாக் கொண்டாடுவதிலும் இவர்கள் தலைசிறந்து விளங்குகின்றனர். ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வோர் ஊரில் முருகப் பெருமானுக்கு ஒரு பெரு விழா நிகழும்.

கோலாலம்பூரை அடுத்த பத்து மலைக் குகைக் கோயில், செந்தூல் முருகன் கோயில், தெலிக் கான்சன் முருகன் கோயில், பினாங்கை அடுத்த தண்ணீர் மலை முருகன் கோயில், சிங்கப்பூர் முருகன் கோயில் என்பவை சிறப்பானவை. பத்துமலைக் குகைக் கோயிலில் இயற்கையின் சிறப்பைக் காணலாம். தண்ணீர் ஒழுகி அறுத்துவிட்டமையின் மலை கறையான் புற்றைப் போல் கீழ்நோக்கி வளர்ந்துள்ளது. (படம் 2.) முருகனுக்குரிய இக் கோயில்கள் போல் கோலாலம்பூர் முதலிய இடங்களில் மாரியம்மன் கோயில்களும் சிறப்புடன் விளங்குகின்றன.

பெருவிழாக் காலங்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர், உடையவர் இல்லார், பதவியாளர் தொழிலாளர் என்ற வேறுபாடு இன்றி யாவரும் ஒன்றுகூடி உள்ளம் உருகி வழிபாடு செய்வது, கண்டார் மனத்தை உருக்குந் தன்மையது. கோலாலம்பூரில் வாழும் வருமான வரி அலுவலர் திரு கா. இராமநாதன் செட்டியாரும், திருவாளர் கே.வி.எல்.எம். இராமநாதன் செட்டியாரும் மிகச் சிறந்த பழக்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். அப்பழக்கம் யாதெனில் அன்றாடக் கூட்டுப் பிரார்த்தனையாகும். நாள்தோறும் விடியற்காலை ஐந்து மணியளவில் பலர் ஒன்றுகூடிப் பிரார்த்தனை செய்வதும், கூட்டங்கூட இயலாத இடங்களில் அவரவர் வீடுகளில் இப்பிரார்த்தனை நடத்துவதும் பெருமகிழ்ச்சி தருவனவாக உள்ளன. சிவனுறையும் நகரமாகப் பல ஊர்கள் விளங்கக் காண்கிறோம்.

மலைநாட்டில் வாழும் தமிழரிடம் பக்திக்கு அடுத்தபடியாகக் காணப்பெறும் இயல்பு அவர்களுடைய தமிழ்ப் பற்றாகும். சொற்பொழிவு என்றால் அவ்வளவு திரளான மக்கள் வந்து அமைதியாக இருந்து கேட்பதும் அரிய காட்சியாகும். கதைப் பிரசங்கமாயினும், ஆராய்ச்சிச் சொற்பொழிவாயினும் ஆயிரக் கணக்கானவர் கூடிக் கேட்கக் காணலாம். சொற்பொழிவுகள் நடைபெறக் கூடிய பெரிய மண்டபங்கள் குறைவாதலின் கூட்டம் தொடங்குமுன்னரே பலர் வந்து நிறைந்துவிடுவர்.

சொற்பொழிவு கேட்கும் ஆர்வம் போற்றற்குரியதேயாயினும் இளம்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மலைநாட்டுத் தமிழர் வேண்டிய அளவு கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. தமிழ்ப் பள்ளிகள் மிகவும் குறைவு. அக் கட்டிடங்கள் கண்ணை உறுத்துவனவாகவே உள்ளன. பல மாடிகள் உயர்ந்து நிற்கும் சீனர்கள் பள்ளிக்கூடங்கள் எங்கே? தகரக் கொட்டகைகளாகவும் சிறிய ஒற்றைமாடிக் கட்டிடங்களாகவும் விளங்கும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் எங்கே?

நல்ல செல்வ வளம்கொழிக்கும் மலாய் நாட்டில் தமிழ்ப் பள்ளிகள் நிறைந்த அளவுக்கு

பத்து மலைப் படிகள்

இல்லாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. மலைநாட்டில் பிறந்து வளரும் தமிழர்கள் அதிகமாக ஆங்கில நாட்டு மோகம் கொண்டவர்களாய் இருக்கிறார்கள் என்பதும் மறத்தற்கில்லை. குடியேற்ற நாட்டவர் மனப்பான்மை ஓரளவு மிகுந்திருத்தலின் ஆங்கிலமும், ஆங்கில வாழ்க்கை முறையும் உயர்ந்தவை என்ற மனப்பான்மை மிக்குக் காணப்படுகிறது. உடைமுறையிலும் மலாய்த் தமிழர் மேல்நாட்டு உடைமுறையை மிகுதியும் விரும்புகின்றனர். சாதாரணமாக ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்வதிலும் ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றனர். கூட்டங்களிலும் ஆங்கிலத்திற் பேசினால் அதிக மதிப்பு என்றே நினைக்கின்றனர்.

இவையெல்லாம் சிறிய குறைபாடுகள் எனினும் எளிதிற் போக்கிக்கொள்ளக் கூடியவை. வாணிகத் துறையில் சென்று வாழும் தமிழர்கள் தாய்நாட்டிற்கு மீண்டுவிடக் கூடியவராகலின் மலை நாட்டிலேயே பிறந்து வாழும் தமிழர்தாம் தமிழ் நாகரிகத்தைப் போற்றி வளர்க்க வேண்டும். தாங்கள் தனிப்பட்ட ஓர் இனம் என்பதையும் உலக நாகரிகங்களில் தம்முடைய நாகரிகம் மிகப் பழமையானதும் உயர்ந்ததும் ஆகும் என்பதையும் மறவாமல் உலகுக்கு எடுத்துக் கூறக் கூடியவர்களாய் விளங்க வேண்டும். ★

அக்கொடிய இருமலை நிறுத்த

பெப்ஸ்

உபயோகியுங்கள்

இருமல், ஜலதோஷம், தொண்டைப் புண், பிராங்கைடிஸ், இன்ப்ளுயன்ஸா, மற்றும் இதர தொண்டை, மார்பு உபாதைகள், ஹிருதயத்தையும், சுவாசப்பைகளையும் அபாயத்திற்குள்ளாக்குகின்றன. இவற்றிற்கு பெப்ஸ் உட்கொண்டு உடனே நிவாரணம் பெறுங்கள். பெப்ஸிலுள்ள குணமளிக்கும் மருந்து சத்துகள் இருமலை நிறுத்தி, ரணத்தை ஆற்றுகின்றன. மேலும் இவைகள் எரிச்சலுக்கு ஹிதமளிப்பதுடன், தீங்கிழைக்கும் கிருமிகளை நாசம் செய்கின்றன. குழந்தைகளும் வயோதிகர்களும் உபயோகிக்கலாம். தீங்கு விளைவிக்கும் மருந்துகள் இதில் இல்லை.

PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு உபாதைகளுக்கு சமனமூட்டும் வில்லைகள்.

FPY-39-TAM

ஏஜெண்டுகள்:
மெஸர்ஸ் தாதா & கோ.,
பி. டி. மதராஸ்.

கூந்தல் மற்றும் மூளை
அபிவிருத்திக்கான தைலம்

செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபகசக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.

பெரிய பாட்டில் ரூ. 3-8-0
சிறிய பாட்டில் ரூ. 2-0-0

எங்கும் கிடைக்கும்

ஆயுர்வேத மருந்து

ராம்தீர்த்

பிராம்மி எண்ணெ

ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C. RLY.)

ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்க யோகாசனங்களை விவரிக்கும் எங்கள் அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். தபால் செலவு உட்பட ரூ. 1-14-0, மணியார்டரில் தொகை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலேயே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு,
சென்னை

தகப்பன் சுவாமி

க. பஞ்சாபகேசன்

அவளைச் சுற்றி
லும் கத்திகளை
எறிந்தார்கள்.
அவள் ஆடாமல்
அசையாமல்
அஞ்சாமல்
நடுங்காமல்
இருந்தாள்.
எப்படி முடிந்தது?

கிருஷ்ணையர் தமது மேஜைமேல் இருந்த அந்தப் புத்தகத்துக்கு உள்ளே, குறிப்பிட்ட ஓர் இடத்தில், சிவப்பு மசியினால் அடையாளம் இட்டிருந்தார்.

''நாம் அறிந்தும் அறியாமலும், நமது வலிய முயற்சி என்று இராமலும் தினசரி இருபத்தோராயிரத்துச் சொச்சம் முறை உள்ளுக்கும் வெளிக்குமாக மூச்சு விட்டுக்கொண்டிருக்கிறோம். இப்படிச் சஞ்சரிக்கும் வாயுவைக் குறிப்பிட்ட சமயங்களில் அடக்கி, மனத்தை ஒரே முனைப்பில் தியான வழியில் செலுத்தி, முன்னோர்கள் அநேக சக்திகளையும் நீண்ட ஆயுளையும் பெற்றார்கள். இது பிராணாயாமம் எனப்படும்....''

சாயங்கால நேரத்தில் கிருஷ்ணையருடன் கொஞ்சம் பேசிவிட்டு வரலாமே என்று அவருடைய ஹோட்டலுக்குச் சென்ற நான், 'கல்லா'வுக்கு எதிரே அவருடைய மேஜையில் மேற்படி புத்தகத்தைப் பார்த்தேன்.

''ஸாருக்கு என்ன தர?'' என்று கேட்டு வந்த 'ஸர்வரி'டம், ''அவர் இல்லையா?'' என்றேன்.

''வெளியில் போயிருக்கிறார். இதோ வந்து விடுவார். ஒரு நெய்த் தோசை போடச் சொல்லட்டுமா?'' என்று கூறிவிட்டு, ஸர்வர் என் பதிலை எதிர்பார்க்காமல் உள்ளே ஆர்டர் தரவும் போய்விட்டான்.

'கல்லா'வுக்கு எதிரில் ஓர் ஆசனத்தில் அமர்ந்தேன் நான்.

ஹோட்டல் வாய்ப்பான இடத்தில், நாற்சந்தி முனையில் இருந்தது. எதிரே, மிக அருகில், ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு சாலை வந்துகொண்டிருந்தது. கிருஷ்ணையர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன் நான். அவர் பின்னால் பையன் நாராயணன் தன் தலைமேல் ஒரு பெரிய டின்னைச் சுமந்து வந்துகொண்டிருந்தான். ரெயிலில் வந்திருந்த அந்தப் பார்ஸலை வாங்கிக்கொண்டு வரப் போயிருக்கிறார் கிருஷ்ணையர்.

என்னைக் கண்டதும், ''வரவேணும், வரவேணும். என்ன, இரண்டு மூன்று நாளாய் ஆளைக் காணோம்!'' என்றார் கிருஷ்ணையர். பிறகு, ''ஏய், நாராயணா, காபிப் பொடி டின்னை உள்ளே கொண்டுபோய் வை'' என்று கூறிவிட்டு, 'கல்லா'வில் உட்கார்ந்துகொண்டே, ''என்ன செய்கிறது, ஸார்? நேற்றைக்கே சிகந்தராபாத்திலிருந்து வரவேண்டிய காபிப் பொடிப் பார்ஸல், இன்றைக்குத்தான் வந்திருக்கிறது'' என்றார் என்னைப் பார்த்து.

அந்த ஊரில், நைஜாமாபாத்தில், காபி குடிப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்களா என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதைப்பற்றிக் கிருஷ்ணையரிடம் கேட்டேன்.

''உங்களைப்போல எத்தனை மதராஸிகள் இங்கே இருக்கிறார்கள், ஸார்! காபி பயிராக்குகிறவர்களுக்குக்கூடக் காபி மணத்தைப்பற்றி அத்தனை தெரிந்திருக்காது; இந்த மதராஸிகள்

அதன் ருசியில் ஒரு பிசிர் தட்டினுலும் முகம் சுளித்துவிடுகிருர்களே!'' என்ருர் கிருஷ்ணையர்.

''வாஸ்தவம்.'' ஒப்புக்கொண்டேன் நான்.

''அதனுல்தான் என்ன செலவானுலும் பரவாயில்லை என்று, சிகந்தராபாத்திலிருந்தே நான் நல்ல காபிப் பொடியாகத் தருவித்து விடுகிறேன். தவிரவும், இன்றைக்கு இந்தக் கெடுபிடி ஏன் தெரியுமா? இங்கே சர்க்கஸ் கம்பெனிக்காரர்கள் வந்திருக்கிருர்களே!''

''காபிப் பொடிக்கும் சர்க்கஸ் கம்பெனிக் காரர்களுக்கும் என்ன சம்பந்தம், கிருஷ்ணையர் வாள்?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

''அப்படி எளிதாகச் சொல்லிவிட்டீர்களே! கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்து, பாருங்கள். சர்க்கஸில் கோமாளியாக நடிப்பவரிலிருந்து, பல நூறு பவுண்டு எடையைத் தன் தேகத்தில் சுமக்கும் பயில்வான்வரை எல்லோரும் இரண்டு மூன்றுநாளாக இங்கே வந்து 'காபி, காபி' என்று பறக்கிருர்கள். சர்க்கஸ் கம்பெனி மதராஸிலிருந்து வந்த கம்பெனியோ என்ருல் அப்படியும் இல்லை. எல்லாரும் ஒரே முனைப்புடன் ஹிந்திதான் பேசுகிருர்கள். ஸார், இந்தக் காபி விஷயம் ஒட்டுவாரொட்டிச் சமாசாரம். கம்பெனியில் யாராவது வாசனை காட்டியிருப் பார்கள்; இவர்கள் காபிக்கு இப்படிப் பறக்கிருர்கள். அதிலும் வடக்கே, இங்கே நைஜாமாபாத்தில், நம்முடைய கடையில் இப்படி நல்ல காபி கிடைப்பதென்ருல்....'' என்று அதற்கப்புறம் கிருஷ்ணையர் தம்முடைய 'சொந்த' மகிமையில் கொஞ்ச நேரம் திளைத்துப் பேச ஆரம்பித்தார்.

கடைசியில் கிருஷ்ணையர், ''இந்த அதிசயத்தைக் கேட்கவில்லையே நீங்கள்! அதோ பாருங்கள்: டவுனிலிருந்து வரும் ரோட்டில் ஒரு பெண்மணி நடந்து வந்துகொண் டிருக்கிருள்; நீண்ட கவுனும் பூட்ஸும் போட்டுக்கொண்டு, கூந்தலை நடுவகிடு எடுத்து அழகாக வாரிப் பொட்டும் இட்டுக்கொண்டு வருகிருளே, அவளைத்தான் சொல்கிறேன். அவள் சர்க்கஸில் வேலை செய்பவள்தான். பார்த்தால் கோவாக்காரியாக இருப்பாள் போலத் தெரிகிறது. துல்லியமான ஹிந்தியே பேசுகிருள். அவளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சர்க்கஸில் 'ஷிப்டா'ம். வேலை இல்லாத நாளில், சாயங்காலத்தில் இங்கே வர அவள் தவறுவதில்லை. ஏன் தெரியுமா? நம் ஹோட்டல் காபியைக் குடிக்கத்தான்!'' என்ருர் பெருமையுடன்.

ஆமாம். அந்தப் பெண்மணி நேரே ஹோட்டலுக்குத்தான் வந்தாள். நாற்சந்தி முனையில் அங்கங்கே நின்றுகொண்டு தன்னைப் பார்த்து வியந்துகொண் டிருந்த ஜனங்களை அவள் லட்சியப்படுத்தவில்லை. வட்டவடிவமான முகமும் சுருளான நடுவகிடும் அவள் வசீகரத்தைப் பல மடங்கு உயர்த்திக் காட்டிய விதமானது என் உள்ளத்தில் ஓர் எண்ணத்தைத் தூண்டி வைத்தது. 'இவள் நம் தமிழ்நாட்டுப் பாணியில் புடைவை கட்டினுளானுல்....இந்தச் சிவந்த வதன சௌந்தரியம் அந்தப் பாணியில் மகாலட்சுமியின் உருவையே அல்லவா தோற்றச்செய்யும்!' என்ற எண்ணந்தான் அது.

எனக்குப் பின்னுல் இருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்துவிட்டாள் அவள்.

என் எண்ணம் பூராவும் அவளைச் சுற்றி வட்டமிட்டுக்கொண் டிருந்தபோது, கிருஷ்ணையருடைய பேச்சு என்னை எதிர்த்து வந்தது.

''என்ன ஸார், புத்தகத்தைப் பார்த்திருப்பீர்களே? 'பிராணுயாம'த்தைப் பற்றிய இடத்தை 'மார்க்' பண்ணியிருக்கிறேன் பார்த்தீர்களா? முன்பொரு நாள் உங்களிடம் நான் சொன்னது ஞாபகம் இருக்குமே?''

''ஞாபகம் இருக்கிறது'' என்று என்னவோ சொல்லி வைத்தேன் நான்.

''தினசரி எத்தனை ஆயிரக்கணக்கான மூச்சுகள் விடுகிருேம் நாம்! ஒவ்வோர் உள் மூச்சிலும் வெளி மூச்சிலும் எத்தனை ரகமான எண்ணங்கள் பரிணமித்து வீணுகப் போகின்றன! எண்ணங்களுக்கெல்லாம் நம்முடைய மனத்தின் தறிகெட்டு ஓடும் இயல்புதானே காரணம்? இந்தச் சில மூச்சுகளை அடக்கி, தியானத்தில் ஈடுபடுத்தினுல், மனத்தை ஒரு வழிக்குக் கொண்டு வரலாம் அல்லவா? அதனுல்தான் தினசரி பிராணுயாமம் செய்யுங்கள் கொஞ்சமாவது என்று பெரியவர்கள் சொல்லுகிருர்கள். இதைத்தான் புத்தகத்தில் 'மார்க்' பண்ணி வைத்திருக்கிறேன்'' என்ருர் கிருஷ்ணையர்.

சிகந்தராபாத்துக்கும் வடக்கே நூறு மைலில் இருந்த அந்த நைஜாமாபாத்தில் - தமிழர் மருந்துக்கே கிடைக்கும் அபூர்வ மூலிகையாக இருந்த அந்த இடத்தில் - கிருஷ்ணையர் வாய்க்கு ருசியாக இட்டிலியும் தோசையும் காபியுமாக அளித்துத் தம்முடைய வியாபாரத்தை லாபகரமாக நடத்திக் காட்டியதோடு இப்படிப்பட்ட வேதாந்த விசாரணைகளிலும் இறங்கியிருந்தது எனக்கு ஆச்சரியத்தையே தந்தது. என்னைப்போல ஆசாமிகள் கிடைக்கும்போது கிருஷ்ணையர் லேசிலே விட்டு விட மாட்டார்.

அவர் சொன்னதைக் காதில் வாங்கிக் கொண்டும், ஆனுல் அதற்குப் பதில் மொழி தராமலும் நான் என் கடைக்கண்ணுல் என் பின் ஸீட்டையே பார்த்துக்கொண்டிருந்தேன். 'மனத்தை அடக்க வேண்டும்' என்று அவர் சொன்ன அதே சமயத்தில், அதைப்பற்றிக் கூட எண்ணிப் பார்க்காமல் பின்னுல் பார்த்துக்கொண் டிருந்தேன்!

அடுத்த கணம் கிருஷ்ணையரின் குரல் கேலியோடு, ஆனுல் உக்கிரமாகக் கேட்டது; ''என்ன ஸார், வாலிப வயசு என்கிறது சரியாகத்தான் இருக்கிறது! அவள் மேல் வைத்த கண்ணைத் திரும்ப வாங்க மாட்டீர்கள் போலிருக்கிறதே!'' என்று அவர் சொன்னதும் எனக்குச் 'சுரீர்' என்றது.

என்னதான் தமிழ் மொழி அவளுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லாவிட்டாலும், இப்படி அப்பட்டமாகவும் தைரியமாகவும் அவர் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை.

இதற்குள் அவள் காபி சாப்பிட்டு முடித்து விட்டாள். அதாவது இரண்டு 'கப்' காபியைச் சாப்பிட்டு முடித்திருக்கிருள்.

எழுந்திருந்தாள். நேரே 'கல்லா'வுக்கு வந்தாள். தன் கையில் இருந்த 'டம்ப'ப் பையைத் திறந்து கிருஷ்ணையரிடம் சில்லறையைக் கொடுத்தாள். அப்புறம் அவள் போய் விடுபவள்தான். ஆனுல் போகவில்லை. என்னைப்

பார்த்துப் புன்னகை பூத்தாள். எனக்கு அங்க மெல்லாம் புல்லரித்தது. கிருஷ்ணையருக்கும் ஒன்றும் புரியவில்லை.

அவள் மறுபடியும் தன் டம்பப் பையைத் திறந்து இரண்டு சீட்டுகளை எடுத்து என் பக்கம் நீட்டினாள். அடுத்த கணம் சுத்தமான தமிழில் பேசினாள்!

''நாளைக்குச் சர்க்கஸ் பார்க்க உங்கள் இருவரையும் மனப்பூர்வமாக அழைக்கிறேன். தங்களிடம் பிராணுயாமத்தின் மகிமையைப் பற்றி அவர் சொன்னாரே, அதை நாளைக்கு என் முறை வரும்போது நீங்கள் அவசியம் பார்க்கலாம். நான் வருகிறேன். நமஸ்காரம்'' என்று சொல்லிவிட்டு ஹோட்டல் வாசற்படி இறங்கினாள் அவள்.

''அம்மா, அம்மா'' என்றார் கிருஷ்ணையர், அவளுக்கு ஏதோ சமாதானம் சொல்லலாமா, வேண்டாமா என்று.

அவள் நின்று அவர் பக்கம் திரும்பி, ''பயப்படவேண்டாம். வழக்கம் போல் காபி சாப்பிட வருவேன் நான்'' என்று சொல்லிவிட்டு, என்னைப் பார்த்து, ''அவசியம் வாருங்கள். எதிர்பார்த்திருப்பேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

''கிருஷ்ணையர்வாள், என்னை அவள் தவருகப் புரிந்துகொள்ளப் பண்ணிவிட்டீர்களே. இருந்தாலும்..''

''உங்களை ஏன் தவருக அவள் நினைக்கப் போகிருள்? நான்தானே அவளுக்குத் தமிழ் தெரியும் என்று தெரியாமல் பேசிவிட்டேன்? வடக்கே இத்தனை தூரத்தில் நமது பாஷை என்னை ஏமாற்றும் என்று நான் நினைத்தேனு?''

ஏமாற்றமா?

ஊஹூம். இல்லவே இல்லை.

தமிழ் மொழியை அவள் ஒருத்திதான் பேசவேண்டும் என்றல்லவா அவள் குரலில் அது அப்படி இனித்தது? மறுநாள் சாயங்காலப் பொழுது எப்போது வரும் என்று நான் காத்திருந்ததில் ஆச்சரியம் இல்லையே!

2

கிருஷ்ணையரால் புறப்பட முடியவில்லை. சர்க்கஸ் ஆட்ட நாளில் வியாபாரக் கெடுபிடி அதிகம். அவர் தாம் வரவில்லை என்று சொல்லிவிட்டார். நான் மட்டும் புறப்பட்டேன்.

''ஸார், ஜாக்கிரதை! என்னதான் அந்தப் பெண் நம் பக்கத்து மனுஷியாக இருந்தாலும், சர்க்கஸில் சேர்ந்து ஆடுபவள்; நீரும் ஒரு கட்டைப் பிரம்மசாரி. சந்தனக் கட்டையிலிருந்து மணம் வருவது சகஜம்; ஆனால் அதில் நெருப்பைப் பற்ற முனைவது வேறு விஷயம்'' என்று நான் புறப்படப் போகுமுன்பு கிருஷ்ணையர் சொன்னதை நான் பொருட்படுத்தவில்லை.

உண்மைதான். அந்தப் பெண்மணியின் மேனி சந்தன வண்ணந்தான்; கோவாப் பிரதேசத்து நாகரிகமான கொங்கணி மாதின் வதன சௌந்தரியம் அவளுக்கு இருந்தது; சர்க்கஸ் விளையாட்டுகளில் ஈடுபட்டு, தினசரிப் பயிற்சிகள் செய்து வந்ததனுல் அவள் உடம்பு நேர்த்தியான வடிவமும் பெற்றிருந்தது.

இப்போது, சர்க்கஸ் கூடாரத்தை நோக்கி நான் நடந்துகொண்டிருந்த போது, அவள் எந்தச் சந்தர்ப்பத்தில் முந்தின நாள் எங்கள் பேச்சில் குறுக்கிட்டு, அந்த இலவச டிக்கட்டுகளையும் அளித்து ஆட்டத்துக்கு வரச் சொன்னாள் என்பது என் நினைவுக்கு வந்தது.

கிருஷ்ணையர் பிராணுயாமத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான்,

தமிழகப் பாணியில் உடை உடுத்து வரவேற்றாள்.

விளக்கை அவித்தல்

விளக்கை அவிப்பது தீய சகுனம். உண்ணும்போது விளக்கை அவித்தால் உண்ணாமல் எழுந்துவிடுவது பழம் பெரியோர் வழக்கம். சங்கராசாரியார் சரித்திரத்தில் இந்த வழக்கத்தைக் காண்கிறோம். சங்கராசாரியார் இளம்பிள்ளையாக இருந்தபோது அவர் குளத்துக்குச் சென்றார். அப்போது இராக் காலம். அவர் காலை ஒரு முதலை பிடித்துக் கொண்டது. அப்போது, ''என் தாயாரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்'' என்று சத்தியம் செய்து கொடுத்துவிட்டுச் சங்கரர் அன்னையிடம் வந்து எல்லாவற்றையும் சொன்னார். அவள் மிக்க வருத்தம் அடைந்தாலும், வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. சங்கரர் குளத்துக்கு மீளும்போது அவர் அன்னை அவர் பின்பு ஒரு விளக்கை மரக்காலுக்குள் மறைத்துக்கொண்டு வந்தாள்.

சங்கரர் குளத்தை அணுகி முதலையைப் பார்த்து, ''இனி என்னை உன் விருப்பப்படியே செய்யலாம்'' என்றார். முதலை அவரை உண்ணத் தொடங்கும்போது பின்னால் நின்ற அன்னை திடீரென்று மூடியிருந்த விளக்கை வெளியே காட்டி உடனே அவித்துவிட்டாள். முதலை, ''ஐயோ! தீய சகுனம் நேர்ந்துவிட்டது. உண்ணும்போது விளக்கு அவிந்தால் அந்த உணவை உண்ணக் கூடாது. நான் உன்னை உண்ணாமல் விட்டுவிடுகிறேன். நீ போ'' என்று சொல்லித் திரும்பிவிட்டதாம்.

'இவள் மனத்தை அடக்கி, தியானத்தில் ஈடுபட்டு, பிராணாயாம சக்தியால் எந்தக் காரியத்தைச் சாதிக்கப் போகிறாள் சர்க்கஸில்?' என்று எண்ணமிட்டேன். சர்க்கஸ் கலை என்றால், தினசரி மாறுதல் இல்லாமல் செய்யப்படுவதால், அந்தக் கலை யந்திர கதியாகிவிடுகிறது. அந்த யந்திர கதியில் வெறும் வயிற்றுப் பிழைப்புக்கான உணர்ச்சியுள்ள துணிச்சல்தான் காணப்படுமே அல்லாமல், புலனைக் கடந்த மனத்தின் சக்திக்கு அங்கே இடம் ஏது என்று எண்ணினேன் நான். 'இவள் தமிழ் நாட்டுப் பெண்மணி; அறிவிலும் திறத்திலும் இயல்பாகவே மிகவும் கெட்டிக்காரியாகத்தான் இருப்பாள். இவள் சொல்லுவதில் உண்மை இருக்கும்' என்று நிச்சயித்துக் கொண்டு சர்க்கஸ் கூடாரத்தை அடைந்தேன்.

எனக்கு அவள் அளித்திருந்த இலவச டிக்கட்டுச் சாதாரணமானது அல்ல என்று அறிந்தேன். என்னை ஓர் ஆள் சர்வ மரியாதையுடன், ஆட்ட அரங்கத்தின் நடு வட்டத்தை ஒட்டியிருந்த சோபாக்களில் ஒன்றில் உட்கார வைத்து விட்டுப் போனான்.

ஒவ்வோர் ஆட்டமாக நடந்துகொண்டிருந்தது. கரணங்களுக்கு மேல் கரணங்கள் போட்டு எல்லாரையும் பிரமிக்க வைத்தார்கள் அவர்கள். கரடியொன்று அரங்கத்தின் நடுவில் சைக்கிள் ஓட்டிக்கொண்டு போனது கூட்டத்தினிடை பெரிய கரகோஷத்தை எழுப்பியது. அன்றைக்கு நைஜாமாபாத்தில் சந்தைத் தினமாதலால், சந்தைக்கு வந்திருந்த மக்களில் அநேகர், பக்கத்து ஸினிமாக் கொட்டகையில் மத்தியான்ன ஆட்ட 'ஹரிச்சந்திரா' கதையைப் பார்த்து மெய்சிலிர்த்துக் கண்ணீர் உகுத்துக் கதறிவிட்டு, நேரே சாயங்காலச் சர்க்கஸ் 'ஷோ'வுக்கு வந்து கைதட்டிச் சிரித்து ரஸித்துக்கொண்டிருந்தார்கள். இது என்ன மனமோ, எனக்குப் புரியவில்லை. மனத்தின் இந்தப் பச்சோந்தித்தனத்துக்குப் பிராணாயாமம் அவசியம் என்று கிருஷ்ணையர் சொன்னது மெய்யான வார்த்தை என்று எனக்கு அப்போது தோன்றியது. ஆனால் அதை இவள் தான் செய்தே காட்டுவதாக அல்லவா சொல்லுகிறாள்?

வித வித வண்ணங்களில் அநேகம் பட்டுப்பூச்சிகளும் மின்மினிகளும் வந்ததைப் போல, பல பெண்கள் அரங்கத்துக்கு வந்து வித்தைகளைக் காட்டிவிட்டுப் போனார்கள்.

ஆகிவிட்டது. அவள் அரங்கத்துக்கு வந்து நின்றாள். அவளுடைய அழகு அந்த உடையில் இன்னும் தெளிவாக விகசித்தது. பச்சை வர்ண வெல்வெட் உடையை அணிந்திருந்தாள்; நடு நடுவில் அங்கங்கே ஒடிய ஜரிகைகள் கூடாரத்துத் தேஜோமயமான விளக்குகளில் ஜொலித்தன. சந்தனக் கலர் முகத்துக்குச் சிறிது பவுடரையும் சேர்த்திருந்ததனால் அழகுக்கு அழகு செய்ததைப் போலவே இருந்தது. முழங்காலுக்குக் கீழே, வெளேரென்ற 'ஸாக்ஸ்' அவளுடைய கால்களுக்கும், வர்ண பூட்ஸ் அணிந்திருந்த பாதங்களுக்கும் அழகெல்லை இட்டது.

மற்றச் சிப்பந்திகள் அரங்கத்தின் ஓர் ஓரத்தில் ஒரு பெரிய பலகையை ஸ்டாண்டில் கொண்டு வந்து மாட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்த வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, அவள் அந்த வட்ட அரங்கில் என் பக்கத்து மூலைக்கு வந்து, ''நமஸ்காரம். உங்கள் சிநேகிதர் வரவில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லை. ஹோட்டல் தொழிலில் ஒழிவு ஏது?'' என்றேன் நான்.

''பிராணாயாமம் செய்யவாவது அவருக்கு நேரம் கிடைக்குமா?'' என்று சொல்லிச் சிரித்தாள் அவள். அவள் சொன்னதில் இருந்த கேலி எனக்குப் புரிந்தது; மனத்தையும் தைத்தது.

''சரி. இந்த ஆட்டத்தைத் தயவு செய்து உன்னிப்பாகக் கவனியுங்கள். இன்னொன்று: சர்க்கஸ் ஆட்டம் முடிந்தபிறகு உடனே தங்கள் வீட்டுக்குப் போய்விட வேண்டாம். என் அறைக்கு வருகிறீர்களா? கொஞ்சம பேசிவிட்டுப் போகலாம். மறந்துவிடாதீர்கள். என் பெயர் மிஸ் நிருபா. அப்படியே கேளுங்கள். ஆனால் இயற் பெயர் காமாட்சி என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.'' - அவள்



கிருஷ்ணையர் கண்களில் நீர் பொங்க......

அந்தப் பலகையை நோக்கிப் போய் அதில் சாய்ந்து நின்றுகொண்டாள்.

வாத்தியங்கள் மெல்லொலியில் முழங்கி, நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சியின் பயங்கரத்தை அதிகப்படுத்திக்கொண்டிருந்தன.

அவளைச் சுற்றிப் பலகையில் கத்திகளை வீசிக்கொண்டிருந்தார் அவர். ஒவ்வொரு கத்தி வீசப்படும் போதும், என் உள்ளம் அஞ்சி நடுங்கியது கொஞ்ச நஞ்சம் அல்ல. பலகையில் கொஞ்சமாவது அஞ்சாமல், கல்லாய் நின்றுகொண்டிருந்த அவளுக்கு எப்படித்தான் அந்தத் தைரியம் வந்ததோ?

அதற்கு அடுத்தபடியாக நடக்க இருந்த காரியம் என் உயிரையே அள்ளிக்கொண்டு போய்விடும் போல இருந்தது. கத்திகளின் நுனிகளில் இருந்த சிறு சிறு பந்தங்களில் அக்கினி வைத்தார்கள். சிறு அனற் கொழுந்துகள் துல்லியமான சிவப்புடன் எரிந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் பலகையில் அவளை நோக்கிச் சுற்றியும் வீசியவரின் கண்களை வேறு கட்டிவிட்டார்கள்.

டக்—

டக்—

டக்—

எல்லாக் கத்திகளையும் வெற்றியோடு அவளைச் சுற்றியும் பலகையில் அடைத்துவிட்டு, அவளையும் அழைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டார் அந்த ஆட்டத்தைக் காண்பித்தவர். பலகையில் தீயோடு எரிந்துகொண்டிருந்த கத்திகளை ஒவ்வொன்றாக எடுத்துத் தீயை அணைத்தார்கள் சிப்பந்திகள். கரகோஷமோ கூடாரத்தை அசைய வைத்துக்கொண்டிருந்தது.

என் கண்கள் நன்றாகப் பார்த்துக்கொண்டிருந்தன. பலகையின்மேல் விளிம்புக்குப் பக்கத்தில், முதல் கத்தியாக வீசப்பட்டதைச் சிப்பந்தி ஒருவன் எடுத்த போது, அது கீழே தரையில் விழுந்தது.

அது மட்டும் கத்தி அல்ல.

ஒரு சிறு கூரான வேல்! செங்கோட்டு வெற்பனை திருமுருகன் தன் திருக்கையில் தாங்கக்கூடிய வேலின் சிறு வடிவம் அது.

கூடாரத்து மற்ற மனிதர்கள் மற்றுமொரு வேடிக்கைக்காக வெகு ஆவலாகக் காத்துக்கொண்டிருந்த போது, என் கண்களுக்குப் பட்டது இந்தச் சிறிய விஷயந்தான். ஆனால் சர்க்கஸ் ஆட்டம் முடிகிறவரை எனக்கு இதே மனசில் இருந்ததால், இதுவே பெரிய விஷயமாகவும் தெரிந்தது.

3

மிஸ் நிருபாவின் சிறிய கூடாரத்து அறைக்குள் நுழைந்து, ''காமாட்சி அம்மாள் இருக்கிறார்களா?'' என்று நான் கேட்டபோது, என் எதிரே, நான் எதிர்பார்த்தபடி தமிழகத்துப் பாணியில் புடைவை கட்டிக்கொண்டு சிரித்துக்கொண்டு நின்றிருந்த அவள் என்னை வரவேற்றாள்.

அறையில் எனக்கு நேர் எதிரே முருகப் பெருமானின் தகப்பன் சுவாமித் திருக்கோலம் இருந்தது. திரும்பிப் பார்த்தேன். வண்ண மயிலில் ஆறுமுகப் பெருமானின் திவ்யக் கோலம். இரண்டு படங்களுக்கும் எதிரே சாம்பிராணித் தூபமும் ஊதுவத்திகளும் புகை மண்ட இருந்தன. அங்கே இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தேன் நான். அவள் எதிரே உட்கார்ந்தாள்.

''ஆட்டத்தைப் பார்த்தீர்கள் அல்லவா?''

''பார்த்தேன். முருகனின் சிறிய வடிவேலையும் பார்த்தேன்.''

''நீங்கள் கெட்டிக்காரர். நன்றாகக் கவனித்திருக்கிறீர்கள். அதனால் என் விளக்கம் எளிதாகவே முடியும் என்று எண்ணுகிறேன்.''

''சொல்லுங்கள்.''

''பலகையின் மேல் நான் சாய்ந்துகொண்டிருந்த போது பிராணயாமத்தில் ஈடுபட்டிருந்

தேன்; அதாவது என் மூச்சை அடக்கி நின்று கொண்டிருந்தேன்; என் தியானத்தில் செந்தில் வேலவனுடைய எண்ணத்தின் ஒரே சக்தி தான் இருந்தது. அந்தச் சக்திதான் கத்திகளை யெல்லாம் புறம் புறமாக அடித்துக்கொண் டிருந்தது என்று சொல்வேன்.''

''குறி பார்த்து எறிந்தவரின் பழக்கத்தைத் தானே ஜனங்கள் மெச்சுகிறார்கள்?''

''உண்மை. யானைக்கும் அடி சறுக்கும். அவர் வெகு நிபுணர்தாம். ஒரு நாளும், ஒரு போதும் குறி தவறமாட்டார். ஆனால் என் நிலைமையை நானும் உணர்ந்து ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும் அல்லவா? தங்களுக்குப் பாம்பன் ஸ்ரீமத் குமர குருபர சுவாமிகளின் ஷண்முக கவசம் மனனமாகியிருக்கலாம்.''

''ஆமாம்.''

''அதில்,

'அண்டமாய் அவனி யாகி அறியொணாப்
பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு
தெய்வ மாகி
எண்டிசை போற்ற நின்ற என்னருள் ஈச னான
திண்டிறற் சரவ ணத்தான் தினமும்என்
சிரசைக் காக்க'

என்று 'சிரசைக் காக்க' என முதற் பாட்டில் வரும் சொல்லோடு தியானத்தில் அமர்ந்துவிடு வேன். நாளது வரை எனக்கு ஓர் அடியும் பட்டதில்லை. இதனாலே முதல் கத்தியை முருகனின் வடிவேல் ரூபத்தில் பண்ணச் செய்து என் சிரசுக்கு மேல் எய்யச் சொல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன் நான்'' என் றாள் அவள்.

அவளுடைய சொற்களில் இருந்த எல்லையற்ற அறிவின் வேகம் என்னைப் பிரமிக்க வைத்துப் பேசுவதறியாது என்னைத் திக்கு முக்காட வைத் திருந்த சமயத்தில், தொடர்ந்து காமாட்சி தான் பேசினாள்.

''எல்லாருக்கும் பிராணன் என்றால் பிரியந் தானே? என் பிராணனைக் காக்க நான் அந்த மாதிரியான பிராணாயாமத்தில், பலகையில் சாய்ந்திருக்கும்போது ஈடுபட்டிருப்பதில் ஆச் சரியம் இல்லையே!''

''உங்களுடைய கட்சியை நான் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். எனக்கு ஒரே ஒரு வருத் தம். அதற்காக என் நண்பருடைய சார்பில் உங்களுடைய மன்னிப்பைக் கோருகிறேன். முந்தாநாள் அவர் ஹோட்டலில் கொஞ்சம் முறை இழந்து பேசிவிட்டார்'' என்று இழுத் தேன் நான்.

''அதற்கு என்ன, பரவாயில்லை. முருகப் பெருமான் எங்களுக்குக் குல தெய்வமாக இருக்கிறவரையில் நான் எனக்குப் பெரியவர் களுடைய குறைகளை அவ்வளவாகப் பாராட்டு வதில்லை. என்னிடம் குறைகள் இருப்ப தில்லையா? முருகப் பெருமானையே எடுத்துக் கொள்ளுங்கள். வடிவேலன், தகப்பன் சுவாமி யாகித் தன் தந்தைக்கே உபதேசிக்க வில்லையா?''

அவளுடைய அறிவின் திறத்துக்கு முன்னாலே, நான் ஏதோ திருண மாத்திரம் என்பதாக என் மனத்துக்குள் ஓர் உணர்வு தோன்றியது. எனக்கு அப்போது எதிரே தெரிந்த அவள் அழகு, முந்தாநாள் ஹோட்ட லிலேயோ அல்லது சற்று நோத்துக்கு முன்னால் சர்க்கஸ் அரங்கத்திலோ பார்த்ததைப் போலத் தெரியவில்லை; அந்த அழகின் சுத்தத்தில், ஸ்புடம் போட்டு எடுத்த சத்திய மான தங்கத்தின் கதிர்களே வீசின.

அவளை நிமிர்ந்து பார்க்க நான் கூசிக்கொண் டிருந்த போது, ''நீங்கள் என்னை ஒன்றும் கேட்காமல் இருந்து விட்டீர்களே. இந்தச் சர்க்கஸில் என் தகப்பனார் வந்து சேர்ந்த போது, தாயற்ற சிறு குழந்தையாகிய என்னை யும் சேர்த்தே இங்கே கொணர்ந்தார். எங் களைச் சுற்றியும் இருந்த விசித்திரமான உலகத் தின் நடுவில், என் தந்தை எனக்குத் தமிழை நன்றாகப் போதித்து வந்தார். அவர் நோயுற்று மறைந்தபோது, 'என்றைக்காவது ஒரு நாள், உன் மனமறிந்து, நீ மனம் விரும்பும் மணாளன் வந்தால் அவனை மணந்துகொண்டு இந்தச் சர்க்கஸ் உலகத்துக்கு அப்பால் இருந்து வாழ வேண்டும். அப்போதுதான் என் ஆத்மா சாந்தி பெறும்' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அதனால்தான் இந்தப் பிராணா யாமமும் பிராணப் பாதுகாப்பும்'' என்றாள் அவள். அவள் விழிகளில் நீர் திரையிட்டது.

நான் உணர்ச்சி வசத்தில் ஈடுபட்டு, ''நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்றேன்.

அவள் என்னை ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''உங்களுக்குச் சம்மதமானால் என்னை மணந்து, இதுவரை நிஜ வாழ்க்கையில் அலை பாய்ந்து வந்திருக்கும் என்னைச் சரி செய்ய. . . .''—அதற்கு மேல் என்னால் பேச முடிய வில்லை. தொண்டை அடைத்துவிட்டது, அவ ளுடைய அழகின் ஜ்வாலை என்னை அணைய வரும் போது, அதை என்னால் தாங்க முடியுமா என்ற பயத்தில்.

என் மனத்தைக் குளிர்விக்கும் ஒரு புன்னகை செய்து அவள், ''ஏது, என்னையே தங்களுக்குத் தகப்பன் சுவாமியாக இருக்கச் சொல்லுவீர் கள் போலிருக்கிறதே!'' என்றாள்.

4

எங்கள் திருமணம், தமிழ் நாட்டில், சுவாமிமலையில், முருகன் சந்நிதானத்தில் நடந் தது. வடக்கே நைஜாமாபாத்தில் தம் முடைய ஹோட்டலை ஒரு வார காலத்துக்கு மூடிவிட்டு, கிருஷ்ணையர் சுவாமிமலைக்கு வந் திருந்து, கல்யாண காரியங்கள் முழுவதையும் கவனித்து எங்களை ஆசீர்வதித்தார்.

எல்லாம் முடிந்த பிறகு கிருஷ்ணையர் முன் னால் நைஜாமாபாத்துக்குப் புறப்பட்டபோது ரெயிலடிக்கு அவரை வழியனுப்பப் போயிருந் தேன்.

கிருஷ்ணையர் கண்களில் நீர் பொங்க, ''வரு கிறேன், ஸார்! சீக்கிரம் தம்பதி சகிதமாக நைஜாமாபாத்துக்கு வந்து சேருங்கள். எனக்கு ஒரே ஒரு வருத்தம், ஸார். அன்றைக்கு ஹோட் டலில் அப்படிப் பேசிய வேதனை என் மனசை விட்டு அகலவில்லை. அழகைப் பார்க்கும் போது மனிதர்கள் எல்லாரும் இப்படி நிலை தவறிப் பேசிவிடுகிறார்கள் முதலில்; ஆனால் அது சத்தியமான அழகு என்று தெரிந்தவுடன் மிகவும் வேதனைப்படுகிறார்கள்'' என்றார்.

''அந்த வேதனைதான் நிரந்தரமானது; சத் தியமானது. கிருஷ்ணையரே, இதற்காக வருத் தப்பட வேண்டாம்'' என்று நான் சொன்ன போது கிருஷ்ணையர் நீர் சொரிந்த கண்களை மூடிக்கொண்டார். ★

கவர்ச்சியுடன்
களிப்பை
அளிக்கும்

ஜஸ்மின்

ரேயான் ஸில்க் துணிகள்

ஜஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், பம்பாய்-2.

JM. 56-4 A

தனது கவுனே வெண்மையென அவள் நினைத்திருந்தாள் —

ஆனால், ரின்ஸோவினால் சலவை செய்த மீனாவின் கவுனைப் பார்த்ததும் பிரமித்தாள்!

உண்மை! ரின்ஸோ அதிவெண்மையாக வெளுக்கிறது

அற்புத சோப் பவுடராகிய ரின்ஸோ, சலவை தினத்தன்று மேலும் ஒரு ஜோடிக் கரங்கள் பெறுவதற்கு சமானம்! ரின்ஸோவினால் சலவை செய்யுங்கள், நீங்கள் ஒருபோதும் பார்த்திராத வகையில் உங்களுடைய வெண்மை ஆடைகள் கண்ணைப் பறிக்கும் வெண்மையாக ஆகிவிடும்! வர்ணத் துணிகளும் அதிகப் பிரகாசமடையும்! அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டியதில்லை. ரின்ஸோவின் பிரமிக்கத்தக்க விறுவிறுப்பு வாய்ந்த நுரை எல்லா அழுக்குகளையும் கழுவிக் களைந்துவிடும்—நீங்கள் கனவிலும் நினைத்திராத அழுக்குகளையும் போக்கிவிடும்! கண்ணைப் பறிக்கும் அத்தகைய அதிகப்படி வெண்மைக்கு நீங்கள் சேர்க்க வேண்டியது வேறொன்றுமில்லை. குடும்பத்தின் சகல சலவைகளுக்கும்—சட்டைகள், விரிப்புக்கள், சவுக்கங்கள், கால்சட்டைகள்—எல்லாவற்றிற்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்!

... சலவை செய்ய மிகவும் சுலபமானது

இந்த அற்புத சோப் பவுடர்

R. 7-X52 TM

திரிபுராந்தகர்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

சிரித்துப் புரமெரித்த சேவக
னுடைய சிற்பங்களைப்
பற்றிய செய்திகள்.

தண்டகாரண்யத்திலே தங்கியிருக்கிறான் ராமன், தந்தையின் வாக்கைப் பரிபாலிக்க. அவனுடன் இருக்கிறார்கள், தம்பி லக்ஷ்மணனும் மனைவி சீதையும். அங்கு வருகிறாள், 'காமவல்லியாம் கன்னி' என்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டு, சூர்ப்பனகை. ராமனுடைய சௌந்தரியத்தில் ஈடுபட்டு அவனையே காதலனாக அடைய அவள் விரும்புகிறாள்; ராமனைத் தனியே கண்டு தன் காதலை வெளியிடுகிறாள்; அவன் ஏற்க மறுக்கிறான்; அதனால் கோபமுற்றுச் சீதையையே எடுத்துச் செல்ல முனைகிறாள். இடை புகுந்து இலங்கு வாளால் முன்னை மூக்கு அரிந்துவிடுகிறான் லக்ஷ்மணன். அவ்வளவு தான்; கதறிக்கொண்டு ஓடி, கரதூஷணர்களையே கொண்டு வருகிறாள் ராமனுடன் போர் நடத்த. திரிசிரர் தலைமை தாங்கி நடத்திய போரில் அரக்கர்களுக்குத்தான் தோல்வி. அரக்க வீரர்கள் ஓட ஆரம்பித்து விடுகிறார்கள் புறங்காட்டி. இப்படி ஓடுபவர்களைத் தடுத்து நிறுத்தி, அவர்களை யெல்லாம் திரும்பவும் போர்க்களத்துக்குத் திருப்புகிறான் தூஷணன். ஒரு நல்ல ரணரங்கப் பிரசங்கமே செய்கிறான்.

''வெம்புகாட்டிடை நுழைதொறும்
வெரிநுறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோ? தட
மார்பிடைக் குளித்த,
அம்பு காட்டுதிரோ? குல மங்கையர்க்கு''

என்று கேட்கிறான் அவர்களைப் பார்த்து. மேலும் அரக்கர் குலத்துக்கு வந்த பழி,

''தாக்கரும்புயத்து, உம் குலத்துத்
தலைமகன் தங்கை
மூக்கொடு அன்றியும் முதுகொடும்
போம்படி முயன்றீரோ?''

என்று திரும்பவும் கேட்கிறான் வீரர்களைப் பார்த்து. அவ்வளவுதான், வீரர்கள் மானத்தோடு போர் வெறி கொண்டவர்களாய்த் திரும்பவும் போர்க்களத்திற்குள்ளேயே பாய்கிறார்கள். ஆம், 'வாபஸ்' வாங்கியவர்களைத் திரும்பவும் போருக்குத் திருப்பத் தூஷணன் தன் சொல்வன்மையையே உபயோகித்து வெற்றி கண்டிருக்கிறான்.

இது இதிகாச காலத்தில் நடந்த போர். இதைக் கவிச் சக்கரவர்த்தி கம்பன் அற்புதமாகப் பாடியிருக்கிறான்.



கோனேரி ராஜபுரம்

திருப்புகலூர்

தற்காலம் நடக்கும் போரைப் பற்றியெல்லாம் நமக்குத் தெரியும். அதிலும் சென்ற மகா யுத்தத்தில் தளபதிகள் கையாண்ட யுத்த தந்திரங்களும் நமக்குத் தெரியும். யுத்தத்திற்கு நீண்ட காலமாகவே தயார் செய்து கொண்டிருந்தான் ஹிட்லர் ஜெர்மனியில். ஆனால் இந்த ஆங்கிலேயர் ஏமாந்து விட்டார்கள் முதலில். அவர்கள் யுத்தத்திற்குத் தயாராவதற்கு முன்னாலேயே, யுத்தம் அவர்களை முந்திக்கொண்டது. ஆரம்ப காலத்தில் சமாளிப்பதே கஷ்டமாக இருந்தது அவர்களுக்கு. பிரான்ஸ் தேசத்துக் கடற்கரையிலே அவர்கள் வைத்திருந்த யுத்தக் கப்பல்கள் என்னவோ மிகமிகக் கொஞ்சந்தான். வெற்றிக்கு மேல் வெற்றியாக முன்னேறி வரும் ஜெர்மானியரை இந்தப் படைப் பலத்தை வைத்துக்கொண்டு எதிர்த்து நிற்பது என்பது அசாத்தியமானது என்றே பட்டது. என்றாலும் எதிர்த்து வரும் வீரர்களுக்குப் போக்குக் காட்டி, யாதொரு சேதமும் இல்லாமல் இருக்கிற படையைத் திரும்ப நாட்டுக்குக் கொண்டு வந்துவிட்டார் தளபதி. போரும் திசை திரும்பிவிட்டது. தப்பினார்கள் ஆங்கிலேயர்கள்.

இந்த வெற்றிகரமான வாபஸ் நடந்தது, டன்கர்க்கில். இப்போது 'டன்கர்க் பண்ணுகிறான்' என்றாலே வெற்றிகரமாக வாபஸ் பெறுகிறான் என்றுதான் அர்த்தம். போர்க்களத்திலிருந்து வாபஸ் பெற்றே வெற்றி கண்டவர் ஆங்கிலேயர். அவர்கள் தோல்வியையே வெற்றியாக மாற்றும் ஆற்றல் பெற்றவர்கள்.

இது சரித்திர காலத்தில் நம் கண்முன் நடந்த போர். இதைப்பற்றி இன்று எத்தனை எத்தனையோ பக்கங்களில், எவ்வளவு எவ்வளவோ பெரிய புத்தகங்கள். இப்படி இதிகாச காலத்திலும் சரித்திர காலத்திலும் போருக்கு ஆயத்தமே இல்லாதவர்கள் போரில் வெற்றி கண்டிருக்கிறார்கள், போர்க்களத்திலிருந்து வாபஸ் பெற்று. ஆனால் அந்த அநாதி காலத்திலே போருக்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களும் தயார் செய்து, போர்க்களம் நோக்கிப் புறப்பட்ட பின்னும் போர் நடத்தாமலே வெற்றி கண்டிருக்கிறார் ஒரு வீரர்.

கதை இதுதான்: பொன், வெள்ளி, இரும்பு என்னும் மூன்று உலோகங்களினாலும் மூன்று பறக்கும் கோட்டைகளைச் சமைத்துக்கொண்டிருக்கிறார்கள் வரபலத்தால், தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள். இவர்கள் எல்லா உலகங்களையும் பயத்துக்கு உள்ளாக்குகிறார்கள். இவர்களுடைய கொடுமை தாங்காமல் தேவர்களும் மனிதர்களும் சிவபிரானிடம் சென்று முறையிடுகிறார்கள். சிவபிரானும் எல்லாருக்கும் அபயம் அளிக்கிறார்; யுத்த சன்னத்தராகிறார்.

மந்தரமலை அச்சாகிறது; சந்திர சூரியர் சக்கரமாகிறார்கள்; பதினான்கு உலகங்களும் பதினான்கு தட்டுகளாகின்றன; அஷ்டகஜங்கள் தூணாக நிற்கின்றன; ஒரு தேர் உருவாகிவிடுகிறது. வேதங்கள் நான்கும் நான்கு குதிரைகளாய்த் தேரை இழுக்க வருகின்றன. பிரம்மா சாரதியாய் அமர்ந்துவிடுகிறார். மேருமலை வில்லாகிறது; வாசுகி நாண் ஆகிறது; விஷ்ணுவே பாணம் ஆகிறார். இப்படித் தேவக் கருவிகளைத் துணையாகக் கொண்டு சமர் செய்யப் புறப்படுகிறான் தேவியுடன் இறைவன். இவ்வளவு பிரமாதமாக யுத்த ஆயத்தம் செய்தபின் என்ன நினைத்தானோ, சிவபெருமான் வெற்றிகரமாக வாபஸ் வாங்கிவிடுகிறான். ஆனால், அப்படி அவன் வாபஸ் ஆவதற்கு முன்னால் ஒரு சிறு காரியம் மாத்திரம் செய்கிறான். சும்மா இருக்காமல் சிரித்து வைக்கிறான். அவ்வளவுதான், வெந்து பொடிசாம்பலாகி விடுகின்றன திரிபுரங்கள் எல்லாம்.

கதைக்கு அடிப்படை தேட நெடுந்தூரம் செல்ல வேண்டாம். காமம், வெகுளி, மயக்கம் என்ற திரிபுரங்களின் ஆட்சியே எங்கும் நடக்கிறது. அதனால் கெட்டு அழிபவர்கள் எத்தனையோ பேர். அத்தனை பேரையும் உய்விக்க இந்தத் திரிபுரங்களைச் சுட்டெரித்துத்தானே ஆக வேண்டும்? அப்படிச் சுட்டெரிப்பது யாரால் எப்படிச் சாத்தியமாகும்? இறைவன் ஒருவனாலேதான் முடியும். உயிர்களைக் கொஞ்சம் ஆடி ஓடி விளையாட விட்டு, பின்னால் புன்னகை காட்டித் திரிபுர தகனம் நடத்தி, தன் பக்கம் சேர்த்துக்கொள்ளும் கனிந்த அருளுடையவன் அல்லவா அவன்? இதுதானே திரிபுர தகனத்தின் உட்கிடை?

இந்தக் கதை கவிஞர்களால் பாடப்பட்டிருக்கிறது; ஓவியர்களால் தீட்டப்பட்டிருக்கிறது; சிற்பிகளால் செதுக்கப்பட்டிருக்கிறது. சித்திரகாரர்களால் தீட்டப்பட்ட சிறந்த ஓவியம் இருப்பது தஞ்சைப் பெரிய கோயிலிலே. இந்தச் சித்திரத்தைக் காண்பது மிக்க சிரமம். பெரிய கோயிலில் பெருவுடையார் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றியிருக்கும் பிராகாரத்தில், வடக்குப் பக்கத்தில், தெற்குச் சுவரில், இது

பிரம்மாண்டமான சித்திரமாக உருவாகியிருக்கிறது. இந்தப் பிராகாரம் இருப்பது இன்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் கையிலே. பெரிய கதவுகளும் பூட்டும் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறார்கள். கலைக்காதல் கொண்டவர்கள் அநுமதி பெற்று வந்தால்தான் கதவைத் திறப்பார்கள்; சித்திரத்தைக் காட்டுவார்கள். மேலும் இந்தச் சித்திரத்தைக் காணப் பெரிய பெரிய மின்சார விளக்குகள் வேண்டும். அவற்றை ஏற்பாடு செய்ய நல்ல அவகாசமும் வேண்டும். இவற்றையெல்லாம் விட, சித்திரத்தில் உள்ள நுணுக்க வேலைகளைக் காண நல்ல கண்ணும் படைத்திருக்க வேண்டும். இத்தனை சிரமம் இருக்கிற காரணத்தால் இப்போது உங்களை அங்கே அழைத்துச் செல்லும் நோக்கம் இல்லை. மேலும் இங்குள்ள சித்திரத்தில் முதல் நிலையைத்தான் தீட்டியிருக்கிறான் ஓவியன். அதாவது போருக்கு ஆயத்தமாகும் நிலையைத்தான். ஆதலால் ஒரே ஆங்காரத்தோடு ஒரு காலை ஊன்றி ஒரு காலைத் தேர்த்தட்டில் வைத்துச் சாய்ந்து நின்று வில்லை வளைத்து நாணை ஏற்றி, உக்கிரமாக விழித்துக்கொண்டிருக்கும் திரிபுராந்தகரே இங்கு உருவாகி இருக்கிறார். இப்படி இருக்கிறவர் பின்னால் சிரித்துத்தான் புரம் எரித்தார் என்று சொன்னால்கூட எவரும் நம்ப மாட்டார்கள்.

சிரித்துப் புரம் எரித்த சேவகனைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்றால் இன்னும் கொஞ்சம் நடந்து தஞ்சைக் கலைக் கூடத்திற்குப் போக வேண்டும். அரண்மனைக் கட்டிடங்களுக்குள்ளே பாழடைந்து கிடந்த சில பிரம்மாண்டமான மண்டபங்களை ஏகப்பட்ட செலவில் செப்பம் செய்திருக்கிறார்கள். அங்கே எண்ணற்ற சிலா விக்கிரகங்களையும் செப்புச் சிலைகளையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அங்கே இருக்கிறான் திரிபுராந்தகன் நல்ல கல்லுருவிலே.

திரிபுர தகனக் கதையை அறிந்திருக்கிறான் சிற்பி. அதன் முற்பகுதியை விடப் பிற்பகுதியையே அநுபவித்திருக்கிறான் இவன். ஆதலால் தேரில்லாமல், சக்கரம் இல்லாமல், சாரதி இல்லாமல், குதிரைகளும் இல்லாமலேயே திரிபுராந்தகனை உருவாக்கி இருக்கிறான். நீண்ட வில்லைக் கையில் தாங்கி நிமிர்ந்த நோக்கோடு புன்னகை புரிகிறான் திரிபுராந்தகன். நீண்ட மணிமகுடம் தலையை அலங்கரிக்க, குழையும் சுருள் தோடும் காதுகளில் ஒளிர, மின்னும் மணியாரங்கள் மார்பில் புரள, கழல் அணிந்த காலோடு கம்பீரமாக நிற்கிறான் திரிபுராந்தகன். கோயில் மாடத்தில் கோஷ்ட விக்கிரகமாக அமைக்க விரும்பிய காரணத்தால் அதை அர்த்த சிற்பமாக உருவாக்கி இருக்கிறான். அதனால்தான் மானையும் மழுவையும் தாங்கிய திருக்கரங்கள் உடலோடு பொருந்தி நிற்க நிர்ப்பயப் பிடி (Safety Shift) அமைக்க வேண்டியிருந்திருக்கிறது. இடைக்குக் கீழே உள்ள பகுதியை முழுவதும் செதுக்கிவிடாமல் ஏதோ இல்லாத விந்நியாசங்கள் எல்லாம் செய்து கால், பகைப்புலம், வில் எல்லாவற்றையும் சேர்த்து உருவாக்கியிருக்கிறான். இவையெல்லாம் சிற்பத்தின் முழு அழகைக் குறைக்கின்றன என்றாலும் நிற்கும் நிலையிலே காம்பீர்யத்தையும் அழகையும் சேர்த்து உருவாக்கி யிருக்கிறான் சிற்பி.

கல்லுருவிலே கண்ட இந்தக் கட்டழகனை நல்ல செப்புச் சிலையாகவும் பார்க்கலாம் சோழ நாட்டுக் கோயில்களிலே. அப்படி அமைந்துள்ள சிலைகளில் ஒன்று இருக்கிறது திருப்புகலூரில். ‘புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே’ என்று பாடிக்கொண்டே இறைவன் திருவடி சேர்ந்தாரே திருநாவுக்கரசர், இந்த அப்பருக்கு முத்தி அளித்த தலந்தான் திருப்புகலூர். மாயூரம் திருவாரூர் ரெயில் பாதையில் நன்னிலம் ஸ்டேஷனில் இறங்கி, கிழக்கே பார்க்க நான்கு மைல் நடந்தால் திருப்புகலூர் சேரலாம். அங்கே கோயில் கொண்டிருக்கும் கோணப்பிரானையும் கருந்தாழ்குழலியையும் கண்டு தொழலாம். அந்தக் கோயிலிலே அன்று திரிபுரம் எரித்த சிவபிரான், இன்று மகா மண்டபத்திலே ஒதுங்கி நின்றுகொண்டிருக்கிறான், உமை அம்மையுடன். சோழ மன்னர்கள் காலத்து உருவான செப்புச் சிலைகளுக்கே உரிய காம்பீர்யம் இந்தத் திருவுருவிலே இருக்கிறது. நீண்டு உயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்கிறது. மானும் மழுவும் ஏந்திய கையனும் வில்லும் அம்பும் ஏந்தி நிற்கும் பாவனை அழகாக அமைந்திருக்கிறது. அம்மையும் அடக்கமாக

தஞ்சைக் கலைக்கூடம்

அருள் பாலிக்கும் திருநோக்குடன் அற்புதமாக அமைந்திருக்கிறாள்.

இதே திருவுருவத்தை இன்னும் அழகான தொரு செப்புச் சிலையாகவே செய்து நிறுத்தியிருக்கிறான் மற்றொரு சிற்பி. அந்தச் சிலை இருப்பது திருநல்லம் என்னும் தலத்தில். சம்பந்தராலும் அப்பராலும் பாடப்பெற்ற இந்தத் தலத்தை இன்று திருநல்லம் என்று அழைப்பாரில்லை. ''நக்கன் நமையாள்வான் நல்ல நகரானே'' என்று பாடினார் சம்பந்தர் அன்று; என்றாலும் இன்று அந்த நகரைக் கோனேரி ராஜபுரம் என்று அழைக்கிறார்கள் மக்கள். தஞ்சை ஜில்லாவிலே எத்தனையோ கோனேரி ராஜபுரங்கள். கோனேரின்மை கொண்டான் என்ற கோமகன் பெயரிலேயே எழுந்த ஊர்கள் அவை. ஆனால் நான் குறிப்பிடும் கோனேரி ராஜபுரம், கும்பகோணம் காரைக்கால் பாதையில் புதூருக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. சிறந்த நடராஜத் திருவுருவத்தைத் தன்னகத்தே கொண்டு உமாமஹேசுவரர் கோயிலையும் தனக்கே உரியதாக்கிக் கொண்டது. மங்கள நாயகியுடன் மணக் கோலத்துடன் இருக்கும் அந்த உமாமஹேசுவரர் கோயிலில் ஒரு சின்ன அறையில் இரும்புக் கிராதிகளுக்கு அப்பால் நின்றுகொண்டிருக்கிறான் திரிபுராந்தகன். மூன்றரை அடி உயரத்தில் வாளிப்பாக இருக்கிறான் அவன். வில்லும் அம்பும் இல்லாமலே, வில்லேந்தி நிற்கும் நிலையைக் காட்டுகிறான். ஒரு காலை அழுத்தமாக ஊன்றி மற்றொரு காலை லேசாக வளைத்து நிற்கிற நிலையிலே தான் எவ்வளவு அழகு! உடல் வளைத்துத் தலை நிமிர்த்திப் புன்னகை தவழ நிற்கிற இந்த நிலையில், காமம் வெகுளி மயக்கம் என்ற திரிபுரங்கள் மட்டுமா வெந்துபொடிசாம்பலாகும்? நான் என்னும் அகந்தையுமே அடியோடு நலிவுற்று அகன்றுபோகுமே!

தஞ்சைக் கலைக் கூடத்தில் நிற்கும் திரிபுராந்தகனுக்குப் பக்கத்தில் அம்மை உமையைக் காணவில்லை. சிற்பி செதுக்க மறந்துவிட்டானோ அல்லது அவன் செதுக்கிய உமையைக் கலைக் கூடத்தார் தேடிப் பிடிக்கவில்லையோ? திருப்புகலூரிலே அன்னை இறைவனின் இடப்பக்கத்திலே அடக்க ஒடுக்கமாக நிற்கிறாள். ஆனால் கோனேரி ராஜபுரத்திலோ தேவி மிடுக்காக வலப்பக்கத்தில் மிக்க ஒயிலோடு நின்றுகொண்டிருக்கிறாள். 'நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவள் என்றால், இச்சிலை கிடக்க மலை ஏழையும் இறானோ?' என்று பாடினான் கம்பன், ராமனையும் சீதையையும் பற்றி. ஆம், உண்மைதான்.

இப்படி அழகு வாய்ந்த மங்கையும் போருக்கு உடன் புறப்படுகிறாள் என்றால் போர் செய்துதானா வெற்றி பெற வேண்டும்? அவளது கடைக்கண் பணியிலே இறைவன் காற்றிலேறி விண்ணை மட்டும் சாடவில்லை; திரிபுர தகனத்தையே முடித்துவிடுகிறான் எளிதாக.

இந்தக் கலைச் செல்வங்களை, நேரில் சென்று காணும் வாய்ப்புப் பெறுகிறவர்கள் பாக்கியசாலிகளே. இல்லை, அந்தப் பாக்கியம் உடனடியாகக் கிட்டுவது சாத்தியம் அல்ல என்றால் இங்குள்ள படங்களைப் பார்த்துத் திருப்தி அடைய வேண்டியதுதான். இந்தத் திருவுருவங்களைப் புகைப்படங்களாகப் பார்த்த பின்னாவது நேரில் காணும் ஆசையை உங்கள் உள்ளத்தில் புகுத்திவிடுவேனானால் நான் வெற்றி பெற்றவனாவேன்; ஆம், திரிபுராந்தகனைப் போல மிக்க முயற்சி ஒன்றும் செய்யாமலேயே. ★



தவம்—உருவமும் உண்மையும். போட்டோ: **ஸ்ரீதர்**

டெலிபோன் மணி

பெ. தூரன்

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்;
மருண்டவள் காதுக்கோ மணியொலி யெல்லாம் பேய் ஒலி!

"ஏண்டா, முன்னாலேயே வந்திருக்கப் படாதா? இந்த நாள் வரையிலும் அங்கே எதற்கு இருக்க வேண்டும்?''

"அட போடா, இதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. சுத்த முட்டாள் தனம்!''

"நீ அப்படி நினைக்கிறாய். ஆனால், சுந்தரி அப்படி நினைக்கவில்லையே! அவளுக்காகத்தானே பார்க்க வேண்டும்?''

"ஆமாம், சோமு. அவள் நிலைமையை உத்தேசம் பண்ணித்தான் இன்றைக்காவது வர இசைந்தேன். இல்லாவிட்டால் இந்த மூட நம்பிக்கைக்கு நான் காது கொடுத்தே இருக்க மாட்டேன்.''

"தாயார் இறந்தது கேட்டை நட்சத்திரத்திலா?''

"அதையெல்லாம் நான் எங்கேயடா பார்த்தேன்? அவள்தான் யாரையோ கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறாள். அதுதான் அவளுக்கு இத்தனை பயம். தாயார் இறந்தபிறகு முதல் தடவையாக மறுபடியும் இன்றைக்கு அதே நட்சத்திரம் வருகிறதாம். அதனாலே இன்று ராத்திரி பன்னிரண்டு மணிக்குத் தாயாருடைய ஆவி எங்கள் வீட்டிலே வந்து உலாவுமாம். எல்லாம் ஒரே குருட்டு நம்பிக்கை'' என்று சொல்லிவிட்டு அவன் நிம்மதி இழந்தவனைப் போல எழுந்து நடமாடிக்கொண்டே சன்னல் அருகே போனான்.

"கமலநாதா, அது குருட்டு நம்பிக்கையோ இல்லையோ, சுந்தரிக்கு இந்தச் சமயத்திலே அநாவசியமான பயமோ அதிர்ச்சியோ ஏற்படக் கூடாது. அதுதான் முக்கியம்.''

"அதை நினைத்துத்தான் என் கொள்கையைக்கூட விட்டுக் கொடுத்துவிட்டு, வீட்டை இழுத்துப் பூட்டிக்கொண்டு வந்திருக்கிறேனே; இன்னும் என்ன செய்ய வேணும்?'' என்று கமலநாதன் சற்றுக் கடுகடுத்த குரலில் பேசினான்.

சோமசுந்தரம் தன் நண்பனுடைய மன நிலையை அறிந்து பேச்சை மாற்ற முயன்றான்.

"ஏண்டா, சினிமாவுக்குப் போகலாமா? இப்போது புறப்பட்டால் இரண்டாவது காட்சிக்கு நேரம் கணக்காக இருக்கும். தமிழ்ப் படம் முடிவதற்கும் மணி இரண்டாகிவிடும்.''

"நான் தயார். ஆனால் சுந்தரி வர மாட்டாளே! இப்போது பார்த்தாயா? இங்கே பேசிக்கொண்டிருக்கக்கூட அவளுக்கு இஷ்டம் இல்லை. அந்த அறையிலே டெலிபோனுக்குப் பக்கத்திலேயே கட்டிலைப் போட்டுக்கொண்டு படுத்திருக்கிறாள்.''

"டெலிபோனுக்குப் பக்கத்திலா?''

"ஆமாம்; இன்னொரு வேடிக்கை தெரியுமா? உன் வீட்டு டெலிபோன் நம்பரைக் கொட்டை கொட்டையாக ஓர் அட்டையிலே எழுதி என் வீட்டு டெலிபோனுக்குப் பக்கத்திலே மாட்டிவிட்டு வந்திருக்கிறாள். அம்மாவுடைய ஆவி வீட்டுக்கு வந்ததும் இவளுக்கு இங்கே டெலிபோன் செய்யுமோ என்னவோ?''

"சரிதாண்டா, உன் கேலியும் நீயும். நீ போய் அவளுக்குத் தைரியம் உண்டாகும்படி ஏதாவது பேச்சுக் கொடு. இந்தச் சமயத்திலே கமலம் இல்லாமற் போய்விட்டாளே! அவள் இருந்திருந்தால் சுந்தரிக்கு இன்னும் தைரியமாக இருக்கும். நீங்கள் வருகிற விஷயம் தெரிந்திருந்தால் அவளை ஊருக்கு அனுப்பாமல் நிறுத்தியிருப்பேன்.''

"சாயங்காலம், ஆபீசிலிருந்து வந்த பிறகுதாண்டா இங்கே வருவதாக முடிவு செய்தேன். அவள் படுகிற அவஸ்தையைப் பார்த்துவிட்டுத்தான் சட்டென்று இந்த எண்ணம் எனக்கு வந்தது. உடனே உனக்கு டெலிபோன் பண்ணினேன்.''

"நல்ல வேளை, கடைசி நேரத்திலாவது உனக்கு நல்ல புத்தி வந்ததே! இல்லாவிட்டால் சுந்தரி இரவெல்லாம் நரக வேதனைப் பட்டிருப்பாள்; சரி, நீ இப்பொழுது போய் அவளைக் கவனி.''

மேலும் பேச்சுக் கொடுக்க விரும்பாதவன் போலச் சோமசுந்தரம் எழுந்தான். கமலநாதனும் தன் மனைவி சுந்தரி படுத்திருந்த அறையை நோக்கி நடந்தான். அது படுக்கைக்காக ஏற்பட்ட அறை அல்ல. இருந்தாலும் டெலிபோன் அந்த அறையில் இருந்தமையின் அங்கேயே படுக்க வேண்டுமென்று சுந்தரி விரும்பியதால் அங்கு இரண்டு கட்டிலைப் போட்டிருந்தார்கள்.

சுந்தரி டெலிபோனுக்கு அருகிலேயே படுத்திருந்தாள். அவள் தூங்கவில்லை; ஆனால் கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். கேட்டை நட்சத்திரத்தில் இறந்தவர்கள் பேயாகச் சில காலம் திரிவார்கள் என்றும், அந்த நட்சத்திரம் மீண்டும் வரும்போது தாம் வசித்திருந்த வீட்டிற்கு வருவார்கள் என்றும் அவள் பல தடவை கேள்விப் பட்டிருக்கிறாள். கிராமத்துச் சூழ்நிலையிலே வாழ்ந்த அவளுக்கு அதிலே ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. சென்னைப் பட்டினத்தில் ஐந்தாறு வருஷங்கள் வசித்த பிறகும் அந்த நம்பிக்கை மாறிவிடவில்லை.

சுந்தரி தன் மாமியாரிடம் நடந்துகொண்ட விதத்தையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். 'அவர்களுடைய மனம் புண்படும்படியாக நான் அப்படி ஒன்றும் நடந்ததில்லை. இருந்தாலும் என்மேல் மாமியாருக்குக் கோபம் இருக்கலாம். யார் கண்டார்கள்? சாவதற்குச் சில நாட்களுக்கு முன்புகூடச் சின்ன விஷயத்திற்காக எரிந்து விழவில்லையா? . . . . ஆனால் அப்படிக் கோபம் இருந்தாலும் நான்தான் இப்பொழுது சிந்தாதிரிப்பேட்டையை விட்டுத் தியாகராயநகர் வந்துவிட்டேனே! . . . . மாமியார் இரவு பன்னிரண்டு மணிக்கு வந்தாலும் சிந்தாதிரிப்பேட்டை வீட்டுக்குத்தானே போவார்கள்? இங்கே எனக்கு என்ன பயம்? . . இருந்தாலும் மாமியார் என்றே யாரும் இருக்கப்படாது . . . . ஆனால் அது எப்படி முடியும்?' என்று இவ்வாறெல்லாம் சிந்தனை அலைகள் அவள் உள்ளத்திலே மோதிக்கொண்டிருந்தன. அவள் படுத்திருந்த அறையிலே மின்சார விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

சுந்தரி கண்களை மூடி இருந்ததால் உறங்குகிறாள் என்று நினைத்து அவள் உறக்கத்தைக் கலைக்கக்கூடாது என்று கமலநாதன் சப்தம் செய்யாமல் தனது கட்டிலில் படுத்தான். இருந்தாலும் சுந்தரி மிகுந்த எச்சரிக்கையோடும் உணர்ச்சி வசப்பட்டும் இருந்ததால், "ம். . யாரது?" என்று கூறிக்கொண்டே திடுக்கிட்டு எழுந்தாள்.

"நான்தான், சுந்தரி. நீ படுத்துத் தூங்கு" என்றான் கமலநாதன்.

சுந்தரி மெதுவாகப் படுக்கையில் சாய்ந்தாள்.

"நாளைக்குக் காலையிலே கந்தகோட்டத்திலே விசேஷமாம். நாம் போகலாமா?" என்று கேட்டான் கமலநாதன்.

"நாளைக்கா?" என்று அடுத்த நாளைப்பற்றி ஏதோ சந்தேகத்தோடு சுந்தரி பதில் கேள்வி கேட்டாள்.

"ஆமாம், காலையிலே எழுந்ததும் குளித்துவிட்டு நேராகக் கந்த கோட்டத்திற்குப் போகலாம். சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு அப்படியே நம் வீட்டுக்குப் போவோம்."

சுந்தரிக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. "அதுதான் நல்லது. அப்படியே செய்வோம். கார் சரியாக இருக்கிறதா? நேற்றுப் புறப்படுகிறபோது தொந்தரவு கொடுத்ததே?"

"அதெல்லாம் சரியாகிவிட்டது. நீ காலையிலே நேரமே எழுந்து தயாராக வேண்டும். அதனாலே இப்பொழுதே தூங்கு. எனக்கும் தூக்கம் வருகிறது."

கமலநாதன் ஏதோ கவலையே இல்லாதவன் போலத்தான் பேசினான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டு படுத்திருந்தான். சுந்தரியைப் பற்றிய கவலை அவன் எண்ணங்களுக்கு அடிப்படையாக நின்றது.

கிராம மக்களின் நம்பிக்கைகளும் எண்ணங்களும் அவனுக்கு வேடிக்கையாக இருந்தன. சுந்தரி சில சமயங்களிலே வெளியிட்ட குருட்டு நம்பிக்கைகளை நினைத்து அவன் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். அவற்றுக்காக அவன் சுந்தரியிடம் கோபமோ வெறுப்போ கொள்ளவில்லை. கேட்டை நட்சத்திரத்தை நினைத்து அவள் மிகுந்த பயம் கொண்டிருந்தாலும், தன்னை வீட்டில் தனியே விட்டுவிட்டுக் கிராமத்திலுள்ள தன் தாய் வீட்டிற்குப் போக அவள் மறுத்ததையும் அதற்குக் காரணமாக இருக்கும் அவளுடைய ஆழ்ந்த அன்பையும் நினைத்து, அவன் மகிழ்ச்சி அடைந்தான். அவள் நினைக்கிறதுபோல் பேயென்று ஒன்று இருக்க முடியுமா? இதெல்லாம் சுத்த மூடக் கொள்கை. இவ்வாறாக அவனுடைய சிந்தனை பல திசைகளில் ஓடிக்கொண்டிருக்கும்போது எப்படியோ தூக்கம் அவனைச் சூழ்ந்துகொண்டது.

அவன் இரண்டு மணி நேரங்கூடத் தூங்கியிருக்க மாட்டான். யாரோ வீரிட்டு அலறுவது போலச் சப்தம் கேட்டு அவன் திடுக்கிட்டு எழுந்தான்.

முதலில் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மங்கிய மின்சார விளக்கொளியில் சுந்தரியின் முகம் பயங்கரமாகக் காட்சி அளித்ததைக் கவனித்தபோதுதான் அவனுக்கு நிலைமை திடீரென்று தெளிவாயிற்று.

சுந்தரி டெலிபோனுக்குப் பக்கத்தில் அமர்ந்து அதில் யாரோ பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலே பயம் தாண்டவமாடியது. கைகள் நடுங்கின. "ஐயோ, நான்தான் மாமி!" என்ற வார்த்தைகள் அவள் நெஞ்சைப் பிளந்துகொண்டு பெருமூச்சோடு வெளிப்பட்டன.

"சுந்தரி, என்ன அது?" என்று கேட்டுக்கொண்டே கமலநாதன் தடாலென்று எழுந்து அவளிடம் பாய்ந்து சென்றான்.

சுந்தரிக்குப் பதில் சொல்ல நா எழவில்லை. அவள் உடம்பெல்லாம் குப்பென்று வேர்த்து ஒழுகிக்கொண்டிருந்தது.

கமலநாதன் டெலிபோன் ரிசீவரை அவள் கையிலிருந்து பிடுங்கித் தன் காதில் வைத்துக் கேட்டான்.

ஆமாம், சிந்தாதிரிப்பேட்டையி லுள்ள அவன் வீட்டிலிருந்துதான் பேச்சுக் குரல் வந்தது. கலவரமான சத்தத்திற்கும் பேச்சுக்குமிடையே, ''யாரடா டெலிபோனை எடுத்தது? பேசாமல் அதை மேலே வையடா!'' என்ற அதிகாரக் குரலும் கேட்டது.

பேயென்பதில் நம்பிக்கை சிறிதும் இல்லாத கமலநாதனைக்கூட இந்தக் குரல் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது. ஆனால் அவன் எப்படியோ சமாளித்துக்கொண்டு சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனை டெலிபோனில் கூப்பிட்டான்.

''நான்தான் கமலநாதன். தியாகராய நகரி லிருந்து பேசுகிறேன். சிந்தாதிரிப்பேட்டை, கணபதி முதலியார் தெருவில் பத்தாம் நம்பர் வீடு என்னுடையது. அங்கே ஏதோ கலவர மாக இருக்கிறது....ஆமாம் ஸார், அங்கே யாரும் இல்லை. இன்றைக்கு மாலையில்தான் பங்களாவைப் பூட்டிவிட்டு வந்தோம். உடனே போலீசை அனுப்புங்கள்..சரி ஸார், நானும் உடனே வருகிறேன்....நமஸ்காரம்! ரொம்ப நன்றி ஸார்'' என்று அவன் வேகமாகப் பேசினான்.

சுந்தரி அப்படியே பிரமை பிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள்.

''சுந்தரி, பயப்படாதே. அதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்று கமலநாதன் தைரியம் சொல் லிக்கொண்டிருக்கும்போதே அவனுடைய பேச்சுக் குரல் கேட்டு, சோமசுந்தரம் தூக்கம் கலைந்து அங்கு வந்து சேர்ந்தான்.

''சோமு, இவளைக் கவனித்துக்கொள். நான் சிந்தாதிரிப்பேட்டைக்குப் போய்விட்டு வரு கிறேன்'' என்று படபடத்த குரலில் பேசினான் கமலநாதன்.

''என்னடா, ஏதுக்கு இத்தனை படபடப்பு? கேட்டை நட்சத்திரம் பார்க்கப் போகிறாயா?'' என்று அலட்சியமாகச் சோமசுந்தரம் கேட்டான்.

''இல்லையடா, என்னவோ விஷயம் இருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்திலே எல்லாம் தெரிந்துபோகும்'' என்று சொல்லிக் கொண்டே கமலநாதன் ஜிப்பாவை எடுத்து மாட்டிக்கொண்டு புறப்படத் தொடங்கினான்.

சுந்தரிக்கு அப்பொழுதுதான் வாய் பேச வந்தது. ''நீங்கள் போகவே கூடாது; நான் விடவே மாட்டேன்'' என்று அவள் கதறினாள். என்ன சமாதானம் கூறியும் கமலநாதன் புறப்படு வதற்கு அவள் சம்மதிக்கவில்லை. கடைசியில் மூவரும் சேர்ந்து புறப்படுவதென்று ஒரு வாறு தீர்மானம் செய்தார்கள்.

சோமசுந்தரம் தன் பங்களாக் கதவுகளை இழுத்துப் பூட்டுவதில் முனைந்தான். கமல நாதன் காரை வாசலில் கொண்டுவந்து நிறுத்தினான்.

பத்து நிமிஷத்தில் அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள். அடுத்த பதினைந்து நிமிஷங்களிலே சிந்தாதிரிப்பேட்டை வந்துவிட்டார்கள்.

கர்ப்பிணியாக இருக்கும் சுந்தரியின் நிலையைக் கூடக் கவனியாமல் அத்தனை வேகமாகக்

சுந்தரி டெலிபோனில் யாரோ பேசுவதைக் கேட்டாள்.

காரை ஓட்டியதற்காகக் கமலநாதனைச் சோமசுந்தரம் மனத்திற்குள்ளே நொந்துகொண்டிருந்தான்.

கணபதி முதலியார் தெருவிலே பத்தாவது வீட்டின் வெளிவாயிலில் நின்றே போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்களை வரவேற்றார்.

''மிஸ்டர் கமலநாதன், உங்கள் சமயோசித புத்தியை நான் பாராட்டுகிறேன். கொஞ்சம் தாமதம் செய்திருந்தால் காரியம் மிஞ்சிப் போயிருக்கும்'' என்று இன்ஸ்பெக்டர் நல்வரவு கூறினார்.

காரில் வந்த மூவருக்கும் விஷயம் உடனே விளங்கவில்லை. அவர்கள் வீட்டுக்குள் கால் எடுத்து வைத்தார்கள். கையில் விலங்கு பூட்டப்பட்டு ஐந்து பேர் அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். போதை வெறி அவர்கள் கண்களிலே இன்னும் மறையவில்லை. ஆறு ஏழு போலீஸ்காரர்கள் அவர்களைக் காவல் புரிந்தார்கள்.

''நீங்கள் வீட்டில் இல்லாத விஷயம் எப்படியோ இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது'' என்று இன்ஸ்பெக்டர் விளக்கம் கூறத் தொடங்கினார்.

அவர் தாம் கைது செய்த ஆட்களுடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன பிறகுதான் கமலநாதனும் சோமசுந்தரமும் கேட்டை நட்சத்திரத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

''அந்த நட்சத்திரம் நல்லதே பண்ணியிருக்கிறது'' என்றான் சோமசுந்தரம்.

''போடா, அதெல்லாம் சுத்த முட்டாள்தனம்! என்னவோ தற்செயலாகத் திருட்டு விஷயம் நமக்குத் தெரிந்துவிட்டது; அவ்வளவுதான்.''

''தற்செயலாகவா? அப்படியானால் எனக்கு இங்கிருந்து யார் டெலிபோன் செய்தது?'' என்று அப்பொழுதுதான் பேசுவதற்குத் தைரியம் கொண்டாள் சுந்தரி.

''நீ கனாக் கண்டிருப்பாய். இங்கிருந்து யார் உன்னைக் கூப்பிட்டிருக்க முடியும்?'' என்று பிடிவாதமாகப் பேசினான் கமலநாதன்.

''கனாவா? இல்லவே இல்லை. நான் தூங்கவே இல்லை. டெலிபோன் மணி கேட்டுத்தான் நான் பேசப் போனேன். மாமி குரல் எனக்கு நன்றாகக் கேட்டது'' என்று சுந்தரி சாதித்தாள்.

''மருண்டவன் கண்ணுக்கு எல்லாம் அப்படித்தான் இருக்கும். எனக்கு என்னவோ அந்தக் குடிகாரப் பயல்கள் பேச்சுத்தான் கேட்டது. கடைசியிலே ஒருத்தன் இன்னொருத்தனைப் பார்த்து டெலிபோன் ரிசீவரை உடனே வைக்கும்படி அதட்டிய போதுதான் எனக்கு விஷயம் விளங்கிற்று.''

''மாமி, டெலிபோனில் முதலில் கூப்பிடாமல் இருந்தால் உங்களுக்கு எப்படி விஷயம் தெரிந்திருக்கும்?''

''சுந்தரி, அவனிடத்திலே விடியுமளவும் பேசினாலும் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். இப்போது கொஞ்ச நேரமாவது நீ நிம்மதியாகத் தூங்கு. நாளைக்கு எல்லாம் பேசிக்கொள்வோம்'' என்று இந்த விவாதத்திற்குச் சோமசுந்தரம் முடிவு கட்டினான். ★



பிளந்த வாய் (போட்டோ: ஸ்ரீதர்)

டால்டா எனக்கு நல்லது!

ஆரோக்கியத்துக்கான விடமின்கள் டால்டா வில் உள்ளன!

நமக்கு எல்லோருக்கும் தேவையான சக்தியைத் தரக்கூடிய புதுக் கொழுப்புகளை டால்டா வனஸ்பதி அளிக்கிறது — அதோடு விடமின் 'ஏ'யையும் 'டி'யையும் கொண்டுள்ளது.

எக்காலத்திலும் தீங்கு விளைவிக்காதது. ஏனென்றால் அது சுத்தமானது!

நீங்கள் உட்கொள்ளும் கொழுப்புகள் தீங்கு விளைவிக்காததாயிருக்க வேண்டும். மாசற்றதாய், நோயையுண்டாக்கும் கிருமிகள் இல்லாததாய் இருக்க வேண்டும். மற்றும் டால்டா வனஸ்பதி சுத்தமான, புத்தம் புது தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்பட்டு, காற்றுப் புகாத, சீல்செய்த டின்களில் அடைக்கப் படுவதால் அது அறவே தீங்கு விளைவிக்காது.

டால்டா பிராண்டு வனஸ்பதியை உபயோகித்துச் சமையுங்கள்

½, 1, 2, 5, 10 பவுண்டு டின்களில் எல்லோரும் வாங்குவதற்கேற்றவாறு விற்கப்படுகிறது.

அது சமையல் செய்வதற்கு சிறந்ததாய் இருப்பதோடு போஷாக்கையும் தரும்

BVM. 363-X52 TM

பட்டினப்பாலைப் பரிசில் மண்டபம்

மு. இராகவையங்கார்

சங்ககாலத்தே வாழ்ந்த புலவர்களுள் உருத்திரங்கண்ணனர் என்பவரும் ஒருவர். உருத்திரன் என்பாருடைய மகனுரான கண்ணனர் என்பது இப்பெயர்த் தொடர்க்குப் பொருள்; சேந்தம்பூதனர், கீரங்கொற்றனர் என்பனவும் இவ்வாறே விரியும். உருத்திரங் கண்ணனரை அந்தணர் குலத்தவராகக் கூறுவர் பேராசிரியர்*. இக்கண்ணனர், சோழன் கரிகாற்பெருவளத்தானைப் பட்டினப்பாலையாலும், தொண்டைமான் இளந்திரையன் என்ற அரசனைப் பெரும்பாணாற்றுப்படையாலும் பெரிதும் சிறப்பித்துப் பாடியவர் என்பது பத்துப் பாட்டால் அறிந்தது. இவையன்றி, பாலைத் திணையில் இவர் இயற்றிய பாடல்கள் அகநானூற்றில் ஒன்றும் (167), குறுந்தொகையுள் ஒன்றும் (352) உள்ளன. இவற்றுள் பட்டினப்பாலையைச் சோழன் கரிகாலன்மேற் பாடி அவனால் பதினறு நூறாயிரம் பொன் பரிசு பெற்றார் இப்புலவர் என்பர்; இதனை,

''தத்து நீர்வராற் குடுமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்''

என்ற சயங்கொண்டார் வாக்கால் (இராச பாரம்பரியம்) அறியலாம். (பதினறு நூறாயிரம் என்பதனைப் பதினறு கோடி என்று மிகைப் படுத்திப் பாடிய பின்னேரும் உண்டு†.)

---

*தொல். மரபியல், 'ஊரும் பேரும்' என்ற சூத்திரவுரை.

† ''பாடியதோர் பாக்கொண்டு பண்டு பதினறு, கோடி பசும்பொன் கொடுத்தோனும்'' என்று சங்கரசோழனுலா ஆசிரியரும், ''பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினறு, கோடிபொன் கொண்டதும்நின் கொற்றமே'' என்று தமிழ் விடு தூதுடையாரும் கூறுதல் காண்க.

இலக்கியமும் சரித்திரமும் இணைந்து காட்டும் ஓர் அரிய செய்தி.

பட்டினப்பாலை என்பதற்கு, காவிரிப்பூம்பட்டினத்தைப் பாலைத்திணை* வகையாற் சிறப்பித்த பாட்டு என்பது பொருள். 301-அடிகள் கொண்ட இப்பாட்டைப் பாடிக் கண்ணனார் பெற்ற பரிசு குறித்த விசேடச் செய்தி ஒன்று சிலையெழுத்தொன்றன் மூலம் இப்போது தெரியவருகின்றது. திருச்சி ஜில்லா திருவெள்ளறை என்ற தலத்தில் வரைந்துள்ள அப்பாடற் சாசனம் பின்வருமாறு:

''வெறியார் தளவச் செயத்தொடை மாறன்
வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டின்
அரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய்
பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு
நின்றனவே.''

இவ்வரிய பாடலுள்†, 'செயமாறன்' என வருவது மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பானையும், 'செம்பியன்' என்றது மூன்றாம் இராசராசனையும் குறிப்பன என்றும், அவ்

† வெறி ஆர் தளவத் தொடை - மணம் பொருந்திய முல்லை மாலை. அரமியம்-அரண்மனை (பிங்.) இப்பாடல், செந்தமிழ்ப் பத்திரிகை 41-ஆம் தொகுதியுள் ராவ்ஸாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களால் குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ளது.

* வேற்று நாட்டிற்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தன் நெஞ்சை நோக்கித் ''தலைவனைப் பிரிந்து வாரேன்' என்று செலவழுங்கிக் கூறியது, இத்திணைவகை என்க.

விருவர்க்கும் நடந்த போர்களிலே பாண்டியனது வெற்றித் திறத்தைப் புகழ்வது இப்பாடல் என்றும் கூறுவர். இதனுல், காவிரி நாட்டில் இருந்த சோழன் மாளிகைகளையெல்லாம் பாண்டியன் தகர்த்து வந்தபோது, அவற்றின் பெரிய பெரிய தூண்கள் யாவும் பிடுங்கிப் பாழ்படுத்தப் பட்டன என்றும், அவற்றுள் சோழன் அரண்மனையுள் இருந்த மண்டபம் ஒன்றின் பதினறு தூண்கள் மட்டும் அழிக்கப்படவில்லை என்றும், அத்தூண்கள் 'கண்ணன்செய் பட்டினப்பாலைக்கு அன்று நெறியால்' விடப்பட்டவை என்றும் கூறப்பட்டிருத்தல் காணலாம். முன்பு கூறியபடி பட்டினப்பாலைக்குப் புலவர் பெற்ற பரிசு பதினறு லட்சம் பொன் என்பதன்றி வேறு செய்தியொன்றும் இதுவரை அறியப்பட்டதில்லை. அதனுல் இச்சாசனப்பாட்டுப் புதிய செய்தி ஒன்றைக் குறிப்பதெனலாம். எனினும் வேறு பழம்புலவர் கூற்றும் இதனை ஆதரிப்பதுண்டாயின், அது பெரிதும் நம்மால் போற்றத்தக்கதன்றோ?

இச்சாசனப்பாடல் கி.பி. 1238-ஐ அடுத்து நிகழ்ந்த சோழபாண்டியர் போர்ச்செய்தியைக் குறிப்பதென்பது, வேறு சாசனப் பிரமாணங்களால் தெளியப்படுகின்றது. இது நிகழ்ந்த ஒரு நூற்றண்டுக்கு முன் வாழ்ந்தவர், கவிச்சக்கரவர்த்தியான கூத்தர் பெருமகன்; இவர், தம்மைப் பெரிதும் அபிமானித்து வந்த இரண்டாங் குலோத்துங்க சோழனைப் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தால் சிறப்பித்துப் பாடியுள்ளார்*. அதனில்,

'' அன்று கவிக்கு வியந்து நயந்து
தரும்பரி சிற்கொருபேர்
ஆழியில் வந்து தராதலம் நின்று
புகாரில் அனைத்துலகும்
சென்று கவிக்கும் அகத்தது தூண்வயி
ரத்தினு முத்தினுமே
செய்ததொர் பொற்றிரு மண்டபம்
நல்கிய செயகுல நாயகமே'' (41).
'' நாவலனே கிடையா* நவமணி மண்டபம்
[நின்
பாவல னேகவரப் பண்டு பணித்தவனே''
(83)

என வரும் இரண்டு செய்யுட்கள் குறிப்பிடத்தக்கன. இவற்ருல் புகார்நகரில் இருந்த மணிமண்டபம் ஒன்று புலவரொருவர் பாடற்கு வியந்தும் நயந்தும் சோழ முன்னேன் ஒருவனல் பரிசளிக்கப்பட்டதென்றும், அது கடலினின்றும் பூமிக்குக் கொணர்ந்து அப்புகாரில் நிறுவப்பட்டதென்றும், மக்களெல்லாம் தங்கும் அகன்ற உள்ளிடத்தையும் வயிரம் முத்துக்களால் இழைக்கப்பட்ட பொற்றூண்களையும் உடையதென்றும் தெரியலாம். இவற்றை நோக்குமிடத்து, முற்கூறிய சாசனப் பாடலிற் கண்ட செய்தியே கூத்தரால், அவர் காலநிலைக்கு ஏற்பப் பெரிதும் வருணிக்கப் படுகின்றது என்பது நன்கு விளங்கும். அதனை விரித்து விளக்குவேன்:

(1) 'காவிரிநாட்டின் அரமியம்' என்று சாசனக்கவி கூறுவது, கூத்தரது வாக்கில் புகார் என்று (காவிரிப்பூம்பட்டினம் என்று) விளக்கப்படுகின்றது. சோணட்டில் பேர்பெற்றிருந்த அரமியம் (அரண்மனை) புகாரில் உள்ளதே என்பது சொல்லாமலே விளங்கும்.

(2) 'பட்டினப்பாலைக்கு அன்று....விடுந்தூண்' என்று சாசனங் கூறுவது, 'அன்று கவிக்கு வியந்து நயந்து தரும் பரிசிற்கு' என அப்புலவர் வாக்கில் குறிக்கப்பட்டது. வியத்தலும் நயத்தலும் புலவர்க்குக் கூறுவதினும் அவரது கவிக்கே ஏற்புடையவாதல் காண்க.

(3) 'நெறியால் விடுந்தூண் பதினறும்' என்று சாசனக்கவி கூறுவது, 'பொற்றிரு மண்டபம்' எனக் கூத்தர் வாக்கில் விளக்கப்பட்டுளது. மண்டபம் நிருமித்தற்குச் சிற்ப

* இந்நூல், தஞ்சை வித்துவான் திரு. உலகநாத பிள்ளையால் 1930-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

* 'வருணிப்பதற்கு ஏற்ற நாவன்மை உலகிற் கிடையாத நவமணி மண்டபம்' என்று பொருள் கொள்ளத் தகும்.

செயற்கையும் (போட்டோ: ஸ்ரீதர்) இயற்கையும்

நூல் முறைப்படி அளந்திட்ட தூண்கள் என்பார், ‘நெறியால் விடுந்தூண்’ என்றார். எனவே, வெறுந் தம்பங்கள் அல்ல அத்தூண்கள் என்பது பெறப்படும்.

(4) ‘திருமண்டபம் நல்கிய செயகுல நாயகமே’ எனக் கூத்தர் பாடுதலால், அம்மண்டபம் அளித்தவன் பெருவீரனான சோழமுன்னோன் என்பது தெரியலாம். பட்டினப் பாலை, கண்ணனார் என்ற பெயர்கள் அக்கூத்தர் வாக்கிற் பயிலாது போயினும், பாடிய கவிஞர்க்கு இப்பெருங்கொடையை உதவியவன், சாசனக்கவி கூறியபடி, பட்டினப் பாலைக்குப் பரிசளித்த சோழனன்றி வேறு எவனும் இல்லை என்பது அறியத்தக்கது.

(5) ‘ஆழியின் வந்து தராதலம் நின்று புகார் நகரில் நிறுவப்பட்டது’ என்ற கூத்தர் கூற்றால் அம்மண்டபம் அந்நிய தேயத்தினின்று மரக்கல மூலம் கடல் வழியே தரைக்குக் கொண்டு வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் நிறுவப் பெற்றது என்பது பெறப்படும்.

(6) அம்மண்டபத் தூண்கள் ‘வயிரத்தினும் முத்தினுமே செய்தது’ எனக் கூத்தர் பாடுதலால் சாசனங்கூறும் தம்பங்கள் பதினாறும் மதிப்பு மிக்க மணிமண்டபம் ஒன்றற்கு உரியன என்பதும் விளக்கமாம்.

(7) ‘நவமணிமண்டபம் நின் பாவலனே கவர’ என்று அடுத்து வரும் கூத்தர் பாட்டால், பரிசில் பெற்ற கண்ணனார் சோழன் வாயிற் புலவருள் ஒருவர் என்பதும், ‘பாவலர் போட்டி’ ஒன்றில் அவர் அம்மண்டபத்தைப் பெற்றவர் என்பதும் புலப்படுவன.

(8) இத்தகைய சித்திர மண்டபங்கள் பல வெளிநாடுகளிலிருந்து புகார் நகர்க்குக் கொண்டுவரப்பட்டோ வேற்றுநாட்டுத் தொழிலாளர்களால் நிருமிக்கப்பட்டோ விளங்கினவாம்; உதாரணமாக:—

“மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்ட
பமும்” (சிலப். 5,10-12)

“வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய*
சித்திர மண்டபத் திருக்க வேந்தன்.”
(ஷை 28, 86-7)

“மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்முடன் கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை
........பசும் பொன்மண்டபம்”
(மணி. 19, 107-110)

முதலியன காண்க. இம்மாளிகைகள் போன்ற தொன்றே மேற்கூறிய பரிசில் மண்டபமாம்.

இவற்றால், பட்டினப்பாலைப் பரிசாகப் பதினாறு நூறாயிரம் பொன்களுடன் பொன்மண்டபம் ஒன்றும் பெற்றவர் உருத்திரங்கண்ணனார் என்பது, சயங்கொண்டார், கூத்தர், சாசனக் கவிஞர் வாக்குக்களால் விளக்கமாகின்றது. ஆனால், பதினாறு லட்சம் பொன் பரிசு பெற்ற செய்தி சயங்கொண்டாரா லன்றி வேறு எவராலும் கூறப்படாமை வியப்பேயாகும். அவர்க்கு அடுத்திருந்த கூத்தருங்கூட, தம் உலா முதலியவற்றில் அச்செய்தி குறிப்பிட்டனர் இல்லை. அவரது பிள்ளைத்தமிழ்க் கவிகளும் சாசனப் பாட்டும் மண்டபப் பரிசிலை மட்டுமே வருணிக்கின்றன. இவற்றிலிருந்து, பட்டினப் பாலைக்குப் பரிசிலாக அமைந்தது புகார் மண்டபமே என்றும், அது முத்துவயிரங்கள் இழைத்த பதினாறு பொற்றூண்களுடையது என்றும், அம்மண்டபத்தை இடம்விட்டுப் பெயர்த்தல் கூடாமையால், அதற்குப் பிரதியாக ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு லட்சம் பொன்மதிப்பில், 16 தூண்களுக்கும் பதினாறு லட்சம் பொன்களைச் சோழன் புலவர்க்கு வழங்கலாயினன் என்றும், ஆயினும் “பட்டினப் பாலைப் பரிசில் மண்டபம்” என்ற கௌரவம் அம்மண்டபத்துக்கு எந்நாளும் வழங்கலாயிற்று என்றும் நாம் கருத இடம் உண்டு. பாண்டியன், சோழ மாளிகைகளை இடித்தழித்துவந்தபோது மதிப்புக்குரிய அத்தூண்கள் மண்டபத்துடன் நின்றனவோ, அன்றி அஃது அழிந்த நிலையில் தனியே நின்றனவோ தெரியவில்லை.

மதிப்பு மிக்க மணிமண்டபம்

எவ்வாறாயினும், புலவர்பெருமான் ஒருவற்குப் பிரபலனான சோழன் வியந்து அளித்ததனாலும், பிற்காலக் கவிஞர்களால் அது சிறப்பிக்கப்பட்டும் போற்றப்பட்டும் வந்ததனாலும், போரிடையே சோழமாடங்களையெல்லாம் இடித்து அழித்துவந்த நிலையிலும், செந்தமிழ் வேந்தனான பாண்டியன், பழைய தமிழ் வரலாற்றுச் சின்னமான அம்மண்டபத் தூண்களை மட்டும் அழியவிடாமல் போற்றி வந்தவன் என்ற அரிய செய்தி இதனால் விளங்கும். பழஞ்செற்ற மிகுதியால் *‘பழிக்குப் பழி’ வாங்கிவந்த காலத்தும் அரசரிடையே தமிழபிமானம் சிறந்து விளங்கியது என்பதற்கு இச்செய்தி தக்க எடுத்துக்காட்டாகும். ★

* “இந்நாடு மூன்றும் உடையோர் திறையிட்ட பந்தர், தோரணவாயில், பட்டிமண்டபம் இவை கூடிய மண்டபம்” என்பர் அரும்பதவுரையாசிரியர்.

* பகைவனான இராசராசனுக்கு III முன்பு ஆண்ட மூன்றாம் குலோத்துங்கன் தன் கோப மிகுதியால் மதுரையுட் புகுந்து அங்கிருந்த அரண்மனை மாடங்களையெல்லாம் இடித்துப் பாழ்படுத்தினன் என்றும், அதற்குப் பிரதி பழிக்குப் பழிவாங்க வேண்டியே சுந்தர பாண்டியன் இவ்வாறு சோழ மாளிகைகளைத் தகர்க்கலாயினன் என்றும் சரித்திர வாயிலாக அறியப்படுகின்றது. (மூன்றாங்குலோத்துங்கன், பக். 51)

தேநீர்
கொண்டு
களைப்பை
வெல்லுங்கள்
சோர்வையகற்றுவதன் மூலம்,
உங்கள் சக ஊழியர்களுடன் பழகு
வதற்குரிய சிறந்த மனோ நிலையை
உங்களிடம் உண்டாக்குவது
தேநீரின் நல்ல குணம் என்று,
உலக முழுவதிலும் மேலும் மேலும்
அதிக மக்கள் அறிந்து வரு
கிறார்கள். அதனால் தேநீர்
ஒரு சாதாரண பானம் மட்டுமல்ல-
அது நட்பின் பாலமாகும்.
நான்தான் டீ - ஊழியர்களின் நண்பன்
TEA BOARD
INDIA

PST 167

நினைவுச் சுழல்

கி. சந்திரசேகரன்

துஷ்யந்தன் சாகுந்தலத்தின் கதாநாயகன். அவன் மற்றொரு காதல் விளையாட்டையும் நடத்தியதாக எழுந்த புதிய கற்பனை இது.

"அம்மணி, தேவி!''

வீணையின் இன்னிசையில் லயித்திருந்த ஹம்ஸபதிகையின் கவனத்தைத் தன்பால் இழுக்க இரண்டு மூன்று முறை சேடி முயன்றாள்.

அவள் இருந்த இடத்தில் இருந்தாலல்லவா ஹம்ஸபதிகைக்குக் காது கேட்கும்? அவள் வேறு உலகிற்கே சென்றிருந்தாள். பாட்டொன்றை நிறுத்திவிட்டு - இல்லை, அதுவாக நின்றிருந்தபடியால்-தன் விரல்களால் வீணைத் தந்திகளை வருடியவாறே சுருதி சுகத்தைக் கண்ணிமைகளை மூடி அநுபவித்துக்கொண்டிருந்தாளா, அல்லது கன்னங்களில் உருண்டோடிய இரண்டு மூன்று முத்துக்கள் வீணைத் தந்தியின்மேல் விழுந்து தெறித்துச் சிதறியதை அவள் சட்டை செய்யாமல்தான் இருந்தாளா? தெரியவில்லை. தந்திகளின் மேல் நீர்ப் பசையின் நசநசப்புப் பட்டு வீணையின் சுருதி கலைந்ததும் அவள் இமைகள் தாமாகவே திறந்துகொண்டன.

''என்ன தேவி? சங்கீதப் பயிற்சியாகவே இல்லையே! ஸ்வர மூர்ச்சையில் அமிழ்ந்துவிட்டீர்களே!'' ரூபவதியின் குறும்புப் பேச்சு ஹம்ஸபதிகையை விழிப்பெய்தச் செய்தது.

''ஆமாம், உனக்கென்ன, சொல்லமாட்டாயா? வரவர உனக்கு அரண்மனையில் சலுகை வலுத்துவிட்டது. யாரிடம் எந்தச் சமயத்தில் என்ன பேசுவது என்பதைக்கூட உன்னால் கவனிக்க இயலவில்லை.'' அவள் வார்த்தைகளில் சற்றுக் கடுமை கலந்திருந்தது.

சட்டென ரூபவதி பயபக்திக் குறிகளை முகத்தில் வரவழைத்துக்கொண்டு, ''இல்லை, தேவி, உங்களுக்கு ஓர் விசேஷச் செய்தியைச் சொல்லும் அவசரத்தில் என்னையே மறந்துவிட்டேன். தப்பிதந்தான். பழகிய தோஷம், உங்களிடம் அரண்மனையில் எது நடந்தாலும் முதலில் நேரில் வந்து நானே தெரிவிக்கும் அவா உந்தித் தள்ளிவிடுகிறது என்னை. அதனால் காலம் அகாலம் என்னும் குறிப்பைக்கூட அறியாமல் எனக்கு இருக்கும் அவசரத்தில் ஏதேதோ உளறிவிடுகிறேன். மன்னித்துவிடுங்கள். அப்புறம் வருகிறேன்'' என்றாள்.

ரூபவதி வேண்டுமென்றேதான் இவ்வாறு தன்னைப் பிகுப்படுத்திக்கொள்ளுவாள் என்று ஹம்ஸபதிகைக்கு உணர்வு இருப்பினும், ஏதோ விசேஷச் செய்தி சொல்ல வந்தாளே, அது என்னவாக இருக்கும் என்று அறிய வேகமும் அவளிடம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. ஆகையால் செல்ல எத்தனித்தவள்போல் வேகமாய்த் திரும்பிய ரூபவதியை மேலே காலடி எடுத்து வைக்க முடியாத அளவில் வெடுக்கென்று ஓர் சொல்லம்பைப் பிரயோகித்தாள் ஹம்ஸபதிகை: ''அரண்மனை ரகசியங்களில் உனக்கு இருக்கும் அசாத்திய ருசி எனக்கும் இருக்கும் என்று

எண்ணி விடாதே. நான் உண்டு, என் வீணை உண்டு. யார் எவ்விதம் போனால் எனக்கு என்ன? உனக்கு அவசரம் இருக்கு மென்றுகூட ஜோஸ்யம் அறிந்து நான் முன்பாகவே உன்னை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும்போல் இருக்கிறது! இந்த நிலைமையும் எனக்கு ஏற்படலாம்; இன்னுங் கூடக் கீழ்ப்பட்ட நிலையும் இனி இந்த அந்தப்புரத்தில் எனக்கு உண்டாகலாம். மகாராணி வஸுமதியின் ஏவலில் இருப்பவர்கள் நீங்களெல்லோரும். கேட்கவா வேண்டும், உங்கள் அநுதாபமற்ற செயல்களுக்கு?'

ரூபவதி இதை எதிர்பார்க்கவில்லை. தான் சொல்ல வந்த செய்தியில் ஹம்ஸபதிகையின் முழுக் கவனத்தையும் இழுக்கமட்டுமே அவள் விரும்பி விளையாடியவள். மற்றப்படி துளியும் அவள் மனத்தை நோகச் செய்யும் உத்தேசம் இல்லாததால் சரேலென அருகில் வந்து ஹம்ஸபதிகையின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டு, "என்ன வார்த்தை சொன்னீர்கள் அம்மணி? நானா அநுதாபம் அற்றவள்? தெய்வமே சாட்சி, என் அந்தரங்க சுத்தத்துக்கு. இன்று காலையிலிருந்து



அரண்மனை முழுவதும் பேச்சாக இருக்கும் அபூர்வச் செய்தியை அறியாமல் நீங்கள் இருப்பீர்கள் என்பதை நான் நிச்சயம் செய்துகொண்டதால் ஓடோடியும் உங்களிடம் சொல்ல முதலில் வந்தேன். உங்கள் சந்தோஷம் துக்கம் இரண்டிலும் உங்களுடன் கூடவே அநுபவிக்கும் பாத்தியதை என்னை விட்டால் வேறு யாருக்கு உண்டு?" என்றாள். அவள் மேலும் பேச வகையற்று, தொண்டை அடைக்க, இடையே நிறுத்தினாள், தான் சொல்ல வந்ததை.

வீணையை மடியிலிருந்து லாகவமாய் எடுத்து அப்புறம் வைத்துவிட்டு ஹம்ஸபதிகை ரூபவதியின் மோவாய்க்கட்டையைத் தன் விரல்களால் பிடித்துத் தன் பக்கம் திருப்பியவாறே, "சகி, ஏனடீ, எனக்கு இவ்வளவு பொறுமையற்ற சுபாவம்? உனக்கே தெரியுமே நான் படும் அவஸ்தை. என்னால் அரசரின் புதிய பழக்கங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லையே! ஏன் என்னை விதி இப்படி வேதனை வலையில் சிக்கி மடிய வைத்துவிட்டதோ! உன்மேல் எனக்கு என்ன கோபம்? ஒன்றும் இல்லை! சொல்ல வந்ததையாவது சொல்லேன், சீக்கிரம். அவசியமில்லாமலே சண்டை போட்டுக்கொள்வது நமக்குப் பழக்கமாகிவிட்டதடி" என்றாள்.

ரூபவதி ஹம்ஸபதிகையின் அருகில் அமர்ந்து பின்வருமாறு சொல்லலானாள்: "இன்று காலை மகாராஜா அரியாசனத்தில் அமருவதற்குள், யாரோ இரண்டு ரிஷிகுமாரர்களும், கிழவி ஒருத்தியும் மிகுந்த ரூபலாவண்யம் பொருந்திய மற்றொரு பெண்மணியும் வந்து வாயிலில் காத்திருக்கும் செய்தி தெரிந்ததாம். உடனே பிரதிஹாரியிடம் பார்க்க வந்தவர்களைத் தாமதிக்கவிடாமல் உள்ளே அனுப்ப உத்தரவு பிறந்தது. வந்தவர்கள் காசியப முனிவரின் ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள். அந்தச் சுந்தரி, கண்வரின் வளர்ப்புச் செல்வியான சகுந்தலை. ரிஷிகுமாரர்கள் அவளை மகாராஜரிடம் ஒப்படைக்க வந்த செய்தி அரசரைத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. தாம் அவளைக் கானகத்தில் மணந்து கொண்டதான நூதனச் செய்தியைக் கேட்ட அரசர் தம் செவிகளைப் பொத்திக் கொண்டு விட்டார். உடனே ரிஷிகுமாரர்கள்

இருவரும் நெருப்புச் சுவாலையைக் கக்கினார்களாம். நெறி தவறிய செயலை அரசர் செய்ததாகப் பழிச் சொல்லைச் சிறிதும் கூச்சமின்றிப் பொழிந்தனராம்.'' இங்கு ரூபவதி நிறுத்தினாள். ஹம்ஸபதிகையின் அகல விரிந்த கண்களில் புதிய ஒளியொன்று என்றும் இல்லாத பிரகாசத்துடன் சுடர் விடத் தொடங்கியதை ரூபவதி கவனித்தாள்.

''சொல்லடி முழுவதையும்.'' ஹம்ஸபதிகையினால் வேதனை தாங்க முடியவில்லை. ரூபவதி அறிவாள், ஹம்ஸபதிகையின் ரோஷ சுபாவத்தை. ஆகையால் மறுபடியும் நிதானமாகவே ஆரம்பித்தாள்: ''கிழவி, கூட வந்தவள், அந்தப் பெண்மணியின் முகமூடியை விலக்கி அரசர் எதிரில் நிற்கவைத்து, அரசர் அவளைப் பார்த்தாவது மோகிக் கட்டுமென்று முயன்றாளாம். அதுதான் முடியவில்லையே! அவர் துளியும் அவள் அழகைக் கண்டு வியப்போ ஆவலோ காட்டவில்லை. பர தாரத்தை அவர் கண்கள் நோக்க மறுத்தன. அவ்வளவுதான், கைவிரலில் மோதிரமொன்று அரசரால் தனக்கு இடப்பட்டதாகக் கூறி அதனைக் காட்டுவதாக முற்பட்டவள், அந்தக் கணையாழியையும் வழியில் எங்கோ தொலைத்து விட்ட அதிர்ச்சியை அரசர்முன் அடைந்தவள் போல் பாசாங்கு செய்து அழத் தொடங்கினாள் அந்தப் பெண்.'' மறுபடியும் சற்று நிறுத்தினாள் ரூபவதி. அதற்குள் ஹம்ஸபதிகை பெருமூச்சொன்றை விட்டு, ''அப்புறம், அப்புறம்?'' என்று மேலும் தூண்டினாள் ரூபவதியை.

''அப்புறமென்ன? என்ன என்னவோ அழகான கட்டுக்கதைகள் சொல்லிப் பசப்பினாள். மகாராஜா இவைகளுக்கா மசிகிறவர்? தாம் அவளை ஏற்க முடியாதெனச் சொல்லிவிட்டார்.'' ரூபவதி நினைத்ததற்கு விரோதமாக ஹம்ஸபதிகை எங்கேயோ மனத்தைச் செலுத்தியவளாய், ''சொல், ரூபா, என்ன கட்டுக் கதை அவள் சொன்னாள்?'' என்று மேலும் தூண்டினாள்.

''அதுவா? சொல்லுகிறேன. அரசர் வேட்டைக்குக் கானகம்போனபொழுது அவளைச் சந்தித்துப் பழகினாராம். ஒரு நாள் மானொன்று அவள் சமீபம் வந்து அவளிடம் ஒட்டிக்கொண்டதாம். அதனை அரசர் தம்மிடம் எவ்வளவு இழுத்தாலும் அது பின்வாங்கியதாம். தாமரை இலையைத் தொன்னை செய்து, அதில் நீர் வார்த்து அரசர் அதனிடம் நீட்டினாராம். அதற்கும் அது மசியவில்லையாம். பிறகு சகுந்தலை தன் கையில் தாமரைத் தொன்னையை வாங்கிக்கொண்டு அதனையும் மறு கையினால் அணைக்கவே அது வாலை ஆட்டிக் கொண்டு அவள் நீட்டிய தொன்னையிலுள்ள தண்ணீர் அவ்வளவையும் குடித்ததாம். அரசர் சொன்னாராம்: 'ஆம், இது பொருத்தந்தான், நீங்கள் இருவரும் சேர்ந்துகாட்டில் பிறந்து **வளர்ந்ததற்கு. உங்களிடம் இவ்**

''நீயும் பஞ்ச வர்ணக் கிளிதானா?'' என்றார்.

விதப்பாசம் இருப்பதில் ஆச்சரியமில்லையே! மானும் மான்விழியாளும் உறவு பூணுவதில் ஒருகாலும் வியப்பில்லை' என்றாராம். எப்படி இருக்கிறது கதை, பார்த்தாயா? கற்பனைக் காவியத்தில் அல்லவா இவ்விதமான சந்தர்ப்பமும் காதல் விளையாட்டும் நிகழும்?'' இதைச் சொல்லி ரூபவதி ஏளனமாய்ச் சிரித்தாள்.

ஆனால் ஹம்ஸபதிகை அவளுடன் சேர்ந்து சிரிக்கவில்லை. அவள் மனசு நினைவுச் சுழலில் சிக்கிக்கொண்டுவிட்டது. இதைப் போன்ற சம்பவம் ஒன்று அவள் தன் அநுபவத்தில் உணர்ந்திருந்தாள். அதன் ஞாபகம் அவள் இருதயத்தை வேதனைப்படுத்துவானேன்? அதற்குக் காரணம் இல்லாமலில்லை. ரூபவதியின் தோளைப் பிடித்துக் குலுக்கி அவள் சொன்னாள்: ''ரூபா, பொய்யாக இருக்காதடி அந்தப் பெண்ணின் கதை. நான் அதை நம்பத் தயாரடி. காதல் வசப்பட்ட ஆண்மகன் இவைகளையும் சொல்லுவான்; இன்னமும் சொல்லுவான். ஆச்சரியம் அல்ல. இது நிஜம் தவிர வேறு அல்ல என்பதற்கு அத்தாட்சி என்னிடந்தான் கேட்க வேண்டும். உன்னிடம் சொன்னால் நம்புவாய்.'' ஹம்ஸபதிகையின் குரல் கரகரத்தது. பழைய நினைவுகளை அவள் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து எதை ரூபவதியிடம் சொல்வதென நிர்ணயித்தாள்.

''மறந்துவிட்டேனே, ரூபா, வீணையை உறையில் போட. இதோ வருகிறேன்'' என எழுந்தவள் வீணையை உறையில் நன்கு திணித்து அதைத் தூக்கி அதற்கென உள்ள இடத்தில் வைத்தாள். அரை நொடியில் உத்தரத்தின் மேலிருந்து கம்பியில் தொங்கிய தங்கக் கூட்டிலிருந்த பஞ்சவர்ணக் கிளியை வெளியே எடுத்துத் தன் தோள்மேல் ஏற்றிக்கொண்டாள். 'டுர்ரீ, டுர்ரீ' என்றது அந்தக் கிளி. அழகான நீல வர்ண இறக்கைகளுடனும், கருஞ்சிவப்பு மார்புடனும், கழுத்துக் கால்களில் மஞ்சளுடனும், நெற்றியில் பளீரென்ற பச்சையும் வயிற்றில் பழுப்பு வர்ணமுமாய், அக் கிளி வசீகரத் தோற்றமளித்தது. ''அக்கா, அக்கா'' என்று பேசவும் ஆரம்பித்தது.

''இரடா, விசித்திர ஜிஹ்வா! உன் கதை தானடா என் கதையும். அதற்குக் காலம் வந்துவிட்டது. இனி உலகில் உன் கதையும் என் கதை உள்ளளவும் பரவிக் கிடக்கும்'' என்றாள். அந்தக் கிளி தன் இறக்கைகளை ஒரு தடவை விசிறி அடித்துக்கொண்டது. ரூபவதி அதைத் தொட முயலவும் தன் மூக்கினால் அது அவளைக் கொத்தியது. ஹம்ஸபதிகையின் தோளில் ஏறிக்கொண்டு அவள் காதண்டை உள்ள கேசங்களை மூக்கினால் கோதிக் கொடுத்தது. ஒரு தடவை தன் கையினால் அதன் முதுகு முழுவதையும் தடவிக் கொடுத்துவிட்டு ஹம்ஸபதிகை ஆரம்பித்தாள் கதையை.

* * *

கேளடி, ரூபா, என் நினைவு சொல்வதை. ஆம், இன்றுபோல் இருக்கிறது. கார்மேகங்கள் வானத்தைப் பிளந்துகொண்டு மழையாய்ப் பொழிந்தன. எங்கும் ஊழிவெள்ளம் சூழ்ந்துவிட்டதோ என்ற பயம் எல்லோரையும் பற்றிக்கொண்டது. ஆனால் எங்கள் துர்க்கம் மட்டும் அந்த மழைக்குத் துளியும் மாறுதல் அடையவில்லை. பாறுங்கற்களில் குடைந்து செதுக்கி எடுக்கப்பெற்ற மதில் கொத்தளங்கள் கொண்டது அக் கோட்டை. மறந்துவிட்டேனே இடையே ஒரு விஷயத்தை; ஆம், என் தந்தை விதர்ப்ப தேசத்து அரசனைக் காணச் சென்றவர் சீக்கிரம் திரும்பவில்லை. அச்சமயம் எனக்கு வயசு பதினெட்டு முடியவில்லை. தாயில்லாத என்னை என் செவிலி சுஜாதை கவனித்துக்கொண்டாள். கோட்டையைப் பகைவர் யாரும் நெருங்க முடியாதபடி எங்கள் கோட்டையில் காவல் என்றும் இருக்கும். ரண தீரர் என்ற சேனாதிபதியின் காப்பில் எங்கள் பைரவி துர்க்கம் பாதுகாப்புப் பந்தோபஸ்துகளுடன் இருந்தது.

அன்றொரு நாள் - அதுதான் மழை இடைவிடாது பெய்கையில் - கோட்டையின் வெளியில் யாரோ இருவர் உள்ளே தங்குவதற்கு இடம் வேண்டுமென யாசித்து நின்றார்களாம். ஆனால் சேனாதிபதி, வந்திருப்பவர்களின் லட்சணங்களிலிருந்து அவர்கள் அரசாங்கத்தவர் என்று ஊகித்து, துப்பறியும் எண்ணங்கொண்டு ஒருகால் வந்திருக்கலாம் என்றும், பகைவர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் எண்ணி அவர்களை வரவேற்க மறுத்துவிட்டார். பாவம்! வந்தவர்களில் ஒருவன் நடக்க முடியாமல் கோட்டை வாயிலில் விழுந்துவிட்டான் என்ற செய்தியை என் செவிலி என்னிடம் தெரிவித்தாள். என் மனத்தில் ஏனோ திடீரென்று தயை பிறந்தது. அது மட்டும் பிறந்திருக்காமலே இருந்தால் இன்று இங்கு நான் கதை சொல்லிக்கொண்டிருக்கும் கதியில் இருக்க மாட்டேன். செவிலியை என் இடத்தில் நிறுத்திவிட்டு நான் அவள் வேஷத்தில் சேனாதிபதிக்குத் தெரியாமல் கோட்டை வாயிலை அடைந்தேன். உண்மையில் வழிப்போக்கர்களில் ஒருவன் - நல்ல பிராமணன் என்பது அவனது முகப்பொலிவிலிருந்து தெரிந்தது - கீழே தள்ளாடி விழுந்திருந்தான். அவனைத் தன் மார்பில் சார்த்திக்கொண்டு மற்றவன் வெகு கம்பீரமாய் என்னை ஏற இறங்கப் பார்த்தான். அப்பப்பா, அந்தப் பார்வையில் தான் எவ்வளவு அலட்சியம்!

நான் செயலிழந்து போனேன் கணப்பொழுதில். சிறிதும் யோசியாமல் அந்த இளைஞன் என்னைப் பார்த்து, ''உங்கள் கோட்டையில் புலி சிங்கங்களை அடைத்து வைத்திருப்பீர்களா? அல்லது மனிதர்களும் இருக்கிறார்களா?'' என்று கேட்டான். 'ஏன்?' என்பதுபோல் நான் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினேன். அவன் மறுபடியும், ''இல்லை, ஒரு மனிதன் நிலை குளிரில் விறைத்துவிடும்படியாகிவிட்டதென்றால் அவனுக்கு இடங்கொடுப்பதும் அருமையாகிய காலம் வந்ததே என்றுதான் வியக்கிறேன். கல்லால் கோட்டையும், கல்லால் நெஞ்சமும் கொண்டவர்களுக்கு இனி எதிரிகளிடமிருந்து பயம் எதற்கு? ஒருகால் தெய்வத்தினிடமிருந்து தான் அபாயம் நேரிடலாம்'' என்றான்.

எனக்கு மனசு என்னவோ செய்தது. ''வாருங்கள் உள்ளே இருவரும். நீங்கள் யார்? இவர் யார்? தெளிவாய்ச் சொல்லுங்கள்'' என்றேன். ''ஆகட்டும்; முதலில் இவரை - என் சிநேகிதனை-ப் படுக்கையொன்றில் கிடத்தி, கணப்பின் சூடு தயாரிப்பது அவசியம். மற்றவற்றைப் பிற்பாடு கவனிக்கலாம்'' என்றான்

அந்தச் சுகுமாரன். அவன் குரலில் அதிகாரம் சுபாவமாய்ப் பரவி நின்றது. காவற்காரர்களைக் கண் ஜாடையினால் உள்ளே அந்தப்புரத்தில் படுக்கை யொன்றைத் தயார் செய்யச் சொன்னேன். 'ஒருவருக்கும் தெரிய வேண்டாம்' என்று எச்சரிக்கையும் செய்தேன்.

நான் செய்தது துணிச்சலான காரியம் என்று பிறகே புரிந்துகொண்டேன். விதி யாரை விட்டது? மாடவியன், அரசனின் அருமைச் சகபாடி இருக்கிறானே அவன்தான், அந்தக் குளிரில் விறைத்துப் போன ஆள். கூடவந்தவன் தன்னைச் சக்கரவர்த்தி துஷ்யந்தனுடைய காலாட்படைப் பிரதானிகளில் ஒருவனென்று கூறிக்கொண்டான். ஹஸ்தினாபுரத்திலிருந்து வெகுதூரம் சேனையுடன் வருகையில் வழி தப்பியதாகவும், மழையினால் தாங்கள் இருவரும் ஒரு புறமும், சேனைகள் வேறு பக்கமுமாய் வழி தெரியாது வந்ததாகவும் சொன்னான்.

மாடவ்யன் இரண்டு தினங்களில் பயம் தெளிந்து சுயப்பிரக்ஞை பெற்றான். அவனை அவன் சிநேகிதன் கவனித்து வந்ததைப் பார்த்திருக்க வேண்டும்! அவ்விருவரின் நட்பையும் கண்டு எங்கள் அரண்மனை வேலையாட்கள் அப்படியே மலைத்துப் போய்விட்டார்கள்.

மூன்றும் நாள் காலையில் என்னுடைய பஞ்சவர்ணக் கிளிக்கு வழக்கம்போல் நான் கோவைப் பழங்களைக் கொடுத்துக் கொண்டே அவர்கள் இருந்த அறையை அடைந்தேன். ஆச்சரியம்! மாடவ்யனுக்குப் பதிலாக அவன் நண்பன் தனிமையில் அதே படுக்கையில் படுத்திருந்தான். சௌந்தரியமே உருக்கொண்டு அங்கே சயனித்திருந்தது. அகன்ற மார்பும், கழுத்தில் சுருண்டு சுருண்டு விழுந்த கேசங்களும், சிறிது சிறுத்த இடுப்பும், எல்லாவற்றையும் வென்ற காம்பீர்யமும் முகத்தில் துலங்க அவன் படுத்திருந்தான். விசித்திர ஜிஹ்வனுடைய குரலைக் கேட்டுப் படுத்திருந்தவன் எழுந்திருந்து என்னையும் என் தோள் மேல் உள்ள கிளியையும் பார்த்துச் சிரித்தான். என்னே சிரிப்பொலியின் கலகலப்பு! என் தைரியம் உடனே பறந்து போயிற்று. நான் கோழையானேன். ஐயோ! சேனாதிபதிக்குத் தெரியாமல் என் அந்தப்புரத்தில் இவர்களை வைத்துக் காப்பாற்றினேனே! என்னைக் காப்பாற்றிக்கொள்ள அல்லவா மறந்தேன்?

'உங்கள் சிநேகிதர் எங்கே?' என்பதுபோல் வாயால் சொல்ல முயன்றேனே ஒழிய என் வார்த்தைகள் உருவடையவில்லை. சிநேகிதர் என்ற பதம் மட்டும் என் உதட்டின் அசைப்பிலிருந்து வெளியாகி இருக்கவேண்டும். ஏனெனில் அடுத்த கணம் அவர் - இனி அவன் அவர்தாம் எனக்கு - "தெரியவேண்டுமா உனக்கு? தவறாகக் கருதாவிடில் சொல்லிவிடுகிறேன். கோட்டையிலிருந்து வெகுதூரம் அவன் இப்பொழுது சென்றிருப்பான். எங்கள் குதிரைகளைக் கொண்டுவர அவனை அனுப்பினேன். ரகசியமாய்த்தான் இவ்வளவும் நடந்தது. நானும் ஏன் வெளியே செல்லவில்லை தெரியுமா? அதற்குக் காரணம் நீதான். ஆம், உன்னிடம் சொல்லிக்

சேனாபதி அவர்களைத் தடுத்துவிட்டார்.

கொள்ளாமல் போவது முடியாது என்றுதான் தங்கினேன். உன் கையில் இப்பொழுது உள்ளேன். இத்தனை சிரத்தையாய் என் சிநேகிதனை மூன்று நாட்கள் காப்பாற்றியவள் என்னையும் இன்னும் அரைநாள் காப்பாற்றினாயானால் என்றும் உன்னை மறக்காமல் என் இருதயத்தில் வைத்திருப்பேன்'' என்றார். அவர் கடைசிச் சொற்களில்தான் எத்தனை இனிப்பு! அவை நெஞ்சை அள்ளும் இருதயக் குழைவுடன் வந்தன. என் முகம் சிவந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் என்னை இன்னும் வெட்கிக் குனிய வைத்துவிட்டார், ''என்ன, நீயும் பஞ்சவர்ணக் கிளிதானா?'' என்ற பேச்சினால். அவருடைய பார்வை என்னை வசமிழக்கச் செய்தது. வேறு ஒன்றும் சொல்லத் தெரியாமல் நான், ''உடனே நீங்கள் ஏன் போக வேண்டும்?'' என்றேன்.

''வேலை இருக்கிறது. சக்கரவர்த்தியின் காரியங்கள் பல நான் இல்லாததால் தடைப்பட்டிருக்கும்'' என்றார்.

''இல்லை, அப்பா வந்த பிறகு போகலாமே. அவர் வரும் காலமாகிவிட்டது'' என்றேன் வாய் உளறியபடியே.

அவர் மறுமுறையும் நகைத்தார். என்னை வெட்கம் அழுத்திவிட்டது பூமியில். நான் அப்படியே கீழே உட்கார்ந்தேன்.

அவர் வேகமாய் எழுந்து, ''வேண்டாம்; மழைஜலம் ஊறி ஜில்லென்று இருக்கிறது தரை. இதில் ஏறி உட்கார்'' என்று தம் படுக்கையில் அமரச் சொன்னார். ''அப்பா! சில்லிட்டு

விட்டதே உன் கரம், அல்லித்தண்டுபோல்'' என்றூர் அவர் என் பதறிய கையைப் பிடித்தவாறே.

விசித்திரஜிஹ்வன் மட்டும் உருட்டின கண்களுடன் அவரை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தது. நான் அதை முழுவதும் அச்சமயம் கவனிக்கவில்லை. என் மனசு புயலினூல் அலைக்கப்பட்டிருந்ததல்லவா?

என் கையிலுள்ள கோவைப்பழங்கள் பூமியில் சிதறி விழுந்தன. நான் குனிந்து பொறுக்குவதற்குள் அவர் சிலவற்றைப் பொறுக்கித் தாமாகவே விசித்திரனுடைய மூக்கின் அருகே கொண்டுபோனூர். விசித்திரனுக்குக் கோபம். தொடமாட்டேன் என்று நகர்ந்துகொண்டது என் தோளின்மேல். அவர் சிரித்துவிட்டு, ''நீங்கள் இருவரும் ஒன்றுபோலுள்ளவர்கள்; சிறைவாசிகள். விடுதலை அறியாதவர்கள்; சுயேச்சை அற்றவர்கள்'' என்றூர்.

அவர் சொன்னதன் அர்த்தத்தை நான் சட்டென அறிந்துகொண்டேன். மேலும் என் வதனம் சிவந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் என் கையைப் பிடித்து உற்றுப் பார்த்து நிறுத்தி, ''அடடா, இதென்ன விசித்திரம்? உன் கன்னங்களில் உள்ள சிவப்பு, கிளியின் மார்பின் சிவப்பை வென்றுவிட்டதே!'' என்றூர்.

ஆனூல் அடுத்த கணம் விசித்திரஜிஹ்வன் சிறகடித்து, 'டுர்ரீ, டுர்ரீ' என்று கிரீச்சிட்டுப் பறந்து குதித்து அவர் கையைத் தனது மூக்கினூல் கடித்துவிட்டது. ''அப்பா! என்ன பொருமை உன் கிளிக்கு! நான் உன்னைத் தொடக்கூடாதாம்!'' என்றவர் வேகமாய்த் தம் கையை இழுத்துக்கொண்டார்.

உண்மையில் எனக்கு விசித்திரன் மேல் கோபம்? பொங்கி வந்தது. ''போ நீ'' என்று அதைத் தூர எறிந்துவிட்டேன். அதுவா போகும்? சுற்றிச் சுற்றி வந்து அவரைத் தொந்தரவு செய்துவிட்டது.

இதனிடையில் என் தந்தை கோட்டைக்குத் திரும்பிவிட்டார் என்ற தகவல் என் அந்தப்புரத்துக்கும் எட்டிவிட்டது. நான் தந்தையைக் காண எழுந்து செல்வதற்குள் அவரே அந்தப்புரம் வந்துவிட்டார். சந்தர்ப்பம் மிகவும் சங்கடமாகிவிட்டது. ஆனூல் உள்ளே அடியெடுத்து வைத்ததும் தந்தையார் அவரை உடனே அஞ்சலி செய்து வணங்கி, ''துஷ்யந்த சக்கரவர்த்தியே வாழ்க!'' என்று கூறி அணுகினூர்.

என் மார்பு படபடவென அடித்துக்கொண்டது. ஒன்றும் தோன்ருமல் மிரள மிரள விழித்தேன்.

என் தந்தையார், ''அவள் சிறியவள்; தங்களை இன்னூரென்று அறிந்துகொள்ளாமையால் தக்கபடி மரியாதைகளைச் செய்யவில்லை'' என்றூர்.

அதற்கு அவர் என்ன பரிகாசமாய்ப் பதில் உரைத்தார் தெரியுமா?

''நல்ல மரியாதை கிடைத்துவிட்டதே! அவள் கிளியை விட்டு என் கையைத் துண்டிக்கப் பார்த்தாள். தப்பினேன்'' என்று சொல்லி என்னைப் புன்னகை தவழ்ந்த முகத்துடன் உற்றுப் பார்த்தார்.

கலவரத்துடன் அவர் கையை என் தந்தை பார்க்கையில், விசித்திரன் ஒரு தடவை சிறகடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தது. ஒன்று விடாமல் எங்கள் இருவருக்கும் நேர்ந்த சம்பாஷணையை அப்படியே ஒப்பித்துக் கொட்டிவிட்டது. என்ன செய்வது? நான் திகைத்துப்போனேன். அவரும் திகைத்துப் போனூர். என் தந்தை மட்டும் திகைக்கவில்லை.

''நல்ல வேலை! வேறு ஒருவன் இவள் கரத்தைத் தீண்டியிருந்தால் என் சினம் கொழுந்துவிட்டு எரிந்து அவனைச் சாம்பலாக்கியிருக்கும். விட்ட கரத்தை நானே மறுபடியும் இதோ சேர்த்து வைக்கிறேன்'' என்று சொல்லி எங்கள் இருவருடைய கைகளையும் சேர்த்துப் பிடித்து ஆசிர்வதித்தார்.

இதனிடையில் விசித்திரனைக் கூட்டில் அடைத்துவிட்டார்கள். பாவம்! இது அன்று கூட்டை உடைக்கத் தன் மூக்கை உபயோகித்ததுண்டே, அது சொல்லத் தரமல்ல. இதன் மூக்குத்தான் சிறிது விண்டது. உனக்குத் தெரிகிறதா, மூளியான மூக்கு?

ஆரியபுத்திரர் என் கையைப் பற்றியவாறே, ''உன் தோழனையும் கூடவே ஹஸ்தினுபுரம் அழைத்துச் செல்கிறேன். வரட்டும் அவனும்'' என்று சொல்லி, கூட்டில் உள்ள விசித்திரனை ஒரு தடவை பார்த்தார்.

'டுர்ரீ, டுர்ரீ' என்று இது போட்ட கூக்குரல் உண்டே! அப்பப்பா, பொல்லாது. அசூயைப் பிராணி!

ரூபா, சகுந்தலையையும் இப்படித்தான் இவர் வஞ்சித்திருப்பார். எனக்கும் அவளுக்கும் ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறது. அவளைப் பலர் முன்னிலையில் நிராகரித்துவிட்டார். ஆனூல் என்னை மறைவில், அந்தப்புரச் சிறையில் மறைத்து விலக்கிவிட்டார்.

* * *

ஹம்ஸபதிகையின் குரல் கம்மியது. ரூபவதி பஞ்சவர்ணக் கிளியை உற்றுப் பார்த்தவாறே, ''பொல்லாதுதான் இது. உங்களுடன் பழகி, தன் அசூயைக் குணத்தையும் உங்களிடம் புகுத்திவிட்டதே! அம்மணி! உங்களிடமிருந்து அநுதாப வார்த்தை ஒன்றேனும் அந்தத் துர்ப்பாக்கியவதி சகுந்தலைக்குக் கிடைக்கவில்லையே!'' என்றூள்.

''சரிதானடி; உன் பேச்சும் விஷமமும்! அவர் என்ன செய்துகொண்டிருக்கிறூர்? ஞாபகங்களை அலசிக்கொண்டிருக்கிறூரா? அறிந்து வா. எனக்குத்தான் பழைய ஞாபகங்கள். அவருக்கு எதற்கு, பழையவை? புது நினைவுகளில் திளைத்திருக்கட்டும்!''

ரூபவதி அவ்விடம் விட்டு நகர்ந்தாள். உறையில் இட்ட வீணையை மறுபடியும் ஹம்ஸபதிகை வெளியே எடுத்து வந்து தன் மடியில் சாய்த்தபடியே மீட்டினூள். எங்கும் சுநாதம் பரவி நின்றது. தான் ஏற்கனவே பாடி நிறுத்திய அதே பாட்டின் பல்லவியை எடுத்துக்கொண்டாள். வேண்டுமென்ருே மறதியினூலோ, தீராத சோகமொன்று பெருகி வழிந்தது அதில். ஆனூல் கண்ணீர் முன்போல் பெருகவில்லை. கண்ணீரற்ற ஆழ்ந்த சோகம், நல்ல சங்கீதம் கேட்க வந்த யாரைத்தான் நினைவுச் சுழலில் மூழ்க வைக்காது?

அந்தப்புரத்தின் அருகில் யோசனையுடன் நகர்ந்து வந்துகொண்டிருந்த துஷ்யந்தன் செவிகளிலும் அந்தச் சோக கீதம் பாய்ந்ததா? உருவாகாத பழைய ஞாபகத்தை உருவாக்கும் நிலையில் அரசனும் தத்தளித்தான். ★



ஓவியர்:
ஜி. என். ஜாதவ்

பண்டரிபுரத் திருவிழாவில்
சந்தையும் சந்தியும்

கலைமகள்

1956

எப்படி மனம் துணிந்ததோ

'கோனஷ்டை'

அவள் எழுதியது "எப்படி மனம் துணிந்ததோ!" அவன் எழுதியது "எப்படி முடியுமோ?" மனமும் துணிந்து அப்படியே முடிந்து விட்டதே!

வா, ராதா. சரியான சமயத்தில் வந்தாய். இதோ பார், தேதி வரிசையாக அடுக்கிக்கொண்டிருக்கிறேனே, இந்தக் கடிதங்களைப் படித்துப் பார்த்தால் ஒரு கதை மாதிரியே இருக்கும்.

[பேசுபவள் ஊர்மிளா; கும்பகோணம் அரவிந்த வீதி, அட்வொகேட் லக்ஷ்மண ஐயரின் சம்சாரம், ஊர்மிளா. கேட்பவள் சிநேகிதி ராதா.]

கதை கேட்கிறதென்றால் உனக்கு மிகவும் ஆசையாச்சே என்று சொல்லுகிறேன். இவைகளெல்லாம் யார் எழுதினர்கள், எனக்கு எப்படிக் கிடைத்தனவா? 'ஸரஸ்வதி' பத்திரிகையின் ஆசிரியர் கொடுத்தார்:

அவருக்குக் கிடைத்தவையும், அவர் எழுதின பதில்களுக்கு ஆபீஸ் நகல்களும்.

இந்த முதல் கடிதத்தை எழுதினவள், நம்முடைய மாதர் சங்கத்தின் காரியதரிசி, ராஜலக்ஷ்மி. அவள் ஜோடிக்கும் கதைகளை 'ஸரஸ்வதி' பத்திரிகையில் நீ அடிக்கடி வாசித்திருப்பாயே! ஆமாம், 'சுந்தரம்' என்கிற புனைபெயர் அவளுடையதுதான். இதைக் கேள்: இது சாதாரணச் சுருதியில் தான் ஆரம்பிக்கிறது:

1

4, தங்கம்மாள் வீதி,
கும்பகோணம்.
துர்முகி, ஆனி 7.

'ஸரஸ்வதி'யின் ஆசிரியர்க்கு நமஸ்காரம். க்ஷேமம். தங்கள் பத்திரிகையின் சித்திரை வருஷப்பிறப்பு மலருக்காக நான் அனுப்பின

பைனாகுலரால் பார்க்கிறார் இளைஞர்.

சிறுகதையைத் தாங்கள் அங்கீகரித்ததற்கு என்னுடைய நன்றியைப் பாராட்டுகிறேன். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, மலர் வெளி வந்து இரண்டு மாசத்திற்குமேல் ஆகியும் கதையின் சம்மானம் எனக்கு வந்து சேர வில்லை என்பதையும் அத்துடன் சேர்த்தே தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு
ராஜலக்ஷ்மி.

குறிப்பு: கதையின் பெயர், ''எப்படி மனம் துணிந்ததோ!'' வழக்கப்படி, என்னுடைய புனைபெயராகிய 'சுந்தரம்' என்பதன்கீழ்த் தான் கதையை எழுதியிருக்கிறேன்.

ரா.

'ஸரஸ்வதி' ஆபீசு, உனக்குத் தெரியுமே, மிகவும் ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிறது. அங்கே இப்பேர்ப்பட்ட புகார் கிடைத்தால் அவர்களுக்கு வருத்தமாகத்தான் இருந் திருக்கும். இருந்தாலும், ஆசிரியர் நிதான மாகவே இப்படிப் பதில் அனுப்பினார்:

2

க்ஷேமம். தங்களுடைய கடிதத்தைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. ஏதோ மறதியால் தான், தாங்கள் அவ்விதம் எழுத நேர்ந் திருக்கும் என்று நம்புகிறேன்.

மலர் வெளிவந்த தினமே, எங்களுடைய வழக்கப்படி, சம்மானத்தைத் தங்களுடைய பெயருக்கு மணிஆர்டர் செய்திருக்கிறோம். பெற்றுக்கொண்டு தாங்கள் கை ஒப்பமிட்ட ரசீதை இப்பொழுது இத்துடன் அனுப்பி யிருக்கிறேன். கை ஒப்பத்தில் யாதோர் எழுத்துச் சந்தேகமும் இல்லை. அதைப் பார்த்து விட்டு, தயவுசெய்து திருப்பி அனுப்பிவிடவும்.

இப்படிக்கு
. . . .
ஆசிரியர்.

இதற்குப் பதில் அவள் மறுதபாலில் அனுப்பிவிட்டாள். அதாவது:

3

. . . . .அந்த ரசீதில் போட்டிருக்கிறது என்னுடைய கையெழுத்து அல்ல. தவிர, நான் ஏன் 'சுந்தரம்' என்று கையெழுத்திடுகிறேன்? புனைபெயரைக் கதைகளுக்கு வேண்டுமானால் உபயோகிக்கலாம். ஆனால் கையொப்பத்தைச் சேர்க்க வேண்டிய எந்தத் தஸ்தாவேஜியிலாவது அந்தப் பொய்ப்பெயரை உபயோகிக்க முடியுமா? தபால்காரன்தான் சம்மதித்துப் பணத்தைக் கொடுப்பானா? ராஜலக்ஷ்மி என்றல்லவா கையெழுத்துப் போட்டிருப்பேன்? ஆகையால் இந்த ரசீது மோசம். எவனோ ஒருவன் போர்ஜரி செய்து தங்களை ஏமாற்றியிருக்கிறான். அதைத் தயவு செய்து விசாரிக்க வேண்டும்.

ராஜலக்ஷ்மி.

இது கிடைத்தவுடன் ஆசிரியருக்கு என்ன தோன்றியிருக்கும்? 'ஏதடா, இது! நாம் விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது? போர்ஜரி, ஆள்மாறாட்டம், ஏமாற்றம் ஏதாவது நடந்திருந்தால், அதைப் போலீஸ்காரர் தாமே விசாரிக்கக்கூடும்? அவளுக்குப் பதிலாகப் போலீஸ் கோர்ட்டுக்கு நாம் போய், அங்கே நாம் தொங்கட்டுமே என்றல்லவா இவள் நம்மை ஏவுகிறாள்?' என்று எண்ணி, ஆசிரியர், மரியாதைக் குறைவில்லாமலே, சற்றுக் கண்டிப்பாகப் பதில் அளித்திருக்கிறார். அதுதான் இந்த நாலாவது கடிதம்:

4

. . . . . .தங்கள் கடிதத்தைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆனால் நாங்கள்

என்ன செய்ய முடியும்? எழுத்தாளர் கொடுக்கும் பெயருக்கும் விலாசத்திற்குமே மணி ஆர்டர் செய்கிறோம். இருவருக்கும் பொது ஏஜெண்டான சர்க்காரின் தபாலாபீசில் எப்பொழுது பணத்தைச் சேர்த்துவிட்டோமோ, அத்துடன் எங்களுடைய கடமை தீர்ந்துவிட்டதல்லவா? பிறகு சர்க்காரின் பொறுப்பு. சர்க்காரை ஏமாற்றி, எவனாவது பணத்தை எடுத்துக்கொண்டிருந்தால் அதைப் போலீசாருக்குத் தெரிவித்து, அவனிடமிருந்தோ, சர்க்காரிடமிருந்தோ பணத்தை வசூலித்துக்கொள்வது தங்களுடைய கடமை. இந்த நியாயத்தைத் தாங்கள் அங்கீகரிப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

....ஆசிரியர்.

ஆனால் அதை அவள் ஒரு லவலேசங்கூட ஒப்புக்கொள்ளவில்லை. காரணத்தை இப்படிச் சொல்லுகிறாள்:

5

.......நான் கொடுத்த பெயராவது! நான் கொடுத்த விலாசமாவது! அதற்கு நீங்கள் அனுப்பவாவது! நான் கொடுக்கவும் இல்லை, கொடுக்கிற வழக்கமும் இல்லை. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாகத் தங்களுக்கு நான் அடிக்கடி கதை எழுதி அனுப்புவதால், ஆபீசில் என் பெயரும் தெரியும்; விலாசமும் தெரியும். கதையின் தலைப்பிலோ, அடியிலோ என் புனைபெயரைக் கண்டவுடன், "ராஜலக்ஷ்மி" என்று என் பெயருக்கே சம்மானத்தை மணிஆர்டர் செய்துவிடுவார்கள். இப்பொழுதும் அப்படிச் செய்திருந்தால், தபால்காரன் என்னிடம் வராமலாவது, வந்த பிறகு 'சுந்தரம்' என்கிற பெயரை ஒப்புக்கொண்டாவது பணத்தைக் கொடுத்துவிட்டுப் போவானா? ஆகையால் இதில் ஏதோ மோசம் நடந்திருக்கிறது. அதற்கு ஆரம்பம் ஆபீசில்தான் இருக்க வேண்டும். ஆகையால் தயவு செய்து ஆபீசிலேயே தீர விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராஜலக்ஷ்மி.

நீ என்ன சொல்லுகிறாய், ராதா? மோசம் எங்கே என்று உனக்குத் தோன்றுகிறது? ஒன்றுமே தோன்றவில்லையா? சரி, இன்னும் இரண்டு கடிதம் படித்துவிட்டுக் கேட்கிறேன்.

அதன்மேல், ஆசிரியர் ஆபீசில் நன்றாக விசாரித்ததன் பலனாக, அவள் சொல்லுவது தான் வழக்கம் என்று தெரிந்துகொண்டார். இருந்தாலும் சுபாவத்தில் அவர் ஜாக்கிரதையுள்ளவர். ஆகையால் அவளுடைய "எப்படி மனம் துணிந்ததோ!" என்ற கதையின் எழுத்துப் பிரதியை வரவழைத்துப் பார்த்தார். பார்த்துவிட்டு, வெற்றிக் குரலில் இவ்விதம் பதில் எழுதினார்:

6

....தாங்கள் எழுதியிருப்பது மொத்தத்தில் சரிதான். ஆனால் இந்தத் தடவை, தங்களுடைய கதை பத்தாவது பக்கத்தின் கடைசியில் முடிந்துவிடவே, தாங்கள் பதினோராம் பக்கத்தில், சுந்தரம், 44-ஆம் நம்பர், தங்கம்மாள் வீதி, கும்பகோணம் என்று தெளிவாகக் குறித்திருக்கிறீர்கள். எழுத்தை வாசிப்பதில் தவறுதலோ என்று எண்ண



இடம் இல்லை. தமிழ் டைப்ரைட்டரைக் கொண்டு டைப் செய்திருக்கிறீர்கள். ஆகையால் அதன்படியே ஆபீசில் நடந்திருக்கிறார்களே ஒழிய வேறொன்றும் இல்லை. இப்படிக்கு......

ஆசிரியர்.

இதன்மேல் ராஜலக்ஷ்மிக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. இந்தப் பதில் கடிதமே இன்னுங்கூடக் கைக்குச் சுடுகிற மாதிரியே இருக்கிறது:

7

....என்னிடம் டைப்ரைட்டர் இல்லை. என் வீடு 44-ஆம் நம்பர் அல்ல, 4-ஆம் நம்பர். ஏற்கனவே சொன்னபடி என் பெயர் 'ராஜலக்ஷ்மி'யே ஒழிய, 'சுந்தரம்' அல்ல. அந்தப் பதினோராம் பக்கத்தை நான் அனுப்பவும் இல்லை.

தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால், தங்கள் மணிஆர்டர் என் கையில் சேராதபடி என்ன என்ன உபாயம் தேட முடியுமோ அதெல்லாம் நான் செய்திருக்க வேண்டும்! பணத்தின்மேல் எனக்கு அவ்வளவு வெறுப்பு வந்துவிடவில்லை என்றே அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது. என்னுடைய எதிர் வீட்டின் நம்பர் 44. அதன் வாசல் சுவரில் தொங்கும் பலகைகளில் ஒன்றில் 'சுந்தரம்' என்கிற பெயர் வரைந்திருக்கிறது. இந்த விவரம் நான் தற்செயலாகப் பார்த்தது எனக்கு ஞாபகத்திற்கு வருவதற்குக் காரணம், நான் எப்பொழுது என் வீட்டு மாடி வராந்தாவுக்குப் போனாலும், சீக்கிரத்தில் எதிர்வீட்டின் மாடி உள் ஒன்றிலிருந்து ஓர் இளைஞர் ஜன்னல் வழியாக, பைனாகுலர் என்கிற இரட்டைக் கண்ணாடியை உபயோகித்து என்னை உற்றுப் பார்க்கிறார். ஜன்னலை விட்டு அசைவதில்லை. அப்பேர்ப்பட்ட அதிகப் பிரசங்கி ஏதாவது மோசம் செய்யத் துணிந்தாரோ, அல்லது அவர் உங்களுக்கு ஏதாவது கதையனுப்பி, அதற்குச் சம்மானமாக அவருக்கு அனுப்பின மணிஆர்டரை எனக்கு அனுப்பிவிட்டதாக, தப்பாக எண்ணுகிறீர்களோ? அவர் கதை

அனுப்பியிருந்தால் அந்த விவரம் தங்கள் ஆபீசில்தான் தெரியும்; எப்படியோ, அதற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. எனக்கு என்று இன்னும் மணிஆர்டர் அனுப்பப்படவில்லை என்பதை மாத்திரம் அழுத்திச் சொல்லுவேன்.

ராஜலக்ஷ்மி.

இப்பொழுது என்ன சொல்லுகிறாய், ராதா? கதைகளை ஜோடிக்கிற ராஜலக்ஷ்மிக்கும், பல விதத்திலும் அநுபவப்பட்ட ஓர் ஆசிரியருக்குமே தெரியவில்லை என்றால் உனக்கு எப்படி உண்மை தெரிந்துவிடும் என்று கேட்கிறாயா? ரொம்ப சரி. ஆசிரியர் மறுபடியும் ஆபீசில் விசாரித்துவிட்டு, பிராமாணிகரானபடியால், தம் கட்சியை விட்டுக்கொடுக்காத போனாலும், உள்ளதை உள்ளபடியே எழுதினார்:

8

....ஆமாம். அவர் "எப்படி முடியுமோ?" என்று ஒரு கதையை அனுப்பியிருக்கிறார். அதுவும் பத்துப் பக்கந்தான். ஆகையால் நாங்கள் அதை அங்கீகரித்திருந்தால், அதற்கும் அதே சம்மானந்தான் ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்தக் கதை பங்குனி மாசக் கடைசியில்தான் எங்களுக்குக் கிடைத்ததால் சித்திரை வருஷப் பிறப்பு மலருக்கு உபயோகிக்கச் சாவகாசம் இல்லாததால், அதை அங்கீகரிக்கவில்லை. படித்துப் பார்த்து, அபிப்பிராயத்தைக் குறித்துக் கொள்ளக்கூட இல்லை. ஆகையால் அதற்குச் சம்மானம் அனுப்பக் காரணமே இல்லை. ஆகையால் நான் மறுபடியும் சொல்லுவது, தங்களுடைய பிரதியின் பதினோராம் பக்கத்தில் குறித்திருந்த பெயருக்கும் விலாசத்திற்கும் தங்களுக்குத்தான் மணிஆர்டர் செய்தோம். இனிமேல் நாங்கள் செய்ய வேண்டியதோ, செய்யக் கூடியதோ ஒன்றுமில்லை........ஆசிரியர்.

கேட்டாயா, ராதா? இரண்டு ராஜ்யங்கள் தம்மில் சமாதானமாகப் போக முயன்றும் முடியாமல் போனால், யுத்தத்தைத் துவக்குவதற்கு முன்பாக, 'அல்டிமேடம்' (என்றால் 'கடைசி வார்த்தை' யாம்) என்று ஒன்று மற்றொன்றுக்கு அனுப்புவது வழக்கமென்கிறார்களே, அந்த மாதிரியில் ராஜலக்ஷ்மி தன்னுடைய 'அல்டிமேட'த்தைத் தெரிவித்திருக்கிறாள், இந்தக் கடிதத்தில்:

9

......சரி. நான் போலீஸாருக்குத் தெரிவித்து விடுகிறேன். அதன்மேல் அவர்கள் தங்களுடைய ஆபீசில் வந்து விசாரிப்பதில் மாத்திரம் அல்ல, ஆபீசில் நடந்திருக்கும் பிழைகள் பகிரங்கமாகப் போவதிலும் தங்களுக்கு ஆக்ஷேபம் ஒன்றும் இல்லை என்று நம்புகிறேன்.

ராஜலக்ஷ்மி.

அதன்மேல் ஆசிரியர் வேறு என்ன செய்ய முடியும்? உலகத்தில், எழுத்து மூலமாக வாதித்தும் நிவர்த்திக்க முடியாத எந்தக் கஷ்டங்களையும் நிவாரணம் செய்ய இக் காலத்தில் என்ன செய்கிறார்கள்? ஒரு 'கான்பரன்ஸை'க் கூட்டுகிறார்கள். ஒத்துப் போக வழி உண்டா என்று, சேர்ந்து உட்கார்ந்து பேசித் தேடுகிறார்கள். அவரும் ஒரு 'கான்பரன்ஸை' இந்தப் பத்தாவது கடிதத்தை அனுப்பி இவ்விதம் கூட்டினார்:

10

......தயவு செய்து, நாளைத் தினம் (புதன் கிழமை) மூன்று மணிக்கு, தாங்கள் இவ்விடம் வந்தால் நலமாயிருக்கும். அந்த 44-ஆம் நம்பர் வீட்டுச் சுந்தரம் என்பவருக்கும் இவ்விதமே எழுதுகிறேன். மூன்று பேர்களுமாகச் சேர்ந்து விஷயத்தைச் சமரசமாகவே முடித்துவிடலாமென்று நம்புகிறேன்.

......ஆசிரியர்.

அப்படியே, முந்தாநாள் (புதன்கிழமை) 'மீட்டிங்கு' நடந்தது. ஆசிரியரை எனக்குத் தெரியுமாகையால் அவருடன் ஏதோ விஷயமாகப் பேசும்பொருட்டு, நான் தற்செயலாக அதே சமயத்தில் அங்கே போய்ச் சேர்ந்தேன். என்ன சொல்லுகிறாய், ராதா? என்னை உனக்கு நன்றாகத் தெரியும்; 'தற்செயல்' ஒன்றும் இல்லை; அந்தக் கூட்டம் நடக்கப்போவதை எப்படியோ தெரிந்துகொண்டுதான், நான் அந்தச் சமயத்தில் அங்கே போய்ச் சேர்ந்தேன் என்று நீ பந்தயம் வைக்கத் தயாரா? நன்றாக வைத்துக்கொள்ளேன்! எப்படி முடிந்தாலும் நீதான் ஜயித்துவிடுவாய்!

நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் ராஜலக்ஷ்மி வந்து சேரவே, அவர் என்னை நோக்கி, "நீங்கள்தாம் மத்தியஸ்தராக இருங்களேன்" என்று வேண்டிக்கொண்டு, இந்தப் பத்துக் கடிதங்களையும் என்னிடம் கொடுத்து, "இவற்றைப் படித்துவிட்டால் நடந்திருக்கும் விஷயம் புரிந்துவிடும்" என்று சொன்னார்.

நான் அப்படியே படித்துக்கொண்டிருக்கையில் அந்த எதிர் வீட்டு ஆண், சுந்தரம் என்பவர் சற்றுத் தயக்கத்துடனே நுழைந்தார். அவரைக் கண்டவுடன், ஆசிரியர் சற்றுப் பிரமித்துவிட்டு, "இவரா 44-ஆம் நம்பர் வீட்டுச் சுந்தரம்? அம்மா, ராஜலக்ஷ்மி, நீங்கள் சொல்லுவதை எல்லாம் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்கு மேலும் சிறிது தெரிவிக்கிறேன். அந்தப் 'பதினோராம் பக்கம்' ஆதியில் இவருடைய கதையைச் சேர்ந்ததாக இருந்திருக்க வேண்டும். அதைக் கழற்றி நீக்கி, உங்களுடைய கதையின் பதினோராம் பக்கமாகச் சேர்த்தவர் இவர்தாம் என்று பிரமாணமும் செய்வேன்" என்று முடித்தார். உடனே, என்ன காரணமோ, நீதான் சொல்ல வேண்டும் ராதா, ராஜலக்ஷ்மி சற்று அந்த ஆண் சுந்தரத்தின் கட்சியாகத் திரும்பிக்கொண்டாள்.

"ஏன் அப்படிப் பழி சாற்றுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏனா? இவர் தாம் ஓர் அச்சாபீசு வைக்கப்போவதாகவும் அதற்கு வேண்டிய வேலை நுட்பங்களைத் தாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி, சென்ற பங்குனி மாசத்தில் இந்த ஆபீசில் சம்பளமில்லாத 'அப்ரென்டிஸ்' ஆகச் சில தினங்கள் வேலை செய்தார். ஆகையால் அப்பொழுது அந்தக் கடிதத்தைத் தம்முடைய கதையிலிருந்து உருவி உங்களுடைய கதையில் சேர்க்கிற



''என் பணத்தை அப்படித் திருடலாமா?'' என்று கேட்டாள்.

செப்பிடுவித்தை செய்ய இவருக்கு வேண்டிய சந்தர்ப்பம் இருந்திருக்கும். (சற்று மூச்சை உறிஞ்சிக்கொண்டு) பொறுங்கள். எனக்கு இன்னொரு விஷயங்கூட ஞாபகத்திற்கு வருகிறது. நீங்கள்தாமே, அம்மா, ஊர்மிளா தேவி, இவரை உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று எழுதி ஒரு சிபாரிசுக் கடிதமும் இவரிடம் கொடுத்தனுப்பினீர்கள்?'' என்று என்னவோ பிரமாதமாகக் கண்டுபிடித்து விட்டமாதிரி என்னைக் கேட்டார்.

''ஆச்சரியந்தான்! எனக்கு என் சொந்த அண்ணாவைக்கூட நன்றாய்த் தெரியாதோ?'' என்று நான் நியாயமாகக் கேட்டேன்.

அதன் மேல் அவர், ''ஓகோகோ!'' என்று சிரித்தார். ''உங்களுக்கு அண்ணாவா? ஆகையினால், இவருடைய வேண்டுகோளைச் சாதிக்க உங்களுடைய யுக்தி உதவி சேர்ந்ததா? அப்படியானால் உங்களுடைய கோரிக்கை யோக்கியமாகத்தான் இருக்கும். இருந்தாலும் மார்க்கம் இதுவே. இதைச் சாமர்த்தியமாக, படிப்படியாகத்தான் திட்டம் போட்டிருப்பீர்கள். அந்தப் படிகளை எண்ணிப் பார்க்கிறேன். என்ன காரணமோ, இந்த அம்மாளுக்கு நாங்கள் அனுப்பும் மணிஆர்டர் பணம் இவர் கையில் சேர வேண்டுமென்பது உங்களுடைய நோக்கம். அதைச் சாதிப்பதற்கு, முதற்படி, இந்த ஆபீசில் இவரை ஏதோ சாக்குச் சொல்லி நுழைத்துவிட வேண்டியது. இரண்டாவது, இந்த அம்மாள் கதையின் எழுத்துப் பிரதியைப் பார்த்து வயணம் அறிந்துகொள்ள வேண்டியது. மூன்றாவது, அது பத்தாம் பக்கத்தின் கடைசியில் முடிகிறபடியால், அதன் பதினோராம் பக்கமாக, ஒரு கடிதத்தில் இவருடைய மேல்விலாசத்தைச் சேர்க்க வேண்டியது. ஆனால் கையெழுத்து வித்தியாசம் தெரியக்கூடாதே, அதற்காக அதை டைப் அடித்துவிடுவது. நாலாவது, அதைக் கையிலாவது பையிலாவது கொண்டு வருவதென்றால் மடிப்புகள் அதிகமாக விழும். சமயம் வாய்ப்பதற்கு முன் எத்தனை நாள் கொண்டு வர வேண்டியிருக்குமோ? ஆகையால் அதை வேறொரு கதையின் பதினோராவது பக்கமாக வைத்து அந்தக் கதையை இங்கே சேர்த்து விடுவதுதான் பத்திரம். ஐந்தாவது, சமயம் கிடைத்தபொழுது அதை இந்த அம்மாளின், ''எப்படி மனம் துணிந்ததோ!'' கதையின் கடைசியில் சேர்த்துவிட்டு இவருடைய 'அப்ரென்டிஸ்' தொழிலை முடிவுக்குக்கொண்டு வந்துவிடுகிறது. ஏன்? நான் சொல்லுவது சரிதானே? இப்படி உங்களுடைய 'ஐந்து படித் திட்ட'த்தை நிறைவேற்றிவிட்டீர்கள். அதற்குமேல் நான் சொல்வது என்னவென்றால், அந்த ''எப்படி முடியுமோ?'' கதையை, சகோதரி அம்மாள்தான் எழுதி உதவியிருப்பாள். ஆகையால் அதை நான் தீபாவளி மலருக்கு வைத்துக்கொள்ளப் போகிறேன். அதுதான் என்னுடைய 'ஒரே ஒரு படித் திட்டம்'—'' இவ்விதம் நீட்டிக் கொண்டே போனார்.

''அதற்குள்ள சம்மானத்தை அனுப்புவதற்கு மேல்விலாசத்தை எங்கே கண்டுபிடித்து யாருக்கு அனுப்பப்போகிறீர்கள்? ராஜலக்ஷ்மி அம்மாளின் சம்மானத்தைப்பற்றி என்ன முடிவுக்கு வந்தீர்கள்?'' என்று நான் கேட்டு, அவரைத் திரும்பவும் 'மீட்டிங்கு' விஷயத்திற்கு இழுத்தேன்.

அதற்கு அவர், "அம்மாள், ராஜலக்ஷ்மி, வேறு என்ன எண்ணமோ, உபாயமோ, கூடி இருக்குமோ, தெரியாது. ஆனல் உங்களுடைய பணத்தைத் திருடுவதாக அவர் ஒன்றும் செய்திருக்க மாட்டார். அவரைப் பார்த்தாலும் அந்த மாதிரி மனுஷ்யராகத் தோன்றவில்லை. இந்த அம்மாளும் அதற்கு உதவி செய்திருக்க மாட்டாள். அந்த மட்டும் நிச்சயம். ஆனல் இந்த உலகத்தில் பண ஆசை ஒன்றுதான மனிதர்களை ஓட்டுகிறது? ஐந்து அம்சத் திட்டங்களைத் தேடச் செய்கிறது? கவி என்ன சொன்னர்? 'மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை, மண் ஆசை, பொன் ஆசை'—" இப்படி மெதுவாகப் பாடிக்கொண்டே அவர் எழுந்து வெளியே போய்விட்டார்.

தங்கியிருந்த எங்கள் மூவரில், பேச ஆசையும் ஆனல் அத்துடனே சற்றுப் பயமும் கலந்து, எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் என் அண்ணு திணறிக்கொண்டிருக்கையில், ராஜலக்ஷ்மி முந்திக்கொண்டாள்.

அவனை நோக்கி, "எதற்காக இப்படி எல்லாம் செய்தீர்களாம்? அது இருக்கட்டும், ஏன் என்னைப் பைனகுலர் வைத்துக்கொண்டு அடிக்கடி உற்றுப் பார்க்கிறீர்களாம்? நான் என்ன பந்தயக் குதிரையா? சினிமாப் படமா? எனக்கு அசௌகரியமாக இருக்காதா?" என்று கேட்டாள்.

இந்தக் கேள்வி என் அண்ணுவுக்கு எவ்வளவு சகாயமாக இருந்திருக்கும், நீயே சொல்லு, ராதா! உடைப்பு எடுக்கும்போல் தவிக்கும் ஏரிகரையில் சரியான இடத்தைத் தேடிப் பிடித்து மண்வெட்டியைக் கொண்டு நாமே கொஞ்சம் வெட்டிக்கொடுக்கிற மாதிரிதானே? உடனே அவன் பொழிய ஆரம்பித்தான்:

"நான் வேறு என்ன பண்ணுகிறதாம்? என்னவோ, அதிருஷ்டம், எதிர்த்த வீட்டில் இரண்டு அறை வாடகைக்குக் கிடைத்தது, அங்கே வந்துவிட்டேன். அப்புறம்? நான் என்னதான் பண்ணுகிறது? யாரைக் கேட்டாலும் ஒரே விதமாகச் சொன்னர்களே? 'அவளா? அவள் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதில்லையாம். ஒரு வாலிபனேடும் பரிசயம், அறிமுகங்கூடச் செய்துகொள்ளுவது இல்லை' என்று. எதிர்த்த வீட்டில் இருக்கிறேமே, பார்க்கவாவது பார்க்கலாம் என்றல், மத்தியில் தெரு அவ்வளவு விசாலமாக இருக்கிறதே! (பேசப் பேச, தைரியம் ஏறிவிட்டது போல் இருக்கிறது.) பைனகுலர் இல்லாமல் நான் எப்படிப் பார்க்கிறது? நீயாக இருந்தால் என்ன செய்வாய்? சொல்லேன்! நீ ஒரு புருஷனயிருந்தாய் என்று வைத்துக்கொள்ளேன் - பகவத் கிருபையில், நல்ல வேளையாக அப்படி இல்லை; ஆனல் அப்படி இருந்தாய் என்று பேச்சுக்கு வைத்துக்கொள்ளேன். அப்பொழுது உன் அதிருஷ்ட வசத்தால் உன் எதிர்வீட்டில், உன் மாதிரி, கண்ணைப் பறிக்கிற அழகான பெண் ஒருத்தி இருந்தால், அவளைப் பார்த்துக்கொண்டே இராமல் வெறுமே இருக்க முடியுமா? வாஸ்தவத்தைச் சொல். பைனகுலரா! ஒரு தூரதிருஷ்டிக் கண்ணுடியை ஜன்னல் கம்பியில் சேர்த்துக் கட்டிவைத்துக் கொள்ள மாட்டாயா? வெறுமே இருப்பாயோ, நீயே சொல்லு."

சற்று மூச்சு வாங்கினன். உடனே ராஜலக்ஷ்மி ஒரு கேள்வியை நுழைத்தாள். ஆனல் குரலில் கடினமே இல்லை. சற்றுக் கொஞ்சுகிற மாதிரியே இருந்தது. "என்னுடைய பணத்தை அப்படித் திருடலாமா?" என்று கேட்டாள்.

"நீ மாத்திரம் என் இருதயத்தைத் திருடலாமோ?" என்று கேட்டான் அண்ணு.

ஆசிரியர் காட்டிய வழியைப் பின்தொடர்ந்து, நானும் அறையை விட்டு வெளியே போவதற்கு இது தகுந்த சமயமென்று தோன்றிற்று. அப்படியே செய்தேன். இருவருமே அதைக் கவனிக்கவில்லை.

மற்றோர் அறையில் இருந்தார் ஆசிரியர். விரலைத் தூக்கிக்காட்டி என்னை நிறுத்தினர். சொன்னர்: "முன் காலத்தில் என்றல் இம்மாதிரி பிடிவாதக்காரப் பெண்ணுடன் பரிசயம் செய்வதென்றல், அவளை ரதத்திலாவது, விமானத்திலாவது தூக்கிக்கொண்டு போய்விடுவதுதான் வழி. ஆனல் நீங்கள் இந்தக் காலத்திய நடவடிக்கைக்கு விரோதம் செய்யாமல், ஆனல் இந்தக் காலத்திய வாழ்வு கொடுக்கும் இடத்தையெல்லாம் பிடித்துக்கொண்டு, அவருடைய பெயர் 'சுந்தரம்' என்பதையும் உபயோகப்படுத்தி, இவ்விருவருக்கும் பலாத்காரமான, என்றும் மறக்க முடியாத பரிசயத்தைச் செய்துவிட்டீர்கள்.—"

"நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லை. ஆனல் எனக்கு நாழிகையாகிறது. வீட்டிற்குப் போக வேண்டும். இந்தப் பத்துக் கடிதங்களும் உங்களுக்கு இனி என்ன உபயோகம்? நான் எடுத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லி, அவருடைய பதிலுக்குக் காத்திராமல் வந்துவிட்டேன்.

அவர்கள் விஷயம் எப்படி வளர்ந்துகொண்டு இருக்கிறதா? அண்ணு இன்னும் என்னைப் பார்க்க வரவில்லை. அவன் என்ன பண்ணுவான்? ஒழிந்திருக்காது! ஆனல் ஆவணி பிறந்துதான் கல்யாணம் இருக்கும். ஆனி மாசத்தில் இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன.

கல்யாணத்தில்தான் முடியும் என்று என்ன நிச்சயமா? கோட்டையை அவன் முற்றுகை போடும் விதத்தில் வேறு என்ன விதமாய் முடியும்? ஆமாமாம்; அவள் பேசுவதை நானும் அடிக்கடி கேட்டிருக்கிறேன் - தான் விவாகமே செய்துகொள்ளப் போவதில்லை என்றும், சமூக சேவைக்கே தன்னுடைய வாழ்நாளை எல்லாம் அர்ப்பிக்கப்போவதாகவும்! இந்த மாதிரி வார்த்தைகளைக் கேட்டால் என் தாயாரைப் பெற்ற பாட்டி என்ன சொல்லுவாள் தெரியுமா? அவள் மிகவும் கெட்டிக்காரி. அது பொய் என்றுவது, அதைத் தான் நம்பவில்லை என்றுவது தர்க்கம் ஒன்றும் செய்யமாட்டாள். மிருதுவாக, ஒரு விருந்துக்கு அழைக்கும் குரலில், "ஆமாம்! புடலங்காய்!" என்று சொல்லி முடித்துவிடுவாள். அதோடு எதிராளி சுருண்டு விழுந்துவிடுவாள்.

சமூகமாவது, சேவையாவது! சரியான புருஷன் இன்னும் ஹாஜராகவில்லை என்று மாத்திரந்தானே அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம்? "புடலங்காய்!" என்று சொல்லுவது உனக்கு என்னவோ கர்நாடகமாகத் தோன்றுகிறதா? வேண்டாமே, அதற்குப் பதிலாக, நாகரிக

மாய், புது நாடகமாய், ''ஆமாம், முட்டைக் கோசு!'' என்று சொல்லிவிடேன். ஆனால் அந்தச் சமூக சேவைப் பாடத்தை அவள் என் அண்ணுவிடம் ஒப்பிக்கப்போவதும் இல்லே. கறிகாய்களின் பெயரை அவன் உச்சாடனம் பண்ணுவதற்கு அவசியமும் இருக்காது. ஆசிரியரின் அறையில் நான் கண்ட கடைசிக் காட்சியில் அவளுடைய முகத்தை நான் புத்தகம் மாதிரி வாசிக்க முடிந்ததே! என் அண்ணுவும் என்னைப்போல் அழகாக இருப்பானேவா? சரிதான் போ!

இதோ பார், வேலைக்காரன் ஒரு கடிதம் கொண்டு வருகிறான். அண்ணுதான் அனுப்பியிருக்கிறான். மிகவும் கோபமாக எழுதியிருக்கிறான். சரி, அந்தப் பத்துக் கடிதங்களோடு, இதைப் பதினோராவதாகச் சேர்த்துக் கொள்ளுகிறேன். என்ன சொல்லுகிறாய்? பத்தைப் பதினென்றாகச் செய்வதே என் அண்ணுவுக்குத் தொழில் போலிருக்கிறது, என்றா? ரொம்ப சரி.

என்ன எழுதியிருக்கிறானா? வாசிக்கிறேன், கேள்: ''நம்ம சாஸ்திரிகளைக் கேட்டால் இந்த ஆனிமாசத்திலாவது, அடுத்த ஆடிமுழுவதிலுமாவது ஒரு முகூர்த்தங்கூடக் கிடையாது என்கிறாரே! அப்படிக்கூட இருக்குமா? முப்பத்திரண்டு, முப்பத்துமூன்று நாளில் ஓர் அரைமணி நேரங்கூட நல்ல வேளையாக இருக்காதா? இவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான் போலிருக்கிறது. வேறே யாராவது சாஸ்திரிகள் நல்லவராக உனக்குத் தெரியுமா?''

பாவம்! என் அண்ணு ஆத்திரக்காரன்; கோபக்காரன். எங்கள் குடும்பத்திலேயே நான் ஒருத்திதான் சாது. அவனிடம் நேரில் பேசித்தான் சமாதானப்படுத்த வேண்டும். எப்படியோ, கல்யாணம் நிச்சயந்தானே என்று சந்தேகப்பட்டாயே, அது தீர்ந்ததா, இப்பொழுது? இந்தப் பதினொரு கடிதங்களையும் நல்ல வெல்வெட்டு மூடின அட்டைகளைக் கொண்டு ஒரு புத்தகமாகப் பைண்டுசெய்து, கல்யாணத்தின்போது தம்பதிகளுக்கு ஓதியிடப் போகிறேன் - அவர்களுடைய அந்நியோந்நிய வாஞ்சை எப்படி வளர்ந்தது என்ற ஞாபகார்த்தமாக.

ஆமாம், ராதா, இதை மாத்திரம் கொடுத்தால் போதுமா என்ன? புடைவை வேஷ்டியுந்தான் வாங்கி ஓதியிட வேண்டும். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், இப்பொழுது நம் இரண்டு பேருக்கும் ஒழிந்திருக்கிறது. வெள்ளிக்கிழமையுமாக இருக்கிறது. நாலு கடைகளுக்குப் போய்ப் புடைவையைப் பார்த்துவிட்டு வரலாம், வா.

ஊர்மிளா.

குறிப்பு : ஆமாம்! முட்டைக்கோசு! எனக்குத் தெரியாதோ, 'பார்த்துவிட்டு' வருவதன் அர்த்

மூன்று ஒளி

எல்லா வித மான ஒளிக்கும் மூல ஒளியாய்க் கங்கு கரை காணுத ஒளிப் பெருவெள்ள மாய்ப் பரஞ் சோதியாய்இறைவன் ஒளிர்கிறுன். எல்லையற்ற தான அவ்வொளிப் பிழம்பைச் சோதி என்று குறிப்பது வழக்கம். அது நம் புலன்களுக்கு அப்பாற்பட்டது.

அந்தச் சோதியினின்றும் ஒளியைப் பெற்று எல்லையுடையனவாய் ஆனால் மிகப் பெரியனவாய் விளங்குவன சுடர். சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்றும் முச்சுடர்கள். மூன்றும் மனிதனுடைய ஆற்றலுக்கு அப்பால் நிற்பவை; ஆயினும் எல்லைக்குள் அடங்கியவை.

சோதியாகிய இறைவன் சுடர்களை ஏற்றி வைத்திருக்கிறான். நாமோ விளக்கை ஏற்றி வைக்கிறோம். நம்முடைய முயற்சிக்கு அகப்பட்டதாகவும் எல்லையிற் குறுகியதாகவும் இருப்பது விளக்கு. ஆயினும் அது இருட் பிழம்பை ஓட்டுகிறது.

சோதி, சுடர், விளக்கு இந்த மூன்றும் தொடர்புடைய மூன்று ஒளிகள். இறைவனே இந்த மூன்றுமாக இருக்கிறான் என்று போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே!

—திருவாசகம்.

தம்? வருஷப்பிறப்புத்தினம் சொல்லப் போகிறாய்—அவளுக்காகப் புடைவைக் கடைக்குப் போனபொழுது, இந்தப் புடைவை, என்னவோ, என் அதிருஷ்டந்தான், அகப்பட்டது. இதை இன்றைக்கு உடுத்துக்கொள்ளலாமே என்று வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். 150 ரூபாய்க்கு, இது ரொம்ப மலிவில்லையா,—இத்யாதி. அவளுக்காகக் கடைக்குப் போகிறேன் என்று சாக்கு எதற்காக?

லக்ஷ்மண ஐயர்.

மறுகுறிப்பு : வருஷப்பிறப்புக்கு நீ ஒரு புடைவை வாங்கிக்கொள் என்று அகத்துக்காரர் ஞாபகமாக, அநுகூலமாக, முன்னதாகவே சொல்லிவிட்டால், அகமுடையாள் ஏன் சாக்கைத் தேடுகிறாள்?

ஊர்மிளா. ★

அவள் பெயர் அல்லி. அவன் அவளை ராணி யென்று அழைத்தான். அவள் அல்லி ராணியேதான். ஆனாலும் பெண்.

"ஒரு வத்திப் பெட்டியும் ஒரணு சிமெண்ணெயும் தாங்கய்யா" என்று கடையில் வந்து நின்ற அல்லியை விளக்குக் கம்பத்தின் கீழ் நின்றவன் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

காசை எடுத்துக்கொண்டு கடைக்காரக் கிழவன், "ஆயா தீவாளிக்கு ஆவடிக்குப் போயிட்டாங்க போலிருக்குது, மக வூட்டுக்கு" என்றான்.

அல்லி அதற்குப் பதில் அளிக்காமல் கம்பத்தடியில் நின்று தன்னையே கவனித்துக்கொண்டிருந்தவனைப் பார்த்தவண்ணமிருந்தாள். குளிருக்கும் தூற்றலுக்காகவுமோ என்னவோ, அவன் தலை, கழுத்து, உடல் எல்லாவற்றையும் மேல்வேட்டியால் சுற்றி மூடிக்கொண்டிருந்தான். இடுப்பு வேட்டி, கால் பாதம்வரை புரளவில்லை. முதல் பார்வையிலேயே நாட்டுப்புறத்து ஆள் என்று சொல்லிவிடலாம். அவள் மாலை வேலை முடிந்து வருகையிலே அவன் தன்னைப் பின் தொடர்ந்து வந்ததைக் கண்டிருந்தாள். அவன் புது ஆள். ஏன் அப்படிப் பார்க்க வேண்டும்?

கடைக்கு எதிரே இருந்த குடிசைக்குச் செல்லுகையில் அவள் விழிகளில் இகழ்ச்சி தெறிக்க வெட்டிவிட்டு நடந்தாள்.

கடைக்காரக் கிழவன் இதைக் கவனிக்கத் தவறவில்லை. அந்த ஆள் கடைக்கு நெருங்கி வந்து மெள்ளக் கிழவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"இந்தப் பொண்ணு யாரு?"

கிழவன் கபடமாகக் கண்ணைச் சிமிட்டிவிட்டுச் சிரித்தான். "அல்லி, அல்லிராணி!" என்றான்.

"நல்ல பேருதான்" என்று அவனும் சிரித்தான்; "அரையணு வெத்திலே பாக்குக் குடுங்க" என்றான்.

"ஆமா, பொருத்தமான பேரு; கொஞ்ச நாளாத்தான் இருக்குது. வீட்டுக்கார ஆயா தான் துணை. ஆனல், அல்லியேதான்...."

கிழவன் மறுபடியும் சிரித்துவிட்டு வெற்றிலை பாக்கை எடுத்து வைத்தான்.

"ஏன்? அருச்சுனன் யாரும் வரலியோ இன்னமும்?" பேச்சாக இல்லை அது.

"யாரையும் காணேம். இங்கே இருக்கிற பய ஒருத்தன் தான்தான் அருச்சுனன்னு போயி நல்லா உதைபட்டுக்கிட்டு வந்தான்." கிழவனின் கபடச் சிரிப்பு, 'உனக்கும் எச்சரிக்கை' என்பதுபோல் இருந்தது.

அவன் அதற்குப் பதில் கூறவில்லை. மறுபடியும் கம்பத்தின் கீழேயே போய் நின்று வெற்றிலை போடலானன்.

இரவு மணி பத்தடித்துவிட்டது. கடைசிப் பஸ் போய், கடைகளையெல்லாம் மூடிவிட்டார்கள். தூற்றல் கொஞ்சம் வலுத்தது.

அவன் கழுத்துத் துணியை நன்ருக இழுத்துப் போட்டுக்கொண்டான். மெள்ள அந்தக் குடிசையின் பக்கமே அவன் கால்கள் சென்றன. சந்தியில் உள்ள பாதரச விளக்கொளி குடிசைப் புறம் விழாதபடி குடிசை உள்ளே தள்ளி இருந்தது. முன்னல் ஒன்றரை முழ அகலத்திலே ஒரு சிறிய திண்ணை இருந்தது. அதில் வந்து உட்கார்ந்தவாறே கதவிடுக்கு வழியாக அவன் உள்ளே எட்டிப் பார்த்தான். உள்ளே இன்னும் கைச் சிமினி எரிவது தெரிந்தது.

"டொக்....!"

"டொக், டொக், டொக்...."

"யார் ஐயா? ராவேளையிலே வந்து கதவு தட்டுறது?"

பதில் உடனே எழவில்லை அவனுக்கு.

''ஏய்யா? யார் ஐயா?''

அவன் தயங்கித் தயங்கி, ''வந்து.... ஒரு நெருப்புக்குச்சி வேணும்'' என்ருன்.

''என்னுது? நெருப்புக்குச்சி வேணுமா? ஏய்யா? அதுக்கு இங்கேதான் இடம் ஆப்புட்டுதா?''

இப்படிச் சொன்னுலும் அவள் கதவைத் திறக்காமல் இல்லை.

''இல்லே, நெருப்புப்பெட்டி கீழே சேத்திலே விழுந்திட்டுது. பீடி பத்தவைக்க..'''

அவள் அவன் திண்ணையிலே அநுமதியில்லாமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததுமே சீறி விழுந்தாள்.

''ஏய்யா இங்கே உக்காருறே? எந்திரய்யா, என்னுன்னு நினைச்சுக்கிட்டே? பீடி கொளுத்திக்கிடறதுன்னு இந்தா, விளக்கிலே கொளுத்திட்டுப் போ, மருவாதியா.''

அவள் கைச்சிம்னியை அவன் முகத்தருகில் நீட்டியபோது அவன் எழுந்து விலகி நின்ருன்.

''கோவிச்சுக்காதே அம்மா. பஸ் தவறிப் போச்சு. தூற்றல் போடுது. இந்தத் திண்ணையிலே ராத் தங்கிட்டுப் போயிடறேன்'' என்று கெஞ்சினுன்.

''இதென்ன சத்திரஞ் சாவடி, ரெயில் டேசன்னு எண்ணிக்கிட்டியா? போ, போ!''

''விரட்டாதேம்மா, நான் இதை மீறி உள்ளாற வந்தேன்னு கேளு. இங்கேயே..''

''ஓஹோ? ஏய்யா? நெருப்புப் பத்த வச்சிக்கிடறேன்னே? இப்ப உள்ளாற வந்தேன்னுன்னு வரம்பு பேசறே? நல்லாத்தான் இருக்குது ஒளுங்கு! போய்யா!''

''கோவிச்சுக்காதே ஆயா. காச்சல் வரும்போல் இருக்குது. கூவம் போறேன். வூட்டிலே எனக்கு எல்லாரும் இருக்கிருங்க. நீ....என்னமோ நெனைச்சுப் பயப்பட வேணும்.''

அவளை நோக்கிக் கெஞ்சிக் குழைந்தன அவன் விழிகள்.

ஒரு கணம் உறுத்துப் பார்த்தாள் அல்லி. காற்றுப் போன சோடாவைப் போல் கோபத்தின் நெடி இறங்கியது.

அல்லி

ராஜம் கிருஷ்ணன்

''கண்ணாலம் கட்டியிருக்கியாய்யா?'' நாட்டுப்புறத்தான் என்ற நினைப்பிலே போலும், கேள்வியிலே அலட்சியம்.

''ம், முறைப்பொண்ணு இருக்குது, இனி மேத்தான்....'' என்றான் அவன் சகஜமாக.

அல்லி, சிம்னியை எடுத்துக்கொண்டு உள்ளே போனாள். தன் பாயடியில் போட்டிருந்த கோணியை எடுத்து வந்தாள்.

''இந்தாய்யா! ஈரத்திலேயா படுத்துக் கிடறே? இதைப் போட்டுக்க!''

அவன் சற்றே வியப்புடன் பார்த்தான். பிறகு வாங்கிக்கொண்டான். அல்லி கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தாள். விளக்கை அணைத்தாள். கோணி இல்லாததால் மண் தரையின் சில்லிப்பு, கந்தல் பாயையும் நைந்த பழைய சேலை விரிப்பையும் தாண்டி அவள் உடலுள் உறைத்தது. ஒருக்களித்து உடலைக் குறுக்கிக்கொண்டாள்.

அவன் வெளியே கொட்டாவி விடும் ஒலி கேட்டது. அல்லிக்கு நெஞ்சிலே ஏதோ ஒரு நரம்பு அசைவு கண்டாற்போல் இருந்தது. ஆண்களை நம்பவே கூடாதென்பது அல்லியின் உறுதியான அநுபவம். அவள் சூடு பட்டவள். இன்ன இடத்திலே இப்படிப் பேசி நடித்து ஏமாற்ற வேண்டும் என்று தெரிந்தவன் ஆண். அவளுக்கா தெரியாது, வாசலில் படுத்திருப்பவனின் எண்ணம்?

''டொக், டொக்....''

''என்னய்யா? படுக்க வுடமாட்டேபோல் இருக்குதே?''

''இல்லேம்மா, சட்டுனு கதவைத் திற; வௌக்கைப் பொருத்து. என்னமோ சரசரன்னு கூரையிலே பூந்து வூட்டுக்குள்ளாற.. கம்முனு தாழம்பூ வாசம் பாரு'' அவன் பரபரத்துச் சுவாசத்தை இழுத்துவிட்டபோது, அல்லிக்கு உணர்வே சில்லிட்டுப் போயிற்று.

''என்னாங்க?''

''தாழம்பூ வாசம் தலைக்கு ஏறுதே, திறந்திடம்மா கதவை!''

வத்திப்பெட்டியை எடுத்துச் சிம்னியை ஏற்றுவதற்குள் கைகள் நடுங்கித் தொலைத்து விட்டன. சட்டென்று கதவைத் திறந்து வெளியே வந்தாள். மூச்சை உள்ளுக்குள் இழுத்தபோது தாழம்பூ வாசம் வந்ததா இல்லையா என்றுகூடத் தெரியவில்லை.

''பார்த்தியாய்யா?''

''சரசரன்னு சத்தம் கேட்டுதேன்னு பார்த்தேன், கருகருன்னு மின்னிச்சு. நீ தப்பா நினைச்சுக்கிட்டா என்ன பண்ணுறதுன்னு யோசனை. தெரிஞ்சுக்கிட்டு எப்படிச் சும்மா இருக்க?'

''இப்ப என்னய்யா பண்ணுறது?'' பீதி கலக்கியது நன்றாகத் தெரிந்தது.

''உள்ளாற கூரையிலே விளக்கை நீட்டிப் பார்த்தா, கண்டுபிடிச்சு அடிச்சுப் போடலாம். இல்லாட்டி, பாம்பை வச்சுக்கிட்டுப் படுத்துத் தூங்குவாங்களா?''

''ஐயையோ! அப்ப, இந்தாய்யா விளக்கு; நீ உள்ளாற போய்ப் பாரேன்.''

அவள் உடலோடு குரலும் நடுங்கியதைக் கவனித்தவாறே அவன் விளக்கை வாங்கிக் கொண்டு உள்ளே காலடி வைத்தான்.

அல்லி வெளியே தள்ளி நின்றுகொண்டே, ''மூலையிலே விறகுக் குச்சி இருக்கும் பாரு; தெற்கால மூலையிலே'' என்று கத்தினாள்.

அவன் தளர்ந்த முக்காட்டை இழுத்துப் போட்டுக்கொண்டு அறையெங்கும் கதவைச் சாத்திக்கொண்டு தேடினான். மூலைச் சட்டி பானைகளை நகர்த்தினான். கம்பால் கண்ட இடங்களிலெல்லாம் தட்டினான்.

''சொட்!'' என்ற பெருஞ் சத்தம் கேட்டது.

அல்லியின் உடல் கிடுகிடுத்தது.

''கூரையிலேயிருந்து விழுந்திச்சாய்யா?''

''ஆமா, அந்தாண்ட வருது, எட்டிக்க.. போ, வருது!''

''ஐயையோவ்!'' என்று அலறிக்கொண்டு அல்லி துள்ளி ஓடினாள். வெளியே வலுத்திருந்த தூற்றல். ஊதற்காற்று வேறு உடலைச் சிலிர்க்கச் செய்தது.

அவன் சிம்னியை வெளியே கொண்டுவந்து உற்று உற்றுப் பார்த்தான். ''போயிட்டுது. ஓரடி வாலிலே வாங்கிக்கிட்டுத் தப்பி ஓடிட்டுது. நீ உள்ளாற போம்மா.'' அவன் விளக்கைக் கீழே வைத்தான்.

''ஐயையோ!'' மருண்ட பார்வையுடன் திண்ணையிலே மறுபடியும் குந்திக்கொண்டவனை நோக்கினாள் அல்லி; ''அடி வாங்கிய நாகம் வர்மம் வச்சுக்கிட்டு மறுபடி வந்திடாதாய்யா? பெரி..ய..பாம்பா?''

''அப்படித்தான் சொல்லுவாங்க. ஏப்பா! இத்தா கோடு, இத்தா நீளம்!''

இரு கைகளையும் நீட்டி அவன் நீளத்தையும் பருமனையும் அவளுக்கு விவரித்தபோது அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

இந்தச் சமயம் பார்த்து வீட்டுக்கார ஆயாளும் போய், வீட்டில் அவள் தனியே இருக்க வேண்டுமா?

''எனக்குப் பயமாயிருக்குதய்யா! திரும்பி அது வந்திட்டா?'' என்று நடுங்கினாள்.

''அது வந்தாக்கூட உன்னை ஒண்ணும் பண்ணாது. என்னைத்தான் வருமம் வச்சுக்கிட்டுக் கடிச்சுப் போடும். அதுக்கு நீ ஏன் இப்படிப் பயப்படணும்? ராவெல்லாம் நான் உக்காந்திட்டே இருப்பேன். அது வந்தால் அடிச்சுப் போடுவேன்.''

அல்லி அவனையே பார்த்துக்கொண்டு சிலையாக நின்றாள்.

அவள் கதவைத் தாழிட்டுக்கொண்டு படுக்கிறாள். காலையில் கதவைத் திறந்து பார்க்கையில் நீலம் பாரிக்க, அவன் நீட்டிய கால் நீட்டிய படி....அந்த நினைவிலேயே நெஞ்சு அதிர்ந்தாற் போலிருந்தது. பெண்தானே அவள்?

''வேண்டாய்யா, நீ உள்ளாற வந்திடு'' என்றாள்.

''பூ, அது தீண்டிச் சாகணுமின்னு சுழி இருந்தா நாம மாத்திட முடியுமா?''

''அதுக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு அது வாயிலே விழணுமாய்யா? உன்னைக் கட்டிக் கிடப்போற பொண்ணை நினைச்சேனும்..''

அவளுக்கு ஏனோ அழுகை வந்துவிடும் போல் இருந்தது.

''அவ தலையெழுத்து அப்படி இருந்தா?'' என்று திருப்பிக் கேட்டான் அவன்.

''சரித்தான்யா, உள்ளாற வந்து குந்திக்க. எனக்கென்னமோ குலை நடுங்குது.'' அவள் பேச்சைத் தட்ட முடியாமல் அவன் உள்ளே செல்லத்தான் வேண்டியிருந்தது. அந்தக் கோணியை அவன் கதவோரம் விரித்தான்.

''கதவோரம் வேண்டாய்யா. வாசப்படியிலே



அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

கதவுமேலே பொக்கை விழுந்து சந்து பாரு!'' என்று அவள் எச்சரித்தாள்.

அவன் தள்ளிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். அவளும் பாயின்மேல் உட்கார்ந்தாள். சற்றத் தொலைவில் சிம்னி விளக்குச் சாட்சியாக எரிந்தது. ஒருவரை ஒருவர் பார்க்கவும் இல்லை; பேசவும் இல்லை.

''கல்யாணம் கட்டவேயில்லையா புள்ளே நீ?'' பழத்தில் செருகப்பட்ட ஊசிபோல மெள்ளப் பாய்ந்தது இந்தக் கேள்வி.

''அதைப்பத்தி உனக்கேய்யா கவலை? சாகப் போறியே அநியாயமான்னுற இரக்கத்தாலே உள்ளே வந்து படுத்துக்கிடுன்னு சொன்னேன். உன் குணத்தைக் காட்டிடாதே. இவ, அல்லி, தெரிஞ்சுக்க!''

''அடாடாடா! நீ இப்படி நினைக்கிறதானு நான் வெளியே போயிடறேன். சும்மாக் கொட்டுக் கொட்டுன்னு உக்காந்திருந்தா எப்படிப் பொழுது கழியும்? ஏதானும் பேசலாம்னு கேட்டேன். ஒருத்தருக்கு ஒருத்தர் அப்படி நம்பிக்கையில்லாமே போயிட்டா, அப்புறம் எப்படிம்மா உலகத்திலே எல்லாரும் பிழைக்க முடியும்?''

விசையால் உந்தப்பட்டவள்போல் அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''உங்க கும்பலுக்கு நம்பிக்கைன்னு சொல்லி நயவஞ்சகம் பண்ணுறதுதானே பிழைப்பு?''

அவள் கடுமை அவனுக்கு இன்னும் சிரிப்பையே மூட்டியது.

''ஒரு பார்வையிலே முடிவுகட்டிப் போடுறியே? பொம்பிளையின் புத்தியையே இந்த அவசர குணந்தான் கெடுத்திடுது. யோசிக்க வேண்டாமா?''

அவன் ஏதோ பொடி வைத்துப் பேசுவது போல் இருந்தது.

''அப்படி யாரும் முடிவு கட்டிடலே. பார்த்து, தெரிஞ்சு, அறிஞ்சு சொல்லுறேன். பெண்பிள்ளை நம்புறதுபோல ஆண்பிள்ளை உண்மையா நடக்கிறதில்லே.''

எங்கேயோ பார்த்துக்கொண்டு நெடுமூச்செறிந்த அல்லி, தானுகவே தொடர்ந்து, ''உயிருக்குயிரா ஓர் ஆளை நம்பினேன். முப்பது ரூபாய்க் காசு; அவர் போட்டது சாயம்னு விளக்கிட்டது'' என்றாள். சொல்லுகையில் அவளை அறியாமலே குரல் நெகிழ்ந்தது.

சட்டென்று அல்லி, ''வெத்திலை போடுறீங்களா?'' என்று கேட்டாள்.

''இருந்தால் குடு. இன்னைக்கு ரா தூங்கக் கூடாது. அது எப்படியும் வரும்'' என்றான் அவன்.

அல்லி விளக்கை எடுத்துக்கொண்டு எழுந்தாள். பானையைத் திறந்து சிறிய ஓலைப் பெட்டியைக் கொண்டு வந்து அவன் முன் வைத்தாள். அவன் சகஜமானவன் போல் ஓலைப் பெட்டியைத் திறந்து வெற்றிலையைத் துடைத்துக்கொண்டே, ''ஏது, முப்பது ரூபாய்க் காசு?'' என்று தூண்டினான்.

அவன் தூண்டவே வேண்டியிருக்கவில்லை.

''எப்படியோ, உடம்பு உழைச்சுப் பாடு பட்டு நாலு காசு சம்பாதிக்கிற பெண்பிள்ளை, கட்டிக்கிட்டவன் முன்னே தன் காசையும் தன்னையும் பெரிசா நினைக்கிறதில்லே. என்னங்க? அவரு நல்ல வேலையில்லாம, பட்டணத்திலே காசுக்காகக் கஷ்டப்பட்டபோது என் மனசு பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். அதெல்லாஞ் சொல்லிக்க முடியாது. உங்களுக்

குப் பொய்போல இருக்கும். முப்பது ரூபாய்க் காசு.''

''இல்லே, சொல்லு சும்மா'' என்றான் அவன்.

அவள் ஒருவனை நம்பி, முட்டாளான விவரம் அது. சொல்லக்கூடிய விவரமா? சே, சே! நறுக்கென்று நாக்கைக் கடித்துக் கொண்டு விட்டாற் போன்ற உணர்ச்சியுடன் அவள் திரும்பிக்கொண்டாள்.

அவன் வெற்றிலைப் பெட்டியை மூடிவிட்டுப் பின்னுக்கு நகர்ந்து கொண்டான். விளக்கு எரிந்தது; நேரம் போயிற்று.

இந்நேரம் படுத்து அயர்ந்திருக்க வேண்டியவளுக்கு வேண்டாமென்று அணையிட்டாலும் அந்த, வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத நினைவுகள் ஒவ்வொன்றாக வந்தன. அதே போல் சிம்னி விளக்கொளி, சட்டிபானைகள், அறை, அவன். எத்தனை இரவுகள் அவளுக்கு இன்னும் நினைவிலிருந்து அழியாத இன்பப் பூங்காவாக விரிந்திருக்கின்றன! வாழ்வு நீள இப்படியேதான் இருக்கும் என்றுதான் அவள் எண்ணியிருந்தாள்.

பகல் பதினொரு மணி எப்போது அடிக்கும் என்று காத்திருப்பாளே! ''ஏண்டி? சமையல் ஆகவில்லை, அதற்குள் வந்துவிட்டாயே? நில்லு சற்றே'' என்று சோறு எடுத்துப்போகும் வீட்டில் நிற்க வைத்துவிட்டால் அவளுடைய நெஞ்சு துடித்துக் கொட்டிவிடும். பட்டை உரிக்கும் வெயில் அனலாகவே தோன்றாது. மௌன்ட் ரோடில் அவளுடைய எஜமானியின் புருஷருக்குப் பகல் உணவு கொண்டுபோகும் அந்த வேலைக்கென்று தனியாகக் கிடைத்தது இரண்டு ரூபாய்தான். ஆனாலும் அது இரண்டாயிரம் ரூபாய் வாங்குவதற்கு மேலான சந்தோஷத்தை அல்லவோ அங்கு அவன் உருவத்தில் அவளுக்கு அளித்தது? அந்தக் காரியாலயத்துக்கு வெளியே மரத்தின் கீழே சரியாகப் பன்னிரண்டரைக்கு அவன் வந்து நிற்பான். அவனுக்கு அச்சகத்தில் வேலை. படித்தவன். இளமை துடிக்கும் உடற்கட்டு. சராய் அணிந்துகொண்டு சட்டையை உள்ளே செருகாமல் மேலே தொங்க விட்டுக்கொண்டு மரத்தில் சாய்ந்து அவளை வரவேற்றுப் புன்னகை செய்வான்.

வெறும் புன்னகை பேச்சாக முற்றி, அவர்களை ஒருவருக்கொருவர்என்று இணைக்கும்வரை கனிந்துவிட்டது. பெற்றோர் என்ற பேச்சே அவனுக்கும் கிடையாது; அவளுக்கும் தெரியாது. அவளுக்கு நினைவு தெரிந்த நாளாய் அக்காளிடந்தான் வளர்ந்து வந்திருக்கிறாள். பகல் சாப்பாடு, துணி அநேகமாய் வேலை செய்யும் வீடுகளிலேயே கிடைத்துவிடும். இரவுச் சாப்பாடு, படுக்கைக்குத்தான் வீட்டுக்குப் போவாள். சம்பளமாகக் கிடைக்கும் பதினைந்து ரூபாயையும் அக்காளிடம் கொடுத்து வந்தாள். அவளுடைய அத்தானுக்கு மாவு மில்லில் வேலை. தங்கையின் காசைச் சேர்த்து வைத்து, நல்ல பயலாகப் பார்த்துக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அக்காளும் அத்தானும் அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு.

கொஞ்ச நாட்கள். அதற்குள் மௌன்ட் சாலை மரத்தடி நாடகம் அத்தான் வரைக்கும் எப்படியோ எட்டிவிட்டது. அவர் கண்களுக்கு அவன் 'நல்ல பயலா'கத் தோன்றவில்லை. அக்காளையும் அத்தானையும் காசு பணத்தோடு உதறிவிட்டு, அவள் அவன் தோள்களை நம்பி வந்துவிட்டாள். திருவல்லிக்கேணிச் சந்து ஒன்றில் புதைபொருள் இலாகாக்காரர்களின் கண்களுக்குத் தப்பிய வீடு. எட்டுக் குடும்பங்களுக்கு நடுவே அவர்களுக்கு ஓர் அறை. எட்டிய தூரத்திலே அவளுக்கு ஒரு வீட்டில் நிறையச் சம்பளத்தோடு வேலை கிடைத்தது. சாப்பாடு போக மாசம் எட்டு ரூபாய் சம்பளம். ஆரம்ப நாட்களின் இன்பத்துக்கு ஈடு இணையே இருக்கவில்லை.

அவன் காலை ஆறு மணிக்கெல்லாம் கிளம்பிவிடுவான். மாலை ஆறு மணிக்குத்தான் திரும்புவான். திரும்பும்போது பூவோ, காபிக்கடைப் பலகாரமோ, பழமோ அவளுக்குக் கண்டிப்பாகக் கையில் ஏதேனும் கொண்டு வருவான். யார் கொள்ளிக் கண் பதித்தார்களோ? அவனுக்கு வேலை போய் விட்டது. ஏற்கனவே பொருந்திக் கையில் காசு சேர்த்து வைத்துக்கொள்ளத் தெரியாத தன்மையுடையவன். வேறு எங்கெல்லாமோ வேலைக்கு அலைந்தான். அல்லி தளராமல் உற்சாகம் கொடுத்தாள், அவனுக்கு. அவன் முகம் மலர வேண்டும் என்று இரவு அவன் சோர்ந்து வீடு திரும்புகையில் குறைவில்லாமல் ஆக்கிப் படைத்தாள். என்றாலும் அவன் இயல்பான மலர்ச்சி, கேலிப் பேச்சுக்கள் எல்லாம் மங்கிவிட்டன.

''அல்லி, நீ சம்பாதிச்சு எனக்கு ஆக்கிப் போடுறியே! மனசு முள்ளாப் பிடுங்குது'' என்று அவன் புழுங்குவதை அவள் தாள மாட்டாள். ''இந்தா, இதானே வாணாங்கிறது! நீ வேறே, நான் வேறியா?'' என்று அவன் வாயைப் பொத்துவாள்.

நாட்கள் கனத்துடனேயே நகர்ந்தன. அவனுக்கு மாசச் சம்பளமாக வர வேலையே கிடைக்கவில்லை. காலை ஆறு மணிக்குப் போவான்; இரவு நெடுமூச்சுடன் திரும்புவான்.

''அல்லி, இன்னும் ஒரு மாசம் போனால் தீவாளி. அதற்குள்ளாற எப்படியேனும் நான் சம்பாதிச்சு, உனக்கு நல்ல சேலை, சோளி இரண்டும் வாங்காதபோனால் நான் ஆண்பிள்ளை இல்லை'' என்றான் ஒரு நாள்.

அவளுக்குத் திடுக்கென்றது. அவன் சுய கௌரவம் இவ்வளவு துடிப்புள்ளதாக இருக்கும் என்று நினைத்திருக்கவில்லை அவள்.

''எனக்குத்தான் சேலை இருக்குதே; தீவாளிக்கு எங்க வூட்டம்மா நல்ல சேலை எடுத்துத் தாரேன்னு சொல்லியிருக்கிறாங்க. அவுங்க மகளுக்கு குளிச்சிருக்குதே? நான் புள்ளை துணியெல்லாம் தோய்க்கிறேன்.''

அன்று வேலைக்குப் போனதும் வீட்டுக்கார அம்மாள் அவளைக் கிளர்த்திவிடும் ஆசைப் பொறியைப் போட்டாள். ''ஏண்டி? நம்ம மருமகனை இங்கே பட்டணத்துக்குப் பக்கமே பதினைஞ்சு மைலிலே மாத்திட்டாங்க. நீ நல்லா வேலை செய்யிறே; குழந்தை பார்த்துக்கிறே; கைப்புள்ளைக்காரி கூடவே போவியாடி? மாசம் பதினாறு ரூபாய் தருவாங்க, சாப்பாடு போட்டு. நீ நம்பிக்கையுள்ளவளாயிருக்கே.''

அல்லி திகைத்தாள். பதினாறு ரூபாய் சாப்பாடு போக! ஆனால் தொலைவாயிற்றே! அவனை விட்டு எப்படிப் போவது?

''அவங்களை விட்டு எப்படிம்மா வருது?'' என்று நெளித்தாள்.

"அவனுக்குத்தான் வேலை இல்லை என்றுயே. ஒரு ஆறு மாசம் இந்தப் புள்ளை பெரிசாகும் வரை இருந்தாயானுல் போதும். திரும்பி வந்து விடலாம். பஸ் இருக்குது, பத்திலே எட்டிலே வந்து பார்க்கிறுன். என்னமோ நீ ஒட்டிப் பழ கிட்டே; குழந்தையும் ஒட்டிக்கொண் டிருக் கிறுன்."

"அவங்ககிட்டே கேட்டுச் சொல்லுறேம்மா. வந்து...." என்றுள் அல்லி.

ஆனுல் வீட்டுக்கு வந்ததும் அவனிடம் கேட்க நா எழவில்லை. அவன் வேலை கிடைத்து விட்ட நற்செய்தியுடன் வந்திருந்தால் கேட்டிருப்பாள். இல்லாவிட்டால் அவன் அவளைத் தவருக நினைத்துக்கொண்டுவிட்டால்? மேலும் அவள் அவனை விட்டுப் போனுல் இரவு அவன் சோர்ந்து வரும்போது இனிமையை யும் மலர்ச்சியையும் கூட்டுவது யார்? எச மானி அம்மாள் தினம் தினம் "கேட்டாயாடி?" என்று நச்சரித்தாள்.

பத்து நாட்கள் சென்றபின் அவள் அவனிடம் அதைப் பிரஸ்தாபித்தாள்.

"அப்போதே ஏன் சொல்லவில்லை, அல்லி? எனக்காக உன் நல்ல காலத்தையுமா கெடுத் துக்கிடறே? இப்பவே அவங்க கிட்டே வாரேன்னு சொல்லிட்டு வா!" என்றுன் அவன்.

அவன் கண்ணெளி முன் அவள் பண ஆசை நொடித்துப் போயிற்று. "உங்களை விட்டுப் போட்டு நான் அம்பது ரூபாய் வர்றதாயிருந்தா லும் போகமாட்டேன்" என்றுள்.

"நல்லதைச் சொல்லு றேன், ராணி! (அவன் அவளை அநேகமாக அப் படித்தான் அழைப்பான்.) அங்கே போய், அந்த ஐயா பெரிய வேலைக்காரர்ன் னுறே, அவுங்க ஆபீஸிலே எனக்கும் ஏதானும் வேலை கிடைக்கும் போலிருந் தால் நானும் வந்திட றேன்" என்று அவளுக் குத் தெம்பு கூட்டினுன்.

அவளுக்குச் சமாதான மாகவில்லை.

கடைசியில் ஒரு நிபந் தனையுடன் சம்மதித் தாள். அவர்கள் தீபாவளி கழித்துத்தான் போகப் போகிருர்கள். இன்னும் பதினைந்து நாட்களுக்குள் அவனுக்கு வேலையோ, இல்லை ஏதாவது அதிருஷ் டமோ கிட்டிவிட்டால் அவள் போக மறுத்துவிட லாம். 'அதிருஷ்டம்' என் பதற்குப் பணம் என்று தான் பொருள். அவன் குறுக்கெழுத்துப் பந்தயத்தில் வாரம் நாலணுச் செலவழித்து வந்தான். அந்தத் தடவையும் எழுதியிருந்தான். அதுவரை ஐந்து ரூபாய்களுக்குமேல் அதிருஷ்டம் அவர் கள் பக்கம் அருள் சுரந்திருக்கவில்லை. ஆனுல் அப்படியே இருக்காதல்லவா?

வைத்த கெடு நெருங்கி நெருங்கி வந்துவிட் டது. இரண்டு நாட்களில் தீபாவளியும் வர இருந்தது. எஜமானியம்மாளுக்கு அவள் மாட்டேன் என்று சொல்லவில்லை. ஆகட்டும் என்றும் சொல்லவில்லை. அவள் தயங்கிய தால் வருவாள் என்றே நம்பினுர்கள்.

அன்று வேலை முடிந்து பகல் வீட்டுக்குத் திரும்பியவள், முற்றத்தில் பாண்டம் கழுவிக் கொண்டிருந்தாள். வாசலில் தபால்காரன் வந்தான். "அம்ஸவல்லியம்மாள், மணியார் டர்" என்று அவன் குரல் கொடுத்தபோது அவள் கைச் செம்பைக் கீழே வைத்துவிட்டு வியந்து பார்த்தாள். அது அவள் பெயர்தான்.

நெஞ்சு துள்ள ஈரக் கையைச் சேலையில் துடைத்துக்கொண்டு வெளியே வந்தவள்



மரத்தில் சாய்ந்து புன்னகை செய்வான்.

படபடவென்று விழி இமைகளைக் கொட்டிக்கொண்டு, ''அம்஁வல்லியம்மாளுக்கா மணியார்டர்? எங்கேருந்து? எத்தினி ரூபாய்?'' என்று விசாரித்தாள்.

அம்ஸவல்லி என்ற பெயரில் யாருமே அவளை அழைப்பதில்லை. பாட்டியின் பெயர், அதுதான் தனக்கும் என்று அக்காள் சொல்லியிருந்தது உண்டு. அவள் அதை அவன் காதிலும் போட்டிருக்கிறாள். அந்தப் பெயரில் கூப்பன் எழுதி, அவளை ஆச்சரியத்துக்கு உள்ளாக்குகிறானோ? அவளுடைய இந்த மகிழ்ச்சி கலந்த வியப்பு ஒரு விநாடியில் மாறியது. ''ஐம்பது ரூபாய், பொன்னுசாமி, தங்கத்தம்மன் கோயில் தெரு, சூளையிலிருந்து வந்திருக்குது'' என்று தபால்காரர் தெரிவித்தபோது அவளால் நம்ப முடியவில்லை. அவன் சொல்லிக்கொடுத்து அவளுக்கு அல்லி என்று கையெழுத்து மட்டும் போடத் தெரியுமே ஒழிய, படிக்கத் தெரியாது. கையெழுத்துப் போட்டபின், அரை ரூபாய்ச் சில்லறையைத் தபால்காரரிடம் கொடுத்துவிட்டு அவள் கூப்பனைப் படித்துக் காட்டச் சொன்னாள்.

அவர் நல்ல மனசுடன் படித்துச் சொன்னார்: ''அல்லிக்கு அத்தான் பொன்னுசாமி எழுதிக்கிட்டது. ஐம்பது ரூபாய் உன் காசு. நீ முகத்திலே முழிக்க மாட்டேன்னு போனாலும், உன் காசு எங்களுக்கு வேணும். நாங்கல்லாம் வூட்டைக் காலி பண்ணிட்டு, அம்பத்தூரோடு போகிறோம்.—பொன்னுசாமி.''

அவளுக்கு உள்ளம் கசிந்தது. அவருக்கும் நல்ல காலம் வந்து, இருவருமாய் அம்பத்தூருக்குப் போக வேண்டும். வேலனுக்குச் சொக்காய், சராய், ராஜிக்குக் கொலுசு எல்லாம் வாங்கிக்கொண்டு போய் அவர்களை வியப்பில் ஆழ்த்திவிடவேண்டும்.

ஆனால் முதலில் இப்போது ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க வேண்டுமே! அவளுக்கு ஒரே தவிப்பு. கையில் நாற்பத்தொன்பது ரூபாய் எட்டணா இருக்கிறது. இந்த அதிருஷ்டம் அவன் அதிருஷ்டமாக ஏன் ஆகாது?

அவள் மூளைக்குப் பளிச்சென்று ஒரு யோசனை உதயமாயிற்று. நல்ல வேளையாக முன்பக்கம் யாரும் அவளுக்குப் பணம் வந்ததைக் கவனிக்கவில்லை. காபிக்கடை ஐயா சற்றுப் போனால் தெருவோடு போவார். அன்று வெள்ளிக்கிழமை. போட்டி முடிவுகள் அன்றுதான் தெரியும். இரவு வீடுவரு முன்னரே அவன் விசாரித்துக்கொண்டு வருவது வழக்கம். அவரிடம் அப்போதே கண்டு பேசி, முப்பது ரூபாயைக் கொடுத்து, பரிசு வந்தது என்று சேர்ப்பித்து விடக்கூடாதா?

அல்லி வாசலிலேயே காத்திருந்தாள். காபிக் கடைக்காரர் தெருவோடு போனபோது வழி மறித்துக் கூப்பிட்டாள். மெல்லிய குரலில் விஷயத்தை விவரித்த போது அவர் சிரித்தார். தர்க்க விவாதங்களுக்குப் பிறகு, இரண்டு ரூபாய் கைக்கூலியும் கொடுத்து அவரைச் சம்மதிக்க வைத்தாள்.

அன்றெல்லாம் அவளுக்கு எஜமானியின் வீட்டில் வேலையே ஓடவில்லை. அவன் செய்தியறிந்து வீட்டுக்கு வருகையில் முகத்திலே ஒளியோடு வருவான் என்ற கற்பனையிலேயே உள்ளம் சுற்றிச் சுற்றி வந்தது.

வேலை முடிந்து வீடு திரும்ப அன்று மாலை இருட்டிவிட்டது. அவளுக்கு முன் அவன் வந்திருந்தால் வாசலில் நின்றே வரவேற்பான். ஒருவேளை முற்றத்தில் முகம் கழுவிக்கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணத்துடன் அவள் உள்ளே விடுவிடென்று நுழைந்தாள்.

முன்கட்டுத் தாழ்வாரத்திலே மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டு கூடத்து அறைக் கிழவனார் உட்கார்ந்திருந்தார். அவளைக் கண்டதுமே, ''தம்பி இன்னைக்குச் சுருக்க வந்திட்டுச் சீவிச் சிங்காரிச்சுக்கிட்டு இப்பத்தான் போவுது. 'எங்கே தம்பி? சட்டைப் பையிலே காசு குலுங்குதாங்காட்டியும்? ஏது தம்பி?'ன்னு கூட விசாரிச்சேன். வேலை கிடைச்சிட்டாப் போலிருக்குது, சிரிச்சுக்கிட்டே போச்சு'' என்று சமாசாரம் தெரிவித்தார்.

அவள் உள்ளம் துள்ளியது. ''ஓகோ? நான் இல்லாமலே சேலை எடுக்கப் போயிட்டாரா?'' என்று சிரித்துக்கொண்டாள். பச்சையா, சிவப்பா, வாயிலா, சிலுக்கா என்ற கற்பனையிலேயே நேரம் போயிற்று. ஏழு, எட்டு, ஒன்பது என்று மணி ஏற ஏற அவளுடைய ஆவல் கட்டு மீறியது. வாசலிலே நின்றாள்.

அவளுடைய பூத்துப் போன விழிகளுக்கு விருந்தாகக் கடைசியில் அவன் வருவது தெரிந்தது. அவன் நடையில் அவள் எதிர்பார்த்த உல்லாசமோ, வேகமோ ஏன் இல்லை? வீட்டை நெருங்கி வருகையிலே அவளைக் கண்டு மலர்ந்த முகம் வாடிய கத்திரிக்காயில் நீர் தெளித்தாற்போல் அல்லவோ இருந்தது? என்ன ஏமாற்றம்? அவன் கைகளில் அவள் எதிர்பார்த்த காகிதப் பொட்டலம் இல்லை.

அவளுடைய விம்மிய இருதயம் தணியவில்லை; கண்கள் கொட்டவில்லை. ''எங்கே போய்விட்டு இந்நேரம் சாவகாசமாய் வர்றீங்க?''

ஏமாற்றத்தை ஒரு புன்னகையால் மறைத்துக்கொண்டு அவள் கேட்டதற்கு அவன் வாய் திறந்து பதில் ஏதும் சொல்லவில்லை.

வலக்கை அவள் கழுத்தைச் சுற்றி வளைந்தது. அவள் துடிப்பு எங்கே போயிற்று? ஏமாற்றம் எங்கே போய் ஒளிந்துகொண்டது?

தன்னை வளைத்து இன்பத்தைத் தவிர வேறு ஒன்றுமே அறிய் முடியாத உலகுக்குக் கொண்டு போய்விட்டாற் போலிருந்தது அவளுக்கு. உள்ளே செல்லும்வரை அவளுக்குப் பேச்சே எழவில்லை.

அறைக்குள் நுழைந்ததும் அவன் அவளைத் தன் அணைப்புக்குள்ளே திணற வைத்தான். முகத்தோடு முகம் பதித்துக் கண்ணீர் வடித்தான். அல்லி திடுக்கிட்டாள்.

''என் ராணி இல்லாமல் நான் எப்படி இருப்பேன்? நாளைக்கு நீ போய்விடுவாயே ராணி? அதிருஷ்டம் ஏன் பொய்யாக இருக்க வேண்டும் இன்னும்?''

அவன் பிடியிலிருந்து சட்டென்று திமிறி அவள் அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள்.

சற்றுமுன் வீடு திரும்பிய காபிக் கடைக்காரர் அவளை வாசலில் கண்டு சிரித்துக்கொண்டே 'கொடுத்துவிட்டேன்' என்று சொன்னது பொய்யா? கிழவனார் பொய் புகன்றாரா?

''ஏனுங்க? இன்னைக்கு வெள்ளிக்கிழமையாச்சே, போட்டி பார்த்திட்டீங்களா?''

அவன் உதட்டைப் பிதுக்கினான்.

''அப்படி அதிருஷ்டம் இருந்தால் எனக்கு

ஒரு வேலை நல்லதாய்க் கிடைச்சிருக்காதா? நான் அதிருஷ்டம் கெட்டவன், ராணி. ஒரு இரண்டு ரூபாய்க் காசுகூட விழலே. தீவாளி நம்மை இருட்டாகவே வச்சிருக்கும் என்கிறதை என்னால் தாள முடியலே. காபிக் கடை ஐயாவை அப்போதே பார்த்துக் கேட்டுவிட்டேன்.''

அல்லிக்கு யாரோ தொண்டையை இறுகப் பிடித்தாற்போலிருந்தது. அவள் உடலைக் குலுக்கிக்கொண்டாள்.

''உங்களுக்கு இஷ்டம் இல்லாதபோது நான் போகலீங்க'' என்றாள்.

''ஊஹூம், ராணி, எனக்காக நீ உன் நல்ல காலத்தையும் கெடுத்துக் கொள்ளக் கூடாது. பதினஞ்சு மைல்தானே ராணி? எனக்கு நல்ல காலம் வராதா? உன்னை ஒரு நாள் வந்து கூட்டிக்கிட மாட்டேனா?''

அவளுக்கு மாலை மாலையாகக் கண்ணீர் பெருகியது.

''ஏன் அழுவுறே, ராணி? நான் உன்னை வந்து அப்புறம் கூட்டிக்கிட மாட்டேனா?''

வெம்பனியால் நனைந்த கன்னங்களிலே அவன் கைவைத்துத் துடைத்தபோது அவளுக்குப் புண்ணுக்கு மருந்து தடவினாற் போல் ஆறுதலாக இருந்தது.

அவன் நாணயம் இல்லாதவனாக, அவளுக்குப் பொய்யானவனாக நிரூபணமாகிவிட்டால் கூடத்தான் என்ன? அவள் கேட்டுக் கிறலை ஏற்படுத்திவிடக் கூடாது. எப்படி இருந்தாலும் அந்த முப்பது ரூபாயை அவள் அவனுக்காகத்தான் கொடுத்தாள். அவன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். முப்பது ரூபாய்க்கோ சேலைக்கோ அவள் அவனை விரும்பியிருக்கவில்லையே! அவள் அவனைத் தெரிந்துகொண்டு விட்டதைக்கூடக் காட்டிக்கொள்ளக் கூடாது. அது, கடைசி இரவுதானே என்னவோ? அந்த இனிமையைக் குலைத்துக் கொள்வானேன்?

அல்லி உதடுகளைக் கடித்துக் கண்ணீரை விழுங்கிக்கொண்டாள்.

இரவு கழிந்தது. அன்று முழுவதும் அவளுக்கு அங்கே வேலை இருக்கும். மறுநாள் தீபாவளியாதலால் இரவுங்கூட வீடு வருவதற்கு முடியுமோ என்னவோ? தீர்மானமாகப் போவதானால் அப்போதே தன் துணிமணிகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டு விடலாமே.

முகத்தைக் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு அவள் தன் சாமான்களைக் கட்டிக் கொண்டாள். அயர்ந்து தூங்கிய அவனை எழுப்பினாள்.

''நான் வரேனுங்க....''

மூட்டையும் கையுமாய் அவனிடம் விடை பெற்றுக்கொள்ள நின்றபோது அவள் விழிகள் நீரில் மிதந்தன.

''ராணி!'' உணர்ச்சி தொண்டையைப் பிடிக்க அவள் கையை எடுத்து மார்பில் அழுத்திக்கொண்டான்; ''போய் வரியா?''

அவள் தலையை ஆட்டினாள்.

மோவாயை நிமிர்த்தி, ''சிரி, ராணி'' என்றான் அவன் தழுதழுக்க. தூற்றலிலும் சாரலிலும் குவிந்த இதழ்கள் ஓர் ஒளிக்கதிரிலே மலர்ந்தாற்போல் அவள் சிரித்தாள்.

அவளுடனேயே அவன் வாசல்வரை வந்தான். இன்னும் கார்ப்பரேஷன் விளக்குகள் கூட அணைக்கப்படவில்லை. சந்தின் திருப்பம் தாண்டும்போது அவள் ஒரு முறை வீட்டு வாயிலைத் திரும்பிப் பார்த்தாள். அவன் தலையை அசைத்தான். நெற்றியில் சுருண்டு விழுந்த கிராப்புத் தலை, கோடு போட்ட சட்டை, சிரிப்பு. அதுதான் கடைசி.

இந்நேரமும் கையில் கசக்கிக்கொண்டிருந்த வெற்றிலைக் காம்பை வீசிவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் அல்லி.

''முப்பது ரூபாய்க் காசு!'' - அவளை அறியாமலே இதழ்கள் முணுமுணுத்தன.

''முப்பது ரூபாய்க்காக ஒருத்தன் நிறம் மாறிடுவானா? ஏம் புள்ளே? ஒரு பெண்பிள்ளை சம்பாதிச்சு ஆண் வாங்கிக்கிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்துதுன்னு வச்சுக்க. அவன் மனசை அது கொடுவாளாய் வெட்டிடும். அதுவும் அதை ஜேப்படிக்காரன்கிட்டே உடனே கொண்டுபோய்த் தொலைச்சிட்டா, என்ன பாடு படுவான்?'' அவள் பெருமூச்சுக்கு எதிரொலியாக ஒலித்தன அவன் சொற்கள்.

சரேலென்று அவள் திரும்பி அவனை ஊடுருவ நோக்கினாள். ஒரே பிரமிப்பு.

''நான்தான் கொடுத்தேன்னு எப்பிடித் தெரியும்? காபிக் கடைக்காரர் கைக்கூலி வாங்கிக்கிட்டு மோசமா செய்தாரு?''

''என்னது புள்ளே?....''

அவள் விழிகளில் கேலியும் கோபமும் தெறித்தன. ''புள்ளே, பொண்ணு! என்னங்க இது வெளையாட்டு? வேசம் போடுறாம்! முக்காட்டை அவுத்து இப்ப எறியாம போனால் நானே எறிஞ்சிடுவேன். கண்ணையும் பார்வையையும் பார்த்தால் மனசுக்குத் தெரியாதாங்காட்டியும்!''

அவள் நொடித்தபோது சிரிப்பு மத்தாப்பு ஒளிபோல அறையை நிறைத்தது. முக்காடு கழன்று அவனை வெளிப்படுத்தியது.

''போட்டி எழுதினவனுக்குத் தப்புச் சரி தெரியாதாங்காட்டியும்! ரூவாயை உடனே அனுப்பிடுவானே? ஆனால், ராணி, கடைசி வரை நீ கேக்காம, மூட்டையைத் தூக்கிட்டுப் போனியே, என்னாலே மறக்க முடியுமா அதை? ராணி, என்னைத் தெரிஞ்சுக்கிட்டுத் தானா இந்நேரம் இப்படி வெரட்டினே?''

''பின்னே? கூவம் போறாராம், கதை சொல்லுறாரு, கதை. கலவடையை மேலேருந்து போட்டுப் பாம்பு வுழுந்துதுன்னு சொன்னா, ஒருத்தி நம்பித் தெருவோடு வந்த ஆம்பிள்ளையை வூட்டுக்குள்ளே கூப்பிடுவாளாக்கும்! சேசே?''

''அப்ப, நிசம்மா நீ பாம்புன்னு பயப்படலே, பயப்படலே ராணி? குப்புற விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டலியாம்!''

அவன் விழுந்து விழுந்து சிரித்தான்; அவளும் பங்கு கொண்டாள்.

''அப்ப, நாளைத் தீவாளி கொண்டாட நம்ம வூட்டுக்கு வருவியோ? இல்லே, புள்ளே உன்னை விட்டுப் பிரியாதோ?'' என்றான் அவன்.

''புள்ளையா? ஏது? அவங்க அப்பவே தெலுங்குச் சீமைக்கு மாத்திப் போனாங்க. இனிமே என்னை வுட்டுப்போட்டுப் போயிடுவியா? நான் தான் இருப்பேனா?'' என்று கூறிய அல்லி உரிமையோடு அவன் தோளைப் பற்றிக் கொண்டாள்.

★

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 483-X52 TM

அன்புக்கு என்ன பேர் கொடுத்தால் என்ன? அது எப்போதும் உன்னதமானது.

பல வருஷங்களாக எனக்கு என்றிருந்த பணக்கார விமலா எனக்கு இல்லை என்று தெரிந்த அன்று பிறந்த வெறுப்பு என்னையே நாளாக ஆக அரித்துத் தின்றுவிடும் என்ற எண்ணத்தில் தவிக்கையில், ''சபரிமலைக்குப் போ. ஆயிரமாயிரம் ஜனங்கள் சாரி சாரியாகப் போவதைப் பார்க்கையிலும் சபரிமலை ஐயப்பனைத் தரிசிக்கையிலும் மனம் நிம்மதி அடையும்'' என்று நண்பன் அனந்தராமன் கூறினான்.

இனிமேல் எனக்கு நிம்மதி இல்லை, வாழ்க்கையைப் பொறுத்தமட்டில். உள்ளூரில் தினம் தினம் என் கண்முன் விமலாவும் அவள் கணவனும் பீச்சிலும் சினிமாவிலும் மனக் கைகோத்துப் போவதைக் காணக் காண எங்கே நிம்மதி பிறக்கும்? வெளியூருக்குச் சென்றாலும் குருவி கூடு திரும்புவது மாதிரி இங்கேயே தானே வர வேண்டும்? இருந்தாலும் ஏதோ ஒரு மாதமாவது அனந்தராமன் சொல்லுகிற நிம்மதி கிடைக்குமா என்று பார்க்கலாமே! மேலும் சபரிமலையைப்பற்றி நிறைய அறிந்தபின் அதையும் பார்க்காமல் விடுவானேன்?

புறப்பட்டேன். பாலக்காடு, பள்ளிப்புறம் கிராமத்தில் என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் எதைத் தவிர்ந்தாலும் சபரிமலை விஜயத்தைத் தவிர்வதில்லை என்று எனக்குத் தெரியும். பள்ளிப்புறத்துக்குப் போனபோது அவன் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை.

''வாடா, வா. நாளை நின்று புறப்படுகிறேன்'' என்ற அவன் என் கோலத்தைப் பார்த்துவிட்டு, ''என்ன, விரதம் இல்லாமல் புறப்படப் போகிறாயா?'' என்று கேட்டான்.

அவன் 'விரதம்' என்றதும், சென்னையில் ஜமேதார் கருணாகரன் பயமுறுத்தியது ஞாபகத்துக்கு வந்தது.

''நிங்களு ஈ பழனியும் திருப்பதியும் மாதிரி சபரிமலையை விசாரிக்கண்டா. ஒரு மண்டலம் விரதம் எடுக்கணுமாக்கும்!'' என்றான் அவன். ஆபீஸிலே சேர்ந்து ஒரு மாதத்துக்குள் சரளமாக அவன் பேச ஆரம்பித்துவிட்டான்.

''இல்லாவிட்டால் என்ன பண்ணிவிடுவான் ஐயப்பன்?''

''நான் ரெண்டு கொல்லம் போயிட்டுண்டு. வளரே பயங்கர தெய்வமாண!''

''இனிமேல் எந்தத் தெய்வமும் என்னை ஒன்றும் செய்ய முடியாதடா!'' என்றேன். காதல் தெய்வத்துக்குப் பலியானபிறகு, எந்தத் தெய்வந்தான் மேலும் என்னை நசுக்க முடியும்?

கருணாகரனிடம் சொன்னதைச் சேஷனிடமும் சொன்னேன்.

''விரதம் இல்லாவிட்டாலும் தேவலை, போ. மனசிலே பொல்லாததை மட்டும் நினைச்சூடாதே!'' என்றேன்.

''தெரியுமடா. ரொம்ப அலட்டிக்கொள்ளாதே!''

* * *

நடுங்கும் குளிரில் குளத்தில் மூழ்கி மூழ்கி எழுந்துவிட்டு, உதட்டின் ஜால்ராகூட இல்லாமல் வந்து என்னை எழுப்பினான் சேஷன்.

''டேய், கொச்சி எக்ஸ்பிரஸ் ஏழரைக்கு வருகிறது, கிளம்பு'' என்றான்.

ஒலவக்கோடு ஸ்டேஷனில் கூட்டம் நெரித்துக்கொண்டிருந்தது. இளைஞர்களும் பெரியவர்களும் கறுப்புச் சட்டையுடன் சிறு சிறு கூட்டங்களாக நின்றுகொண்டிருந்தார்கள்.

சேஷனுந்தான் என்ன? கறுப்பு ஜிப்பாவில் தன்னையே மறந்திருந்தான்.

''ஏண்டா, தமிழ்நாட்டிலே தெய்வம் இல்லை என்கிறவர்கள் கறுப்புச் சட்டைக்குள் பதுங்கினால், நீங்களும் கறுப்பை ஆதரிக்கிறீர்களே!'' என்றேன். தெய்வத்துக்கு இரு கட்சிகளிடமிருந்தும் கறுப்புக் கொடியா?

''டேய், நீ என்ன வேணுமானாலும் கதை எழுது. இதற்கு என்ன காரணம், அதற்கு என்ன விசேஷமென்று மாத்திரம் கேட்காதே. என் பக்தி மூடபக்தியென்று வேணுமானாலும் வைத்துக்கொள்.''

பக்தி சிரத்தையில் தோன்றின அவன் கோபத்தைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

இன்னும் அரைமணி நேரம் இருந்தது ரெயில் வர. சிமெண்டுப் பெஞ்சியொன்றில் உட்கார்ந்துகொண்டு சுற்றிலும் பார்த்தேன். எங்கே திரும்பினாலும் இயற்கையின் கூந்தல் விரிந்ததுபோல மலைகளும் மரங்களுந்தாம். ஓர் உலகமே ஒரு ரெயிலில் போகிறது! 'இல்லை' பிரசாரமும், 'இருக்கிறது' பிரசாரமும் அதனுள்ளே நடக்கின்றன! கறுப்புச் சட்டை சபரி மலைக்கு ஓட, வெள்ளைச் சட்டை வெள்ளையப் பனை நினைத்து ஓடுகிறது!

''டேய், வண்டி வருகிறதடா!'' சேஷன் ஐயப்பன் தியானத்துக்கு, ரெயிலுக்காக ஓய்வு கொடுத்தான்.

ரெயிலில் ஏறினேம். எல்லா அதிசயங்களையும்போல, எனக்கு அந்தக் கூட்டத்தினிடையிலும், கதவருகே ஓர் இடம் கிடைத்தது. செல்வது மலையாளத்தினூடே. ரம்யமான காட்சிகளைக் கண்டு அநுபவிக்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டால்?

பிரயாணிகளில் முக்கால்வாசிப் பேர்கள் சபரி மலையை நோக்கிச் செல்பவர்கள். அவர்களைப் பார்த்தபோது, புராணங்களில் வருமே, கைலாசத்தை நோக்கி முனிவர்கள் சென்ற காட்சி, அதுதான் நினைவுக்கு வந்தது. ஒன்று மட்டுந்தான் வித்தியாசம். அப்போது ரெயில் இல்லை.



அவள் சுள்ளிகளைப் பொறுக்கி அடுப்பை மூட்டலானாள்.

பசுமை வாய்ந்த தாவரங்களின் பச்சையே இதமாக இருக்க, இயற்கையில் ஒரு கணம் என்னையே மறந்தேன். தண்டவாளங்கள் இரண்டும் மன ஐக்கியமற்ற தம்பதிபோல லட்சியம் இல்லாமல் நீண்டு ஓடின. அதன் மேலே ஓடும் ரெயிலில் எத்தனை விதமான மனிதர்கள் செல்லுகிறார்கள்!

''சாமியே, சரணம் ஐயப்பா!''—இதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். நிமிஷத்துக்கு ஒரு தரம் இதுதான் ஒலித்தது அவர்களிடமிருந்து. பேசிக்கொண்டு ருத்திராட்சத்தை உருட்டி ஜபம் செய்யும் பக்திமான்கள் சிலரைப்போல அவர்கள் பேச்சின் இடையேயும், கொட்டாவியினூடேயும் தங்கள் பக்திப் பிரவாகத்தை ரெயிலில் அடைத்தார்கள். எனக்குச் சபரிமலை ஐயப்பனைக் கூட மறந்துவிட்டது. ஜனங்கள் எவ்வளவு வெள்ளை மனம் படைத்தவர்கள்! உலகத்தின் மற்றச் சாயைகள் சேர்கையில்தானே வெள்ளையில் புள்ளிகள் உண்டாகின்றன? இந்த எண்ணங்கள்தாம் எழுந்தன.

ரெயில் எல்லா ரெயில்களையும்போல, நிற்க வேண்டிய இடங்களில் நின்று, ஓடியது. ஒத்தப்பாலம் வந்தது.

வண்டி நின்றது. என் கண்ணோட்டத்தில் ஒரு பட்டுப்பூச்சி தென்படவே துள்ளி உட்கார்ந்தேன். கணத்தில் கணமாய் என் உள்ளத்தில் என்னையும் அறியாமல், என்னையும் கேட்காமல் புகுந்து, மனத்தையே கசக்கிய அந்தப் பூச்சியின் வசீகரிப்பில் நான் மயங்கிக் கொண்டிருக்கையில்—

அவள் கதவைத் திறக்க முயன்றாள். பின்னால் வயசை மீறிய மூப்போடு ஒரு கிழவி நின்றாள்.

பக்தர்கள் ஒருமுகமாக, ''தள்ளே (தாயே), வேறே வண்டி நோக்கு. எடமில்லா இவிடே!'' என்றார்கள். எல்லாருந்தான் அப்பெண்ணைப் பார்த்தார்கள். பார்த்தவர்கள் மனத்தினால் நினைக்காதிருந்திருக்க முடியுமா? இருந்தாலும் வெளிக்குச் சலனம் அடையாதவர்களைப்போல, 'தள்ளே' என்று கிழவியைத்தான் குறிப்பிட்டுப் பேசினார்கள். கிழவிக்குக் காது கேட்கும் என்று என்ன நிச்சயம்?

வர்ணப்பூச்சில் இறுகிப்போன தாழ்ப்பாள் லகுவில் அசைந்து கொடுக்கவில்லை. வானத்தில் வர்ணஜாலம் ஏற்படுவதுபோல, பெண்ணின் வதனத்தில் சோகமும் அவசரமும் கோபமும் துக்கமும் தோன்றிவிட்டன.

வண்டி நிற்கும் மூன்று நிமிஷத்தில் ஒரு நாடகமே அல்லவா நடக்கிறது?

''குறைச்சு திறக்கணம்; இங்ஙனே பறை யாம் பாடில்லா!''

அவள் தொண்டை அடைத்துக்கொண்டது.

யார் தொண்டை யாருக்கு அடைத்தால் என்ன? சாஸ்தா பக்தர்களுக்குப் பக்தித் தொண்டை அடைக்கக் கூடாது!

''ஸ்திரிகள் வண்டி இல்லே, பெக்கோளின்! (போங்கள்)'' என்றார் ஒருவர்.

எனக்கு ஆத்திரம் வந்தது. பெட்டியில் இடம் இல்லை என்பது என்னவோ உண்மை தான். ஆனால் பிரயாணியை மறுக்கப் பிரயாணிக்கு என்ன உரிமை இருக்கிறது?

கதவைத் திறந்தேன். கிழவி முன்னால் தள்ளாடிக்கொண்டு ஏற, பெண் பின்னே ஏறினாள். வண்டி ஊதியது. பக்தர்கள் என்னைச் சபித்தார்கள்.

சேஷன், ''டேய், உன் பட்டணத்து நாகரிகம் இங்கே விலை போகாது'' என்றான்.

பெட்டி நிறைய ஆண்கள். நடுவே இரு பெண்கள். ஒருத்தி, பெண்ணின் தன்மையைத் தாண்டி, பெண்மையையே மறந்துவிட்ட நிலையில் இருப்பவள். இன்னொருத்தி, வசந்தத்தில் மலரும் மலர். மொட்டு விரிந்து, குவிந்த இதழ்கள் மலரும் வயசு. இளமையின் அர்த்தமே அவளுள் இருந்தது. அவளைப் பார்க்கப் பார்க்க என் மனம் விம்ம ஆரம்பித்தது. இவள் யார்? இந்த உலகத்தைச் சேர்ந்தவள் தானா? பெண் ஜன்மமா? இல்லை, பேயோ பிசாசோ மோகினி ரூபத்தில் வந்து ஏறியிருக்கிறாளா? எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. ரூபத்திலே இருந்த அழகைவிட அதிகமான அழகு அரூபமாக அவளிடம் நிறைந்திருக்கிறது என்று நான் ஆராய்ச்சி செய்யலானேன். என்ன பேதைமை! அவள் அழகு ஆராய்ச்சிக்கு உட்பட்டதா?

கிழவி கீழே உட்கார்ந்தாள். வண்டியின் ஆட்டத்தில் அவள் உடல் என் கால்களைத் தாக்க, ஸ்பரிசம் வேதனையாக இருந்தது. கால்களுக்குந்தான் என்ன உணரும் சக்தி! என் காலருகே நின்ற பெண்ணின் கால் மயிரிழையில் தொட்டபோது, என்ன இன்பமாக இருந்தது!

''தள்ளே! இங்கே இருந்துக்கோ!'' எனக்கு அரிசியும் பருப்பும் கலந்த பாஷா ஞானம்! தமிழ் மலையாள ஐக்கியத்துக்கு அத்தாட்சியோ?

என் பாஷையைக் கேட்டுக் 'களுக்'கென்று அவள் சிரித்துவிட்டாள். பற்கள் சிரிப்பின் ஒளியில் மின்னின.

கிழவி உட்கார, பக்கத்தில் இருந்த பிரயாணி, பல்லைக் கடித்துக்கொண்டு எழுந்தார். பெண்ணும் உட்கார்ந்துகொண்டாள்.

திடீரென ஒரு யோசனை உதித்தது. சேஷன் அருகே இருந்த சிறுவனை அவள் பக்கத்தில் உட்கார்த்திவிட்டு, நான் உட்கார்ந்துகொண்டேன்.

பல்லைக் கடித்தவருடைய பல் இப்போது என் சௌகரியத்தைப் பார்த்து, உடைந்திருக்க வேண்டும்!

இவள் யார்? எங்கே போகிறாள்? எங்கே போனாலும் நான் பின் தொடர்ந்தால் என்ன? அவள் ஒதுக்கித் தள்ளினாலும் மனம் விடாமல் அலையுமே! மலரைச் சமூகம் மறுத்துவிட்டாலும், எந்த அபாக்கியவதி பூவை மறக்கிறாள்? மறக்க முடிகிறது?

ஸ்டேஷன் வந்து போனது தெரியவில்லை. என்ன என்னவோ ஸ்டேஷன்கள். உலகமே, உலகத்தின் அழகே, நன்றாகத் திரண்டு, என் முன் சதையும் தோலுமாக இருக்கையில் மாடு மலை போனால் என்ன, மக்கள் சுற்றம் போனால் என்ன?

திருச்சூர்.

''சேஷா, காபி கீபி குடிக்கிறாயோ?''

''வேண்டாம்.''

''வயிறு பசியில் வாடுகிறபோது, பக்திக்குச் சக்தி இருக்காதடா, மடையா!'' என்று சொல்லிக்கொண்டே இறங்கினேன்.

''ஸாமி!'' என்ற குரல் கேட்டது. திரும்பினேன்.

''எனிக்கு ரெண்டு சாயை வேணல்லோ!''

''ஆகட்டே.'' என் உடல் திருப்தியில் பூரித்தது. மனத்தில் ஒளிவு மறைவின்றிக் கேட்கும் அந்தப் பெண்ணுக்கு என் கையினால் வெறும் 'டீ'தானா கொடுக்கலாம்?

'டீ'யின் முடிவிலிருந்து பேச்சுப் பிறந்தது.

''நீங்களும் சபரிமலைக்கா?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம்.''

பிரயாணிகளின் கண்முன் யாகத்தைக் கலைக்கும் அசுரனை நான் பட்டிருக்க வேண்டும். நான் அவளோடு பேச ஆரம்பித்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பாவம்!

* * *

ஏர்னாகுளத்தை அடைந்தபோது மணி பன்னிரண்டரை ஆகிவிட்டது.

இரண்டு அல்லது மூன்று பஸ்கள் புறப்பட்டுவிட்டன. இடம் இல்லை, இடம் இல்லை, இடம் இல்லைதான். பக்தர்களுக்குப் பஸ்ஸில்தான் இடம் இல்லையா? இல்லை, ஐயப்பனின் கருணை உள்ளத்திலும் இல்லையா?

சேஷனுக்கு, நான் ஏன் வந்தேன் என்று வெறுப்பு உண்டாகிவிட்டதை உணர்ந்த நான் அவன் மனத்தை மேலும் புண்படுத்த விரும்பவில்லை. ''சேஷா, நீ உன் பாட்டுக்குப் போ. நான் திரும்பிப் போனாலும் போய்விடுவேன்'' என்றேன்.

மூன்றாவது பஸ்ஸில் அவன் போக, நாங்கள் சுமார் இருபது பேர்கள் நான்காவதற்காகக் காத்திருந்தோம்.

* * *

அவள் பெயர் பார்க்கவி. ஒத்தப்பாலத்தினருகே ஒரு கிராமம். தாயும் பெண்ணுமாக இருக்கிறார்கள். இளம் பெண்கள் சபரிமலைக்குப் போகக் கூடாது என்ற ஐதிகம் இருந்தாலும் ஒரு காரணத்தினால் பார்க்கவி மூர்க்கத்தனமாகப் பிடிவாதத்துடன் புறப்பட்டுவிட்டாள். பெண்ணைத் தனியே அனுப்ப மனம் இல்லாத கிழவியும் கூடக் கிளம்பி விட்டாள்.

பார்க்கவிக்கு என்ன வயசு இருக்கும் என்பதை என்னால் - ஏன் ஒருவராலுமே - அநுமானிக்க முடியாது. இளமைக்கு ஏது வயசு? காலத்தைக் கூறு போட்டுக் கூறு போட்டு மனிதன் ஒவ்வொரு கூறுக்கும் பெயர் வைக்கிறான். அதைக் கஜக்கோலாகக் கொண்டு, அவளுடைய இளமையை அளக்க முடியுமா?

உடல் சந்தன நிறம். வாழைக் குருத்தின் பளபளப்பில், தங்கநிற ஒளி வீசுவதுபோன்ற பிரமை தட்டியது, அவளுடைய மேனியில் விசிய ஒளியைக் கண்டு. கறுப்புக் கொத்தாக முடிந்திருந்த தலையில் தேங்காய் எண்ணெயும் சூரிய காந்தியும் கலந்தபோது, வெள்ளியின் பிரதிபலிப்பு! வட்ட வடிவமான முகத்தில், தாழ்ந்து நின்ற கண்கள். மருண்ட பார்வை! கண் அழகைத் தேடிக்கொண்டு, காட்டை நோக்கி ஓடுவானேன், மானைப் பிடிக்க?

* * *

நாலாவது பஸ் வந்து புறப்படுகையில் மணி மூன்று.

“சாமி, நிங்களுக்கு விரோதம் இல்லங்கில், நங்களும் கூட வராம்” என்று பார்க்கவி கூறினாள்.

நேற்று நான் எங்கே இருந்தேன், இவள் எங்கே இருந்தாள், இன்று ஒருவருக்கு இன்னொருவர் துணையாக வர? மானிட வர்க்கத்தின் அசைவுகளில்தான் உலகமே இயங்குகிறதோ?

கரும்பு தின்னக் கூலி கேட்கும் விநோதத்தை ரசித்துக்கொண்டே, “நிச்சயமாக! கவலைப் படண்டா!” என்றேன்.

அவள் சிரித்துக்கொண்டே பஸ்ஸில் ஏறி, என் முன்னால் உட்கார்ந்துகொண்டாள். அவளைப் பார்க்கப் பார்க்க எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. மின்சாரத்தில் தாக்குண்டகை போல, மனம் அடித்துக்கொள்ள, உடல் நிலை தெரியாமல் தவித்தது.

பஸ் செல்லலாயிற்று. கிழவி, மூப்பின் இருமலில் தவிக்கலானாள். நேரம் செல்லச் செல்ல அவளுடைய க்ஷீணம் அதிகமாயிற்று.

இயற்கையின் அழகைப் பார்க்கவியின் அழகோடு தொட்டுக்கொண்டு பருகலானேன், சர்க்கரையையும் தேனையும் கலந்து பருகுவது போல.

பார்க்கவிக்கும் என்னைப்போலப் பொழுது போகவில்லையோ என்னவோ? பேச ஆரம்பித்தாள். என்னைப் பற்றிய தகவல்களைக் கேட்டாள். சென்னப் பட்டணத்தைப் பார்க்காதவர்கள் பிளக்கும் வாயைப்போல் அவளும் பிளந்தாள்.

கோட்டயத்திலிருந்து எறிமேலியை அடைந்தபோது அஸ்தமித்துவிட்டது. முதல் மூன்று பஸ் பிரயாணிகள், எறிமேலியிலிருந்து புறப்படும் காட்டுக்குள் பிரவேசித்துவிட்டதை அறிந்தோம்.

நாங்கள் சுமார் முப்பது பேர்கள் மேலே காட்டுக்குள் செல்வதா வேண்டாமா என்ற யோசனையில் ஈடுபட்டது மனம்.

“ஒரு பேடியும் (பயமும்) வேண்டா. ஆண்கள் நெறைஞ்சிருக்கும் வழியிலே!” என்றாள் பார்க்கவி.

அவளது அசட்டுத் தைரியத்தைக் கண்டு சிரிப்பு வந்தது எனக்கு.

“உன் அம்மா?”

“ஐயப்பன் இல்லே, எந்தா பயம்?”

“அவள் நடப்பாளா?”

“நடக்கான் சக்தி ஐயப்பன் தரும்!”

அவள் நம்பிக்கையில் எனக்கே, ஒரு கணம் ஐயப்பன் மீது அளவிலாத பக்தி பெருகியது. நான் சபரிமலையைப் பார்க்கத்தானே புறப்பட்டேன்?

பூர்ண சந்திரன் தோன்றி மறைந்துவிட்டான் வானில், நாங்கள் காட்டினுள் பிரவேசித்தபோது. சபரிமலைக் காட்டைப்பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். மூன்று நாட்கள் அடர்த்தியான காடுகளிலும் புதர்களிலும் முட்களிலும் நடக்கையில் வலி தோன்றாதாம். காடு முழுதும் நடமாடும் கொடிய மிருகங்கள் கண்ணுக்குத் தென்படாவாம். மனத்தில் ஐயப்பன் இருக்கும் வரைக்கும் ஒரு விதமான சஞ்சலமும் பயமும் வேண்டாமாம். ஆனால் எனக்கு? என் மனத்தில் முழுக்க முழுக்க யார் இருக்கிறார்? ஐயப்பனா?

முன்னாலும் பின்னாலும் மனிதர்கள் நடந்து நடந்து பாத முத்திரையில் தேய்ந்து பாதையான ஒற்றையடிப்பாதையில், சகப் பிரயாணிகள் போய்க்கொண்டு, வந்துகொண்டிருந்தார்கள்.

சுமார் ஏழரை மணி இருக்கும். ஒரு சிறு காட்டருவியின் அருகே எல்லாரும் நின்றார்கள்.

சிதறிக் கிடந்த கற்களைக் கூட்டி, அருவிக்கருகே இருந்த சுள்ளிகளைப் பொறுக்கி மற்ற எல்லாரையும்போலப் பார்க்கவி அடுப்பை மூட்டலானாள். எறிமேலியில் வாங்கிய சட்டியில் உலைநீரையும் வைத்தாள்.

அருவியின் கரையில் கல்மீது உட்கார்ந்துகொண்டு நான் கவனித்தேன். பூர்ணமதியின் பிம்பம் அருவியில் நிலவுப் பிழம்பாக ஓட, பார்க்கவி அழகுப் பிம்பமாக உட்கார்ந்திருந்தாள். நீண்ட தேக்கு மரங்களின் இலைகள் தாளம் இசைப்பது போன்ற சலசலப்பும், கூடுகளில் பதுங்கி எழுப்பும் பட்சிஜாலங்களின் கீதமும், மாசுபடாத இயற்கையின் வனப்பும் - அடடா! இது காடா? உலகத்தின் ஒரு பாகமா? அல்லவே அல்ல; முன்னும் பின்னும் கண்டிராத, அமரர்கள் வசிக்கும் இடம். பிறப்பும் இறப்பும், பாவமும் புண்ணியமும், இன்பமும் துன்பமும், ரூபமும் அரூபமும், இல்லாமலும் இருந்தும், எல்லாமாகி, ஒன்றாகிவிட்ட இடம்! தேர்ந்த கையில் அநாயாசமாகத் தோன்றும் சித்திரத்தில் இயற்கையும் செயற்கையும் கலந்து மிளிர்வதுபோலல்லவா, வானமும் அருவியும் பார்க்கவியும் என்முன் இருந்தார்கள்?

சமைத்து இறக்கிவிட்டு, “எந்தா, உறக்கமோ?” என்று என்னை அவள் எழுப்பினாள். தூரத்து மலைக்காற்றின் குளுமையும், அவளுடைய மூச்சின் உஷ்ணமும் முகத்தில் ஒருங்கே அடிக்க, நான் எழுந்தேன்.

“உன் அம்மா எங்கே?”

“அம்மைக்குப் பனி (ஜுரம்).”

தூரத்தே ஒரு மரத்தடியில் கிழவி படுத்துக்கொண்டிருந்தாள்.

“கஞ்சி கொடுத்து. பட்சே, நல்ல வண்ணம் குடிச்சில்லா. போட்டே; நிங்கள் இருந்தேக்கின்.”

“நீ?”

“அப்புறம்....”

“சேர்ந்து சாப்பிடலாம்.” உணர்ச்சியில் அரைகுறைப் பாஷா ஞானமும் பறந்தது.

பார்க்கவி சிரித்துக்கொண்டு, இரண்டு மூன்று தேக்கு இலைகளுடன் வந்தாள்.

பாதிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், “நீ ஏன் சபரிமலைக்குப் போகிறாய்? பெண்கள் போகக் கூடாதாமே?” என்று மீண்டும் கேட்டேன்.

பாவை விளக்கு

இரண்டு கைகளிலும் ஒரு மடமங்கை விளக்கு அகலை ஏந்திக்கொண்டு நிற்கிறாள். அதில் முத்துச் சுடர் ஒளி விடுகிறது. இத்தகைய விளக்கை இப்போது சில கோயில்களில் பார்க்கிறோம். பழங்காலத்தில் இந்த விளக்கைப் பாவை விளக்கு என்று சொல்வார்கள். அரசர்களுடைய அரண்மனைகளிலும் செல்வர்களின் மாளிகைகளிலும் இத்தகைய விளக்குகள் இருந்தன. இடத்திற்கு ஏற்றபடி உயரமாகவும் பருமையான திரியை உடையதாகவும் இருக்கும்.

''பாவை விளக்கிற் பரூஉத்திரி யழல'' என்பது சங்க காலப் பாடல்.

இக்காலத்தில் விளக்கை ஏந்தும் பாவையை விளக்கு நாச்சியார் என்கிறார்கள். முற்காலத்தில் விளக்குத் தலைமை இருந்தது; இக்காலத்தில் பாவைக்குச் சிறப்பு!

''யாரா பறஞ்சது? ஸாமிக்கு ஆணும் பெண்ணும் வித்தியாசம் உண்டோ?''

''பயங்கரச் சாமியாமே?''

''மனுஷாள் அல்லே இதொக்க பறையுன்னது! இ மாதிரி வித்தியாசம் காட்டும் ஸாமி, ஒரு ஸாமியோ? என்டே மனோபீஷ்டம் ஸித்திக்கணும்னு நான் வந்ததாண!''

நான் மேலே பேசவில்லை. அவளுள் ஏதோ ஒரு ரகசியம்! அது என்ன?

* * *

இரவு. நடக்க ஆரம்பித்தோம். மனிதர்கள் தொகை பெருகிவிட்டது. சுமார் முந்நூறு பேர்கள். எல்லாரும் ஒரு முகமாக, ஒரு புள்ளியை நோக்கிச் செல்லுகிறார்கள். உலக பந்தங்களில் இருந்துகொண்டே, உலக பந்தங்களை மீறிய நிலையை எய்தப் பாடு படும் மனிதக் கூட்டம். ''சாமியே, சரணம், ஐயப்பா!'' ஒலியின் எதிரொலியில், மரங்களின் இலைகள் அசைந்தன.

எனக்கும் பார்க்கவிக்கும் நட்புப் பிறந்து வளர்ந்துவிட்டது. எத்தகைய கண்ணியமும் பண்பும் நிறைந்த பெண்! இளமையின் பூரிப்பிலே என் மனம் இடையிடையே நினைக்கக்கூடாதவற்றை நினைக்க, அவள் எப்படித் தைரியத்துடன் இருக்கிறாள்? பின் ஏன் ஆண் துணையைத் தனக்காகக் கேட்டாள்?

அவள் தனக்காகக் கோரவில்லை என்று பிற்பாடுதான் தெரிந்தது. கிழவியின் உடல் நிலை கேவலமாகிக்கொண்டு வந்தது. ஆனால் அவள் மனத்தின் சக்தி குன்றவில்லை.

''விசாரப்படண்டா, பெண்ணே!'' என்றாள் அவள், மெள்ள நடந்தவாறே.

நடுநிசி. சந்திரன் ஆணி அடித்தாற்போல வானில் பிரகாசித்துக்கொண் டிருந்தது.

நடை நின்றது.

இரண்டாம் நாள். சந்திரன் தேய்ந்தான். பார்க்கவியின் நட்பு வளர்ந்தது.

மூன்றாம் நாள் இரவு. நட்பு முதிர்ந்தது.

''பார்க்கவி, என்னுடன் வந்துவிடு. சோற்றுக்கும் துணிக்கும் வாழ்வு முழுதும் கவலை இல்லை.'' உணர்ச்சியின் வேகத்தில் தமிழ் மூச்சுத்தான் வந்தது.

அவள் உணர்ச்சியால் பாஷையைப் புரிந்துகொண்டாள். மனத்தோடு மனம் உரையாட, பாஷை என்ன வேண்டியிருக்கிறது பாஷை!

பார்க்கவியின் கண்ணில் நீர் துளித்தது.

''ஒத்தப்பாலம் ஸ்டேஷன்லே ஞான் நிங்களைக் கண்டதுமே அறிஞ்சு..பட்சே..''

''அதெல்லாம் சொல்லாதே, பார்க்கவி. உன்னை எனக்கு மூன்று நாளாகத்தான் தெரியும். உன் குலம், ஆசாரம், குடும்பம் ஒன்றும் தெரியாது. ஆனால் நீதானே எனக்கு வேணும்? என் ஊரிலே என்னை நாலுபேர் நாலு நாளைக்குத் திட்டுவார்கள். அப்புறம் அவர்களே உன்னைக் கொண்டாடுவார்கள். வா, இப்போதே திரும்பி விடலாம்.''

திக்பிரமை பிடித்தவளைப்போல, பார்க்கவி நின்றாள். சந்திரனுடைய களங்கம்போல, முகத்தின் பொலிவில் சோகரேகை ஓடியது.

''எனிக்கு மானசீகமாய விவாகம் கழிஞ்சு!''

''என்ன?''

''அதே....பட்சே, இன்னும் விவாகம்னு ஒண்ணும் ஆயிட்டில்லா!''

என் முகம் அருவியில் மூழ்கியது. என் பிம்பம், நீரோட்டத்தில் என் மனத்தைப் போலச் சிதறியது.

''சம்பந்தக்காரனை நான் சிநேகிச்சு. பட்சே, அவரு உத்தியோகம் இல்லாண்டு, கிடந்து....பிரவிருத்தி இல்லாண்டு எங்ஙனயா, ஒரு ஸ்திரீயை ஒரு ஆண் சம்ரக்ஷிக்கான் சாதிக்கும்?''

''உம்.''

''நிங்கள் எந்தினு வேதனைப்படணும்? நிங்களுக்கு எத்தற ஒரு ஆசை உண்டோ அத்தற ஒரு ஆசை எனிக்கு சம்பந்தக்காரனடுத்து உண்டு. பறைஞ்சுட்டு எந்தா! உத்தியோகம் இல்லா.''

''சொல்லு...'' கேட்கப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும் சொல்லட்டும்.

''இதொக்க கழிஞ்சு மூணு கொல்லம் ஆயி. ஆசை, ஊணும் துணியும் தருவோ? ஞான் அவரிடத்திலே ஒரு திவசம் பறைஞ்சு, 'நிங்களுக்கு பிரவிர்த்தி இல்லங்கில் நம்மடே சம்பந்தம் உண்டாவில்லா'ன்னு.''

''அப்புறம்?''

''அவரு ஓடிப்போய் மூணு கொல்லம் கழிஞ்சு. இனியும் வந்தில்லா. வருவோ, எந்தோ?''

''இனிமேல் வர மாட்டான்!''

''வரும், வரும். தீர்ச்சை (நிச்சயம்) யாகி வரும். ஐயப்பன் சாட்சியா நம்மடே சம்பந்தம் நடக்கணும்னு ரெண்டு பேரும் கூடி சத்தியம் பறைஞ்சுட்டுண்டு!''

''சத்தியமா?''

"கருணாகரா, இவளாடா உன்......?"

"அதே. மூணு கொல்லமாயிட்டு ஞான் ஈ சபரிமலைக்கு வரான் சிரமப்பட்டதாண. பட்சே, பாதி வரும்போள் ஏதெங்கிலும் ஒரு முடக்கம். முன்பிலே அச்சன் மரிச்சு. பின்பே, தள்ளைக்கு சுகம் இல்லாண்டு போய். இக்கொல்லம் எந்தோ, ஞான் அறியாம்."

சொல்லும்போது அவள் கண்களில் அசாதாரண நம்பிக்கையும், அதே சமயத்தில் தன் காதலனைப்பற்றி எழுந்த எண்ணங்களின் நெகிழ்ச்சியும் பிரதிபலித்தன. அவளைப் பார்த்தால், பிரளயகாலம் வரையிலும் காதலனுக்காகக் காத்திருப்பாளோ என்ற பயம் என்னுள்ளே தோன்றியது.

"வரவே வராவிட்டால்?" எப்படியாவது பார்க்கவியின் மனத்தைத் திருப்ப வேண்டும்.

"ஐயப்பன் அங்ஙனே விசாரிச்சால், இ மரமும் செடியும் இல்லே, அங்ஙனே, ஞான் இருக்கும்."

"கலியாணமே இல்லாமலா?"

"அதே! மனஸிலே கலியாணமாகியல்லோ?"

"பார்க்கவி, உன் காதல் விசித்திரமானது. நீயே உன் காதலனைத் திட்டி ஓட்டி விட்டு, அவன் வருகைக்காக அழுகிறாய்!"

நான் சொல்லி வாய் மூடுமுன், முனகல் சத்தம் கேட்டது. கிழவிக்கு மத்தியானத்திலிருந்தே நல்ல ஜூரம். மலைக்காற்று வேறு. எழுந்திருந்து போய்த் தொட்டுப் பார்த்தாள் பார்க்கவி.

மறுநாள் காலையில் கட்டைபோலக் கிடந்த கிழவியைக் கண்டு மனம் துணுக்குற்றது.

இனி என்ன செய்வது? மேலேயும் போக முடியாது. திரும்பியும் செல்ல இயலாது.

"நிங்கள் பெய்க்கோளின்" என்று என்னைப் போகச் சொன்னாள் பார்க்கவி. அவளுக்காகத்தான் இவ்வளவு தூரமாவது நான் வந்தேன் என்று அவளுக்குத் தெரிந்தும், சொன்னாள்!

''வேண்டாம்.'' என் மனம் அவளை விட்டு அகல மறுத்தது. என் காதலைத் தெரிந்தும் தன் காதலை அவள் வெளிப் படுத்தினாள். என்னை நோகச் செய்தாள். அதனால் என் அன்பு குறையுமா?

அடுத்த நாள் கிழவி மெள்ள உட்கார்ந்தாள். இரண்டாம் நாள் மெதுவாக நடக்கலானாள். நானும் பார்க்கவியுமாக, அவளைப் பிடித்துக் கொண்டு, திரும்பலானோம். பார்க்கவிக்கு ஒரே வருத்தம், மூன்று வருஷமாக ஐயப்பன் தரிசனம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டானே என்று. என்ன செய்வது! பணம் சம்பாதிக்க வில்லை அவள் காதலன். 'மனைவிக்குரிய கடனைச் செய்ய, உத்தியோகம் தேடு' என்ற சொல் சுடு சொல்லாக அவனை உந்திவிட்டது. அவன் ஏனோ திரும்பவில்லை. பார்க்கவிக்கு இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையில் பாரத்தை ஐயப்பன் மேல் போட்டுவிட்டாள். ஆனால் அவனும் கை விடுகிறானே?

மீண்டும் எறிமேலி.

கோட்டயம் பஸ். எர்ணாகுளம். ஒற்றைப் பாலத்தில் நானும் பார்க்கவியுடன் இறங்கினேன். வர வர, கிழவிக்கு உடல்நிலை சரியாகிக்கொண்டு வந்தது.

கிராமத்தை அடைந்தபோது, கிழவிக்கு ஜுரம் துளிக்கூட இல்லை. எனக்கே ஆச்சரியமாக இருந்தது, மன வருத்தத்துக்கிடையிலும்.

அவளை வீட்டில் சேர்த்ததும், ''நான் வருகிறேன்'' என்று புறப்பட்டேன்.

பார்க்கவி என்னைப் பார்த்தாள். கண்களில் நீர் துளித்தது.

''எந்தா செய்யுந்நது? எனிக்கும் நிங்களைப் போல ஒரு பிரமாணி பர்த்தாவுன்னு கிட்டான் பாக்கியம் வேண்டே! அது இல்லா, பட்சே, நிங்களும் நிங்கள் மனஸும் என்டே மனஸிலே பதிஞ்சு போவும்.''

சூரியனுடைய ஒளியில் கண்ணீர்த் திவலை பிரகாசித்தது. வெயிலினூடே தூற்றல்.

நான் பதில் பேசாமல் திரும்ப யத்தனித்த போது-ஒரு கணம் சிலையாகிப் போனேன்! பார்த்தேன்! அவன் சிலையானான்! திரும்பினேன்! பார்க்கவி சிலையாகியிருந்தாள்!

இரு சிலைகளையும் மாறி மாறிப் பார்த்தேன்.

அவர்கள் என்னை மறந்தார்கள்.

''பார்க்கவி, இவன்தானு?''

சமாளித்துக்கொண்ட அவள், கண்களைத் துடைத்துக்கொண்டே, ''அதே!'' என்று தலையசைத்தாள்.

''கருணாகரா, இவளாடா உன்....?''

''ஆமாம், சாமி.'' சென்னையில் பழகிய தமிழ்க் கலப்பு! ஜமேதார் கருணாகரன் இத்தகைய பாக்கியம் பெற்றவன்!

''கருணாகரா, நீ பாக்கியசாலி.''

''வேலை கிடைச்சபின்னே வந்ததாக்கும்!'' என்றான் அவன்.

நானுந்தான் என்ன? தூய்மையான அன்பை மூன்று நாள் உணர்ந்தேன்; ரசித்தேன். வாழ்க்கை முழுவதும் வாழ வேண்டுமா, அதன் இன்பத்தை அநுபவிக்க? ஒரு கணத்திலே கூட, வாழ்வின் இன்பத்தை ஒருவன் எய்தி விடலாமே, மின்மினியைப்போல?

நான் அதை எய்திவிட்டேன் என்ற பெருமையில் பணத்தை மட்டும் அளிக்கக்கூடிய விமலாவை ஏன் நினைக்கிறேன்? ★

உள்ளே

வெளியே

போட்டோ: ஸ்ரீதர்.

மான்விழியாள்
மானுக்கு
மணமாரு
முணவளிக்கும்.

ஓவியர் :
ஸி. ராமஸ்வாமி

கலைமகள்

ஸிரோலின்
உங்கள் இருமலின்
மூலகாரணத்தை
நிறுத்துகிறது . . .
'நீங்கள் இருமுவதை
நிறுத்த'மட்டுமல்ல
அது செய்வது

ஸிரோலின் உங்கள் இருமலுக்குக் காரணமான அபாயகர கிருமிகளை ஒழிக்கிறது

இருமல் அபாயத்தின் அறிகுறி. உங்கள் தொண்டையிலும் சுவாசப் பைகளிலும் உள்ள மெல்லிய தசை நார்கள் வீங்கி ரணமாகியிருப்பதை அது குறிக்கிறது. எனவே இருமலின் மூல காரணத்தை வேரறுக்கக்கூடிய ஒரு மருந்துதான் உங்களுக்கு தேவை — நீங்கள் இருமுவதை மட்டும் நிறுத்தும் மருந்தினால் யாதொரு பயனுமில்லை.

ஸிரோலின் இருவழிகளில் உங்கள் இருமலின் மூலகாரணத்தை நிறுத்துகிறது. முதலாவதாக அதன் விஷநாசக குணம் நோய்க் கிருமிகளை ஒழித்து, நோய் விஷம் பரவாமல் தடுக்க உதவுகிறது. இரண்டாவதாக, மூச்சுத்திணர வைக்கும் கோழையும் கபமும் சுலபமாக வெளிவர உதவி, உங்களுக்கு துரிதமாக உண்மையான ஆசுவாசம் தருகிறது. ஸிரோலின் எபிட்ரீன் கலப்பில்லை.

இருமலுக்கு அபாயமற்ற குடும்ப ஔஷதம்

ஆம், குடும்பத்தில் ஒவ்வொருவரும் எவ்வித பயமுமின்றி ஸிரோலின் உட்கொள்ளலாம் — குழந்தைகளுங்கூடத்தான். காரணம் ஸிரோலினில் மயக்கு மருந்துகளோ வேறு எவ்வகை ஹானிகரமான மருந்துப்பொருள்களோ கிடையாது. குழந்தைகள் அதன் இனிய மணத்தை விரும்புவர். வீட்டில் எப்பொழுதும் ஒரு புட்டி ஸிரோலின் அவசியம் வைத்திருங்கள்.

ஸிரோலின்
'ரோச்'

VT. 1274

ரெக்ஸோனாவில் இப்போது ஓர் புதுமை உள்ளது!
நறுமணம்...
முன்னை விட...
மிக அதிகம்!
இப்போது அபரிமிதமான
நறுமணம் கமழும்
ரெக்ஸோனா சோப் நீடித்த
புத்துணர்ச்சியளிக்கும்!
Rexona
BLENDED WITH CADYL
RP. 143-X52 TM
ரெக்ஸோனா ப்ரொப்ரைடரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது

புரட்சிப் பாடல் - இரண்டாட்டம்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

புதுமை சொல்லிலும் பொருளிலும் இருக்கப் புதுமைக் கவி பொங்க வேண்டும் என்று புதுமை உலகம் பேசுகிறது. அதைப் பற்றிய ஆராய்ச்சி இது.

புதிய பாடல்கள் என்று முழங்குகின்றவை நம் நாட்டிலும் இன்று பறையறைகின்றன. மேனாட்டுப் புதுமையின் எதிர்ஒளியும் எதிர்ஒலியும் இங்கு எழும். எதிர்ஒலியை ஆராய்வதனை விட முதல் ஒலியை ஆராய்வது ஒரு வகையால் முழுப் பயனையும் தரலாம். மேனாட்டிலும் பழம் பகுதியும் புதிய பகுதியும் உள்ளன. புதுமையைக் காணப் புதுமையின் இடமன்றோ போகவேண்டும்? அமெரிக்காவே புதிய உலகம். புதிதாக முன்னேறிச் சென்றுள்ளது அது. இந்நாளைய புத்துலகின் தலைமை அதனதே ஆம்.

புரட்சி என்றால் என்ன?

புதுமைக்கும் புதுமையான அது - பழமையைப் புறங்கண்ட அது - பழமையில் எவ்வாறு நம்பிக்கை கொள்ளும்? பழமையின் தோல்வியையே தன் புதுமையின் வெற்றியாகப் பாராட்டும் அது, பழம் பாடல் பாடி வாழ முடியுமா? அங்கு மட்டுமா? பழைய முறைப் பாடல்களில் உலகெங்குமே ஓர் உவர்ப்புத் தோன்றியது. புரட்சி என்று பேசும் உலகில் பாட்டிலே மட்டும் புரட்சி தோன்றாமற் போகுமா? புத்தூழி, புதிய சகாப்தம், புதிய யுகம் என்பதே எங்கும் பேச்சு. பாட்டிலே புதுமையைப் புகுத்தும் புரட்சி என்றால் என்ன? பாட்டுப் பழையதானால், அது நெஞ்சினைத் தொடுவதில்லை; வெற்றொலியாகிறது; சடங்காகிறது; புலச் சுரணை அவ்வாறு மழுங்கிவிடுகிறது. பாட்டிலே புரட்சி என்றால் புலச்சுரணையின் மழுங்கி மங்கிய இந்த நிலைமையிலிருந்து, பாட்டின் நடையினை அமைக்கும் பலவகை உணர்வு நுட்பங்களை எல்லாம் திட்பமாக்கி உயிர்ச் சுரணை தந்து சீரிய கூரிய நிலையைப் பாட்டு அடையச் செய்வதே ஆம்; தீப்பொறி தொலைவில் எழுந்ததும் பற்றி எரியும் கர்ப்பூரம் போலப் பாட்டைக் கேட்டதும் நெஞ்சுருகும் நிலை எழப் பாட்டை அமைப்பதே ஆம்.

புறத்திலேதானா?

ஆனால், கருவிலே திருவுடைய கவிவாணருக்கே அத்தகைய பாட்டு நடை அவ்வாறு பொருத்தமான திருத்தம் பெற்று உயிரும் உணர்வும் பொங்கி எழப் புலச் சுரணையைத் தூண்டிவிடும். புரட்சி புரட்சி எனப் புலம்பும் மற்றவரோ இதனை உணராமல் பாட்டின் யாப்பமைப்பாகிய வெளி வடிவத்திலே மட்டும்- அதனை அமைக்கும் செய்திறனில் மட்டும் - புரட்சி காண முந்துகின்றனர். இத்தகைய புரட்சிக் காலத்தில் எல்லாம் பொது மக்கள் பேசுவது போலப் பாட்டினை எழுத வேண்டும் என்ற கூப்பாடு எழுவதுண்டு. பொதுமக்கள் பேச்சோ, காலத்திற்குக் காலம் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருவது. பழம் பாட்டை நோக்க இன்றைய பேச்சே புத்துயிர் பெற்றதாகத் தோன்றும். இத்தகைய செய்திறனில் மட்டும் முதலில் புதுமை புகுத்தவே புரட்சியாளராம் புத்தூழிப் புலவர்கள் விரைகின்றார்கள்.

2

படிமக் கொள்கை

இப்புரட்சியின் அடிப்படையை அறிய இத்தகையோரின் புரட்சி முரசினைக் கேட்பது நல்லது. மேனாட்டில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த வழியிலே பாவாணரிடையே படிமக் கொள்கை (Imagism) என்பது ஒரு புரட்சிக் கொள்கையாகத் தோன்றியது. இக் கொள்கையினர் இதனை விளக்க ஒரு திட்டத்தினை வெளியிட்டனர். இதன் அடிப்படைகள் கீழே கண்டவை ஆம்:

(1) சரியான சொல்

பொது மக்கள் பேசும் பேச்சு மொழியினையே பாட்டில் பயன் படுத்த வேண்டும். பொருத்தமான சொல்லே, நேருக்கு நேரான சொல்லே, பாட்டில் வர வேண்டும். ''ஏறக்குறையப் பொருத்தம்'' என்றாலும் போதாது. பொருத்தமான சொல் என்பதற்கு அழகான தொரு சொல் என்பது பொருள் அன்று. புலவன் கண்ட காட்சியைத் தன்னாலன்றித் தன்னை எடுத்துவிட்டு வேறொரு சொல்லால் சொல்ல முடியாதபடி அமைந்திருக்கும் சொல்லே சரியான சொல்; தகுதியான சொல்; வெல்லும் சொல்.

(2) புதுச் சந்தம்

மனநிலையின் எதிர் ஒலியே பாட்டின் சந்தம். பழைய மனநிலையின் எதிர் ஒலியே பழைய பாட்டின் சந்தம். அந்தப் பழைய செத்தொழிந்த சந்தங்களையே பாடி வந்தால் செத்தொழிந்த பழமை தோன்றுமே அன்றி நம்மை உயிர்ப்பிக்கும் புதுமை எப்படிப் பிறக்கக்கூடும்? ஆதலின், புது மனநிலைக்கு ஏற்ற புதுச் சந்தங்களையே அமைத்தல் வேண்டும். தளை, தொடை, அடிவரையறை முதலிய கட்டுப்பாடுகள் இல்லாத பாடல்களே விடுநிலைப் பாடல்கள் Free Verses). ஆனால், கட்டில்லாப் பாடல் ஒன்றுதான் பாடல் என வற்புறுத்தலும் கூடாது. பாவாணன் காண்கிற காட்சிக்கு ஏற்பக் கட்டுப்பாட்டுடனேயோ கட்டுப்பாடு இன்றியோ பாட்டு அமைதல் வேண்டும். பொருத்தமே இங்கு வழிகாட்டும். கட்டுப்பாட்டினை வற்புறுத்தும் அடிமைத்தளையைத் தகர்த்து எறியக் கட்டுப்பாடில்லாப் பாடல்களைப் பாடும் உரிமையும் வேண்டும் என்பதாயிற்று. மரபுவழி வரும் பாட்டின் பழைய வடிவங்களைவிடக் கட்டில்லாப் பாட்டானது பாவலனது தனி இயல்பினை உள்ளது உள்ளவாறே நமக்கு நன்றாக வெளியிடுதல் கூடும். அப்படிக்கல்லாமல், கட்டில்லாப் பாடல் என்பதற்கும் அடிமையாதல் கூடாது. பாவலனுக்கே உரிமை; பாட்டமைப்புக்கு அன்று.

(3) புதுமைப் பொருளா?



பாட்டிற்கு எனப் பொருத்தமான பொருளைத் தேடி எடுப்பதிலும் பாவலனுக்கு முழு உரிமை வேண்டும். அதனால் பழமையைப் பாடவே கூடாது என்பதில்லை. புத்தம் புதுமை என்பது ஒன்றுகொண்டே ஆகாயவிமானம் முதலிய புதுப் பொருள்களைப் பற்றி அலங்கோலமாகப் புலச் சுரணையில்லாதபடியே, பாடுவது எல்லாம் பாட்டாகி விடாது. ''இன்றைய வாழ்க்கைப் பொருள்களும் கலைப் பொருளுடையனவே. பாட்டாகப் பொங்கி வழியத் தக்கனவே'' என்ற உண்மையை வற்புறுத்தவே இந்தக் கொள்கை எழுகிறது. உணர்ச்சியற்ற ஆகாயவிமானப் பாடல் புதியதாக இருப்பதால் மட்டும் பாட்டாகிவிடாது.

(4) பிழம்பு

மனக்காட்சிகளை, மனங்காணும் வடிவங்களை, பாவாணன் சிற்பியே போலவும் ஓவியப் புலவனே போலவும் பாட்டாகப் பாட வேண்டும். படிமக் கொள்கை என்ற பெயர் இதனாலேயே பொருத்தமாகிறது. வெறுமையாம் பொதுத் தன்மையின் நிழல் ஆரவாரத்தை விட்டு உயிரோடு விளங்கும் அடிப்படையும் முதலுமாம் பிழம்பின் சிறப்பெல்லாம் விளங்கப் பாடுவதே பாட்டு. பாவாணன் ஓவியப் புலவன் அல்லன். என்றாலும் சிறப்பு நிலையில் உள்ள பொருள்களை அவற்றின் வீறு எல்லாம் தோன்ற, இருப்பது இருப்பது போலக் காட்டவேண்டும். கடல் என்றால் கடல் எதிரே தோன்ற வேண்டும். கடலின் பொதுத் தன்மை கடல் என்ற சொல்லாகத் தோன்றினால் அதில் அழகேது? ஆழமேது? அது கருத்துப் பொருளே அன்றிக் காட்சிப் பொருளாவதில்லை. வெற்று நிலைப் பொதுச் சொற்கள் வாய் நிரம்பிய வளம் பெறலாம்; தத்துவ நுட்பம் பெறலாம். ஆனால் பாட்டு அவற்றில் ஈடுபட்டுப் பயன் இல்லை. அனைத்தினையும் ஒன்றாக்கிச் சொல்லன்றி வேறு ஒன்றும் தோன்றாதபடி அண்டத்தினைப் பாடுவதால் அண்டப் பாவாணனாக ஒருவன் ஆகிவிட முடியாது. அத்தகைய பாவலன், தன் பாட்டுக் கலையில் எழும் உண்மை இடர்ப்பாடுகளைத் தாண்டிக் குதியாமல் அவற்றைக் கை நழுவ விட்டோ அஞ்சியோ ஓடி ஒளித்துக் கொள்கிறான். அதனாலேயே அத்தகைய வெறுஞ் சொல் ஆரவாரங்களை அடியோடு ஒழித்தல் வேண்டும்.

(5) தெளிவு

இதனால் மற்றோர் உண்மையும் வெளியாகிறது. பிழம்பு, ஓவியம், படிமம் என்றதால் குழம்பிக் கலங்கியதோ வரையறை அற்றதோ பாட்டாகாது எனலாம். தெளிவும் ஊற்றமும் உடையதே பாட்டாகும்.

(6) சாறு

தெளிவு விளக்கம் என்பதாலேயே வளவள என்று பேசுவதெல்லாம் பாட்டாகாது. சொல்லும் பொருளுமே அன்றி ஒலியும் புலவன் கண்டதனைக் கேட்போன் உள்ளத்தே எழுப்பிவிடும். பாட்டின் உயிர்நிலை சொற் சுருக்கமே ஆம். செறிவு பாட்டின் உயிர் என்பர் வீரசோழியமுடையார்; பாட்டின் குணம் என்பர் தண்டியார். எதிர் தோன்றும் பெரிய உலகினைக் கண்ணாடி சுருக்கிக் காட்டுவதே பாட்டின் திட்பமும் நுட்பமுமாம் என்று பழம் புலவோர் சூத்திரத்துக்கு இலக்கணம் கூறுவது போலப் பாட்டிற்கும் இலக்கணம் கூறினர் எனலாம். பாட்டு, அனைத்தினையும் பிழிந்த சாறு கன்னலாய்த் திரண்டதாக இனிக்க வேண்டும்.

3

நிழற்படமா?

படிமக் கொள்கையினர் தம் கருத்தினை இப்படி விளக்கி வைத்தனர். இக் கொள்கையின் விளக்கத்தினைப் படிக்கும்போது என்ன தோன்றுகிறது? பாவலன் மனத்திற் படிந்த வடிவத்தினை அப்பாவலன் பாட்டினைப் படிப்பவன் மனத்தில் உள்ளது உள்ளவாறே பதிய வைப்பதே பாட்டு ஆகும் என்பதே தோன்றுகிறது. ஆனால் தன் முகத்தின் எதிரே கண்ணாடி பிடித்துக் காட்டுவது போன்றதோ பாட்டு எழுதுவது? உலகத்தின் எதிர்ஒளி பாவலன் மனத்தில் விழ, அந்த எதிர்ஒளியைப் பாட்டென்ற கண்ணாடியில் பதியவைப்பது மட்டும் பாட்டானால் ஆறறிவுடைய பாவலன் இதற்கு வேண்டுமா? கண்ணாடி ஒன்றே போதாதா? எனவே, சாயல் பிடிப்பது மட்டும் பாட்டாகாது. அநுபவப் பிழம்பாக விளங்குகிற பாவலனின் உள்ளத்தே உலகக் காட்சி ஒன்று தோன்றிக் கிளர்ச்சியை விளைவித்து, அவனை ஏமாற்றி நிற்கும் நிலையில், அவன், தன் நிலைக்கு ஏற்ப அதனை உணர்ந்து அநுபவித்த முறையில் அவனே பாட்டாக அவதரித்து அதனைத் தன் பாட்டாகப் பாட வருகின்றான். அவனையே அப்பாட்டு வெளியிடுகிறது.

மதிப்பீடு

இந்த நிலைமையில் அவன் கண்ட காட்சி எல்லோரும் முன் எல்லாம் கண்ட காட்சி அன்று. பாவாணன், தான் கண்ட பொருளைப் புனைந்துரைப்பதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. அவன் உயிரும் அவன் அநுபவமும் அப்பொருளை மதிப்பிட்ட மதிப்பீட்டின் வழியே அந்தப் புனைந்துரையில் உணர்ச்சி வடிவாய்ப் பொங்கி வழிந்து உருவெடுத்து விளங்கக் காண்போம். அவன் காணும் வாழ்க்கையின் உணர்வு வடிவான நுட்ப முடிவும் (Criticism of Life) அங்கே தோன்றுகிறது. புறப்பொருள்களைப் பற்றிப் புறநிலையில் பாடும்பொழுது இந்த வேற்றுமை தோன்றாமல் போனாலும் போகலாம். உள்ளத்து நிலையைப் பற்றிப் பாடும்பொழுது இந்த உண்மை எளிதில் வெளியாகும். மனம் பொருளோடு இங்கு ஒன்றாவது காணலாம். தான் உணர்ந்த உண்மையினைப் பாடுகிறார் ஷேக்ஸ்பியர்:

"அண்ணலே

காலமென்பதன்பின்னே பைஒன்று
தொங்குகிறது
மறப்பிற்கென்றே பிச்சை போட்டு
வைக்கிறது அதனிலே."

இப்படிப் பாடும்பொழுது வெறும் காலத்தின் புனைந்துரை மட்டுமா காண்கிறோம்? காலத்தைப்பற்றி அவரது வாழ்வு கண்ட மதிப்பீடும் அப்பாட்டோடு பாட்டாய் அவரது எதிர்ஒளியாய் அங்கே விளங்கவில்லையா? இவ்வாறு நோக்கும்போது படிமக் கொள்கையின் குறைபாடு தோன்றாது போகாது.

4

இறந்த காலம்

எவ்வாறாலும் இப்படிப் புத்தம் புதிய ஊழியினைத் தொடங்கிவிட்டதாகக் கருதும் பாவாணர்கள், முன் நாம் குறித்தது போல, முதலில் மொழியின் புறநிலை அமைப்பில் ஈடுபடுவதனைக் காண்கிறோம். இன்றைய மனிதன் முன் நாளைய மக்களைப்போல முதலில் எதனையும் நம்பும் நம்பிக்கை உலகில் வாழவில்லை. விஞ்ஞானம் பழமையைச் சிதைத்து எறிந்துவிட்டது. அவன் நம்பி வாழ ஒன்றும் இல்லை; தயங்குகின்றான் இன்றைய மனிதன்; பழமையைப் பாராது திரும்புகிறான். இறந்த காலத்திலிருந்தும் தன்னைத் தப்புவித்துக்கொண்டு ஓடுகிறான். ஆனால், இறந்த காலம் நம்மை விட்டுப் பிரியக் கூடியதா? குடிவழி குடிவழியாய் முன்னோரிலிருந்து இவன் பிறந்த முறையே, இவன் உடலில் ஊறிப் பாய்கிறது இறந்த காலம்; இப்படி இரத்தத்தில் ஊறிக் காதல் எனக் குடிமுறைவழியே வளர்ந்து வருகிறது; மேலும் வளர்கிறது. குடிவழியே மக்கள் உள்ளத்தே எழுந்து தொடர்ந்து தலைமுறை தலைமுறையாய் இனத்தை உள்நின்று ஊறிப் பெருக்குவதன்றோ காதல்?

காதலும் மொழிச் சிக்கலும்

இப்படி நோக்கும்போது, அன்பு விளக்கத்தின் அடிப்படை அன்றோ இறந்த காலம் ஆகிறது? இது காதலாய்க் குடத்துள் விளக்கு என அடங்கி நில்லாமல் மலைமேல் விளக்கு என ஒளியாய் எங்கும் பொங்கி வழியக் கொதித்துத் துள்ளி வருகிறது. பிறருக்கும் இது தன்னை அறிவிக்க முந்துகிறது. பாவலன் இப்படி வெளியிடும் வழியோ மொழியன்றி வேறு இல்லை. மொழியோ வழிக்கு வரமாட்டேன் என வம்பு செய்கிறது; வழிவிடமாட்டேன் என வழி மறிக்கிறது. இந்தப் போராட்டத்தாலேயே இன்றைய பாவாணர் எல்லாம் மொழிச் சிக்கலில் ஈடுபடுகின்றனர். மொழி ஆரவாரத்தில் இந்த நெருக்கடியின் போக்கும் இவ்வாறு விளங்குகிறது.

5

கீழ்வெட்டு

ஆதலின் பாட்டில் ஒரு சிலபோது வழக்கறிஞர் பேச்சு நடையும் வேறு சிலபோது அரசியல் மேடை ஆரவாரமும் கேட்கும். தமிழ் நாட்டிலும் அப்படித்

தானே? மேலே கூறியபடி எல்லாம் விஞ்ஞானத்திற்கு அஞ்சிப் பழமைப் பற்றினை எல்லாம் காற்றோடு காற்றாய்ப் பறந்து ஓட விட்டபின் எதனைப் பற்றிப் பாவலன் பேசக் கூடும்? இன்றைய காலத்தைப் பற்றியே பேச வேண்டும். ஆனால் இன்றைய காலத்தினைப்பற்றி அவன் என்ன நம்பிக்கை கொண்டுள்ளான்? ஒன்றும் இல்லை. பின் என்ன பாடுவான் அவன்? அதனைப் பற்றிக் கீழ்வெட்டாகப் (Irony) பேசிப் பாடுவதே எஞ்சி நிற்கின்றது. கீழறைப் பொருளே இப்பாட்டின் உயிர் நிலையாகிறது. த்வனி என எஞ்சி நிற்பது இது ஒன்றே ஆம். இந்நாளைய நகைச்சுவையின் திருவிளையாடல் இவ்வளவே ஆம்.

6

இரு வேறு நோக்கு

ஆனால் பாவலன் முழுவதும் நம்பிக்கை அற்றவனாகவே வாழ முடியுமா? முடியாது அன்றோ? பழமையை நம்பாதவர்கள் ஒருபுறம் இருக்க, அப்பழமையை நம் அடிப்படையாகக் காண்பவர்களும் மற்றொரு புறம் இல்லாமல் இல்லை. இறந்த காலத்தைக் காணும் இரு வேறு நோக்கின் மாறுபாடு இங்கே தோன்றக் காண்போம். புதிய விஞ்ஞான வழியே வரலாற்றினை ஆராய்வது ஒரு வகை. அப்படி ஆராயும்போது இறந்த காலம் வெறும் கருத்துப் பொருளாகிறது; பொதுத்தன்மையாகக் குழம்பிப் பொருளிழந்து பொலிவற்றுப் புழுங்குகிறது. ஆண் பெண் என்ற அழகுறு சிறப்பு நிலைகள் அற்றதாயும் உணர்ச்சி தூண்டும் ஆற்றல் அற்றதாயும் ஒழிந்து பொதுநிலை எனப்பெறும் அலி நிலையை எய்தி ஒடுங்கிவிடுகிறது. புலவன் காட்சி மற்றொரு வகையாம். பாவலனோ கடந்தனவற்றையெல்லாம் இறந்தகாலம் என ஒரே மாவாக அரைத்துவிடாமல் உயிரும் உண்மையும் கலந்த தனித்தனிச் சிறப்பு நிகழ்ச்சிகளாக ஒரு நாடகமே போலத் தொடர்ந்து வரக் காண்கிறான். இறந்தகாலச் சுரணை அல்லது இறந்தகால உணர்ச்சியே மக்கட் பண்பாட்டின் ஆக்க நிலைக்கருவியாம். முன் சென்ற காலத்தை அதன் பேச்சாகக் கற்று உறவு கொள்ளாதபோது பாவலன் மக்களோடு எப்படிப் பேச முடியும்?



பாவமும் பாட்டும்

பாவம் என்ற ஒன்றனைப் பழங்காலம் பாட்டின் உயிர் நிலையாக நம்பியது. சாத்தானை அஞ்சியது. ஆனால், இன்றோ சாத்தான் மூட நம்பிக்கையோடு ஒரு சேரச் செத்தொழிந்தான். விஞ்ஞானத்தின் விளைவு இது. சாத்தான் செத்த இந்தப் புதுக்காலச் சிறப்போ கலைக்கே சாவுமணி அடித்தது என்று கொள்வாரும் உண்டு; ஒழுக்கநிலைக்கே உலை வைத்துவிட்டது என்று நம்புவாரும் உண்டு.

இரண்டாட்டம்

எனவே, எங்கும் இந்த இருவகை நோக்கின் முட்டுப்பாட்டால் ஓர் இரண்டாட்டமே காண்கிறோம். பழமையில் நம்பிக்கை இருக்கும்போது பாட்டில் அதுவே ஓர் உடன்பாட்டு நிலையாக விளங்குகிறது; பிழம்பு நிலையாகத் தெள்ளத் தெளிய உருப்பெற்றுத் தோன்றுகிறது. அத்தகைய பேச்சில் ஓர் ஆழ்ந்த பொருள் பொங்குகிறது. ஆனால் அத்தகையோர் இந்நாளில் நிகழ்காலத்தைப்பற்றிப் பாடுகையில் என்ன ஆகும்? அங்கே என்ன உண்டு? நம்பிக்கை இல்லாத எதிர்மறை நிலை மட்டும் தோன்றுகிறது. அப்படி இருப்பது எதனை மதிப்பிடும்? சூனியத்தினையா? வலிந்து மதிப்பென ஒன்று தோன்றினாலும், அது செயற்கையாகவே தோன்றும் நம்பிக்கை இல்லாத நிலைமையைக் குத்தலாய்க் கீழ்வெட்டாய்ப் பேசுவது மட்டுமே பாட்டாக எஞ்சுகிறது. இஃது வெற்றாரவாரப் பாட்டே ஆம். இன்றைய நம்பிக்கையின்மையைக் கிண்டல் செய்வதோடு இந்தப் பகட்டாரவாரப் பக்தி நின்றுவிடுகிறது. உண்மையில் உயிரின் இன்றைய நோயே இப்படி வெளியாகிறது. ஆனால் இஃது என்ன வெளியீடு? ஒழுக்க நிலையைப்பற்றிய மதிப்பீடு இத்தகைய கீழறைப் பொருளில் மறைந்து ஒழிகிறது. வேறு ஒரு சிலரோ பாட்டில் பழமையைப் பாராட்டுவதும் தோன்றுகிறது. இப்பழமையை மேல்வரிச் சட்டமாகக் கொள்ளுவது ஒரு புறம். பழமையைப் பாராட்டுதல் பாட்டின் உயிர்நிலைப் பண்பாகவே மாறிவிடுவது மற்றொரு புறம்.

நீ யார்?

இந்த இரண்டாட்டத்தில் இன்றைய மக்கள் நிலைமை என்ன? பழங்காலம் இன்று எங்கே? மறைந்து மாயமாய்ப் போயிற்று. உன் முன்னோர் உன்னை அறிந்துகொள்ள முடியாது. நீ புது மனிதன் என்கிறாய். உன்னுடன் வாழ்வாரோடும் தொடர்பு கொண்டு உன்னால் பேச முடியாது. பழமை செத்தது என்றால் இங்கு ஓர் இமைப்போதின் முன் நீ வாழ்ந்ததும் பழங்கதையாய்ப் பொய்யாய்ப் பொருளற்றதாய் ஒழிந்தது அன்றோ? அவ்வாறானால் நேற்றிருந்த நீயா இன்றிருக்கும் நீ? முன்னிருந்த நீயே இன்றுமுள்ள நீ எனப் புறநிலை வகையாக, தொடர்ந்து நிற்கும் ஒருவனாக உன்னைக் கண்டறிதல் முடியாதென்பதே முடியும். அப்படியானால் 'நீ யார்?' என்று இன்றைய மனிதனைக் கேட்கலாம் அன்றோ? நேற்றையவனே இன்றையவன் எனக் காண்பதில் இவ்வாறு விஞ்ஞானப் பெருஞ்சிக்கல் ஒன்று எழுகிறது. இந்தச் சிக்கலும் சில பாவாணர் பாடும் பாட்டாகிறது. புதுப் பாடலின் புதுமை இது; புரட்சிதானே? ஆளையே புரட்டும் புரட்சி! ★

நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
COLGATE HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
CCHO/B/1

PASS TIME
WITH YOUR
favourite
PASTIME
NO.772
Bridge
PLAYING CARDS
CLUB QUALITY
772
Available at all leading stores
POPULAR
PLAYING CARDS
POPULAR FINE ART
LITHO WORKS,
156A. TARDEO RD., BOMBAY-7.

புதுமை பெறுக!
இதம் பெறுக! நளினமாய் இருங்கள்!
நாள்முழுதும்!
சிறந்த, இன்பகரமான மண முள்ள சார்மிஸ் டால்கம் பவுடரால் ஏற்படும் உணர்ச்சிகள் இவை. குளித்தபின் மேனிமுழுதும் சார்மிஸ் டால்கம்பவுடரைத்தூவுக. எத்தகைய புதுமை, குளுமை - தெய்வீகக்குளுமை ஏற்படுகிறது! அரிப்பு வராமல் அதன்பட்டுப் படலம் பாதுகாக்கிறது. சிக்கனமான. அத்யாவசியப் பொருள் சார்மிஸ் டால்கம் பவுடர். இன்பம், அழகின் இரகசியம் அது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம்பவுடர்
மிகவும்
சிறந்த இன்ப மணமுள்ளது
கால்கேட் சார்மிஸ் வாசனைத்திரவியங்கள் சகல-உபயோககிரீமும் ஸ்னோவும் உள்ளன-எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்.

நம்பிக்கை

ந. சிதம்பர சுப்ரமண்யன்

மனிதன் உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது நம்பிக்கை. ஆனால் அதைக் குலைக்க முயல்கிறது, சந்தர்ப்பம்.

நம்பிக்கை என்பது மனிதனிடம் எப்படி ஏற்படுகிறது? கடவுளிடம் மனிதனுக்கு உண்டாகும் நம்பிக்கையைப்பற்றிச் சொல்ல வரவில்லை. சுருதி, யுக்தி, பிரமாணங்களால் தான் கடவுளை அறியலாம் என்கின்றன சாத்திரங்கள். இருந்தாலும் வெறுங் கண்ணால் பார்க்க முடிகிறதில்லை. ஆனால் மனிதன் மனிதனைப் பார்ப்பதற்கு வேறு ஆதாரங்கள் வேண்டியதில்லை. கண்களாலேயே பார்க்க முடியும். நமக்கு முன்னாலே தோன்றும் ஒரு மனிதனிடம் எப்படி ஏன் நம்பிக்கை உண்டாகிறது?

மண்டையைக் குழப்பும் தத்துவ விசாரங்களில் நான் இறங்குவதில்லை. ஆனால், இந்த நம்பிக்கை என்ற பிரச்னை, ஆறு மாத காலமாக எனக்கும் அலமேலுவுக்கும் தீராத விவகாரத்தை உண்டாக்கிக் கொண்டு, மண்டையைக் குழப்பி வருகிறது. அதனால்தான் அதைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டி வருகிறது.

ஆறு மாதத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை, பாலு என்னிடம் வந்தான். தான் மிகவும் ஏழை என்றும், தனக்கு எங்கள் காரியாலயத்தில் ஏதாவது ஒரு வேலை வாங்கித் தரும்படியும் கேட்டுக் கொண்டான். காரியாலயத்தில் அப்பொழுது ஒன்றும் வேலை இல்லை. வழக்கமான பதிலைத்தான் நான் சொன்னேன். அது 'இல்லை' என்பதுதான்.

'இல்லை' என்பதையே இல்லாமல் செய்து விடுவதாகப் பயமுறுத்தினான் ஒரு கோப :

காரக் கவிஞன். ஆனால், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட்டைப் போல 'இல்லை' என்று சொல்வதற்காகவே என்னை நியமனம் செய்திருந்தார்கள். தியாகப் பிரம்மம் ராம நாமத்தை ஜபித்ததை விடப் பக்தி சிரத்தையுடன் இந்த 'இல்லை' மந்திரத்தை ஜபித்து வந்திருக்கிறேன்.

உத்தியோகத்திற்கு வந்து யாராவது கேட்பார்கள். சிப்பந்திகள் யாராவது விடுமுறைக்கு வந்து கேட்பார்கள். பெரிய மனிதர்களோ, சின்ன மனிதர்களோ, நல்ல காரியத்திற்கோ கெட்ட காரியத்திற்கோ யாசகம் கேட்பார்கள். பத்திரிகைக்காரர்கள் என் பழைய நட்பை வைத்துக்கொண்டு, விளம்பரத்திற்குச் சிபாரிசுக்கு வருவார்கள். இவர்கள் எல்லாருக்கும் என்னுடைய ஒரே பதில் 'இல்லை'தான். இப்படி நாஸ்திகத்தின் பிரத்தியட்சப் பிரமாணமாக இருக்கும் என்னிடம் வெளிவரும் பதில் என்னுடன் கொஞ்சம் பழகினவர்களுக்குக்கூட நன்கு தெரியும். ஆனால், ஆசை வெட்கமறியாது என்பது போல, அவரவர்கள் தேவையினால் உந்தப்பட்டு, அப்போதைக்கப்போது வந்து கேட்டுவிட்டுத்தான் போவார்கள்.

வழக்கமான பதிலைத்தான் அன்றும் பாலுவிடம் சொன்னேன். "என்னப்பா, எங்கள் காரியாலயம் பட்டாளமா? தினம் ஆயிரம் பேர்கள் வந்து கேட்டால் வேலை இருந்துகொண்டே இருக்குமா? எவ்வளவு பேர்வழிகளை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும்? எத்தனை பேர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியும்? எங்கள் கம்பெனியையும் எங்களையும் தவிர உலகத்திலேயே வேலை கிடைப்பதற்கு வேறு ஓர் இடமும் இல்லையா? இன்னும் நாலு இடத்தைப் போய்ப் பார்" என்றேன்.

அவன் சொன்னான்: "நானும் எங்கெல்லாமோ சுற்றிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சாப்பாட்டிற்கே வழி இல்லை."

"உன் கஷ்டம் உன்னோடு இருக்கட்டும். இப்பொழுது வேலை ஒன்றும் காலி இல்லையே!"

"மிகவும் புண்ணியம் உண்டு. மூன்று நாளாக ஒரு வேளைச் சாப்பாடுகூட, வழியாகக் கிடைக்கவில்லை."

"நீ எதுவரையும் படித்திருக்கிறாய்?"

"மூன்றாவது பாரம்."

"வயசு என்ன?"

"பதினாறு."

"நீ வேறு எங்காவது வேலை பார்த்திருக்கிறாயா?"

"என் அறிவையோ படிப்பையோ காட்டி நான் வேலை கேட்கவில்லை. என் வயிற்றைக் காட்டித்தான் உங்கள் தயவை நான் யாசிக்கிறேன். என் முகத்தைப் பாருங்கள். அல்லது வயிற்றைப் பாருங்கள். உங்கள் இருதயத்தைத்தான் நான் பார்க்கிறேன்" என்றான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்ன, அதிகப் பிரசங்கியாக இருப்பாய் போலிருக்கிறதே!"

"இல்லை. சின்னத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்."

பையன் புத்திசாலி என்று நன்கு பட்டுவிட்டது. அவன் முகத்தில் இருந்த குறுகுறுப்பு, எனக்கு ஒருவிதத் திருப்தியைக் கொடுத்தது. அவனிடத்தில் எப்படியோ ஓர் அநுதாபம் உண்டாயிற்று.

"சரி, இப்பொழுது எங்கள் காரியாலயத்தில் ஒன்றும் வேலை இல்லை. நாலைந்து மாதங்களுக்கு இங்கேயே என்னுடன் இரு. சாப்பாடு போட்டு ஏதாவது கொடுக்கிறேன். உன் வேலை திருப்தியாக இருந்தால், வேறு எங்காவது, உனக்குச் சிபாரிசு செய்து வேலை வாங்கித் தருகிறேன்" என்றேன். அவனும் அதற்குச் சம்மதித்தான்.

அவனை அலமேலுவுக்கு உடனுக்குடனேயே அறிமுகம் செய்து வைத்தேன். "இதோ பார், அலமேலு, உனக்கு அநேக குறைகள் இருக்கின்றன. பங்களா இல்லை. மோட்டார் கார் இல்லை. பசு மாடு இல்லை. ஏவின வேலையைச் செய்வதற்கு ஒரு வேலைக்காரப் பையன் கூட இல்லை. இப்படி எத்தனையோ குறைகளை என்னிடம் முறையிட்டிருக்கிறாய். இந்தப் பையன் புத்திசாலியாக இருக்கிறான்; நல்லவனாகத் தோன்றுகிறது. வீட்டிலே வேலைக்கு அமர்த்திக் கொள்ளப் போகிறேன்" என்றேன்.

"ரொம்ப அழகாயிருக்கிறது, ஊர் பேர் தெரியாத பையனை வீட்டிலே வைத்துக் கொள்கிறது!"

"ஊரும் பேரும் எதற்கு? அகத்தின் அழகு முகத்தில் தெரியும். பையன் நல்லவன். போகப் போகத் தெரியும் பார் உனக்கு" என்றேன்.

"உங்களுக்கு எல்லாரும் நல்லவர்கள் தாம்."

"உன் சம்பந்தப்பட்ட வரையில் எல்லாரும் அயோக்கியர்கள்தாம். தருமபுத்திரருக்குக் கெட்டவனே உலகத்தில் இல்லை. துரியோதனனுக்கு நல்லவனே உலகத்தில் இல்லை. யார் மனசு எப்படி இருக்கிறதோ அப்படித்தான் உலகமும் இருக்கும். அப்படித்தான் நம் அபிப்பிராயமும். சரிதானே அது?"

நான் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, உள்ளே போய்விட்டாள் அலமேலு.

பாலு, வந்த சில நாட்களுக்குள்ளேயே, என் மனத்தைக் கவர்ந்துவிட்டான். அவனிடம் எனக்கு அளவிறந்த அபிமானம் ஏற்பட்டுவிட்டது. சொல்லாமலிருக்கும் பொழுதே, மனத்திலுள்ளதைக் கண்டுகொள்ளும் அவன் புத்திசாலித்தனத்தைக் கண்டு என்னால் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை. அத்துடன் மிகவும் இங்கிதமாக நடந்துகொள்வான். வருவோர் போவோர்களையெல்லாம் நிமிஷத்தில் எடை போட்டுவிடுவான். வருபவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள், எந்த மனநிலையில் வந்திருக்கிறார்கள், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையெல்லாம் ஒரு விநாடியில் எடை போட்டுத் தீர்மானித்துவிடுவான். அவனுடைய திறமையில் எனக்கு வரவர நம்பிக்கையும் அவனிடம் மதிப்பும் ஏறிக்கொண்டே வந்தன.

நாளுக்கு நாள் நான், 'பாலு பாலு' வென்று அவனிடம் அளவுக்கு மீறிய அநுதாபத்தையும்

சலுகையையும் காட்டி வருவது அலமேலுவுக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை.

''எதற்கெடுத்தாலும் 'பாலு, பாலு' என்கிறீர்கள். அவன் எப்படிப்பட்டவன் என்று உங்களுக்குப் புரியவே இல்லை. அவனுக்கு வயிற்றிலே பல். நல்ல பாம்பை வீட்டிலே பால் வார்த்து வளர்க்கிறாப் போலத்தான். என்றைக்காவது அவன் உங்களுக்குச் சரியான பாடம் கற்று வைக்கத்தான் போகிறான். அது ஒரு நாள் நடக்கத்தான் போகிறது!'' என்றாள்.

''ஏன் இப்படி அவனைப்பற்றி அபாண்டமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறாய்? அவன் என்ன தப்புச் செய்கிறான்? புத்திசாலித்தனமாக நடந்துகொள்கிறான். நான் அவனுக்குச் சலுகை காட்டுகிறேன். இதில் ஏன் உனக்கு அசூயை?''

''எனக்கு என்ன அசூயை! நீங்கள் ஏமாறாமல் ஜாக்கிரதையாய் இருந்தால் போதும்'' என்றாள் அவள்.

ஆனால் இந்த விவகாரம், ஏதாவது ஒரு சாக்கை வைத்துக்கொண்டு கிளம்பிக்கொண்டேயிருக்கும். ஒரு நாள் இந்த மாதிரி கிளம்பியது: குழந்தை சாரதா விளையாடுவதற்கு ஒரு வெள்ளிக் கிலுகிலுப்பையைக் கொடுத்திருந்தாள் அலமேலு. குழந்தை அதைக் கையில் வைத்துக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கும். மாலையில் காரியாலயத்திலிருந்து வரும்போது வீடு கலகலப்பாக இல்லை. ஏதோ தகராறு என்பது புலனாகியது.

''என்னப்பா, மூணும் பேஸ்து மாதிரி முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?'' என்றேன்.

''வெள்ளிக் கிலுகிலுப்பையைக் காணோமப்பா!'' என்றாள் விமலா.

''குழந்தைகள் இல்லையப்பா; நீங்கள் கோட்டான்கள். ஒரு சாமானை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளத் தெரியாதே!'' என்று விமரிசனம் செய்தேன்.

''குழந்தைகள் என்ன செய்யும்? தேளுக்கு நாட்டாண்மை கொடுத்தால் நிமிஷத்திற்கு ஒரு தரம் கொட்டிக்கொண்டு இருக்கும். வாலு, வாலு என்கிறீர்களே! அந்தப் பாலுதான் அதை எடுத்துப் போயிருக்க வேண்டும்'' என்றாள்.

''நாக்கிலே நரம்பில்லாமல் பேசாதே. வீண் பழியை அநியாயமாக ஒருவர் மேல் சுமத்தாதே. வயிற்றுப் பிழைப்புக்காக ஓர் ஏழைப் பையன் நம்மிடம் வேலைக்கு வந்தானென்று அவனைத் திருடனாக்கி விடாதே. வறுமை திருடச் செய்யும் என்ற கட்டாயம் இல்லை'' என்றேன். எனக்கு அலமேலுவின் மேல் மிகவும் கோபம் உண்டாயிற்று.

வறுமையையும் திருட்டையும் முடிச்சுப் போடுகிறாள் அலமேலு. பணக்காரர்களும் முதலாளிகளுந்தாம் திருடர்கள் என்று திரைப் படங்களும் முற்போக்கு எழுத்தாளர்களும், கதைகளும் காவியங்களும் எழுதிப் பறை சாற்றி

அகஸ்மாத்தாகப் பேனாவின்மேல் கண்போயிற்று.

தீப் பெட்டி

"தீயையா அதில் வைத்திருக்கிறார்கள், தீப்பெட்டி என்று சொல்ல? தீச்சட்டி என்கிறார்களே, அது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!" - ஆராய்ச்சிக்காரர் இப்படிப் பேசினார்.

"போ, ஐயா! உலகம் தெரியாமல் பேசுகிறாய். பண்டம் பழக்கத்துக்கு வந்த போது தோன்றின பெயரை மனிதன் வைத்துக் கொள்கிறான். அது ஏன் அப்படி வந்தது என்று கேட்க முடியுமா, என்ன?" - இப்படிப் பதில் சொன்னான் வீதியில் வளையவரும் மனிதன்.

"இருந்தாலும் ஏதாவது காரணம் இருக்கத்தான் வேண்டும்" என்று அழுத்தமாகச் சொன்னார் ஆராய்ச்சிக் காரர்.

"தீ வேண்டுமானால் முன்பெல்லாம் சிக்கி முக்கிக் கல்லைத் தேடினார்களாம். இப்போது தீக்குச்சியைத் தேடுகிறார்கள். தீக்குச்சி வைக்கும் பெட்டி தீப்பெட்டி ஆகிவிட்டது."

"சரியான காரணம், தீக்குச்சிப் பெட்டி என்று சொல்வதைவிடத் தீப் பெட்டி என்பது எளிது. சாலைக்கு அருகிலேயே குறுக்குப் பாதையை உண்டாக்கும் சோம்பேறி மனிதன் அதையே பற்றிக்கொண்டான்" என்று ஆராய்ச்சிக் காரர் ஆராய்ச்சி செய்தார்.

வீதி மனிதன், "அதெல்லாம் நமக்குத் தெரியாது. நான் தீப்பெட்டி என்கிறேன். என் பெண்டாட்டி நெருப்புப் பெட்டி என்கிறாள். என் தங்கை கணவனோ வத்திப் பெட்டி என்கிறான்" என்றான்.

"ஓ! விளக்கு ஏற்றத் தேடினவன் வத்திப் பெட்டி என்று பேர் வைத்திருக்க வேண்டும்" என்றார் ஆராய்ச்சிக்காரர்.

வருகிறார்கள். ஏழைகளில் நல்லவர்கள், கெட்டவர்கள் இல்லையா? பணக்காரர்களில் நல்லவர்கள், கெட்டவர்கள் இல்லையா? இரண்டுங் கெட்டான் மத்திய தர வகுப்பில் நல்லவர்கள், கெட்டவர்கள் இல்லையா? அல்லது ஒரு தனி மனிதனிடத்திலேயே நல்லது, கெட்டது இரண்டும் இல்லையா? இதைப்பற்றியெல்லாம் நினைக்க வேண்டும்.

"கிலுகிலுப்பை போனால் போகிறது. அதற்கு ஒரு நல்ல பையனைத் திருடனாக்கி விடாதே. தன் வினை தன்னைச் சுடும் என்பார்கள். அது உன் மேலேயே வந்து தாக்கும்" என்று சொல்லிவிட்டு விவகாரத்தை முடித்தேன்.

ஆனால், இந்த விவகாரம் அன்றுடன் தீரவில்லை. இதற்கு எதிர்பாராத ஒரு விளைவு ஏற்பட்டுவிட்டது. என் வீட்டு மெத்தையில் முற்றத்தையொட்டி ஒரு கைபிடிச் சுவர் இருந்தது. அந்தச் சுவருக்கு அடுத்தாற்போல், ஜலம் வந்து விழுவதற்கு ஒரு கால்வாய் இருந்தது. அந்த ஜலம் என் முற்றத்தில், குழாய் மூலமாக வந்து விழும். அந்தக் கால்வாயில் ஜலம் நிரம்பி, அடுத்த வீட்டு ஓட்டின் வழியாக ஒழுக ஆரம்பித்தது. அடுத்த வீட்டுக்காரர்கள் புகார் செய்ததன் பேரில், ஒரு கொல்லத்துக் காரனை அழைத்து அதைப் பழுது பார்க்கச் சொன்னேன். அவன் மேலே பார்த்துவிட்டு, "சரியாகத்தானே இருக்கிறது!" என்று சொன்னான். கடைசியாக அவனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. குழாயில் ஏதாவது அடைப்பு ஏற்பட்டிருக்குமா என்று அதைப் பரிசீலனை செய்து பார்க்கத் தொடங்கினான். அங்கே ஏதோ ஒன்று அடைத்திருப்பது போலத் தோன்றியது. ஒரு குச்சியை எடுத்துக் குத்திவிட்டு, ஒரு குடம் ஜலத்தை விட்டவுடன், முற்றத்தில் வந்து விழுந்தது, காணமற் போன அந்தக் கிலுகிலுப்பை!

"இதைப் பார்த்தாயா? பண்டம் ஓரிடம், பழி ஓரிடம் என்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இனிமேலாகிலும், நாக்கை அடக்கிப் பேசு."

"உங்களுக்குப் புரியாது, இதெல்லாம். உங்களை ஏமாற்றுவது சுலபமாயிற்றே! அந்தக் குழாய்க்குள்ளே குழந்தை மாடிக்குப் போய் எங்கே திணிக்கப் போகிறது? இவன் தான் மேலே கொண்டுபோய் ஒளித்துவிட்டு வந்திருக்கிறான். அது அவனறியாமல் நன்றாய்க் குழாயடிக்குள் விழுந்து மாட்டிக்கொண் டிருக்கிறது" என்றாள்.

என்னால் சகித்துக்கொண் டிருக்க முடியவில்லை. "அட ராம, ராம" என்று சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டேன்.

வழக்கமாக நடக்கும் தினசரி நாடகங்களைப் போலத்தான் நாலு நாளைக்கு முன்பு மறுபடியும் அது நடந்தது. விஷயம் இது தான்: என் மேஜைமீது எப்பொழுதும் இருக்கும் பௌண்டன் பேனா, திடீரென்று காணமற் போயிற்று. எப்படிப் போகும்? எங்கே போகும்? யார் எடுத்துப் போயிருக்கக் கூடும்? எனக்குப் பேனா போனதுகூடப் பெரிதாகப் படவில்லை. அலமேலுவின் தொணதொணப்பு ஆரம்பித்துவிடுமே. அதுவேதான் எனக்குச் சங்கடமாக இருந்தது.

நான் எதிர்பார்த்தது போலவே, ஆரம்பித்து விட்டாள் அலமேலு. "கள்ளனை வைத்துக் கதவைச் சாத்துவது போல், அந்தச் சனீச்வரன்தானே, மேஜை, நாற்காலி, பீரோ, மணி பர்ஸ் எல்லாவற்றையும் திறக்கிறது? வேறு யாரும் மாடிப் பக்கம் வருவதில்லை. குழந்தைகள் வந்தால், பத்திரிகைகளையும் புத்தகங்களையும் கிழித்துவிடுகின்றன என்று கீழே துரத்திவிடுகிறீர்கள். அந்தப் பீடையைத் தவிர வேறு ஒருவரும் வருவதில்லையே! வேலைக்காரி வந்து கூட்டும்பொழுது, இது பக்கத்திலேயே நின்றுகொண்டு அதிகாரம் செய்யும். அதைத் தொலைத்தால்தான் வீட்டிற்கே விடிவு காலம் என்று நான் கரடியாகக் கத்தி என்ன பயன்?"

என்று புராணம் படிக்க ஆரம்பித்தாள் அலமேலு.

எனக்கு ஆத்திரமாக இருந்தது. 'கண்ணாரக் கண்டது பொய்; காதாரக் கேட்டது பொய்; தீர விசாரிப்பது மெய்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அலமேலுவுக்கு, அந்த யோசனையே இல்லை. விசாரணை இல்லை. அவள் கொண்ட முடிவே தீர்ப்பு. நெஞ்சில் ஈரமில்லாமல் அவள் அவன்மீது குற்றஞ் சாட்டுவது எனக்கு அருவருப்பையே ஊட்டியது.

''இதோ பார், அலமேலு. நீ ஒவ்வொரு தரம் அவனைக் குற்றஞ் சாட்டுவதும் பொய்த்துக்கொண்டே வருகிறது. ஆனால் நீயோ ஓய்வதாகக் காணவில்லை. இந்த அநீதியை இனி மேலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. அவனைப்பற்றி இனி வாயெடுக்காதே. கேவலம் அது மூர்க்கத்தனமான கோபத்தை உண்டாக்கிவிடும்'' என்றேன்.

''எக்கேடாவது கெட்டுத் தொலையுங்கள். என் குழந்தைகளுக்கு ஓர் அணுவுக்குப் பூக்கிடையாது. இப்படிச் சொத்தெல்லாம் பறி போகிறது. தொலையட்டும், தொலையட்டும். எனக்குத்தான் என்ன வந்தது?'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் தூக்கிக்கொண்டே நடந்தாள்.

அந்த இரண்டு மூன்று நாட்களும், என் மனம் சரியாகவே இல்லை. கோவலனை அநியாயமாகத் தண்டித்த பாண்டியன் உண்மை தெரிந்ததும், 'திருடாதவனைத் திருடன் என்று சொல்லித் தண்டித்த யானே கள்வன்' என்று உயிர் துறந்தான். ஆனால், அலமேலு அப்படி என்றைக்காவது உண்மையை உணருவாளா? 'திருடன், திருடன்' என்று குற்றஞ் சாட்டி அவனை நிஜத் திருடனாக ஆக்கிவிடக் கூடும். என்றைக்கு அவளுக்குப் பெரும் புத்தி வரும்? எப்பொழுது மனித சுபாவத்தில் நம்பிக்கை வரும்? இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

இன்று காலை சாப்பிட்டுவிட்டு, ஆபீஸ் போவதற்கு உடைகளை அணிந்துகொண்டிருந்தேன். வாசற் பக்கம் சைக்கிள் மணிச் சப்தம் கேட்டது. 'தபால் போலிருக்கிறது' என்று பொதுப்படையாகக் குரல் கொடுத்தேன். ''ஏதோ ரிஜிஸ்டர் வந்திருக்கிறது அப்பா'' என்று சொன்னாள் விமலா. கையெழுத்துப் போட்டு வாங்குவதற்குக் கீழே வந்தேன். கையெழுத்துப் போடுவதற்கு அந்தப் பாரத்தை வாங்கி, பேனாவை எடுக்கப் போனேன். பையில்தான் பேனா இல்லையே.

''உன் பேனாவைக் கொண்டு வா, விமலா'' என்றேன். அதற்குள் தபால்காரன், ''இந்தாருங்கள்'' என்று தன் பேனாவைக் கொடுத்தான். கையெழுத்துப் போட்டுவிட்டுப் பேனாவைத் திருப்பிக் கொடுக்கப் போனேன். அகஸ்மாத்தாகப் பேனாவின்மேல் கண் போயிற்று. அது என்னுடைய பேனாவேதான்! ஒரு சமயம் பேனாவை, சுந்தரம் கல்லிலே வைத்துத் தேய்த்துவிட்டான். குல்லாயில் தங்கப்பூணில் உராய்ந்து கோடு விழுந்திருந்தது. அந்தக் கோட்டுடனே அப்படியே இருந்தது பேனா.

''இந்தப் பேனா எங்கே வாங்கினீர்?'' என்று கேட்டேன். தபால்காரன் தயங்கவில்லை.

''பாலுதான் நாலு நாளைக்கு முன்பு எனக்கு விற்றான். நீங்கள் அவனுக்கு இனாமாகக் கொடுத்ததாகவும், அவனுக்கு அவசியமாகப் பணம் தேவைப்படுவதால், மலிவாகக் கொடுப்பதாகவும் சொல்லி என்னிடம் ஏழு ரூபாய்க்கு இதை விற்றான்'' என்றான்.

''அட பாவி!'' என்றேன்.

''அப்பொழுது, நீங்கள் அவனுக்குக் கொடுக்கவில்லையா?'' தபால்காரனுக்குப் பயம் பிடித்துக்கொண்டது.

''இல்லை. இல்லை, அதை எடுத்துக்கொண்டு போ. அவன் சொன்னது வாஸ்தவந்தான். அவனுக்கு இனாமாகத்தான் கொடுத்திருந்தேன். ஆனால் விற்பதற்காகக் கொடுக்கவில்லை'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன். அலமேலு பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். என்னைப் பார்த்துவிட்டு அலட்சியமாகச் சிரித்தாள்.

''புத்தி வந்ததா?'' என்றாள். நான் பதில் சொல்லவில்லை. ''நல்ல பாடந்தான் இது. இனிமேலாவது ஏமாறாமல் இருப்பீர்கள். யார் நல்லவன், யார் கெட்டவன் என்பதைப் புரிந்துகொள்வீர்களா?'' என்றாள். இதில் அவளுக்குப் பெரும் வெற்றி அல்லவா?

பாலு, அப்பொழுதுதான் மாடியிலிருந்து அலமாரிகளையெல்லாம் துடைத்துவிட்டுக் கீழே வந்துகொண்டிருந்தான்.

''இந்தா, இங்கே வாடா. இதை வைத்துக்கொள். இனிமேல் என் முகத்தில் விழிக்காதே'' என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றேன்.

என் நம்பிக்கையை மாத்திரம் அவன் சுக்கு நூறாக உடைத்துவிட்டுச் செல்லவில்லை. என்னை அசடாக்கினான். என் மனத்திலே விஷத்தை ஏற்றினான். இனிமேல் ஒரு மனிதனிடம் முன்போல நம்பிக்கையுடன் நடந்துகொள்ள முடியாது. ஒரு மனிதன் செய்யும் தப்பு அவனோடு மாத்திரம் போவதில்லை. அது மனித சமூகத்தையே பாதிக்கிறது; மனிதத் தன்மையையே பாதிக்கிறது. கள்ளத்தனம் மாத்திரம் செய்யவில்லையே அந்தப் பையன்! என் உள்ளத்திலே கள்ளத்தைப் புகுத்திவிட்டானே!

ஒன்றும் தோன்றவில்லை. நாற்காலியில் உட்கார்ந்தபடி, ஜன்னல் வழியாக ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தேன். மனிதன் தன்மையை இழந்து நிற்கும்பொழுது, அண்ணாந்து ஆகாயத்தைப் பார்ப்பதிலேதான் ஆறுதல் இருக்கிறது. ★


கரகரப்பான ... புதிய... சுவை மிகுந்த...
சிறந்த பிஸ்கோத்துகள்
பிரிட்டானியா
BBX-36TM

அவள்
ரூபவதி
ஆனல்....
கர்ப்பாசய நோயுற்று, ஆரோக்யமிழந்து அவள் வாழ்க்கையில் சுகத்தையோ ஒரு தாயின் இன்பத்தையோ அடையமுடியாது.
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
'பெண்களின் தனிப்பட்ட நோய்களைத்தீர்க்கும் ஆரோக்யமுள்ள தாயாவதற்கு உதவும்.
ஆயுர்வேதாஸ்ரமம் (ப்ரைவேட்) லிமிடெட், மதராஸ்-17.

"விபத்தை வாழ்த்துகிறேன்!"

'மாயாவி'

'டாண்!' என்று ஒரு தடவை அடித்து விட்டு ஓய்ந்தது சுவர்க் கடிகாரம். மணி மூன்றரை!

வெளியே கும்மிருட்டு. மழையோ கொட்டுக் கொட்டென்று கொட்டிக்கொண் டிருந்தது. முன்னாள் காலையில் பிடித்துக்கொண்ட மழை அது; இன்னும் விட்டபாடில்லை. காலை நேரம் ஆகிவிட்டதால் 'சில்'லென்ற காற்றும் கலந்து கொண்டது. ஜன்னல் கதவுகளை இறுக மூடி விட்டு, கம்பளியினால் காலோடு தலை இழுத்து மூடிக்கொண்டுதான் படுத்திருந்தேன். இருந் தாலும் இரவு பதினொரு மணிக்கே படுத்துக் கொண்ட எனக்கு மூன்றரை மணி ஆகியும் இன் னும் துளிக்கூடத் தூக்கம் வரவில்லை!

'மூட்டைப்பூச்சியோ கொசுவோ உடலைக் கடித்துக்கொண்டே இருந்தால் மனிதருக்குத் தூக்கம் லேசில் வராது' என்று சொல்லுவார் கள். அது போலத்தான், மனிதரது உள் ளத்தையும் ஏதாவது கடித்துக்கொண் டிருந் தால் அவர்களால் தூங்க முடியாது என்பதை இன்று நான் கண்டுகொண்டேன்.

ஆம், என் உள்ளத்தை ஒன்று கடித்துக் கொண்டுதான் இருந்தது. கடித்ததா? இல்லை; வண்டுபோல் குடைந்து தள்ளிக்கொண் டிருந் தது. ஒரு கேள்வி; ஒரே ஒரு கேள்விதான் கேட்டான் அவன்: ''மன்னித்துக் கொள்ளுங் கள், ஸாஹப்! உங்கள் மனைவியாக இருந்தால், அவளை இந்நிலையில் நீங்கள் ஏற்றுக் கொள்ளு வீர்களா?'' என்று. ''ஹுஸேன்! அட பாவி! உன் யஜமானரின் ஆறுத உள்ளப் புண்ணில் கூரான வேலைப் பாய்ச்சிவிட்டாயேடா, அந்தக் கேள்வி மூலம்!''

ஹுஸேன் என் பணியாளன். எட்டு மாதங் களுக்கு முன்பு நான் இந்த மஹபூப்நகர் ஆஸ் பத்திரியில் கௌரவ டாக்டராகப் பணி புரிய வந்தது தொட்டு, பெற்ற தாய் குழந்தையைப் பேணுவது போல் என்னைப் பேணி வந்த உண்மையான ஊழியன். பாவம்! அவனுக்கு மாத்திரம் அந்தக் கேள்வி என்னை இத்தனை வேதனைப்படுத்தும் என்பது தெரிந்திருந்தால் அதைக் கேட்டிருப்பானா?

* * * *

அது என்னவோ, நேற்றைச் செப்டம்பர் முதல் தேதி எனக்கு நல்ல பொழுதாக விடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எதை மறைக்க, எதை மறக்கடிக்க, நான் ஊர் விட்டு ஊர் வந்தேனோ, கண்காணா இடத்தில் முகமறியா முஸ்லிம் மக்களிடையே வாழ்வைத் தள்ளி வந்தேனோ, பரோபகாரப் பணியில் ஈடு பட்டு என் பாவத்துக்குப் பரிகாரம் காண முயன்றேனோ, அதை ஓரளவு மறந்திருந்த போது, கிளறிவிடும் நாளாக வந்தது நேற்றைச் செப்டம்பர் முதல் தேதி! ஒன்றல்ல; இரண் டல்ல; மூன்று சம்பவங்கள் மூலமாகவும், கடை சியில் ஹுஸேனின் இந்தச் சவுக்கடி மூலமாக வும், என் நீறு பூத்த நெஞ்சிலே நெய் வார்த்து அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்து விட்டது!

அன்று காலையில் கண் விழித்ததும், கையில் 'சா'வுடன் காத்திருக்கும் ஹுஸேனைக் காண வில்லை. எழுந்திருந்து, பல் விளக்கிவிட்டு, காலைப்பசி வயிற்றைக் கிள்ளச் சிறிது நேரம்

பிறருக்கு உபதேசம் செய்தபோது டாக்டரின் மனச் சாட்சியே அவரைக் கடுமையான கேள்வி கேட்டது. அதற்கு விடை தேடியபோது ஓர் விபத்து அவருக்கு வரமாக அமைந்தது!

காத்திருந்த பின்னரும் அவன் வராததால் நானே அருகிலிருந்த ஹோட்டலுக்குச் சென்று காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்தேன்.

குளித்துவிட்டு, ஆஸ்பத்திரிக்குப் போவதற்காக உடை மாற்றிக்கொண் டிருந்த போது, தபால்காரன் முகத்தில் அடிப்பது போல் ஓர் கடிதத்தை வீசிவிட்டுப் போனான்.

அதைப் பிரித்தேன். ஜானுவின் கடிதம் அது!

ஜானு என் மகள். இந்தப் பாவியின் பந்தய வெறிக்குப் பலியான பாலிகை. குண்டுக்கல்லாக அப்பன் உயிரோடிருந்தும் எங்கோ ஓர் பாலர் விடுதியில் அநாதைக் குழந்தைபோல் வளர்ந்து வந்த அபாக்கியவதி.

அவள் எழுதியிருந்தாள்:

''அன்புள்ள அப்பாவுக்கு,

''குழந்தை ஜானு அநேக நமஸ்காரம். இங்கே நான் சௌக்கியமாக இருக்கிறேன். 'மேட்ரன்' அம்மாள் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்ளுகிறாள். பள்ளிக்கூடப் பகுதியில் எங்களுக்கு இப்பொழுது கடிதம் எழுதும் முறையைக் கற்றுத் தருகிறார்கள். நாங்கள் எழுதும் கடிதங்களைத் திருத்திச் சரியானபடி எழுதச் சொல்லித் தருகிறார்கள். அப்படித் திருத்திய கடிதந்தான் இது.

''அப்பா! நான் எப்பொழுதும் உங்கள் நினைவாகவே இருக்கிறேன். உங்களைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாக இருக்கிறது.

''தீபாவளியை ஒட்டி எங்கள் பள்ளிக்கூடப் பகுதி ஒரு மாசம் மூடப்படுமாம். வேண்டுமானால் குழந்தைகளின் சொந்தக்காரர்கள் அந்த லீவில் அவர்களை ஊருக்குக் கூட்டிப் போகலாமாம். நீங்களும் அப்பொழுது என்னை உங்கள் புது ஊருக்குக் கூட்டிப் போகிறீர்களா? ஒரு மாசம் உங்களோடு இருப்பதும், தீபாவளியை உங்களுடன் கொண்டாடுவதும் எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்! அவசியம் பதில் போடுங்கள்.

இப்படிக்கு,
உங்கள் பிரியமுள்ள
கே. ஜானகி.''

கடிதமா அது? இல்லை; அந்தப் பச்சை மண்ணின் கண்ணீர். அவள் ஏக்கத்தின் எதிரொலி!

கடிதத்தை மடித்து நிஜார்ப் பையில் திணித்தவாறு, சுய நினைவை இழந்த குடிகாரனைப் போல் வீட்டைப் பூட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினேன்.

வெளியே வானம் மூடிக் கிடந்தது. மணி எட்டுக்கு மேலாகியும் வெயில் முகம் காட்டவில்லை. என் ஜாகையிலிருந்து ஆஸ்பத்திரிக்கு அரைமைல் தூரம் இருக்கும். நடந்து போய், நடந்து வருவதுதான் என் வழக்கம். நேற்றும் நடந்துதான் சென்றேன். ஜும்மா மசூதியை நெருங்கிக்கொண் டிருந்தபோது மழை சடசட வென்று பொழிய ஆரம்பித்துவிட்டது. கையில் குடை இல்லாததால், சட்டென்று மசூதி வாசலில் ஒதுங்கி நின்றுகொண்டேன்.

மசூதியில் ஆழ்ந்த அமைதி நிலவிற்று. ஜும்மா மசூதியின் இமாம் பக்கிரி ரஹிமுத்துல்லா இஸ்லாமியக் கோட்பாடுகளை எழுத்து விடாமல் பின்பற்றுபவர். ஆகவே, அவரைத் தலைவராகக் கொண்ட அந்த மசூதியில் 'நமாஸ்' நேரந்தவிர மீதிப் பொழுதிலெல்லாம் இத்தகைய தெய்விக அமைதி நிலவியதில் வியப்பில்லை.

இமாம் பக்கிரி எனக்கு மிகவும் தெரிந்தவர் ''டாக்டர் ஸாஹப்! டாக்டர் ஸாஹப்!'' என்று என்னிடம் பெருமதிப்பு வைத்திருப்பவர். மசூதி வாசலில் நான் நிற்பதைக் கண்ட அவர், ''ஸலாம் ஆலே கம் டாக்டர் ஸாஹப்'' என்று கூறிக்கொண்டே உள்ளேயிருந்து ஓடி வந்தார்.

அவருக்குப் பதில் வணக்கம் செலுத்திவிட்டு, ''ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண் டிருந்தேன். திடீரென்று மழை வந்துவிட்டது'' என்றேன்.

''இல்லை; மழை உங்களை இங்கே தங்க வைக்கவில்லை. அல்லாஹுத்தாலா தங்க வைத்தார்'' என்று ரஹிமுத்துல்லா சிரித்துக்கொண்டே தொடர்ந்து சொன்னார்: ''டாக்டர் ஸாஹப்! நான் உங்களைக் காணத்தான் கிளம்பிக்கொண் டிருந்தேன். அதற்குள் ரம்ஜான் பிறை போல் நீங்களே வந்துவிட்டீர்கள்.''

''ஏன் கத்தீப்? உங்களுக்கு ஏதாவது உடம்பா?''

''இல்லை, டாக்டர் ஸாஹப். அல்லாவின் அருளால் நான் நன்றாகவே இருக்கிறேன். உங்களிடம் ஓர் உதவி கோரிக் கிளம்பினேன்.''

''என்ன வேண்டும்? சொல்லுங்கள் இமாம் ஸாஹப்.''

''உங்களுடைய வேலையாள் ஹுஸேன் இருக்கிறானே; அவனுக்கு நீங்கள்தான் சற்று நல்ல புத்தி சொல்ல வேண்டும்.''

''ஏன்? அவன் ஏதாவது தவறு செய்துவிட்டானா?''

''ஆமாம்; மகத்தான 'ஹராம்' ஒன்றைச் செய்துவிட்டான். இன்று நேற்றல்ல, டாக்டர் ஸாஹப்; இரண்டு வருஷங்களுக்கு முன்பே. இன்று அல்லாவின் அருளால் அதைத் திருத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. ஆனால் அவன் மறுக்கிறான்.''

''கத்தீப், ஹுஸேனா அப்படியெல்லாம் நடந்துகொண்டான்? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்றேன் வியப்புடன்.

''உங்களுக்கு அவனுடைய பழைய கதை ஒன்றும் தெரியாது. அவனை நீங்கள் கடந்த ஏழெட்டு மாதங்களாகத்தானே அறிவீர்கள்? இப்பொழுது அவன் மிகவும் திருந்திவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் முன்பெல்லாம் அவன் பெரிய போக்கிரி!''

''விஷயத்தைச் சொல்லுங்கள், கத்தீப்'' என்று நான் கேட்டுக்கொண்டதும், இமாம் பக்கிரி சொல்ல ஆரம்பித்தார்.

2

''மஹமது ஹுஸேன் இதே மஹபூப்நகர் வாசிதான், டாக்டர் ஸாஹப். சிறு வயசிலேயே பெற்றோரை இழந்துவிட்ட அவனை, அவனுடைய தாய்மாமன் அப்துல்லா என்பவர் எடுத்து வளர்த்தார். அப்துல்லா ஒரு ஹக்கீம்; யூனானி வைத்தியத்தில் கரை கண்டவர். அவருக்கு ஆண் சந்ததி இல்லை. ஸலீமா என்று ஒரே மகள்தான்.

''ஸலீமாவை ஹுஸேனுக்கு 'நிக்காஹ்' செய்துகொடுத்து அவனைத் தமது வைத்தியத் தொழிலிலேயே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பது அப்துல்லாவின் ஆசை. ஆனால் ஹுஸேன் வைத்தியத் தொழிலில் நாட்டம் கொள்ளவில்லை. அவனுக்கு அதிகமான கல்வியறிவும் இல்லை. இருந்தாலும் பிழைப்புக்கு ஏதாவது ஒரு வழி வகுத்துக் கொடுக்க வேண்டாமா? அதற்காக அப்துல்லா உள்ளூரில் ஒரு 'சாயாக் கடை'யை ஆரம்பித்து, அதை அவன் நிர்வாகத்தில் விட்டிருந்தார்.

''ஹுஸேன் கடையைத் திறமையுடன் நடத்தி, நல்ல லாபம் காட்டினான். இனிமேல் பையன் பிழைத்துக்கொள்ளுவான் என்ற நம்பிக்கையில் அப்துல்லா, ஸலீமாவை அவனுக்குக் கட்டிக் கொடுத்தார். அவர்கள் 'நிக்காஹ்' நடந்த சில நாட்களுக்கெல்லாம் அவர் 'மவுத்' ஆகிவிட்டார்.

''மாமன் இறந்து, தன்னை அடக்கி ஆளுவார் இல்லை என்றானதும், அந்த 'மர்ஹூம்' ஹுஸேன் கெட்டலையத் தொடங்கிவிட்டான். குடி, சூதாட்டம் போன்ற 'ஹராம்'களில் ஈடுபட்டு, சாயாக்கடை வரும்படி முழுவதையும் அவற்றுக்கே அர்ப்பணித்து வந்ததோடல்லாமல், மாமன் வைத்துப் போன கொஞ்சநஞ்சம் சொத்துக்களையும் கரைக்க ஆரம்பித்தான். அந்தப் பெண் ஸலீமா, பாவம்! எவ்வளவோ சொல்லிப் பார்த்தது, கெஞ்சிப் பார்த்தது. ஒன்றும் பலிக்கவில்லை.

''கொஞ்சம் கொஞ்சமாக ஹக்கீம் பாவா வைத்துவிட்டுப் போன சொத்து முழுவதும் கரைந்துவிட்டது. நன்றாக நடந்துகொண்டிருந்த சாயாக் கடை வியாபாரத்தைச் சரியாகக் கவனியாததால், அதுவும் படுத்துவிட்டது. இப்பொழுது தனது குடிக்கும் சூதாட்டங்களுக்கும் போதிய பணமில்லாமல் திணறிக்கொண்டிருந்தான் ஹுஸேன். அப்படியே மேலும் சில காலம் இருந்திருந்தால் அவன் திருந்தியிருக்கக்கூடும்; ஆனால், எதிர்பாராதபடி செல்வச் செழிப்புடைய 'தோஸ்த்' ஒருவன் ஹுஸேனுக்குக் கிடைத்துவிட்டான்.

''ஹுஸேனின் 'வாப்பா'வுக்கு ஒரு சகோதரி உண்டு. அவள் வாரங்கல்லில் இமாம் பாஷா என்பவருக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். இமாம் பாஷா ரங்கூனில் ஓர் வட்டிக் கடை நடத்திக்கொண்டு, அந்நாட்டையே தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். யுத்த காலத்திலெல்லாம் தாக்குப் பிடித்து, தமது சொத்துக்களுக்குப் பழுது வராமல் மீண்டுவிட்ட அவர் நான்கு வருஷங்களுக்கு முன்பு அநாயாசமாக 'மவுத்' ஆகிவிட்டார். அவருடைய பீவி பல ஆண்டுகளுக்கு முன்பே, ஓர் ஆண் குழந்தையை விட்டுவிட்டு அல்லாவை அடைந்துவிட்டாள். தாயும் தந்தையும் அற்ற அந்தக் காதர் மீரான், தந்தை இறந்ததும், அவர் சொத்துக்களைக் காசாக்கிக் கொண்டு வாரங்கல்லுக்குத் திரும்பி வந்தான்.

''காதர் மீரான் நிறையப் பணத்துடன் திரும்பியிருக்கிறான் என்பதை அறிந்ததும், இந்தச் 'சைத்தான்' ஹுஸேன் வாரங்கல்லுக்குப் புறப்பட்டுச் சென்று, அவனை எப்படியோ வளைத்து இங்கே கூட்டி வந்துவிட்டான். அவனுக்குத் தன் வீட்டிலேயே ஜாகை போட்டுக் கொடுத்துத் தனது 'ஹராம்' பாதையில் திருப்பி விட்டுக்கொண்டான்.

''ஹுஸேனுக்கு மேற்போன 'ஹராமி', மீரான். அவன் சீக்கிரமே கெட்ட நடவடிக்கைகளில் தன் 'உஸ்தாத்' ஹுஸேனை மிஞ்சிவிட்டான். ஹுஸேனிடமாவது சூதாட்டமும் குடியும் மாத்திரமே இருந்தன. ஆனால் இவனிடம் அந்த இரண்டோடு வேறொரு கெட்ட பழக்கமும் சேர்ந்து கொண்டது. அதுதான் பெண் கிறுக்கு!

''அம்மாதிரியான காமுகர்களின் கழுகுக்கண்கள் எங்கே அழகு தென்பட்டாலும், இடம் பொருள் ஏவல்களைக் கவனியாது, அங்கே கவிந்துவிடும் அல்லவா? மீரானின் பார்வை அண்டையிலிருந்த ஸலீமாவின்மீது விழ அதிக நாட்கள் ஆகவில்லை.

''பார்த்தீர்களா? சொல்ல மறந்துவிட்டேனே! ஸலீமா அபூர்வ அழகி. பாரசீகத்துக் கம்பளத்தைப் போன்ற மிருதுவான மேனி. சந்தனக் கட்டையைப் போன்ற பொன்னிறம். கெண்டை மீனை ஒத்த கண்கள். மயில்தூலிகை போன்ற வனப்பு மிகுந்த இதழ்கள். அதிகம் சொல்வானேன்? அராபிக் கதைகளில் வர்ணிக்கப்படும் பெண்கள் அனைவரும் அவளிடம் பிச்சை வாங்க வேண்டும்!

''இப்படிப்பட்ட வண்ணக்கிளி கைக்கு எட்டும்படியாக இருந்தால், காமப்பசி கொண்ட கழுகு அதைக் கவ்விக் கொள்ளத்தானே முயலும்? ஹுஸேன் வீட்டில் இல்லாத சமயங்களில் ஸலீமாவிடம் அத்துமீறிப் பழகத் தலைப்பட்டான் மீரான். அவனுடைய நடவடிக்கைகளில் சந்தேகம் தட்டிய ஸலீமா தன் கணவனிடம் இதுபற்றிக் கூறினாள். ஆனால் அந்த மடையன், அவளுடைய குற்றச் சாட்டைத் தவறாக எடுத்துக்கொண்டான். மீரான் பண உதவி செய்வதாலேயே தான் கெட்டலைவதால் அவனை ஒழித்துக் கட்டிவிட இப்படி வீண்பழி சுமத்துகிறாள் என எண்ணிய அவன், அவள் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளவில்லை. இடையே மீரானும், இந்த நிலையில் ஸலீமா தன் கைக்கு அகப்பட முடியாது என்பதை உணர்ந்துகொண்டான். அவன் மகா தந்திரசாலி. அவளை ஒரேயடியாகத் தட்டிக் கொண்டு போய்விட ஓர் திட்டம் வகுத்தான்.

''இரண்டு வருஷங்களுக்கு முன்பு 'சபர்' மாதத்தில் ஒரு நாள் அவன் ஹுஸேனிடம் வந்தான். தன் சொந்த ஊரான வாரங்கல்லில் ஒருவர், தனக்குப் பெண் தர முன் வந்திருப்பதாக அறிவித்தான். பெண்ணைப் பார்த்து அபிப்பிராயம் தெரிவிக்க, ஸலீமாவை அழைத்துக்கொண்டு ஹுஸேனும் தன்னோடு அங்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஹுஸேன் கடையை விட்டு வர முடியாது என்பது அவனுக்குத் தெரியும். அவ்வாறே அவனும் கூறினான். ஸலீமாவை மாத்திரம் மீரானுடன் போய் வரச் சொன்னான்.

''ஸலீமாவுக்கு இதில் ஏதோ சூது இருப்பதாகப் பட்டுவிட்டது. ஆகையால், அவள் போக மறுத்தாள். ஆனால் இந்தப் போக்கிரி ஹுஸேன், அவளை அடித்து மிதித்து, வலுக்கட்டாயமாக மீரானுடன் அனுப்பிவிட்டான்.

''இரண்டு வருஷங்களுக்கு முன்பு, 'ஜன்கான்' ஸ்டேஷனுக்கு அருகே ஓர் கோர ரெயில் விபத்து ஏற்பட்டதல்லவா? விபத்துக்குள்ளான அதே 'காசிப்பேட் எக்ஸ்பிரஸ்'ஸில்தான் தாங்கள் வாரங்கல்லுக்குப் போகப்

போகிறதாக மீரான் அறிவித்துவிட்டுச் சென்றிருந்தான். ஆகவே, விபத்து விஷயம் தெரிந்ததும் ஹுஸேன் அடித்துப் புடைத்துக்கொண்டு ஸ்தலத்துக்கு ஓடினுன். ஆனல் விபத்தில் உயிர் தப்பியவர்களிடையே அவர்கள் இல்லை. உயிரிழந்து, உருச் சிதைந்து கிடந்தவர்களிடையிலும் அவர்கள் உடல்களைக் காண முடியவில்லை. நெடுநாட்கள் அவர்களைப்பற்றி வேறு எவ்விதத் தகவலும் கிடைக்காததால், விபத்தில் ஆற்றோடு அடித்துக்கொண்டு போகப்பட்ட, கணக்குக் கிடைக்காத பிரயாணிகளில் இவர்களும் இருவராக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கே ஹுஸேனும் நாங்களும் வர வேண்டியதாயிற்று.

''மனைவியையும் 'தோஸ்த்'தையும் இழந்ததற்காக ஹுஸேன் அப்படி ஒன்றும் வருத்தம் அடைந்துவிடவில்லை. மீரானின் பெட்டியைப் பரிசோதனை செய்தபோது அதில் ஏராளமான பணம் இருந்தது. 'அவன் உயிரோடு திரும்பியிருந்தால் இந்தப் பணம் நமக்குக் கிடைத்திருக்குமா?' என்று எண்ணி உள்ளூறக் களிப்படைந்து, அதைக் கொண்டு தன் திருவிளையாடல்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தான்.



ஒருக்களித்துக் கிடந்த அவளுடைய உடலைப் புரட்டியதும்....

''மீரான் விட்டுப் போன பணமும் விரைவில் காலியாகிவிட்டது. பிறகு கடன் வாங்க ஆரம்பித்தான் ஹுஸேன். வாங்கின கடனைக் கொடுக்க வழியின்றி 'ஸிவில்' ஜெயிலுக்குப் போய்ச் சில மாதங்கள் இருந்துவிட்டுத் திரும்பினுன். இனி ஆடி ஓட வழியில்லை என்று ஆன பிறகு, தானுகவே திருந்தி, ஓர் ஹோட்டலில் வேலைக்கு அமர்ந்து காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில்தான், நீங்கள் இவ்வூருக்கு வந்து, அவனை உங்கள் பணியாளாக ஆக்கிக்கொண்டீர்கள்'' என்று கூறி நிறுத்தினுர் இமாம் பக்கிரி.

''அது சரி, இமாம் ஸாஹப்; இதற்கும் இப்பொழுது நீங்கள் சொல்ல வந்த விஷயத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'' என்று நான் கேட்டேன்.

''இருக்கிறது, டாக்டர் ஸாஹப்; இறந்து போனதாகக் கருதியிருந்த ஹுஸேனின் மனைவி, நேற்று உயிரோடு இவ்வூருக்குத் திரும்பி வந்திருக்கிறுள்!''

''என்ன?''

''ஆமாம், டாக்டர் ஸாஹப்; அவர்கள் விபத்துக்குள்ளான 'காசிப்பேட் எக்ஸ்பிரஸ்'ஸில் பிரயாணம் செய்யவே இல்லை. மீரான், ஸலீமாவை ரங்கூனுக்குக் கடத்திப் போகத் திட்டமிட்டிருந்ததால், அவளுக்கு மயக்க மருந்து கொடுத்து, நோயாளியைப் போல் சென்னைக்கு எடுத்துச் சென்று, அப்படியே ரங்கூனுக்குக் கப்பலேறிவிட்டான்!''

''அப்புறம்?''

''கப்பல் ரங்கூனை அடையும் வரையில் மயக்க நிலையிலேயே வைத்திருந்தான். ஆகவே பிறகுதான் ஸலீமாவுக்குத் தான் கடத்தப்

பட்ட விவரம் தெரிந்தது. ஹுஸேன் அவளைத் தனக்கு விற்றுவிட்டதாகக் கூறியிருக்கிறான், மீரான். அவளும், நிலைமையைச் சமாளிக்க அவனை 'நிக்காஹ்' செய்துகொள்ள இணங்கி விட்டதுபோல் நடித்திருக்கிறாள். ரங்கூனை அடைந்ததும், அவனிடமிருந்து தப்பி ஓடி விட்டாள். யாரோ ஒரு ஹிந்துப் பெண் அவளுடைய அவலக் கதையைக் கேட்டு இரக்க முற்றுப் புகலளித்தாளாம். 'அந்த அம்மாளோடு இரண்டு வருஷங்களாக ரங்கூனில்தான் இருந்தேன். சமீபமாக அவள் தாய் நாடு திரும்பினாள். என்னையும் உடன் அழைத்து வந்து, நேற்று இங்கே கொண்டுவிட்டுப் போனாள். நான் என் கணவரிடம் சென்று நடந்ததை யெல்லாம் கூறினேன். அவர் என் பேச்சை நம்பவில்லை. மீரானோடு இரண்டு வருஷ காலம் வாழ்ந்துவிட்டு, இப்பொழுது ஏதோ லடாய் போட்டுக் கொண்டு இங்கே திரும்பிவந்திருப்பதாகப் பழி சாற்றி என்னை விரட்டியடித்துவிட்டார். அல்லாஹுத்தாலாவின்மீது ஆணையாக நான் கூறுவதெல்லாம் மெய். அவரை என்னை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்' என்று நேற்று இரவு என்னிடம் வந்து முறையிட்டாள்.

''இன்று காலையில் நான் ஹுஸேனுக்குச் சொல்லி யனுப்பினேன். அவன் வந்ததும், எவ்வளவோ நல்லதனமாக எடுத்துச் சொன்னேன்: 'ஸலீமா மீரானோடு வாழ்க்கை நடத்த நேரிட்டிருந்தாலும், அதற்கு நீதான் பொறுப்பாளி ஆகிறாய், ஹுஸேன், அவன் கெட்ட நோக்கத்தோடு வலைய வருகிறான் என்று அவள் முன்னெச்சரிக்கை செய்தபோது, நீ அதைச் சட்டை செய்யவில்லை. பின்னர், அவளுடைய

விருப்பத்துக்கு மாருக அந்தச் 'சைத்தா'னேடு அனுப்பினுய். ஆகவே தவறு முழுவதும் உன்னுடையதுதான். அதைத் திருத்திக்கொள்ள இப்பொழுது வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நீ ஸலீமாவை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று எவ்வளவோ கெஞ்சினேன். ஆனல், அந்த 'மர்ஹூம்' மறுத்துவிட்டுப் போய்விட்டான்.

''டாக்டர் ஸாஹப், ஸலீமாவைச் சின்னஞ்சிறு வயசிலிருந்தே எனக்குத் தெரியும். அவள் ஒருபோதும் நெறிகெட்டுப் போயிருக்க மாட்டாள். அவள் கூறுவதை நான் பூர்ணமாக நம்புகிறேன். அந்த அபலைப் பெண்ணிடம் நீங்கள் இரக்கம் காட்ட வேண்டும். நீங்கள் வற்புறுத்திச் சொன்னல், ஹுஸேன் அவளை ஏற்றுக்கொள்ளுவான். என் வேண்டுகோளுக்காகவாவது அவனைச் சமாதானப்படுத்தி அந்தப் பெண்ணின் நல்வாழ்வுக்கு வகை செய்ய வேண்டும்'' என்று கூறி முடித்தார் ரஹிமுத்துல்லா.

3

இமாம் பக்கிரி கூறிய இந்தச் செய்தி அன்று மற்றெரு சவுக்கடியாக என் உள்ளத்தை விளாசிற்று. ஆம், பரோபகாரியாகப் பகல் வேஷம் போட்டுத் திரியும் இந்தப் பாவியும் ஹுஸேனைப் போன்ற போக்கிரிதான் என்பதை அந்தப் பக்கிரி எங்ஙனம் அறிவார்? இருந்தாலும், என் அதிர்ச்சியை வெளியே காட்டிக்கொள்ளாமல்,''ஆகட்டும், பக்கிரி பாவா; ஹுஸேனிடம் சொல்லிப் பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு, மழை சற்று ஓய்ந்திருந்ததால், அங்கிருந்து நழுவிவிட்டேன்.

பகலில் வீடு சென்றபோது ஹுஸேன் அங்கேதான் இருந்தான். ஆனல் அவனிடம் பேச அப்பொழுது எனக்குத் துணிவு வரவில்லை.

மாலையில், மீண்டும் ஆஸ்பத்திரிக்குப் போய் வேலையில் ஈடுபட்டிருந்தபோது, இமாம் பக்கிரி தூண்டிவிட்டோ, என்னவோ, ஸலீமாவே என்னைத் தேடி வந்துவிட்டாள்! தன் கணவன் என்னிடந்தான் வேலை செய்து வருவதாகக் கேள்விப்பட்டதாகவும், என் வார்த்தைகளுக்கு அவன் கட்டுப்பட்டு நடப்பான் என்று எல்லாரும் கூறுவதாகவும் அறிவித்து, தன்னை அவனேடு இணைத்து வைப்பது இனி என் பொறுப்பு என்று பாரத்தையெல்லாம் என் தலைமீது போட்டுவிட்டாள்.

அதன் பிறகுதான் என் கொடிய மனச்சாட்சியை எதிர்க்கும் துணிவு எனக்கு ஏற்பட்டது. நான்தான் பிழையை உணர்ந்தபிறகு, அதைத் திருத்திக்கொள்ள வழியில்லாது போனேன். ஹுஸேனையாவது அதைத் திருத்திக்கொள்ளச் செய்துவிட வேண்டும் என்று துணிந்தேன். இரவு எனக்கு உணவிட்ட பிறகு, இதர வேலைகளை முடித்துக்கொண்டு, ஹுஸேன் வீட்டுக்குப் போக என் அநுமதி கோரி வந்தபோது நான் இந்தப் பேச்சைத் தொடங்கினேன். இமாம் பக்கிரி கூறியவை அனைத்தையும் அவனுக்கு அறிவித்து, அவை உண்மையா என்று கேட்டேன்.

''ஆமாம், ஸாஹப்'' என்றுன் ஹுஸேன்.

''பெண்களின் மென்மை கெடுவதற்கும், கெடாது இருப்பதற்கும் நாம்தாம் ஜவாப்தாரி ஆகிறேம், ஹுஸேன். உன் மனைவி மீராவேடு வாழ்ந்துவிட்டுத் திரும்பியிருக்கிறுள் என்றே வைத்துக் கொள்ளுவோம். இருந்தாலும் எப்பொழுது அவனை விட்டு உன்னை நாடி வந்துவிட்டாளோ, அவளுக்கு நீ ஆதரவு காட்டத்தான் வேண்டும். மனைவி என்ற முறையில் இல்லாவிட்டாலும் உன்னை வளர்த்து ஆளாக்கிவிட்ட மாமனின் மகள் என்ற முறையிலாவது அவளுக்கு நீ புகல் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறுய்'' என்று எடுத்துரைத்தேன்.

ஹுஸேன் என் புத்திமதிகளைச் செவி மடுக்கவே இல்லை. ''இது என் குடும்ப விஷயம், ஸாஹப்ஜி; இதில் நீங்கள் தலையிட்டுக்கொள்ள வேண்டாம்'' என்று தூக்கி எறிந்து பேசிவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

''ஒரு நிமிஷம் நில், ஹுஸேன்'' என்று நான் வருத்தத்துடன் கூவினேன். அவன் நின்றதும், ''தவறு உன் மீதுதான் என்று ஊர் அடங்கக் கூறும்போது நீ ஸலீமாவை ஏற்றுக்கொள்ள மறுப்பது நியாயமல்ல. நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்: அன்று நீ ஸலீமாவைக் கட்டாயப்படுத்தி மீரானுடன் அனுப்பியிராவிட்டால், அவள் கெட்டுப் போக வழி ஏற்பட்டிருக்குமா?'' என்றேன்.

''இராதுதான்; அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?''

''தாராளமாகக் கேள், ஹுஸேன்'' என்று மிதப்புடன் பதிலளித்தேன், அவன் உள்ளத்தைக் கிழிக்கும் அந்தக் கேள்வியைக் கேட்கக்கூடும் என்ற நினைப்பேயின்றி.

''மன்னித்துக் கொள்ளுங்கள், ஸாஹப்ஜி; ஸலீமா உங்கள் மனைவியாக இருந்தால், அவளை இந்நிலையில் நீங்கள் ஏற்றுக்கொள்ளுவீர்களா?''

'சுரீர்' என்று என் நெஞ்சைச் சுட்டது அந்தக் கேள்வி. வெற்றி கொண்டுவிட்டதாகக் கருதியிருந்த மனச்சாட்சியை விலாவில் குத்தி எழுப்பி நிறுத்திற்று அந்தக் கேள்வி.

'நீயாக இருந்தால் ஏற்றுக்கொள்வாயா? பிறருக்குப் புத்தி சொல்லப் புறப்பட்டுவிட்டாயே!' என்று கொதித்துக்கொண்டு எழுந்தது மனச்சாட்சி.

ஹுஸேன் என்ன செய்தானே, எப்பொழுது வீட்டுக்குச் சென்றுனே, எனக்குத் தெரியாது; பதினெரு மணி சுமாருக்கு, அவன் அடியின் அதிர்ச்சி மயக்கம் தெளிந்து நான் சுய நினைவு பெற்றபோது ஹுஸேன் அங்கில்லை.

படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டேன். மனச்சாட்சி திரும்பித் திரும்பி ஹுஸேனின் கேள்வியையே ஜபித்துக்கொண்டிருந்தது – 'நீயானல் ஏற்றுக்கொள்வாயா? நீயானல் ஏற்றுக்கொள்வாயா?'

ஆம்; ஏற்றுக்கொண்டேனு நான்?

4

அந்த அவலக் கதையை அக்கு வேறு ஆணி வேருக அலச வேண்டிய அவசியமே இல்லை; ஏனென்றுல், அதுவும் மற்றெரு ஹுஸேன் ஸலீமா கதையேதான்.

கலை ஆர்வம் கொண்ட நான் என்னைப் போலவே கலை ஆர்வம் மிகுந்த கமலாவைக் காதலித்தேன். அவள் சினிமா வானில் ஒளி வீசும் நட்சத்திரமாக விளங்க ஆசை கொண்டிருந்தாள். மணவாழ்வின் மூலம் அவள் ஆவ

லுக்குத் தடை விதிப்பதில்லை என்று வாக்களித்து அவளை மனைவியாக்கிக் கொண்டேன். டாக்டருக்குப் படிக்கும் தன் ஒரே மகனுக்குக் கல்யாணம் செய்துவைத்துக் கொள்ளை கொள்ளையாக வரதட்சிணையும் சீர் செனத்திகளும் பெற வேண்டும் என்ற அம்மாவின் ஆவலில் மண்ணடித்துவிட்டது எங்கள் காதல் திருமணம். ஆகவே அம்மாவுக்கு ஆரம்பத்திலிருந்தே கமலாவிடம் அடங்காத வெறுப்பு.

நாங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. கமலா தொடர்ந்து நடித்து வந்தாள்; நானும் படித்துவந்தேன். இரண்டு வருஷ இன்பமான இல்லற வாழ்வுக்குப் பிறகு ஜானு பிறந்தாள். இனித் தன் நடிப்பு எடுபடாது என்று சினிமா உலகிலிருந்து விலகிக்கொள்ள விரும்பினாள் கமலா. ஆனால் எனக்கு அவளைத் தொடர்ந்து நடிக்கச் செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. நான் மேல்நாடு சென்று வைத்தியத்தில் விசேஷத் தேர்ச்சி பெற ஆவல் கொண்டிருந்தேன். ஆனால் பொருளாதார நிலை என் மேல்நாட்டுப் படிப்புக்கும், குடும்பச் செலவுகளுக்கும் ஈடு கொடுக்கும் விதம் இருக்கவில்லை. கமலா இன்னும் மூன்று வருஷங்கள் கிடைக்கும் 'சான்ஸ்'களை விடாமல் நடித்து வந்தால், வீட்டுச் செலவை அவள் வரும்படி ஈடுகட்டிவிடும்; நான் கையிருப்புப் பணத்தைக் கொண்டு படிப்பைத் தொடரலாம் என்று கருதியதால், அவளை மீண்டும் நடிக்கும்படி கட்டாயப்படுத்திக் குழந்தை ஜானுவை அம்மாவிடம் வளர விட்டு, மேல்நாடு சென்றேன்.

மூன்று வருஷப் பயிற்சியை முடித்துக்கொண்டு நாடு திரும்பு முன்பே, அம்மா தன் கடிதங்கள் மூலம் என் உள்ளத்தில் ஒரு விபரீதச் சந்தேக விதையை ஊன்றிவிட்டாள். கமலாவும், அவளோடு கதாநாயகனாக நடித்துவரும் மனோஹர் என்ற இளைஞனும் விகற்பமாகப் பழகுவதாகவும், ஊரெல்லாம் அவர்களை இணைத்துப் பேசும் இழிவான வதந்திகளால் தன் செவிகள் புண்ணாகிவிட்டன என்றும் அவள் கடிதந்தோறும் எழுதிக் கொண்டிருந்தாள்.

அம்மாவுக்குக் கமலாவைக் கண்டால் ஆகாது என்பதை நான் அறிந்திருந்ததால், அவள் கடிதங்களை நான் அசட்டை செய்துவிட்டேன். ஆனால் என் வீட்டுக் காரியங்களைப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் போயிருந்த நண்பன் எழுதியிருந்த கடிதம் ஒன்றும் அம்மாவின் கூற்றை உறுதி செய்ததும் என் மனம் விண்டு போயிற்று. அவன் எழுதியிருந்தான்: ''உன் மனைவி இப்படிச் செய்வாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, குமார். அவள் மிகவும் துணிந்துவிட்டாள். உன் வீட்டிலேயே நேற்று அவளும் அந்த மனோஹரும் ஒரே அறைக்குள் சென்று அணைத்துக்கொண்டதை இந்தப் பாழும் கண்கள் கண்டுவிட்டன, நண்பா!''

கமலா இப்படித் துரோகம் செய்வாளா என்ற சந்தேகந்தான் எனக்கு. இருந்தாலும், அப்படிச் செய்திருந்தால் அது என் பிழையின் விளைவுதானே? ஆகவே ஊர் திரும்பியதும் முதற்காரியமாக அவளுடைய சினிமா வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் திரும்பினேன்.

ஆனால் கமலா, தற்சமயம் நடிக்கும் படத்தை முடித்ததும் சினிமா வாழ்வைத் துறந்துவிடுவதாகக் கூறினாள். ''இல்லை, நீ உடனே அதைத் துறந்துதான் ஆகவேண்டும்; ஊரில் உன்னைப் பற்றிப் பரவியுள்ள வதந்தி உனக்கு உறைக்கவில்லையா?'' என்று கோபத்தோடு கேட்டேன்.

''ஆம்; அதை உங்களுக்காகத்தான் நான் சகித்துக்கொண்டிருக்கிறேன். எதுவானாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு நடிக்கவும் தொடங்கிவிட்ட பிறகு இந்தப் படத்தைப் பாதியில் விட்டு வந்தால் அந்த முதலாளி நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடுக்க மாட்டாரா?'' என்று அவள் என்னிடம் எதிர்க் கேள்வி கேட்டாள்.

நான், 'அதெல்லாம் வெறும் பசப்பல்; கிடைக்கிற மட்டும் தன் ஆசை நாயகனோடு பழக ஏற்படுத்திக்கொள்ள முயலும் வாய்ப்பு' என்று கருதி, ''வழக்குத் தொடர்ந்தால் தொடரட்டும். நீ அது காரணமாக ஜெயிலுக்குப் போக நேர்ந்தாலும் பாதகமில்லை. இன்று முதல் சினிமா நடிப்புக்குத் தலை முழுகிவிடத்தான் வேண்டும்'' என்று கண்டிப்புடன் கூறினேன்.

ஆனால் அவள் மீண்டும் ஏதேதோ பசப்பு வார்த்தைகளால் என்னைச் சமாதானப்படுத்தி விடப் பார்த்தாள். நான் கடுங்கோபம் கொண்டு, ''என் சொற்படி நீ நடக்கவில்லையானால், நாம் பிரிய வேண்டியிருக்கும்'' என்று இறுதி எச்சரிக்கை விடுத்தேன்.

''அதுதான் உங்கள் இச்சையென்றால் அப்படியே செய்யுங்கள். அதற்காக இத்தனை வருஷங்களாகத் தம் சொந்த மகள் மாதிரி என்னை முன்னுக்குக் கொண்டுவந்த பட முதலாளிக்குத் துரோகம் செய்ய மாட்டேன்'' என்று அவளும் கூறிவிட்டாள்.

அவ்வளவுதான்; நாங்கள் பிரிந்தோம்.

படம் முடிந்தபிறகு கமலா என்னை நாடி வந்தாள். ஹுஸேனைப் போலவே நானும் அவளை விரட்டிவிட்டேன். குழந்தையையாவது தன்னிடம் தந்துவிடும்படி மன்றாடினாள். இதற்கிடையில் அம்மா இறந்துவிட்டதால், ஜானுவைப் பங்களூரிலுள்ள ஓர் போர்டிங் பள்ளியில் படிக்க விட்டிருந்தேன். ஜானு இருக்கும் இடத்தைக்கூட நான் அவளுக்குக் கூற மறுத்துவிட்டேன். ''குழந்தையும் உன்னைப்போல் பதிதையாக விடமாட்டேன்'' என்று என் ஆத்திரத்தையெல்லாம் காட்டிக் கத்தினேன். ''கோர்ட்டுக்குப் போய்க் குழந்தையிடம் எனக்குள்ள உரிமையை நிலைநாட்டுவேன்!'' என்று அவள் பயமுறுத்திப் பார்த்தாள். ''செய்துகொள்'' என்று விரட்டிவிட்டேன்.

ஆனால் அவள் கோர்ட்டுக்கும் போகவில்லை; ஒன்றும் செய்யவும் இல்லை. இரண்டு நாட்களுக்குப் பிறகு எனக்கு அவளுடைய கடிதம் ஒன்றும், சுமார் பத்தாயிரம் ரூபாய்க்கு ஓர் செக்கும் வந்தன.

''நமஸ்காரம்.

''நான் உங்களுக்காகவே வாழ்ந்தேன். உங்களுக்காகவே சினிமாவில் சேர்ந்து அவப்பெயரையும் சூட்டிக்கொண்டேன். கடைசியில் என் குழந்தையை ஒரு முறை பார்க்கக்கூட முடியாத பாவியாகிவிட்டேன். இனிமேல் நான் யாருக்காக, எதற்காக வாழவேண்டும்? இதோ, நீங்கள் என்னை வற்புறுத்திப் புகுத்திய சினிமா வாழ்வில் கிட்டிய வரும்படியில் மீந்துள்ள

பணம். உங்களுக்காகவே சம்பாதித்த தொகை யாதலால், அதை உங்களுக்கே அனுப்பியிருக்கிறேன்.

''நான் போய் வருகிறேன்; நமஸ்காரம்.
அபலை கமலா.''

இதுதான் அவள் கடிதத்தின் சாரம். இக் கடிதம் வந்த அன்றே ஸாந்தோம் கடற்கரையில் அவளுடைய ஆடைகள், கைப்பை முதலியன அகப்பட்டதாகப் போலீஸிலிருந்து தகவல் வந்தது. திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை செய்யாதபோது, கடலோ, கயிறோ தானே அவர்களுக்குத் துணை செய்கிறது?

கமலாவின் சாவுச் செய்தி காட்டுத் தீயைப் போல் நகரம் எங்கும் பரவிற்று. சினிமா உலகம் முழுவதும் அவளுடைய மரணத்தைக் கேட்டுக் கண்ணீர் விட்டுக் கதறிற்று. ஆனால் நான் துளிக்கூட விசனிக்கவில்லை. 'களங்கப் பட்டவர்களுக்கு முடிவுகூடக் களங்கமாகவே ஆகிவிடும் போலிருக்கிறது' என்று வர்மம் தீரக் கூறிக்கொண்டேன். ஆனால்—

அன்றிரவு சிவராமன் என்னை அவசரமாகத் தேடி வந்தான். அவன்தான் நான் மேல்நாடு சென்றிருந்தபோது என் வீட்டு நிர்வாகத்தை மேற்பார்வை பார்த்து வந்தவன். கமலாவின் களங்கத்தன்மைக்குச் சான்று தந்தவன்.

''நான் கேள்விப்பட்டது நிஜமா? கமலா தற்கொலை செய்துகொண்டுவிட்டாளா?'' என்று அவன் பதற்றத்துடன் கேட்டான்.

''ஆமாம்; மனச்சாட்சி வதைக்கும்போது, தற்கொலைதானே அதற்கு முடிவு கட்ட முடியும்?'' என்றேன் நான்.

''நான் பாவி, குமார்; மகாபாவி!'' என்று அவன் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு கதறி அழுதான்.

''என்ன சிவராம்?''

சிவராமன் சொன்ன செய்தி என்னை உயிரோடு கொன்றுவிட்டது. கமலா களங்கமற்றவளாம். சாதாரண நிலையில் எங்கள் வீட்டில் திறந்த அறையிலேயே அவளும் மனோஹரும் மறுநாள் ஷூட்டிங்குக்கான ஒத்திகை பார்த்துக்கொண் டிருந்ததையே அவன் கண்டானாம். 'இந்தச் சினிமாக்காரியை ஒழித்துவிட்டு, என் பிள்ளைக்கு வேறு நல்ல குடும்பத்தில் ஓர் பெண்ணைக் கட்டி வைத்துவிட வேண்டும்' என்றிருந்த என் தாய்தான் சிவராமனைத் தூண்டிவிட்டுக் கமலா நடத்தை பிசகியவள் என்று எழுதச் செய்துவிட்டாளாம்.

பிறகு என்ன? மனைவியை நானே கொன்றுவிட்டது போன்றதொரு பாவ உணர்ச்சி என்னை வாட்டத் தொடங்கிற்று. அதை மறக்கடிக்கும் பொருட்டுக் கண்காணா ஹைதராபாத் சம்ஸ்தானத்தில் இந்த முஸ்லிம்கள் வாழும் மஹபூப்நகரின் ஆஸ்பத்திரியில் சம்பளமில்லாத டாக்டராகப் பணியாற்றி, இந்தப் பரோபகாரச் செயல் மூலம் என் பாவத்தைத் துடைக்க முயன்றுகொண் டிருக்கிறேன்!

5

மனக்கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டால், அதை எளிதாக அடக்கிவிட முடியாது. அன்றிரவு துணிகரமான ஓர் முடிவுக்கு வந்த பிறகுதான் என்னால் தூங்க முடிந்தது. 'கமலாவுக்கு ஏற்பட்ட முடிவே ஸலீமாவுக்கும் ஏற்பட விடலாகாது. பொழுது விடிந்ததும் அவளைச் சந்தித்து, ரங்கூனில் அவளுக்குப் புகல் அளித்திருந்த அம்மாளின் விலாசம் வாங்க வேண்டும். நேரிலே போய் அந்த அம்மாளைச் சந்தித்து, ''ஸலீமாவின் வாழ்க்கை இப்பொழுது உங்கள் கையில்தான் இருக்கிறது. அவளை நீங்கள் ரங்கூனில் எப்பொழுது எப்படிச் சந்தித்தீர்கள், அதற்கு முன் அவள் எப்படி வாழ்ந்தாள் என்பது எதையும் ஆலோசியாது, ரங்கூன் துறைமுகத்திலேயே அவளைச் சந்தித்து, அவளுடைய பரிதாபக் கதையைக் கேட்டு வீட்டுக்கு அழைத்து வந்து வைத்துக் கொண்டு விட்டதாக நீங்கள் அவள் கணவனிடம் சொன்னால்தான் அவன் அவளை ஏற்றுக்கொள்ளுவான்'' என்று கூறி, அந்த அம்மாளை உடன் அழைத்து வந்து அவ்வாறே சொல்லச் செய்து விடவேண்டும். ஒருகால் ஸலீமா அப்படி ஓர் அம்மாளிடம் அடைக்கலம் புகுந்திராமல், மீரானுடன் வாழ்ந்து விட்டு வந்திருந்தாலுங் கூட, வேறு யாரேனும் ஒருத்தியை அவளுக்குப் புகலளித்த அம்மாளாக நடிக்கச் செய்து காரியத்தை நிறைவேற்றி, அவளைக் கணவனுடன் இணைத்து வைத்துவிட வேண்டும். இதுதான் கமலாவுக்கு நான் இழைத்த அநீதிக்கு ஓரளவாவது சரியான பிராயச் சித்தம் ஆகும்' என்ற அந்த முடிவுக்குப் பிறகுதான் என் மனம் ஒருவாறு சமாதானம் அடைந்தது.

ஆனால் நான் கண்களை மூடி ஐந்து நிமிஷங்கள் கூட ஆகியிரா; வீட்டுக் கதவு 'படபட' வென்று தட்டப்பட்டது. திடுக்கிட்டு எழுந்திருந்து லைட்டின் ஸ்விச்சைப் போட்டுவிட்டு ஓடிவந்து கதவைத் திறந்தேன். என் எதிரில் மஹபூப்நகர் ஸப்-இன்ஸ்பெக்டர் கரீம்கான் நின்றுகொண் டிருந்தார். வெளியே கொட்டுகிற மழையில் ஓர் 'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்' பஸ் நின்றுகொண் டிருந்தது. அதில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்குகளுடன் இன்னும் பலர் அமர்ந்திருந்தனர்.

''என்ன நடந்துவிட்டது இன்ஸ்பெக்டர் ஸாஹப்?'' என்று மனம் பதறிக் கேட்டேன்.

''புறப்படுங்கள் டாக்டர். உடனே எங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கான மருந்துகள் உங்களிடம் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவையும் எடுத்துக் கொண்டு கிளம்புங்கள். ஒரு பெரிய ரெயில் விபத்து ஏற்பட்டுவிட்டது. இங்கிருந்து ஜத்சேர்லாவுக்குச் சென்றுகொண் டிருந்த துரோணசலம் பாஸஞ்சர், பொலானிகுண்டா நதிப் பாலத்தைக் கடந்துகொண் டிருக்கையில், பாலம் உடைந்து ஆற்றில் விழுந்து விட்டது. கிளம்புங்கள் டாக்டர் சீக்கிரம்'' என்று அவசரப் படுத்தினார் இன்ஸ்பெக்டர் கான்.

நான் உடனே வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டேன். அடுத்த அரைமணி நேரத்தில் அந்தக் கொட்டும் மழையில் நாங்கள் விபத்து நிகழ்ந்த இடத்தை அடைந்துவிட்டோம்.

ஐயோ! என்ன கோரமான காட்சி அது! எத்தனையோ படுகாயங்களைப் பார்த்துப் பழக்கப் பட்டிருந்த எனக்கே, அங்கே குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்தவர்களைக் கண்டதும்

கண்ணீர் சோர்ந்தது என்றால், மற்றவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

இன்ஜினின் முன்பாகம் பாலத்தின் எதிர் முனையில் தொங்கிக்கொண்டிருந்தது. கரி தண்ணீர் சேமித்து வைக்கும் பின்பாகமும், அதை அடுத்த இரண்டு பெட்டிகளும் சுக்கு நூறாக நொறுங்கி ஆற்றில் கிடந்தன. எங்கே பார்த்தாலும் மனித உடல்கள்! ஒரே ரத்தக் காடு! ஒரே பிணக் காடு!

அந்தக் கண்ணராவிக் காட்சியை விவரிக்க எனக்குத் தெம்பில்லை. எதிர்க் கரையில் பத்திரமாக இருந்த ஓர் வண்டிக்குள் ஏறி அமர்ந்துகொண்டு, காயப்பட்டவர்களை அங்கே கொண்டு வந்து போடும்படி பணித்தேன்.



நண்பன் கண்ட காட்சியைக் கூறியது கடிதம்.

இதற்குள் இமாம் பக்கிரி மஹா பூப்நகரையே திரட்டிக் கொண்டு நிவாரண வேலைக்கு வந்து விட்டார். 'பர்தா'வில் இருக்கும் முஸ்லிம் பெண்கள்கூட அந்த நள்ளிரவில், கொட்டும் மழையில் ஐந்து மைல் தூரம் ஓடோடியும் வந்து ஆபத்சகாயப் பணியில் ஆண்களுக்குச் சமமாக ஈடுபட்டனர் என்றால், அவர்களுடைய பரோபகாரச் சிந்தையை எப்படி வர்ணிப்பது! அன்று ஒரே டாக்டரான நானும் அசுர வேலை செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொழுது புலர்ந்துகொண்டிருந்தது. இன்னும் சிகிச்சை செய்யப்படாதவர்களின் எண்ணிக்கையோ நிறைய இருந்தது. ஆனால் என் கையில் இருந்த மருந்துச் சாதனங்கள் தீர்ந்துபோகும் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தன. இதுவரையில் கண்ணை மூடிக்கொண்டு, சிறு காயம், பெரிய காயம் என்று பிரித்துச் சிகிச்சை செய்யாமல் வரிசைப் பிரகாரம் எல்லாருக்கும் சிகிச்சை செய்து வந்தேன். ஆனால், இனி அப்படிச் செய்ய முடியாது. கையில் இருக்கும் கொஞ்சம் மருந்தைப் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கே பயன்படுத்த வேண்டும். இந்த முடிவோடு நான் வண்டியிலிருந்து கீழே இறங்கி வந்தேன்.

ஆற்றின் கரையில் காயமடைந்து நினைவற்றுக் கிடந்தவர்கள் வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தனர். அவர்களைச் சுற்றி ஒரே ஜனக் கும்பல்.. தங்கள் உறவினர், தங்களுக்குத் தெரிந்தவர் எவரேனும் விபத்தில் சிக்கியிருக்கிறார்களோ என்ற கவலையுடன் நகர மக்கள், காயமடைந்தவர்கள் ஒவ்வொருவரையும் ஆராய்ந்துகொண்டிருந்தனர்.

நானும் அந்தக் கூட்டத்தினுள்ளே புகுந்து என் ஆராய்ச்சியைத் துவக்கினேன். சிகிச்சைக்கு அவசரமில்லை என்று தோன்றியவர்களின் உடல்களை அப்புறப்படுத்தச் செய்தேன். மரணாவஸ்தையில் இருந்தவர்களை மாத்திரம் பிழைப்பூட்ட என்னால் இயன்றதைச் செய்தேன். இப்படி ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டு வந்தபோது—

அங்கே ஓரிடத்தில் ஸலீமா யாரோ ஒரு ஸ்திரீயின் அருகில் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டேன்.

என்னைப் பார்த்ததும் அவள் எழுந்து ஓடி வந்தாள். ''டாக்டர் ஸாஹப், கொஞ்சம் தயவு செய்யுங்கள். முதலில் இந்த அம்மாளுக்குச் சிகிச்சை செய்து பிழைப்பூட்டுங்கள். இவர்கள் பிழைத்தெழுந்தால்தான் என்

வாழ்வு மலர வழியுண்டு'' என்று என்னைக் கெஞ்சினாள்.

அந்த அவசர வேலைக்கிடையிலும் நான் எனது பிராயச்சித்தப் பிரதிக்ஞையை மறந்து விடவில்லை. உடனே என் மருந்து சாதனப் பையைக் கீழே வைத்துவிட்டு, ஒருக்களித்துக் கிடத்தப்பட்டிருந்த அந்த அம்மாளின் உடலைப் புரட்டினேன்.

அவள் முகத்தைப் பார்த்தேனோ, இல்லையோ, ''கமலா!'' என்று வீரிட்டேன்.

''டாக்டர் ஸாஹப், உங்களுக்கு இந்த அம்மாளை ஏற்கனவே தெரியுமா? இவர்கள்தாம் என் கற்புக் கெடாமல் காப்பாற்றிய புண்ணிய வதி, டாக்டர். முந்தாநாள் என்னை இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டு, அதே ரெயிலில் ஸிகந்தராபாத்துக்குப் போனார்கள்....''

என் காதுகள் ஸலீமாவின் பேச்சை வாங்கிக் கொண்டிருந்தன. கைகள் கமலாவின் காயங்களுக்குக் கட்டுப் போட்டுக்கொண் டிருந்தன. மனமோ, 'அப்படியானால் கமலா இறக்கவில்லையா?' என்ற பெரிய கேள்வியை எழுப்பி எழுப்பி, அதற்கு விடைகாண முயன்றுகொண் டிருந்தது.

விடை கிடைத்துவிட்டது எனக்கு! விமோசனமும் கிடைத்துவிட்டது! அன்று மாலையில் மஹபூப்நகர் ஆஸ்பத்திரியில் என் கமலா நினைவு பெற்றபோது, அவள் வாய் வழியே அவை கிடைத்தன.

ஆம்; அவள் இறக்கவில்லை. தான் பெற்ற செல்வத்தை, தன்னிடமிருந்து எட்டு மாதங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த செல்வத்தை ஒரு தடவை பாராமல் உயிர்விட அவளுக்கு மனம் வரவில்லை. குழந்தையை என் வீட்டில் காணாததால், அவளை நான் எங்கே மறைத்து வைத்திருக்கிறேன் என்பதை அறிய அவள் ரகசியமாக விசாரணை புரிந்திருக்கிறாள்.

சென்னையில் என் அண்டை வீட்டின் சொந்தக்காரர் அப்பொழுது அங்கே வந்திருந்தார். அவர் பர்மா ரெயில்வேயில் வேலையாக இருப்பவர், தம்மை ஓர் பர்மியப் பிரஜையாகப் பதிவு செய்துகொண்டு விட்டபடியால், இங்குள்ள சொத்து செம்புகளை ஒதுக்கிக்கொண்டு போவதற்காக அவர் வந்திருந்தார். அவருக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. தமது மைத்துனியின் குழந்தையான ஜானுவின் வயசுடைய ஓர் பெண்ணைத் தாம் வளர்ப்பதாகக் கூறிக் கூட்டிச் சென்றார். இதை யாரோ கமலாவிடம் திரித்துக் கூறிவிட்டார்கள். அவள் கோர்ட்டு நடவடிக்கை எடுத்துக் குழந்தையைப் பெற்றுக் கொண்டுவிடுவாளோ என்று பயந்து ஜானுவை நான் அண்டை வீட்டுக்காரரிடம் ஒப்படைத்துப் பர்மாவுக்கு அனுப்பிவிட்டதாக யாரோ அளந்த கதையை நம்பி, கமலா ரங்கூனுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

தான் ரங்கூன் சென்றுள்ள விவரம் தெரிந்தால், எங்கே நான் அந்த மனிதருக்குக் கடிதம் எழுதி, அங்கும் அவள் குழந்தையைக் காண முடியாது செய்துவிடுவேனோ என்று அஞ்சியே, தற்கொலை செய்துகொள்ளப் போவதுபோல் ஓர் கடிதம் எழுதி எனக்கு அனுப்பிவிட்டு, சில துணிமணிகள், கைப்பை முதலியவற்றைக் கடற்கரையில் வைத்துவிட்டு மறைந்து விட்டாள்.

என் அண்டை வீட்டுக்காரரின் ரங்கூன் விலாசம் கமலாவுக்குத் தெரியாது; ஆதலால் அங்கே அவரைப்பற்றித் துப்பு விசாரித்துக் கண்டுபிடிக்கவே அவளுக்கு இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. அவரைச் சந்தித்த பிறகுதான், ஜானு பங்களூரில் ஒரு போர்டிங் பள்ளியில் படிக்கிறாள் என்ற விவரம் அம்மனிதர் மூலம் கமலாவுக்குக் கிட்டிற்று. உடனே இங்கே கிளம்பி வந்தாள்.

ஸலீமாவை ஊரில் விட்டுவிட்டு, ஸிகந்தராபாத்துக்குச் சென்று குழந்தை ஜானுவுக்குச் சில நகை நட்டுகள் வாங்கிக்கொண்டு பிறகு பங்களூருக்குத் திரும்பலாம் என்று முந்தாநாள் ஸிகந்தராபாத்துக்குச் சென்றவள் அவற்றை வாங்கிக்கொண்டு நேற்றிரவு விபத்துக்குள்ளான ரெயிலில் வந்திருக்கிறாள்.

இந்த விவரங்களைக் கண்ணீர் வழியக் கூறிய கமலா, ''என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். என் கண்மணியை ஒரே ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இப்படியெல்லாம் செய்துவிட்டேன். தயவு செய்து அதற்கு மாத்திரம் எனக்கு அநுமதி தாருங்கள். அவளைப் பார்த்ததும் நான் எங்காவது ஒழிந்து போய்விடுகிறேன்'' என்று என்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

''முடியாது கமலா; என் நிபந்தனை ஒன்றை ஒப்புக்கொண்டால்தான் நீ ஜானுவைப் பார்க்கலாம்'' என்றேன் நான்.

''சொல்லுங்கள்; எதுவாக இருந்தாலும் ஒப்புக்கொள்ளுகிறேன்.''

''முதலில் இந்த ஸலீமா தூய்மையானவள் என்பதை அவள் கணவனுக்கு நீ நிரூபிக்க வேண்டும்.''

''செய்கிறேன்.''

''அப்புறம்....''

''இன்னும் என்ன?''

''இந்தப் பாவியையும் நீ மன்னிக்க வேண்டும்!''

''என்ன?'' கமலாவின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன; ஆனந்தக் கண்ணீரால் நிறைந்தன.

''ஆம், கமலா, இந்த மகாபாவி....''

கமலா சட்டென்று என் வாயைப் பொத்தினாள். பிறகு சொன்னாள்:''எனக்குத் தெரியும்; என்மீது சூட்டப்பட்ட அபாண்டம் என்றாவது ஒரு நாள் நீங்கும் என்று. ஆனால் அது என் வாழ்நாளிலே நீங்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்த விபத்து....''

ஆமாம், அந்த விபத்துத்தான். அந்த விபத்தில் எத்தனையோ பேர் உயிரிழந்தனர்; எத்தனையோ பேர் வாழ்விழந்தனர்; ஆனால் அத்தனை அழிவுக்கிடையிலும் அது இரு தம்பதிகளுக்குப் புதுவாழ்வு அளித்துவிட்டது!

ஆகவே அதை யார் தூற்றினாலும், எவர் சபித்தாலும் நான் வாழ்த்துகிறேன். வாழ்க விபத்தே! நீ வாழ்க, வாழ்க!

★

பாருங்கள்!
ஒரு அரை வில்லை
ஸன்லைட்தான்
இவ்வளவு சலவையும்
செய்து முடித்தது!
அதன் அதிகப்படியான நுரையே இதைச் சாதித்தது!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
பளிச்சென்று வெண்மையாக வெளுக்கிறது
S. 242-X52 TM
இந்தியாவில்
தயாரித்தது

50—63

அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது சொத்தையும்
மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள்
அவை

DCG/262

உங்கள் மகன்...

புள்ளி விவரங்களை கவனித்தால், சைவ உணவு உட்கொள்ளும் ஆண் குழந்தைகளில் 1 முதல் 3 வயதிற்குட்பட்டவர்களிடமே ஈரல், குலைக்கட்டி நோய் சகஜமாகக் காணப்படுகின்றது. அடிக்கடி ஜீரணக் கோளாறுகள் உண்டாகி, வயிறு பருத்து, சிடுசிடுப்பும், அசட்டுப் பிடிவாதமும், பசியின்மையும் காணப் பட்டால் அவை ஈரல், குலைக்கட்டி நோயின் பொதுச் சின்னங்கள் என்பதை குறிக்கின்றன.

தாமதமின்றி ஜம்மியை ஆலோசிக்கவும்.

குழந்தைகளின்
ஈரல் குலைக்கட்டி
நோய்களுக்கு

ஜம்மியின்
லிவர்க்யூர்

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்
'ஜம்மி பில்டிங்ஸ்', மைலாப்பூர், சென்னை 4.
கிளைகள்: பெரிய தெரு, கும்பகோணம்.
17, பெரிய தெரு, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

JVZ-13TM



குடும்பத்தில் தனக்குரிய மதிப்புக் குறைந்து வருவதாக நினைத்தாள். கண்ணன் கதை அவள் மனத்தை மாற்றியது. பிறகு......?

பாந்தம்

எழுதியவர்: **கி. சரஸ்வதி அம்மாள்**

"பத்மா, பத்மா!" என்று அழைக்கும் மகனின் குரல் ஜானகியம்மாளின் சிந்தனையைக் கலைத்தது. பரபரப்புடன் விசிப்பலகையினின்றும் எழுந்தாள். "என்ன வேணும்?" என்று கேட்டுக்கொண்டே மகன் இருக்கும் இடத்திற்கு அவசரமாய் அவள் வந்தபொழுது அவன் காரியாலய உடைகளைக் களைந்துகொண்டிருந்தான். தாயை நிமிர்ந்து பாராமலே, "பத்மா எங்கே?" என்று கேட்டான்.

"வெளியே போயிருப்பாள்" என்று கூறி, "உனக்கு என்ன வேணும்? காபி கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்று அவள் கேட்டதற்கு அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. ஆனால், "நான் ஆபீஸிலிருந்து வருகிற நேரம் தெரியாதோ? அதற்குச் சரியாக எங்கே போயிருக்கிறாள்?" என்று மட்டும் தனக்குத் தானே கடிந்து கூறிக்கொண்டான்.

"எப்படிப் போனாள்? எப்பொழுது போனாள்?" என்று அவன் மறுபடியும் கேட்டபொழுது, "நான் என்ன கண்டேன்? ஏதோ 'காரி'ன் சத்தம் கேட்டது. யாராவது சிநேகிதி வந்து அழைத்துப் போயிருப்பாள்" என்று ஜானகியம்மாள் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, அவன் நின்று கேட்டுக்கொண்

டிராமல் கை கால் கழுவிவரச் சென்று விட்டான்.

வீட்டில் இருக்கும் பெரியவளான தன்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் சென்றிருப்பதற்கு மருமகள் பேரில் அவள் சொல்லக்கூடிய குற்றத்தைக் கேட்கப் பிடிக்காமல்தான் அவன் அவ்விதம் வேகமாகச் செல்லுகிறுன் என்பது ஜானகியம்மாளுக்குத் தெரியவில்லையா, என்ன? அவனுக்குமேகூட, தான் வருகிற நேரத்திற்குச் சரியாகப் பத்மா சென்றிருப்பது பிடிக்கவில்லை. அப்படி இருந்தும் தன் வாயால் அதைக் கூறக் கூடாது என்கிற எண்ணமா? அவளுக்குத் தன் மனத்தில் உள்ளதை வெளியிட்டுச் சொல்லக் கூடச் சுதந்தரம் இல்லை அந்த வீட்டில்! தன் நிலைமையை எண்ணியபோது அவளிடம் ஒரு பெருமூச்சு எழுந்தது.

அவள் காபி கொண்டு வரும்படி சொல்ல உள்ளே சென்று திரும்ப வருவதற்குள், பத்மா வந்துவிட்டாள். கணவனிடம் பரக்கப் பரக்கச் சமாதானம் கூறிக்கொண் டிருந்தாள். ''எதிரகத்து மீனுவுக்கு ஏதோ நகை தட்டானிடம் செய்யக் கொடுக்க வேணுமாம்; துணைக்கு அழைத்தாள். நீங்கள் வருவதற்குள் வந்துவிடலாமென்றுதான் போனேன். தாமதம் ஆகிவிட்டது'' என்ருள்.

''எதுவானுல் என்ன? சமயத்திற்கு வீட்டில் ஆள் கிடையாது. ஒன்று சொல்ல நினைத்தால் முடிகிறதில்லை'' என்ருன் சந்துரு கடுகடுப்பாக.

''இதோ கேட்கத் தயாராக இருக்கிறேன். சொல்லுங்கள்'' என்ருள் பத்மா சுவாதீனத்துடன். அவன் சொல்ல வந்தது அப்படிப் பெரிய விஷயமாக இல்லை. ''ஆபீஸில் பார்க்க வந்த நண்பர் ஒருவரை நாளைக்குச் சாப்பாட்டிற்கு அழைத்திருக்கிறேன். வெகு நாட்களாக வடக்கேயே இருந்துவிட்ட அவருக்கு நம் உணவு வகைகள் சாப்பிட ஆசை. அதற்கு வேண்டி முற்றும் நம் பக்கத்துச் சமையலாகச் செய்ய வேணும். அவ்வளவுதான்'' என்ருன்.

'இந்தப் பிரமாதத்திற்கா பத்மா வர வேணும்? நம்மிடம் சொல்லக் கூடாதா?' என்று நினைத்தாள் ஜானகியம்மாள். வர வர அவனுக்கு எதையும் அவளிடம் சொல்வது, பேசுவது என்கிற பழக்கமே விட்டுப் போய் வருகிறது. பாதிச் சமயம் அவள் ஒருத்தி வீட்டில் இருப்பதே நினைவு இல்லாமல்தான் இருக்கிருன். பத்மாவும் அவனுக்குச் சரியாகவே இருந்து வருகிருள். அவளுக்கும் மாமியார் என்ருல் ஒரு பொருள் அல்ல என்று தோன்றுகிறது. இப்பொழுது கணவன், ''வீட்டில் யாரும் இல்லை'' என்று கடிந்துகொண்டதற்கு, ''அம்மா இல்லையா?'' என்று சொல்லத் தோன்றவில்லையே! எல்லாவற்றையும் தானே நடத்துவதாகத்தான் அவள் எண்ணமும் பேச்சும் இருக்கின்றன. எந்த விவகாரமும் அவர்களுக்குள்ளேயே என்று ஆகிவிட்டது. அவளுக்கு அவற்றில் இடம் கிடையாது என்று வைத்திருக்கிருர்கள்.

''அதற்கு என்ன? ராமனிடம் சொன்னுல் தயாரித்துவிடுகிருன்'' என்ருள் பத்மா. பரிசாரகராமனை அவ்வளவு சாமர்த்தியசாலியாகச் செய்து வைத்திருப்பது யாராம்? எல்லாம் அவள் அல்லவா? இவ்வித எண்ணங்கள் ஜானகியம்மாளின் உள்ளத்திலே ஓடின. வீடும் வாசலும், ஆளும் படையும் எல்லாம் அவளுடையவை; அதாவது அவள் கணவர் சம்பாத்தியத்தினுல் உண்டானவை. அவள் குடித்தனம் செய்யும் முறையை ஊரே கொண்டாடி அதிசயித்திருக்கிறது. இப்பொழுது கணவர் இறந்து, மகன் வீட்டிற்கு எஜமானனுனவுடன் எல்லாம் மாறிவிட்டனவே! மகனும் மருமகளும் அவளைப் பின்னுக்குத் தள்ளி வைத்துவிட்டார்கள். கணவர் இறக்கும்பொழுது, ''ஜானகி, உன்னைப்பற்றித்தான் எனக்குக் கவலை. நீ பரமார்த்தி. உனக்கு ஒன்றும் தெரியாது. பிள்ளையிடமும் நாட்டுப் பெண்ணிடமும் சாமர்த்தியமாக நடந்துகொள்ள வேணுமே!'' என்று ஏதோ புதிதாகப் புக்ககத்துக்குச் செல்கிற பெண்ணுக்குச் சொல்வது போலப் பேசினுர். அவர் சாகப் போகிற துக்கத்தில் அவளுக்குப் பேச நா எழவில்லை. இல்லாவிட்டால், ''என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? நான் என்ன, ஒன்றும் தெரியாதவளா? மேலும், சந்துருவும் அவன் பெண்டாட்டி பத்மாவும் தங்கமான குழந்தைகளாயிற்றே. என்ன நேரக் கிடக்கிறது?'' என்று கேட்டிருப்பாள்.

ஆனுல் இப்பொழுதல்லவா தெரிகிறது, அவர் சொன்னதன் உள் அர்த்தம்? அவளை அவர்கள் ஒரு பொருளாக மதியாமல் நடத்துவதற்கு அவள் வாயைத் திறப்பதாயிருந்தால் எவ்வளவு கேவலமான ரசாபாசத்திற்கு வந்து ஊர் சிரிக்கும்? மானத்திற்கு அஞ்சி அவள் பொறுத்துப் போகிருள். அவள் கணவர் மட்டும் இப்பொழுது அவளைப் பார்த்தால், ''பழைய ஜானகியா!'' என்று அதிசயப்பட்டுப் போவார். அற்ப விஷயங்களுக்கெல்லாம் அவருடன் அவள் வாதாடுவாள். ஒவ்வொரு சமயம் அவரைத் தூக்கி எறிகிற மாதிரிகூடப் பேசியிருக்கிருள். அவ்வளவையும் அபிமானத்தால் சொல்லுகிருள் என்று தெரிந்து பொறுத்துப் போயிருக்கிருர். ஐயோ! அவரிடம் நிர்ப்பயமாக நடந்து கொண்டதற்குப் பிராயச்சித்தமாகத்தான், இப்பொழுது இவ்விதம் அடங்கிப் போகும்படியான நிலைமை வந்திருக்கிறதா என்ன? அவர் வைத்திருந்த மதிப்பில் முன்பு வீட்டில் யாரும் அவளிடத்தில் பயபக்தியோடு அவள் இட்டது சட்டமாக நடந்து வந்தார்கள். இப்பொழுதோ சகலமும் சின்னம்மாவின் உத்தரவுப்படிதான்.

பத்மாதான் என்ன? 'ஆளன் உறவு உண்டானுல் மாமி எம்மாத்திரம்?' என்கிற சொல்லுக்குச் சரியாக நடந்து கொள்கிருளே. மாமியார் வார்த்தை துளியளவுகூட லட்சியம் இல்லையே அவளுக்கு! எதைச் சொல்லப் போனுலும், ''அம்மா, அவர் என்ன சொல்லுவாரோ? அவரைக் கேட்க வேணும்'' என்கிருள். இல்லாவிட்டால், ''அவர் ஒப்புக்கொள்ள மாட்டார், அம்மா'' என்று தெம்பாகச் சாதிக்கிருள். 'அவர்' எந்தச் சீமையிலிருந்து வந்துவிட்டார்? ''அம்மா சொன்னுர், செய்தேன்'' என்று சொன்னுல் அவன் என்ன, தலையைச் சீவிவிடுவானு? ஜானகியம்மாள் இப்படியெல்லாம் தன் நினைவை ஓட்டினுள்.

அவன் நடந்துகொள்வதும் வர வரச் சகிக்க முடியாமல் இருந்து வருகிறது என்கிற நினைப்பு வந்தது அவளுக்கு. சிறிய விஷயங்களில்கூட அவர்கள் மனம் ஒத்துப் போவதில்லை என்ருகி விட்டது. ஏதாவது ஒரு கல்யாண அழைப்புக்கு அவள் போக வேண்டுமென்று எண்ணினுல் அவனுக்கு வேண்டா

மென்று தோன்றுகிறது. அப்படி நினைப்பதற்குக் காரணம் வேண்டுமே; கிடையாது. ''போகப் போகிறவன் நான், எனக்கு இஷ்டம் இல்லை'' என்று பிடிவாதமாகப் பதில் சொல்லுகிறான். போன வாரம் நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவளுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. 'எப்படியோ போகட்டும்' என்று மனசு விட்டுப் போகிறது. அவ்வளவுக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்துவிட்டான் சந்துரு.

யாரோ சாஸ்திரி, புராணம் சொல்லுகிறாராம்; பணத்திற்கு வந்தான். சந்துரு என்றைக்காவது நம் புராணக் கதைகளைக் கேட்டிருக்கிறானா? துளியாவது அவனுக்கு அவைகளில் சிரத்தை இருந்திருக்கிறதா? ஒன்றும் இல்லை. அப்படி இருக்க, தெரிந்தவர் சிபாரிசு செய்து அழைத்து வந்திருக்கிறாரென்று பணத்தைத் தூக்கிக் கொடுத்தால் எப்படி அதைப் பொறுத்துக்கொண்டு பேசாமல் இருக்கிறது? ''எதற்காகக் காசை வீசி எறிகிறாய்? உனக்குக் கதை புராணம் ஏதாவது தெரியுமா? இல்லை, கேட்கத்தான் பிடிக்குமா?'' என்று கேட்டுவிட்டாள். அவ்வளவுதான். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. வந்திருப்பவர்களின் எதிரிலேயே, ''அம்மா, உனக்காகத்தான் கொடுத்திருக்கிறேன். நீ போய்க் கேட்டுவிட்டு வா. அதிலிருந்தாவது உனக்கு விவேகம் ஏற்படுகிறதோ, பார்ப்போம்'' என்றான்.

எவ்வளவு பெரிய வார்த்தை! அயலார் இருப்பதையும் மறந்து அவ்விதம் சொல்லும்படி அவள் விவேகம் இல்லாமல் என்ன செய்துவிட்டாள்? அன்று அவள் மனம் பட்ட பாடு! தன்னைப் பார்க்க வந்து போன தம்பியிடம், ''பெற்ற குழந்தைகளையெல்லாம் பறி கொடுத்துவிட்டு, இவனைத் தடவித் தடவி வளர்த்ததற்கு, எனக்கு வெகுமானம் கிடைத்துவிட்டது, அப்பா! அவிவேகி என்று பட்டம் கொடுத்துவிட்டான் உன் மருமகன்'' என்று நடந்தவைகளைக் கூறி வருத்தப்பட்டாள். ''இருந்தாலும், அக்கா, உனக்கு நடந்துகொள்ளத் தெரியவில்லை. அவன் பெரியவனாகிவிட்டான் என்பதை மறந்துவிட்டுப் பேசுகிறாய். அவனுக்கும் சுயமாகச் சில செய்யத் தோன்றாதா? அத்திம்பேரிடத்தில் போலவே எல்லாவற்றிலும் நீ தலையிட்டால் நடக்குமா?'' என்று அவன் நியாயம் எடுத்து ஓதினான். 'தேவலையே இவன். நான் என் கணவரை அடக்கி ஆண்டேன் என்று சொல்லாமல் சொல்லுகிறானா?' அவளுக்கு மிகுந்த கோபமே வந்தது. ''போகிறது, இதிலிருந்தாவது இவ்வளவு நாளும் என்னைப்பற்றி நீ கொண்டிருக்கும் அபிப்பிராயம் தெரிந்ததே!'' என்று வெறுப்போடு கூறினாள். இப்படி நினைப்பவனிடம் தன் குறைகளை இனிச் சொல்லிக்கொள்வதில்லை என்று நிச்சயித்துக் கொண்டாள். ஆனால் மனம் முற்றும் அடங்கிவிடுகிறதா? அது பின்னும் தீவிரமாக வேலை செய்து, வேண்டாதவைகளையெல்லாம் முடிபோட்டு நினைத்துத் துன்புற்றுக்கொண் டிருந்தது. சிறு விஷயங்களுக்கெல்லாம் வீணுக்கு வாக்குவாதம் நிகழ்கிறது என்று மகன் அவளுடன் அதிகம் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விட்டான் என்று தெரிந்தது. அவள் வீண் வம்பு வளர்க்கிறவளா?

அவள் கணவர், ''ஜானகி, நீ தெரிந்து சொல்லுகிறாய்'' என்று எவ்வளவு தடவைகள் அவளைச் சிலாகித்திருக்கிறார்! அதற்கு நேர் மாறாக இவன், ''அம்மா, உனக்குத் தெரியாது, நீ பேசாமல் இரு'' என்கிறான். அவள் மடியிலே தவழ்ந்து வளர்ந்த மகனா இவ்விதம் பேசுகிறான்? நேற்று வரையும் ஒன்றும் தெரியா



ஜானகியம்மாள் கதையில் மெய்ம்மறந்து ஈடுபட்டாள்.

திருந்து அவள் சொற்படி கேட்டு நடந்து வந்தவன், இப்பொழுது இவ்வாறு பேசுவதென்றால், அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ''இவ்வளவு நாளும் நான்தானே எல்லாவற்றையும் நடத்தி வந்திருக்கிறேன்?'' என்றதற்கு, ''இப்பொழுது எல்லாம் மாறிவிட்டதம்மா'' என்கிறான். இவன் மாறியிருக்கிறான், தெரிகிறது. இவனுக்குத்தான் புது மாதிரியான பழக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அஸ்தமித்துக் கணவனும் மனைவியுமாக வெளியே போகிறதும், இரவு நேரம் கழித்து வீட்டுக்கு வருவதுமாக ஒன்றும் ஒழுங்கில்லாமல் இருக்கிறது. குழந்தையா, குட்டியா ஒன்றும் இல்லை. ஆகவே பத்மாவுக்கும் பொழுது போகவில்லை. எப்பொழுது பார்த்தாலும் சிநேகிதிகள் வீட்டுக்குப் போவதும், அவர்கள் இங்கு வருவதுமாகக் கேள்வி முறையற்றுக் கிடக்கிறது. விருந்துச் சாப்பாடும் உபசாரமுமாக நடத்துகிறாள். 'அவர் ஆஸ்தி சேர்த்து வைக்காவிட்டால் இவன் சம்பாதிக்கிற காசு இவ்வளவுக்கும் போதுமா?'

குழந்தை உருவத்திலே பகவானுடைய வடிவத்தைக் கண்டாளோ?

ஒவ்வொருத்தியைப் போல அவளுக்குச் சாமர்த்தியம் இருந்ததா, கணவரைச் சொத்து முழுவதையும் தன் பேரில் எழுதி வைக்கும்படிச் சொல்ல? அப்படி அவர் செய்திருந்தால் இவர்கள் அவளை அலட்சியம் செய்வார்களா? ஒவ்வொன்றுக்கும் அவள் முகம் பார்த்து அவள் சம்மதத்தின் மேல்தானே நடத்தும்படி இருக்கும்? இப்பொழுது அந்த வீட்டில் அவள் பார்த்துச் செய்யும்படி ஒன்றும் இல்லாமற் போனது கிடக்கட்டும்; அவள் அபிப்பிராயத்தையோ அநுமதியையோ கேட்டு நடக்க ஏதும் இல்லா

மற் போயிற்றே! அவளே முக்கியமாக இருந்த இடத்தில், அவள் ஒரு பொருள் அல்ல என்ருல், அது சகிக்கக் கூடியதா? அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது.

அந்தத் தவிப்பில்தான் எதிரகத்து மீனு, ''மாமி, பாகவதம் கேட்க வருகிறீர்களா? எனக்குத் தனியாகப் போக முடியவில்லை. நீங்கள் வந்தீர்களானுல் துணையாக இருக்கும்'' என்று அழைத்தபொழுது அவள் 'சரி' என்று சம்மதித்தாள். 'இவர்களுக்குத்தான் நாம் அவசியம் இல்லை; வேறு ஒருவருக்காவது உபகாரமாக இருப்போமே' என்கிற எண்ணம் அவளுக்கு. புராணம் கேட்டாவது அவளுக்கு விவேகம் வரட்டுமென்று மகன் சொன்னதிலிருந்து அவள் அடைந்திருந்த கோபத்தில், எந்த உயர்ந்த கதையானுலும், எவ்வளவு நன்ருக யார் சொன்னபோதிலும் கேட்பதில்லை என்று தான் கொண்டிருந்த சங்கற்பத்தையும் மாற்றிக் கொண்டாள்.

வாரத்தில் மூன்று நாட்கள் புராணப் பிரவசனம் நடந்துகொண்டிருந்தது. ஏழு மணி தொடங்கி ஒன்பது மணி வரையும் நடக்கும். பாகவத கதா சிரவணம் தன்னை அவ்வளவு ஈடுபட வைக்குமென்று அவளே நினைக்கவில்லை. பாகவதருடைய சொற்பொழிவு அற்புதமாக இருந்தது. வாக்கிலே சொற்கள் வருகிற வேகமும், அவை சங்கிலித் தொடர் போல ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்து வரும் அழகும், சம்ஸ்கிருத சுலோகங்களின் இனிமையும் கேட்கக் கேட்க அலுக்காத வண்ணம் இருந்தன. 'இவ்வளவு நல்ல பொழுதாகப் போகிறதே; அன்ருடம் நடக்கக் கூடாதா?' என்று தோன்றியது, ஜானகியம்மாளுக்கு. பகவானுடைய வரலாறு அவ்வளவு அழகு பொருந்தியது. அதனுல் உண்டான பக்திப் பிரவாகம் கேட்க வந்திருந்த ஆண் பெண் அவ்வளவு பேரையும் தன்னுள்ளே முழுகடித்துக்கொண்டிருந்தது. ஒருவராவது ஒரு வார்த்தை பேசாமல் அதே தியானமாகக் கேட்டார்கள். ஜானகியம்மாளும் அதில் மெய்ம்மறந்து ஈடுபட்டாள். அன்றன்று கதை முடிந்ததும், முடிந்துவிட்டதே என்று அவள் அங்கலாய்த்துக்கொண்டாள். வீடு திரும்பும் பொழுது மீனுவிடம் அன்ருட விசேஷத்தைச் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்பட்டாள். அகத்திலே அவளுக்கு அதுபற்றி வாய் திறக்க முடியவில்லை. மகனே மருமகளோ, அவளை அழைத்துச் செல்லாவிட்டாலும், அவள் போய் வருவது குறித்து ஏதாவது பேசிக் கேட்டாலல்லவா அது சாத்தியமாகும்?

தான் ரசித்து இன்புறுவதை மகனிடம் சொல்லி அளவளாவிச் சந்தோஷப்பட அவள் உள்ளம் துடித்தது. ஆனுல் அவன்தான் சிறிதும் அவள் சென்று வருவதைக் கவனியாமல் இருந்து வருகிருனே! தானுகச் சொல்லிக் கொள்வதற்கு, அவளுக்குச் சிறிதாவது சுயகௌரவம் கிடையாதா? அவர்கள் இவ்விதம் பராமுகமாக இருப்பதை எண்ணி மனசு கஷ்டப்பட்டது. அவள் பொழுது போகாமல் வீணுக்குக் கற்பனை செய்துகொண்டு சிரமப்படுகிருளென்று அவர்களே மீனுவிடம் சொல்லி, உடன் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்திருக்கிருர்கள் என்று தெரிந்தால், அவளுக்கு எப்படி இருக்கும்! அவர்கள் தன்னிடம் கொண்டிருக்கும் தாழ்ந்த அபிப்பிராயத்திற்காகப் பின்னுமல்லவா கோபமும் துக்கமும் எழும்?

ஆனுல் பாகவதம் கேட்கத் தொடங்கினது முதல் இத்தகைய அற்ப விஷயங்கள் மனத்தைப் பாதிக்கும்படி விடக்கூடாது என்ற எண்ணம் முளைத்தது. இவை சிறிய விஷயங்கள் என்று தோன்றின. அதிலிருந்து நான், எனது என்கிற பாவமே குறைந்து வருகிற மாதிரி இருந்தது அவளுக்கு.

பாகவதர் ஸ்ரீ கிருஷ்ண ஜனனத்தைச் சொல்லக் கேட்டு அவள் உடல் சிலிர்த்தது; இருதயம் பரவசம் அடைந்தது. அந்த அற்புதக் குழந்தையினுடைய தாமரை இதழ் போன்ற

கண்களையும், ஏக காலத்தில் கோடி சூரியர்கள் உதித்தது போன்ற தேக காந்தியையும், மேக சியாமள வர்ணத்தையும்பற்றி வருணித்துச் சொல்லி, அந்தக் கிருஷ்ண பரமாத்மா பெற்றோரான தேவகி வசுதேவர்களுக்குக் காண்பித்த சுய உருவத்தையும் எடுத்துச் சொன்னார். பாத பத்மங்களிலிருந்து தொடங்கி, ''சங்கு சக்ர கதா பாணியாய்ப் பட்டுப் பீதாம்பரதாரியாய், சதுர்புஜத்தோடு, கிரீடஹார கவச குண்டலங்களுடன், மந்தகாச வதனமும், பவள வாயும் கமலக் கண்களும், மயில் கொண்டையும்....'' என்று அவர் சொல்லச் சொல்ல அந்த உருவமே அவள் மனத்திரையிலே தீட்டுகிற மாதிரி ஒரு பிரமை ஏற்பட்டது.

மேலும் பாகவதர், ''உலக இன்பங்கள் என்றும் ரசிக்கக் கூடியவை அல்ல. பகவத் கிருபையே சாசுவதமானது. அதை அடைவதற்குச் சிரமப்பட வேண்டியதே இல்லை. அந்த மோகன உருவத்தைச் சதா தியானம் செய்தால், அது தானாகவே இருதயத்தில் வந்து இருந்து அங்குள்ள ஆசாபாசங்களை விலக்கி, சோக மோகங்களைப் போக்கடித்துவிடும்'' என்றார். ''உள்ளம் நிறைந்து பரமானந்தம் ஏற்படும்'' என்று அவர் சொல்லிய பொழுதே, ஜானகியம்மாளுக்கு, அந்தப் பகவத் சொரூபத்தை இருதயத்தில் இருத்தி, அழிவற்ற ஆனந்தத்தைப் பெற வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. எப்பொழுதும் பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் செய்யும் அலட்சியத்தையும் மற்றவற்றையும் நினைத்துப் புண்பட்டிருக்கும் மனத்தைத் தியானத்தில் ஈடுபடுத்திச் சாந்தியை அடையும்படி செய்யப் பெரிதும் விரும்பினாள். யார் எப்படி இருந்தால் நமக்கு என்ன? ஒன்றையும் இனி நாம் பாவித்துக் கொள்ளக் கூடாது. சதா பகவத் தியானத்தில் ஈடு பட்டு மனப் பக்குவத்தை அடைய வழி தேட வேண்டும்'' என்று நிச்சயித்துக்கொண்டாள்.

ஆனால், பாகவதர் சுலபமாகச் சொல்லி விட்டாலும், அவர் வருணிக்கும்பொழுது அந்தப் பகவத் சொரூபம் இருதயத்திலே வந்துவிட்ட மாதிரி தோன்றினாலும், அதை நிலைக்கச் செய்வது எளிதான காரியமாக இல்லை. பல சிந்தனைகள் குறுக்கிட்டுக் கலைத்தன. ஆனாலும் அவள் முயற்சியை விட்டுவிடவில்லை. சதா முயன்று பார்க்கத்தான் செய்தாள். அவளுக்குத் தன்னைச் சுற்றி நடப்பது எதுவும் இப்போது பெரிதாகப் படவில்லை. இவ்வளவு நாட்கள் கழிந்து பத்மா கர்ப்பம் தரித்திருக்கிற சந்தோஷச் செய்தியும் அவளைப் பெரிய மகிழ்ச்சியில் ஆழ்த்தி விடவில்லை. ''மாமி, நீங்கள் பக்தியோடு பாகவதம் கேட்டதற்குக் கைமேல் பலன் கிடைக்கிறது. கிருஷ்ணனே பேரனாக வந்து பிறக்கப் போகிறான்'' என்று மீனா அவளைச் சந்தோஷம் விசாரித்தபோதுகூட, ''என்னவோ பிறக்கட்டும்'' என்று பட்டுக் கொள்ளாமல் பதில் சொன்னாள். அவ்வளவுக்குச் சம்சார பந்தம் அற்றுவிட்ட மாதிரி இருந்தது அவளுக்கு. யாருடைய சந்தோஷ விசாரணையும் அவளைப் பெரிய மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடவில்லை.

மாதங்கள் பூர்த்தியாகிப் பத்மா பிரசவித்தாள். எல்லோரும் சொன்னது போல அவள் பாகவதம் கேட்டதற்குப் பலனாக ஸ்ரீ கிருஷ்ணனே வந்து அவதரித்தது போல ஆண் குழந்தைதான் பிறந்தது. ''அம்மா, உன் பேரனை வந்து பார், அம்மா'' என்று அவள் மகன் ஒதுங்கி உட்கார்ந்திருந்த அவளை ஆதரவோடு கையைப் பிடித்துப் பிரசவ அறையுள் அழைத்துச் சென்றான். இவ்வளவு நாளும் காண்பிக்காத அன்பு அவ்வளவும் அவனுடைய குரலிலே சேர்ந்து ஒலித்தது. அப்பொழுதும் அவள் உணர்ச்சி வசப் பட்டு விடவில்லை.

''உங்கள் பேரனை வாங்கிக் கொள்ளுங்கள், அம்மா'' என்று அறையுள் இருந்த 'நர்ஸ்' கூறி அவள் கைகளிலே அந்த இளஞ் சிசுவை வைத்தாள். அப்போது மின்சாரம் பாய்வது போல ஒரு சக்தி அவள் உடலிலே பாய்ந்து பரவிற்று. அப்படியே குழந்தையை மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டாள். அவள் மெய் சிலிர்த்தது. ஒரு கணம் அந்தக் குழந்தை உருவத்திலே பகவானுடைய சிசு வடிவத்தைக் கண்டாளா என்ன? அவள் மனத்திலே கொள்ளை ஆசைப்பட்டுத் தியானித்த அந்தத் திருவுருவம் அவள் கைகளிலே வந்துவிட்டது போன்ற ஒரு பிரமை. அவள் இதுவரையும் அநுபவித்து அறியாத ஆனந்தம் ஏற்பட்டது. ஒரு வகை இன்பத்தால் உள்ளம் நிறைந்து அமைதியுற்றிருக்கிற மாதிரி இருந்தது. இந்த நிம்மதியைத்தானா அவள் அடைய விரும்பினாள்? அவள் குலம் விளங்கும்படியான இந்தப் பாக்கியம் இல்லாததனால்தான், அவள் இருதயம் ஏதேதோ நினைத்து இவ்வளவு நாளும் துன்புற்றதா?

''அம்மா, பேரன் உன்னுடையவன். என்னை வளர்த்து ஆளாக்கினது போல, இவனையும் வளர்ப்பது உன் பொறுப்பு'' என்று அவள் மகன் சந்துரு உரிமையோடு கூறியபொழுது, அந்தக் குடும்பத்திலே அவள் இழந்திருந்த முக்கியத்துவத்தைத் திரும்ப அவளுக்கு அளித்துவிட்டது போல இருந்தது. ''அக்கா, குழந்தை அத்திம்பேரையே உரித்து வந்திருக்கிறான். இனி நீ குறைப்பட ஒன்றும் இல்லை'' என்றான் அவள் தம்பி.

குழந்தையைப் பார்க்க வந்த அவ்வளவு பேர்களும், அவ்விதமே 'குழந்தை அவள் கணவரின் அச்சு' என்று சொன்னார்கள். அவ்வளவும், பிறந்த அந்தச் சிசுவினிடத்திலே அவளுக்கு இருந்த விசேஷ பாத்தியதையை வற்புறுத்திக் காட்டுவது போல் இருந்தன. சம்சார பந்தத்தை அடியோடு விலக்க முயன்றதற்கு முற்றும் மாறாக அவள் அதனுள்ளே பின்னும் விசேஷமாக ஆழ்ந்து விடும்படி அல்லவா ஆயிற்று என்று நினைத்தாள். ஆனால் அதற்காக அவள் உள்ளம் வருந்துகிறதா? அதுதான் இல்லை. அளவற்ற ஆனந்தத்தை அடைந்து நிம்மதியுறுகிறதென்றே சொல்ல வேண்டும். ★

மலைநாட்டுக்
கழிக் கரையில்

ஓவியர் :
K. C. S. பணிக்கர்



கலைமகள்

எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல், நீங்களும் தென்னுட்டின் அதி உஷ்ண கால நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம். மனேரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால் குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ÉCLAT
TALC POWDER
COLGATE

டூமெக்ஸ்
பால் உணவு

குழந்தைகளுக்கு டூமெக்ஸ் புகட்டி அவர்களின் வளர்ச்
சியைக் கவனியுங்கள்!

பண்பும் பகையும்



உமாசந்திரன்

"சாமியார் தூங்கிக்கொண்டிருக்கிருரா?"

"ஆமாம். வழி நடந்த அலுப்பு, பாவம்! சமையல் செய்தாகிவிட்டதா?"

"அநேகமாக ஆனற்போலத்தான். ஆனல் ஒன்று: வீட்டில் ஒருவருக்குப் போதுமான அரிசிதான் மிச்சம் இருந்தது. அதை மட்டும் சோருக்கி அதற்கு வேண்டிய குழம்பும் கீரையும் சமைத்திருக்கிறேன்."

"இதுகூடச் சொல்ல வேண்டுமா மீனட்சி? இன்று ஏகாதசி அல்லவா? எது தவறினலும் ஏகாதசி விரதம் தவறக்கூடாது. ஒரு செம்பு நிறையத் தண்ணீர் மட்டும் இருந்தால் போதும் எனக்கு. அதைக் குடித்துவிட்டு ஐந்து நாளானலும் பட்டினி கிடக்க என்னல் முடியும்."

"தம்பி, தயாளா, கற்சட்டி நிறைய நீராகாரம் இருக்கிறது. கடித்துக்கொள்ள வடுமாங்காயும் இருக்கிறது. உனக்கு இரண்டும் பிடித்தவை அல்லவா?"

"என்னைப்பற்றிக் கவலைப்படாதே, அம்மா. ஒன்றுமே இல்லாவிட்டாலும் பசியைத் தாங்கிக்கொள்ளும் சக்தி எனக்கு உண்டு."

"சாமியாரை எழுப்பலாமா, மீனட்சி?"

"கொஞ்சம் பொறுங்கள். கீரை வெந்துகொண்டிருக்கிறது. மசித்துவிட்டுத் தாளித்து இறக்க வேண்டியதுதான்."

"அப்படியானல் அதற்குள் நான் ஆற்றுக்குப் போய்க் குளித்து வந்துவிடுகிறேன்."

நெடுந்தூரம் வழி நடந்த களைப்பால் வெளித்தாழ்வாரத்தில் சோர்ந்து தூங்கிக்கொண்டிருந்த சாமியார் சற்று முன்புதான் தூக்கம் கலைந்து கண் விழித்திருந்தார். கூடத்திலிருந்து மற்றவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவர் காதுகளில் தெளிவாக விழுந்துகொண்டிருந்தது. காலடிச் சத்தம் கேட்டதும் அவர் சட்டென்று கண்களை மூடிக்கொண்டு இன்னும் அயர்ந்த தூக்கத்தில் இருப்பவர் போல் அசைவற்றுக் கிடந்தார். குளிக்கக் கிளம்பிய வீட்டுத் தலைவர் வாயிற்படி இறங்குமுன் தம் அருகில் வந்து தயங்கி நிற்பதை அந்தக் கண் மூடிய நிலையிலும் சாமியாரால் உணர முடிந்தது. தயக்கம் சில விநாடிகளுக்குத்தான் நீடித்தது. அப்புறம் ஒரு பெருமூச்சு. அதைத் தொடர்ந்து காலடிச் சத்தம் தேய்ந்து மறைய எங்கும் நிச்சப்தம் நிலவியது.

வெந்துகொண்டிருந்த பசுங்கீரையின் மணம் சமையற் கட்டிலிருந்து கூடத்தைத் தாண்டி வந்து சாமியாரது மூச்சுக்காற்றில் கலந்து அவரது பசியைப் பன்மடங்கு அதிகப்படுத்தியது. மூன்று நாட்களாக அவர் கடும்பட்டினி. பருக்கைச் சோற்றுக்கும் வழியில்லாமல் அவரது வயிறு காய்ந்துகொண்டிருந்தது. பட்டினியோடு பட்டினியாகப் பகலென்றும் இரவென்றும் பாராமல் நடந்து வந்திருந்தார். வலயம்பட்டியை அவர் நெருங்கியபோது கதிரவன் கனலைக் கக்க ஆரம்பித்திருந்தான். வயிருர உணவும் இளைப்பாற நிழலும் எங்காவது கிடைக்காவா என்று பரிதவித்தார் சாமியார். வலயம்பட்டி கருணுகர மார்த்தாண்டரின் பெயரை யாரோ சொன்னர்கள். பசித்து வந்தவர் யாரானலும் இன்முகத்தோடு வரவேற்று உணவளிக்கும் மார்த்தாண்டரது பண்பு அந்த வட்டாரத்தில் பிரசித்தமாக இருந்தது. சாமியார் செல்ல விரும்பிய சாலையிலிருந்து விலகியே இருந்தது வலயம்பட்டி. வயல்களையும் தோப்புக்களையும் கடந்து இரண்டு கல் தூரம் நடந்தால்தான் அந்த ஊரை அடைய முடியும். இருந்தாலும் பசிக்கொடுமையைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர் வலயம்பட்டியை நாடி வந்திருந்தார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. கருணுகர மார்த்தாண்டரது வீட்டை அடையாளம் கேட்டுக்கொண்டு அவர் அதை நெருங்கியபோது மார்த்தாண்டரே வாயிலில் நின்றுகொண்டிருந்தார்.

"கருணுகர மார்த்தாண்டரது வீடு...."

"இதுதான். வெயிலில் நிற்க வேண்டாம். உள்ளே வாருங்கள்."

"நான்....எனக்கு...."

"நீங்கள் ஒன்றுமே சொல்ல வேண்டாம். சுவாமிகளின் தேவை என்னவென்று தெரிந்துகொண்டேன். மிகவும் களைத்திருக்கிறீர்கள். தாகம் நீங்கத் தண்ணீர் குடித்துவிட்டுச் சிறிது நேரம் படுத்துக் களையாறுங்கள். சீக்கிரத்திலேயே சமையல் செய்யச் சொல்கிறேன்" என்று கூறிய மார்த்தாண்டர் உள்ளிருந்து ஒரு செம்பு நிறையத் தண்ணீர்

பகைக்குக் குறுக்கே நின்றது பண்பு; பண்புக்குக் குறுக்கே நின்றது பகை. இந்தப் போட்டியில் வென்றது எது?

கொண்டு வந்து கொடுத்தார். சாமியார் அதை அருந்திவிட்டுப் படுத்தவர்தாம். மறு நிமிஷமே அயர்ந்த தூக்கம் அவரை ஆட்கொண்டுவிட்டது. அவர் மீண்டும் விழித்த போதுதான் மார்த்தாண்டர் தம் மனைவியிடம் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகள் அவரது காதில் விழுந்தன. அந்த வீட்டில் உள்ள ஒவ்வொருவர் இருதயத்திலும் எத்தகைய உயரிய பண்பு நிரம்பியிருக்கிறது என்பதை உணர்ந்து அவரது நெஞ்சு தழுதழுத்தது.

* * *

"இளைஞனே, உன்மேல் சாட்டப்பட்டிருக்கும் குற்றம் என்னவென்று தெரியுமா உனக்கு?"

"தெரியும்."

"அதை மறுத்து நீ ஏதாவது சொல்லிக்கொள்ள விரும்புகிருயா?"

"எதுவும் இல்லை."

"அப்படியானல் உன் குற்றத்தை நீயே ஒப்புக்கொள்கிருய் என்று அர்த்தமா?"

"அது நீதிபதியவர்களே புரிந்துகொள்ள வேண்டிய விஷயம்."

மன்னனின் மார்புக்குக் குறிவைத்து வீசிய கத்தி......

''உன்னுடைய சதித் திட்டம் எவ்வளவு பயங்கரமானது என்பதை அறிவாயா?''

''அறியாமல் துணியவில்லை.''

''உன் குற்றத்துக்கு என்ன தண்டனை, தெரியுமா?''

''தெரியாமல் இல்லை. மரணத்தை வரவேற்கச் சித்தமாக இருக்கிறேன்.''

இளைஞனின் கலக்கமற்ற துணிவு நீதிபதியைக் கணநேரம் திகைக்க வைத்தது. அவனை ஏற இறங்கப் பார்த்தார். பின்பு தொண்டையைக் கனைத்துக்கொண்டு தமது தீர்ப்பைக் கூறினார்: ''மன்னர் உயிரைப் பறிக்கச் சதி செய்த குற்றத்திற்காக வலயம்பட்டி கருணாகர மார்த்தாண்டரின் மகன் தயாளனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.''

விசாரணை மன்றத்தில் வீரர்கள் புடைசூழ நின்றுகொண்டிருந்த இளைஞனின் புன்னகை அப்போதும் அப்படியே மாருமல் இருந்தது.

* * *

காஞ்சி மன்னன் கேசரிவர்மன் அரியணையில் அலட்சியமாக அமர்ந்திருந்தான். ஆறு வருஷங்களாக ராஜ்ய நிர்வாகத்தில் அவன் காட்டிய திறமை, யாவரும் கண்டு அஞ்சும் செல்வாக்கையும் சக்தியையும் அவனுக்கு அளித்திருந்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின்



அஸ்தமன காலம் அது. பல்லவருக்கும் சோழருக்கும் இடையே ஆதிக்கப் போட்டி அதிதீவிரமாக நடந்துகொண்டிருந்த காலம். ஆட்சிப் பீடம் சூழ்ச்சிக்கும் சூதுக்கும் நிலைக்களனாக மாறியிருந்தது. சோழர்களது கை வலுத்த சமயத்தில் பல்லவர்கள் தலைமறைவாக இருந்து கலகம் செய்வதும், பல்லவர்கள் கை வலுத்த சமயத்தில் சோழர்கள் அவர்களைக் கவிழ்க்க முயற்சி செய்வதுமாக ஒரு நிலையற்ற நிலைமை நாட்டை வாட்டிக்கொண்டிருந்தது. அந்த

நிலைமையை ஓரளவுக்கு மாற்றி ஆறு வருஷ காலமாக அமைதியும் செழிப்பும் நாட்டில் நிலவச் செய்திருந்தான் கேசரி வர்மன். சூழ்ச்சியால் கைப்பற்றிய ஆட்சிப் பீடம் என்று அவனை விரும்பாதவர் தலைமறைவாகப் பழித்தாலும், அவன் அதற்குப் புதியவன் அல்ல. அதற்கு முன்பும் ஒரு தடவை அவன் அந்த அரியணையில் இருந்து அரசு செலுத்தியவன் தான். ஆனால் அந்த ஆட்சி இரண்டு வருஷ காலத்திற்கே நீடித்தது. அயர்ந்திருந்த சமயம் பார்த்துச் சோழர்கள் தாக்கவே, கேசரி வர்மன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓட நேரிட்டது. அதன்பிறகு நான்கு வருஷ காலம் அவன் எங்கு இருந்தான் என்றே யாருக்கும் தெரியாது. மக்கள் அவன் பெயரைக்கூட மறந்துபோயிருந்தார்கள். காஞ்சிமா நகரம் வெற்றி மமதை கொண்ட சோழர்களின் களியாட்டத்திற்குப் பலியாகித் தவித்துக் கொண்டிருந்தது. திடீரென்று நினைத்தான் கேசரிவர்மன். அவன் எங்கிருந்து வந்தான், எப்படி அரசுரிமையைக் கைப்பற்றினான் என்று எண்ணிப் பார்க்கவும் முடியாதபடி மின்னல் வேகத்தில் மீண்டும் காஞ்சியின் மன்னனாக அரியணையில் அமர்ந்துவிட்டான்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் மன்னனின் பிறந்த தினத்தை முன்னிட்டு விமரிசையான கொண்டாட்டம் நடந்தது. எங்கே பார்த்தாலும் விருந்தும் விளையாட்டும் கேளிக்கைகளுமாக நகரம் ஒரே கோலாகலமாகக் காட்சி யளித்தது. மாலையில் கேசரி வர்மன் பட்டத்து யானைமீது கம்பீரமாக அமர்ந்து நகர்வலம் வந்தான். அப்போது தான் சற்றும் எதிர்பாராத விதமாக நிகழ்ந்தது அந்த நிகழ்ச்சி. கூட்டத்திலிருந்து ஓர் இளைஞன் மன்னனின் மார்புக்குக் குறிவைத்து வீசிய கத்தி, மயிரிழை தப்பி அம்பாரியின் சாய்மானத்தில் பாய்ந்து குத்திட்டு நின்றது. கூட்டத்தில் ஒரே பரபரப்பு. கண்மூடிக் கண் திறப்பதற்குள் வீரர்கள் கூட்டத்தை ஒதுக்கி அந்த இளைஞனை வளைத்துப் பிடித்தனர். இளைஞன் தப்பியோட முயலவில்லை. குறி தவறி விட்டதைப்பற்றிய ஏமாற்றம் அவன் முகத்தில் காணப்பட்டது. வீரர்கள் அவனுக்கு விலங்கு பூட்டி இழுத்துச் சென்றனர். இவ்வளவு குழப்பமும் கலவரமும் நிகழ்ந்தும் கேசரி வர்மன் அந்தத் திசையில் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஒன்றுமே நடக்காததுபோல் மேலே சென்றுவிட்டான். அப்புறம் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூட அவனுக்கு ஒழிவில்லை.

இப்போது தனது அநுமதி முத்திரை பெற வேண்டிய பத்திரங்களை ஒவ்வொன்றாகக் கண்ணோட்டம் விட்டுப் பிரதானியின் கையில் கொடுத்துக்கொண் டிருந்த கேசரிவர்மன், ஒரு பத்திரத்தைப் படித்துப் பார்த்ததும் திடுக்கிட்டவன்போல் நிமிர்ந்தான்.

"அன்று ஊர்வலத்தில் பரபரப்பு ஏற்படுத்திய இளைஞனா இவன்?"

"ஆம், அரசே. நகர நீதிபதி விசாரணை நடத்தி நேற்றுத்தான் தீர்ப்பு அளித்தார். தங்கள் உத்தரவு கிடைத்ததும் தண்டனை நிறைவேற்றப்படும்."

நீதிபதியின் தீர்ப்புப் பத்திரத்தில் மீண்டும் ஒரு முறை பார்வையை ஊன்றிய கேசரி வர்மன் கணநேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். பின்பு அவசரஅவசரமாக இரண்டு வரி அதில் எழுதித் தன் முத்திரையை இட்டுப் பிரதானியின் கையில் கொடுத்தான்.

படித்துப் பார்த்த பிரதானியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "இதென்ன மகாராஜா! தங்கள் உயிரைப் பறிக்க நினைத்தவனுக்கு உயிர்ப் பிச்சையா?"

"அவன் செய்த குற்றம் நீர் நினைவுபடுத்தித் தான் நமக்குத் தெரியவேண்டும் என்பதில்லை."

"மகாராஜா, அன்று தங்களைத் தாக்க வந்த கத்தி கணநேர ஆவேசத்தில் வீசப்பட்டது அல்ல. பல வருஷங்களாகத் திட்டமிட்டு நடத்திய சதியின் விளைவே அது. குற்றவாளி சிறியவனாயிற்றே என்று பாராதீர்கள். அவன் குடும்பத்தைச் சேர்ந்த எல்லாருமே பல்லவரின் பரம்பரை வைரிகள்; சோழர்களின் உயிர்த் தோழர்கள். பல்லவ சாம்ராஜ்யத்தை வேரறுத்துச் சோழ சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்துவதே அவர்களது நோக்கம்."

பிரதானி கூறிய எதுவுமே அரசன் காதில் விழுந்ததாகத் தோன்றவில்லை. இன்னும் பார்த்து முடிக்க வேண்டிய பத்திரங்களில் அவனது பார்வை லயித்திருந்தது.

நீண்ட பெருமூச்சுடன் விடுதலைப் பத்திரத்தை ஒரு புறமாக வைத்தார் பிரதானி.

* * *

சிறைக்கூடத்தில் தயாளன் கைவிலங்கு, கால்விலங்கு பூட்டப்பட்டு இருந்த இடத்தை விட்டு அசைய முடியாமல் கல்மேடை மீது உட்கார்ந்திருந்தான். அவன் உடல் சோர்ந்து துவண்டிருந்தது. ஆனால் உள்ளம் சோர்ந்து விடவில்லை என்பதை வாட்டமற்றுத் தோன்றிய அவனது முகம் தெளிவாக எடுத்துக் காட்டியது. மலர்ந்த புன்னகையுடன் மரணத்தை வரவேற்கச் சித்தமாகக் காத்திருந்தான் தயாளன்.

சிறைக்கதவு திறக்கும் அரவம் கேட்டதும் தயாளன் அந்தத் திசையில் நோக்கினான். கதவைத் திறந்துகொண்டு இரண்டு வீரர்கள் அவனருகே வந்து நின்றனர். "உங்கள் வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து நிற்க முயன்றான் தயாளன்.

"அவ்வளவு ஆத்திரம் வேண்டாம். அப்படியே உட்கார்ந்திரு" என்று கூறிய வீரன் அவனைப் பிடித்து அமர்த்திவிட்டுத் தன் இடுப்பில் தொங்கிய திறவுகோல் கொத்தை எடுத்து அவனது கைகால்களில் பூட்டியிருந்த விலங்குகளைக் கழற்ற ஆரம்பித்தான். விலங்குகளிலிருந்து விடுபட்ட தயாளன் கைகால்களை உதறி ரத்த ஓட்டத்தைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்து நின்றான்.

"விலங்கு பூட்டாமல் குற்றவாளியைக் கொலைக்களத்துக்கு அழைத்துச் செல்வது மரபுக்கு விரோதமாயிற்றே!" என்று கேட்டான் கேலியாக.

"கொலைக்களத்தை நீ ஏமாற்றிவிட்டாய். உன்னை விடுதலை செய்யும்படி உத்தரவாகியிருக்கிறது."

"பரிகாசம் செய்கிறாயா?"

"பரிகாசத்துக்கும் பல்லவ வீரர்களுக்கும் வெகு தூரம்."

"நீதிபதியின் தீர்ப்பு?"

"மன்னர் உத்தரவு நீதிபதியின் தீர்ப்புக்கும் மேற்பட்டது."

"மன்னர் உத்தரவா?"

"நீயே பார்த்துக்கொள்" என்று கூறிய வீரன் நீதிபதியின் தீர்ப்பும் அதை ரத்து செய்து மன்னன் எழுதிய உத்தரவும் அடங்கிய பத்திரத்தைத் தயாளனுக்குக் காட்டினான். தன் கண்களையே நம்பாமல் திகைத்து நின்றான் தயாளன்.

* * *

வலயம்பட்டியை அடுத்த மகிழந்தோப்புத் திடீரென்று மாயாபுரியாக மாறியது. ஒரே இரவில் அங்கு எழுந்த கூடாரங்களும் ஏனைய ஆடம்பரங்களும் அரங்கத்தில் உயர்ந்த பதவி வகிப்பவர் யாரோ அங்கு வந்து தங்கியிருக்கிறார்கள் என்பதைப் பறைசாற்றின.

வந்திருப்பவர் யாராக இருப்பார், எதற்காக வந்திருப்பார் என்ற திகைப்பு ஊரெல்லாம் நிலவியிருந்தபோது கருணாகர மார்த்தாண்டரின் வீட்டில் வேறொரு விதமான திகைப்புக் குடிகொண்டிருந்தது.

"நீ கூறுவது உண்மையா தயாளா? மன்னரா உன்னை விடுதலை செய்யச் சொல்லி உத்தரவிட்டார்? அந்த உத்தரவை நீ பார்த்தாயா?"

"பார்த்திராவிட்டால் இவ்வளவு ஆச்சரியத்துக்கு இடம் ஏது? மன்னர் தமது கைப்பட எழுதி முத்திரையிட்டிருந்த உத்தரவை இந்த இரு கண்களாலும் பார்த்தேன்."

"விசித்திரந்தான். இவ்வளவு பெருந்தன்மையைப் பல்லவ மன்னனிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை."

"அதுதான் எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. முன்பின் அறியாத என்னைப்பற்றி மன்னருக்கு ஏன் இவ்வளவு அக்கறை? நான் புரிந்த குற்றமோ, மன்னிக்க முடியாத ராஜத்துரோகம். அப்படி இருக்கும்போது...."

"எப்படியோ, தயாளா, எவ்வித ஆபத்தும் இல்லாமல் நீ க்ஷேமமாகத் திரும்பி வந்தாயே, அதுவே போதும் எனக்கு" என்று கூறி மகனைத் தழுவிக்கொண்டு கண்ணீர் பெருக்கினாள் தாய். பின்பு கணவனைப் பார்த்து, "உங்களுக்குத் தெரியுமா? மகிழந்தோப்பில் கூடாரங்களும் குதிரை வீரர்களுமாக ஒரே கோலாகலமாக இருக்கிறதாமே! என்ன ஆபத்துக்கு அறிகுறியோ என்று ஊரே கலங்கிப் போயிருக்கிறது" என்றாள்.

மீனாட்சி பேசிவாய் மூடவில்லை. வீட்டு வாயிலில் குதிரைகள் வந்து நிற்கும் குளம்பொலி கேட்டது. மறு கணம் இரு வீரர்கள் உள்ளே வந்தனர்.

"கருணாகர மார்த்தாண்டர்...."

"நான்தான். என்ன வேண்டும்?"

"தங்களைக் கையோடு அழைத்து வரும்படி மன்னர் உத்தரவு."

"மன்னர் எங்கு இருக்கிறார்?" என்று வியப்புடன் கேட்டார் மார்த்தாண்டர்.

"மகிழந்தோப்பில், மையக் கூடாரத்தில்" என்று வீரன் கூறியதும் மற்ற மூவரும் வியப்பு மிகுந்த கண்களுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

* * *

மகிழந்தோப்பில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களில் தலைசிறந்து விளங்கியது மையக் கூடாரம். வீரர்கள் கருணாகரரை உள்ளே அழைத்துச் சென்றபோது கேசரிவர்மன் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட மஞ்சமொன்றில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். மார்த்தாண்டர் உள்ளே வருவதைக் கண்டதும் அவன் பரபரப்புடன் எழுந்து நின்றான். மன்னனை வியப்புடன் நோக்கினார் கருணாகரர்.

"என்னிடமிருந்து இந்த அழைப்பு வருமென்று நீங்கள் எதிர்பார்க்கவில்லையல்லவா?"

"அழைப்பு நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் இந்த வரவேற்புத்தான் நான் எதிர்பாராததாக இருக்கிறது."

"மகன் இழைத்த குற்றத்திற்குத் தந்தை எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?"

"மகனைக் குற்றம் செய்யத் தூண்டியதே தந்தையாக இருந்தால்?"

"உங்கள் வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்துதான் பேசுகிறீர்களா?"

"அர்த்தம் எவ்வளவு பயங்கரமாக இருந்தாலும் உண்மையைக் கூறாமல் இருக்க முடியாது. மார்த்தாண்டன் பரம்பரை பல்லவர் ஆதிக்கத்தை என்றுமே ஒப்புக்கொண்டதில்லை."

"உங்கள் பரம்பரைப் பகையை நான் பாராட்டவில்லை. உங்கள் பண்பையே நான் பாராட்டுகிறேன். ஆறு வருஷங்களுக்கு முன்னால் உங்கள் வீட்டில் யாருமே உண்ணாமல் ஒரு துறவிக்கு உணவளித்தீர்களே, நினைவிருக்கிறதா?"

"அந்தச் சம்பவத்தைப்பற்றி இப்போது ஏன் நினைவுபடுத்துகிறீர்கள்?"

"அந்த ஒரு வேளை உணவுதான் உங்கள் மகனது உயிரைக் காப்பாற்றியது. அன்று உங்கள் வீட்டிற்கு வந்து உணவு பெற்ற துறவி வேறு யாரும் அல்ல. உங்கள் பகைமைக்குப் பாத்திரமான கேசரிவர்மனேதான்."

முகத்தில் எவ்வித வியப்புக் குறியும் இல்லாமல் கருணாகரர் மௌனமாக இருப்பதைக் கண்ட கேசரிவர்மன் தொடர்ந்து கேட்டான்: "என்ன யோசிக்கிறீர்கள், கருணாகரரே? இந்த உண்மையை அன்றே அறிந்திருந்தால் உங்கள் பகையை அப்போதே தீர்த்துக்கொண்டிருக்கலாமே என்றுதானே?"

தலை குனிந்திருந்த கருணாகரர் சட்டென்று தலை நிமிர்ந்து மௌனத்தைக் கலைத்தார். "இந்த உண்மை எனக்கு அன்றே தெரியும்" என்று அவர் கூறியதும் மன்னரின் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை.

"என்ன! அன்றே தெரியுமா?"

"ஆம். அன்று சாமியார் களைப்பு மிஞ்சித் தூங்கிக்கொண்டிருந்தபோது அவரது உடலைப் போர்த்திருந்த காவியுடை சற்று ஒதுங்கிப் போயிருந்தது. தற்செயலாக அவ்வழியே சென்ற நான் அவரது தோளில் பொறித்திருந்த பல்லவ ராஜ வம்சத்தின் சின்னத்தைப் பார்த்துவிட்டேன். சாமியார் யார் என்பதை ஊகிக்க எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை."

"அப்படியிருந்துமா உங்கள் பகையைத் தீர்த்துக்கொள்ள நீங்கள் நினைக்கவில்லை?"

"காரணம் கூறத்தான் வேண்டுமா?"

"கட்டாயம்."

சற்று நேரம் மௌனமாய் நின்றார் கருணாகரர். பின்பு அமைதியான குரலில் கூறினார்: "பகைக்குக் குறுக்கே நின்றது பண்பு. அன்று நீங்கள் என் அதிதி!" ★



ஆரோக்கியமான ஜனங்கள் தவறாமல் லைப்பாய் உபயோகித்துக் குளிக்கின்றனர்

*அன்றாட அழுக்கிலுள்ள கிருமிகளை அது கழுவிக் களைகிறது!

★ தினசரி நம்மீது படியும் அழுக்கிலுள்ள கிருமிகள் வாயிலாக நாம் ஒவ்வொருவரும் தொத்துநோய் ஆபத்துக்கு ஆளாகிறோம். அதன் காரணமாகவே, ஆரோக்கியமுள்ள பலர் வழக்கமாக லைப்பாய் சோப் உபயோகித்து அழுக்குடன் கிருமிகளையும் கழுவிக் களைந்து தத்தம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்கின்றனர் —ஆரோக்கியமான அத்தகைய புதுமலர்ச்சியை அது அளிக்கிறது!

L. 261-X52 TM

இந்தியாவில் தயாரித்தது

பட்சிசாஸ்திரக் கிளி

தி. ஜானகிராமன்

வாசல் குறட்டில் அலறல்.

க்ராச்-க்ராச் க்ராச்-க்ராச்-க்ராச் க்ராச்!

படபடபடவென்று சிறகடிக்கும் பரபரப்பு.

மறுபடியும் கத்தல் - க்ராச்-க்ராச்-க்ராச்!

காகிதம், அடிப்பலகை, மூடாத பேனா எல்லாவற்றையும் அப்படியே போட்டேன். வாசலுக்கு ஓடினேன். நாலைந்து பையன்கள். ஒரு பையன் கையிரண்டையும் அகற்றி எதையோ பிடிக்க முயன்றுகொண் டிருந்தான். கிளி க்ராச் க்ராச் என்று அருண்டு போய்க் கத்திக்கொண்டு சிறகடித்தது. குறட்டை விட்டு ஓர் அடி எழுந்து பறந்தது. மீண்டும் கீழே வந்தது. மீண்டும் பறந்தது.

க்ராச் க்ராச் க்ராச்!

பையன் கழுத்தில் கையைப் போட்டுப் பிடித்துவிட்டான்.

க்ராச் க்ராச் க்ராச்!

கிளி திமிறிற்று. ஓயாமல் கத்திற்று.

''டேய் எல்லப்பா, எனக்குடா!'' - இன்னொரு பையன்.

''தம்பி, இஞ்ச கொண்ணாந்துரு'' என்று எதிர்த்த வீட்டுக்கு அடுத்திருந்த கசாப்புக் கடையிலிருந்து ஒரு குரல்.

''என்னாத்துக்கு?''

''கொண்டாறியா இல்லையா?''

''போய்யா.''

அதற்குள் கசாப்புக் கடைக்காரரின் ஆள் ஓடி வந்தான். கிளியைப் பிடுங்கிக்கொண்டான்.

வாசலில் இதற்குள் ஏழெட்டுப் பேர் கூட்டம்.

என் மனைவி ஓடி வந்தாள்.

''கிளியையா புடிச்சிட்டுப் போறாங்க?''

''ஆமாம்.''

''பேசாம நிக்கிறீங்களே!....ஐயா, உங்களைத்தானே?'' குறட்டை விட்டுக் கீழே இறங்கி ஓர் அடி எடுத்து வைத்துவிட்டாள்.

''ஐயா, ஏய் தம்பி, கூப்பிடு அவரை.''

யாரோ தம்பி அவரைக் கூப்பிட்டான். கசாப்புக் கடைக்காரர் எட்டிப் பார்த்தார்.

''கொண்டாங்க கிளியை.''

''உங்களுதா?''

''பின்னே ஆருதாம்? கொண்டாங்கய்யா இப்படி!''

கிளியைக் கொண்டு வந்தான் கடை ஆள். ''நீங்க வளக்கிறீங்களா?''

''ஆமாம்.''

நடையிலிருந்த சைக்கிளின் 'ஸீட்'டின்மேல் விட்டுவிட்டுப் போனான் கடையாள்.

''சும்மா சும்மா வாசல்லெ போகாதேன்னு சொன்னனால்லியா? பாத்தியா இப்ப?'' என்று சத்தம் போட்டாள் அவள். கிளி மூக்காலும் காலாலும் பற்றிக்கொண்டு 'ஸீட்'டுக்கு அடியிலுள்ள சுழற்கம்பிக்குள் போய் ஒளிந்து கொண்டது. குனிந்து பார்த்தோம். தலையைக் குனிந்து உடம்பை ஒடுக்கிக் கம்பிக்குள் இருந்து விழித்தது. விசிறியை எடுத்துவந்து 'வா இப்படி' என்று சத்தம் போட்டு ஸீட்டண்டை பிடித்தாள். விசிறிமீது இறங்கிச் சிறகடித்துக் கீழே விழுந்து, பலகைச் சுவரின் அடியில் புகுந்து விறகு கரி வைக்கிற அறைக்குள் மறைந்தது கிளி. இவளும் போய்க் கூடையைப் போட்டுக் கிளியை மூடினாள். வாசல் கதவைச் சாத்தித் தாழிட்டாள்.

''புள்ளீங்கள்ளாம் வந்தா, புலம்ப ஆரமிச்சிருக்கும். நல்ல வேளையா ஆம்பிட்டுது'' என்றாள் அவள்.

''புடிச்சிக்கிட்டுப் போறான். யாரோ எதையோ எடுத்துக்கிட்டுப் போறாப் போல, பாத்துக்கிட்டு நிக்கிறீங்களே!'' என்று அவள் சொல்லவில்லை. பார்வை சொல்லிற்று.

''இன்னமே வாசல்லே உடப்படாது. பூனை ஒண்ணு எப்பப் பாத்தாலும் எதித்த ஊட்டுக் குறட்டிலே கண்ணை மூடிட்டே படுத்துக் கிடக்கு. நல்ல வேளையா இப்பக் காணும் அதை. இருந்திருந்தா..'' இதைத்தான் அவள் வாய் திறந்து சொன்னாள்.

குடும்பமே கிளியிடம் ஆசை கொண்டுவிட்டது. ஆனால் அதற்கு ஆசை வரவேண்டாமா?

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். அவள் பார்த்த பார்வை! நான் கிளி பறி போவதைப் பார்த்துக்கொண்டு எப்படிப் பேசாமல் நின்றேன்? சத்தத்தைக் கேட்டு நாற்காலியிலிருந்து எழுந்து ஓடினது உண்மைதான். அது பழக்கம். தெருவில் திடீர் திடீரென்று சண்டைகள் மூளும். திடீர் திடீரென்று இரைச்சல் கேட்கும். நான் ஓர் இரைச்சலையும் வாசலுக்கு வந்து பார்க்கத் தவறியதில்லை. புத்தகத்தைப் போட்டுவிட்டு ஓடி வருவேன். பாஷை கேட்கிற ஆசை; வம்பில் ஆசை. வேறொன்றும் இல்லை. அந்தமாதிரிப் பழக்கத்தில்தான் அப்போதும் போனேன் போலிருக்றது. ஆனால் கிளி போவதைப் பார்த்துக் கொண்டே ஏன் சும்மா நின்றேன்?

கிளி வந்து ஒரு வாரந்தான் ஆயிற்று. இரண்டு பிள்ளைகளும் ஊர்க் குப்பையெல்லாம் வாரிக் கொண்டு வருகிறார்கள். தீப்பெட்டிப் படங்கள், ஸ்டாம்புகள், சிகரெட் பெட்டிகள், கோலிகள், சினிமாப் படத் துண்டுகள், என்ன என்னவோ வரும். வீட்டில் இறையும்.

ஒரு வாரம் முன்னால் பெரிய பையன் எதையோ துணிக்குள் பொத்திக்கொண்டு வந்தான்.

''என்னடா து?''

''கிளிப்பா'' என்று துணியை வீசினான். சிறகடித்துக்கொண்டு கீழே இறங்கிற்று ஒரு பச்சைக் கிளி. ஒரு காலை வளைத்து வளைத்து நடந்து மூலையில் போய் நின்றது.

''ஏதுடா இது?''

''முன்ஸாமி குடுத்தான்.''

''கிளி வளர்த்தாப் பாவம்'' என்றேன்.

''நான் ஒண்ணும் ரக்கையை ஒடிக்கலெ. கடையிலியே ஒடிச்சுத்தான் வித்தாங்களாம்.''

ஆமாம். கிளிக்கு வால் இல்லை. நீளக் கோழி முட்டை மாதிரி பின்னால் கூம்பியிருந்தது.

அது கோணிக் கோணி நடந்து தாழ்வாரத்தின் ஒட்டில் நின்று முற்றத்தைக் குனிந்து பார்த்தது.

''ஏது தம்பி கிளி?'' என்று உள்ளேயிருந்து வந்தாள் மனைவி. அவளிடம் அதையே சொன்னான்.

''ரக்கை, காலெல்லாம் ஒடிச்சுப் போட்டிருக்கானே பாவிங்க!'' என்றாள் அவள். ''இது ஒண்ணுதான் இல்லைன்னு கொண்டாந்தீங்களாக்கும்? படிங்கடான்னா, வயித்தை வலிக்குது, தூக்கம் வருதுன்னு அழும்பெல்லாம் பண்றீங்க. இதுக்கெல்லாம் ஒண்ணையும் காணும்'' என்று அலுத்துக்கொண்டு உள்ளே போனாள் அவள்.

''அந்த முன்ஸாமி கிட்டவே கொண்டு கொடுத்திட்டு மறுவேலை பாக்கணும். தெரிஞ்சுதாடா?''

''இங்கியே இருக்கட்டும்பா.''-கெஞ்சல்.

''அதெல்லாம் முடியாது.''

ஆபீசுக்குப் போய்விட்டேன்.

மாலையில் வந்து பூட்ஸைக் கழற்றி விறகு உள் மாடத்தில் வைக்கப் போனபோது, அங்கு ஒரு கூடை. க்ராச் க்ராச் க்ராச்!

கூடையைத் தூக்கினேன். கிளி. பக்கத்தில் ஒரு மரச் செப்பில் தண்ணீர். கீழே அரிசி

கீழே விழுந்து துடித்தான்.

''என்னுடா அங்கே?'' என்று ஓடி வந்தாள் அவள்.

இறைந்து கிடந்தது. ஓர் அரைத் தக்காளிப் பழம் குதறிக் கிடந்தது.

''தண்ணியே குடிக்க மாட்டேங்குது'' என்று மனைவி வந்து நின்ருள்.

''ஏன்?''

''அரிசிதான் கொஞ்சம் தின்னிச்சு. பழங் கூட முழுக்கத் திங்கலியே!'' என்று அருகில் போனுள். பயந்து மூலையில் போய் ஒண்டிக் கொண்டது கிளி.

''இடம் கிடம் எல்லாம் ஒழிச்சிருக்கறதைப் பாத்தா..''

''ஆமாம். புள்ளீங்க ஏதோ ஆசையாக் கொண்டு வச்சிருக்கு. நமக்கென்ன?'' என்று இடைமறித்தாள் அவள்.

ஒரு வாரமாகிறது. வீட்டிலேயே இஷ்டப்படி திரிந்துகொண் டிருந்தது அது. தாழ்வாரத்தின் ஒட்டில் நிற்கும். உள் வாசற்படியில் நிற்கும். குழாய்மேல் நிற்கும். நான் குளிக்கப் போகிறபோது வெந்நீர்த் தவலைமீது நிற்கும். என்னைக் கண்டவுடன் சறுக்கி இறங்கி அப்பால் போகும். தொடப் போனுல் ஓடும். ஓட இடம் இல்லாவிட்டால் அலகால் கொத்தும்.

இவ்வளவுதான் நான் அதைப்பற்றித் தெரிந்துகொண்டது. கொஞ்சம் கோபங்கூட. எனக்கு இஷ்டமில்லாமல் வந்திருக்கிறது அது. வெளியே கொண்டு தொலைக்கவும் முடியவில்லை. எதற்காகத் தொலைக்க வேண்டும்? வேண்டாத விருந்து எத்தனையோ வருகிறதே? அதையெல்லாம் தொலைக்கவா முடிகிறது? அதனுல்தான் யாரோ பையன் அதைப் பிடித்தபோது பற்றில்லாமல் நின்றேன்போலிருக்கிறது. கசாப்புக் கடைக்காரர் பிடுங்கிப்போனபோதுகூட நான் ஒன்றும் அசைந்துவிடவில்லை.

ஆனுல் இவள் பார்வை! ''பேசாம, என்னமோ சம்பந்தமே இல்லாதுபோலப் பாத்துக்கிட்டு நிக்கிறீங்களே! நம்முதுன்னு கொஞ்சமாவது இருக்கா உங்களுக்கு?'' அவள் கண் சொன்னதுதான் இது.

மறுபடியும் நாற்காலியை விட்டு எழுந்தேன். நடை உள்ளில் போய்ப் பார்த்தேன். கூடையின் அடி வழியாக மல்லாந்து படுத்தவாறு தள்ளித் தள்ளி வெளியே வர முயன்றுகொண் டிருந்தது கிளி. கூடையைத் தூக்கினேன். நிமிர்ந்து நின்றது. சரியாக மூடினேன். உள்ளே வந்து அரிசியை எடுத்து வந்து இறைத்தேன்.

''தக்காளிப்பழம் இருக்கா?''

''என்ன?''

''தக்காளிப்பழம் இருக்கான்னேன்.''

''எதுக்கு?''

''கிளிக்குத்தான்.''

''இல்லியே. இப்பத்தான் ரசத்திலே போட்டேன்.''

''கொஞ்சம் இதுக்கு வச்சிட்டுப் போடப்படாது?''

''ராத்திரிதான் ஒரு பழம் தின்னுருக்கே.''

''ராத்திரி தின்னப் போதுமா?'' என்று சொல்லவேண்டும் போலிருந்தது எனக்கு. அதற்குள் என் பாசத்தைக் காட்டிக்கொள்ள மனம் இல்லை. கடைக்குப் போனேன். தக்காளிப் பழம் வாங்கி வந்து போட்டேன். உரிக்காத நிலக்கடலை வாங்கிப் போட்டேன்.

கூடையை எடுத்துப் பார்த்தேன். ஒரு வாரமாக இருக்கிறதை இப்போதுதான் நன்ருகப் பார்க்கிறேன். பளபளவென்று கருமணிக் கண்கள். பக்கவாட்டில் கூடப் பார்க்கும் போல் இருக்கிறது. கிளிப்பச்சை இதுதானு? இறக்கை நறுக்கித்தான் இருந்தது. வாலைக் காணவில்லை. அதையும் நறுக்கியிருந்தது. இந்த மூக்குத்தான் எத்தனை பலம்! தொட்டேன்.

க்ராச் க்ராச் க்ராச்!—அம்மாடி!

இடக் கால் முட்டில் முறுக்கிவிட்ட மாதிரி வளைசல். எப்படித்தான் மனசுடன் திருகினர்களோ! தஞ்சாவூர் ரெயிலடியில் ஒரு பிச்சைக்காரன் வருவான். நல்ல வைர உடம்பு. கால் மட்டும் முக்கால் முழம் நீளந்தான் இருக்கும். அதிலும் ஒரு பல்லக்கு வளைவு. நடக்கும்போது உட்கார்ந்த வாக்கில் நடக்கிறது போலிருக்கும். உடல் வடக்கும் தெற்குமாக மாறி மாறிப் பார்த்து வரும். கிளி கிட்டத்தட்ட அந்த நடை போட்டது.

மறுநாள் சாயங்காலம் காரியாலயத்திலிருந்து வரும்போது விறகு அறையில் அதைக் காணவில்லை. கரிமூட்டையிடுக்கில் பார்த்தேன். பூட்ஸைத் தட்டித் தட்டிப் பார்த்தேன். என் அறையில் வந்து பார்த்தேன். அலமாரியில் புத்தகங்களுக்குப் பின்னல் இல்லை. குளிக்கிற அறையில் இல்லை. மாடி வளைவில் இல்லை. எங்கும் இல்லை.

''என்ன தேடுறீங்க, வந்ததும் வராததுமா?''

''ஒண்ணுமில்லெ.''

''சொல்லுங்களேன்.''

''ஒண்ணுமில்லே.''

''சுடியாரமா?''

''ம்ஹம்.''

''துண்டா?''

''இல்லை.''

''கிளின்னு சொல்லுங்களேன். அதோ பாருங்க.''

கிளி என் அறைக் கதவின் மேலுள்ள காற்றுப் போக்கியின் குறுக்குக் கம்பியின் மீது கூனி உட்கார்ந்திருந்தது. கால்பிடியையும் கூனலையும் பார்த்தால் அவதிப் பட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தது போல் தோன்றிற்று. கருமணியை உருட்டி என்னைப் பார்த்து விழித்தது. ''அங்கே எப்படிப் போச்சு?''

''மத்தியான்னம் சாப்பிட வந்துது புள்ளீங்க. மூங்கிக்கழியிலே உட்காந்திருந்திச்சு இது. அப்படியே குந்திப்பல தூக்கி அங்கே விட்டுது பெரிசு. இது அப்படியே கம்பியைப் புடிச்சுக்கிட்டுது. அப்போ புடிச்சு அப்படியே குந்தியிருக்கு.''

''மத்யான்னம் ரண்டு மணியிலேந்தா?''

''ஒன்னரை மணியே புடிச்சு.''

''ரொம்பக் கெட்டிக்காரிதான், போ.''

''என்ன?''

''பின்னே என்ன? உட்கார முடியாமத் தவிச்சிக்கிட்டிருக்கு. அப்படியே பாத்துக்கிட்டிருக்கியே நாலு மணி நேரமா?''

எழுதுகிற அட்டையை எடுத்துவந்து பிடித்தேன். பற்றி உட்கார்ந்தது கிளி. மெதுவாகக் கீழே பாதி இறக்குவதற்குள் சிறகடித்துத் தானே கீழே இறங்கி நடைபோட ஆரம்பித்தது.

''பாவம்! கூனிக் கூனி எப்படி அவதிப்பட்டுதோ? உங்க இரக்கமெல்லாம் வாயோட சரி.''

''சரி, காலைக் கழுவிக்கிட்டு வாங்க. உப்புமா வச்சிருக்குறேன்.''

''அது கிடக்கட்டும். அஞ்சு மணி நேரமாக் கழுவேத்தி வச்சிருந்தியே. அதுக்கு ஏதாவது கொடுத்தியா?''

''அதுக்குந்தான் போடப்போறேன். காலமே ஒரு முழுத் தக்காளி தின்னுது. ஒரு முட்டை அரிசி தின்னுது. நடுவிலே என்னத்தைத் திங்கப்போவுது?''

அப்புறம் வாசல் பக்கமே போகிறதில்லை அது. ஒரு நாள் பட்டது போதாதா? உள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கும். பெட்டியிடுக்கு மூலை, படுக்கையிடுக்கு-இங்கேதான் பார்க்கலாம். இரவு நேரத்தில் விறகு அறையில் கூடையைப் போட்டு மூடி, மேலே ஒரு செங்கல்லைப் பாரம் வைத்துவிடுகிறது. வீட்டில் பூனை நடமாட்டம் அதிகம். அதற்காக விறகு அறையின் ஜன்னல் கதவுகளையும் சாத்தி வைத்தார்கள். எனக்கும் காற்றுக் கிடைக்கவில்லை. என் அறை ஜன்னல் வாசல் பக்கம் பார்க்கிறது. பூனை அதன் வழியாக வருகிற வழக்கம் உண்டு. அதற்காகக் கீழ்க் கதவுகளைச் சாத்த வேண்டியிருந்தது. இரண்டு மாசமாகப் புழுங்கிப்போகிறது. வேறு வழி இல்லை.

காரியாலயத்துக்குப் புறப்படும்போது சைக்கிள் ரோதையில் மாட்டிக்கொண்டு விடுவது போல வந்து நிற்கும். சத்தம் போடாமல் விறகறையின் பலகைச் சுவரின் அடியில் நுழைந்து உள்ளே போகும்.

''ஜாக்ரதையாப் பாத்துக்க. அன்னிமாதிரி எங்கியாவது வாசல்லெ போய் நிக்கப்போவுது!''

''அதுவா? நல்லாப் போகுமே! இப்பல்லாம் படி தாண்டறதில்லே.''

''இருந்தாலும் பாத்துக்க.''

ஒருவாறு கவலை விடத்தான் விட்டது. அதற்கு வீடு பிடித்துவிட்டது. இரண்டு மாசமாக வாசல்பக்கமே எட்டிப் பார்க்கவில்லையாம்.

''யப்பா யப்பா'' என்று வந்தான் சின்னப்பையன், அன்று ஆபீசிலிருந்து வந்ததும்.

''என்னடா?''

''அண்ணன் வந்து கிளியை ஓங்கி மூக்கிலெ அடிச்சிட்டாம்பா கொம்பாலெ. ரத்தமாக் கொட்டு கொட்டுன்னு கொட்டிச்சு.''

''ரத்தம் கொட்டிச்சா? எதுக்கு அடிச்சான்?''

''சொன்னதைக் கேக்கல்லேன்னு அடிச்சான்பா.''

''எங்கே அந்தப் பய?''

''விளையாடப் போயிருக்கான்.''

''எங்க அடிச்சான்?''



''நீங்களே பாருங்க....எப்படி வந்து ஒண்டிக்குது....''

''மூக்கிலெ. அப்படியே ரத்தமாக் கொட்டு கொட்டுன்னு கொட்டிப்புடிச்சு'' என்று மூக்கையும் புருவத்தையும் சுளுக்கினுன் அவன்.

போய்க் கூடையைத் தூக்கினேன். கிளி அருண்டு போய் நகர்ந்தது. மூக்கின்மேல் ரத்தம் கசிந்த பொருக்குத் தெரிந்தது.

''பேசு பேசுன்னு சொல்லிக்கிட்டே யிருந்தான். ரங்கா ரங்கான்னுன். பிடிக்கப் போனுன். சொல்லல்லே. ஓங்கி அடிச்சுப் பிட்டுது பிசாசு'' என்றுள் மனைவி.

''ரத்தமாக் கொட்டிச்சுப்பா.''

''ஆமாம், ரத்தம் கொட்டவும் இல்லே, ஒண்ணுமில்லே. துளியூண்டு கசிஞ்சுச்சு.. இது ஒண்ணுன்னு நூறுங்கும்.''

இருட்டுகிற சமயத்திற்கு வந்தான் பெரிய பையன்.

''எலே, இஞ்ச வாடா....கிளியை அடிச்சியாமே....அடிச்சியா?''

''ஆமாம்.''

''எதுக்குடா அடிச்சே?''

''அது என்னைக் கொத்திச்சு. இதைப் பாருங்க'' என்று ஒரு சிராய்ப்பைக் காண்பித்தான்.

''உன்னை எதுக்குக் கொத்திச்சு அது?''

''பேசு பேசுன்னேன். பேசலே. கையாலெ சும்மா மெள்ளமாத் தட்டினேன். அதுக்காகக் கொத்திச்சு. அடிச்சேன்.''

''எதாலே?''

''கொம்பாலே?''

மேஜைமீது கிடந்த விசிறிக்காம்பால் பொட்டென்று அவன் முகத்தில் அடித்தேன். ''ஐயூஐயூ ஐயூஐயூ'' என்று கீழே விழுந்து துடித்தான். வீரிட்டான். மூக்கில் பட்டுவிட்டது.

''என்னுடா அங்கே?'' என்று ஓடி வந்தாள் அவள்.

''உன்னை அடிச்சா எப்படிடா இருக்கு?.. எப்படிடால இருக்கு?....''

அவள் வாயைத் திறக்கவில்லை. ''அதுக்காக இப்படி அடிக்கலாமா?'' என்று ஒரு பார்வை. ''அதுக்கு மேலே நீங்களும் முட்டாளா இருக்கிங்களே'' என்ற பார்வை.

''அதை வீட்டிலெ கொண்ணுந்து வச்சு ஏண்டா இப்படிக் கொல்லுறே?'' என்று கடைசிச் சத்தமாகப் போட்டு என் அறிவீனத்தை மறைத்துக்கொண்டு உள்ளே வந்து உட்கார்ந்தேன்.

பெரிய பையனும் மாறிவிட்டான். அன்றிலிருந்து பாயைச் சுவரிலிருந்து சற்றுத் தள்ளிப் போட்டுக்கொண்டு தலைமாட்டிலேயே கூடையைப் போட்டுக் கிளியை மூடிப் படுத்துக் கொள்வான்.

நானும் நடுநிசியில் விழித்து எழுந்தால் விளக்கைப் போட்டுக் கூடையைத் தூக்கிப் பார்ப்பேன். பளபளவென்று கருமணிவிழியை உருட்டிப் பார்க்கும் அது. முதல் ஜாமத்தில்

போட்ட தக்காளிப் பழத்தில் பாதி முடிந் திருக்கும். அரிசி இறைத்த சுவடு தெரியாது.

''தக்காளிப் பளமா போடறீங்க?'' என்று மாடியிலே குடியிருக்கிற அம்மாள் கேட்டாள்.

''ஆமாம்.''

''கிளிக்கு மொளவாப்பளம், கோவைப்பளம் —இதெல்லாம் போடுவாங்க.''

''மொளவாப்பளமா?''

''ஆமாம்.''

''உறைக்காது?''

''அது என்ன, மனுசங்களா?''

மிளகாய்ப் பழம் போடத் தைரியம் இல்லை. கோவைப் பழமே போடுவதாக முடிவாயிற்று. மார்க்கட்டில் கோவைக்காய்தான் கிடைத் தது. ஆபீஸ் சேவகனிடம் சொன்னேன். நாளைக்கு நாளைக்கு என்று பதினைந்து நாள் சொல்லிவிட்டுக் கடைசியிலே ஒரு பொட்ட ணத்தில் ஏழெட்டுப் பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். எப்படியோ, கிளிக்கு ஆகாரம் கிடைத்துவிட்டது. நம்மைப் போய்ச் சோற்றுக் குப் பதிலாகப் பூரியும் ரொட்டியும் சாப்பிடு என்றால் எப்படி இருக்கும்? அது மாதிரிதானே?

நல்ல கெட்டிக் காகிதத்தில் கோவைப் பழங்களைப் போட்டுக் கட்டி, நசுங்கிவிடாமல் கைப்பிடியிலே சணலால் தொங்கவிட்டு வந் தேன்.

''என்னப்பா இது?'' என்று சின்னப் பையன் ஓடிவந்து பொட்டணத்தைப் பிடித் தான்.

''கோவைப்பழம்....கிளிக்குக் கொண்டு போடு.''

''கிளி போயிடிச்சுப்பா!'' என்று உற்சாக மாகக் கத்தினான் அவன்.

''எங்கடா போச்சு?''

''போயிடிச்சு. ஆமாம்'' என்று இன்னும் உற்சாகத்துடன் கத்தினான் அவன்.

''எங்கடா போயிடுச்சு?''

''பட்சி சாஸ்திரக்காரன் வந்தான். பட்சி சாஸ்திரம் பட்சி சாஸ்திரம்னிட்டுக் கத்தினான் பாரு. கிளி விறகு அறையிலேருந்து வந்திச்சு. படபடன்னு அவன் பொட்டிமேலே போய் உக்காந்துக்கிச்சு. போயே போயிடிச்சு.... அம்மாகூடப் போய்க் கூப்பிட்டுது. வரவே இல்லை. இல்லேம்மா?'' என்று வாசலில் வந்த அம்மாவிடம் கேட்டான்.

''என்ன இது?''

''ஆமாம்.''

அவள் முகத்தில் ஈயாடவில்லை. குரல்கூடக் கம்மிக் கிடந்தது. அழுதாளா என்ன?

''என்ன ஆச்சு?''

''பட்சி சாஸ்திரம் பட்சி சாஸ்திரம்னு கூவிக்கிட்டுப் போனான் ஒருத்தன். இது உள் ளார இருந்திச்சு. கூடை போட்டு மூடலெ. அதான் பகல் முளுக்க வீடு முழுக்கத் திரி யுமே. சத்தம் கேட்டுது. நான்கூட உள்ள இருந்து பாத்துக்கிட்டே யிருந்தேன். அது காலை வளைச்சு வளைச்சுக்கிட்டு வேகமாப் போச்சு. நிலையைத் தாண்டிச்சு. படபடன்னு பறந்திச்சு. உள்ளேருந்து ஓடிவந்தேன். அவன் தோளிலே ஒரு பொட்டி மாட்டிக்கிட்டிருந்தான். அது மேலே போய் உக்காந்திருந்திச்சு....'' அவ ளுக்கு மேலே பேச முடியவில்லை. சுதாரித்துக் கொண்டு செய்தியைச் சொல்ல இரண்டு நிமிஷம் பிடித்தது.

கிளி பிறகு பட்சி சாஸ்திரக்காரன் கை மேலேயே உட்கார்ந்து கொண்டதாம். ''அட, நீ எங்கடா வந்தே ராசா?'' என்றானும் அவன், ஆச்சரியம் தாங்காமல். ''இந்தாய்யா'' என்று கூப்பிட்டாளாம் என் மனைவி.

''உங்களுதா இது?''

''ஆமாம்.''

''எத்தினி நாளா இருக்கு?''

''ரொம்ப நாளா இருக்கு.''

''எத்தினி நாளுன்னு சொல்லுங்களேன். தெரிஞ்சுக்கறதுக்காகக் கேக்கறேன்.''

''ரெண்டு மாசம் இருக்கும்.''

''பாத்தீங்களா? ரெண்டு மாசமாத்தான் காணும் இதை. தேனும்பேட்டையிலே மரத் தடிலே சாஸ்திரம் சொல்லிப்பிட்டு அசந்திட் டேன். நல்ல வெயிலு. இது இப்படித் தத்திக் கிட்டு இருந்திச்சு. முளிச்சுப்பாத்தாக் காணும். குறப் பய ஒருத்தன் சுத்திக்கிட்டிருந்தான். லாவிட்டான் போலிருக்கு. பைத்தியம் புடிச் சாப்பல ஆயிடிச்சு எனக்கு. பாருங்க, உண்மையாப் பிரியம் வச்சா....நீங்களே பாருங்க, எப்படி வந்து ஒண்டிக்குது!''

இவள் கூப்பிடக் கூப்பிட அது வர மறுத்த தாம். விறகு அறையில் கொண்டுவிட்டா னும் அவன். க்ராச் க்ராச்சென்று சித்திர வதை செய்கிறுப்போலக் கத்திற்றும். இதுவரையிலே கத்தாத கத்தல்.

''பாத்தீங்களாம்மா. அது இருக்காதும்மா. என் குரல் தெரியும். பச்சைப் புள்ளியிலே ருந்து வளருது. மறந்திருமா? எனக்கும் அது போனதிலேர்ந்து தொளிலே சரியா நடக்கலெ. நீங்க எது கேட்டாலும் தந்திடறேன்.''

அவன் சொல்லும்போதே கிளி கூண்டுப் பெட்டியின் கம்பியைக் கவ்விக் கவ்வி நின்றதாம். சரி என்று விட்டு விட்டாளாம் இவள்.

''ரெண்டு மாசமாப் பளமும் பாலும் தின்னுக்கிட்டுக் கிடந்ததே. ஒட்டிச்சா? கிட் டப்போனா என்னமோ அடிக்க வந்தாப்பல பதுங்கிப் பதுங்கி மாமாலங்களாம் பண் ணிச்சே. அவன் சட்டைக் கையிலே பூந்துக் கிட்டு வரவே மாட்டேனிடிச்சு....ரோடு வரைக்கும் ஒரு தாவாத் தாவிப் பறந்துதே, அதைப் பார்த்தால்ல தெரியும்? நன்றிகெட்ட ஜென்மம்!....உறவு கொண்டாடிட்டு அது பசப்பினதைப் பாக்கணுமே. குழைஞ்சு குழைஞ்சு கூவுறதும் குதிக்கறதும்....ஒழிஞ் சுது. ரெண்டு மாசக் கடன்....அது என்ன மூட்டை?''

''கோவைப் பளம்.''

''கோவைப் பளம் திங்கிற ஜன்மத்துக்கு தித்திக்கிற அறிவா இருக்கப்போவுது? சனி யன்!''

நானும் பிரமை பிடித்தாற்போல உள்ளே வந்தேன். கால்சராய், சட்டைகளைக் கழற்றி விட்டு, முகங் கழுவ வந்தபோது, கிளிக்குப் பால் வார்த்த கிண்ணமும், நீர் வார்த்த பழைய பல்பொடி டப்பாவும் குழாயடியில் தேய்த்துக் கழுவி வைத்திருந்தன. ★

வல்லவன் வரைந்த சித்திரம்போல்

தனித்தன்மை

வாய்ந்தவை

நல்லவற்றையே நாடும் பண்புள்ள வாடிக்கைக்காரர்களுக்குப் பூரண திருப்தி ஏற்படுத்தும் வகையில், மேட்டூர் மல்களும், லாங்கிளாத்களும் தயாரிக்கப்படுகின்றன.

தரத்தின் தன்மை ஒருபொழுதும் குறையாமல், நிர்ணயிக்கப் பட்ட, சிக்கனமான விலைகளில், எல்லாப் பிரதான ஜவுளி வியாபாரிகளிடமும் எப்பொழுதும் கிடைக்கும்.

மேட்டூர் மல்கள் & லாங்கிளாத்கள்

METTUR INDUSTRIES LTD. METTUR MULL

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்,
மேட்டூர் அணை — சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜண்டுகள் :

W. A. பியர்ட்ஸெல் & கம்பெனி பிரைவேட் லிட்., மதராஸ் - 1.

நன்றாக நித்திரை செய்து உங்கள் சக்தியை புதுப்பியுங்கள்

நல்ல ஆழ்ந்த நித்திரை உங்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. ஏனெனில், நித்திரை செய்யும்போது உங்கள் தேகம் மற்றும் மூளை இவைகள் புத்துயிர் பெற்று பலமூட்டப்படுகிறது. உறங்குமுன் ஒரு கப் 'ஒவல்டின்' பருகுவது சரியான தூக்கத்தை யளிக்க உதவுகிறது. இது நரம்புகளுக்கு இதமளிக்கிறது. அத்துடன் சுலபமாக ஜீர்ணிக்கும் உருவில் தேவையான ஜீவசக்தியளிக்கும் போஷாக்கை சப்ளை செய்கிறது.

இந்தப் போஷாக்கு, மிகச் சிறந்த உணவுப் பொருள்களுடன் அதிகப்படி வைடமின்களின் சேர்க்கையினால் கிடைக்கிறது. 'ஒவல்டின்'னில் அடங்கியுள்ள வைடமின் பொருள்கள் விசேஷ முக்கியத்வம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ருசிமிக்க 'ஒவல்டின்'ஐ உறங்குமுன் - பருகும் - பானமாகத் தவறாமல் கொள்ளவும்.

ரேடியோ ஸிலோனில் ஒவல்டின் அமெச்சூர் நிகழ்ச்சி (ஹிந்தி 41.72 மீட்டர்கள்) சனி மாலை 8 to 8-30; (ஆங்கிலம்-9520 கிலோசைக்கிள்ஸ், 31 மீட்டர்கள்) ஞாயிறு மாலை 8 to 8-30.

பிரதியொரு தினமும் ஆரோக்கிய மயமான

ஒவல்டின்

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

ஜானகி

தி.ஜா.

வாசலிலே வண்டி வந்துவிட்டது. ஜானகி முதல் முதலாகப் புக்ககம் போகப் புறப்பட வேண்டும்.

கூடத்திலே சுவரில் மாட்டியிருந்த பெரிய நிலைக் கண்ணாடிக்கு முன்னே ஜானகி நின்று கொண்டிருந்தாள். கண்களில் ததும்பிய நீரை யாரும் அறியாமல் கைக் குட்டையால் அவள் துடைத்துக் கொண்டாள். அவளுடைய உள்ளத்திலே உணர்ச்சி நிறைந்திருந்தது. அது வேதனையா? ஆனந்தமா? அவள் உடலிலே ஒரு பரபரப்பு இருந்தது. அதன் காரணம் பயமா? பெருமிதமா? ஒன்றும் சொல்ல முடியாது; அவளாலேயே சொல்ல முடியாது.

நடந்ததோ விசித்திரக் கல்யாணம். மணமகனா....? யார் அவன்? அப்படி ஒன்றும் அந்நியன் அல்ல. அறியாப் பருவத்திலே கூடப் பழகியவன்தான். இருந்தாலும், இப்போது அவனைப்பற்றி நினைக்க நினைக்க, புரியாத புதிரைப் போல் தோன்றுகிறான்.

''ஜானகீ!''

இது அண்ணாவின் குரல். அவன்தான் அவளைக் கணவன் வீட்டில் கொண்டுபோய் விடப் போகிறான்.

''இதோ வந்துவிட்டேன், அண்ணா.''

இன்னமும் அவள் நிலைக் கண்ணாடியைத் தான் பார்த்துக்கொண் டிருந்தாள். வகிட்டின் தொடக்கத்தில் இரு புறமும் வளைந்து உப்பியிருந்த மயிரை மெல்ல ஒற்றிவிட்டுக்கொண்டாள். ஒரே ஒரு பெரிய ரோஜாப்பூ மட்டுமே பின் தலையில் செருகியிருந்தாள். அதை மெதுவாகத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள். அப்போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அவனுக்குத் தலை வலித்ததோ இல்லையோ, இவளுக்கு மனம் வலித்தது; உண்மையை உணரும் வரைக்கும்.

அதை அடக்கவே அது புன்சிரிப்பாக முகத்திலே மலர்ந்தது.

''இதற்குச் சற்று மேலேதான் அந்தக் குட்டு'' என்று முணுமுணுத்து, தனக்குத் தானே உச்சந்தலையைச் சுட்டிக் காட்டிக் கொண்டாள்.

ஜானகி கண்ணுக்கு மை இட்டுக்கொள்ளவில்லை. அவள் கண்ணிமை நுனி இயற்கையாகவே சற்று மயிலை பாய்ந்திருந்தது. அவளுக்கு எதற்கு மை? நெற்றியிலே எள்ளைப் போல் சின்னஞ்சிறு செஞ்சாந்துப் பொட்டு மிக நயமாய் அமைந்திருந்தது. இதென்ன, எதிரே வந்து அவன் நிற்பதுபோல இப்படி அவள் எதற்காக அழகு பார்த்துக்கொள்ள வேண்டும்?

''ஜானகீ, நேரமாகிவிட்டது.''

மறுபடியும் அண்ணா அவசரப்படுத்தினான்.

ஜானகி தயாராகிவிட்டாள். தாத்தாவை முதல் முதல் நமஸ்கரித்தாள்.

சின்ன வயசில் தாத்தாவிடந்தான் இருவரும்-ஜானகியும் சௌரியும்-வளர்ந்தார்கள். ஜானகியின் கணவன் சௌரிதான்.

சௌரி, அவருக்குப் பிள்ளை வயிற்றுப் பேரன்; ஜானகி பெண் வயிற்றுப் பேத்தி. சௌரி ஏழாம் வகுப்புப் படித்த போது, ஜானகி மூன்றாம் வகுப்புப் படித்தாள். இப்போ

தல்லவா சௌரி பி. ஏ. யில் முதல் தரமாய்த் தேறி, பி.எல். படித்து வக்கீல் தொழில் தொடங்கி யிருக்கிறான்? நல்ல புத்திமான் என்று இப்போது அவனை எல்லாரும் புகழ்கிறார்கள். 'விளையும் பயிர் முளையிலே' என்பது, தவறாத தத்துவம் அல்ல. அப்படியிருந்தால் அன்றிருந்த நோஞ்சல் சௌரி, இன்று இந்த நிலை அடைவானா?

தாத்தா இரண்டு பேருக்கும் மனக்கணக்குப் போடுவார். ஏழாம் வகுப்புச் சௌரிக்கும் மூன்றாம் வகுப்பு ஜானகிக்கும் ஒரே கணக்கைப் போடுவார். ஜானகி சரியான விடை சொன்னால், தப்பு விடை சொன்ன சௌரியின் தலையில் குட்ட வேண்டும். சௌரி சரியாகச் சொல்லி, ஜானகி தவறினால், அவள் தலையில் அவன் குட்ட வேண்டும். இருவரும் சரியாகச் சொன்னால், யாரும் யார் தலையிலும் குட்ட வேண்டாம். இருவரும் தவறினால், இருவர் தலையிலும் தாத்தாவே குட்டிவிடுவார். ஜானகியிடம் சௌரி எத்தனை குட்டு வாங்கியிருக்கிறான்! அவளுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தினம் தவறாமல் அவனை ஜானகி குட்டியிருக்கிறாள். இன்று வரைக்கும் சௌரியிடம் ஜானகி ஒரே ஒரு குட்டுத்தான் வாங்கியிருக்கிறாள். மனக் கணக்கின் போது அல்ல. எட்டு மாசத்துக்கு முன் கல்யாணம் நடந்ததே, அந்த விநோதக் கல்யாணத்தின் போது, நலுங்கில் அப்பளம் உடைக்கிற சாக்கில் குறும்புச் சிரிப்புடன் ஜானகியின் தலையிலே சௌரி குட்டிவிட்டான். ஏன் அப்படிக் குட்டினான்? அப்போது ஏன் அப்படிச் சொன்னான்? ''இது அச்சாரம்'' என்றானே! இன்னமும் வன்மம் வைத்துக்கொண்டிருக்கிறானோ? அவன் முந்திச் சொன்னதெல்லாம் உண்மைதானோ? ஆனாலும், அப்படி ஒன்றும் பலமாய்க் குட்டிவிடவில்லை. அந்தச் சிரிப்பிலே கள்ளத்தனம் இல்லை. குட்டை வாங்கியபோது அவள் கூடச் சிரித்துவிட்டாள். என்றாலும் பக்கத்தில் இருந்த குட்டிகளெல்லாம் செய்த அட்டகாசத்தில் ஜானகிக்குச் சற்று எரிச்சல் வரத்தான் வந்தது. அப்படியே அவன் கன்னத்தைத் தொட்டு நிமிண்டிவிடலாமா என்று கூடத் தோன்றியது. என்ன கதுகதுப்பான கன்னம்! அவன் அழகன். அவனைச் சீக்கிரம் போய்ப் பார்க்க வேண்டும் என்று இப்போது உள்ளத்திலே எவ்வளவு ஆவல் பொங்குகிறது!

தாத்தாவை நமஸ்கரித்து எழுந்தவள் மீண்டும் பின்தலை ரோஜாப்பூவைச் சரியாய் நகர்த்தி விட்டுக்கொண்டாள்.

''ஆயிரங் காலத்துப் பயிராய் வாழ வேண்டும். மகராஜியாய்ப் போய் வா. சமர்த்தாய் நடந்துகொள். இப்போது அவன் உன் விளையாட்டுத் தோழன் அல்ல; கணவன். இருந்தாலும் இரண்டு பேரும் சிறிசுகள். எதையும் மாமி சொல்லைக் கேட்டுச் செய்ய வேண்டும். என் மருமகள்தான் அவள். இருந்தாலும், கல்யாணத்தின்போது என்ன பாடு படுத்திவிட்டாள், பார்த்தாயா? என்ன இருந்தாலும் மகன் இல்லாத போது மருமகள் அந்நியப் பெண்தான்......''

தாத்தா கார்த்திகைப் பொரி போல் பொரிந்து தள்ளத் தொடங்கிவிட்டார். சௌரி தகப்பனில்லாத பையன்; ஜானகி தாயில்லாத பெண். தம் சொந்த மகனும் மகளும் இந்த இன்ப நிகழ்ச்சியைக் காணக் கொடுத்து வைக்காததைப் பற்றியெல்லாம் தாத்தாவின் உள்ளம் எண்ணி நைந்ததுபோல் தோன்றியது.

ஆமாம்; கல்யாணத்தின்போது, தங்கம்மாள் - சௌரியின் தாய்- ஜானகியின் பழைய புதிய மாமி-படாப்பாடுதான் படுத்திவிட்டாள். நின்ற கல்யாணத்துக்குப் பதில் கல்யாணமான இவர்கள் கல்யாணம்....பந்தல் வீண் போகாதிருப்பதற்காக நிச்சயித்த இவர்கள் கல்யாணம்....இதுவுமே மாமியின் பிடிவாதத்தால் நின்றுவிடும்போல் இருந்தது. எப்போதும் பசுப்போல் இருக்கும் மாமி, முகூர்த்த சமயத்தில், எப்படி மூர்க்கமாக நடந்து கொண்டாள்! என்னதான் அப்படிப் பெரிய குற்றம் நடந்துவிட்டது? ஆறு பவுன் கொலுசிலே அரைப் பவுன் குறைந்துவிட்டதாம்! அதற்காக அவ்வளவு அமர்க்களம்! அவளா பூட்டிக்கொள்ளப் போகிறாள்? பூண்கிறவள் ஜானகி. ஆனாலும் கொலுசு அவளுடைய பிள்ளையின் சொத்தாம். கொலுசென்ன? ஜானகியுமே அவன் சொத்துத்தானே? ஜானகி அதை மறுக்கவில்லை. ஆனால் அவனும் இனி அவள் சொத்து; தங்கம்மாளின் கையை விட்டு நழுவிய சொத்து! சேசே! இது சற்று மோசமான அபிப்பிராயம். இப்படியெல்லாம் நினைப்பது தவறு. ஆசை வேறே; அன்பு வேறே. மனிதர்களுக்கு ஆசை கூடாது; அன்பு வேண்டும். ஆசை நாசத்துக்கு வழி; அன்பே ஆக்கம் தரும்.

''இன்னும் என்ன, சுணங்கிச் சுணங்கி நிற்கிறாய்? கிளம்பு'' என்றான் அண்ணன் சந்தானம்.

''இதோ!''

ஜானகி புறப்பட்டாள். வண்டியில் போய் உட்கார்ந்தாள். பெட்டி, படுக்கைகளை எடுத்து வைத்து, சந்தானமும் வண்டியில் ஏறிக் கொண்டான்.

வண்டி நகர்ந்தது.

''கொஞ்சம் தட்டி ஓட்டப்பா. எட்டரைக்குள் ஸ்டேஷனுக்குப் போயாக வேண்டும். பெண் என்றால் எல்லாரும் ஒரே தினுசுதான். பிரயாணம் புறப்படும்போது, எங்கிருந்துதான் வருகிறதோ இந்த மசமசப்பு! எல்லாப் பெண்ணுமே இப்படி'' என்றான் சந்தானம்.

''ஹை! ஹை!'' என்று விரட்டினான் வண்டிக்காரன். சதங்கை ஒலிக்க மாடுகள் ஓடின.

''வாயில்லாப் பிராணிகள்! இப்படி ஏன் ஓட்ட வேண்டும்? இன்னும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறதே!'' என்றாள் ஜானகி.

''எல்லாம் மெட்ராஸுக்குப் போனால், உன் கணவன் டாக்ஸி வைத்துக்கொண்டு வந்து நிற்பான். கொஞ்ச நாளில் காரே வாங்கினாலும் வாங்கிவிடுவான். நினைத்த இடத்துக்கு ஐந்து நிமிஷத்தில் போய்ச் சேரலாம். இங்கே மாட்டு வண்டியில் போகும் போது, ஒரு மணி நேரம் முன்னதாகவே புறப்பட வேண்டும்'' என்றான் சந்தானம்.

அவன் அதிகமாகப் பேசும் வழக்கம் இல்லை. கண்டிப்பான பேச்சுக்காரன். இருந்தாலும் சற்று நேரம் எங்கோ ஞாபகமாக இருந்துவிட்டு, பிறகு திடுதிப்பென்று, ''மூன்று மாசத்தில் திரும்பி வரப் போகிறாயே, அப்

போது சொந்தக் காரில் நேரே வந்து விடு. எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் மசகி மசகி நின்று கொண்டிருக்கலாம்'' என்றுன்.

''அலமு கல்யாணம் வாஸ்தவந்தானு, அண்ணு?''

''நிச்சயமாகிவிட்டது. இந்தத் தடவை எந்தத் தகராறும் இல்லை, வராது.''



முதலில் புக்ககம் போகும்போது அவள் மனத்திலே....

தாயாதி வீட்டுப் பெண்ணுன இந்த அலமுவின் கல்யாணந்தான் போன வருஷம் கடைசி நேரத்தில் தடைப்பட்டது. அதுவும் சொந்தத்தில் நிச்சயமான வரன்தான். மாப்பிள்ளை வருவான் வருவான் என்று எதிர் பார்த்து, வரவில்லை. கல்யாணம் என்றுலே 'கலசல்' செய்வதில் சில பேருக்கு ஓர் ஆனந்தம். கண் காணுத இடத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அவனை எப்படியோ யாரோ கலைத்து விட்டார்கள். ''வர முடியாது'' என்று இரண்டே வார்த்தை தந்தி சொல்லிவிட்டான். முன்னும் இல்லை; பின்னும் இல்லை. மொட்டையாக ஒரு தந்தி!

தாயாதி வீட்டுக் கல்யாணம் அல்லவா? தாயுடன் சௌரி வந்திருந்தான். ஜானகியோ தாத்தாவின் வீடே சொந்த வீடாக வாழ்கிற வள்.

போட்ட மணையும் இட்ட பந்தலும் வீணுவானேன்? 'இதுகள் இரண்டுக்கும் முடி போட்டு விடலாமே' என்று எண்ணினுர் தாத்தா. இது புதிய யோசனை அல்ல. இவர்களின் சிறு பிராயத்திலிருந்தே பாதி கேலியும் பாதி உண்மையுமாகப் பேசி வந்த பேச்சுத்தான். ரூபாய் அணு பைசா, பாரம் மணங்கு வீசை, கலம் மரக்கால் படி இந்த மனக் கணக்கெல்லாம் போடும்போது, சௌரி தலையில் நறுக்கென்று ஜானகி குட்டு வைத்ததும் அவன் முகம் சிணுங்கி 'அப்பாடா' என்று தலையைத் தடவிக்கொள்வான். உடனே தாத்தா செல்வச் சிரிப்புடன், ''இந்தாடி குட்டி, இப்படிக் குட்டாதே. தலை வீங்கிவிடும்போல் இருக்கிறதே! நாளைக்கு உனக்குத் தாலி கட்டப் போகிறவன் அவன்தான். அப்புறம் ....'' என்பார் தாத்தா.

''ஐயே! இந்த அசட்டை நான் கட்டிக் கொள்ள மாட்டேன். எவளாவது கட்டிக் கொண்டு அழட்டும்'' என்று ஜானகி துடுக்குத்தனமாகப் பதில் சொல்லுவாள்.

அது எல்லாரும் ஒன்றுக ஊரிலே இருந்த காலம். தங்கம்மாள் இதை யெல்லாம் பார்த்து, மனத்திலே விகல்பமாக என்ன நினைத்தாளோ நினைக்கவில்லையோ; வெளிக்குக் காட்டிக்கொள்ள மாட்டாள். நாத்தி மகளைச் சொந்த மகள் போல்தான் பாவித்து நடத்தினுள். அன்றே சௌரி அழகாக இருப்பான். ஆனுல் சோனி. ''ஆளழகா துப்படிக்காரா!'' என்று எல்லாரும் அவனைக் கேலி செய்வார்கள். அதே சௌரி இப்போது ஜானகியின் கணவனுகி விட்டான்!

ஸ்டேஷன் வந்து ரெயில் வண்டியில் ஏறியாயிற்று. இரண்டாம் வகுப்புப் பெட்டி. கீழ் பெர்த்தும் மேல் பெர்த்துமாக இரண்டு இவர்களுக்குக் கிடைத்தன.

ஜானகி படுத்துக்கொண்டாள். தூக்கம் வரவில்லை. கடக்-கடக், கடக்-கடக், கடகடக்....இது....தலை வேதனை....பாட்டுக்கு அணைகட்டும் தாளமா என்ன?

''அண்ணு, தூங்கிவிட்டாயா?''

''இல்லை. தூக்கம் கண் இமையைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. என்ன விஷயம்?''

''ஒன்றும் இல்லை. முதல் வகுப்பு வண்டிதான். என்றுலும் என்ன ஆட்டம் ஆடுகிறது! என்ன கடகடப்பு!''

''புதிய வண்டியாயிருந்தால், ஆட்டம் ஒரு வேளை குறையலாம். கடகடச் சப்தம் போகாது.''

''ஏன்?''

''சக்கரம் ஒரு தண்டவாளத் துண்டை விட்டு, மறு தண்டவாளத் துண்டுக்குத் தாவும் போது, பட் என்று ஒரு குட்டு வைக்கிறது.''

குட்டு! குட்டா? அண்ணு ஏதாவது அகட விகடமாகப் பேசுகிருனே? இவளுடைய மனத்திலே, இப்படி முதல் முதலாகப் புக்க கம் போகும்போது அந்தச் சின்னஞ்சிறு வயசு நிகழ்ச்சி பற்றிய கருத்தே மேலோங்கி நிற்கிறதே! இது எல்லாருக்கும் தெரிந்துவிட்டதோ?

ஜானகி ஏன் இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டாள்? அவன் ஒப்புக் கொண்டான். ஆண் பிள்ளை. இவள் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றிருந்தால், யாரும் இவளை வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். முகூர்த்தம் நடக்கிற வரைக்கும் ஜானகிக்கு அந்தப் பழைய ஞாபகமே வரவில்லை. நேற்று வரைக்குங் கூட அவ்வளவாக அது மனத்தை உறுத்தவில்லை. இப்பொழுது இவ்வளவு பலத்துவிட்டதே!

கல்யாணத்தைப் பெரியவர்கள் நிச்சயித்த போது, இவள் சந்தோஷமாகவே இருந்தாள். அவனும் சந்தோஷமாக இருப்பதாய்த்தான் தோன்றினுன். மாலை மாற்றும்போது, அவன் விழிகள் எவ்வளவு ஒளியுடன் இருந்தன! பழைய சோனியாக அவன் இல்லை. பந்து விளையாட்டா, கோலியாட்டமா, நொண்டி நொடிப்பதா, கிளிக்கோடு தாண்டுவதா, பலீன் சடுகுடு ஆடுவதா - எதிலும் சோனி! படிப்பில் மட்டுமா சோனி? எல்லாவற்றிலுந்தான்; சாப்பாட்டில் கூடத்தான். அந்தக் காலத்தில் உணவிலும் சௌரிக்குப் பிடித்தம் இல்லை. எதிலும் பிடிப்பற்றவனுக இருந்தான். அப்படிப்பட்டவன் எப்படிச் சிறந்த புத்திமானுனுன்? கல்லூரிப் பரீட்சைகளிலே சிறப்பாய்த் தேறியது எப்படி? அத்தனையும் ஆச்சரியந்தான்.

மேல் படிப்புக்காகப் பட்டணம் போனபிறகு பல முறை அவன் கிராமத்துக்கு வந்திருக்கிருன். அப்போதெல்லாம் சகஜமாகத்தான் பழகினுன். இல்லை; மிக அன்போடு பழகினுன். 'தூரத்துப் பச்சை கண்ணுக்கினிமை' என்பது தான் காரணமோ என்னவோ, இவளுக்கும் வர வர அவனிடம் மதிப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. மனக் கணக்கு நாட்கள் - அந்தக் கேலியும் துடுக்கும் - அவை பற்றிய ஞாபகம் மனத்திலே நிறமிழந்து வலிவிழந்து மங்கிவிட்டன என்றே சொல்லலாம். இப்போதெல்லாம் இருவருக்கும் 'முடி' போடுவது பற்றித் தாத்தா அதிகமாய் வாய் விட்டுப் பிரஸ்தாபித்ததில்லை. ஆனுல் மனத்திலே வைத்துக்கொண் டிருந்திருப்பார். சமயம் வந்தது; சட்டென்று மங்கள காரியம் நிறைவேறி விட்டது.

இன்று புக்ககத்துக்குப் புறப்படும் வரையில், ஜானகி தன் கல்யாணத்தைப் பற்றிப் பூரிப்புடனேயே இருந்தாள். தன் கணவனின் உருவையும் குணத்தையும் தனக்கு வரப் போகும் புது வாழ்வையும் பற்றி இன்பக் கற்பனைகளையே செய்துகொண் டிருந்தாள். புறப்படும் போதுதான் அந்தப் பழைய நாளின் நினைப்பு வந்தது; திடீரென்று பச்சைப் பசேல் என்று திரண்டெழுந்தது.

அப்போது ஒரு நாள் குட்டு அவனுக்கு மிகவும் வலித்து விட்டது போலிருக்கிறது. தாத்தாவோ, அம்மாவோ, அத்தை புருஷனே இல்லாத சமயத்தில், ''இரு, கழுதை! எனக்கும் ஒரு காலம் வரும். அப்போது உன்னை என்ன பாடு படுத்துகிறேன், பார். இத்தனைக்கும் வட்டியும் முதலுமாய்த் தருகிறேன். இதை என் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறேன்; ரகசியமாய் அதைப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறேன்'' என்று அவன் சொன்னுன். ஆமாம், இப்படித்தான் - இதே வார்த்தைகளைத்தான் - சொன்னுன். ஜானகிக்கு மிக நன்ருய் ஞாபகம் இருக்கிறது.

கடக்-கடக், கட கடக்....

சப்தம் என்ன கோரமாகத்தான் இருக்கட்டுமே; தொடர்ந்து, தாளப் பிரமாணத்தோடு அது எழும்போது, அதற்கு ஒரு சக்தி இருக்கிறது. காதில் படும் தாள ஒலி, கண்ணை எப்படியோ அயர்த்திவிடுகிறது. உம்.. தூக்கம்..ஜானகி தூங்கிவிட்டாள். அப்புறம் வண்டி பட்டணத்தை அடைந்து, பலபல என்று பொழுது விடிந்ததுதான் தெரியும்.

''ஜானகி!''

அண்ணுவின் குரலா? இல்லை, இல்லை. சௌரியின் குரல்! மாலையிட்ட மணாளனின் குரல்! வாய் நிறைந்த குரல்! அதில் ஒன்றும் களங்கம் தட்டியதாகத் தோன்றவில்லை. மணியோசை போல் அது கணீர் என்று இருந்தது.

ஜானகி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். கண் மட்டும் இன்னும் நன்ருய் மலரவில்லை. உள்ளங்கையையும் விரல்களையும் தேய்த்துச் சூடேற்றிக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

டாக்ஸியில் மூன்று பேரும் வீடு போய்ச் சேர்ந்தார்கள். சிறிய அழகான தனி வீடு. மாமி அன்போடு ஆரத்தி எடுத்து மருமகளை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டாள்.

சாப்பாடு முடிந்தது. சம்பிரமமான விருந்துச் சாப்பாடு. மாமி எவ்வளவு ருசியாகத் தன் கையாலேயே எல்லாம் சமைத்தாள்! ஜானகி ஒரு துரும்பை எடுத்துப் போடக்கூட அன்று அவள் இடம் கொடுக்கவில்லை.

''நாளை முதல் எல்லாப் பொறுப்பும் உன்னைச் சேரப் போகிறது. இன்று என் கையால் செய்ததைத்தான் நீ சாப்பிட வேண்டும்'' என்று கண்டிப்பாய் அவள் சொன்னுள்.

''என்ன அம்மா, நீ சொல்வது! ஏரில் பூட்டப் போகிற மாடு தானுகவே நுகத்தடியில் தலையை மாட்டிக் கொள்வது வழக்கமாயிற்றே!'' என்று சௌரி சிரித்துக்கொண்டே சொன்னுன்.

அப்படியானுல், சாட்டையடி உண்டோ? வாயைத் திறந்து கேட்டு விடவேண்டும் போல் ஜானகியின் உள்ளம் துடித்தது. அந்தத் துடிப்பை என்னவோ அடக்கிக்கொண்டாள்.

சாப்பாட்டுக்கு முந்தி நடந்தது இது. சாப்பிட்ட பின்பு, பிரயாணக் களைப்பு இன்னும் கண்ணைச் சுழற்றியது. இப்போது தனியாக ஓர் அறையில் அவனும் அவளுமே இருந்தார்கள்.

கட்டிலில் அவள் உட்கார்ந்திருந்தாள். சாய்மான நாற்காலியை மிக அருகே இழுத்துப் போட்டுக்கொண்டு, அதில் சாய்ந்தபடி அவன் என்னவோ கேட்டுக்கொண்டிருந்தான். அரைத் தூக்க நிலை. அவளும் சமாளித்துச் சமாளித்துப் பார்த்தாள்; ஒரு விதமாய்ப் பதிலும் சொல்லிக்கொண்டு வந்தாள்.

அப்புறம்..அப்புறம்..?

என்ன இது? இங்கே என்ன இப்படி மங்கலான ஒளி? வீடா இது? வீடே நகர்ந்து ஒடுகிறதா? கடக்-கட-குட்-குட்-குட்டு!

இல்லை. ஜானகியின் கண்தான் சோர்ந்தது. சிரமப்பட்டு நன்ருகக் கண்ணை அகல விழித்துப் பார்த்தபோது, பகல் வெளிச்சம் டீளிச் சென்று நிலவக் கண்டாள். அந்தக் 'கட கட' சப்தம் கல்லுரலில் யாரோ-யாரோவாவது! மாமிதான் - மாமி கல்லுரலில் பின்பக்க அறையில் மாவரைத்துக்கொண் டிருந்தாள்.

மறுபடியும் கண் அயரத்தான் அயர்ந்தது. வீடு நகர்வது போலவே மறுபடியும் தோன்றியது.

அவன் சிரித்தான். ''தூங்கு..நீ தூங்கு..''

நொடி நேரம் சென்றிருக்குமா? அரை மணி நேரமா? ஒரு மணியா?

''ஜானகீ, ஜானகீ, இது உன் சிறை; சிறை அறை. தெரியுமா?..இங்கே பார், என் கணக்கு நோட்டை.. ஊருக்கு வரும் போதெல்லாம் நான் ஒரு கதை சொல்வேனே, நினைவிருக்கிறதா? டாண்டலஸ் கதை..? என் சிறு வகுப்பு விஞ்ஞானப் பாடத்தில் உள்ள படங் கூட வரைந்து காட்டுவேனே..பேராசைக்கார டாண்டலஸை நரகத்திலே ஒரு பெருங் குளத்துக்கு நடுவே விலங்கிட்டு நிறுத்தினர்கள். பக்கத்திலே வெள்ளமாய் ஆற்றிலே தண்ணீர் ஓடுகிறது. அவனுக்கா ஒரே தாகம். தண்ணீரை இறைக்கிருன். வாய் மட்டம் வரையில் தண்ணீர் வரும். ஆனல் வாய்க்கு எட்டாமல், அவ்வளவு நீரும் 'ஸைபன்' குழாயால் வடிந்தோடிவிடும். இந்த 'ஸைபன்' குழாய் கூட உனக்குச் செய்து காட்டியிருக்கிறேனே... இதோ பார், இந்தக் கணக்கு நோட்டை. சின்ன வயசில் நீ குட்டிய குட்டையெல்லாம் கணக்கு எழுதி வைத்திருக்கிறேன்..கட பட என்ற இந்த இடியோசையைக் கேட்டாயா? இந்த மாதிரி குட்டப் போகிறேன்..இந்தா, வாங்கிக் கொள்..''

ஜானகியின் உடலம் பதைத்தது. ''ஊஹம் ஹும்..ஐயோ!'' என்று அலறியபடி, தலையை உள்ளங்கையால் பொத்திக்கொண்டாள்.

''இந்தா, ராணியம்மா; காபி வந்திருக்கிறது.''

எது முந்தி, எது பிந்தி? சௌரியின் அன்புக் குரலா, அந்தப் பயங்கரப் பகல் கனவா? அல்லது, அது கனவோ, இதுதான் கனவோ?

''அவ்வளவு அசதியா? ராத்திரி முழுவதும் நல்ல தூக்கம் இல்லைபோல் இருக்கிறது. முகம் கழுவிக் காபியைக் குடித்துவிட்டு மறுபடியும் தூங்கலாமே.''

''காபி; காபி நீங்களா கொண்டு வந்தீர்கள்?'' என்ருள் ஜானகி.

''ஆமாம்.''

''ஏன் கொண்டு வந்தீர்கள்?''

''ஏனு? இதென்னடாது! அருமையான கனவைக் கலைத்துவிட்டேனே?''

''இந்தாருங்கள். பரிகாசம் செய்யாதீர்கள். ஏன் இப்படி என்னை வதைக்கிறீர்கள்?''

சௌரிக்கு அவள் மனநிலை எப்படித் தெரியும்? ''என்ன, பெரிய பேச்செல்லாம் பேசுகிருயே. தலையைக் காலை வலிக்கிறதோ?'' என்று சொல்லிக்கொண்டே, சௌரி அவள்



''சற்று இரு'' என்று சொல்லி இழுத்தான் சௌரி.

கிட்ட வந்து நெற்றியைத் தொட்டான்; கழுத்துக் குழியில் விரலால் தொட்டுப் பார்த்தான்.

ஆஹா! அப்போதுதான் என்ன புளகாங்கிதம் ஏற்பட்டது! ஜானகி கண்களைச் சற்று மூடிக் கொண்டாள். என்னவோ தியானம் செய்தாள் பிறகு அவன் கைகளைக் கெட்டியாகக் கட்டிக்கொண்டாள். அவள் விழியிலே கண்ணீர் துளித்தது. ஒருவித ஏக்கமும் களிப்பும் படர்ந்து கலந்து உறவாடிய புன்சிரிப்பு அவள் முகத்திலே மலர்ந்திருந்தது.

''நான் உங்களை ஒன்று கேட்கிறேன்: சொல்வீர்களா?''

''ஏது? ஏதாவது குற்றச் சாட்டா?''

அவன் மோவாயைப் பிடித்து, நலிந்த இசைக் குரலில், ''என் மீது உங்களுக்குக் கோபம் இல்லையே?'' என்றாள்.

சௌரிக்கு இவள் போக்கு என்ன என்றே புரியவில்லை. அவன் 'ஸைக்காலஜி' படித்திருக்கிறான்; 'நாவல்' படித்திருக்கிறான்; சிறுகதை படித்திருக்கிறான். அவன் படித்த மட்டும் இந்த மாதிரி கட்டம் எதிலுமே வரவில்லை.

''கோபமா? எதற்காக?''

''ஒன்றும் இல்லை'' என்று சொல்லிச் சிரித்தாள் ஜானகி. வலிந்து வரவழைத்த சிரிப்பு.

நாட்கள் சென்றன. மாமி மிக அன்பாக இருந்தாள். கணவன் அவளை ராணிபோலவே நடத்தினான். 'ஜானகி' என்ற பெயரையே கைவிட்டு, 'ராணி, ராணி' என்றே அழைக்கத் தொடங்கினான். புக்ககத்தில் எல்லாம் சௌகரியமாகவே இருந்தது; புதுமையான வாழ்வாகவும் இருந்தது.

ஆனாலும் எப்போதாவது அந்தப் பழைய நாள் ஞாபகம் வரும். ஜானகிக்கு எல்லாம் தடுமாறும்; கை பதறும். 'அவரிடம் அதைப் பற்றி நேரே கேட்டு விடலாமா?' என்று எண்ணுவாள். 'அவர் அதை மறந்தே போயிருந்தால், நல்லதாக இருக்குமே. கேட்டு ஞாபகமூட்டுவானேன்?' என்று எண்ணுவாள். 'கேட்பதா? வேண்டாமா?' 'கேட்பதா? வேண்டாமா?'

கடைசியாக ஒரு நாள்.

''இந்தாருங்கள், ஒரு விஷயம்.''

''என்ன? சொல்?''

''தாத்தா நம் இரண்டு பேருக்கும் மனக் கணக்குப் போடுவாரே; ஞாபகம் இருக்கிறதா?''

''ஓ! நன்றாய் ஞாபகம் இருக்கிறது. கணக்கு மறந்தாலும் உன் குட்டு மறக்குமா? எப்படித்தான் குட்டுவாய்! அதை நினைத்தால், இப்போது என் தலையை வலிக்கிறாப் போல் இருக்கிறது'' என்று சிரித்துக்கொண்டே சொல்லிய சௌரி, உச்சந்தலையைத் தடவி விட்டுக்கொண்டான்.

ஜானகிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் தெள்ளத் தெளிய ஞாபகம் வைத்திருக்கிறான்; மறக்கவே இல்லை.

''சரி, எனக்கு உள்ளே வேலை இருக்கிறது'' என்று சொல்லி, முகத்தைத் திருப்பிக்கொண்டு அவள் நகர்ந்தாள்.

''சற்று இரு'' என்று சொல்லி, அவள் சேலைத் தலைப்பைப் பிடித்து இழுத்து, சௌரி அவளை நிறுத்தினான்.

''ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டாய்?''

''ஏ அம்மாடி! யானை மறந்தாலும் மறக்கும்; இந்தப் புருஷர்கள் எதையும் மறக்க மாட்டார்கள். எத்தனை நாளானாலும் அவர்களுடைய வஞ்சம் தீராது'' என்று முகத்தைச் சிணுங்கினாள் ஜானகி.

சௌரி கலகலவென்று சிரித்தான். ''உன் அபிப்பிராயம் தவறு. எனக்கு எத்தனையோ விஷயங்கள் மறந்து போயின. இதுவும் மறந்து தான் போயிற்று..'' என்ற அவன் பேச்சு முடியவில்லை.

''பின்னே? நான் சொன்னதும் ஞாபகம் வந்துவிட்டதாக்கும்?''

''இல்லை; காலேஜில் சேர்ந்ததும், ஞாபகம் வந்தது.''

''எப்படி?''

''சொல்லட்டுமா? சொல்லிவிடட்டுமா?''

''சொல்லுங்கள்.''

''வாய்ச் சொல்லாகச் சொல்லக் கூச்சமாக இருக்கிறது. எழுத்து மூலமான சாட்சியம் காட்டிவிடுகிறேன்'' என்றான் சௌரி.

ஏழு வருஷங்களுக்கு முன் கல்லூரியில் சேர்ந்த போது வாங்கிய டைரி ஒன்றைப் பெட்டியிலிருந்து எடுத்து வந்து, அதன் ஒரு பக்கத்தைப் பிரித்து, ''பாருங்கள், ராணியம்மா'' என்று அவளிடம் நீட்டினான்.

ஜானகி பார்த்தாள்; படித்தாள். அப்படியே பிரமித்துப் போனாள்:

'ஜானகியைப் போல் படிக்க வேண்டும். அவளே எனக்கு வழிகாட்டி. அவளை என் மனை ராணியாக அடையும் யோக்கியதையை நான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.'

ஜானகி பொலபொலவென்று கண்ணீர் விட்டுவிட்டாள்: ''நானா? நானா உங்களுக்கு வழிகாட்டி? எனக்கு என்ன தெரியும்? மளிகைக் கடைக் கணக்குப் போடத் தெரிந்துவிட்டால் ..ஊரெல்லாம் கொண்டாடும் புத்திமான் நீங்கள்..''

''பாரதி பொய்யா மொழிப் புலவர். இது உனக்குத் தெரியுமா, ராணி?''

ஜானகி வாய் திறவாமல் சௌரியின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அதில்தான் என்ன கவர்ச்சி! என்ன இங்கிதம்!

''நாங்கள் ஆண்கள் இருக்கிறோமே, நாங்கள், 'காற்றிலேறி அவ் விண்ணையும் சாடுவோம்; காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே'. தெரிந்துகொள்'' என்று, ஜானகியின் காதுக்குள்ளே ஏதோ ரகசியம் உரைப்பது போல் சொன்னான்.

''ஆனால், நான் செய்தது குற்றம்; அபசாரம். தெரியாத்தனமாய்ச் சிறு பிராயத்தில் ஏதோ செய்துவிட்டேன்..'' என்று முணுமுணுத்த குரலில் சொன்னாள்.

''அடடா! நட்டாற்றில் விடுகிறாயே. எனக்கு நல்லது செய்தது குற்றம் என்றா நினைக்கிறாய்? இதுதான் பொல்லாத்தனம்'' என்று சொல்லி, அவளைப் பிடித்திழுத்து அவள் கன்னத்திலே ஒரு முத்தமிட்டான்.

ஜானகி திமிறிக் கொண்டு, ''விடுங்கள், அதோ அம்மா அழைக்கிறார்'' என்று சொல்லி உள்ளே ஓடிவிட்டாள்.

''அம்மா அழைக்கவுமில்லை; ஒன்றுமில்லை. பொய்! பொய்! பொய்!'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே, கட்டிலில் சாய்ந்துகொண்டான் சௌரி. ★

உங்கள் பணத்தைக் கொடுக்கும்பொழுது சிறந்த சாமானையே நீங்கள் வேண்டுகிறீர்கள்



பட்டுப் புடவைகளாயினும் சரி அல்லது
பருத்திச் சட்டைத் துணிகளாயினும் சரி,
அவைகளை வாங்கும்பொழுது உங்கள் பணத்திற்குச்
சிறந்த பெறுமானம் அளிப்பவைதாம் என
நிச்சயப்படுத்திக் கொள்ள நீங்கள் விரும்புவது சகஜமே.

சிறந்த துணிகளை வாங்க,

பின்னியின் துணிகளை வாங்குங்கள்!

தி பக்கிங்ஹாம் அண்ட் கர்னாடிக்
கம்பெனி லிமிடெட்
தி பங்களூர் உல்லன், காட்டன் அண்ட்
ஸில்க் மில்ஸ் கோ., லிட்.
நிர்வாகிகள்: பின்னி அண்ட் கோ.
(மதராஸ்) லிட்., மதராஸ்

BY. 3777

தக்ஷிண ரெயில்வே

தென் இந்தியாவுக்கு விஜயம் செய்யுங்கள்

காணுங்கள்

பாதாமி	—	கி. பி. 6-ஆவது நூற்றுண்டைச் சேர்ந்த ஜைனக் குகைக் கோயில்களுக்கும் பழம்பொருள்களுக்கும் புகழ் பெற்றது.
பிஜாபுர்	—	உலகத்திலேயே இரண்டாவதான பெரிய வட்ட விமானமும், மெதுவாகப் பேசினுலும் தெளிவாக எதிரொலிக்கும் பரப்பு வாய்ந்ததுமான கோல் கும்பஸ் இங்கே இருக்கிறது.
சிதம்பரம்	—	ஆனந்த தாண்டவம் ஆடும் ஸ்ரீ நடராஜரின் பிரபலமான கோயில்.
குற்றாலம் (தென் காசி வழியாக)	—	அருவிக்குப் பிரபலமானது. புகழ்பெற்ற ஸ்நான இடம்; சுகாதார வாசஸ்தலம்.
ஹம்பி (விஜயநகர்)	—	என்றும் மறக்க முடியாத விஜயநகர சாம்ராஜ்யத்துப் பழைய தலைநகரத்தின் அற்புதமான இடிபாட்டுச் சின்னங்கள்.
கோடைக்கானல்	—	மதுரைக்கு அருகில் உள்ள மனேரம்யமான மலை வாசஸ்தலம்.
மதுரை	—	பாண்டிய மன்னர்களின் புராதனத் தலைநகரம். பிரசித்தமான ஸ்ரீ மீனுட்சி கோயில் இங்கு உள்ளது.
மைசூர்	—	ஒளி நிறைந்த நகரம். மனத்தைக் கவரும் பிருந்தாவனம், மைசூரிலிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறது.
உதகமண்டலம்	—	இந்தியாவில் உள்ள மலை வாசஸ்தலங்களின் ராணி.
ராமேசுவரம்	—	புண்ணிய தீர்த்தம்; புகழ்பெற்ற கோயில் வாய்ந்தது.
திருப்பதி	—	பாலாஜி ஸ்ரீ வேங்கடேசுவரர் திருக்கோயில் கொண்டிருக்கும் இடம். இங்கே ஒவ்வொரு நாளும் திருவிழாத்தான்.
திருச்சி	—	ஸ்ரீரங்கத்திலும், திருவானைக்காவிலுமுள்ள கோயில்களுக்குப் பெயர் பெற்றது.
திருவனந்தபுரம்	—	பிரசித்தமான சித்திரசாலையும் மியூசியமும் மிருகக்காட்சிசாலையும் இங்கே இருக்கின்றன.

சீப் கமர்ஷியல் சூப்பரின்டென்டென்ட்.

ஒரு ஜாதி

க.நா.குமாரஸ்வாமி

தோலும் உடம்பும் வேறு வேறு நாட்டினருக்கு அடையாளமாக எண்ணலாம். ஆனல் மனசைப் பார்த்தால், அதில் எழும் உணர்ச்சியைப் பார்த்தால், எல்லோரும் ஒரே இனம்.

வெள்ளிக் கடலிலே பதித்த ஒரு மணித் தீவகத்தில் பிறந்த மகன், திரவியத்தைத் தேடிக்கொண்டு திரைகடந்து புதிய நாட்டிற்கு வந்தான். ஓர் விசித்திர உலகு தன் கவாடத்தை அவன்முன் திறந்தது. மதப் பிரசாரம் செய்யவோ நாடாளவோ அவன் வரவில்லை. வலைஞர் வாழும் ஓர் கடற்கரைப் பட்டினத்தில் அவனுடைய மரக்கலம் ஒதுங்கியது. ஒரு தெலுங்குப் பாளையக்காரனிடம் சொற்பத் தொகைக்கு வாங்கிய மணல்திடலில் ‘கும்பினியார்’ என்ற ஆங்கில வணிகர் முதல்முதலாகக் காலை வைத்தனர். பிற்காலத்து ஒரு சாம்ராஜ்யம் ஓங்கிப் படர்வதற்கு வித்து அங்கேதான் விழுந்தது. ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை மெல்ல உருவாகியது. இந்த விதேசிக் குழுவினருள் சாகசமிக்கவன் அந்த யுவகன். அவன் பெயர் ஜாப் சார்ஞக் (Job Charnock). கோட்டைக்குள் தங்கள் வழிபாட்டிற்கு ஆலயம் ஒன்றை எழுப்பிக்கொண்டனர்: ஸெயின்ட் மேரீஸ் கதீட்ரல். இன்று ஆங்கிலேயர் நம் நாட்டை விட்டு அகன்றாலும், அக்கோயிலினுள் இருக்கும் சின்னங்கள் பழங்கதையை நமக்குச் சொல்லும்: கிளைவ் தன்னைச் சுட்டுக் கொல்ல யத்தனித்த இடம், சார்ஞக் செய்துவைத்த புனித சம்பிரோட்சண நீர்க் கலயம் முதலியன. இது பல்லாவரத்தில் கிடைக்கும் ஒருவித உறுதியான பாறை வகையிலிருந்து செதுக்கியது. அந்த வகைக்கு ‘சார்ஞகைட்’ கல் என்று பெயர் வந்துவிட்டது. ஓர் அபூர்வமான காதல் நாடகம் இந்தக் கலயம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது.

ஏழ்கடல்களுக்கு அப்பாலாய தீவகத்து மகன் இந்நாட்டு உயர் குல மடந்தை ஒருத்தியின் கருவிழி வலைக்குள் சிக்கி நின்றான். அவளும் இந்த ‘ஜல கந்தர்வனை’ப் பார்த்து முறுவலித்த போது தென் கடலுக்குள் குளித்தெடுக்கும் முத்தும் பவழமும் இவைதாமோ என்று ஐயுற்றான். அந்த ஆங்கிலேயன் கற்பனையில்கூடக் கண்டிருக்க மாட்டான், இந்த மாதிரி ஓர் அழகி உலகின் கீழ்ப் பகுதியில் இருப்பாள், அவள் கண்

களில் இவ்வளவு மாய வசீகரம் இருக்கும் என்று. அந்தப் பெண்ணுக்கும் சரி, கனவிலும் தோன்றியிராது, செக்கர் மேனியான ஓர் நாகரிகன் தன்முன் திடுமென வந்து நிற்பான், உள்ளத்தைக் கவர்ந்துவிடுவான் என்று. 'எத்தனை கடல்கள், எத்தனை புயல்கள், எத்தனை விசித்திர நாடுகளைத் தாண்டி இவன் வந்தானோ!' - இவ்வாறு அந்த மான் விழிப் பேதை நினைத்து அந்தப் புது நாட்டானின்மீது தன் கண்களை நாட்டினாள். எந்தப் பிறவியிலோ குறைவாக நின்ற தன் ஆசையைத் தீர்க்கவே இந்த வடிவழகன் வந்தானென்று பட்டது அவளுக்கு. வானத்து நீலமெல்லாம் அவன் கண்மணியில் தோய்ந்திருந்தது. அந்திப் பொழுதின் பொன்னிறமெல்லாம் அவன் தலைமயிரில் உருகி ஓடிற்று. பனிப் புலரியில் பூக்கும் செம்மை நிறமெல்லாம் அவன் மேனியில் கண்டாள். இது கட்டுக் கதையே அன்று. இந்த வெள்ளைக்கார இளைஞனும் தமிழ் மடந்தை ஒருத்தியும் காதல் வசமாகி அழகிய கவிதை போல் தம் வாழ்வை நடத்தி இந்தியாவிலேயே இறைவனது திருவடி நிழலை அடைந்தனர். இவர்கள் வாழ்ந்ததல்லவோ உண்மை வாழ்வு?

பல்லாவரத்துக்குப் பக்கத்தில் ஓர் ஊருக்கு அருகிலுள்ள மொட்டுக் குளத்துக் கரையில் தான் இந்த அதிசயக் காதலர் சந்தித்தனர். அன்றே அந்த 'வெள்ளைக் கந்தர்வனின்' மனம் இந்த நாட்டில் நிலைத்துவிட்டது. ஊர்ப் பெயரை நான் கூற முடியாது. அந்தத் தமிழ் மடந்தையின் முழுப் பெயர் லீலாவதி. அவளுக்குத் தந்தை இல்லை. அவள் ஒருத்தியே குலத்தின் கொழுந்து. ஏராள நிலபுலன்கள் அவளுக்குச் சொத்து. வயசு பன்னிரண்டே. அந்தக் காலத்தில் ஒன்பது வயசுக்குள், அதாவது புத்தி வருவதற்குள், பெண்களுக்கு மணமாகிவிடும். பதினாலு பதினைந்தில் குழந்தைக்குத் தாயாகிவிடுவார்கள். ஆனால் அதிசயம், லீலாவுக்குக் கல்யாணம் ஆகவில்லை. காரணம் இருந்தது. அவள் மரபில் பிள்ளை கிடைப்பது குதிரைக் கொம்பு. தாய்க்குச் செல்வ மகளான அவள் இஷ்டம்போல் ஓடி விளையாடினாள், திரிந்தாள். மாலை நேரம் வந்துவிட்டால் அவ்வூர்க் குளம், ஊர்ச் சிறுமியருடன் சேர்ந்து அவள் நடத்தும் களிப்பாட்டங்களில் கலங்கிப் போய்விடும். குளத்து நீர் அலை அலையாகப் பிரிந்து, தாமரைப் பூக்கள் எழும்பி அசையப் படியோடு மோதித் துளும்பும். அவளாலேயே மற்றப் பெண்களும் கெட்டுப் போவதாகப் புகார். பருவ மடந்தை ஆவதற்கான குறிகள் அவள் அங்கங்களில் நன்றாக மலரவில்லை; முளைப்பதத்தில் இருந்தன. இருந்தும் மனசு வரைக்கும் அவள் குழந்தையாகவே இருந்தாள். இவ்வாறு ஒரு நாள் குளத்தில் அவள் பாதியளவு மூழ்கித் தாமரைப் பூக்களிடையே மறைந்துகொண்ட போது மீன் போல் கரையோரமாகத் துழாவும் மற்றச் சிறுமியர் எழுப்பிய பயங்கரக் கூச்சலைக் கேட்டு நீர் மட்டத்திலிருந்து எழுந்தாள். "லீலா, ஓடி வாடி சீக்கிரம்! அதோ வெள்ளைக்காரன் வராண்டீ. நம்மைப் பிடித்துக்கொண்டு போய்விடுவான்..எனக்குப் பயமாக இருக்கம்மா..நாங்கள் போகிறோம்" என்று குரல் தந்ததும், அவர்கள் கரைமீதேறி ஈர ஆடையுடன் ஊரை நோக்கி ஓடினர்.

நெஞ்சு உரம் பிடித்தவள் இந்த லீலா. 'என்னதான் நடக்கிறதோ பார்க்கலாம். வெள்ளைக்காரன் ராட்சசனா என்ன, விழுங்கிவிடுவதற்கு? கிட்டத்தான் வரட்டுமே, அவனை நன்றாகத்தான் பார்க்கிறேனே!' என்ற தைரியத்துடன் காலில் சிக்கிய தாமரைக் கொடிகளை உதைத்து விலக்கிக்கொண்டே தரை தட்டுப்படும் இடத்துக்கு வந்து கழுத்துவரை அமிழ்ந்து கவனித்தாள். மஞ்சள் வெயில் குளத்து நீர்மீது படிந்திருந்தது. குதிரைச் சவாரி செய்யும்போது பூணும் சட்டையுடன் ஆறு அடி உயரமான செவேலென்று இருக்கும் முகத்துடன் ஒரு விசித்திர மனிதன் துறுகல் படியில் இறங்கி வந்து தன்னையே உற்று நோக்குவதைக் கவனித்தாள் லீலா. இதுவரை அவள் எந்த ஆடவன் எதிரிலும் நாணிக் கூசிக்கொண்டதில்லை. ஊரில் 'அரட்டன்' என்று பெயர் வாங்கிய அந்த ரங்கன் அவளைத் தொடத் தோப்பில் மடக்கி ஆட்டம் காட்டியபோது கூட அவள் நின்று சவால் கொடுத்தாள். ஆனால் இவனைக் கண்டதுமே எதனாலோ அவள் உடலுள் மின்னல் பாய்ந்தது; அன்றே தான் பெண் என்பதை அவள் உணர்ந்தாளோ என்னவோ? உறுதியான பூ[illegible]றையைத் தேடிக் கொண்டு பல்லாவரத்துக் குளப் பக்கமாக வந்த ஜாப் சார்னக் அந்தக் கல்லுக்கிடையே ஒரு கன்னி மலரையும் கண்டுபிடித்தான். சார்னக் வரும் வேளை லீலாவுக்குத் தெரியும். தன்னையும் மீறி அவள் கால் வீட்டை விட்டுக் குளத்துக் கரைக்கே செல்லும். கண்ணோடு கண் ஒன்றுவது; ஒருவரைப் பார்த்து ஒருவர் பேசத் தெரியாமல் சிரிப்பது; அவன் தன் ஆங்கில மொழியில் என்னவோ பிதற்றுவான்; அவள் தலைநிமிராமல் விரலால் தரையைக் கீறிக்கொண்டே இருப்பாள்; கடைசியில் அவன் அவளுக்குத் தாழ்ந்து வணக்கம் செலுத்துவதுடன் இந்தக் களியாட்டம் முடிவடையும். குதிரை மீதேறி அவன் தோப்பைத் தாண்டி மறையும் வரை லீலா தன் நினைவு தப்பி இருப்பாள். மருள் கலந்து பார்ப்பாள். இருள் சூழ்ந்து கொண்டிருக்கும். அபிசாரிகை அதன் போர்வையில் மெல்ல வீட்டுக்குள் புகுவாள். நித்தியம் ஒரே துறையில் செல்லும் இந்த நாடகம்.

திடுமென ஒரு நாள் லீலாவைக் காணவில்லை, குளத்தங்கரையில். சார்னக்கின் உள்ளம் துவண்டது. அவளைப்பற்றி யாரைக் கேட்பான்? அவள் பெயரைக்கூட அவன் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை. இந்தப் புதிய தேசத்தவர்களின் பழக்கவழக்கங்கள் எவையுமே அவன் அறியான். விசித்திரம் நிரம்பிய இந்நாட்டு மகள் ஒருத்தியின் மனப்போக்கு அவனுக்குப் புதிராக இருந்தது. காதலி அவனைத் தனிமையில் காண வருகிறாள்; முறுவல் செய்கிறாள். உணர்ச்சியோடு நின்றுவிடுகிறது இந்நட்பு. மெய் தீண்டுதல்வரைக்கும் வரவில்லை.

அடுத்தடுத்து நாலைந்து நாட்கள் பழைய குறியிடத்தின்கண்ணே வந்து போனான் சார்னக். அவள் மட்டும் இல்லை. சப்பிட்டுப் போய்த் திரும்பிவிடுவான். ஓய்ந்த நடையாகவே அவனுடைய நிமிர்புரவியும் செல்லும். ஒரு முறை தன் காதலி களிப்பாளென்று அருமையான ஸின்னியா, அஸேலியா, டாலியா, ஸிந்தியா போன்ற சீமை மலர்களைச் செண்டாகக் கட்டிக்கொண்டு வந்திருந்தான். 'வண்ணமே கொண்ட வாசனையற்ற இந்த மலர்களைக் காதலி விரும்ப மாட்டாளோ? இந்தக் காதலில்

இன்மணம் இல்லையென்று வெறுத்துப்போய் வராமல் நின்றுவிடுவாளோ' என்ற சந்தேகமே அந்த வெள்ளை மகனுக்கு.

ஆனால் முயற்சி வீண் போகவில்லை. திருமயிலைக் கோயிலின் விழாவின்போது குளத்தருகே கூடும் சந்தையில் வளையல் வாங்கும் தன் காதலியைத் தற்செயலாகக் கண்டான். அப்போது அவனுடன் நண்பன் ஜோ டௌன்ஸென்ட் என்பவனும் வந்திருந்தான். லீலா புதிய வண்ணச் சீரை உடுத்து வயசு வந்த இரு மாதருடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். மரத்து நிழலில் இருந்தனர் சார்னாக்கும் அவன் நண்பனும். "அதோ, அவள் தான்" என்றான் சார்னாக் லீலாவைச் சுட்டி.

"என்ன உளறுகிறாய்? அவள் இந்தியப் பெண்" என்றான் நண்பன்.

"அவள்தான் என் காதலி. பார், பார்; அவளும் என்னைக் கவனித்துவிட்டாள்; புன்னகை பூக்கிறாள்" என்றான் சார்னாக் உணர்ச்சி வசப்பட்டு.

"ஜாக்கிரதை! இந்த நாட்டுக்கு நாம் வந்த காரியம் என்ன? கண்மூடித்தனமாக ஏதாவது செய்துவிடப் போகிறாய். இவர்கள் விஷயத்தில் நாம் தலையிடக்கூடாது. பின்னால் நமக்குச் சங்கடம் நேரிடும்" என்று எச்சரிக்கை செய்தான் டௌன்ஸென்ட்.

"இல்லை ஜோ, அவளுந்தான் என்மீது ஆசை வைத்திருக்கிறாள்" என்றான் சார்னாக்.

"என்ன பிதற்றல் இது ஜாப்? நம் நிறத்தைப் பார்த்து எந்த இந்தியப் பெண்ணாவது நெருங்குவாளா? பயந்து அரை மைல் தூரம் ஓடுகிறார்களே!" என்றான் நண்பன்.

"எந்த நாட்டினராக இருந்தால் என்ன? காதல் உணர்ச்சி எல்லாருக்கும் ஒன்றுதானே? உள்ளம் மனித உள்ளந்தானே? காதலுக்கு ஜாதி மத வர்ண பேதமே இல்லை. இரண்டு உள்ளங்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இழைவதை யாராலும் தடுக்க முடியாது. இறைவன் துணை புரிவான்" என்றான் சார்னாக்.

"அசட்டுத்தனமாகப் பேசாதே. அவளை நீ அடைய முடியாது. ஏன் அவள் உன்னைநோக்கி வரவில்லை? ஒதுங்கிப் போகிறாள், பார்! அவள் யாருக்காவது மனைவியாகியிருக்கலாம். இனிமேல் அவளைக் குறித்து நினைப்பதுகூடத் தவறாயிற்றே! நம் கிறிஸ்துவக் கொள்கைப்படி பிறர் மனைவியை நோக்குவது பெரிய பாவம்" என்றான் டௌன்ஸென்ட். நீண்ட பெருமூச்சில் அடித்துச் சென்றது சார்னாக்கின் ஆசை, நம்பிக்கை எல்லாம். தொடுவானில் சிமிட்டும் தாரகைபோல் லீலா அவனை விட்டு நழுவியே போனாள். கூப்பிட்டாலும் அவள் திரும்பிப் பார்க்க மாட்டாள்.

லீலாவும் சார்னாக்கைப் பார்த்தாள். ஆனால் ஒருவன் தொட்டுத் தனக்குத் தாலி கட்டிய பிறகு உயிருக்கும் இனியனான காதலனைப் பற்றி நினைப்பது பதித்துரோகம் என்ற பயத்தினால் அவள் சார்னாக்கை அணுகாமல் இருந்துவிட்டாளா? 'எங்கிருந்தோ ஓர் இன்ப அலை என் இருதயக் கரையில் மோதி உடைந்து மீண்டும் அது எழுந்த கடலிலேயே கலந்துவிடுவது போலவா, இவன் எனக்குத் தந்த காதல்?' இவ்வாறு எண்ணி அவள் அறத்தோடு நின்றாளோ என்னவோ? ஆனால் தனக்குக் குதூகலத்தை மூட்டிய அந்தக் காதலனை அவளால் மறக்கவே முடியவில்லை. அவனை ஏற்றிக்கொண்ட மனப்பீடத்தில் வேறு ஒருவருக்கு இடம் இல்லைதான்!

லீலாவுக்குக் கல்யாணமாகிவிட்டது. தகுந்த வரன் கிடைக்காமல் போகவே அவள் தாய் இரண்டாம் தாரமாக ஒரு கிழவனுக்கு அவளைக் கொடுத்தாள். தன் இளம் மனைவியுடன் குலாவுவதற்குக்கூட அந்தக் கணவனுக்குப் பொழுதும் இல்லை; உற்சாகமும் இல்லை. தன் ஆசார அநுஷ்டானங்களுக்கு ஒரு தர்மபத்தினி தேவை என்றதனாலேயே லீலாவைப் 'பெரிய மனசு' பண்ணி அவன் மணந்துகொண்டான். அவளை விட்டுத் தீர்த்தயாத்திரைக்கும் போய்விட்டான். கடைசி நாளில் காசியில் சாக வேண்டுமென்பது அவன் அவா. இளமையின் செவ்வி வழிந்தோடும் லீலா தன் உள்ளப் புரையில் தேடியபோது, அந்தக் கணவன் மீது துளியாவது ஆசையோ அன்போ புலப்படவில்லை.

விழாவைப் பார்த்துவிட்டுத் திரும்பிய லீலா தன் கொடிய விதியை நொந்து புலம்பினாள். கணவன் எட்டிப் பாராத தன் பள்ளியறையில் கண்ணாடிமுன்பு நின்று அதில் தெரியும் தன் அழகைக் குறித்துச் சாபம் இட்டாள். தன் மனத்துள் பதிந்துபோன ஒரு முகம் மங்கலாகத் தன் பின்னால் வந்து நின்று தன்னைக் கவனிப்பது போன்ற மருள் கொண்டாள். அவள் அசடி! உண்மையோ என்று திரும்பிக்கூடப் பார்த்தாள். யாரும் இல்லை.

கம்பெனியின் கணக்கு ஏடுகளைப் புரட்டும் போது, தன் காதலியின் வண்டு விழிகள்

மூன்று விளக்குகள்

அடியார்கள் இறைவனுக்குப் பலவகையான தீபங்களைக் காட்டித் தொழுகிறார்கள். முதலாழ்வார்களில் முதல்வரான பொய்கையார், இந்த வையத்தையே அகலாக்கி, அதைச் சுற்றியுள்ள கடலை நெய்யாக்கி, வெய்ய கதிரோனை விளக்காக்கி எம்பெருமானுக்கு அர்ப்பித்தார். இரண்டாமவரான பூதத்தார், அன்பை அகலாக்கி, ஆர்வத்தை நெய்யாக்கி, இன்புற்று உருகும் மனத்தைத் திரியாக்கித் திருமாலுக்கு ஞானச் சுடர் விளக்கை ஏற்றினார். மூன்றாமவரான பேயாரோ, எம்பெருமானையே பேரிருளகற்றும் சோதிவடிவில் காண்கிறார். முன்னிரண்டு ஆழ்வார்கள் திருவிளக்கு ஏற்றிக் காட்ட, தமிழ்த் தலைவரான இவர், 'திருக் கண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன், செருக் கிளரும் பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக் கண்டேன்' என்று மாயனைக் கண்டமையை நாமும் களிக்குமாறு கூறுகிறார்.

எழுத்துக்கிடையே பாய்வதால், சார்னாக் துடிப்பான். இந்த உள்ள நோயை மறக்கவே அவன் வட நாட்டிற்குப் பயணமானான். ஹுக்ளி நதிக்கரையில் கம்பெனிக்கு மற்றோர் இடம் தேட முற்பட்டான். இன்று கல்கத்தா என்று வழங்கும் இடத்தில் அவுரங்கஜேப் தந்த பர்மானின் உதவியால் வில்லியம் கோட்டையை நிர்மாணம் செய்தான். அக்கோட்டைக்கு அடிகோலிய முகூர்த்தம் பிரிட்டிஷ் அரசாட்சி நம் நாட்டில் இருநூறு ஆண்டுகளுக்குமேல் நிலைத்திருப்பதற்கு அநுகூலமாக இருந்தது. அன்று சார்னாக்குக்கு இப்படி ஆகுமென்று தெரியுமா?

ஐந்தாறு வருஷங்கள் கடந்துவிட்டன. சார்னாக் சென்னைக்குத் திரும்பினான். அவன் இருதயத்துள் அடங்கியிருந்த அந்தக் காதல் மீண்டும் தளிர்த்தது. ஆனால் அந்தக் காதலியை அவன் எப்படிக் கண்டுபிடிப்பது?

ஜாப் சார்னாக் வழக்கம் போல் தன் குதிரை மீது ஏறிச் சென்னையில் சுற்றுப்புறங்களுக்குச் சென்று உலாவிவிட்டு வருவான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திசையே செல்வான். பூவிருந்தவல்லிக்கு அருகில் அவன் ஒரு நாள் வந்துகொண்டிருக்கையில் கூவம் ஆற்று வளைவில் மணல்திட்டில் ஒரே கூட்டமாக இருந்தது. ஆவல் மூண்டு அவன் அத்திசையே குதிரையைச் செலுத்தினான். தாரை தம்பட்டம் மேளதாளங்கள் ஒலி செய்ய அங்கே கூடியிருந்த மக்கள் இரட்டைச் சிதை அடுக்கிக் கொண்டிருந்தனர். அவனுக்கு விஷயம் விளங்கவே இல்லை. இந்தியர்களின் விழாக்களில் ஏதோ ஒன்று என நினைத்தான். இறந்து போன கணவனுடன் ஓர் உயிருள்ள பெண் வெந்தழலில் சிக்கி மரிக்கப்போவதை அவன் எப்படி அறிவான்? அந்தப் புண்ணியவதி தன் கணவனுடன் விமானத்தில் ஏறி நித்திய உலகிற்குச் செல்லப்போகிறாள். இந்த வைபவத்தை முன்னிட்டே அங்கே ஆர்ப்பாட்டம்.

இந்த யாத்திரைக்குப் புறப்படப்போகும் அந்தப் பேதைக்கு ஷோடச உபசாரங்கள் செய்தனர். அவள் மீது பூவும் பனிநீரும் தெளித்தனர். அவளுக்குப் பட்டாடை சாத்துகின்றனர். அணிகலன் பூட்டுகின்றனர். ருசியான பரமான்னங்களை வேண்டி வேண்டித் தருகின்றனர். ஆனால் எல்லாவற்றையும் அவள் வெறுக்கிறாள். அவளுக்கோ சாக விருப்பம் இல்லை, புண்ணியத்திற்குக்கூட. இன்னும் சில நேரந்தான்; அவ்வழகிய மேனி இருக்குமிடம் தெரியாமல் சாம்பலாகிக் காற்றில் நாற்றிசையும் பறந்து போகும். அத்துடன் அந்த இருதயத்துள் வட்டமிட்ட கனவு, ஆசை, காதல் யாவும் போய்விடும். லீலா தனக்கு ஏற்

அந்தப் புண்ணியவதி கணவனுடன் செல்லப் போகிறாள்.

பட்ட இந்தப் பேராபத்தை எண்ணி எண்ணிப் பைத்தியக்காரியைப் போல் சிரிக்கிறாள்.

உயிருள்ள மனைவி கணவனுடன் உடன் கட்டை ஏறும் இந்த உயர்வான புண்ணியக் கிரியைக்குச் சாட்சி பூதமாகச் சார்னாக் சற்றுத் தொலைவிலிருந்தே நின்று கவனித்தான்.

யுவதியைச் சிதையில் ஏற்ற அவளைப் பிடித்து இழுத்தபோது, சார்னாக்கின் உடல் துள்ளியது. வாத்தியங்கள் முழங்கின. மனிதர் அரவம் வலுத்தது. எலும்புக்கும் வெந்த தசைக்கும் அலையும் நாய்கள் ஓயாமல் குரைத்தன. தலைக்குமேல் கூளிகள் வட்டமிட்டன. இது என்ன அநியாயம்? இத்தனை பேரும் பைத்தியக்காரர்களா? இது பெண் கொலையன்றோ? சார்னாக்கிற்குக் கால் நடுங்கியது. உள்ளங்கையில் ஊறல் எடுத்தது, எதுவோ செய்ய. இடுப்பில் தொங்கும் பிஸ்தலை ஒருதரம் தடவிப் பார்த்துக்கொண்டான். அவன் விரைவாக வருவதைப் பார்த்துக் கும்பல் கலைந்துவிட்டது. 'இதென்ன, நான் பார்ப்

பது உண்மைதானா? என் முன்னால் நிற்கும் இந்தப் பேதை என் காதலிதானா?.... ஆமாம்....' என்றதும் அவள் அருகில் வந்துவிட்டான். லீலாவும் விழிகளில் நீர் துளும்ப, கடவுள் சமயத்தில் அனுப்பிய ஒரு துணைவனைக் கண்டாள். ஓவென்று அழுதுவிட்டாள்.

விலகி இருந்தவர்கள் ஓடி வந்து 'ஸதி' யை வளைத்துக்கொண்டனர். ''கொட்டுங்கள் வாத்தியம்'' என்ற கூச்சல் கிளம்பியது. லீலாவைச் சிதைப் பக்கமாகப் பிடித்து இழுத்தனர். அவள் உடல் தரையில் தேய்ந்தும் நகராமல் பதிவாகிவிட்டாள்.

''இதென்ன! 'ஸதி' தன் கணவனுடன் மரிக்க மறுக்கலாமா? கலிகாலம் முற்றிவிட்டதே! நீ ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்? அக்கினி உன் உடம்பைச் சுடாது, அம்மா. இந்த நசுவர உலகத்தை விட உனக்குச் சுகம் தரும் மேலான சொர்க்கம் கிடைக்கும். மனசைத் தைரியப்படுத்திக்கொள்.... தாயே, வா..'' என்று பெரிய புரோகிதர் அழைத்தார்.

''எனக்குத் துளிக்கூட அந்தக் கணவன்மீது ஆசை இராதபோது இப்படி நான் சாக வேண்டிய அவசியமே இல்லை'' என்றாள் லீலாவதி.

''அதனால் என்ன, 'ஸதி'யாக நீ இறப்பதே மகத்தான புண்ணியமாயிற்றே! உனக்குக்

கோயில் கட்டி ஜனங்கள் போற்றுவார்கள், அம்மா. நீ சிதையில் போய்ப் படு'' என்றாள் முதிய சுமங்கலி ஒருத்தி.

''என்னைப் பத்தினிக் கடவுளாக யாரும் வழிபடவேண்டாம் அம்மா. என் மனசை ஒருவனுக்கே கொடுத்துவிட்டேன். நான் 'ஸதி' ஆவதற்குத் தகுதியில்லாதவள்'' என்றாள் லீலா.

''மகாபாபி! மகாபாபி!'' என்று ஜனங்கள் வெறிபிடித்துக் கூவினர். ''வாருங்கள், இவளைக் கட்டிப் பிடியுங்கள். இவள் ஒப்புக்கொண்ட பாவத்திற்கே இவளைச் சுட்டுக் கொளுத்தலாம். கொட்டுங்கள் மேளத்தை!'' என்று அவளைப் பற்றக் குறுகினர் மூட ஜனங்கள்.

ஒரு சிங்க கர்ஜனை திடுமெனக் கேட்டது: ''அவளைத் தொட்டால் தொலைந்தீர்கள், பிசாசுகளே!'' என்று. அங்கே நின்ற சார்னுக்கின் கையில் பளபளக்கும் ஆயுதத்தைப் பார்த்து மூலைக்கு ஒருவராக ஓட்டம் பிடித்தனர்.

லீலாவதிக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னைச் சுற்றி வந்த பகை வெள்ளம் இப்படி விலகிவிடவே, முகத்தைக் கைக்குள் வைத்து விம்மி அழும் அவள் நிமிர்ந்து பார்த்தாள். வியப்பு மேலிட, ''நீயா!'' என்றாள்.

சார்னுக் அவளைத் தூக்கி நிற்க வைத்தான். தன்னுடன் வருமாறு ஜாடை செய்தான். அந்தச் சுடுகாட்டில் ஓர் ஈ காக்கை தென்படவில்லை. மரத்தடியில் இருந்த தன் குதிரைமீது அவளை அலக்காகத் தூக்கிவைத்துக்கொண்டு, சென்னைக் கோட்டையை

வெளுப்பும் கறுப்பும்

பகல் என்பது வெளிச்சம்; வெளுப்பு. இரவு என்பது இருள்; கறுப்பு. உத்தராயணம் என்பது பகல். அது தீ, ஒளி. அதில் இறக்கும் பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை அடைகிறார்கள். தட்சிணாயனம் என்பது இரவு. அது புகை, இருள். அதில் இறக்கும் புண்ணியவான்கள் சந்திரனொளியைப் பெற்று மீண்டும் திரும்பி வருகிறார்கள். உலகத்தில் இந்த ஒளி வழியும் இருள் வழியும் நிலைத்திருப்பவை. இவற்றுள் ஒன்றினால் மனிதன் மீளாப் பதம் பெறுகிறான்; மற்றொன்றினால் மீண்டும் திரும்பி வருகிறான். ஒளி வழிக்கு அர்ச்சிராதி மார்க்கம் என்றும், இருள் வழிக்குத் தூமாதி மார்க்கம் என்றும் பெயர். இவ் வழிகள் இரண்டையும் உணர்ந்தவன் மரணத்தின்போது மயக்கமுறுவதில்லை. இந்தச் சாத்திரக் கருத்தை, கீதை எட்டாவது அத்தியாயம் விளக்குகிறது.

நோக்கி விரைந்தான். லீலாவைத் தனி விடுதியொன்றில் இறக்கியதும் சார்னக், "இனி மேல் இதுதான் உன் வீடு" என்றான்.

சார்னக் ஒவ்வொரு நாளும் மாலைநேரங்களில் அவளைப் பார்த்துவிட்டுப் போவான். மற்ற ஆங்கிலப் பெண்களுடன் பழகி வந்ததால், அவள் ஆங்கிலம் நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டாள். எவ்வளவோ சலுகை, சௌகரியங்கள் அங்கே. அன்றாடம் காதலன் தரும் மலர்க் காணிக்கையை ஏற்பாள். ஆனால் இவற்றால் அவள் உள்ளம் நிரம்பவில்லை. 'இந்த வேற்று நாட்டினன் என்றைக்கு இருந்தாலும் திரும்பிப் போய்விடுவான். இங்கே இருக்கும்வரை என்னை ஒரு விளையாட்டுப் பொருளாகவே பாவிப்பான். அப்புறம் என்னை மறந்துவிடுவான். இந்த வாழ்வு வாழ்ந்தென்ன? நான் அன்றே அந்தச் சிதையில் இறந்து போயிருக்கலாம்.' இவ்வாறு மனம் புழுங்குவாள். மேல் நாட்டார் காதல் புரியும் ரீதி அவளுக்குப் புதுமையாகவே இருந்தது.

சார்னக்கிற்கும் தூக்கம் இல்லை. எப்போதும் வேதனை. இந்த லீலாவை எப்படித் தன் வாழ்க்கைத் துணைவியாக அடைவது? அவனுக்கு வழி தெரியவில்லை. இதற்குள் வில்லியம் கோட்டையைப் பற்றிய வேலையாக அவன் கல்கத்தாவுக்குச் சென்னையிலிருந்து நிரந்தரமாக மாற்றப்பட்டான். வெளிநாடுகளைப் பார்த்தால், அவளுடைய மனத்துக்குத் தென்பு ஏற்படுமென்று அவளையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். அவள் கப்பலேறிக் கடலில் சென்றது அதுவே முதல் தடவை. தான் பிறந்து வளர்ந்த நாடு மெல்லப் பின்புறமாக மங்கி வருவதைப் பார்த்தபோது கண்ணீர்த் திரை அந்தக் காட்சியை அடியோடு மறைத்துவிட்டது. சார்னக் அவளுக்கு ஆறுதல் கூறினான்.

கல்கத்தாவைக் கப்பல் வந்து அடைய இன்னும் நாலைந்து நாட்கள் இருந்தன. நிசி வேளை இருக்கும். கப்பல் மேல்தளத்தில் சார்னக் நிலவின் வெள்ளி மெருகு பூசிய கடலை நோக்கி மெல்லச் சீழ்க்கை அடித்துப் பாடிக்கொண்டே இருந்தான். காதலருக்கு இன்பமூட்டும் ஒரு நிலவின் பாட்டுத்தான். ஓர் உருவம் அவன் இருந்த இடத்திற்குச் சற்றுத் தொலைவில் தளத்தின் மரவிளிம்பைப் பற்றிக்கொண்டு நிற்பதைக் கவனித்தான். மெல்ல எழுந்து ஓசைப்படாமல் அதை நெருங்கினான். ஆள் யார் என்பது புரிந்துவிட்டது. அவள் எண்ணமும் தெளிவாகிவிட்டது. லீலாதான்; கடலில் குதிக்க மனத்தைத் திடப்படுத்திக்கொண்டிருக்கும் சமயம் ஒரு வலிவான கை அவளை அணைத்துக்கொண்டபோது அவள் திடுக்குற்று, "ஐயோ!" என்றாள்.

சார்னக் சிரித்து, "நான்தான், லீலா" என்றான்.

"எத்தனை நாள் இப்படி இருப்பது?"

"இந்த வாழ்வில் மட்டுமல்ல; சாவிலும் உன் பக்கத்தில் துணையாக இருப்பேன்."

அவன் சொன்னபடியே செய்தான். லீலாவை மணந்து அவளைக் கௌரவமாக வைத்துக் கொண்டான். அவர்களின் இல்வாழ்க்கையைக் களிப்பிக்கக் கந்தர்வப் பதுமைகள் போல் மூன்று பெண்கள் தோன்றினர். சார்னக் இங்கிலாந்துக்குத் திரும்பவில்லை. இந்த அபூர்வ தம்பதி ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே இல்லை. கல்கத்தாவில் ஸெயின்ட் ஜான் சர்ச்சில், அவர்கள் இறைவன் அடியில் துயிலும் இரு கல்லறைகளை இன்றும் பார்க்கலாம். அவர்களுடைய சமாதியறை 'சார்னைகட்' என்ற பல்லாவரத்துப் பாறையினாலேயே செதுக்கப்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள ஒரு கல்லில் பொறித்திருக்கும் பதின்மூன்று ஆங்கிலச் செய்யுட்களும், அந்தக் கோயிலார் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் 1686 கி.பி. முதல் 1786 கி.பி. வரையிலுள்ள ஜனன மரணப் பதிவு ஏட்டில் சார்னக், லீலா, அவர்களுடைய மூன்று பெண்கள் ஆகியவர்களைப் பற்றிய குறிப்பும் உங்களுக்கு இந்தக் கதையின் உண்மையை ருஜூப்படுத்தும்.

சார்னக் எவனோ, லீலா எவளோ; ஒரு தேசத்தவரோ, ஒரு ஜாதியினரோ, ஒரு சமயத்தவரோ அல்ல. ஆனால் கடவுள் எந்த மாதிரி அதிசய வழிகளில் ஜாதிக் கலப்பைச் செய்துவிடுகிறார்! அவர் படைத்த மனித ஜாதி ஒன்றுதானே?

★

Dralle
TALC
Powder
Finest
Musk
Soap
Dralle
மனம்கவர் மணம்..
டிராலி
டால்க் பவுடர்
மஸ்க் சோப்

இந்தியன் பாங்க் லிட்

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோட், சென்னை. 1

உள்ளூர் ஆபிஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை-தேனும்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்களிருக்கின்றன.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	62,02,615
ரிசர்வு மற்றும் இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டிபாசிட்டுகள் (30-6-56)	...	ரூ.	32.08 கோடி

வெளிநாட்டு பரிவர்த்தனையுள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி,
B.A. (Hons.), B.L.
ஆக்டிங் செக்ரடரி.

ஜுபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

★

தீ விபத்து - மோட்டார் விபத்து - கப்பல் விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸ்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

★

நீங்கள் இன்ஷ்யூர் செய்யவும் பிரதிநிதிகளாக இருக்கவும் இணையற்ற ஸ்தாபனம்

★

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

தென்நாட்டுக் கிளை ஆபீஸ்:
167, பிராட்வே, சென்னை-1.

கிளை ஆபீஸ் மானேஜர்:
R. ரங்கனாதன்.

நஜ்மா நாடிய பாதை

'ஜமீலா'

"நான் என்ன பண்ணுவேன் மஸ்தான்? தலையை முட்டிக்கிட்டு அண்ணனிடம் எவ்வளவோ மாரடிச்சுப் பார்த்துட்டேன். தலையெழுத்து இப்படிக் குதியாட்டம் போட்டுடுச்சே!'' என்று அங்கலாய்த்தாள் பாத்திமா. நீர் முட்டி நின்ற விழிகளை மைந்தனின் சாந்தம் பொலியும் வதனத்தின் மீது ஓட்டியதும், நீர்த் திவலைகள் சிதறி, சுருக்கங்கள் படிந்த கன்னங்களில் உருண்டோடின.

''இது விதி செஞ்ச தமாஷா என்று நினைக்காதே, அம்மா. பெண்ணுகப் பிறந்த ஜீவன்களைச் சொக்கட்டான் காய்களாக மாற்றி இந்தத் துனியாவில் மனித குலம் ஆடும் சூதாட்டம், அம்மா!'' என்ருன் மஸ்தான் மனமொடிந்தவனுய். சிரத்தை இறுகப் பிடித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கி வெளிவாசலுக்குச் சென்ருன். திண்ணையில் அமர்ந்துகொண்டு ஜலப் பிரளயம் போல் கண்ணீர் வடித்தான்.

சுருட்டு வியாபாரியான யூசுப் ராவுத்தர் பெற்றெடுத்த பொற்கொடியைத் தாங்கிக் கொள்ள இரு கொழுகொம்புகள் வாட்டசாட்டமாக வளர்ந்து நின்றதைக் கொடிக்கால் பாளையத்துவாசிகள் கவனித்து வந்தார்கள். ஒருவன் மஸ்தான். மற்றவன் ரஹமத்துல்லா.

ராவுத்தரின் தங்கை மகன் மஸ்தான். நற்குணங்கள் வாய்ந்த நல்ல திடகாத்திரமான ஜவான். மூன்ரும் படிவம்வரை படித்தவன். பீடியோ, சுருட்டோ, ரேக்கோ அவன் சுருள் விட்டதை யாரும் பார்த்ததில்லை. இவனுக்கு முற்றும் மாறுபட்டவன் யூசுப் ராவுத்தரின் மைத்துனன் மகன் ரஹமத்துல்லா. உள்ளூர் மாத்திரமல்ல; சுற்று வட்டாரங்களில் கூட ஏதாவது கலாட்டாவும் சச்சரவும் நிகழுமாளுல், அங்கே ரஹமத்துல்லா தரிசனமளிப்பான் என்பது எல்லாரும் அறிந்த விஷயமாகும்.

நஜ்மாவின் தளிர்க் கரத்தைக் கைப்பற்ற ரஹமத்துல்லாவுக்குத் துணிச்சல் உண்டானதற்கு ஒரே காரணம் தன் அத்தையிடம் அவன் செலுத்திய செல்வாக்குத்தான். குடும்ப விவகாரங்களில் யூசுப் ராவுத்தர் தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மை என்றும், தர்பார் நடத்திச் 'சட்ட'ங்களை அமலாக்குவது அத்தை ஒருத்திதான் என்றும் அவன் பல வருஷங்களுக்கு முன்பே தெரிந்துகொண்டான். அத்தைக்குப் பிரியமான பன்னீர்க் கொய்யாப் பழங்களையும், கும்பகோணம் வெற்றிலையையும் வீட்டிற்கு விஜயம் செய்யும் போதெல்லாம் கொண்டு வந்து அன்புக் காணிக்கைகளாக அளித்து, காத்தூன் பீயின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் அடைவதில் 'பிறைக்கொடி' நாட்டிவிட்டான் அந்தக் கில்லாடிப் பயல்!

"என்னுங்க, பாக்கு வெட்டி வேணுமா?'' என்று காத்தூன் பீ மிக்க பரிவுடன் பீடிகை போட்டாள். அந்தச் சமயத்தில் யூசுப் ராவுத்தரின் மிஞ்சிப் போன கடைப் பற்கள் கொட்டைப் பாக்குடன் யுத்தத்தில் ஈடுபட்டு அதைத் துவம்சம் செய்து விடக் குஸ்தி போட்டுக்கொண்டிருந்தன.

''வேணும். சுண்ணும்புக் குவளையை எடுத்து வை'' என்ருர் ராவுத்தர்.

வெற்றிலைக் காம்பை ஒழுங்காகக் கிள்ளி, அதை மடித்து நாக்கில் லாகவமாகக் கொடுத்து உள்ளுக்குள் தள்ளி ராவுத்தர் சப்புக் கொட்டிய அந்தச் சிறந்த சுப வேளையில், ''என்னுங்க இது உங்க தமாஷா! நீங்க பாட்டுக்குக் காசுக்கு உதவாத கூட்டாளிங்களோடு திரிஞ்சுட்டு இருந்தா, பனைமரம் மாதிரி வளர்ந்த நம்ம நஜ்மாவை என்னதான் செய்ய நினைச்சிருக்கீங்க?'' என்று காத்தூன் பீ கறுவியதும், ராவுத்தருக்குத் திக்கென்றது.

''நான் சும்மஞ்ச்சும் நேரத்தை வெட்டிக் கழிக்கிறேன்னு நினைச்சுக்காதே. நல்ல இடமாப் பார்த்துத்தான் வெயில்லே அலையறேன்.''

''கையிலே கெளுத்தி மீன் வச்சுக்கிட்டு ஆணத்திற்குக் கத்திரிக்காயைத் தேடி அலைஞ்சாளாம். அப்படித்தானிருக்கு உங்க கதை.''

ராவுத்தரின் உதடுகள் விரிவதற்குள் மேலும் தொடர்ந்தாள்: ''உங்க சோம்பலைப் பார்த்து அலுத்துப் போய் நானே இந்த விஷயத்திலே குதிச்சுட்டேன். பேச்சு வார்த்தையும் நடத்தி முடிச்சுட்டேன்!''

''என்ன சொன்னே?'' - ராவுத்தரின் தலை கிறுகிறுத்தது.

''நீங்க 'பொவிலை' வாங்க அறந்தாங்கிக்குப் போன வேளையிலே என் அண்ணே இங்கே ஒரு நாள் வந்துட்டுப் போச்சு.''

''அப்படியா?''

''ஆமாங்க. மெத்தை பாய், அஞ்சறைப் பெட்டி, தாழம் பெட்டி நிறைய அச்சுப் பணியாரமும், கொய்யாப் பழமும், வாத்து முட்டையும் கொண்டு வந்து கொடுத்துச்சு.''

''அப்புறம்?''

''நம்ம நஜ்மாவைப் பத்தி அதுக்குச் சொல்ல முடியாத கவலை. உங்களுக்குக் கூட அவ்வளவு

பிரேமை வைத்த இடம் அது. ஆனுலும் நஜ்மா நாடிய பாதை விசித்திரமானது.

இல்லைன்னு சொல்வேன். மேல் விசயத்தையெல்லாம் பேசி முடிச்சுட்டு, 'புள்ளேயின் நிக்காஹ்வை சட்புட்னு முடிச்சுடு, காத்தூன்' என்று தாக்கீது கொடுத்துப் போச்சு.''

''மாப்பிள்ளை யாராம்?''

''இது என்னுங்க புதுசாக் கேக்கிறீங்க? நம்ம ரஹமத்துல்லாதான்!''

''உன் அண்ணன் மவனு!'' - ராவுத்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''அந்த உறவுகூட அதுக்குள்ளாற மறந்துட்டீங்களே!''

''அந்தக் கேப்மாரி, பேமானி, ஹராமியா உன் மகளைக் கட்டப் போகிறவன்?'' - குமுறினுர் யூசுப் ராவுத்தர்.

''ஏங்க தா று மா ரு க வாய் போனபடி உதட்டைச் சுளிச்சுச் சுளிச்சுப் பேசுறீங்க? நாம் சுகமாயிருக்கோம்னு உங்க சொந்தக்காரங்களுக்குப் பொறுக்கமாட்டேன்கிறது. அதுவும் உங்க தங்கச்சி இருக்கே, உம்மாடீ! என் மேலேயும் சரி, என் அண்ணன் மேலேயும் சரி, என் குடும்பத்து மேலும் சரி, பொருமையாலே வயிறு எரிஞ்சு என்ன என்னமோ கதையெல்லாம் கட்டி எங்கெங்கேயோ பேசிக்கிட்டுத் திரியுது. நம்ம ரஹமத்துல்லாவுக்கு என்ன குறைச்சலாம்? ஆறுவேலி நிலம் இல்லையா? தோப்பிலிருந்து முந்நூறு தேங்காய் வரலியா? குளம் குட்டை குத்தகைக்கு எடுத்து மீன் புடிச்சு லாபம் அடிக்கிலியா?''

''காத்தூன், போதும் புள்ளே. அந்தப் பேச்சு வேணும்'' என்ருர் ராவுத்தர் பொறுமையிழந்தவராய்.

''எனக்குத் தெரியுமே உங்க பகல் வேஷம்! அந்தத் தடிப்புள்ளே உங்க தங்கச்சி மவனை மனசிலே வ ச் சி க் கி ட் டு, சைத்தான் மாதிரி பேயாட்டம் ஆடுறிங்க.''

''அவனும் வேணும், இவனும் வேணும்!'' - ராவுத்தர் எரிச்சலுடன் சீறிவிட்டு இடியாப்பத் தட்டைப் போன்ற வெண்மை நிற வலைத் தொப்பியைத் தரையில் ஓங்கி அடித்தார்.

வழக்கம் போல் எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கக் காத்தூன் பீ தயங்கவில்லை.

''சரிங்க. சொல்லிப்புட்டேன். அந்த ரஹமத்துல்லாவுக்கு நஜ்மாவைக் கொடுக்காட்டிப் போனு நானே அந்தக் குட்டியைத் தரதரன்னு இளுத்துட்டுப் போய்க் குட்டையிலே தள்ளிடப் போறேன். அப்புறம் உங்களுக்கும் எனக்கும் அறுந்து போச்சுன்னு நினைச்சுகுங்கோ'' - கர்ஜித்தாள் அந்த அடங்காப் பிடாரி!

தம் அருமைத் துணைவியின் எண்ணத்தை மாற்ற முடியாத துடைநடுங்கி யூசுப் ராவுத்தர் இந்தக் கிடுக்கித் தாக்குதலுக்குப் பின் உடல் நடுங்கிக் 'குடாக்'காக மாறிவிட்டார்!

புழைக்கடைப் பக்கம் நீர் முட்டி நின்ற நயனங்களுடன் சகடையில் தாம்புக் கயிற்றைத் திணித்த வண்ணம் கிணற்றிடம் தின்றுகொண் டிருந்தாள் நஜ்மா.

''நஜ்மா!'' என்ற ஜீவனற்ற ஹீனக் குரலைச் செவி மடுத்துச் சிரத்தையின்றிச் சிரத்தைத் திருப்பினுள். தன் மருங்கிலே மஸ்தான் நிற்பதைக் கண்டதும் அவள் உடலின் உதிர ஓட்டம் உறைந்துவிட்டது.

''விஷயம் காதில் விழுந்தது, நஜ்மா'' என்று மஸ்தான் நடுங்கிய குரலில் நவின்றவுடன் அந்தக் காரிகையின் கயல்விழிகளில் தத்தளித்த நீர் கன்னங்களில் சிந்தி உருண்டோடியது.

''நான் என்ன செய்வேன்? பெண்ணுக இந்த உலகத்திலே தலை காட்டிவிட்டால் இரண்டு உதடுகளையும் ஒன்று சேர்த்துத் தைச்சுடுருங்களே இந்த மனித சாதி!'' - விம்மலுக்கிடையே மேலும் ஆர்ப்பரித்தாள்: ''இத்தனை நாளா ராவும் பகலும் அழுது அழுது என் கண்கள் அவிஞ்சு போச்சு, மஸ்தான். என் நெஞ்சிலே கொழுந்து விட்டெரிந்த பிரேமையை அம்மாவின் காதிலே நான் போட்டதன் பலன் என் கன்னங்கள் தடிச்சுப் போச்சு. என் எண்ணமும் எரிஞ்சு சாம்பலாயிடுச்சு.'' இருதயத்தைக் கீறிக்கொண்டு எழுந்த அவள் ஓலம் மஸ்தானை ஆட்டிவிட்டது.

''மனத்தை அலட்டிக்காதே, நஜ்மா. வாழ்க்கையைத் தன் இஷ்டம்போல் ஆட்டி வைக்கும் விதிக்கு முன் நீயும் நானும் என்ன செய்ய முடியும்? எனக்கு ஒன்றும் கவலை இல்லை. ஆனுல் உனக்கு வரப் போகிறவனை நினைத்தால் ஏக்கம் என் இருதயத்தை ரம்பம் போல் அறுக்குது, நஜ்மா. ஐவந்திப் பூப்போன்ற உன்னை ஒரு முரடனிடம் ஏன் உன் வாப்பா ஒப்படைக்கப்போருரோ? இந்த ஏழையால் என்ன உதவி செய்ய முடியும்? நஜ்மா! என் ஆசை நஜ்மா!'' என்று மிக்க உணர்ச்சியுடன் சொல்லி, தன் முன் நிற்பவளின் தோள்களின் மீது கைகளை வீசி இறுக அணைத்துக்கொண்டு கண்ணீர் சாரல் சாரலாகப் பொழிந்தான் மனமொடிந்த அத்தை மகன்.

''எல்லாம் கு ழ ப் ப மா யி ரு க் கு. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.'' - கைகளைப் பிசைந்துகொண்டு விசித்து விசித்து விம்மினுள் நஜ்மா.

''இதுதான் நம் கடைசிச் சந்திப்பு! இத்தனை வருஷங்களாக நமக்குள் வளர்ந்த அன்பையும் காதலையும் சாட்சிகளாகக் கவனித்த இந்தக் கிணற்றுச் சுவர் இனிமேல் இடிந்து விழுந்துவிடும்; அந்தப் பூவரச மரம் ஒடிந்து மடிந்துவிடும்; உன் மனசிலே நிலைத்து நின்ற என் உருவங்கூட உருக் குலைந்து அழிந்துவிடும், நஜ்மா!'' - நாத் தழுதழுக்கச் சொ ல் லி, காதலியின் கொய்யாக் கன்னங்களை ஆசையுடன் தடவினுன் மஸ்தான்.

''நான் சொல்வதைக் கேட்பீங்களா?'' என்ருள் நஜ்மா கம்மிய குரலில்.

''சொல், என் ஆசைக் கிளியே! எது வேண்டுமானுலும் இந்த அடிமைக்கு உத்தரவு கொடு.''

''உங்கள் வேதனை என்னை வாட்டுது. உங்கள் நிலைமை என்னைப் பை த் தி ய மா க் கு து. என்னை எங்கேயாவது அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்'' என்று நஜ்மா அவன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு மன்ருடியதும், மஸ்தான் மேலும் கலங்கிவிட்டான்.

''உ ன் னை ப் பெற்றவர்களின் ஆசையிலே மண்ணைப் போட்டுவிட்டு என்னுடன் கிளம்பவா போகிறே, நஜ்மா? அதை விடப் பெரிய பாவமும் துரோகமும் இந்த உலகத்தில் இல்லை. வேண்டாம் இந்த எண்ணம்.''

நஜ்மா குலுங்கிக் குலுங்கி அழலானுள்.

''ஒன்று மாத்திரம் நிச்சயம், நஜ்மா. என் பாக்கி நாட்களை இப்படியே 'ஒண்டாங்கட்டி'யாகக் கழித்துவிடத் தீர்மானித்துவிட்டேன்.''

''ஹா!'' - வாயை இறுகப் பொத்திக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தாள் நஜ்மா.

"நீ குடி புகுந்த என் நெஞ்சிலே வேறு எவளுக்கும் இடம் இல்லை. இது நிச்சயம்."

'மஜ்னூ' தன் 'லைலா'விடம் விடை பெற்றுக்கொண்டு நேத்திரங்களிலே நீர் கொப்புளிக்க, நெஞ்சிலே நெருப்புக் கொழுந்து விட்டெரிய மறைந்த பின் ஒரு மாதமும் சோகத்துடன் மாண்டுவிட்டது.

தஞ்சாவூர் ஞானமணி பாண்ட் ஜாம் ஜாமென்று முழங்க, மாலையில்



தோள்களின்மீது கைகளை வீசி...

நாகூர் 'இசைத்தேனீ' மஜீதின் இஸ்லாமிய 'கவ்வாலி' கீதங்கள் சக்கை போடு போட யூசுப் ராவுத்தரின் செல்வி நஜ்மாவுக்கும் விற்கொடி ஜனுப் க.த.த.ப. ரஹமத்துல்லாவுக்கும் அல்லா ஹுத்தாலாவின் பேரருளால் நிக்காஹ் நிறைவேறியது.

திருமணம் ஆகி இரண்டு வாரங்களுக்குள் யாதொரு முன்னறிவிப்புமின்றித் திடீரென்று தன் இல்லத்திற்கு மணமகள் திரும்பி வந்ததைக் கண்டதும் யூசுப் ராவுத்தருக்குச் சொரேலென்றது.

"என்னம்மா, நஜ்மா? இப்படித் திடுதிப்புனு சொல்லிக்கொள்ளாமல் வந்துட்டே, கன்னம் ஏன் அப்படி உப்பியிருக்கு? பொன்னுக்குவீங்கி போலிருக்கு" என்று மகளின் கன்னங்களைப் பாசத்துடன் ராவுத்தர் தடவிக் கொடுத்ததும், தாவணியின் தலைப்

னால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு விம்மினாள் நஜ்மா.

''கன்னம் மாத்திரமல்ல, வாப்பா. இரண்டு பல்லையும் தட்டி எடுத்துக்கிட்டுத்தான் என்னை அவர் அனுப்பினாரு'' என்று நாத் தழுதழுக்க நஜ்மா சொன்னதும் தந்தையின் கண்கள் குளங்களாக மாறின. நெற்றியை இறுகப் பிடித்துக்கொண்டு வெளித் திண்ணையில் அசந்து உட்கார்ந்துவிட்டார்.

இந்தச் சம்பவம் நடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு மறுமுறை நஜ்மா விஜயம் செய்தபோது, அவள் தோற்றத்தைக் கண்டு பெற்றோர் வெலவெலத்துப் போனார்கள். மகளின் செவிகளைச் சிங்காரித்திருந்த 'அரச இலை வாளிகள்' காணவில்லை. கழுத்தில் மின்னிக்கொண்டிருந்த அகத்திக்காய்ச்சுவடி மாலையும், காசுமாலையும் மறைந்துவிட்டதைக் கண்டதும் காத்தூன் பீயின் நெஞ்சு பகீரென்றது.

''அம்மா, என்னை ஒரு பாறாங்கல்லோடு கட்டிப் பாழுங் கிணற்றிலாவது நீங்க தள்ளியிருக்கக் கூடாதா?'' என்ற ஆவேசத்துடன் ஆர்ப்பரித்துத் தாயை இறுகக் கட்டிக்கொண்டு கதறினாள் நஜ்மா.

ஒரு வருஷம் கழிந்தபின் நஜ்மா திரும்பியபோது ஓர் பயங்கரச் செய்தியுடன் வந்து சேர்ந்தாள்.

''அவர் அக்கரைக்குப் போறாராம்'' என்றாள் நஜ்மா, சிரத்தைக் கவிழ்த்துக்கொண்டு.

''போய்த் தொலையட்டும்'' என்றார் யூசுப் ராவுத்தர். எரிச்சலும் வெறுப்பும் அவர் தொனியில் தாண்டவமாடின.

''நானும் கூட வரணுமாம். அவர் தாக்கீது கொடுத்துட்டார்.''

இதைக் கேட்டதும் ராவுத்தருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''நீ எதற்காம்?''

''அவருக்குச் சோறு ஆக்கிப்போட.''

''போட்ட நகைநட்டுகளை நாசமாக்கிவிட்டு, கொடுத்த சீர் வரிசைகளை அடகு வச்சு, 'பண'வாக்கிவிட்டு, இப்போ இந்தச் சீமையிலே செஞ்ச அக்கிரமம் போதாதுன்னு அங்கே அழைத்துப் போய் அறைகளும் உதைகளும் கொடுக்க அந்தப் படுபாவி உன்னைக் கூப்பிடுறானா?''

''அவர் குணத்தைப் பார்த்து என் நாக்குப் புரளக்கூட மாட்டேன்குது. நான் அவரோடு ஒரு நிமிசம் இல்லாட்டிப் போனால் அவர் நிலைமை இன்னும் படுமோசமாகிவிடும். தலைவிதி காட்டிய வழியிலே நான் போயிடுறேன். வாப்பா. அல்லாவின் அருளினால் திரும்பி ஒரு நாள் வராமலா போவேன்?''

மகளை இறுகத் தழுவிக்கொண்டு தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தார் ராவுத்தர்.

நான்கு வருஷங்கள் உருண்டோடின. மகளின் பிரிவையும், அவளுடைய கேவலமான இல்லற வாழ்க்கையையும் நினைந்து நினைந்து ஏங்கிய யூசுப் ராவுத்தர் வெகு நாட்கள் இக்குவலயத்தில் இருக்கவில்லை. இறுதி யாத்திரை செய்துவிட்டார்.

கயிற்றுக் கட்டிலில் புற்றுநோயினால் அவதிப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்த காத்தூன் பீயின் பஞ்சடைந்த விழிகள் யாரோ ஒருவனை எதிர்பார்த்துக்கொண்டு வாசற்கதவை நோக்கியவண்ணம் சுழன்றுகொண்டிருந்தன.

கதவை மெதுவாகத் திறந்துகொண்டே உள்ளே நுழைந்தான் மஸ்தான்.

''வந்தூட்டியா மஸ்தான்!'' - அனல்போன்ற நெடுமூச்சு, காத்தூன் பீயின் உடலை உலுக்கிவிட்டு வெளிக்கிளம்பியது.



ராவுத்தருக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''தந்தி கிடைச்சவுடனே புறப்பட முடியாமே போச்சு, மாமி. ரெயில் தவறிப் போச்சு. பஸ்ஸிலும் மாட்டு வண்டியிலும் மாறி மாறி ஏறி வந்து சேர்ந்தேன்.''

தன் இடுப்பில் செருகியிருந்த கடிதத்தை எடுத்து நீட்டினாள் காத்தூன் பீ. விகிதத்தின் மடிப்பை மஸ்தான் பிரித்ததைக் கண்ட பிறகு கழுத்தை வேறு பக்கம் திருப்பிப் புரண்டு படுத்தாள்.

கடிதம் பின்வருமாறு:

அன்பார்ந்த அம்மாவுக்கு வணக்கம்.

அல்லாஹுத்தாலாவின் அருளால் நான் சுகமாயிருக்கிறேன். எவ் வளவோ பாடுபட்டு, பணமென்று பார்க்காமல் தண்ணீர்போல் வாரி இறைத்து என் வாழ்க்கையை மலரச் செய்ய நீங்கள் எடுத்துக்கொண்ட சிரமங்களுக்கு நான் எந்த விதத்தில் நன்றி செலுத்த முடியும்?

கடல்கடந்து இங்கே வந்து நான்கு வருஷங்களாகியும் அவர் பழைய மனிதராகவே இருந்தார்! வேலை செய்யும் ரப்பர்த் தோட்டத்திலேயும் தம் தீய வேலைகளைக் காட்ட அவர் தயங்கவில்லை. எப்போது பார்த்தாலும் சீனாக்காரனோடும் மலாய்க்காரனோடும் சண்டைதான். யாரோ ஒரு பாவி அவரைக் குத்தி, உயிரைக் குடித்துவிட்டு, உடலைப் புதருக்குள்ளே மறைத்துவிட்டான். அவரை அடக்கம் செய்து, நாற்பதாவது நாள் பாத்தியாவும் ஓதியாச்சு. குழந்தை குட்டி இல்லாத நான் இந்தப் பாழும் வயிற்றுக்குத் தீனி போட இங்கேயே தங்கிவிடத் தீர்மானித்துவிட்டேன். உங்களுக்கு நான் எந்த விதத்திலும் தொந்தரவு கொடுக்க மாட்டேன்.

தங்கள்,
நஜ்மா.

(இந்தக் கடிதம் நஜ்மா பீ சொன்னபடியே கெலாங் எஸ்டேட் மானேஜர் க.கா.ச.சா. ஷேக் தம்பி மரக்காயரால் எழுதப்பட்டது.)

கடிதத்தைப் படித்து முடித்ததும் திக்பிரமையுடன் நின்றுவிட்டான் மஸ்தான். கூடத்தில் பரவிநின்ற மயானத்தின் நிச்சப்தத்தை ஊடுருவிக்கொண்டு கிளம்பியது காத்தூன் பீயின் ஹீனக் குரல்.

''நான் பாவி மஸ்தான்! நேருக்கு நேராகப் பார்க்க ஆண்டவன் கண்ணிரண்டும் கொடுத்தும், குருடாகிவிட்டேன். பெற்ற மகளையே சகதியில் தள்ளிய மிருகமான நான் ராவுத்தரையும் நகரத்துக்குச் சீக்கிரம் அனுப்பிவிட்டேன்'' என்று மிக்க வேதனையுடன் சொல்லிவிட்டு, சப்பியெறிந்த மாங்கொட்டை போன்ற வாடி வதங்கிய தன் முகத்தைப் படார் படாரென்று அடித்துக்கொண்டாள் காத்தூன் பீ. குச்சிபோன்ற அவள் கரங்களை இறுகப் பிடித்துக்கொண்டான் மஸ்தான்.



நஜ்மாவின் கண்ணீர்.

''நான் இப்போ சொல்லப் போவதை நீ கேப்பியா, மஸ்தான்?''

''சொல்லுங்கோ, மாமி.''

''இந்தப் பாவியின் முகத்தில் முழிக்கக் கூடாதுன்னு அந்த அறியாப் பொண்ணு அக் கரையிலே தங்கிடுச்சு. நீ கப்பலேறி அவளை அழைச்சுட்டு வந்துடு.''

ஒரு விநாடி மௌனம் சாதித்தான் மஸ்தான்.

''என்ன, சட்டுனு சொல்லேன்.'' - காத்தூன் பீயின் நெஞ்சு படபடத்தது.

''அப்படியே செய்கிறேன், மாமி.''

''அப்படி அந்தக் குட்டி வர இடக்குப் பண்ணினு, கொழுநனைப் பறிகொடுத்த அந்த அபலையை நிக்காஹ் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிடு, என் கண்ணு!''

மஸ்தான் மலைத்துவிட்டான்.

''சரின்னு சொல்லேன், மஸ்தான்! இந்தக் காதாலே நான் கேட்டுடுறேன்.'' ஹீனக் குரலில் கெஞ்சினுள் காத்தூன் பீ.

தன் சம்மதத்தின் அறிகுறியாக மஸ்தான் லேசாகத் தன் சிரத்தை அசைத்தவுடன், காத்தூன் பீயின் சிரமும் இறுதி அசைவுடன் சாய்ந்துவிட்டது!

வாளி போன்ற தகர டப்பா இடது கரத்தில் தொங்கிக்கொண் டிருக்க, சிறு கத்தியினல் ரப்பர் மரத்தின் பட்டையைச் செதுக்கிக்கொண் டிருந்த நஜ்மாவை எலும்பும் தோலுமாகக் கண்டதும் மஸ்தானின் நாடித் துடிப்பு ஒரு விநாடி நின்றுவிட்டு மறுபடி அடிக்கத் தொடங்கிற்று. 'நஜ்மா' என்று அவளை அழைக்கக்கூட அவனுக்குத் தைரியமில்லாமற் போயிற்று.

''நீங்க எப்படி இவ்வளவு தூரம் வந்துட்டீங்க?'' என்ருள் நஜ்மா நிதானத்துடன்.

''நீ நஜ்மாதாணு என்று கண்களை நம்பாமல் அப்படியே நின்றுவிட்டேன்'' என்ருன் மஸ்தான் தழுதழுத்த குரலில்.

''ஏன், நான் நல்லாத்தானே இருக்கேன்?'' - வறட்டுச் சிரிப்பு அவள் அதரங்களில் கிளர்ந்து மறைந்தது.

''உன் நிலைமை எனக்குத் தெரியாதா, நஜ்மா? வாழ்விலே உன்னைப்போல் வரம்பில்லா வேதனைகளையும் சோதனைகளையும் அநுபவித்தவர் வேறுயார் இருக்கப்போகிருர்கள்? உன்னைப் பாழ்படுத்தியவர்கள் வழியே திரும்பி விட்டார்கள். நீ சந்தோஷமாக நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற ஒரே திடமான எண்ணத்துடன் காலத்தையும் கடலையும் கடந்து வந்த நான் நீட்டிய கரங்களுடன் உன் முன்னுல் நிற்கிறேன்.''

''அதற்காகவா வந்தீர்கள்?'' - பஞ்சடைந்த அவள் விழிகள் சுழன்றன. சிரம் கவிழ்ந்தது.

''ஆமாம், படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கும் உன்னைக் கைகொடுத்து மீட்பது என் கடமை அல்லவா, நஜ்மா.''

''வீணன எண்ணம்!''

''தஞ்சைச் சீமையிலே பிறந்த பெண் ணெருத்தி அயல் நாட்டில் உற்ருர் உறவினரின்றித் தனித்து வாழ்வது உகந்ததல்ல. என்னுடன் புறப்படு. வாதாடாதே.''

''என் உடல் இந்த ஊர் மண்ணோடு மண்ணுகப் போகுமே தவிர, இவ்விடத்தை விட்டு நகர எனக்கு உத்தேசமே இல்லை.'' - நஜ்மாவின் குரலில் கண்டிப்புத் தொனித்தது.

''எல்லாம் வல்ல இறைவனின் தீர்ப்பை யாரால் மாற்ற முடியும்? சரி, நீ வர வேண்டாம். இதையாவது கேள். உன்னை இழந்ததனுல் உள்ளம் இரு கூறுகளாகப் பிளந்தும், உயிரை எப்படியோ சமாளித்து வந்த நான் உன்னை நிக்காஹ் செய்துகொண்டு நீ இழந்த இல்லறச் செல்வத்தை மீட்டு உனக்கு அளிக்கப்போகிறேன், நஜ்மா. இது உன் தாய் இறக்கும்போது கொண்ட விருப்பங்கூட. நான் வந்ததன் நோக்கம் இதுவே.''

''நிக்காஹ்வா!'' உன்மத்தம் பிடித்தவள் போல் அந்த அடவியே எதிரொலிக்கும்படி உரக்கச் சிரித்தாள் நஜ்மா.

''கணவனை இழந்த உன்போன்ற இளம் பெண் மறு விவாகம் செய்துகொள்வது ஓர் உத்தமமான காரியமாகும். நீ இஸ்லாத்தில் பிறந்தவள் என்பதை ஞாபகம் வை.''

கோடையிடி போல் குமுறிக்கொண்டு கடகடவென்று பேய்ச்சிரிப்பை எழுப்பினுள் நஜ்மா.

''என் கழுத்துக் கருவமணி அறுந்தாலென்ன, மஸ்தான்? என்னை அன்புடன் பீவியாக ஏற்றுக்கொண்டு நாலு வருஷங்கள் ஆசையுடன் அணைத்துக்கொண்டு வாழ்ந்த என் எசமானர் இங்கேயல்லவா தங்கிவிட்டார்? அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனிடம் 'பாத்தியா' ஓதிவிட்டு அவர் சமாதியில் ஒவ்வொரு நாளும் ஊதுவத்திகளை ஏற்றிவைக்கிறேன்.''

''அநியாயங்களும் அக்கிரமங்களும் புரிந்து ஒரு பாவமறியாத பெண்ணின் வாழ்வைக் குலைத்த ஒரு பாவிக்கா இந்தத் தொண்டை நீ செய்கிருய், நஜ்மா?''

''கணவனிடம் 'தலாக்' வாங்கிக் கொள்ளும்படி என்னைப் பெற்றவங்களே எவ்வளவோ முறை வற்புறுத்தியும், என் கையை ஆசையுடன் பிடித்தவரின் சுண்டு விரலைக்கூட நான் நழுவ விடவில்லை. ஏதோ அவர் போராத காலம், என்னோடு நேர்மையான வாழ்க்கையை நடத்தக் கொடுத்துவைக்கவில்லை. என் வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றிய அந்த அமீர் எனக்குத் தப்பித் தவறிச் செஞ்ச தீங்குகளை மன்னித்துவிடும்படி அந்த ரஹமானிடம் ஐந்து வேளைத் தொழுகையிலும் கெஞ்சிக் கேட்கிறேன். என் நாளை இப்படியே போக்கிவிட்டால், என் நொந்த நெஞ்சு ஆருமலா போயிடும், மஸ்தான்?'' - குபுகுபுவென்று பீரிட்டெழுந்த கண்ணீர் அவளது அங்கியாவையும் தாவணியையும் நனைத்துவிட்டது.

''நஜ்மா, என்னன்னமோ கனவுகளுடன் வந்து சேர்ந்தேன் நான்.'' - கைகளைப் பிசைந்துகொண்டு திருதிருவென்று விழித்துக்கொண்டு வெடவெடவென்று நடுங்கிய துடைகளுடன் மஸ்தான் நின்றிருந்த கோலம் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''அட கனவுகள்தானே! பொழுது விடிஞ்சு போச்சே! உங்கள் உபதேசங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. பெட்டி படுக்கையை எடுத்துக்கொண்டு வந்த வழியே தயவுசெஞ்சு திரும்பிப் போங்கள்.'' என்று தலை குவித்துச் சலாம் போட்டுவிட்டுத் தான் நாடிய நாட்டத்தை நிரூபிப்பதுபோல், கண்களைத் தாவணியின் தலைப்பினுல் கசக்கிக்கொண்டே நடைப் பாதையில் விறுவிறுவென்று நடந்து, மேடு பள்ளங்களைக் கடந்து, புதர்களிடையே நஜ்மா மறைந்தாள். ★

தி பாலக்காடு சிட் பண்ட்ஸ்

பிரைவேட் லிமிடெட்,

331/333, தம்பு செட்டி தெரு,
சென்னை-1.

கிளை:
பெரிய கடை, பாலக்காடு.

சென்னைக் காரியாலயத்தில் நிகழும் புதிய மாதச் சீட்டுகள்

1. மாதாந்தரக் குறி ரூ. 5,600/-

ஒவ்வொன்றும் ரூ. 100/- மதிப்புள்ள
56 முழு டிக்கட்கள் கொண்டது.

ஒரு டிக்கெட்டின் 1/16 பாகம் (அதாவது மாதந்தோறும்
ரூ. 6-4-0) வரைக்கும் சந்தாதாரராகச் சேரலாம்.

முதலில் எடுக்கும் தேதி
7 நவம்பர், 1956.

2. மாதாந்தரக் குறி ரூ. 1,500/-

ஒவ்வொன்றும் ரூ. 50 மதிப்புள்ள
30 முழு டிக்கட்டுகள் கொண்டது

முதல் ஏலத் தேதி - 15 நவம்பர் 1956

மேலும் தகவல்களுக்கு எழுதித் தெரிந்துகொள்க.

போர்டின் உத்தரவுப்படி
ஏ. எஸ். பி. ஐயர்
மானேஜிங் டைரெக்டர்.

எமது தீபாவளி வாழ்த்துக்கள்



தென்னிந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:—

ஆர்எப். எஸ். அண்டு கோ. பிரைவேட் லிட்.,

16, பிராட்வே, சென்னை. — கிளைகள்: மதுரை, விஜயவாடா.

அபிவிருத்திக்கு ஒரு திட்டம்

ரசாயன உரங்களின் சரியான உபயோகத்தின் மூலமே இந்தியாவின் விவசாய முன்னேற்றத்தைச் சாதிக்க முடியும்.

எங்கள் தயாரிப்புகள்	எமது ஏனைய தயாரிப்புகள்
அமோனியம் சல்பேட்	ஸல்ப்யூரிக் ஆஸிட்
ஸூபர் பாஸ்பேட்	அன்ஹைட்ரஸ் அமோனியா
கலப்பு உரங்க	கார்பன்-டை-ஆக்ஸைட்
(எல்லாப் பயிருக்கும்)	அமோனியம் க்ளோரைடு

நிலங்களின் தன்மையை ஆராய்ந்து தக்க யோசனை கூறுகிறோம். நிலங்களின் வாசியை விரைவாகவும், சரியாகவும் கண்டறிந்து கூறும் நவீன சாதனம் ஒன்று அமெரிக்காவிலிருந்து நாங்கள் இறக்குமதி செய்திருக்கிறோம்.

பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ், திருவிதாங்கூர் லிட்.,

உத்தியோக மண்டல் போஸ்டு — கேரள சமஸ்தானம்

மானேஜிங் ஏஜண்டுகள்:

சேஷசாயி பிரதர்ஸ் (திருவிதாங்கூர்) பிரைவேட் லிட்.

நரம்புக் கருவிகள்: 1. அசாம் வாத்தியம்; 2. 3; துந்தினு; 4; சுரைக்காய்த் தம்புரா;
5. ஸ்வவாதித தம்புரா (எலெக்டிரிக் தம்புரா); 6. கின்னரி; 7. ஏழு தந்தி தம்புரா.

போட்டோக்கள்: என். ராமகிருஷ்ணு



8. வீணை. 9. தஞ்சாவூர் வீணை. 10. வீணை-கோட்டு வாத்தியம். 11. ஏகாண்ட வீணை.
12. மயூர ருத்ர வீணை.

13. பால சரஸ்வதி. 14. சரோட். 15. ஸ்வரபத் (கிளிமூக்கு வாத்தியம்).
16. ஸ்வர மண்டலி. 17. சாதக பிடில், 18. சுரைக்காய்ப் பிடில்.
19. பிடில். 20. ஏழு தந்தி பிடில். 21. சாரங்கி.



தோல் கருவிகள்: 22. கிரிக்கட்டி. 23. தோல் கருவி. 24. குந்தளம். 25. ஜமிடிகா, 26. டமருகம். 27. உடுக்கை. 28. தாசரி தப்பட்டை. 29. சூரியப் பிறை, சந்திரப் பிறை. 30. பேரி. 31. பம்பை. 32. நகாரா. 33. குந்தளம். 34. தமுக்கு. 35. நகாரா. 36. தப்பு. 37. உடல்.



38. தவில். 39. தபலாதரங் - தபலா. 40. பிரம்ம தாளம். 41. டோலக். 42. டோல்கி. 43, 44. மிருதங்கம். 45. கஞ்சிரா. 46. மோர்சிங். 47. சேமக் கலம். 48. குழித்தாளம். 49. தாளம். 50. காங். 51. கைச் சிலம்பு. 52. ஜாலரா. 53. கால் சிலம்பு (கண்டி). 54. கரதாளம். 55. ஜாலரா. 56, 57. சிப்ளாக் கட்டை வகைகள்.

துளைக் கருவிகள்: 58. கோணக் கொம்பு. 59. தவள சங்கு. 60. மகுடி. 61. பூரி. 62. முகவீணை. 63. காற்று வாத்தியம். 64. ஷெனாய். 65. எக்காளம். 66. நாகசுரம். 67. ஒத்து. 68. திருச்சின்னம். 69. நேபாளத் தாரை. 70. குழல்.
உதவி செய்தவர்கள்: அகில இந்தியக் கைத்தொழில் போர்டின் ஆதரவில் சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடந்து வரும் சங்கீத வாத்தியாலயத்தினர்; ஜெமினி ஸ்டுடியோக்காரர்.

எல்லோருக்கும் தெரியும்—
நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது
காற்றுப் புகாமல் நன்றாக பாக் செய்யப் படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று மெத்தவும் சுத்தமாக உங்களுக்குக் கிடைக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,496 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் வாங்கப்படுகின்றன
Darjeeling Brooke Bond Tea Blend
Brooke Bond Tea
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள்!
BB 140D

தி ஏஷியாடிக் கவர்ன்மெண்ட் செக்யூரிடி லைப்

அண்ட்

ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு உட்பட்டது)

★

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:

"பிருத்வி பில்டிங்ஸ்"

கெம்பெகௌடா ரோட், பெங்களூர் ஸிடி.

தலைமை ஆபீஸ்:

"நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்",

362, நேதாஜி ரோட், சென்னை - 1.

★

செலுத்தப்பட்ட மூலதனம் ...... ரூ. 10 லட்சம்

மொத்த ஆஸ்திகள் .... ரூ. 20 லட்சத்துக்கு மேல்

நெருப்பு, கப்பல், மற்றும் வேறு வகை
இன்ஷ்யூரன்ஸ்களை நடத்துகிறது.

ஏஷியாடிக் பூரணப் பாதுகாப்பு அளிக்கிறது.

சிவப்புச் சட்டை

ராஜு

நாராயணனைச் சில பொல்லாத பையன்கள் சிவப்புச் சட்டை என்று கூப்பிடுவார்கள். அவனுக்கு இருப்பது அந்தச் சிவப்புச் சட்டை ஒன்றுதான். எப்பொழுதும் எந்தச் சமயத்திலும் அந்தச் சிவப்புச் சட்டையேதான் அணிந்து கொண்டிருப்பான். அவன் பள்ளிக்கூடத்தில் முதல் மார்க்கு வாங்குவான்.

ஒரு நாள் நாராயணனும், சில பையன்களும் கடை வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. கடை வழியாக அழகான பத்துச் சிறிய குதிரைகளைப் பூட்டிக்கொண்டு ஆங்கில உடைகளைத் தரித்து இரண்டு பேர் வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது பன்னிரண்டு மணி வெயில் ஆனதால் நாராயணன் தான் போட்டுக்கொண்டிருந்த சிவப்புச் சட்டையைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு மற்றப் பையன்களுடன் குதிரைகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் நாராயணனுடைய கையில் இருந்த சிவப்புச் சட்டை கீழே தவறி விழுந்தது. அதே சமயத்தில் கடை வீதியில் வந்து கொண்டிருந்த பத்துக் குதிரைகளும் தடால் என்று கீழே உட்கார்ந்து பூமியில் முகத்தை வைத்துக்கொண்டு தூங்குவது போலக் கண்களை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டன.

நாராயணன் கீழே விழுந்த சட்டையைக் கையில் எடுத்துக் கொண்டான். அவன் சட்டையைக் கையில் எடுத்தவுடன் குதிரைகள் எழுந்து நின்று நடக்க ஆரம்பித்தன. உடனே நாராயணன், "இது என்ன? என் சிவப்புச் சட்டையைக் கீழே போட்டவுடன் குதிரைகள் படுத்துக் கொண்டன. சட்டையைக் கையில் எடுத்துக்கொண்டவுடன் எழுந்து நிற்கின்றன!" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் தன் கையில் இருந்த சிவப்புச் சட்டையைக் கீழே போட்டான். சட்டை கீழே விழுந்ததுதான் தாமதம்; குதிரைகள் தடால் என்று கீழே படுத்துக்கொண்டன. அங்கே இருந்த ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதற்காக உட்கார்ந்து கொண்டார்கள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பொல்லாத பையன்கள் குதிரைகளைக் கம்புகளினால் அடித்து எழுப்ப முயற்சி செய்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. திகைத்து நின்றார்கள். அப்பொழுது சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டே நாராயணன் எழுந்து நின்றான். "ஐயா, இந்தக் குதிரைகளைச் சர்க்கஸ் கம்பெனியிலிருந்து வாங்கினீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம். நடக்காத குதிரைகளை வாங்கி நாங்கள் ஏமாந்துவிட்டோம்" என்று அவர்கள் சொன்னார்கள். நாராயணன், "ஐயா, நீங்கள் நினைப்பது தவறு. இவை நல்ல குதிரைகளே. சர்க்கஸ் விளையாட்டுக்காகச் சிவப்புக் கைக்குட்டையைக் கீழே போட்டால் கீழே படுத்துக்கொண்டு பூமியில் முகத்தை வைத்துத் தூங்குவது போலப் பாசாங்கு செய்ய இந்தக் குதிரைகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். கீழே போட்ட சிவப்புத் துணியைக் கையில் எடுத்தால் இவை தாமாகவே எழுந்திருக்கும். இதோ, இந்தக் குதிரைகளை எழுந்திருக்கச் செய்கிறேன்,

பாருங்கள்'' என்று வெகு வேகமாகக் கீழே கிடந்த சிவப்புச் சட்டையைக் கையில் எடுத்தான். உடனே குதிரைகள் எழுந்து நின்றன. குதிரைகளின் சொந்தக்காரர்கள் நாராயணனுடைய புத்திசாலித்தனத்தை மெச்சி அவனுக்கு வெகுமானம் கொடுத்து அனுப்பினார்கள். அதைப் பார்த்த பொல்லாத பையன்கள் நாராயணன் மீது பொறாமை கொண்டு அவனுக்கு ஏதாவது தீங்கு இழைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

* * * *

தீபாவளி நெருங்கிற்று. பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் ஒரு நாள் மாலை பள்ளிக்கூடம் விடும் சமயம் பார்த்து நாராயணனைக் கூப்பிட்டு அனுப்பினார். ''நாராயணா, பணம் தருகிறேன். நீ கடைக்கு உடனே சென்று கம்பி மத்தாப்புகள், புஸ்வாணம், வர்ண மத்தாப்புகள் முதலியவைகளைச் சீக்கிரம் நான் வீடு போய்ச் சேருவதற்குள் வாங்கி வா'' என்றார். அதைப் பார்த்திருந்த பொல்லாத பையன்கள், ''ஸார், எங்களிடமும் பணம் கொடுங்கள். நாராயணனை விட நாங்கள் சீக்கிரம் வாங்கி வருகிறோம்'' என்றார்கள்.

தலைமை உபாத்தியாயர் சற்று யோசித்துவிட்டு, ''சரி, உங்களிடமும் தருகிறேன். நீங்கள் வாணங்கள் ஒன்றும் வாங்கிவர வேண்டாம். சீக்கிரம் நன்றாக வெடிக்கும்படியான ஒற்றை வெடி, எலெக்டிரிக் பட்டாசு முதலியவைகளைச் சீக்கிரம் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வாருங்கள்'' என்றார்.

பொல்லாத பையன்களுக்கு முன்பு நாராயணன், மத்தாப்புத் தினுசுகளை வாங்கிக்கொண்டு வேகமாகத் தலைமை உபாத்தியாயர் வீட்டை நோக்கிச் சென்றான். பொல்லாத பையன்கள், ''நாராயணன் போவதற்கு முன் நாம் போய்விடலாம். அவன் நடந்து போக வேண்டும். நாம் ஏன் நடந்து போக வேண்டும்?'' என்று சொல்லிக் கொண்டே கடையில் சென்று நன்றாக வெடிக்கும்படியான வெடிகளை வாங்கி ஒரு துணிப் பையில் போட்டுக் கொண்டார்கள். வீதியில் அவர்களுடன் பழக்கம் கொண்ட ஓர் எருமை மாட்டின்மீது இரண்டு பேர் ஏறிக்கொண்டார்கள். வெடிகள் இருக்கும் பையை எருமை மாட்டின் ஒரு கொம்பில் தொங்கவிட்டார்கள். எருமை மாட்டை விரட்டினார்கள்.

நாராயணனுக்கு முன்பு தலைமை உபாத்தியாயரிடம் போய்ச் சேர வேண்டும் என்பது அவர்கள் நோக்கம். எருமை மாடு வேகமாகப் போய்க்கொண் டிருந்தது. பாதித் தூரத்திலே நாராயணன் நடந்து போய்க்கொண் டிருப்பதைப் பார்த்தார்கள். ''நாராயணா, நீ மெதுவாக வா. உனக்கு முன்னாடி நாங்கள் இந்த வெடிகளைத் தலைமை உபாத்தியாயரிடம் கொடுத்து நல்ல பெயர் சம்பாதித்துக் கொள்ளுகிறோம்'' என்று எருமை மாட்டை வேகமாகத் துரத்தினார்கள். ஆனால் அந்த எருமைமாடு அப்பொழுது என்ன செய்தது தெரியுமா?

நாராயணன் அணிந்துகொண் டிருந்த சிவப்புச் சட்டையைப் பார்த்து அது மிரண்டது. பயந்து வெகு வேகமாக நாராயணனுக்கு முன்பு ஓடிற்று. பொல்லாத பையன்கள் அதைப் பார்த்துச் சந்தோஷம் கொண்டார்கள். ஆனால் அடுத்த நிமிஷம் அவர்களுடைய சந்தோஷம் துக்கமாக மாறிற்று. ஏனென்றால் எருமைமாடு எதிர்பாராத விதமாக மிரண்டு வெகு வேகமாக அருகில் இருந்த தண்ணீர் நிரம்பிய ஒரு குட்டையில் வேகமாக இறங்கி, முதுகில் உட்கார்ந்த இருவரையும் வைத்துக்கொண்டு தண்ணீரில் மூழ்கிற்று.

பொல்லாத பையன்கள் எவ்வளவு முயற்சி செய்தும் பயன் இல்லை. பிறகு அவர்கள் இருவரும் தண்ணீரில் குதித்தார்கள். எருமையின் கொம்பில் தொங்கவிட்டிருந்த வெடிகள் இருக்கும் பையை எடுத்தார்கள். வெடிகள் நன்றாகத் தண்ணீரில் ஊறிவிட்டன. மிகவும் வருத்தத்துடன் தலைமை உபாத்தியாயரிடம் குற்றத்தை ஒப்புக் கொண்டார்கள். அன்று முதல் அவர்கள் நாராயணன் விஷயத்தில் தலையிடுவது இல்லை.

இப்பொழுது நாராயணன் பெரியவனாகி விட்டான். ஆனாலும் இப்பொழுதும் கையில் சிவப்புக் கொடி இருக்கிறது. அவன்தான் இப்பொழுது ரெயில்வே கார்டாக இருக்கிறானே? ★

யார், எந்த உடையில்?

இந்தியாவில் வெவ்வேறு ராஜ்ய மக்கள் வெவ்வேறு வகை உடை உடுத்துகிருர்கள். இவர்களில் எவர் எந்த ராஜ்யத்தவர் என்பதை உடையிலிருந்து கண்டுபிடியுங்கள்.

நான் ஆர்?

1. சூரியன் வீசுவது வெயில்
தள்ளியே ஆடுவது மயில்
நாரியரிடம் உண்டு ஒயில்
நானார் தெரியுமா——?

2. மரங்களில் வளரும்புல் லுருவி
மலையில் வீழ்வது அருவி
அரமென்ப திருப்புக் கருவி
அடியேன் பேர் என்ன?——

3. சீவுதற் குதவும் கத்தி
தினசரியில் உண்டு பத்தி
மேவிய சிற்றன்னை சித்தி
விளங்குமென் பேர்?——

4. மீனில் ஒருவகை சுறா
மென்மலர் களில்மணம் அறா
தேனுக் கொருபெயர் நறா
சிறியேன் பெயர் என்ன?——

5. வெடிகள் பண்ணுமிடம் சைனா
வெப்பும் ஜுரமருந்து கொய்னா
படிபடி என்பார் நைனா
பறவைஎன் பேர் என்ன?——

6. இறைவன் தருவது முத்தி
இருபதம் பணிவது பத்தி
குறைவிலாச் செல்வம் புத்தி
கூகூ நான்?—— ——

எல்லா பண்டிகை

நாட்களுக்கும்

ஏற்றது

மிக அற்புதமானது!
வைணகரிக அமைப்பும் திறம்பட
வேலை செய்யக் கூடியதுமான
பற்பல ரகங்களை அளிப்பவர்கள்
பிலிப்ஸ் கம்பெனியார்தான்.
இவற்றில் ஒவ்வொன்றும்
விசேஷ சந்தர்ப்பத்துக்கு மிகச்
சிறந்த பரிசுப் பொருளாகவே இருக்கும்



ரேடியோக்கள்
ஏஸி. ஏஸி/டிஸி அல்லது பாட்டரி மாடல்கள்
விலை — ரூ. 175/-லிருந்து

ரேடியோகிராம்ஸ்
ஏஸி மட்டும். மேஜையிலும் தரையிலும் வைக்கக்கூடிய மாடல்கள்
விலை — ரூ. 525/-லிருந்து

டிஸ்க் - ஜாக்கி
ஏஸி மட்டும்
விலை — ரூ. 165/-

பிலிகிராம்
மின்சார கிராமபோன்
ஏஸி மட்டும்
விலை — ரூ. 595/-

இசைத்தட்டு மாற்றுவது
ஏஸி மட்டும். மூன்றுவித வேகம்
தானே இயங்குபவை
விலை — ரூ. 195/-



நீண்டநேரம் பாடும் இசைத்தட்டுகள்
பொதுஜனரஞ்சகமும்
உயர்தரமுமானவை



'டிபோல்' ஏரியல்
நுட்பமான வான ஒலியையும்
கிரகிக்கக் கூடிய நவீன ஏரியல்
விலை — ரூ. 45/-

(விலைகளில் கழிவு இல்லை
உள்ளூர் விற்பனை வரிகள் தனி)

பிலிப்ஸ் கம்பெனியாரின் விற்பனையும் அதற்குப்பின் அளிக்கப்படும் சேவையும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்லுபவை. உங்கள் ரேடியோவோ, இசைத்தட்டு மாற்றும் கருவியோ உடனே கவனிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால்...

...உங்கள் பிலிப்ஸ் டீலரிடம் ஒப்படைத்து விடுங்கள்!

PHILIPS **பிலிப்ஸ்**

குடும்பத்தின் குதூகல பொழுதுபோக்கிற்கு

வழி காட்டுங்கள்



ஒரு தபால்காரன் தன் வட்டாரத்திலுள்ள 21 பெட்டிகளிலிருந்து தபால்களை எடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு முறை சென்ற வழியில் அவன் மீண்டும் செல்வது வீண்தானே? ஆதலால் அவன் முதல் பெட்டியிலிருந்து 21-ஆவது பெட்டிக்குச் சிரமமில்லாமல் போய்ச் சேர வழி காட்டுங்கள்.

விடைகள்:

யார், எந்த உடையில்?

மலையாளம், மார்வாடி, வங்காளம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரா, குஜராத், தமிழ்நாடு, நாகர், காஷ்மீரம், ஆதிவாசி, நேபாளம்.

வழி காட்டுங்கள்:

தபால்காரன் இங்கே குறிப்பிட்டுள்ள வரிசையில் தபால்களை எடுத்துச் சென்றால் அவனுக்குச் சிரமம் குறையும்: 1, 2, 3, 5, 8, 4, 10, 9, 19, 11, 7, 15, 6, 13, 14, 16, 12, 18, 20, 17, 21.

எந்தக் கொடி, எந்த நாட்டுக்கு?



பச்சை சிவப்பு நீலம் ஆரஞ்சு



இந்தியாவின் கொடி என்ன என்பது உங்களுக்கு நன்ருகத் தெரியும். இதோ இங்கே வேறு சில நாடுகளின் கொடிகளும் தரைப் படங்களும் இருக்கின்றன. எந்த நாட்டுக்கு எந்தக் கொடி என்று உங்களால் சொல்ல முடியுமா?

விடை: 1. இந்தோனேஷியா. 2. எகிப்து. 3. அயர்லாந்து 4. ஜப்பான்; 5. பாகிஸ்தான். 6. பிரான்ஸ்.

பழம் பெரு நகர்கள்

அன்றும் இன்றும்

பூம்புகார்: சோழர்கள் அரசாண்டு உலகிலே தம் புகழை நிறுவிய தலைநகரம் பூம்புகாராகிய காவிரிப் பூம் பட்டினம். இன்று வெறும் மணற்பரப்பாக இருக்கும் கடற் கரையில் அன்று யவன நாட்டுப் பண்டங்கள் வந்து குவிந்தன. தமிழ் நாட்டுத் துகிலும் முத்தும் பவளமும் அகிலும் வெளி நாட்டுக்குச் சென்றன. இன்று சிறிய வீதிகள் உள்ள சிற்றூர் அது. அன்று சோழனின் அரண்மனை வானை முட்ட ஓங்கி நின்றது. பிற்காலத்தில் துறவரசாக வாழ்ந்த பட்டினத்தார் மாளிகையும் அங்கு இருந்தது. இன்று அவருடைய வடிவங் களைப் பல்லவனீச்சுரத்துக் கோயிலில் பார்க்கிறோம்.

உறையூர்; கரிகாலன் உள் நாட்டிலும் ஒரு தலைநகர் வேண்டுமென்று தேடிப் புறப்பட்டான். போகும் வழியில் அவன் யானையை ஒரு கோழி கொத்தக் கண்டு, இந்த மண்ணிலே வீரம் இருக்கிறதென்று அங்கே நகரை அமைத் தான். அதுதான் உறையூர். பல ஊர்ச் சிற்பிகளைக் கொண்டு கோட்டை கொத்தளம் அமைத்தான். இன்று உறையூர் சிறிய ஊர். அங்கே பனைமரம் சூழ்ந்த சூழலில் சோழன் பாறை என்ற ஒரு சின்னம் இருக்கிறது. அதில் ஏறப் படிகளும் உண்டு.

தஞ்சாவூர்: இராஜராஜன் என்றாலே சோழ குலத்திற் சூரியன் என்று சொல்லிவிடலாம். மலை கடந்து கடல் கடந்து போரிட்டு வென்றான். வென்ற பொருளைக் கொண்டு இறைவன் திருக்கோயிலையும் கோட்டையையும் கட்டினான். இராஜ ராஜேசுவரம் என்ற அந்தத் திருக்கோயிலை இன்றும் பார்க்கி றோம். பிற்காலத்தில் மராட்டிய மன்னர்களின் ஆட்சிப் பீடமாகவும் இருந்தது தஞ்சை. அந்தக் காலத்துச் சின்னமாகிய பீரங்கியையும் கல்யாண மஹாலையும் படத்திலே பார்க்கிறீர்கள்.

கங்கைகொண்ட சோழபுரம்: இராஜராஜனுடைய மகன் இராஜேந்திரன். அவன் வடக்கே சென்று புலிக் கொடியை நாட்டி வடமன்னர் தலையில் கங்கையை எடுப்பித்து வந்து இந்த நகரை நிறுவினான். அதனால் கங்கைகொண்ட சோழன் ஆனான். அவன் கட்டிய திருக்கோயிலும், அக்கோயிலில் கலைமகள் முதலிய மூர்த்திகளின் சிற்பமும் சிங்கக் கிணறும் இன்றும் பழமையை நினைவுறுத்திக்கொண் டிருக்கின்றன.

தாராசுரம்: மூன்றாம் குலோத்துங்கன் தன் தந்தையாகிய இரண்டாம் இராசராசன் பெயரால் கட்டியது தாராசுரம். இராசராசேச்சுரம் என்பதே அப்படிச் சிதைந்து விட்டது. பேரும் சிதைந்தது; ஊரும் சிதைந்தது. அவன் கட்டிய திருக் கோயில் இன்று ஒருவாறு உயிர் வைத்துக்கொண்டு நிற்கிறது. அங்கே சிங்காதனம் இல்லை. கல்யானைதான் இருக்கிறது.

பட்டீசுவரம்: பழையாறை என்பது பல காவதம் விரிந்த நகரம். அதற்குள்ளே அடங்கியவை பட்டீசுவரம், சத்திமுற்றம். சுந்தரசோழன் அரசாண்ட இடம் அது. ஞானசம்பந்தர் பல்லக்கில் வந்து பணிந்த இடம் பட்டீசுவரம். விஜய நகர மன்னர் காலத்தில் அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதர் இங்கே பல திருப்பணிகள் செய்தார். இன்று திருமதில் உடைந்து நிற்கிறது. கோவிந்த தீட்சிதரும் அவர் மனைவியும் அதைக் கண்டு சிலையாக நிற்கிறார்கள்.

புவி சொல் கதை

ஆழி கடந்து சென்றே - அமரில்
அயலவர் தம்மை வென்று
சூழும் வளம் சுமந்தே - நகர்க்குச்
சோழர் திரும்பி வந்தார்.

கோட்டைகள் கொத்தளங்கள் - பலவாம்
கோயில்கள் மாளிகைகள்
நாட்டியம் ஆடுதற்குக் - கவின்கொள்
நாடக சாலை செய்தார்.

புலவரைக் கூட்டிவைத்துத் - தமிழின்
பொற்பு வளரக் கண்டார்
கலைஞரைப் போற்றி அவர் - திறத்தைக்
காட்டப் பரிசு தந்தார்.

இன்னவகை ஓங்கிவளர் நன்னகரம் எல்லாம்
இன்றுதிகழ் கின்றநிலை என்னென வினவீர்!
சின்னம்இவை யன்றிஓர் சிறப்புமிலை என்றே
செப்பும்வகை தாழ்ந்தநிலை சேர்ந்தபதி சிலவே.

முன்னருறு மன்னர்கள் முடிந்தபினும் வேறு
முடியுடைய வேந்தர்கள் முழங்குமுர சார்ப்ப
மன்னுநக ராகிவள மல்கிவர லாறு
மாட்சியுற நீட்சிபெறு மாநகர்கள் சிலவே.

வாழ்வுபெறு வார்கள்வள வாழ்வுமிக நீண்டு
வாழ்வதுவும் உண்டு; சிலர் வாழ்வுசில காலம்
சூழ்வளம் நிலாவியபின் தோன்றும்எழில் மாய்ந்து
தொலைவதுவும் உண்டு; புவி சொல்கதைஇ தன்றோ?







பூம்புகார்



உறையூர்


தஞ்சாவூர்





கங்கை கொண்ட சோழபுரம்



தாராசுரம்







பட்டீசுவரம்

இருளோ வனமோ! மஞ்சோ பஞ்சோ!

போட்டோ: ஈ. ராமலிங்கம்.

ராஜாங்கத்தாரின்
உயர்ரகத் தயாரிப்புகள்

கேரளா சோப் இன்ஸ்டிட்யூட்,
கோழிக்கோடு.

சோப்புகள்

டாய்லட் சோப்புகள் - மருந்து சோப்புகள் - சலவை சோப் - க்ஷவர சோப் - ஷாம்பூ - தொழிற்சாலைக்கான சோப் - வீட்டுச் சலவை சோப் - பற்பசை முதலியவை.

கவர்ன்மெண்ட் ஆயில் பாக்டரி,
கோழிக்கோடு.

விடமின் எண்ணெய்

அதிகச் சத்துள்ள சுறுமீன் எண்ணெய்; விடமின் ஏ-யும் டி-யும் நிறைந்தது.

அடமின் (காப்ஸ்யூல்கள் மற்றும் திரவம்)

கிராம்: ஒவ்வொரு கிராம் எடையிலும் 12,000 சர்வ தேச யூனிட் விடமின் 'ஏ' யும் 1000 சர்வ தேச யூனிட் விடமின் 'டி' யும் அடங்கியுள்ளது.

ஷார்க் லிவர் ஆயில் (திரவம்)

கிராம்: ஒவ்வொரு கிராம் எடையிலும் 1500 சர்வ தேச யூனிட் விடமின் 'ஏ' யும், 100 சர்வதேச யூனிட் விடமின் 'டி' யும் அடங்கியுள்ளது.

யூனிவாக்ஸ் & ட்ரைவாக்ஸ்

பசு, எருமை, குதிரை முதலிய கால்நடைகளுக்கும் கோழி, வாத்து முதலியவைகளுக்கும் பயன்படும் ஏ, டி விடமின்கள் நிறைந்தவை.

பட்டு

கவர்ன்மென்ட் ஸில்க் பிலேச்சர்ஸ்
கொள்ளேகாலம்

ஜவுளி தினுசுகள்: சேலைகள், கோட்டிங்ஸ், ஷர்ட்டிங்ஸ், வேஷ்டிகள், அங்க வஸ்திரங்கள், சோளித் துண்டுகள் முதலியவை.

நூல்கள்: 13-லிருந்து 30 டெனியர்கள் வரை (மயில் சின்னம்)

50—71





திருடன் வெளியே வந்தான்.
அவனுக்கு அதிருஷ்டம் அடித்தது!

சென்னையம்பதியிலே, கூவம் நதி தீரத்தின் வடதிசைப்பால் அமைந்துள்ள, 'பெனிடென்ஷியரி' என்ற சிறைக் கோட்டத்திற்குள், சிதம்பரம் என்ற நாமமுடையான், ஓராண்டுக் காலம் கடும்பணி யாற்றுவதற்காகச் சிறையிருத்தப்பட்டிருந்தான்!

சிதம்பரம் தெரியாத்தனமாகவும், வேறு வழியின்றியும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை மட்டுமே கொடுத்துவிட்டுச் சர்க்கார் வேலை தேடிப் பிடிக்க முயன்ருன். எத்தனையோ வேலைகளையும் தேடிவிட்டான். ஆனால் அவற்றுள் ஒன்றையும் அவனால் பிடிக்கத்தான் முடியவில்லை.

வேலை கிடைக்காததற்காக அவன் தன் வாழ்க்கை வசதிகளைக் குறைத்துக்கொள்ளத் தயாராய் இல்லை. தனது திறமையையும் புத்திசாலித்தனத்தையும் அவன் வீணுக்க விரும்பவில்லை. நூற்றுக்கணக்கில் சம்பாதிக்கத் துடி துடித்தான். ஆனால், அதற்காக அவன், கன்னம் வைத்துத் திருடவோ. கொள்ளை

திருடனும்

யடிக்கவோ, கறுப்பு மார்க்கெட் வியாபாரம் செய்யவோ இஷ்டப் படவில்லை.

அவன் ஒரு சிறிய தந்திரத்தைக் கையாண்டான். சில பெரிய மனிதர்களின் முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் பேராசைக்காரர்கள், மூட நம்பிக்கையுள்ளவர்கள், அசடுகள் என்று கண்டுகொண்டு விடுவான். அவர்களை ரகசியமாகச் சந்தித்து, அவர்களிடம் இருக்கும் கரென்ஸி நோட்டுக்களை இரட்டிப்பாக்கிக் கொடுப்பதாகச் சொல்லுவான்.

சிதம்பரம் வாட்டசாட்டமாய், நல்ல உடலமைப்புடன் பார்ப்பதற்கு அழகாக இருப்பான். அவன் வலையில் சிக்கிக்கொள்பவர்கள், அவன் பேச்சில் மயங்கிப்போய்க் கரென்ஸி நோட்டுக்களைக் கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள்.

அவன் முதலில் ஓர் ஐந்து ரூபாய் நோட்டை இரண்டாகச் செய்து காட்டுவான். பிறகு ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொண்டு வரச் சொல்லுவான். அதற்குக் குறைந்து அவன் காரியத்தில்

எம்.எல்.ஏயும்

துமிலன்

இறங்குவதில்லை. நோட்டை இரட்டிப்பாக்குவதற்கு அவசியமான பூஜை, மந்திர ஜபம் முதலியன பூர்த்தியடைய மூன்று தினங்கள் கெடு கூறியிருப்பான். ஆனால், அதற்குள் அவன் மாயமாய் மறைந்து விடுவான்; ஐந்து பச்சை நோட்டுக்களுடனுந்தான்.

கடைசியாக அவன், ஒரு போலீஸ் அதிகாரியின் மைத்துனனிடமே தன் கை வரிசையைக் காண்பிக்க முயன்றபோது அகப்பட்டுக் கொண்டுவிட்டான். வழக்கை விசாரித்த மாஜிஸ்டிரேட், நாட்டில் ஏற்கனவே ஏராளமான கரென்ஸி நோட்டுக்கள் புழங்கி வந்து கொண்டிருப்பதால், சிதம்பரம் சிறிது காலத்திற்கு நோட்டை இரட்டிக்கும் கைங்கரியம் செய்யாதிருந்தால் நல்லது என்று அபிப்பிரா

யப்பட்டார். ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

சிதம்பரம், சென்னைப் 'பெனிடென்ஷியரி' சிறைச்சாலைக்குச் சர்க்கார் விருந்தினனாக வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன.

மாஜிஸ்டிரேட் அவனுக்கு அளித்த பன்னிரண்டு மாதத் தண்டனையில், தான் அநுபவித்துவிட்ட இரண்டு மாதங்கள் போதுமானவை என அவன் அபிப்பிராயப்பட்டான். ஆகவே, சிறையை விட்டு வெளிவருவதைப் பற்றி அவன் தீவிரமாக யோசனை செய்து வந்தான்.

தீபாவளிப் பண்டிகை வந்தது. சிறிதும் எதிர்பாராமல் திடீரென்று பிரபலமாகிவிட்ட ஒரு ஸினிமா நட்சத்திரத்தின் புருஷர், சிறையில் இருந்தவர்களுக்குத் தீபாவளிப் பணியாரம் வழங்க ஏற்பாடு செய்திருந்தார். பிரபல விசாலாந்திரா சகோதரிகள் நால்வரும் சிறைக்குள் நடனக் கச்சேரி செய்ய ஒப்புக்கொண்டனர்.

பண்டிகையன்று நடனக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. மேடைக்கு எதிரில் பக்கவாட்டில் இரு புறங்களிலும் சிறை அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் அமர்ந்திருந்தனர். எதிரே நூற்றுக் கணக்கான கைதிகள் உட்கார்ந்து நடனத்தைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தனர்.

அதிகாரிகளுக்கு அருகில் கீழே அமர்ந்திருந்த சிதம்பரம், நடனத்தை ரஸிப்பதுபோல் பாவனை செய்த வண்ணமே இடையிடையே சுற்றுமுற்றும் கவனித்துக்கொண்டிருந்தான். யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள், எந்த எந்த வழி எப்படி எப்படி அடைக்கப்பட்டிருக்கிறது என்று அவன் நோட்டமிட்டான்.

அவன் பக்கத்தில் இருந்த அதிகாரி நடனத்தை ரஸிப்பதில் தம்மையும் மறந்துபோய், தமது உடலையும் கைகால்களையும் இப்படியும் அப்படியும் அசைத்துக்கொண்டிருந்தார். அப்போது, நாற்காலியின் கையில் அவர் மடித்துப் போட்டிருந்த பெரிய ரப்பர் மழைக்கோட்டுக் கீழே விழுந்ததையும் அவர் கவனிக்கவில்லை. சிதம்பரம் அதைத் தன் கால் பக்கம் நகர்த்தி வைத்துக்கொண்டான்.

சுமார் ஆறரை மணி இருக்கும். அப்போதே நன்றாக இருட்டத் தொடங்கிவிட்டது. ஏற்கனவே மப்பிட்டிருந்த வானத்தில் திடீரென்று கருமேகங்கள் சூழ்ந்தன. பிசுபிசுவென்று நாலு மழைத் துளிகள் விழுந்து நின்றுவிட்டன. கைதிகள் எல்லாரும் ஆகாயத்தை அடிக்கடி பார்த்தவண்ணம் தத்தம் இடங்களில் அசைந்து கொடுத்து உட்கார்ந்தார்கள். மழையினால் நடனக் கச்சேரி நின்றுவிடுமோ என்று அவர்களுக்குப் பயம்.

சில நிமிஷ நேரங்கள் மழை இல்லை. நடன சகோதரிகள் 'வெண்ணிலா நடனம்' ஆரம்பித்தனர். மறுகணம் வானம் குமுறத் தொடங்கியது. பிறகு இடி மின்னல், பேய்க் காற்றுடன் பெரிய மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. கைதிகள் எல்லாரும் எழுந்து நின்று அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தனர். ஆனால் அதிகாரிகளும் சிறைக் காவலாளிகளும் குழப்பம் ஏற்படாமல் தடுப்பதற்குள்ள முன்ஜாக்கிரதையுடன் இருந்தனர். சிதம்பரத்திற்குப் பக்கத்தில் இருந்த மழைக் கோட்டை நழுவ விட்ட அதிகாரி, அதைப்பற்றி அடியோடு மறந்துபோய், கைதிகளை ஒழுங்காக நடந்துகொள்ளச் செய்வதற்காகப் பாய்ந்து ஓடிவிட்டார்.

வானத்தில் பளிச்சிட்டுக்கொண்டிருந்த மின்னலைப்போல், சிதம்பரத்தின் மூளையிலும் ஒரு யோசனை பளிச்சென்று உதயமாயிற்று. அவன் தன் காலின் கீழிருந்த மழைக்கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு, அதோடிருந்த குல்லாயையும் தலையில் போட்டுக்கொண்டு, அதிகாரிகளோடு அதிகாரிகளாக அங்கும் இங்கும் பாய்ந்து சென்று, கைதிகளைச் 'சிறைக்கூட அறைகளின் தாழ்வாரத்திற்குப் போகச் சொல்லிக்கொண்டிருந்தான். பிறகு திடீரென்று வேகமாகச் சிறை வாசற் பக்கம் சென்று, ''இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு வண்டி வேண்டும். அவசரம், அவசரம்!'' என்று வாசற்காப்பவனிடம் கூறி வெளியில் செல்லத் துடி துடித்தான். அவன் யாரோ பெரிய அதிகாரி என்று கருதிய அந்தக் காவலாளி சிறைக் கதவிலுள்ள துவாரத்தைத் திறந்து, அதன் வழியே போகச் செய்தான்.

சிறைக்கு வெளியே 'சோ' என்று பெருமழை பெய்துகொண்டிருந்தது. சிதம்பரம், சிறிது தூரம் மெதுவாக நடந்து சென்றான். அவன் நேரே சிறைக்கு வெளியே செல்லும் டிராம் வண்டிகள் ஓடின வீதிக்குச் சென்றான். பக்கத்தில் கூவம் நதிப் பாலம் இருந்தது. அதன் கோடியில் ஓரமாக இருந்த ஒற்றையடிப் பாதை வழியாக, கீழிறங்கிச் சென்று ஆற்றங்கரையை அடைந்தான்.

பிறகு, கரையோரமாக மேற்குப் பக்கம் நோக்கி வேகமாக நடந்து செல்லலானான். வழியில் தென்பட்ட ஒரு படகில் ஏறி ஒளிந்துகொண்டான். இரவு இரண்டு மணி அடித்தபோது அவன் அதிலிருந்து வெளிவந்து, மறுபடியும் ஆற்றங்கரையோடு நடந்து சென்றான். பிறகு கரையேறி, பல வீதிகளைக் கடந்து எழும்பூர் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறிய தோப்புக்குள் நுழைந்தான். அங்கே நடுவில் ஒரு பங்களா இருப்பது கண்ணில் பட்டது.

வீட்டிலிருந்து வெளிச்சம் எதுவும் வெளியில் தெரியவில்லை. ஒரு காலத்தில் வெள்ளைக்காரர்கள் வசித்து வந்த பங்களாவானதால் பின் பக்கம் பட்லர்கள் செல்வதற்காக மர மாடிப்படி அமைக்கப்பட்டிருந்தது.

சிதம்பரம் அதன் வழியாக ஏறிச் சென்று உள்ளே இருந்த சிறிய கதவைப் பலமாகத் தள்ளிப் பார்த்தான். அது திறந்துகொள்ளவே, அவன் கடவுள் தன் பங்கில் இருக்கிறாரென்று நினைத்தான். கதவை மெதுவாகத் திறந்துகொண்டு சிறிது நேரம் நின்றான். பிறகு கதவைச் சார்த்திவிட்டு, கதவின் வலப் பக்கம் தடவிப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தது போலவே அங்கே ஸ்விட்ச் இருந்தது. அதைப் போட்டுப் பார்த்தான். விளக்கு எரிந்தது. ஆனால் அது விடிவிளக்காதலால் மிகவும் மங்கலாக எரிந்தது. அவன் நின்றது ஒரு தாழ்வாரம். பக்கத்திலுள்ள ஜன்னல்களெல்லாம் மூடியிருந்ததைக் கண்டு வெளிச்சம் வெளியே தெரியாதென்று திருப்தியடைந்தான். பக்கத்தில் ஸ்நான அறை இருப்பதைக் கவனித்தான்.

பிறகு உட்பக்கம் சென்றான். அங்கே ஒரு பெரிய ஹால் இருந்தது.

ஹாலில் இருந்த ஜன்னல் கதவுகளையெல்லாம் சார்த்திவிட்டு விளக்கைப் போட்டுப் பார்த்தான். நடுவில் ஒரு பெரிய மேஜை இருந்தது. பக்கத்திலிருந்த ஒரு 'டீப்பாய்' மீது சலவையிலிருந்து வந்த துணிகள் வைத்திருந்தன. அவற்றைக் கண்டு அவன் மகிழ்ச்சி அடைந்தான். நன்றாக ஸ்நானத்தைச் செய்துவிட்டு, மறுபடியும் ஹாலுக்கு வந்தான். அங்கிருந்த ஒரு மேஜை விளக்கைப் போட்டுத் துணிகளை எடுத்துப் பார்த்தான். அதில் தனக்குப் பிடித்த ஒன்றை எடுத்துக் கட்டிக்கொண்டான். மேலுக்கு ஒரு ஜிப்பாவை எடுத்துப் போட்டுக்கொண்டான். அது அவனுக்காகவே தைத்தது போல் அவ்வளவு சரியாக இருந்தது. பிறகு மேஜையைக் கவனித்தான். பிரித்து வைத்திருந்த ஒரு பிஸ்கெட் பெட்டியில் சில பிஸ்கெட்கள் இருந்தன. அவற்றை எடுத்துத் தின்றான். பிறகு ஒரு தட்டில் இருந்த கறுப்புத் திராட்சைப் பழங்களைத் தின்றுகொண்டே மேஜை மீதிருந்த ஒரு தோல் பையைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதன் மீது 'பூபதி எம்.எல்.ஏ' என்று அச்சிட்டிருந்த கார்டு செருகியிருந்தது. பையின் 'ஸிப்' சங்கிலியைத் தள்ளி உள்ளே பார்த்தபோது ஒரு பக்கவாட்டுப் பையில் ஆறு பத்து ரூபாய் நோட்டுகளும் கொஞ்சம் சில்லறைகளும் இருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்தான்.

பிறகு, தோற்பையைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே கிளம்ப இருந்தபோது, கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த வெள்ளைக் குல்லா ஒன்று கண்ணில் பட்டது. அதை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு கண்ணாடியில் பார்த்துக்கொண்டபோது தான் உண்மையிலேயே ஒரு சட்ட சபை அங்கத்தினன் என்று நினைத்துக்கொண்டான்.

'பூபதி'யின் விஸிடிங் கார்டை எடுத்து அதிலுள்ள பெயரை ஒரு தரத்திற்கு இரண்டு தரமாகப் படித்துவிட்டு அதைப் பின்பக்கம் திருப்பிப் பார்த்தபோது, அதில் அந்த அங்கத்தினரின் போட்டோ உருவம் இருக்கக் கண்டான். சாயல் கிட்டத்தட்டத் தன்னைப்போலவே இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். கடவுள் தனக்குப் பலமாக உதவி செய்கிறார் என்று நினைத்து அவரைப் பிரார்த்தித்துக்கொண்டான். கோட் ஸ்டாண்டில் இருந்த கம்பளி 'மப்ளரை' எடுத்துத் தலையிலிருந்து கழுத்துவரை சுற்றிக்கொண்டான். பிறகு மாடிப்படி வழியே கீழிறங்கித் தோட்டத்தைக் கடந்து வீதிப் பக்கம் வந்தான்.

அப்போது எதிரே சற்றுத் தூரத்தில் மின்சார ரெயில் சென்றுகொண்டிருந்ததைக் கண்டதும் மணி சுமார் நாலரை இருக்குமென்று ஊகித்தான். நன்றாகப் பொழுது விடிவதற்குள் நகரத்தை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று துடித்தான். அவனுக்கு நல்ல உடை கிடைத்துவிட்டது; கையிலோ பணம் இருக்கிறது. வண்டி வசதிதான் தேவை.

என்ன செய்யலாமென்று யோசனை செய்து கொண்டிருந்தபோது ஒரு டாக்ஸி அவன் இருந்த பக்கம் வந்துகொண்டிருந்தது. அதை நிறுத்தி, அதில் ஏறிக்கொண்டு தாம்பரத்திற்கு விடச் சொன்னான்.

வண்டி மௌன்ட் ரோட் வழியாக மாம்பலத்தைக் கடந்து, சைதாப்பேட்டை வழியாகச் சென்றுகொண்டிருந்தது. வண்டி கிண்டியிலுள்ள ரயில் வாராவதியைத் தாண்டிச் சற்றுத் தூரம் சென்றிருக்கும். வழியில் பலர் கூட்டமாக நின்று கையைக் காட்டி வண்டியை நிறுத்தச் சொன்னார்கள். வண்டி நின்றதும் இரண்டு பேர், நன்றாக உடைதரித்திருந்தவர்கள், கதவைத் திறந்து விட்டார்கள். சிதம்பரத்தைக் கவனித்துப் பார்த்துவிட்டு, ''வர வேண்டும்'' என்றார்கள். மறுகணம் வண்டியைச் சுற்றி நின்றவர்கள், ''பூபதிக்கு ஜே! பூபதி எம்.எல்.ஏ. வாழ்க!'' என்று கோஷமிட்டனர்.

சிதம்பரத்திற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு தன்னைப் பூபதி என்று அவர்கள் தப்பாக நினைத்துக்கொண்டு விட்டார்கள் என்பதை அறிந்ததும் அவனுக்குத் திகீர் என்றது. அவன் டிரைவரிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து நாஸ்தா செய்துவிட்டு வரச் சொன்னான். பிறகு தன்னை வரவேற்றவர்கள் புடைசூழப் பக்கத்தில் அலங்கரித்திருந்த ஒரு மேடைப் பக்கம் சென்றான்.

''எனக்குத் திடீரென்று உடம்பு சரியாய் இல்லை. ஜலதோஷம் தொண்டைக்கட்டு!'' என்று சிதம்பரம் கூறி, தான் அதற்காகவே முகத்தை மறைக்கும் வண்ணம் மப்ளர் சுற்றியிருப்பதைச் சூசகமாகத் தெரிவித்தான்.

அவனை வரவேற்ற மனிதர் சொன்னார்: ''உங்களைச் சிரமப்படுத்துவதற்காக மன்னிக்க வேண்டும். விடியற்காலைதான் நல்ல வேளையாதலால் திறப்பு விழாவை இப்போது வைத்துக் கொள்ளும்படியாகிவிட்டது. திறப்பு விழா நடத்தத் தங்களை ஏற்பாடு செய்த நண்பர் சிங்காரம் திடீரென்று நேற்றிரவு வெளியூர் செல்ல நேரிட்டுவிட்டது. அதனால் தங்களை

...கண்ணாடியில் பார்த்துக் கொண்டபோது...

வரவேற்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். நான்தான் ராமலிங்கம்."

"ஓஹோ அப்படியா? சந்தோஷம். உடல் நலம் இல்லாததால் சீக்கிரம் என்னை விட்டால் தேவலை!" என்றான் சிதம்பரம்.

அவனை மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு பெரிய நாற்காலியில் அமர்ந்துகொண்டு, எப்படித் தப்புவது என்பதைப்பற்றி அவன் கவலைப்பட்டுக்கொண்டிருந்தான். அதே சமயத்தில் அந்தச் சம்பவம் அவனுக்கு வேடிக்கையாகவும் இருந்தது.

கூட்ட நடவடிக்கைகள் அவன் விரும்பியபடி சட்டுப்புட்டென்று முடிந்தன. காலந் தாழ்த்தாதிருப்பதற்காக ரத்தினச் சுருக்கமாக, "நீங்கள் உழைக்க வேண்டும். உழைத்துக்கொண்டே இருக்க வேண்டும்; சட்டப்படி நடக்க வேண்டும்; வரிகளை நீங்களாகவே கொடுக்க முன்வர வேண்டும்!" என்று கூறி முடித்துக்கொண்டான்.

அப்போது ஒரு பிரமுகர் முன்வந்து, "நானாகவே வரி கொடுக்க ஆசைப்படுகிறேன். இதோ ஒரு நூறு ரூபாய் நோட்டு. இதை என் சார்பாகச் சர்க்காரிடம் சேர்ப்பியுங்கள்" என்று கூறிப் பணத்தைச் சிதம்பரத்தினிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு, அவரைக் கட்டித் தழுவி, "உமக்கல்லவா பத்மவிபூஷண் பட்டம் கொடுக்க வேண்டும்?" என்று கூறிவிட்டு மேடையினின்றும் கீழிறங்கி வந்தான்.

அப்போது பணம் கொடுத்த கனவான், "என் வண்டி டவுனுக்குச் செல்கிறது. அதில் தாங்கள் போகலாமே!" என்றார். சிதம்பரம் அவர் வண்டியில் ஏறிக்கொண்டான். வழியில் எங்கேயாவது இறங்கிக் கம்பி நீட்டிவிடலாமென்று அவன் யோசனை.

சிதம்பரம் சென்ற சில நிமிஷங்களுக்குப் பிறகு கிண்டி ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்திலிருந்து ஒரு கனவான், கூட்டம் நடைபெற்ற இடத்தை நோக்கி மிக வேகமாக வந்துகொண்டிருந்தார்.

அவர் விழாப் பந்தலுக்குள் நுழைந்தபோது கூட்டம் கலைந்துகொண்டிருந்தது. இதைக் கவனித்த அந்தக் கனவான், ஆச்சரியப்பட்டு மேடைக்கருகிற் சென்று அங்கிருந்த சிலரைப் பார்த்து ஒரு பெரிய கும்பிடு போட்டார். பிறகு உரத்த குரலில், "எதிர்பாராமல் வருவதற்குத் தாமதமாகிவிட்டது. மோட்டார் வண்டி கிடைக்கவில்லை. ரெயிலில் வந்தேன்!" என்று கூறினார்.

அப்படிப் பேசிய அவர் யார் என்று தெரியாமல், அங்கிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதைக் கவனித்த அந்த மனிதர், "நான்தான் பூபதி, எம்.எல்.ஏ. தெரியவில்லையா?" என்றார்.

கூட்டத்தினருள் ஒருவர் ஓடிப்போய் ராமலிங்கத்தை அழைத்து வந்தார். அவர், "நீங்கள் யாரென்று சொன்னீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு விசாரித்தார்.

"நான்தான் பூபதி, எம்.எல்.ஏ." என்று அந்த மனிதர் அழுத்தந்திருத்தமாகவும், சற்றுக் கோபமாகவும் பதிலளித்தார்.

இந்தப் பதிலைக் கேட்டு ராமலிங்கமும் மற்றவர்களும் திகைத்துப் போயினர்.

"கால் மணி முன்புதானே பூபதி வந்து திறப்பு விழா நடத்திவிட்டுப் போனார்!" என்று ராமலிங்கம் தெரிவித்தார்.

"இதென்ன கூத்தாயிருக்கிறதே! இது தானே ராமலிங்கம் தலைவராக இருக்கும் சங்கம்?" என்று பூபதி கேட்டார்.

"ஆமாம்!"

"இங்கேதானே கிணறு திறப்பு விழா?"

"ஆமாம்! ஆமாம்!" என்று பலர் சொன்னார்கள்.

"அப்படியானால்.." என்று அந்த மனிதர் ஆரம்பித்த போது, வாசலில் ஒரு ஜீப் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரும், இரண்டு கான்ஸ்டபிள்களும், ஒரு டாக்ஸி டிரைவரும் இறங்கி மேடையை நோக்கி வேகமாக வந்தனர்.

டாக்ஸி டிரைவர் அங்கு நின்றுகொண்டிருந்த மனிதரைப் பார்த்ததும், அவரைச் சுட்டிக் காட்டி, "இந்த ஆசாமியே!" என்றான்.

போலீஸ் இன்ஸ்பெக்டர், உடனே அவரது புஜத்தைப் பிடித்துக்கொண்டு, "வா ஸ்டேஷனுக்கு. நல்ல வேலை செய்தாய்!" என்றார்.

"என்ன சொல்கிறீர்? நான் பூபதி எம்.எல்.ஏ. அல்லவா? நான் என்ன செய்துவிட்டேன்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. நேற்றுச் சாயங்காலம் சென்னைச் சிறையிலிருந்து தப்பினாய். ராத்திரி எழும்பூரில் ஒரு பங்களாவில் புகுந்து திருடினாய்" என்றார் இன்ஸ்பெக்டர். அவர் அந்த மனிதரை ஜீப்பின் பக்கம் தள்ளிக்கொண்டே போனார்.

"அட கடவுளே! நான் நேற்று ராத்திரி தாம்பரத்தில் அல்லவா இருந்தேன்? அதற்குச் சாட்சி வேண்டுமானாலும்.."

டாக்ஸி டிரைவர் குறுக்கிட்டு, "என்னய்யா நம்ப கிட்டயே கதை விடறே! இருமல் ஆஸ்பத்திரிக்கு எதிர்த்தாப்பலே நின்னுகிட்டு என் வண்டியைக் கூப்பிட்டு ஏறிக்கிட்டு வரல்லே? அடையாளம் தெரியாதிருக்க, மப்ளரைத் தலையிலே சுத்திக்கினு இருந்தாயே!" என்று அடித்துக் கூறவே அந்த மனிதர் இடி விழுந்தவர் போலானார்.

இன்ஸ்பெக்டர் அந்த மனிதரைக் கட்டாயப்படுத்தி வண்டியேறச் செய்தார். "நான் ஒரு எம்.எல்.ஏ. யாக்கும்! நீர் என்னைக் கைது செய்ய உரிமையில்லை!" என்று அவர் இன்ஸ்பெக்டரை எச்சரித்தார்.

ஜீப் வண்டி போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும், இன்ஸ்பெக்டர் அவரைத் தமது அறைக்கு அழைத்துச் சென்றார்.

"நீ சொல்வது போல் சட்ட சபை அங்கத்தினர் என்பதற்கு ஏதாவது அடையாளம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"இதோ என் விஸிடிங் கார்டு. அது இருக்கிறது மறந்தே போய்விட்டது!" என்று கூறி அந்த மனிதர் தமது ஜிப்பாப் பாக்கெட்டைச் சோதனை செய்தார். அதிலிருந்து அவர் ஒரு கார்டை எடுத்து "இதோ!" என்று இன்ஸ்பெக்டரிடம் நீட்டியபோது அந்த அதிகாரி விழுந்து விழுந்து சிரித்தார்.

அந்த மனிதர் கையில் இருந்தது, சீட்டுக் கட்டுகளில் இருக்கும் 'ஜோக்கர்' கார்டு. அவர் அதைக் கண்டு குழப்பமடைந்து, "நேற்றிரவு சிநேகிதர்களுடன் ரம்மி ஆட்டம் ஆடிக்கொண்

டிருந்தேன். தவறிப் போய் அது வந்துவிட்டது'' என்றார்.

''காசு வைத்து ஆட்டமாக்கும்! என்ன வரும்படி?''

''அதெல்லாம் இல்லை, இன்ஸ்பெக்டர் ஸார். சத்தியமாகச் சொல்கிறேன். நான் பூபதி எம். எல்.ஏ. தான். டெலிபோனைக் கொடுங்கள். என் நண்பர்களை வரவழைத்து நிரூபிக்கச் சொல்கிறேன். சட்ட மந்திரியை எனக்கு நேரில் தெரியும்.''

''பிரதம மந்திரி, ராஷ்டிரபதி இவர்களை எல்லாம் நன்றாகத் தெரியும் என்று சொன்ன கில்லாடிகள் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன். உன் பருப்பு இங்கே வேகாது!'' என்று இன்ஸ்பெக்டர் கடுமையாகக் கூறிவிட்டு, அந்த மனிதரை அறைந்து விடுபவர் போல் பல்லைக் கடித்துக்கொண்டு உற்றுப் பார்த்தார்.

அப்போது அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் அங்கத்தினராக இருந்த ஒருவரின் பேரர் அவர். அந்த ஜிப்பாக்காரரைப் பார்த்து, ''நிச்சயமாக நீர் ஒரு எம்.எல்.ஏ. தானா?'' என்று கேட்டார்.

''சத்தியமாக!'' என்று பதில் வந்தது.

''எத்தனை வருஷமாக அங்கம் வகிக்கிறீர்?''

''நாலைந்து மாதமாக.''

''நீர் சபையில் உட்காரும் ஆசனத்தின் நம்பர் என்ன?''

''நானூற்றெட்டு.''

''என்ன தொழில்?''

''நெல், அரிசி மண்டி வைத்திருக்கிறேன்.''

''எதற்காகச் சட்ட சபை அங்கத்தினர் ஆனீர்?''

''பொது நலச் சேவை செய்வதற்காக. தவிர, நான் அங்கத்தினனாயிருக்கும் ராஜ்யக் கட்சி என்னைப் பொறுக்கியெடுத்துத் தேர்தலுக்கு நிற்கச் சொன்னது.''

''சட்ட சபை நடவடிக்கைகள் நடக்கக் குறைந்தது எத்தனை பேர் இருக்க வேண்டும்?''

''எழுபது, எண்பது, தொண்ணூறு!''

''இந்தியாவில் எத்தனை ராஜ்யங்கள் இருக்கின்றன?''

''ஒன்றரை, இரண்டு டஜன் இருக்கும்.''

''சென்னை ராஜ்யத்தின் ஜனத்தொகை எத்தனை?''

''ஏழெட்டுக் கோடி என்று வைத்துக் கொள்ளுங்களேன்?''

''ஆள் மாறாட்டம் செய்வதற்கு என்ன தண்டனை தெரியுமா?''

''அதை யார் கண்டார்கள்?''

''உமது தொகுதியில் மொத்தம் எத்தனை வோட்டர்கள்?''

''எண்பதினாயிரம் பேர் இருக்கும்.''

''உமக்கு எத்தனை வோட் கிடைத்தது?''

''நாற்பத்தெட்டாயிரம்.''

''உமக்குப் போட்டியாக நின்றவருக்கு?''

''பத்தாயிரம்!''

''அந்த ஆசாமி யார்?''

''வேதநாயகம்.''

''ஓ! அவரா? அவர் பெரிய வக்கீல் இல்லையா?''

''ஆமாம்.''

''மிகவும் கெட்டிக்காரர். பல பாஷைகளில் நிபுணர். அயல் நாடுகள் சுற்றி வந்திருக்கிறார். யோக்கியர். நிறையத் தான தர்மங்கள் செய்திருக்கிறார்; அவர்தானே?''

''அவரேதான்.''

''அப்படியானால் உமக்கு வோட்டுப் போட்ட அந்த நாற்பத்தெட்டாயிரம் பேரும் நீர் அந்த வேதநாயகத்தை விடச் சிறந்தவர் என்று எப்படிக் கண்டு பிடித்தார்கள்?''

இன்ஸ்பெக்டர் கடுமையாக இருந்ததைக் கண்டு சிறிது பயந்து போய் இதுவரை அவர் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லி வந்த அந்த மனிதருக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்ன ஐயா, அதிகப் பிரசங்கித்தனமாகக் கேள்வி கேட்கிறீர்!'' என்று கேட்டு, நாற்காலியை விட்டு எழுந்திருந்தார்.

ஆனால், இன்ஸ்பெக்டர் சிறிதும் பதற்றப் படாமல் சிரித்துக்கொண்டே, ''எதற்காகக் கேட்கிறேன், தெரியுமா? நீர் சொல்வது போல, நீர் ஒரு சட்ட சபை அங்கத்தினர் அல்ல, ஏமாற்றுகிறீர் என்று நிரூபிப்பதற்காகத்தான். நான் ஒரு எம். ஏ., எம். எல். இந்த வேலைக்கு வருவதற்கு ஒரு வருஷம் கடுமையாகப் பயிற்சி பெற்றுவிட்டு, அப்புறம் 'அப்ரெண்டிஸா'க வேறு வேலை பார்த்துவிட்டு வர வேண்டியிருக்கிறது. நீர் என்னடா என்றால் ஒன்றும் தெரியாமல் தேசத்திற்குச் சட்டம் இயற்ற வந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறீர். இதை நான் நம்பவே முடியாது.''

இன்ஸ்பெக்டர் இவ்வாறு கூறிக் கொண்டிருந்த போது வாசலில் பாரா நின்ற கான்ஸ்டபிள் கால் பூட்ஸ்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு 'ஸல்யூட்' அடித்த சப்தம் கேட்டது.

மறு கணம் உள்ளே போலீஸ் டிப்டி கமிஷனரும், பார்லிமெண்ட் அங்கத்தினர் பன்னீர் செல்வமும் இன்ஸ்பெக்டரின் அறைக்குள் நுழைந்தார்கள்.

''யாரு, பூபதியா! இங்கே எங்கே வந்தீர்கள்?'' என்று பன்னீர்செல்வம் அவரைப் பார்த்து விசாரித்தபோது இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார்.

''மன்னிக்க வேணும். ஒரு தவறு நடந்து விட்டது!'' என்று கூறி அன்றைக் காலையில் நடந்த சம்பவத்தைப் பற்றி இன்ஸ்பெக்டர் கூறலானார்.

* * *

வண்டியிலேறிச் சென்ற சிதம்பரம், அதன் டிரைவரைத் தாஜா செய்து அரக்கோணம் ஸ்டேஷன்வரை கொண்டு போய் விடும்படி ஏற்பாடு செய்தான். அங்கே குண்டக்கல்லுக்கு ஒரு டிக்கெட் வாங்கிக்கொண்டு பம்பாய் எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏறிக் கொண்டான்.

வண்டியில் சென்றுகொண்டிருந்த போது, அவனுக்கு அசல் பூபதி எம்.எல்.ஏ.யைப்பற்றி ஞாபகம் வந்தது. அந்த மனிதருக்குப் படிப்பு வாசனை உண்டோ இல்லையோ, யோக்கியரோ இல்லையோ, உலக அநுபவம் உண்டோ இல்லையோ, கட்டாயம் சிறைவாசத் தண்டனை அடைந்திருக்கமாட்டார், முழுப் பைத்தியமாக இருக்கமாட்டார் என்று ஊகித்தான். ஏனென்றால் அந்த இரண்டு அம்சங்களுக்காக மட்டுந்தானே யாரும் சட்ட சபைக்கு அங்கத்தினராக வராதிருக்க முடியும்! ★

தீபாவளி வாழ்த்துக்கள்

அனைவருக்கும் ஏற்ற வண்ணம் சௌகரியமான கால வரம்பினுள்ளும், சந்தா தொகைகளிலும் பல ஆண்டுகளாகச் சீட்டுகள் நடத்திச் சேவை புரிந்து வருகிறோம். யாவரும் இவற்றில் சேர்ந்து சிறுகச் சிறுகச் சேமித்து நலனடையும்படி கோருகின்றனம்.

விவரங்களுக்கு எழுதவும்

கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

(இந்தியாவில் இணைக்கப்பட்டது)

333, தளிரோட், கோழிக்கோடு-2

போன்: 563 தந்தி: "MAMBILA"

மதராஸ் கிளை :

170, இராயப்பேட்டை ஹைரோட், மதராஸ்-14

போன்: 86659 தந்தி: "KALLIFUNDS"



நீராட அணி கலைக்கும்
நேரிழையாள்

ஓவியர்
கே. மாதவன்

'காலை புதுதக் களுக் கண்டேன்'...

கீழே இருந்த கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தது. நான் மேஜை மேல் இருந்த கணக்குப் பு-த்தகங்களை மூட்டை கட்டி வைத்தேன்.

மேஜை விளக்கை அணைத்துவிட்டுத் திரும்பினேன். கட்டிலில் ராஜம் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். எதிர்ப்புற ஜன்னல் வழியே ஒரு கற்றை நிலவொளி அறையில் விழுந்து ஒரு குளுமையான சூழ்நிலையைச் சிருஷ்டித்ததோடு, தெளிவான வெளிச்சத்தையும் அளித்தது.

அவளுடைய முகத்தைப் பார்த்தேன். மூடிய அகன்ற இமைகள்; நீண்ட மூக்கில் வைர பேஸரி வர்ணஜாலங்களைக் கொட்டிக் குவித்தது. உதடுகளில் ஓர் இளநகை பூத்திருந்தது. அதோடு உடலை நெளித்துக்கொண்டு, சிறிதும் ஆடைகள் கலையாமல் அவள் படுத்திருந்தது, அவளுடைய கூச்சத்தையும் இயல்பான நாணத்தையும் அறிவுறுத்தியது. கல்யாணம் ஆகி ஒரு வருஷந்தானே ஆகிறது?

அன்பை மனத்துக்குள்ளே வைத்துக் கோயில் கட்டும் ஆத்மாக்கள் எத்தனை பேர்!

எப்போதும் அவள் அழகை நான் ரசிப்பேன்; அவள் ஏதாவது வேலையாக இருப்பாள்; நான் தூரத்தில் இருந்தபடியே பார்ப்பேன். அவள் முகம் என்னைக் கவர்ந்திழுக்கும். உடனே பக்கத்தில் வந்து அந்த முகத்தில் 'முத்திரைகள்' வைத்து விட்டுப் போனால்தான் திருப்தியாக இருக்கும்.

''என்ன நீங்கள்!..'' என்று ஆரம்ப காலத்தில் அவள் விலகி ஓடுவாள். இப்போதெல்லாம் ஓடுவதில்லை. அவளுடைய சௌந்தரியத்துக்கு நான் அளிக்கும் காணிக்கையைப் பெருமையுடன் ஏற்றுக்கொள்வாள்.

ஆனால் இப்போது என் மனம் இங்கு இல்லை. நினைவுத்திரையிலே கோலமிட்டிருந்த பழைய சித்திர ஏடுகளிலே லயித்து அவற்றைப் புரட்டியது.

கொடி போல் துவண்ட நெடிய உருவம். பூத்த மனோரஞ்சிதத்தைப் போன்ற பொன்னிறமான மேனி. அவளைப் பார்த்தவுடன் சட்டென்று கண்ணில் படுபவை இரண்டு தாம். ஒன்று, அவளுடைய அகன்ற நெற்றியை அலங்கரித்த பெரிய சாந்துப் பொட்டு; இன்னொன்று, அவளுடைய முகத்தில் பளிச்சென்று மின்னிச் சுடர் விடும் புன்சிரிப்பு. ஒரு தடவை பார்த்தால் போதும்; மறக்க முடியாது.

இந்த இரண்டு வருஷ காலத்தில் ராதையைப் பற்றி நான் நினைக்கவே இல்லை. இப்போது ஏன் திடீரென்று நினைவில் அவள் கிளம்பினாள் என்று தெரியவில்லை.

இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் முதல் முதலில் நான் ராதையைச் சந்தித்தேன். மாயூரத்தை அடுத்த ஒரு கிராமத்தில் என் அத்தையின் வீடு இருந்தது; நான் அப்போது சென்னையில் கல்லூரியில் கடைசி வருஷம் படித்துக்கொண்டிருந்தேன். விடுமுறைக்கு அத்தையின் வீடு போயிருந்த போதுதான் அங்கே ராதையைக் கண்டேன்.

அன்று மாலை பொழுது போகாமல் ஈசுவரன் கோயிலுக்கு முன்னுள்ள குளத்தின் கரையில் உட்கார்ந்து ஜலத்தில் காலைத் தொங்கவிட்டு, அதைச் சுரண்டும் மீன்களுடன் விளையாடிக்கொண்டிருந்தேன். பட்டணத்திலேயே பிறந்து வளர்ந்த எனக்கு இரண்டு நாளிலேயே கிராம

வாழ்க்கை அலுத்துவிட்டது. அப்போது கோயிலுக்குள்ளிருந்து இனிய பெண்குரல் கேட்டது.

''நாத விந்து கலாதீ நமோ நம'' என்ற வார்த்தைகள் உருக்கமும் இனிமையும் கலந்து வந்து என் காதில் மோதின. சங்கீதப் பயிற்சியினால் ஏற்படும் 'பிகுசுகு'வும் மெருகும் அந்தக் குரலில் இல்லாதபோதிலும், இயற்கையான வசீகரம் தொனித்தது. அதுவே என்னைக் கவர்ந்து இழுத்து உள்ளே போய்ப் பார்க்க வேண்டும் என்று தூண்டியது.

அங்கே ஈசுவரன் சந்நிதியில் கண்ணை மூடி அவள் நின்று பாடிக்கொண்டிருந்தாள். அந்த உருவத்தைப் பார்த்ததும் எனக்குத் திக்கென்றது. அந்தப் புனிதமான ஆலயத்தின் சூழ்நிலையில் அவள் நின்ற காட்சி - எளிமையும் இனிமையும் கலந்த அந்தப் பெண்ணுருவம் - பட்டண வாழ்க்கையின் செயற்கை நாகரிகத்தில் ஊறி மரத்துப் போன என் மனத்திரையில் அழியாத சித்திரத்தைப் பதித்துவிட்டது. அமைதி நிறைந்த அந்தச் சூழ்நிலையில் அவளும் ஒரு தெய்விகப் பொருளாகவே தோன்றினாள்.

இலைப்பச்சையில் ஓர் எளிய சேலை உடுத்திருந்தாள். கழுத்தில் ஒரு செயின். கண்ணாடி வளையல்கள். பார்த்தால் சர்வ சாமானியமான உருவந்தான். ஆனால் முகத்தில் தவழ்ந்த தெய்விகக் களை அவளுடைய உருவத்துக்கு அசாதாரணமான எழிலைத் தந்தது.

எவ்வளவு நேரம் அந்த முகத்தில் ஈடுபட்டு நின்றேன் என்று தெரியாது.

''இந்தா விபூதி!'' என்ற குருக்களின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன்.

அவளும் அப்போதுதான் சட்டென்று பாட்டை நிறுத்தி, விழித்துக்கொண்டாள். உடனே இவ்வளவு நேரம் நின்றுவிட்டோமே என்ற உணர்ச்சியுடனேயோ, அல்லது எதிரில் யாரோ அந்நியன் நிற்கிறான் என்ற நினைப்பிலோ, விருட்டென்று பாய்ந்து ஓடினாள். அப்போது பளிச்சென்று சிவந்த அவள் முகத்தில் மின்னி மறைந்தது புன்சிரிப்பு. சதா கருவண்டைப் போல் ஸ்திரமின்றிச் சலித்துக்கொண்டேயிருக்கும் விழிகளால் என்மீது ஒரு மருண்ட பார்வையை வீசிவிட்டுச் சென்றாள். அவள் கூடவே என் மனமும் சென்றுவிட்டது.

''என்ன அம்பி, எப்போது பட்டணத்திலேயிருந்து வந்தாய்?'' என்று கேட்டார் குருக்கள்.

அவருக்கு ஏதோ சம்பிரதாயமான பதிலைச் சொல்லிவிட்டு வெளியேறினேன்.

அன்று வீட்டுக்குப் போனதும் அத்தையிடம் அந்தப் பெண் யாரென்று விசாரித்தேன். விசாரித்தேன் என்றால், மறைமுகமாக, அங்குச் சுற்றி, இங்குச் சுற்றி அந்தப் பெண்ணை வந்தடையும்படி பேச்சைத் திருப்பிச் சென்றேன்.

''அத்தை, இந்த ஊரில் கோயிலுக்கு எல்லாரும் போகிறார்களே!''

''யார் போகிறார்கள்? ஒரு ஈ காக்கை போவதில்லை! கிழைத்தெரு மீனாச்சிப் பாட்டி தன் கழுத்திலே போட்டிருக்கிற ருத்திராட்ச மாலையும், இரட்டை வடச் செயினும் எல்லாருக்கும் தெரியவேணுமென்று தெருவோடு ஊர்வலம் போவாள். தப்பினால் இரண்டிலே, மூன்றிலே வாத்தியார் மச்சினி ராதை போகும்.''

''வாத்தியாரா? எந்த வாத்தியார்?''

''அவன்தான்; பள்ளிக்கூட வாத்தியார் பஞ்சாபகேசன். அவர்களுக்கு மதுரைப் பக்கம். அவனுடைய மச்சினி, பாவம், நல்ல பெண். குரல் குயிலாயிருக்கிறது! என்ன பண்ணுகிறது? பணம் இல்லாத பாட்டை மாத்திரம் கேட்டு எவன் இந்தக் காலத்தில் கல்யாணம் பண்ணிக்கொள்வான்?''

''ஆமாம்: பள்ளிக்கூட வாத்தியாருக்குச் சம்பளம் இருபத்தெட்டு ரூபாய்தானே?''

''அதிலே, குழந்தைகள் அஞ்சு, அப்பா ஒரு கிழம், இவர்கள் மூன்று பேர். ஒன்பது ஜீவன் வயிற்றைக் கழுவவேணும். அவன் எதிர் ஜாமீனுக்கு எங்கே போவான்?''

''யாராவது ஏழையைப் பார்த்துக் கொடுத்துவிடக் கூடாதோ?''

''போடா அம்பி; இந்தக் காலத்திலே ஏழையா இருக்கிறவர்களே பணத்துக்குப் பேராசைப்படுகிறார்கள். பணம் இருக்கிறவர்கள் எதிர்ஜாமீனே கேட்பதில்லை!''

''சீராகவும், நகைகளாகவும் கேட்டுவிடுகிறார்கள் என்கிறாயோ?''

நான் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வெளியே சென்றேன். மனம்மட்டும் ராதையைச் சுற்றிச் சுழன்றுகொண்டே இருந்தது.

ராதையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் வாத்தியார் வீட்டு வாசலோடு அநாவசியமாக நான்கு தடவைகள் போனேன். வீட்டுக் கதவு சாத்தியபடியேதான் இருந்தது.

மறுநாள் காலையில் அத்தை வீட்டுத் தோட்டத்தில் கிணற்றடியில் உட்கார்ந்து பல் துலக்கிக்கொண்டிருந்தேன். மனம் சென்னைக்குப் புறப்பட வேண்டிய யோசனையில் ஆழ்ந்திருந்தது. மனம் ஒரு பக்கம் கை ஒரு பக்கம் இருந்தபடியால் பல் துலக்கும் வேலை மிகவும் 'சவுக்க கால'த்தில் நடந்துகொண்டிருந்தது.

அப்போது 'சரசர'வென்ற ஓசை கேட்டுத் திரும்பினேன். கிணற்றையொட்டி எனக்குப் பின்புறம் ஒரு பவழமல்லிகைச்செடி இருந்தது. அதற்குப் பக்கத்திலிருந்து ஒரு பெண் உருவம் வேகமாகக் கையில் பூக்கூடையுடன் விரைவது தெரிந்தது. நான் எழுந்து சற்றுத் தூரம் போய் நின்று நோக்கினேன். அவள்தான்! அடுத்த வீட்டுத் தோட்டத்தை அடைந்ததும் நின்று திரும்பி ஒரு பார்வையை வீசிவிட்டு மின்னலைப்போல் மறைந்தாள். அதே சாந்துப் பொட்டு! அதே புன்னகை! அந்த ஒரு கணத்தில் என்னை ஆகாயத்தில் தூக்கிப் போடுவது போல் இருந்தது. அவள் எப்போது வந்தாளோ?

அன்று அதன் பிறகு எனக்கு வேறு வேலையே ஓடவில்லை. சாயங்காலம் எப்போது வரும் என்று காத்துக்கொண்டிருந்தேன்.

மாலை ஐந்து மணிக்கே ஈசுவரன் கோயிலுக்கு முன்னால் போய் நின்றுகொண்டேன். ஆறு மணிக்குத்தான் அவள் வந்தாள். தூரத்திலிருந்து வரும்போதே நான் அவளை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அவளோ குனிந்த தலை நிமிராமல் கோயிலுக்குள் போனாள். என்னைப் பார்த்தாளோ இல்லையோ, சந்தேகம் வந்தது. ஆனால் அன்று சந்நிதியிலிருந்து வந்த பாட்டுக் குரலில் ஒரு நடுக்கம் இருந்ததாக எனக்குத் தோன்றியது. வெளியில் வரும்போதாவது அவளிடம் ஏதாவது பேசிவிட வேண்டும் என்று திடப்படுத்திக்கொண்டு நின்றேன்.

அவள் என்னைக் கடந்து போகும்போது, ''ராதை'' என்றேன் தணிவான குரலில்.

அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் இருந்தது பயமா, கூச்சமா என்று என்னுல் சொல்ல முடியவில்லை. அவ்வளவுதான்; விர் ரென்று சாரையைப் போல் சென்று மறைந்துவிட்டாள்.

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே இல்லை. அந்தச் சாந்துப் பொட்டும் புன் சிரிப்பும் என்னைச் சித்திரவதை செய்தன. சென்னைக்குத் திரும்பும் நாளை ஒத்திப் போடுவதற்குக் காரணங்களைத் தேடிக்கொண்டிருந்தது மனம்.

காலையில் பல் துலக்கும்போது பவழமல்லிகைப் புதருக்குப் பக்கத்திலேயேதான் நின்றுகொண்டிருந்தேன். எவ்வளவு தாமதமாகத் தேய்த்தாலும் அரை மணி நேரத்துக்கு மேல் எப்படிப் பல் விளக்குவது? அதன்பிறகு அத்தை வீட்டுத் தோட்டத்தில் உள்ள செடி கொடிகளை யெல்லாம் கணக்கெடுத்தேன்.

மனிதனுடைய நம்பிக்கை யெல்லாம் தளர்ந்து நிராசை யடையும் தருணத்தில் தெய்வம் துணைக்கு வருவதைப் போல், நான் உள்ளே போகலாம் என்று நினைக்கும்போது கையில் சிறு பூக்கூடையுடன் அவள் வந்தாள். வந்ததும் வராததுமாய், கிணற்றடியில் யாரையோ தேடுவதைப்போல் பார்த்தாள். பிறகு புஷ்பச் செடியை உலுப்பிவிட்டுப் பொறுக்கத் தொடங்கினுள்.

ஒரு நிமிஷம் கழித்து நான் மெதுவாகப் பக்கத்தில் வந்தேன்.

''ராதை, புஷ்பம் பூஜைக்கா?'' என்றேன்.

அவள் தூக்கிவாரிப் போட்டதைப் போல் தலை நிமிர்ந்தாள். என்மீது ஒரு பார்வையை வீசினுள். மறுபடியும் குனிந்து பூப் பொறுக்கினுள்.

அந்தப் பார்வையில் இருந்தது கோபமா ஆச்சரியமா அல்லது அருவருப்பா என்று எனக்குத் தெரியவில்லை.

''நீ இவ்வளவு நன்ருகப் பாடுகிருயே; யாரிடமாவது சிட்சை சொல்லிக்கொண்டாயா?''

நான் இதைக் கேட்டதும் தலை இன்னும் கவிழ்ந்துகொண்டது. சட்டென்று அந்த இளமுகம் முழுவதும் பளிச்சென்று செம்மை படர்ந்தது; அன்று அலர்ந்த ரோஜா மலரைப் போல் தளதளத்தது அவள் முகம்.

நான் விடவில்லை. ''நீ என்ன ஊமையா? என்னுடன் பேசினுல் விழுங்கிவிடுவேனு?''

அதற்குப் பதிலாகக் 'களுக்'கென்று சிரித்தாள். முகத்தை ஒரு நொடி நொடித்து, ஒரு பார்வையை வீசிப் பறந்துவிட்டாள். நான் அப்படியே அந்தக் காட்சியை ரசித்துக் கொண்டு நின்றேன்.

இப்போது நினைத்தால்கூட அதிசயமாக இருக்கிறது. அவளுடன் அப்படி ஏன் நான் பேசினேன் என்று எனக்கே தெரியவில்லை. கோயிலில் பார்த்தது முதல் மனம் அவளையே நினைத்தது. அவள் பக்கத்தில் நின்று ஏதாவது பேச வேண்டும் என்று தூண்டிற்று.

நான் சென்னைக்குப் புறப்படும் நாள் வந்தது. அவள் கோயிலுக்கும் வரவில்லை. பூப் பறிக்கவும் வரவில்லை. என்னைப்பற்றி ஏதோ தவருக நினைத்துவிட்டாளோ?

என் அத்தையிடம் நான் விடை பெற்றுக் கொண்டு புறப்படும் சமயத்தில் ஒரு சம்பவம் நடந்தது. வெளி வாசலில் வண்டி தயாராக நின்றது. நான் என் கோட்டை அணிந்து கொண்டிருந்தேன். அப்போது எங்கிருந்தோ குதித்ததைப் போல், விர் என்று உள்ளே நுழைந்தாள். அவள் கையில் ஒரு சிறு கிண்ணம் இருந்தது. உள்ளே நுழைந்தவள் திரும்பி உடனே வந்தாள். அந்தக் கிண்ணத்தில் ஏதோ வெண்மையாக-சர்க்கரையோ உப்போ- இருந்தது. போகிற போக்கில் என் பக்கம் திரும்பிப் பார்வையை வீசினுள். என் பார்வை அந்த விழிகளில் பட்டுத் தெறித்தது. அந்தப் புன்னகை: எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் என்னுல் அதை மறக்க முடியாது.

2

சென்னைக்குத் திரும்பிய நான் பரீட்சைப் படிப்பில் முனைந்தேன். ஆனுல் என்னுடைய அரசியல் பாடத்தையும், பொருளாதார சாஸ்திரத்தையும் மீறிக்கொண்டு ஓர் உருவம் என் மனத்தைத் துரத்தத் தொடங்கியது. அதை என்னுல் ஒதுக்கித் தள்ளவே முடியவில்லை.

சாயங்காலம் நான்கு மணிக்குமேல் என்னை யாரும் ஹாஸ்டல் அறையில் காண முடியாது. தினமும் இரண்டு செட்டாவது டென்னிஸ் ஆடுவேன். அதன் பிறகு நண்பர்கள் கோஷ்டியுடன் வெளியே கிளம்பிவிடுவேன். சினிமாவோ பீச்சோ, எங்கேயாவது போயாக வேண்டும். மழை பெய்தாலும் அறையில் இருக்க மாட்டேன். வேறு நண்பர்கள் அறையில் போய்ச் சீட்டுக் கச்சேரி நடக்கும்.

ஆனுல் வரவர என்னுடைய வழக்கங்கள் மாறத் தொடங்கின. எப்போதும் மனம் தனிமையை நாடியது. பவழமல்லிகைச் செடியும் அதன் பக்கத்தில் நின்ற உருவமும் திரும்பத் திரும்ப மனத்திரையில் காட்சியளித்தன. அந்த மோகனப் புன்சிரிப்பு என்னைப் பேய் போல் துரத்திற்று.

என் நண்பர்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அறைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதைப் பார்த்து என்னைப் 'புத்தகப் புழு' என்று அழைத்தார்கள்.

எப்படியோ பரீட்சையை எழுதி முடித்தேன். கோடை விடுமுறை முதல் நாளே அத்தை வீட்டை அடைந்தேன். ஒரு நாளும் இல்லாமல் திடீரென்று தன்மேல் ஏற்பட்ட அன்பைக் கண்டு அத்தை ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்.

''என்ன அம்பி, வரப்போகிறேன் என்று கடுதாசிகூடப் போடவில்லையே? பரீட்சை நன்ருக எழுதியிருக்கிருயா?'' என்று என்னை வரவேற்ருள்.

''எழுதியிருக்கிறேன். லெட்டர் போட அவகாசம் கிடைக்கவில்லை'' என்று ஏதோ சொல்லிவைத்தேன்.

இவ்வளவு மாத காலமாக என் மனத்தை ஆட்கொண்டு, என்னை ஆட்டி வைத்துக்கொண்டிருந்த தேவியின் தரிசனம் அன்று மாலையே கிடைத்தது; ஈசுவரன் கோயிலில்தான்.

நான் கோயிலை வலம் வந்துகொண்டிருந்தேன். எனக்குப் பின்புறம் காலடியோசை கேட்டது. நான் திரும்பினேன். சட்டென்று கன்னத்தில் அறைவது போன்று அந்த முகம்; அந்தப் புன்னகை!

என்னைப் பார்த்ததும் உண்டான சந்தோஷம் அந்த முகத்தில் தெளிவாகப் பிரதிபலித்தது. அதைக் கண்டதும் என் உள்ளத்தின் ஆழத்திலே ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. அப்படியே மனம் பூரித்தது. உடல் புளகிதம் அடைந்தது.

''ராதை....''

''.........''

''ராதை....''

''ஊம்!''

''பேச மாட்டாயா?''

''ஊஹூம்!''

அவ்வளவுதான்; அந்த அதிசயப் புன்னகையை என் முகத்தில் வீசி எறிந்துவிட்டு ஓடிவிட்டாள். ஒன்றும் புரியாமல் ஒரு கணம் நின்றேன். மறுகணம் உள்ளம் துள்ளிக் குதித்தது.

அதிகாலையில் எழுந்தால் மனத்துக்கு இவ்வளவு ரம்யமாக இருக்கும் என்று எனக்கு இத்தனை காலமும் தெரிந்ததில்லை. அதுவும் கிராமத்தில் விடியும் காலை தனி அழகு நிறைந்தது.

தனித் தனிச் சுருதியில் நின்று பலவிதப் பட்சிகள் இசைக்கும் சங்கீதம், இயற்கையினால் நிர்வகிக்கப்படும் வாத்திய கோஷ்டியைப் போல் ஒலித்தது. இதுவரையில் அந்த இனிமையை நான் இப்படி ரசித்ததே இல்லை.

திரும்பிப் பார்க்காமலே என் மனம் பவழ மல்லிகைச் செடிக்கு அருகில் அவள் வந்துவிட்டதை அறிவுறுத்தியது. ஒரே தாவில் அவளுக்குப் பக்கத்தில் போய் நின்றேன்.

''ராதை!''

''என்ன?''

''உன் கையைக் கொடு.''

''எதற்கு?''

''சும்மாத்தான்.''

''ரேகை பார்க்கத் தெரியுமா?''

''தெரியும். கொடேன்.''

அவளுடைய கையைப் பற்றியதும் முகத்தைக் கவனித்தேன். குங்குமம் போல் சிவந்துவிட்டது. அவளுடைய சிரிப்பும் களிப்பும் மறைந்தன. கண்கள் தொலைவில் நோக்கின. முகத்தின் நரம்புகள் புடைத்தன.

''ராதை!''

''ஊம்!''

''என்ன?''

''...நீங்கள் லீவுக்கு வர மாட்டீர்களோ என்று நினைத்துப் பயந்துகொண்டிருந்தேன்..''

அவளுடைய முகம் மலர்ந்தது. கண் விழிகளில் நீர் வளையமிட்டது.

''ராதை, ஏன்?''

''சந்தோஷம்'' என்று சொல்லிக்கொண்டே என்னை நோக்கினாள். அவளுடைய கண்களும் களிப்பினால் சிரித்தன. ஒரு கணந்தான். மறு கணம் ஓடிவிட்டாள்.

அன்று முதல் எங்கள் சந்திப்பு, தினம் இரு வேளையும் தவறாமல் நடந்து வந்தது. சில நாளைக்கு, எனக்கு அதிருஷ்டம் இருந்தால் வாத்தியார் வீட்டில் உப்பு முதல் நல்லெண்ணெய் வரையில், ஏதாவது சாமான் தட்டிப் போகும்; அப்போது மூன்றும் கால தரிசனமும் கிடைக்கும்.

ஓர் உருவம் என் மனத்தைத் துரத்தத் தொடங்கியது.



என்ற பயத்தால் கோழையாகி விட்டேன். கடைசியில் ஒரு நாள் என்னுடைய மனத்தில் உள்ளதையெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதி, அவளுடைய சம்மதம் தெரிந்ததும் மற்ற ஏற்பாடுகளைத் தொடங்குவதாகவும் எழுதி அவளிடம் கொடுத்தேன். அதைக் கொடுக்கும் போது என் கைகள் நடுங்கின. அதை வாங்கிக்கொண்டதும் அவள் ஒன்றும் புரியாமல் விழித்தாள். மறுகணம் முகம் குப்பென்று சிவந்தது. உடனே ஒரே ஓட்டமாய் ஓடி மறைந்துவிட்டாள்.

பதைக்கும் உள்ளத்துடன் நான் மாலையில் ஈசுவரன் கோயிலில் போய்க் காத்திருந்தேன். மணி எட்டாகியும் அவள் வரவில்லை. மனம் துணுக்குற்றது. இராத் தூக்கம் இன்றி மறுநாள் பொழுது விடிவதை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். பொழுது விடிந்தது. ஆனால் ராதை வரவில்லை.

அதன் பிறகு ஒரு வாரம் அங்கே இருந்தேன். ஆனால் ராதையைக் காணவில்லை. நாம் எழுதியது தவறோ என்று மனம் அடித்துக்கொண்டது. இஷ்டம் இல்லையென்றால் நேரில் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? இல்லையெனில் ஒரு வரி காகிதத்தில் எழுதிக் கொடுத்து விடக்கூடாதா?

அதற்குள் அப்பாவிடமிருந்து இரண்டு கடிதங்கள் வந்துவிட்டன. ஒரு நல்ல ஜாதகம் வந்திருப்பதாயும் உடனே வந்து முடிக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தார். உடைந்த உள்ளத்துடனும் நெஞ்சு நிறைந்த கோபத்துடனும் நான் ஊருக்குப் புறப்பட்டேன்.

அதன் பிறகு என்ன? ராஜத்துக்கும் எனக்கும் கல்யாணம் நடந்தேறியது. அவளைப் போய்ப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்து விட்டது. ராதையின் நினைவு வர வரத் தேயத் தொடங்கியது.

எங்களுடைய சந்திப்பில் அவள் ஒரு வார்த்தை, அரை வார்த்தைக்கு மேல் பேசியதே இல்லை. ஒரு நாள் காலையில் திடீரென்று கேட்டாள்; ''எதற்காக என்னை உங்களுக்கு இவ்வளவு பிடித்தது?''

''சொல்லட்டுமா?''

''ஊம்.''

''உன்னுடைய நெற்றியில் தோசைக்கல் அகலம் சாந்துப் பொட்டு வைத்திருக்கிறயே, அதைப் பார்த்துத்தான்.''

அதற்கு அவள் சொன்ன பதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது. ''உங்களுடைய மதராஸில் சாந்துப் பொட்டு அளவுக்குக் கூடத் தோசைக்கல் இருக்கும் என்று இப்போது தான் தெரிந்துகொண்டேன்!''

''நீ ரொம்பப் பொல்லாதவள்!'' என்றேன். அதற்குமேல் எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

நான் அத்தை வீட்டுக்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது. ஊருக்கு வரும்படி அப்பாவிடமிருந்து இரண்டு கடிதங்கள் வந்துவிட்டன.

அந்த வருஷமே எனக்குக் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று அம்மாவுக்கு ஆசை. நான் உத்தியோகம் கிடைக்கும் வரையில் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே அப்பாவுக்கு எழுதியிருந்தேன்.

ஆனால் இங்கே பாலக்குடிக்கு வந்ததும் என்னுடைய கொள்கைகளும் திட்டங்களும் தடம் பெயர்ந்தன. ராதையைத் தவிர என்னுடைய மனத்தில் வேறு எந்தப் பெண் இனிமேல் இடம் பெற முடியும்? என்னுடைய முடிவைக் கேட்டால் வீட்டில் எப்படிப்பட்ட பெரும் புயல் கிளம்பும் என்பது எனக்குத் தெரியும். அதைச் சமாளிக்கவும் எனக்குத் தைரியம் இருந்தது. ஆனால் ராதை? அவளை எப்படிக் கேட்பது?

இரண்டொரு தடவைகள் துணிந்து அவளைக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தேன். ஆனால் அவளுடைய முடிவு எப்படி இருக்குமோ

3

"எழுந்திருங்களேன்! அவசரம்!'' என்ற ராஜத்தின் பரபரப்பான குரல் கேட்டு அரைத் தூக்கத்திலிருந்து விழித்தேன்.

''தந்தி வந்திருக்கிறது! சீக்கிரம் எழுந்திருங்கள்!''

''தந்தியா? எங்கேயிருந்து?''

''மாயூரத்திலிருந்து.''

அவசர அவசரமாக அதை வாங்கிப் பார்த்தேன். ''உடனே அடுத்த ரெயிலில் புறப்பட்டு வருக. அவசரம்'' என்று அத்திம்பேர் கொடுத்திருந்தார். அத்தைக்குத் திடீரென்று உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதோ என்று நினைத்தேன்.

மாயூரத்துக்குப் புறப்பட்டேன். போகும் வழியில் ரெயிலில் அத்தையைப் பற்றியே நினைத்துக்கொண்டு போனேன். என்ன உடம்போ என்னவோ? எப்படியாவது அவர்களுக்குக் கடவுள் ஒரு குழந்தையை அருளி

அசையாத விளக்கு

காற்றில்லாத இடத்தில் எரியும் விளக்கின் ஜ்வாலை அசைவதில்லை. அது ஒரே மாதிரியாக ஒளி வீசித் திகழும். சித்தத்தை அடக்கி ஆன்ம யோகத்தில் கலந்து நிற்கும் யோகிக்கு, இப்படிக் காற்றில்லாத இடத்தில் அசைவின்றி நிற்கும் விளக்கை முன்னோர் உவமையாகக் கூறினர். கண்ணபெருமான் இதைக் கீதையில் எடுத்துக் காட்டுகிறான்.

கொடியும் விளக்கும்

ரெயில்வே ஸ்டேஷன்களில் ரெயிலை நிறுத்தவும் புறப்படச் செய்யவும் சிவப்பு, பச்சை நிறக் கொடிகளை விசிறுகிறார்கள். இரவில் சிவப்பு விளக்கும் பச்சை விளக்கும் காட்டுகிறார்கள். பழைய காலத்திலும் சில குறிப்புகளைக் காட்டப் பகலில் கொடிகளும் இரவில் விளக்குகளும் பயன்பட்டன என்று தெரிய வருகின்றது.

மதுரைமா நகரத்தில் நாள் அங்காடி, அல்லங்காடி என்று இரு பெருங் கடைவீதிகள் இருந்தன. பகலில் பண்டங்கள் விற்கும் இடம் நாள் அங்காடி; நாள் என்பது பகல். இரவில் வியாபாரம் நடைபெறும் இடம் அல்லங்காடி. அல் - இரவு. பகற்கடையில் இன்ன பண்டம் இங்கே விற்கப்பெறும் என்பதை அந்தக் கடையின்மேல் உள்ள கொடியின் நிறமோ, சித்திரமோ காட்டுமாம். அப்படியே அல்லங்காடியில் விளக்குகளின் மூலம் இன்ன விற்பனை நடைபெறுகிறது என்று புலப்படுத்துவார்களாம்.

யிருந்தால் மனசு கஷ்டமின்றி உயிர் விடுவாள்.

மாயூரத்தில் இறங்கி நான் அத்தை வீட்டை அடைந்தபோது விளக்கு வைத்து விட்டது. உள்ளே நுழைந்து அத்தையைப் பார்த்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவளுக்கு ஒன்றும் இல்லை. அது மட்டும் அல்ல. ''வா அம்பி'' என்று என்னை வேண்டா வெறுப்பாய் வரவேற்றாள். அத்திம்பேரைக் காணவில்லை.

என் திகைப்பு அடங்கி நான் வாய் திறக்கு முன் பள்ளிக்கூட வாத்தியார், ராதையின் சகோதரி புருஷர், எங்கிருந்தோ நுழைந்து, ''வாருங்கள், ஸார்! சீக்கிரம் வாருங்கள்'' என்றார். அவரைப் பார்த்ததும் எனக்கு மனத்தை என்னவோ செய்தது. அவர் கூடவே மௌனமாகப் போனேன்.

போகும்போதே, ''உங்களைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். அதுதான் தந்தி கொடுத்தது'' என்று அவர் தெளிவாக்கிக்கொண்டே போனார். எனக்கு அவர் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லை.

ஏதோ பேயினால் உந்தப்பட்டவன்போல் அவரையும் தள்ளிக்கொண்டு அவருடைய வீட்டுக்குள் நுழைந்தேன்.

அங்கே கூடத்தின் மத்தியில் கிடந்தாள் ராதை. அவளுடைய நிலையைப் பார்த்ததும் அடிவயிற்றில் பகீரென்றது. வற்றிய உடலும், வாடிய முகமும்! ராதையா அவள்? கண்டதும் கருத்தைக் கவர்ந்து இழுக்கும் அந்தச் சுந்தரப் புன்சிரிப்பு எங்கே? சுற்றிச் சுழலும் அந்த வண்டு விழிகள் எங்கே? எப்படி இவ்வளவு கோரமாக மாறினாள்?

பக்கத்தில் போய்க் குனிந்தேன். அந்த வாடிய முகம் மலர்ந்தது. கண்கள் என்னை உட்காரும்படி கெஞ்சின. உதடு அசைந்தது. நான் உட்கார்ந்து அவளுடைய மெல்லிய விரல்களைப் பற்றினேன். அந்த முகம் இன்னும் அதிசயமாக மின்வேகத்தில் மாறியது. என்ன கவர்ச்சி! என்ன இனிமை!

தணிவான குரலில், கிணற்றிலிருந்து பேசுவதுபோல் பேசினாள்; ''உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். பார்த்து விட்டேன்....''

அதற்குமேல் பேச முடியவில்லை. மூச்சுத் திணறிற்று. எனக்குப் பதில் பேச வார்த்தை கிளம்பவில்லை. அவளுடைய விரல்கள் மெதுவாக ஒரு காகிதத் துண்டை என்னிடம் எடுத்து நீட்டின. அதை வாங்கிப் பிரித்தேன்:-

''நாளை வதுவை மணம்என்று நாளிட்டுப்
பாளைக் கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்,
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான்ஓர்
காளை புகுதக் கனக்கண்டேன் தோழீ! நான்.''

அதைப் படித்ததும் ஒன்றும் புரியாமல் நான் திகைத்தேன். என்னையே நோக்கிக்கொண்டிருந்த அவளுடைய விழிகள் களிப்பின் மிகுதியால் விரிந்தன. மெதுவாக ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினாள்:

''இந்தப் பாட்டை உங்களுக்கு ஒரு தடவை பாடிக் காட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால்....ஆனால்....வெட்கம் என் வாயை அடைத்துவிட்டது....உங்களை முதலில் பார்த்தது முதலே....ஆசையாக இருந்தது....'கோளரி மாதவன்' என்றால் என்ன என்று எனக்கு அர்த்தம் தெரியவில்லை.. ஆனால்....உங்களைப் பார்த்த அப்புறம்.. உங்கள் மாதிரியேதான் அவன் இருப்பான் என்று தோன்றும்....''

அந்தக் கணத்தில் அவளுடைய முகம் ஒரு முழுத் தாமரையைப் போல் தோன்றியது எனக்கு. அந்த வற்றிய முகத்தில் அவ்வளவு செம்மை எங்கிருந்து வந்தது? அந்த விழிகள் அப்படியே அன்பு பொங்க, என்னை நோக்கியபடியே நிலைத்து நின்றன....

எத்தனை நேரம் கருங்கல்லைப்போல் நான் உட்கார்ந்திருந்தேனோ தெரியாது. வெகு நேரம் ஆகியிருக்க வேண்டும். வழிநடையில் வாத்தியாருடைய பேச்சுக் குரல் கேட்டு நான் உயிர் பெற்றேன். கடைசி முறையாக அந்த அழியாப் புன்சிரிப்பை நோக்கினேன். என்னுடைய பார்வை தலையணைக்கு அடியில் தெரிந்த ஒரு சிவப்புத் தாளின்மேல் விழுந்தது. கை தானாகவே அதை எடுத்துப் பார்த்தது. என்னுடைய திருமண அழைப்பிதழ்! என் தலையில் யாரோ சம்மட்டியால் அடித்தது போன்று இருந்தது. நிலை கலங்கிப் போய் எழுந்து வெளியேறினேன். ★

அப்பா
விஷயம் தெரிந்தவர்
அவன் அப்பா விஷயம் தெரிந்தவர். அவர் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன குளுமை! என்ன மென்மை! அந்தக் குழந்தையின் சருமத்திற்கு எவ்வளவு இனிமையானது!
Johnson's
TRADE MARK
ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்
Johnson's
BABY
POWDER
இலவசம்
குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு வேண்டிய அனேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. சுலபமாகப் படித்து புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் 24._G
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட்
பம்பாய்
JB. 3023

For

PRINTING INKS
PRINTING PAPER
GERMAN LITHO PLATES
GERMAN PROCESS ZINC SHEETS
"BUTTERFLY" GUMMED TAPE

★

Individual attention is given to your own particular requirements.

★

Indenting Agents:
FOR PAPER, IRON & STEEL, MATCH CHEMICALS, PRINTERS' REQUISITES

★

K. ORR & COMPANY

40, Chinna Thambi Street, Madras 1

Tel: "PRESUNDRY" **Phone: 3519**

சேர்த்த நிதி எங்கே?

பி. ஸ்ரீ.

பரத்திலே நிதி சேமித்த திருக்கச்சி நம்பியின் அற்புதமான கதை.

ஆற்றங்கரை மண்ணில் நடந்து போகிறார். காஞ்சி மாநகரின் வேகவதி ஆறு. நீர் இல்லாத ஆற்றிலே பக்தி வெள்ளமாக ஓடுகிறது, பக்தர் கண்களுக்கு.

ஒருவன் பின்தொடர்ந்து வருகிறான், சற்றுத் தூரத்திலே. ஏன் அப்படி மணற்பொடியை எடுத்துத் தலையில் வைத்துக் கொள்கிறான்?

''கோயிலிலும் பெருமாளிடத்திலுமே இனி உன் வியாபாரம்!'' என்ற தந்தையார் வாக்கு எவ்வளவு அதிசயமாகப் பலித்துவிட்டது! 'பெருமாள் கோயில்' என்ற வரதராஜர் கோயிலில் அநவரத கைங்கரியம் செய்துகொண்டிருக்கும் பேறு கிடைத்திருப்பதால் '**திருக்கச்சி நம்பி**' என்று பெயர் பெற்றிருக்கும் பெரியார் இவர். இவரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருப்பவனே 'தாழ் குலம்' என்று அந்நாளில் ஒதுக்கப்பட்டிருந்த வள்ளுவ குலத்தைச் சேர்ந்தவன்.

'நீசனேன் நிறைவு ஒன்றும் இலேன்!' என்ற ஆழ்வார் வாக்கை அநுசந்தித்துக்கொண்டே திருக்கச்சி நம்பி ஒரு கணம் திரும்பிப் பார்க்க நேர்ந்தது. உடனே, 'யார் இவர்? ஏன் அப்படித் தலையில் மணற் பொடியை வைத்துக்கொள்கிறார்? பைத்தியமா?' என்று எண்ணமிட்டவராய் அவனைக் கூவி அழைக்கிறார்.

வள்ளுவன்: (இவரை நோக்கிக் கொஞ்ச தூரம் வந்தபின் அப்படியே நின்றுகொண்டு) சுவாமி, தங்கள் திருவடிகளைத் தரிசிப்பதும், அந்த அடிமலர்களால் மிதியுண்ட மணற் பொடியை முடிமேல் அணிவதும் அடியேனுக்குப் பைத்தியமாகிவிட்டன. இதைப் பல தினங்களாக அநுசரித்து வருகிறேன். மன்னிக்க வேணும், சுவாமி.

நம்பி: (நெருங்கி வந்து) நல்ல புத்திசாலியாக இருக்கிறீர். நீர் இப்படிச் செய்யலாமா?

வள்ளுவன்: அடியேன் குலத்தில் சிறந்தவனும் அல்ல; தனத்தில் மிகுந்தவனும் அல்ல; படிப்பிலோ தவத்திலோ உயர்ந்தவனும் அல்ல. ஆயினும், பெரியோர் பெறும் பேற்றை நோக்க, ஆசை கரை புரளக் காண்கிறேன். அந்த ஆசை கை கூடுவதற்கோ, அருளாளனுடைய அருள் வேண்டியது. தாங்கள் அப்பெருமானை நாள்தோறும் பணிகளால் உகப்பித்து வருகிறீர்கள். முகமுகமாய் வார்த்தையாடிக்கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அத்தகைய மகாநுபாவரான தங்களை நெருங்கித் தொண்டு செய்யும் பேறு எனக்கு வாய்க்கவில்லையே! தங்கள் திருவடித் தூசையாவது தலைமேல் தரித்துக் கொள்ளலாமென்றுதான் தங்களை இப்படித் தொடர்ந்து வருகிறேன்.

நம்பி: (அதிசயித்து) பிள்ளாய், நீர் அறிவாளராய்க் காண்கிறீர்; இப்படிச் செய்வது தகுதியோ? உமக்கு ஏதாவது விருப்பம் இருந்தால் தெரிவிக்கலாம். இயன்றால் உதவுவேன்.

வள்ளுவன்: அடியேனும் பேறு பெறக் கூடுமா? அருளாளனைக் கேட்டாவது அறிவிக்க வேண்டுகிறேன்.

திருக்கச்சி நம்பி கோயிலுக்குத் திரும்பினார். பெருமாளிடம் வள்ளுவன் வேண்டுகோளை விண்ணப்பஞ் செய்துகொண்டார்.

அன்றிரவில் நம்பிமுன் குறு நகையுடன் தோன்றிய அருளாளன், ''நம் அடியார் அடிப் பொடி தலைமேல் இருக்க அவனுக்குப் பேற்றில் ஐயமும் உண்டோ?'' என்று அருளினன்.

மறுநாள் காலையில் வழியில் காத்துக்கொண்டிருந்த வள்ளுவனை மறுபடியும் நம்பி சந்தித்தார். ஆதரம் பெருக அவனை நோக்கி, ''உமக்குப் பேறு சித்தமாக இருக்கிறது காணும்!'' என்று முக மலர்ந்தார்.

உடனே வள்ளுவன் தண்டனிட்டு, ''சுவாமி, இந்தப் பொன்னடிகளின் மகிமையாலன்றே அடியேனுக்குப் பேறு சித்திக்கப் போகிறது? தேவரீருக்குப் பேறு சித்திக்கும் அக் காலத்தையும் அடியேன் அறிந்துகொண்டால், அங்கேயாவது அருகிருந்து திருவடிகளில் பணி செய்ய ஆசைப்படுகிறேன். அதையும் கேட்டு அருளிச் செய்ய வேணும்'' என்றான்.

நம்பி திரும்பிப் போகும்போது, 'நம்முடைய சொந்த விஷயத்தை எப்படிப் பெருமாளிடம் கேட்பது?' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டார். அன்றும் வழக்கம் போல் பெருமாள் கைங்கரியத்தில் ஈடுபட்டார். எனினும், 'அவர் கேள்வி இருந்தபடி என்னே!' என்ற நினைவு அடிக்கடி வந்தது.

அன்று இரவிலும் அருளாளன் நம்பிமுன் தோன்றினன். ''அந்த வைஷ்ணவனுக்கு நம் உள்ளக்குறிப்பை வெளியிட்டீரோ?'' என்று கேட்டான். அவனுடைய இரண்டாவது விருப்பத்தையும் இவர் விண்ணப்பம் செய்ய, அருளாளன் நகை செய்து, ''நம்பி, நம்முடைய பக்தியும் குருபக்தியும் சிறந்தவை என்பதில் ஐயமில்லை. எனினும் அன்பர் பணியே பேற்றுக்குக் கொழுகொம்பு. அது இல்லாதார்க்குப் பேற்றில் ஐயமுண்டென்று சொல்லவும் வேண்டுமோ?'' என்றான். திருக்கச்சி நம்பி திடுக்கிட்டெழுந்தார். பிறகு அன்றிரவு உறக்கம் வரவில்லை.

அதிகாலையில் திருக்கச்சி நம்பி திருவரங்கத்தை நோக்கிப் புறப்பட்டார். தாம் அணிந்திருந்த பரிவட்டங்களைக் களைந்து பத்திரப்படுத்திக்கொண்டு மாடு மேய்ப்பவனைப் போல் வேஷம் பூண்டு சென்றார். போகும் போதே தம்முடைய வாழ்க்கைக் கதையை நினைத்துப் பார்த்தார்.

வீரராகவ செட்டியார் பூவிருந்தவல்லியில் ஒரு பிரபல வியாபாரி; பெருஞ் செல்வர். அற வழியில் வாணிகம் செய்து பொருள் ஈட்டுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவருடைய நாலு புதல்வர்களில் 'கடைக்குட்டி' யான இவர் செல்வத்துள் செல்வமாக வளர்க்கப்பெற்றார்.

செட்டியார் தமது கிழப்பருவத்திலே புதல்வர்களைக் கொண்டு செல்வத்தை விருத்தி செய்விக்கவும், தாம் இளைப்பாறவும் விரும்பினர். சமமாக நாலு பங்கிட்டுக் கொடுத்துச் சில ஆண்டுகள் சென்றபின், ஒரு நாள் செட்டியார் பிள்ளைகளையெல்லாம் வரவழைத்து உரையாடிய அந்த நிகழ்ச்சி, இப்போதுதான் நிகழ்வதுபோல், அவ்வளவு தெளிவாக, அவ்வளவு விவரமாகத் திருக்கச்சி நம்பிகளின் நினைவிற்கு வந்தது.

செட்டியார் மாளிகையில்:

வீரராகவர்: வாருங்கள் பிள்ளைகளே, உங்களிடம் நான் ஏற்கெனவே ஒப்படைத்திருந்த செல்வத்தை நீங்கள் எங்கே சேமித்து எப்படி அபிவிருத்தி செய்து வருகிறீர்கள்?

(மூத்தவனை நோக்கி) திருவேங்கடம், உன் நிலைமை என்ன?

பிள்ளை 1: அப்பா, நான் காஞ்சி முதல் காசி வரை நடைபெற்றுவரும் கூட்டு வியாபாரம் செய்கிறேன். சென்ற ஆண்டிலேயே மூலதனம் இரட்டிப்பாகிவிட்டது.

பிள்ளை 2: நான் குமரி முதல் இமயமலைவரை செல்லும் வியாபார யாத்திரைக் குழுவினருடன் சென்று வந்தேன். மும்மடங்கு பெருகியிருக்கிறது முதல்.

பிள்ளை 3: கடல் கடந்து சாவகம் முதலான தீவுகளிலும் நடக்கிற கப்பல் வியாபாரத்திலே நான் முதலீடு செய்திருக்கிறேன். இந்த ஆண்டிலும் கொள்ளை லாபம் கிடைக்குமென்று நம்புகிறேன்.

வீரராகவர்: அருமைப் பிள்ளைகளே, உங்கள் திறமையை மெச்சுகிறேன். அதோ நம்பிமட்டும் பேசாமல் சும்மா நின்றுகொண்டிருக்கிறனே.

(அவனை நோக்கி) உன் சீலத்தை நான் நன்கறிவேன். சிறிதும் நெறி பிசகாத நீ பொதுமக்களின் நம்பிக்கைக்கு உரியவனுகி வாணிகத்திலே நிறையப் பொருள் ஈட்டியிருப்பாயே, நீ சேமித்த பொருள் எங்கே?

பிள்ளை 4: பரத்திலே சேமித்து வைத்தேன், அப்பா.

வீரராகவர்: (திகைத்து) அதாவது என்ன?

பிள்ளை 4: கோயில்தோறும் சென்று இறைவன் திருப்பணியிலேயே பொருளையெல்லாம் செலவு செய்துவிட்டேன்.

வீரராகவர்: (திடுக்கிட்டு) ஓஹோ! அப்படியானல் உன் வியாபாரத்தை நீ கோயிலிலும் பெருமாளிடத்திலுமே தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கலாம். எங்கள் வணிகர் குலத்தில் உனக்கு இடம் இல்லை.

[நம்பி வெளியே வந்ததும், தாயான கமலை சந்திக்கிருள்.]

கமலை: பிள்ளாய், இந்த நகைகளை உனக்குத் தருகிறேன். விற்று, வாணிகமோ, வேறு உசிதமான காரியமோ நீ செய்துகொள்ளலாம்.

நம்பி: அம்மா, இது உசிதமன்று. என்னுடைய இதத்தை நாடும் தந்தையாரின் வாய்மொழிப்படியே நடப்பதாகத் துணிந்து விட்டேன்.

* * *

எத்தனை ஆண்டுகள் கழிந்துவிட்டன! 'பூ இயல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு ஆவி உள்குளிர' அத்திகிரி அருளாளனுக்குப் பணி செய்யும் பேறு வாய்த்ததும், 'பரத்திலே பெருநிதி சேமித்து வைத்திருக்கிறார் இவர்!' என்று ஓசைப்பட்டது ஊரெல்லாம், நாடெல்லாம்.

'கனவிலும் என் நனவிலும் கண்களிப்ப நோக்கினேன்' என்பது இவர் பக்தியநுபவம். 'பங்கயத்தின் பொன் இயல் காடு ஓர் மணிவரை மேல் பூத்ததுபோல்' அருளாளன் இவருக்கு அடிக்கடி காட்சி வழங்கியருளினன். 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே!' என்று இவரும் அருளாளனுக்கே ஆளாகிப் பணி புரிந்து வந்தார்.

ஆளவந்தார் என்ற பேராசிரியரைக் குருவாகக் கொள்ளும் பேறும் இவருக்கு வாய்த்திருந்தது. 'தேனர் கமலத் திருமகள்

கொழுநன் தானே குருவாகி வந்து' அருள்புரிந் ததாக இவர் கருதியதும் உண்டு. திருவாய் மொழி முதலான திவ்யப் பிரபந்தங்களைக் கற்றிருந்தார்.

எனினும், வேகவதி ஆற்றங்கரையில் வள்ளு வன் கற்பித்த பாடத்தை - அந்த வள்ளுவனுக் காக அருளாளனே கனவில் வந்து கற்பித்த பாடத்தை - மறக்க முடியாமல்தான் இவர் அப்பெருமான் பணியையும் துறந்து, மாடு மேய்ப்பவன் கோலத்தில் சென்றுகொண் டிருந்தார். திருவரங்கத்திற்குத்தான் போய்க் கொண்டிருந்தார். ஆனால் இப்பொது 'தெண் ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும்' அரங்கனுக்குப் பக்தி செய் யவோ, பணி செய்யவோ போகவில்லை.

பரத்திலே நிதியை உள்ளபடியே சேமித்து வைக்கப் பகவானுக்குப் பணி செய்வது போதாது என்பதல்லவா இப்போது இவர் கருத்து?

'எம்பெருமான் தாள்தொழுவார் எப் பொழுதும் என்மனத்தே இருக்கின்றாரே' என்றும், 'பேராளன் பேர் ஓதும் பெரி யோரை ஒருகாலும் பிரிகிலேனே' என்றும், 'எம்பெருமான் தாளை நாளும் சிந்திப்பார்க்கு என் உள்ளம் தேனூறி எப்பொழுதும் தித் திக்குமே' என்றும் ஆழ்வார் அருளிச்செய் திருப்பவை நினைவிற்கு வந்து, 'நீ ஆழ்வா ருள்ளத்தை இதற்கு முன் சரியாகத் தெரிந்து கொண்டாயில்லை!' என்று இடித்துக்காட்டுவது போலத் தோன்றியது.

* * *

திருக்கச்சி நம்பி திருவரங்கம் சேர்ந்ததும், பெரிய நம்பிக்கு வண்டியோட்ட ஒரு வேலை யாள் தேவை என்று கேள்விப்பட்டார். உடனே அவரிடம் போய் வேலைக்கு அமர்ந்து, மாடுகள் மேய்த்தும் வண்டியோட்டியும் பணி செய்யலானார்.

பெருமாள் கோயிலில் ஆலவட்டப் பணி செய்து பெருமாளுடன் முகமுகமாய் உரை யாடிக்கொண் டிருந்தார் என்ற அந்தப் புகழைக் காட்டிலும், தம்மைத் தொண்டிலே மறைத்துக்கொண்டு வண்டி யோட்டுவதும் மாடு மேய்ப்பதும் இவருக்குப் பேரின்பமாகத் தோன்றின.

பெரியநம்பி திருக்கச்சி நம்பிக்கு ஏற் கனவே அறிமுகமா யிருந்தவர்தாம். இருவ ரும் ஆளவந்தாரின் சீடராக இருந்தவர்கள். ஆனால் பெரிய நம்பிக்கு வயசு முதிர்ந்து கண்பார்வையும் சற்று மங்கியிருந்தது. திருக் கச்சி நம்பியோ தம் பாகவத வேஷத்தை மறைத்துச் சாதாரணமாக மாடு மேய்ப்பவனைப் போல் நடையுடை பாவனைகளையும் மேற் கொண்டிருந்தார். அதனால் அந்த நம்பி இந்த நம்பியைக் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே, இந்தப் புதுமைப் பணி இடையூறின்றி இனிது நடந்து வந்தது.

பெரியநம்பி பல கிராமங்களுக்கும் சென்று பக்திப் பிரசாரம் செய்வதுண்டு. அப்போது உற்சாகமாய் வண்டியோட்டிக்கொண்டு போவார் திருக்கச்சி நம்பி. 'எப்படிக் கற்றோம்?' என்று தாமே அதிசயிக்கும்படி அவ்வளவு தேர்ச்சி பெற்றுவிட்டார் இவர், இந்தத் தொழிலிலே.

இப்படி இப் பணி நடந்துகொண்டிருந்த போது, ஒரு நாள் ஒரு கிராமத்திலே 'செவிநுகர் கனிகள்' சொரிந்து காலட்சேபம் நடத்தி அடியவர் பணியின் அருமை பெருமை களை வற்புறுத்தி விட்டுப் பெரிய நம்பி தம் திருமாளிகைக்குத் திரும்பினார். அந்தக் கனி களைச் செவிவாயாக நுகர்ந்து கண்ணீரும் கம்பலையுமானவர் திருக்கச்சி நம்பிதாம்.

திரும்பியபோது மழை பெய்யத் தொடங் கியது. திருக்கச்சி நம்பி வண்டியைச் சற்று விரைவாகவே ஓட்டினார்.

மழை பெருமழை யாகிவிட்டது. வழி நெடுகத் தண்ணீரும் சேறுமாகி, வண்டி ஓட்டுவது கஷ்டமாகிவிட்டது. திருக்கச்சி நம்பியோ ஒரு கையில் மாடுகளின் தலைக் கயிற்றைப் பிடித்துக்கொண்டும், மற்றொரு கையில் விளக்குக் கூட்டைப் பிடித்துக் கொண்டும் வண்டியை நடத்திச் சென்றார். சேற்றிலே உருளைகள் அழுந்தும் போதெல்லாம் தாமே தோள் கொடுத்துக் கிளப் பித் தள்ளிக்கொண்டு போவார்.

காற்றும் மழையும் இருட்டும் சேர்ந்து கொண்டதால், வழிகாண்பதே மிகவும் சிரம மாகிவிட்டது, விளக்குக் கூட்டில் அணைந்து போகாது தாம் காப்பாற்றிக்கொண்டு வந்த

★

மழை பெய்யத் தொடங்கியது.



அந்த ஒளியால் அல்ல, அருளாளனது அருள் ஒளியால்தான் வழிகண்டு பெரிய நம்பியை மாளிகையில் கொண்டு சேர்த்ததாக நம்பினார் திருக்கச்சி நம்பி. அந்த அருள்தானே ஒளி காட்டி இந்தத் தொண்டு நெறியையும் இவருக்குக் காட்டியது?

'வயசு முதிர்ந்த பெரிய நம்பியை எப்படியோ அதிகமாய் நனைய விடாமல் க்ஷேமமாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டோமே!' என்ற பெருமகிழ்ச்சியில் தம்முடைய களைப்பையும் மறந்தவராய்த் திருக்கச்சி நம்பி, மாடுகளைப் பிடித்து ஒரு புறம் கட்டிவிட்டு, அடுத்த மாளிகையின் தாழ்வாரத் திண்ணையில் ஏறி நின்றார். 'என்ன பேறு பெற்றோம்!' என்ற குதூகலத்திலே, பெருநிதி சேர்ந்துவிட்டது போன்ற உணர்ச்சியும் ஏற்பட்டது.

மின் வெட்டி மறைவது போல், அந்த உணர்ச்சி மறைந்ததும், உடம்பு குளிரால் கிடுகிடுவென்று நடுங்குவதை உணர்ந்து கொண்டார். நனைந்திருந்த ஆடைகளைப் பிழிந்து உடம்பைத் துடைத்துக்கொண்டார்.

மாற்றுடையாகக் கட்டிக்கொள்ள உலர்ந்த ஆடை வேறே இல்லாததால், தாம் பெருமாள் கோயிலில் (காஞ்சியில்) இருந்தபோது வழக்கமாகத் தரித்துக்கொண்டிருந்த பரிவட்டங்களைக் கொஞ்சநேரம் உடுத்துக் கொண்டிருக்கலாமே என்று கருதினார்.

அந்த மாளிகைத் திண்ணையின் மேற்புறத்துக் கூரையில் ஒரு புறமாகத் தாம் மறைத்து வைத்திருந்த அந்தப் பரிவட்டங்கள் சிறிதும் நனையாமல் இருந்தது கண்டு, அவற்றை உடுத்துக்கொண்டு, நனைந்த ஆடைகளைக் காற்றில் உலரும்படி கட்டிவிட்டு, ஒரு மூலையில் ஒதுங்கியிருந்தார். இதற்குள், உள்ளே சென்ற பெரிய நம்பி வெளியே வந்து, ''வண்டிக்காரா! வண்டிக்காரா!'' என்று கூப்பிட்ட சத்தம் காதில் விழுந்தது.

நன்றாகத் துவைத்துச் சுத்தமாக உலர்த்தி வைத்திருந்த இரண்டு உடைகளைப் பெரிய நம்பி இவருக்காக எடுத்துக்கொண்டு இடைகழிக்கு வந்து இவரைத் தேடிக் காணாமல், அந்த மழையில் குடையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, விளக்குக் கூட்டை ஒரு கையில் ஏந்திக்கொண்டு, வெளியே வந்துவிட்டார். அவர் தம்மைக் கூப்பிட்டுக்கொண்டே இரண்டு மூன்று அடிகள் பெயர்த்து அந்த மழையில் நடப்பதையும் திருக்கச்சி நம்பி திண்ணையிலிருந்து பார்த்துவிட்டார். உடனே குதித்தோடி வந்து வணங்கினார்.

இதற்குள்ளே பெரிய நம்பி மாளிகையில் இருந்த பரிசாரகர்களும் தீபங்களுடன் வந்துவிட்டார்கள். அவர்களை நோக்கிப் பெரிய நம்பி, ''என்னகாணும்! இந்த மழையில் நம்முடைய வண்டிக்காரன் உடம்பு முழுவதும் நனைந்து விறைத்து எவ்வளவு கஷ்டப்பட்டு நம்மைக் காப்பாற்றிக்கொண்டு வந்து சேர்த்திருக்கிறான்! அவன் கொண்டு வந்து சேர்த்த படியாலன்றோ நீங்கள் நம்மைக் காண வாய்த்தது? இப்போது அவனை அநாதரித்துவிட்டோமே!'' என்று தமது வேதனையைத் தெரிவித்துக்கொண்டார்.

பிறகு, தம்மை வணங்கி எதிரே நின்ற திருக்கச்சி நம்பியை அந்த விளக்குகளின் வெளிச்சத்திலே பரிவட்டங்களுடன் பார்த்துவிட்டார். திகைத்தார்; திடுக்கிட்டார்.

மங்கியிருந்த பார்வை திடீரென்று தெளிவுற்றதுபோல் தோன்றியது. சென்ற காலத்தை ஊடுருவிப் பாய்ந்தது மனக்கண். காஞ்சியிலும் ஆளவந்தாரின் காலட்சேப கூடத்திலும் தாம் கண்டிருந்த திருமுகத்தை அப்படியே கண்டு கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

பெரியநம்பி திருக்கச்சி நம்பியை நோக்கி, ''இந்த வேஷத்தை இத்தனை நாளும் மறைத்து வைத்து மோசம் செய்தீர், கச்சி நம்பிகளே!'' என்று சொல்லிவிட்டு, ஆலிங்கனம் செய்து கொண்டார். அப்பால் இருவரும் அந்த மாளிகைக்குள்ளே சென்று அளவளாவினர்.

'கச்சி நம்பிகளே!' என்று தம்மைப் பெரிய நம்பி அழைத்ததைக் காட்டிலும், 'வண்டிக் காரா!' என்று கூப்பிட்டதிலேயே தாம் வந்த காரியம் பூர்த்தியாகிவிட்டதென்று உளம் குளிர்ந்தார் திருக்கச்சி நம்பி. அந்தக் காரியத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பெரிய நம்பி ஆச்சரியமடைந்து, ''இந்த ஒரு பாடத்தை நானும் உம்மோடு பகிர்ந்துகொள்ள ஆசைப் படுகிறேன்; அந்தோ!'' என்று கண்ணீர் வடித்தார். பிறகு இரண்டு நம்பிகளும், மறைகளுக்கு மறைந்துபோய் மாடுமேய்க்க வந்து சேர்ந்த கண்ணன் புகழ் பாடினர்.

சில தினங்கள் பெரிய நம்பி திருக்கச்சி நம்பியைத் தம்முடன் விருந்தினராக வைத்துக் கொண்டிருந்து பணிபுரிந்தார்.

திருக்கச்சி நம்பி விடை பெற்றுக் காஞ்சிக்குத் திரும்பி வந்து வழக்கம்போல் வரதராஜப் பெருமாளின் கைங்கரியத்தில் ஈடுபடலானார்.

* * *

'இப்படி ஒரு பெரியார் நம்மூருக்கு அருகே இருப்பதையும் அறியாதிருந்துவிட்டோமே! பார்த்து ஆசி பெற்று ஆறுதல் பெற்று வருவோம்' என்று தொண்டு கிழவராக இருந்த வீரராகவ செட்டியாரும், அவருடைய மனைவி கமலையம்மையும், 'வணிக மும்மணிகள்' என்று தேசப்பிரசித்தி பெற்றிருந்த மூன்று பிள்ளைகளும் காஞ்சிக்கு வந்தார்கள். திருக்கச்சி நம்பியைச் சகோதரர்கள் உடனே தெரிந்து கொண்டார்கள்.

தங்கள் 'கடைக்குட்டி'தான் இன்று தொண்டக் குலத்தின் முதல்வராகத் திகழ்கின்றார் என்று தெரிந்துகொண்டதும், தந்தையும் தாயும், ''உம்மையும் எங்களில் ஒருவராக எண்ணி நாங்கள் இழைத்த பிழைகளைப் பொறுத்துக்கொள்ள வேணும். நம் ஊருக்கு வந்து எங்களுக்கும் உண்மையான சேமநிதியைக் காட்ட வேணும். இனி நாங்கள் உமக்கு இஷ்டமானபடியே நடப்போம்'' என்று வேண்டிக்கொண்டார்கள்.

அதற்கு நம்பி, ''இனி அது கூடுமோ? தொண்டக்குலத்துக்குத் தொண்டு செய்வதை இனி இறைப்பொழுதும் விட்டு நீங்க முடியாதே! தொண்டு நெறியிலே சென்றுவிட்டால் அவர் திரும்பியும் வருவாரோ?'' என்றார்.

''அந்தத் தொண்டுக்கே நாங்கள் சேமித்து வைத்திருக்கும் நிதி முழுவதும் உரியதாகும்; பரத்திலே சேமித்து வைத்திருக்கும் அந்தப் பெருநிதியுடன் எங்கள் அற்பப் பொருளும் சேர்ந்து மணம் பெறவேணும்'' என்றார் திருக்கச்சி நம்பியைப் பெற்றெடுத்த பாக்கிய சாலியான வீரராகவர். ★

எவ்வளவு தூய்மையானது பாருங்கள்!

பியர்ஸ் சோப்புக் கட்டியை வெளிச்சத்துக்கு எதிரே பிடித்துப் பாருங்கள்—நேரடியாக அதன் மூலம் உங்களால் ஊடுருவி நோக்க முடியும்! ஆம், பியர்ஸ் தூய்மை என்றால் அதுதான்! பச்சிளங் குழந்தையின் மென்மையான சருமத்துக்கும் பரிபூரணமான பாதுகாப்புத் தரும் அளவுக்கு பியர்ஸ் அவ்வளவு தூய்மையும் மென்மையும் கொண்டது!

எவ்வளவு நல்லதென்று உணருங்கள்!

பியர்ஸ்சோப் உங்கள் சருமத்துக்கு நல்லது. அசல், க்ளிஸரின் அடங்கிய இந்த அழகு தரும் சோப் சருமத்தைப் பல்லாண்டுகள் மிருதுவான எழிலுடன் வைத்திருக்கிறது: பியர்ஸ் சோப்பைத் தவறாமல் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

பியர்ஸ் சோப்

அசல், க்ளிஸரின்
அடங்கிய, அழகு தரும் சோப்

லண்டனிலுள்ள ஏ & எப். பியர்ஸ் லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது. TG. 85-50 TM

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

லிமிடெட்

(1943-ஆம் வருஷம் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.)

தலைமை ஆபீஸ்: 2, ராயல் எக்ஸ்சேஞ்ஜ் பிளேஸ், கல்கத்தா.

அதிகாரமளித்த மூலதனம்	... ரூ. 8 கோடிகள்
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ. 4 கோடிகள்
செலுத்தப்பட்ட மூலதனம்	... ரூ. 2 கோடிகள்
ரிசர்வ் நிதி	... ரூ. 95 லட்சங்கள்

கிளைகள்

இந்தியாவில்: வர்த்தக, தொழில் முக்கியத்துவம் பெற்ற எல்லா நகரங்களிலும் பட்டணங்களிலும்.

பாகிஸ்தானில்: சிட்டகாங், காராச்சி.

பர்மாவில்: ரங்கூன், மோல்மீன், அக்யாப், மாண்டலே, பஸ்ஸீன்.

மலாயாவில்: சிங்கப்பூர், பினங்கு, கோலாலம்பூர்.

யுனைடெட் கிங்டத்தில்: லண்டன்.

மற்றும்: ஹாங்காங்.

ஏஜெண்டுகள்: உலகம் முழுவதும் - ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்டிரேலியா.

அலுவலும் தொண்டும்

இந்த பாங்க் டிபாசிட்டுகள் ஏற்றுக்கொள்கிறது; ஒப்புக்கொண்ட அடைமானங்களின்மேல் முன்பணம் கொடுக்கிறது; பில்களை வாங்குகிறது; டிராப்டுகளும் தந்தி டிரான்ஸ்பர்களும் விற்கிறது; எல்லா விதமான வெளிநாட்டு எக்ஸ்சேஞ்ஜ் அலுவல்களையும் கவனிக்கிறது. அகமும் புறமும் பரவிய கிளைகள் மூலமாகவும் உலகம் முழுவதும் வியாபார ஏற்பாடுகள் மூலமாகவும் எவ்வித பாங்க் சேவையையும் நிறைவேற்றுகிறது.

ஜி. டி. பிர்லா
சேர்மன்

எஸ். டி. சதாசிவன்
ஜெனரல் மானேஜர்

கள்ளப் படகு

ஆர்வி

கள்ளப் படகு வியாபாரமும் உள்ளப் படகு காதலும் செய்ய உதவின. ஆனால் கடைசிவரையில் நின்றது ஒன்றுதான்.

"தா புள்ளே! அது என்னா சத்தம்?"

"சத்தமா? எங்கணே?" என்று கோயிந்தி அவனையே பார்த்துக்கொண்டு, ஓலமிடும் இருளாழிப் பக்கம் காதை மட்டும் வளைத்துக் கேட்டாள்.

"ஹோ-உர்ர்ர்...." என்று உறுமியவாறே புரண்டு விழும் அலைகடலின் ஓசையைத் தவிர வேறு அரவம் ஒன்றும் கேட்கவில்லை.

"இல்லே?" என்று தன் செவிகளை நம்பாமல் கேட்டான் முருகனம்பலம்.

"இல்லேங்கறேன்...."

"பின்னே துடுப்புச் சத்தமா இருந்திச்சே!"

"கெனாதான்! நெனப்பு! வேறென்ன?"

முருகனம்பலகாரனுக்குச் சப்பிட்டுவிட்டது. நட்ட நிசிக்கு மேலே காசாங்கட்டைகளைக் கொளுத்திக்கொண்டு இன்னும் எத்தனை நேரம் நிற்பது? மூன்று நாளாக இதே வேலைதான். கட்டை பிடித்துக்கொள்ளும் சமயத்தில் சட சடவெனக் கடுமழை பிடித்து அவித்து விடும். அதற்குப் பிறகு தோப்பிலே அடுக்கிய கட்டையில் அடிக்கட்டையாக இழுத்து வந்து, பந்தத்தைக் கொளுத்தி, மட்டையைக் கொளுத்தி, கட்டையைப் பற்ற வைப்பதற்குள் கிழக்கு வெளுத்து விடும். இப்படித்தான் மூன்று ராத்திரியும் இரண்டு பகலும் கழிந்து விட்டன. மூன்றாவது இரவான இன்றும் பதினைந்து நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது. ஏர்க்கால் நட்சத்திரம் எதிரே சுற்றிப் போய் விட்டது. இதற்கு மேலா அவர்கள் எதிர்பார்க்கிற அவன் - வீரையனம்பலம் - வந்து சேரப் போகிறான்?

"ம்..தோணல்லே!" என்று உதட்டைப் பிதுக்கினான் அவன். கோயிந்திக்கு இந்தப் பிதுக்கல் எரிச்சலாக இருந்தது. இத்துடன் எத்தனையோ தடவை அச்சானியமாக உதட்டைப் பிதுக்கிவிட்டான். இருந்தாலும் அவள் பொறுமையோடுதான் அவன் முகத்தைப் பார்த்தாள். அவளுக்கு வெறும் ஆசை மட்டுமல்ல; நம்பிக்கையும் இருந்தது. வீரையனம்பலம் சாவதாக இருந்திருந்தால் கூட, தன்னிடம் சொல்லி விட்டுத்தான் சாவான் என்று அவள் உறுதியாக நம்பிக் கொண்டிருந்தாள்.

இன்று மழைகூட இல்லை. ஆனால் குளிரும் கூதலுமாக இருந்தது. தீயின் அந்த ஜ்வாலை, குளிருக்கு இதமாக, சுகமாகவே இருந்தது. உள்ளத்திலே மூட்டிய தீக்கு இணையாக இல்லை என்று வேண்டுமானால் அதைச் சொல்லலாம். இதை முன்னிட்டுத்தான் கோயிந்தி தட்டியாக முடைந்திருந்த தென்ன மட்டைகளைப் போட்டுக் கொளுத்தினாள்.

"தா, இப்ப கீத்துக்கட்டு என்னா வெலை விக்குது, தெரியுமில்லே, புள்ளே?" என்றான் முருகனம்பலம்.

"எல்லாந் தெரியும், தெரியும், வுடு!" என்று சொல்லிக்கொண்டே தீயை அரைத் தென்னை உயரம் வளர்த்தாள்.

"பின்னே கித்தைப் போட்டுப் பொசுக்கிறியே!"

"உக்குங்.. இதிலேதான் வந்திடுச்சாம்; மட்டை மரத்திலே இருக்கு; முடைச்சல் விரல்லே இருக்கு..போவியா!"

"மட்டை போனாலும் மனுசன் வருவான்னு இருந்தாலும் தேவலயாம்! இனிமே எங்கே?"

கோயிந்திக்குப் பொறுக்கவில்லை. முருகனம்பலத்தின் மீது ஏற்பட வேண்டிய கோபம் வீரையன் மேலேதான் வந்தது. 'சாகுருவிக் கணக்காவா ஒருத்தன் சாக்காட்டைச் சொல்லிக்கிட்டிருப்பான்?' அதற்கு இடம் கொடுத்துவிட்ட வீரையன்மேல் கோபப்படாமல் என்ன செய்வது?

மூன்று நாட்களாகச் சரியான ஆகாரம் இல்லை; கண் விழிப்பு வேறு. வழிபார்த்து, வழி பார்த்து, விழித்த கண் பூத்தே போய்விட்டது.

"அளமே முழுகிடிச்சாம்; ஆளா பொழச்சிருக்கப் போறான்!" என்று முருகனம்பலம் மீண்டும் துக்கிரிப் பாட்டைத் தொடங்கினான். கோயிந்தி காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. கண் சிவக்க அவள் காசாங் கட்டை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தாள். அதனுடன் அவள் ஆசைகளே புரண்டன.

வேட்டைக்காரங்குப்பத்துக்கு அதுதான் கலங்கரை விளக்கு. தோப்பின் கோடி முனையிலே கிளிஞ்சிலும் சிப்பியும் கொட்டிய மேட்டிலே இருந்த அந்தக் கலங்கரை வெளிச்சம் தெரிந்தால்தான் வலையங் குப்பத்து

வீரையனுக்கு இடம் நிதானப்படும். நட்ட நடு நிசிக்கு மேலே, கொட்டு மழை கொட்டினாலும், சூறை வந்து தூக்கினாலும் அவள் காசாங் கட்டையையும் தென்ன மட்டையையும் கொளுத்திக்கொண்டு நிற்பாள் என்று அவனுக்குத் தெரியும். அவன் கண் அந்த வெளிச்சத்தை எப்படிப் பார்க்கும் என்பதும் அவளுக்குத் தெரியும்.

முருகனம்பலம் உருப்போடுவதுபோல, காற்றும் கடலும் அவனை அப்படியே விழுங்கியிருக்குமோ? இனி, காணவே முடியாதோ?—

கோயிந்தி குளிருக்குச் சிலிர்ப்பதுபோல் உடலைச் சிலுப்பிக்கொண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவன் பாராத அந்த வெளிச்சத்தை, அவன் கண்ணில் படாத அந்தத் தீயை அவளுக்கும் பார்க்கப் பிடிக்கவில்லை.

வலையங்குப்பத்திலேயே வீரையன் அவ்வளவு துணிச்சலும் முக ராசியும் உள்ளவர்கள் யாரும் இல்லைதான். முருகனம்பலம் சொல்லியிருக்கிறான். அவளுக்கும் அது தெரியும்.

மூன்று பக்கமும் காடு; ஒரு பக்கம் அடக்கமான கடல். வலையங்குப்பத்துக்கு வாட்டமான இயற்கை அமைப்பு அது! வெளியுலகத்துக்கு வலையங்குப்பம் என்ற ஊர் ஒன்று இருப்பதே தெரியாது. வலையங்குப்பத்துக்கும் வெளி உலகம் இவ்வளவு பரந்து கிடப்பது தெரியாது. கடலில் கட்டுமரம் கட்டிக்கொண்டு போய், மீன் பிடித்து, கால் நடையாகவே பதினைந்து இருபது மைல் தூக்கிச் சுமந்து ரெயில் வந்து நிற்கும் ஊரில் இருந்த வியாபாரிகளிடம் விற்றுப் பிழைத்து வந்தார்கள் ஆண்கள். கீற்று முடைந்து, சுள்ளி பொறுக்கி, எல்லாவற்றையும் கட்டாகக் கட்டி ஆண்களோடு கூடவே போய் விற்றுவிட்டு, கால் அரை வாங்கித் தலைப்பில் முடிந்துகொண்டு வருவார்கள் பெண்கள். கட்டு மரம் இல்லாதவர்கள் நாலைந்து மைல் நடந்து உப்பளத்தில் வேலை செய்துவிட்டு, உப்பையே கூலியாக வாங்கிக்கொண்டு வருவார்கள். தலைச் சுமையாக உப்பு மூட்டையைக் கொண்டு சென்று விற்றுவிட்டுச் சுருட்டு, புகையிலை என்று வாங்கி வருவார்கள். இதெல்லாம் சண்டைக்கு முன்பு இருந்த நிலைமை. ஆனால் அதற்குப் பிறகு எல்லாம் மாறிவிட்டது. காசுபணத்தின் முழு மகிமையும் அதற்கு மிக நன்றாகப் புரிந்துவிட்டது. கபடு சூது, பாவ புண்ணியம் என்றெல்லாம் அஞ்சிக் கிடந்த பாமர ஜனங்கள், காசுக்காக, பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்துவிட்டார்கள்.

வீரையனம்பலத்துக்கு அப்போது கட்டு மரம் இல்லை. வலையங்குப்பத்துக்கும் வேட்டைக்காரங்குப்பத்துக்கும் நடுவேயுள்ள உப்பளத்



துக்குத்தான் அவன் எட்டு மைல் போலத் தினமும் நடந்து செல்வான். அப்போதுதான் ஒரு நாள் அவன் முருகனம் பலத்தையும் அவன் மகள் கோயிந்தியையும் கண்டான்.

''ஏழெட்டு மைலு தினமும் இது நடந்து வருதா மில்லே, கேட்டியா ஆயிங்!'' என்றாள் கோயிந்தி, தன் தகப்பனிடம்.

''என்னு செய்யிறது? எல்லாம் வவுத்துப் பாடுதான் புள்ளே!'' என்றான் முருகனம்பலம்.

வீரையனுக்கு அன்பு காட்டக் கூடிய ஆதாரம் ஒன்று கிடைத்துவிட்டது. அவன் அடிக்கடி வேட்டைக்காரங் குப்பத்துக்குக்கூட வந்து போக இருந்தான்.

''நம்பகிட்டதான் ரெண்டு கட்டு மரம் கெடக்குதே, ஆயிங்.. அதுங்கிட்டே ஒண்ணு கொடுத்தா நாம குறைஞ்சா போயிருவோம்?'' என்றாள் கோயிந்தி.

''ஆரு சொன்னுங்க அப்படி? நம்ப வலையங்குப்பத்துத் தம்பிக்குத் தர அட்டி ஏது? கொஞ்சம் பொறுத்து நானே ஒரு வெலை வச்சுக் குடுத்திரலாம்னுதான் இருக்கேன்'' என்றான் முருகனம்பலம்.

அதற்குள் காலம் எல்லாம் மாறிவிட்டது. எல்லாம் விலை ஏறிவிட்டது. காலணாவுக்கு மூன்று என்று வாங்கியதெல்லாம் மூன்றுக்கு ஒன்று என்று வாங்க வேண்டியதாகிவிட்டது. எல்லாரும் எல்லாவற்றிற்கும் துணிந்துவிட்டார்கள். கட்டு மரம் கட்டிக் கொண்டு, கடலில் முன்பு மீன் பிடிக்க மட்டுமே வெகுதூரம் போவார்கள்; இப்போதோ பணமே பிடித்து வந்தார்கள். ஆமாம்; அந்தக் கள்ளக் கடத்தல் விவகாரந்தான்.

வீரையனம்பலத்துக்குத் துணிச்சலும் இருந்தது; முகராசியும் கூட இருந்தது. ஒரே வருஷத்தில் அவன் முருகனம்பலத்திடம் வாங்கியிருந்த கட்டுமரத்துக்குரிய விலையைப் பணமாகத் திரும்பக் கொடுத்துவிட்டான். அவனுக்கு என்று சொந்தத்தில் இப்போது ஒரு நாட்டுப் படகு கரையில் காத்துக் கிடந்தது.

அவன் படகு வேட்டைக்காரங் குப்பத்தில்தான் வந்து நிற்கும்.

..இந்தாலேதான் நிக்கிறேனே!

வீரையனம்பலம் தன் இளம் மீசையை யாழ்ப்பாணத்து முடியலங்கார நிலையத்திலே தான் வெட்டிக்கொள்வான். செம்பட்டை முடியைக்கூடச் சீமைத் துரை மாதிரி' அவன் அங்கேதான் வெட்டிக்கொண்டான். நினைத்தால் அவனுக்கு ஈழத்துக் கரை இப்போது கொல்லைத் தலைமாடாக இருந்தது. இரவுக்கு இரவே இருபது மைல் தொலைவேயுள்ள அந்தக் கடல் சந்தியைக் கடந்து போய்த் திரும்பியும் வந்துவிடுவான்.

அதற்கென்ன, ஒரு சமயம் போல எப்போதும் இராதுதான். ஆயினும் வீரையனுக்குச் சமய சந்தர்ப்பம் தெரியும். எல்லாம் மவுசு இருப்பதற்குள் சம்பாதித்தால்தான் உண்டு. ஒரு வீடு - உப்பளத்திலே ஒரு பங்கு.. சம்பாதிக்கிற நாளில் உயிருக்குப் பயந்துகொண்டிருந்தால் ஆகுமா? கை நிறையக் காசு கிடைக்குமா? மற்றவைதாம் கிடைக்குமா?

வலையங்குப்பத்து மணல்முட்டில் நிற்கும் படகைப் பார்த்துப் பார்த்து வீரையன் பூரித்துப் போவான். அவன் உழைத்துப் பாடுபட்டு அதைச் சம்பாதித்திருக்கிறான். இனி, சம்பாதித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அதனுடையது. அது வந்தபிறகு மற்றவர்களால் முடியாத காரியத்தை அவன் ஒருவனால்தான் செய்ய முடிந்தது. ஈழத்துக் கரையிலிருந்து சீமை மதுப்புட்டிகள், பேனா, கடிகாரம், சோப்பு, பவுடர், இல்லையா பெண்களுக்கு இன்னும் எத்தனையோ, அத்தனையும் அவன் படகில் பதுக்கி இரவோடு இரவாக இந்தக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட வேண்டும். இது வலையங்குப்பத்தில் இருப்பவர்களுக்குக்கூடத் தெரியாமல்தான் நடக்க வேண்டும். தெரிந்துவிட்டால் எத்தனையோ பேர் அவனைப் போலவே உயிருக்குத் துணிந்துவிடுவார்கள். போட்டி வந்துவிட்டால் அப்புறம் வம்புதான்; ஆபத்துத்தான். எதிலுமே சரிதான். ஆகவே வலையங்குப்பத்துக்கே வராமல், பன்னிரண்டு கல் வடக்கேயுள்ள வேட்டைக்காரங்குப்பத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அங்கே அவனுக்காக முருகனம்பலம் காத்திருப்பான். அவன்தான் வீரையன் முன்னுக்கு வருவதில் கண்ணும் கருத்துமாக இருப்பவன் ஆயிற்றே. அந்த இடத்திலிருந்து நாகப்பட்டணம் போன்ற பட்டணக் கரை ஊர்கள் கொஞ்ச தூரந்தான். கள்ளச் சரக்குகள் முருகனம்பலம் கை தாண்ட வேண்டியதுதான். பிறகு வெகு சுலபமாகச் செலாவணி ஆகிவிடும். அது ஆனாலும் ஆகாவிட்டாலும் கையிலே ரொக்கப் பணத்துடன் முருகனம்பலமும், அவனிடமிருந்து வீரையனம்பலமும் திரும்பிவிடுவார்கள்.

வீரையன் ஒவ்வொரு தடவை திரும்பும் போதும் நூறு, ஐம்பது இல்லாமல் வர மாட்டான். ஆனால் அதற்குள் அவனுக்கு எத்தனை தடைகள்! ஒரொரு சமயம் கடல் சினங்கொண்டு கொந்தளித்துச்

சீறும்; காற்றுப் புயலாக வீசி, கிறுக்குத் தனமெல்லாம் செய்து அலைக் கழிக்கும். சுறு மீன் விர்ரென்று உயிரைக் கிழிக்க விரைந்து வரும். ரோந்து சுற்றும் சுங்க அதிகாரிகளின் சுழல் துப்பாக்கிகள் எமனுலகத்தில் வெடிப்பதுபோல் வெடிக்கும்; மோட்டார் படகுகள் வேட்டையாட வரும். ஆனாலும் என்ன? வீரையன் உயிரைத் திருணமாக மதித்தவன். ஆபத்துக்களே அவன் விளையாட்டு. அதன் நடுவிலே சீட்டியடித்து ஆனந்தப்படுபவன் அவன். வலையங்குப்பத்திலே படகை அவிழ்த்துவிட வேண்டிய நேரம் அவனுக்குத் தெரியும். ஈழத்துக் கடல் துறையிலே எங்கே போய்க் காத்து நிற்க வேண்டும் என்பதும் தெரியும். எந்த வழியில் போனால் அதிக ஆபத்தில்லை என்பதும் அவனுக்கு அத்துபடி. ஈழத்திலிருந்து புறப்பட்டால், சரக்குகளுடன் அவன் படகு வேட்டைக்காரங்குப்பத்தில்தான் வந்து சொல்லிவைத்ததுபோல நிற்கும். அத்தனை கணக்கு; அத்தனை நிகா.

அவனாக வராவிட்டாலும் அவனை தானாகவே துடுப்பைத் தள்ளும். மனசு முன்னாலேயே ஓடிவந்து, சிவப்புச் சேலைக்காரி, கெம்புக் கம்மல் தெரிய, விம்மி நிமிர்ந்த நெஞ்சு கனக்க, வரப்போகிற படகை அங்காந்து பார்த்து நிற்கும் காட்சியை ரசிக்கும்.

''தா—துடுப்புப் போடற சத்தம் கேக்குதில்லே, புள்ளே! வலையாங்குப்பத்துத் தம்பி வந்திச்சின்னா, ஏம் புள்ளே வூட்டுலே எதுவும் ஆக்கிப் புடைச்சி வச்சிருக்கிறியா?'' என்பான் முருகனம்பலம்.

''ஆக்கி வேறே வெக்கணுமோ அதுக்கு? நீ உங்கறதுலே மீதி மிச்சம் எதுனா இருந்திச்சின்னா வெச்சாப் போவுதாம்...... இக்குங்.... ஈழச் சீமேலெ உங்காததா இங்ஙணே வந்து திங்கக் குந்தப் போவுது!'' என்பாள் கோயிந்தி. கோபம் போலச் சொல்வதிலே ஒரு பெருமை. அது முருகனம்பலத்துக்குப் புரியாது.

''அது சரிதாம் புள்ளே! மதியாரிக்கு நாம வெச்சிருக்கணுமில்லே?''

''நீ எதுவும் கேப்பேண்ணுதான் நான் குறுவை அரிசி போட்டு ஆக்கி வெச்சிருக்கேன்....''

''ஏம் புள்ளே! வலையாங்குப்பத்துத் தம்பி நல்ல தம்பீல்லே?''

கோயிந்தி நாணிக் கொள்வாள்.

''அப்ப அதைப் பேசிக் கட்டி வச்சிறலாமா?''

''சே.... இத்திரி..... இதென்னுங்கறேன் வெக்கக் கேடு!''

''இதுலே என்னு புள்ளே வெக்கம்? அதுக்கும் யாரு, ஆயியா அப்பனு, எல்லாம் நாம தானே?''

''தே....நீ சும்மா இரு, ஆயிங்....ஆமா ....அப்புறமா நல்லா வரும் எனக்குக் கோவம், க்குங்....அது மொட்டுப்போல வந்து பொறவாலே நிக்கப் போவுது!''

கோயிந்தி சொன்னபடியேதான் நடக்கும். படகு வந்தது தெரியாது; இறங்கினது தெரியாது; படகைக் கரையில் தள்ளிவிட்டு, இருளோடு நடந்து வந்து, காசாங்கட்டையைப் புரட்டும் அவர்களுக்குப் பக்கத்திலே மொட்டுப் போலத்தான் வீரையன் வந்து நிற்பான்.

படகிலே பதுக்கி ஏற்றி வந்த சரக்குகளை இரவுக்கு இரவாகவே எடுத்துச் சென்றால் தான் உண்டு. முருகனம்பலம் மூட்டை கட்டிக்கொண்டு புறப்படுவான். அதற்குப் பிறகு அவன் மறுநாளோ, அதற்கும் மறுநாளோ திரும்பி வரும் வரையில் அவர்கள் தனியாகத்தான் இருப்பார்கள். கோயிந்திக்கு வெட்கம் பிடுங்கித் தின்னும். வலையங்குப்பத்து வீரையன் வாயைத் திறந்தால் அவள் தட்டி மூலையில் போய் நின்றுகொண்டு கண்களைப் பொத்திக்கொண்டு விடுவாள். அவன் பார்த்தால் தரையைக் கீறுவாள். அதற்கும் மேலே பேச்சுப் போனுல் ஓடிப் போய் வேம்பாத்தாளைத் துணைக்கு அழைத்து வைத்துக்கொள்வாள். அந்த வேம்பாத்தாளுக்கு மட்டும் வீரையன் வருகிற, போகிற காரியங்கள் தெரியும். அவளால் எப்பொழுதுமா கோயிந்திக்குத் துணை இருக்க முடியும்? எத்தனையோ சமயம் அவளால் வர முடியாமல் போவதுண்டு. அதற்குள் கோயிந்திக்கும் துணிச்சல் வந்துவிட்டது.

''அது என்ன புலியா, சிங்கமா? கடிச்சா தின்னுப்புடும்?'' என்று உறைகேணியில் தண்ணீர் இழுக்கும்போது தானே சொல்லிக்கொள்வாள். தானே மகிழ்ந்தும் கொள்வாள்.

''அது ஏன் இப்படிப் பாக்குது?'' என்று தானே வியந்துகொள்வாள்.

''எப்படா சின்னுயி தனியா வுட்டுட்டுப் போவும்னுல்லே தண்ணி கேக்கக் காத்திருக்குது கூப்பிட!'' என்று ஆச்சரியப்படுவாள்; ஆசையும் படுவாள்.

''அந்தச் சீமெப் புட்டியெ எடுத்து வச்சிக்கிட்டு, குடிச்சா அத்தனையும் ரத்தமின்னு எங்கிட்டே வேடிக்கேல்லே செய்யுது! ஆம்பளே குடிச்சா அறிவாம், துணிச்சலாம்; பொம்பிளே குடிச்சா அழவாம்; ஆசையாம்! நல்லா இருக்குல்லே கதை?..வெக்கக்கேடு! மயக்கம் போட்டு வுளுந்து கெடந்தா மசிய வெச்சிரலாமின்னுதானே?'' என்று தானே கேட்டுக்கொள்வாள்; சிரித்தும் கொள்வாள்.

தென்னந் தோப்பிலே பனை அகிணிக் கட்டிலிலே அவன் பொழுதெல்லாம் உடல் வலி தீரப் படுத்துக் கிடப்பான்; புரளுவான். அவளுக்குப் பாவமாக இருக்கும். சின்னுயி வேம்பாத்தாகூடச் சீண்டிவிடுவாள். ''துளசாப் பட்டணத்துலே உனக்காவ மாமங்காரன் காத்துக்கிட்டிருக்காண்டி..பொண்ணு கேட்டுப் பரிசம் போட வந்தா என்னு புள்ளே செய்வே? அகிணிக் கட்டிலெப் பாத்துக்கிட்டு ஏமாறி நிக்கிறியே!'' என்பாள்.

கோயிந்திக்குப் பயமாகத்தான் இருந்தது. துளசாப்பட்டணம் மாமன், தருமனம்பலம், அவளுக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தான். கோபம் என்பது மட்டும் கொள்ளாமல் இருந்தால் மாமன்காரன் நல்லவன்தான்; நல்ல ஆசைக்காரன்தான். கோபம் வந்ததோ, யார் என்று பார்க்க மாட்டான். குழியிலே வெட்டித் தள்ளி, தென்னம்பிள்ளை போட்டுவிடுவான். அதனுல்தானே என்னவோ, முருகனம்பலம் முன்பு ஒரு தடவை அவளிடம் கல்யாணம் கட்டுகிற பேச்சுப் பேசினதற்குப் பிறகு வாயையே திறக்கவில்லை. கோயிந்திக்குக் குழப்பமாகத்தான் இருந்தது. ஒருவனிடம் ஆசை; ஒருவனிடம் பயம்.

ஒரு சமயம் அவள் காட்டுக்குள்ளே சென்று, பொடிக் களாக்காய் பறித்துக்கொண்டிருந்தாள். பின்னுலே முயல் ஒன்று துள்ளிப் பாய்ந்ததுபோல இருந்தது. கோயிந்தி திரும்பிப் பார்த்தாள். அங்கே அவள் மாமன் தருமனம்பலம் நின்று, மீசையைக் கூராக்கிக் கொண்டிருந்தான். முகத்திலே ஏளனமும் சந்தேகமும் கூத்தாடிக்கொண்டிருந்தன.

''என்னு புள்ளே, இப்படி வளந்திட்டே?''

''எப்ப வந்திய, மாமா?''

''இப்பத்தான் பாக்கிறியே....வந்து, யாரு புள்ளே அது, தோப்புக்குள்ளாற கட்டிலெப் போட்டுக்கிட்டுத் தூங்கறது?''

''அதான் வலையாங்குப்பத்தாரு, மாமா!''

''ஆமா, ஆமா....இவன்தானு அது? புள்ளே! பதனமா நடந்துக்க, புள்ளே! வரட்டா? ஆயிங் வந்தா சொல்லு....நான் அதுங்கிட்டே பேசிக்கறேன்....''

''வூட்டுக்கு வந்திட்டுப் போவலே?''

''இல்லே புள்ளே, குருதெக் குட்டியைத் தேடிக்கிட்டு வந்தேன். கூட வந்த ஆளுங்க தேடுவாங்க.''

''அப்ப சரி....''

நல்ல வேளையாக அவன் அத்துடன் விட்டுவிட்டான் அவளை. அவன் போனபிறகு, அவள் வெகு நேரம் குன்றிப் போய் நின்றிருந்தாள். ஆனுல் வீட்டுக்கு வந்து, வீரையனைப் பார்த்த பிறகுதான் அவளுக்கு அந்தப் பயம் விலகியது. ஆசை, பயத்தை விழுங்கிவிட்டது. மரத்தடியிலே மறைவாக நின்று வீரையனை ஆசை தீரப் பார்த்து நெடுமூச்செறிந்தாள். வாட்ட சாட்டமான உடல்கட்டும் வழு வழுவென்ற கைகால்களும் அவளுக்குத் தைரியத்தைக் கொடுத்தன. வேட்டைக்காரங்குப்பத்தைவிட்டு, வலையங்குப்பத்துக்கே போய்விட்டால், அந்தத் தருமனுல் என்ன செய்ய முடியும்? கொஞ்ச நாள் கோபமாக இருக்கும்; அதற்குப் பிறகு அத்தனையும் மறந்துபோகும்.

அதற்குப் பிறகு ஒரு நாள் நடு நிசியிலே, தோப்படியிலே பேச்சுக் குரல் கேட்டது. கோயிந்தி இருளோடு இருளாக நின்று எட்டிப் பார்த்தாள்.

முருகனம்பலம் தணிவாகவும், தருமன் தடிப்பாகவும் பேசிக்கொண்டிருந்தார்கள். புரு நெஞ்சு படபடக்க அவள் அத்தனையையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். அவளுக்கு எல்லாம் நொடியிலே புரிந்துவிட்டது. ''பெத்தவன் நீ இருக்க, புள்ளெயே என்னு கேக்கறது?'' என்று தருமனம்பலம் சொல்லி

விட்டு எழுந்திருந்தான். அவள் வந்தது தெரியாமல் உள்ளே ஓடி மறைந்துவிட்டாள். போகும்போது அவன் என்ன சொல்லிவிட்டுப் போனாளே, அது அவளுக்குக் கேட்கவில்லை.

அதற்கு மறுநாள் முதல் முருகனம்பலம் பழைய பேச்சையே மறந்துவிட்டான். எதற்கும் பிடி கொடுக்கவில்லை. மகளை விட்டு அவனால் அரை நொடியும் பிரிந்திருக்க முடியாது. அது அவளுக்கே நன்றாகத் தெரியும். மகளை எப்படி விட்டுப் பிரிய முடியாதோ, அதே போல வேட்டைக்காரங் குப்பத்தையும் விட்டுச் செல்ல அவனால் முடியாது. ஒரு தடவை அவன் வீரையனோடு ஈழத்துக் கரைக்குப் படகில் போய்விட்டு வந்தான். அதிலிருந்து அவன் முன்னத்தனை சுரத்தாக இல்லை. கல்யாணப் பேச்சு என்கிற மூச்சையே காணவில்லை.

முருகனம்பலத்தின் கையில் ரொக்கப் பணமாக இருந்தது. அவன் உப்பளக் குத்தகைக்கு அலைந்துகொண் டிருந்தான். வீரையனுடைய வரத்துப் போக்கு, திடீரென்று மட்டுப்பட்டு, நின்றும் போய்விட்டது. அதற்குப் பதில் தருமனுடைய நடமாட்டம் கொஞ்சம் மிகுதியாக இருந்தது. கோயிந்தி காட்டுக்குள்ளே போய் உட்கார்ந்து, காரணம் புரியாமல் கண்ணீரை உகுத்துவிட்டுத்தான் வருவாள்.

ஆனால் திடீரென்று போன மாதம் ஒரு நாள் வலையங்குப்பத்து வீரையன் படகை ஓட்டிக் கொண்டு வந்தான். தருமனும் அப்போது இருந்தான். ஈழத்துக் கரையிலே சரக்குகள் தேங்கிக் காத்துக் கிடப்பதாகத் தெரிந்தது. அத்தனையும் கொண்டு வந்துவிட்டால் ஒரு பெரிய லாபம் அடித்துவிடலாம். அப்புறம் இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டு விடலாம். முருகனம்பலத்துக்குக் கொஞ்சம் சபலம் தட்டியது. உப்பளக் குத்தகையிலே சம்பாதித்த பணத்தையெல்லாம் போட்டு விட்டால், கோயிந்திக்குக் காதிலே மூக்கிலே போட ரொக்கம் வேண்டாமா? தருமனும் அவனும் கூடிப் பேசினார்கள். முடிவில் அவனையும் கூட்டாகச் சேர்த்துக்கொண்டார்கள்.

மீண்டும் வீரையனுடைய வரத்துப்போக்குத் தொடங்கிவிட்டது. கோயிந்தியின் கனவும் வளரத் தொடங்கியது. நடையிலே மிடுக்கும் பேச்சிலே துடுக்கும் தெறிக்கத் தொடங்கின. தருமனம்பலம் ஜாடைமாடையாகத் தடுத்துப் பார்த்தான்.

"என்னா புள்ளே, கண்ணும் பேச்சும் வெட்டுது! என்னா வயணம்?" என்று அவளை நேரிடையாகவே விசாரித்துப் பார்த்தான்.

"போ மாமா! வேலை வெட்டியைப் பாத்துக்கிட்டு. க்குங்...." என்று அவள் உடலை வளைத்துக்கொண்டு போய்விட்டாள்.

"தருமன் கோவத்தைத் தாங்கமாட்டே, புள்ளே!"

"கோவத்தை மட்டுமா தாங்கமாட்டேன்? உங் கொஞ்சலையுந்தான் தாங்க மாட்டேன்" என்றாள் அவள்.

ஏதோ வாய்த்துடுக்குத்தான். அப்படி அவள் சொல்லியிருக்கக் கூடாதுதான்.

"தா புள்ளே! வீரையன் பய வந்துக்கிட்டிருக்கிற மோக்ளாவிலேதானே இம்புட்டுப் பேச்சும்?......"

கோயிந்திக்கு அப்புறந்தான் தவறு தெரிந்தது. "யாரு சொன்னாங்க, பொல்லாததைக் கண்டுப்புட்டாப்பிலே! க்குங்...." என்றாள்.

தருமன் போய்விட்டான். அந்தத் தடவை வீரையன் வந்திருந்தபோது நிலைமை எதிர் பாராத தூரத்துக்கு வளர்ந்து போய்விட்டது.

"தா....கோயிந்தி!" என்று வீரையன் அவளைப் பெயரைச் சொல்லியே கூப்பிட்டான். முருகனம்பலமும் தருமனும் சரக்குகளை எடுத்துக்கொண்டு செலாவணி செய்யப் போயிருந்தார்கள். அவள் தனியாகத்தான் இருந்தாள்.

கோயிந்தி மறைவில் நின்றபடியே, "ங்.." என்று குரல் கொடுத்தாள்.

"இந்தாலே எதுக்கத்தான் வந்து நிக்க மாட்டியாங்காட்டியுங்?"

"இந்தாலேதான் நிக்கிறேனே....க்குங்.."

"சும்மா இங்ஙணே வந்தால்ல...." வீரையன் துணிந்து கையைப் பிடித்துவிட்டான்.

"சே....இத்திரி....ஸ்ஸு....இது என்னாங்கறேன் வெக்கக்கேடு! சின்னாயி வார நேரம்....க்குங்...."

அவன் கையை விட்டுவிட்டான். விட்டுத் தொட்ட இடம் இனிப்பாய் இனித்தது.

"என்னா அது, நெடி வாடை வீசுது?"

"ஈழத்துச் சீமெலே பொம்பிளைப் புள்ளைங்கள்ளாம் என்னா மாரிதியாப் பேசுதுங்க; சிரிக்குதுங்க....நீ என்னாடான்னா...."

"அங்ஙணே அவுகளையெல்லாம் பாக்கறதுண்டாங்காட்டியுங்?"

"பாத்தா என்னவாங்? பேசறதாம்."

கோயிந்தி 'க்' கென்று உடனே விக்கியழத் தொடங்கிவிட்டாள்.

"என்னா புள்ளே இது....மாலையிட மாமன் காரரு நடையா நடக்கறப்போ வேத்தாளை வேண்டி அழுவறே?"

"சே....இத்திரி....நான் ஒண்ணும் அழுவல்லே....உக்குங்....நான் ஒண்ணும் யாருக்கும் காத்துக்கிட்டு நிக்கலே....ஏன் இந்தாலே கண்ணு மூஞ்சியெல்லாம் இம்புட்டுச் செவப்பாச் செவந்து கெடக்கு? அய்யய்யே.. அது என்னாது பொறவாலெ?"

"ஒண்ணு,மில்லே கோயிந்தி! உசிருக்குத் துணிஞ்சு கொண்டாறேனே....எப்படி இருக்குதுண்ணு ஒரு வாட்டி ருசி பாக்கவேணும்?"

"அய்யய்யே....அவுங்க அப்புருட்டி! ஆயி சத்தியமா....வுட்டேன்னு சொல்லிட்டேன். ....இது வேறேயா?"

"சே சே....இது மறதிக்கு மருந்து புள்ளே....நீ மட்டும் உம்முன்னு சொல்லிரு....இத்தெயெல்லாம் விட்டுக் கிடாசிட்டு, அடுத்த வாட்டி வாரக்குள்ளாற பெரிய படகாக் கொண்டாந்து உன்னே.."

அவன் பேச்சை அவள் முடிக்க விடவில்லை. "ஏங், இதுக்கு என்னாவாம்?"

"இது என்னாத்துக்கு இது?..சுத்தக் கந்திரிப் படவு! சின்னதால்லே இருக்கு? நாலு சாமான் வைக்கங்காட்டியுங் அடஞ்சி போவுதே!"

"பெரிய படவுன்னா......?"

"காசு போட்டுக் கட்டினாத்தான். அது மட்டும் இருந்திச்சின்னா கோயிந்திகூட சும்மா சோக்காக் குந்திக்கிட்டுப் போவலாமே!"

"கட்டறதுன்னா என்னா ஆவும்?"

"அது ஆவும் அஞ்சு நோட்டுக்கு மேலே; பொம்பிளையெக் கட்டறப்பலெதான் படவு கட்டுறதும்!"

''யம்மாடியோவ்! பேச்சைப் பாருங்கடி பேச்சை!''

''இன்னும் உம்முன்னு சொல்லலியே.... சொன்னால்லே—''

''சொல்லிட்டா என்னாவாம்?''

''படவு கட்டத்தான்!''

''அடுத்த வாட்டின்னா எப்ப? அம்மாசி அன்னிக்கா?''

''ஆமா, அன்னிக்குத் தயாரா இருப்பீல்லே?''

கோயிந்தி பதில் சொல்வதற்குள் பொந்துக்குள்ளிருந்து பாம்பு புறப்படுவதுபோல் தருமனம்பலம் பொத்தென்று குதித்துவிட்டான். கோயிந்தி திகைத்து நிற்கும்போதே வீரையன் புறப்பட்டுப் போனவன்தான். அந்தக் கெடுதான் இது. அடுத்த அமாவாசை. ஆனால் மூன்று நாட்களாகப் பாழும் மழையும் காற்றும் ஓயவில்லை. மேலும் ரோந்துக்காரர்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக வேறு அறிகுறிகள் இருந்தன. அவள் எதையும் தயாராக எடுத்து வைக்கவில்லை. ஆனால் அவளே தயாராகத்தான் இருந்தாள்.

அந்தக் கடலலையைப்போல அவள் அடிவயிறும் குமுறிக்கொண்டுதான் புரண்டது. வீரையனம்பலத்தின் இளநறுக்கு மீசை, அந்த யாழ்ப்பாணத்து வெட்டு, கண்டு கண்டாக முறுக்கு ஏறிய முண்டா, அழகான கண்கள், துணிச்சல் கொண்ட பேச்சு, அருமையான முகராசி - எல்லாம் எரியும் அந்தக் காசாங் கட்டையோடு புரண்டன.

காட்டிலே எங்கேயோ ஜாமக் கோழி கூவியது. ஆந்தை ஒன்று, 'கைக்கைக்கை!' என்று அலறியது.

புதுப் படகு-அதை ஓட்டும் காளை-பூனைக் கண் பார்வை-புன்முறுவல் பேச்சு-அவளுடைய ஆசை இழை மெல்ல இற்றுக்கொண் டிருந்தது.

''உம்; எனக்குத் தோணல்லே!'' என்றான் முருகனம்பலம்.

''தோணாட்டியும் போவுது, போ! வாயெத்தான் மூடிக்கிட்டுக் கெடக்காமெ-''

அவள் சொல்லி முடிக்குமுன்னே, 'டுர்ர்ர்ர்-' என்ற ஓசை பெரிதாகக் கேட்டது. முருகனம்பலமும் கோயிந்தியும் காதைக் கூராக்கிக் கொள்ளுமுன், 'டுமீல்! டுமீல்!' என்று இரண்டு வேட்டுகள் வெடித்து அதிர்ந்தன. 'ஙொய்' என்ற ரவைகளின் பாய்ச்சல் இரவின் இருளையும் விண்ணையும் கிழித்துக்கொண்டு எங்கோ சீறிச் சென்றன.

அலையோசைக்கு மேலே, 'ஹோவ்..வ்..வ்!' என்று யாரோ அலறும் சப்தம் ஒன்று வந்தது. கோயிந்தி நெஞ்சு பதறித் துடிக்க, எழுந்து இருளை ஊடுருவிப் பார்த்தாள். முருகனம்பலம், ''தம்பீ!'' என்று கூவிக்கொண்டே இருண்ட துறையில் விழுந்தடித்து ஓடினான்.

தூரத்தில் தண்ணீர்த் துறைக்கு அருகில் வெள்ளை வெள்ளையாகத் தெரிந்தன. கோயிந்தியின் உள்ளம் படபடவென்று அடித்துக்கொண்டது. சற்றைக்கெல்லாம் நெஞ்சே வெடித்துவிடும் போல இருந்தது.

அரைமணி நேரம் போல ஒன்றுமே தெரியவில்லை. கடைசியில் இருளில் தெரிந்த வெள்ளை உருவங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. உள்ளங்கையிலே செங்குருதி சொட்ட, வீரையன் முன்னாலே இரைக்க இரைக்க ஓடி வந்தான். பின்னால் முருகனம்பலம் ரத்தத்தில் தோய்ந்து துவண்ட உடல் ஒன்றைச் சுமக்க மாட்டாமல் சுமந்து வந்தான்.

''டுமீல்!''

கோயிந்தி வீல் என்று வீரிட்டாள்.

''தா, சத்தம் காட்டாதே புள்ளே, பின்னாலே ரோந்துப் படகு!''-வீரையனம்பலம் தோப்பைத் தாண்டி, காசாங்கட்டைகள் அடுக்கிய முட்டின் இடையே, முட்டுப் போல இருளில் உட்கார்ந்துகொண்டான்.

பேசக்கூட நேரம் இல்லை. புர்ரென்று பயங்கர ஓசையுடன் ரோந்துப் படகு வந்துவிட்டது. அந்தச் சுருக்கிலேயே சுழல் துப்பாக்கிச் சத்தத்துடன் இரண்டு மூன்று பேர் வெளிச்சத்தை வந்து வளைத்துக் கொண்டார்கள்.

கோயிந்தி கீழே குருதியில் தோய்ந்து கிடந்த ஆளைப் பார்த்தாள். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க, தருமனம்பலம் அங்கே மணலில் விழுந்து கிடந்தான். செருகும் கண்களால் அவன் எதையோ சைகை காட்டினான். கோயிந்தி, முருகனம்பலம் எல்லாரும் அவனையே பார்த்துக்கொண்டு சிலையாக நின்றார்கள்.

அவன் அவளை ஒரு முறை பார்த்தான்; உயிர் கண்களில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அடுத்த கணம், ரோந்துக்காரர்களைப் பார்த்தான். வெகு பிரயாசைப்பட்டு இரண்டு கைகளையும் தூக்கி, விலங்கை மாட்டும்படி நீட்டினான். ஆனால் அவர்கள் முன்னால் வருவதற்குள் அவன் தலை மண்ணிலே சாய்ந்துவிட்டது.

மூன்று நாட்களாக வீரையனை ஒழித்துக் கட்டுவதற்காகத் துரத்திப் போராடிய தருமனம்பலம், கடைசிச் சமயத்தில் அந்த நல்ல காரியத்தைச் செய்துவிட்டான். உயிரை விட்டுவிட்டான். அதனால் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று உயிர்கள் பிழைத்தன.

கள்ளப் படகு பறிமுதலாகி, கவனிப்பாரற்றுக் கரையிலேயே கிடந்தது. இனி, அது எப்படிப் போனால் என்ன?

★



கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு
வேண்டிய எல்லா வகையான

பருத்தி நூல்கள்

★

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.,

போன்: 250 (5 லைன்) மதுரை தந்தி: "ஹார்வி"

மில்கள் இருக்கும் இடங்கள்:
மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள் — நெம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது:
...ப்பு நூல்கள், பிரி நூல்கள், பின்னல் நூல்கள்,

ஒற்றை & மடக்கு நூல்கள்:
கோன், சீஸ் அல்லது சிட்டங்கள்

★

விசேஷ ரகங்கள்

கயிறுகள் - விழுதுகள் - கித்தான்கள் - நாடாக்கள்
முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள் - தையல்
நூல் - முறுக்கேறிய திரித்த சரடுகள் முதலியன

★

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

பாண்டியன் பில்டிங்,
மதுரை

போன்: 420 (4 லைன்) தந்தி: "ஹார்வி"

ஒரேயடியாக விலைக்குறைப்பு!



No. 1181 $10\frac{1}{2}$ Size

வாட்டர் புரூப்

15 ஜ்வெல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	36
17 ஜ்வெல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	40
17 ஜ்வெல்ஸ ரோல்ட் கோல்ட்	ரூ.	54
21 ஜ்வெல்ஸ ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	56
21 ஜ்வலஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	64

No. 1183 $7\frac{3}{4}$ Size Curved Shape

17 ஜ்வெல்ஸ் ப்ரைட்-க்ரோம் ..	ரூ.	32
15 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	38
17 ஜ்வெல்ஸ் ,, (லீவர்)	ரூ.	63

No 1185 $10\frac{1}{2}$ Size Flat Shape

5 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	19
5 ஜ்வெல்ஸ் ,, கோல்ட் சி/எஸ்	ரூ.	21
15 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	28
17 ஜ்வெல்ஸ் க்ரோம் கேஸ்	ரூ.	37
17 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	42

No. 1186 $5\frac{1}{4}$ Size Ladies

15 ஜ்வெல்ஸ் பின் லீவர் ஆர்/ஜி	ரூ.	45
17 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ	48
17 ஜ்வெல்ஸ் .. (20 மைக்ரோன்)	ரூ	65
21 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	68

மிகவும் நவீன மோஸ்தரில் 1956 ஸ்பெஷல் மாடல்கள்

உயர்ந்த ரக யந்த்ரங்கள், அமைப்பு

ஒவ்வொன்றும் மூன்று வருஷ உத்தரவாதம்

இனும்: ஏதாவது மூன்று வாட்சுகளுக்கு ஆர்டர் கொடுததால் ஒரு ரிஸ்ட் வாடச்; இரணடு வாடசுகளுககு ஆர்டா கொடுத் தால ஒரு அலாரம் டைம்பீஸ்; ஒரு வாடசுக்கு, தங்கமூடி போடட பேனு.

வாட்டர் புரூப்

No. 1182 Size $8\frac{3}{4}$

15 ஜ்வெல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	40
17 ஜ்வெல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	44
17 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	54
21 ஜ்வெல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	58
21 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	68



No. 1184 $7\frac{3}{4}$ Size Tonneau

15 ஜ்வெல்ஸ் ப்ரைட் க்ரோம்	ரூ.	34
15 ஜ்வெல்ஸ் ரோல்ட் கோல்ட்	ரூ.	40
17 ஜ்வெல்ஸ் ,, (லீவர்)	ரூ.	65



பாக்கெட் வாச்

ஜ்வெல்ட்...ரூ 18 15 ஜ்வெல்ஸ்...ரூ. 27

அலாரம் டைம்பீஸ்

3" டையல் அலாரம் ..	ரூ.	15
ஸ்மித் அலாரம் $4\frac{1}{2}$" டையல் ..	ரூ.	18
ஸ்பர் அலாரம் 5" டையல் ..	ரூ.	22
டபல் பெல் 5" டையல் ..	ரூ.	18

பயனீர் வாட்சு கப்பெனி,
தபால் பெட்டி நெ. 11428
கல்கத்தா - 6.

EDITED, PRINTED AND PUBLISHED BY N RAMARATNAM, M. A. B. L., AT THE M. L. J. PRESS (PRIVATE) LTD., 55/56, MUNDAKANNI AMMAN KOIL STREET, MYLAPORE, MADRAS.
MANAGING EDITOR: K. V. JAGANNATHAN.

SIMPSONS

மேலே காட்டியிருக்கும் சாமான்கள் நாங்கள் அனுபவம் மிகுந்த தொழிலாளர்களை வைத்துக்கொண்டு தயாரிப்பதில் சில. நாங்கள் இன்னும் பலவித எஃகு சாமான்களையும் சக்கரம் பொருத்திய வண்டிகளையும் ஒவ்வொருவர் தனிப்பட்ட உபயோகத்திற்காக தயார் செய்து கொண்டு வருகிறோம். உங்களுடைய தேவைகளுக்கு தயவு செய்து எங்களுக்கு எழுதவும்.

ஸிம்ஸன் & கோ லிட்.

மதராஸ்-2

கிளைகள் : பெங்களூர் • திருச்சி • உதகை • ஹைதராபாத்

(Regd. as a Newspaper in Ceylon.) Regd. M. No. 27

எமது மனமார்ந்த

ஸ்ரீ தீபாவளி வாழ்த்துக்கள்

புனித ஸ்நானம் செய்து, புத்
தாடை உடுத்தி, மகிழ்ச்சியுற்
றிருக்கும் உங்களுக்கு எங்
கள் மங்கள வாழ்த்துக்கள்.

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரீயல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R.S. — சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்டுகள்: சேஷசாமி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.